

EISSN 2456-5571

AN ONLINE, PEER REVIEWED, REFEREED AND QUARTERLY JOURNAL

# BODHI

## INTERNATIONAL JOURNAL OF RESEARCH IN HUMANITIES, ARTS AND SCIENCE

VOLUME 7 | SPECIAL ISSUE 2
MARCH 2023 | E-ISSN: 2456-5571

சிறப்பிதழ் பொருண்மை

## இலக்கியமும் ஆன்மீக அறிவியலும்

சிறப்பிதழ் தொகுப்பாசிரியர்கள்
முனைவர் செ. சோனா கிறிஸ்டி
முனைவர் அ. சவரிராயம்மாள்
திரு. சு. முருகவேல்
திரு. சு. பால்மோகன்

# BODHI

# International Journal of Research in Humanities, Arts and Science

**An Online, Peer Reviewed, Refereed and Quarterly Journal**

Vol. 7 Special Issue 2 March 2023 E-ISSN: 2456-5571

**CENTRE FOR RESOURCE, RESEARCH & PUBLICATION SERVICES** (CRRPS)

www.crrps.in | www.bodhijournals.com

## BIJRHAS

The **BODHI International Journal of Research in Humanities, Arts and Science** (E-ISSN: 2456-5571) is online, peer reviewed, Refereed and Quarterly Journal, which is powered & published by **Center for Resource, Research and Publication Services, (CRRPS)** India. It is committed to bring together academicians, research scholars and students from all over the world who work professionally to upgrade status of academic career and society by their ideas and aims to promote interdisciplinary studies in the fields of humanities, arts and science.

The journal welcomes publications of quality papers on research in humanities, arts, science. agriculture, anthropology, education, geography, advertising, botany, business studies, chemistry, commerce, computer science, communication studies, criminology, cross cultural studies, demography, development studies, geography, library science, methodology, management studies, earth sciences, economics, bioscience, entrepreneurship, fisheries, history, information science & technology, law, life sciences, logistics and performing arts (music, theatre & dance), religious studies, visual arts, women studies, physics, fine art, microbiology, physical education, public administration, philosophy, political sciences, psychology, population studies, social science, sociology, social welfare, linguistics, literature and so on.

Research should be at the core and must be instrumental in generating a major interface with the academic world. It must provide a new theoretical frame work that enable reassessment and refinement of current practices and thinking. This may result in a fundamental discovery and an extension of the knowledge acquired. Research is meant to establish or confirm facts, reaffirm the results of previous works, solve new or existing problems, support theorems; or develop new theorems. It empowers the faculty and students for an in-depth approach in research. It has the potential to enhance the consultancy capabilities of the researcher. In short, conceptually and thematically an active attempt to provide these types of common platforms on educational reformations through research has become the main objective of this Journal.

**Dr. S. Balakrishnan**
Publisher and Managing Editor
bodhijournal@gmail.com
www.bodhijournals.com
09944212131

**BODHI INTERNATIONAL JOURNAL OF RESEARCH IN HUMANITIES, ARTS AND SCIENCE**

*An Online, peer reviewed, refereed and quarterly Journal with Impact Factor*

www.bodhijournals.com, bodhijournal@gmail.com, 7540077733

4/27, Achampathu, Madurai-625019, Tamil Nadu, India


## சிறப்பிதழ் தொகுப்பாசிரியர்கள்


**முனைவர் செ.சோனாகிறிஸ்டி**
உதவிப் பேராசிரியர்

**முனைவர் அ.சவரிராயம்மாள்**
உதவிப் பேராசிரியர்

**திரு.சு.முருகவேல்**
உதவிப் பேராசிரியர்

**திரு.சு.பால்மோகன்**
உதவிப் பேராசிரியர்

## AUTHOR GUIDELINES

**About Bodhi**

The BODHI International Journal of Research in Humanities, Arts and Science (E-ISSN:2456-5571) is open access, peer reviewed, referred and quarterly journal, which is powered & published by center for Resource, Research and Publication Services, (CRRPS) India. It is committed to bring together academicians, research scholars and students from all over the world who work professionally to upgrade status of academic career and society by their ideas and aims to promote interdisciplinary studies in the field of humanities, arts and science.

**Subjects for Papers**

The journal welcomes publications of quality papers on research in humanities, arts, science. agriculture, anthropology, education, geography, advertising botany, business studies, chemistry, commerce, computer science, communication studies, criminology, cross cultural studies, demography, development studies, geography, library science, methodology, management studies, earth sciences, economics, bioscience, entrepreneurship, fisheries, history, information science & technology, law, life sciences, logistics and performing arts (music, theatre & dance), religious studies, visual arts, women studies, physics, fine art, microbiology, physical education, public administration, philosophy, political sciences, psychology, population studies, social science, sociology, social welfare, linguistics, literature and so on.

**Call for Papers**

The journal invites balanced mix of theoretical or empirical, conceptual papers to publish including research articles, case studies, review papers, comparative studies, dissertation chapters, reports of projects in progress, analytical and simulation models, technical notes, and book reviews, leading academicians, business peoples, corporate sectors, researcher scholars and students from academic institutions, research organizations, non-government organizations (NGOs), corporate sectors, civil societies, industries, and others from India and abroad.

**Submission of Manuscript**

1. Submit your article by email to **bodhijournal@gmail.com**
2. The manuscripts/papers should be research based or related, original and comprise of previously unpublished material and must be presented following scientific methodology.
3. Authors must send an abstract of the paper not exceeding 250 words, all manuscripts must be in font style of Times New Roman, size: 12, line spacing: double spaced and submitted only in MS Word 2003/ 2007 version.
4. All manuscripts should follow the MLA or APA style manual. The full paper must not exceed 3000 words, including tables and references.
5. The manuscript should be well-organized to have Title page, Abstract, Keywords, Introduction, Literature Survey, Problem Definition, Material & Methods, Findings & Results, Interpretation & Discussion, Conclusion and References.
6. All quoted, reproduced material should clearly be referenced.
7. Tables and figures should appear in the document near / after where they are referenced in the text.
8. All contents should be original – authors' own words, ideas, findings and arguments.

9. Tables and figures should appear in the document near / after where they are referenced in the text. All figures and tables must have an intelligible caption in relation to the text.
10. Photographs must be sharp, and exhibit good contrast.
11. Correct and complete referencing of quoted and reproduced material is the obligation of the author. In the text, references should be inserted in parentheses in full.
12. If author uses a reference from an out-source, author should cite relevant source giving credit to the original author/contributor.

**Review of Article / Manuscript**

1. The manuscript will be numbered and sent to the review committee for review-report.
2. The author will be intimidated of the review and the process will take a maximum period of 15 – 20 days.

**Ethical Policy**

1. Authors are advised to adhere to the ethics of publication of his/her article to be considered for publication.
2. Acknowledgement of the original ideas, borrowed from other sources is imperative.
3. The authors of original research work (previously unpublished / under process for the publication elsewhere) should be an accurate submission of the work carried out, provide the rationale of the significance of the research work in context with previous works, and should contain sufficient details to allow others for further research.
4. It will be the wholesome responsibility of the authors for such lapses if any on legal bindings and against ethical code of publication or communication media.

**Plagiarism Alert & Disclaimer**

1. The publisher & editors will not be held responsible for any such lapse of the contributor regarding plagiarism and unwarranted quotations in their manuscripts.
2. All submissions should be original and must have a "statement of declaration" assuring their research paper as an original and fresh work and it has not been published anywhere else.
3. It will be authors / sole responsibility for such lapses, if any on legal bindings and ethical code of publication.
4. Contributors are advised to be aware about Plagiarism and ensure their paper is beyond plagiarism as per UGC norms.

**Publication Policy & Peer-review Process**

Peer review exists to ensure that journals publish article which is of benefit to entire research community. Peer reviewers' comments and recommendations are an essential guide to inform the editor's decision on a manuscript that revisions and improvement. They are part of the publication process and actually help raise the quality of the manuscript. It also helps the readers to trust the research integrity of the article.

1. The Editor-in-Chief will primarily examine each manuscript.
2. The editor-in- Chief will advise the authors about the acceptance of the manuscript by email.
3. The manuscript will be evaluated on parameters of originality, practical importance, subject relevance, scientific level and contribution to the current academic scenario.
4. If the manuscript is accepted following publication policies.

5. Accepted manuscript will be forwarded to the double-blind peer review process. Such that the journal does not disclose the identity of the reviewer(s) to the author(s) and does not disclose the identity of the author(s) to the reviewer(s).
6. The review committee is not responsible for stripping of any information during panel review as the original author is not known to the committee.
7. Manuscript/paper will be published only when the article is 'commended for publication' from the review committee/editorial board.
8. If necessary the copy-editing work will be done by the members of the Editorial Board.
9. The review process may take minimum 20 working days.
10. In case of acceptance of the manuscript and commended for publication favorably, the manuscript will be published in online mode of time. If paper/article/manuscript is not commended for publication, the rejected manuscripts shall not be returned.

**Copyright Notice**

Submission of an article implies that the work described has not been published previously (except in the form of an abstract or as part of a published lecture or academic thesis), that it is not under consideration for publication elsewhere, that its publication is approved by all authors and tacitly or explicitly by the responsible authorities where the work was carried out, and that, if accepted, will not be published elsewhere in the same form, in English or in any other language, without the written consent to the Publisher. The Editors reserve the right to edit or otherwise alter all contributions, but authors will receive proofs for approval before publication.

Copyrights for articles published in Bodhi International Journal of Research in Humanities, Arts and Science are retained by the authors, with first publication rights granted to the journal. The journal/publisher is not responsible for subsequent uses of the work. It is the author's responsibility to bring any infringement action if so desired by the author.

**Indexed & Open Access**

The journal will be indexed as per database norms. The Indexing will provide the manuscript to achieve its purpose of being accessible to worldwide readers. Easy accessible will increase as manuscript's and journal's reputation. It will be a source of the quality information in respective areas/studies.

**Privacy Statement**

We may collect the contact details from authors like names, designation with Institutional address, email addresses, postal address, phone numbers and other information to understand needs and provide with a better service that are entered in this journal site and will be used exclusively for the stated purposes of this journal.

**Frequency of Publication of the Journal**

BODHI is a quarterly journal, will be published in January, April, July and October on respective Years.

**Review and Evaluation Committee**

Quarterly review committee meeting will be convened by the editor-in-chief. Authors are expected to submit their manuscript before 20 working days of the publication of the respective month. The journal will be published regularly as per Journal publication policy.

**Article Submission**

Authors are kindly advised to send manuscripts along with registration & copyright forms. (Duly filled-in Registration form is mandatory with the paper for acceptance) Soft copy of the papers should be mailed to **bodhijournal@gmail.com**

**Conference Proceedings**

Bodhi will be published as special issues for the national / international conference and seminars volumes. The group of papers also will be published in Bodhi journal.

TIRUNELVELI DAKSHINA MARA NADAR SANGAM COLLEGE
(Accredited by **NAAC** with **B+** Grade)
(Affiliated to Manonmaniam Sundaranar University)
**T. KALLIKULAM - 627 113.**
Tirunelveli District, Tamil Nadu.

**Dr.** (Major) **D. RAJAN,** M.Sc., M.Phil., Ph.D.,
Principal

Off : 04637 220250

e_mail : tdmnscollege@rediffmail.com

## வாழ்த்துரை

Date : ......................

வாழ்க! நிரந்தரம் வாழ்க! தமிழ் மொழி

வாழிய வாழியவே!

என்று பாரதியார் போற்றி வாழ்த்திய பார் போற்றும் வான் புகழுடைய என் தாய்த் தமிழை வாழ்த்தி வணங்குகிறேன். பண்டைத் தமிழர்களின் இலக்கியத்தில் அறிவியல் மற்றும் ஆன்மிக கருத்துக்கள் நிறைய பொதிந்துள்ளன. நம் முன்னோர்கள் பல அரிய கருத்துகளோடு இலக்கியத்தில் அறிவியல், ஆன்மிகம் பற்றிய கருத்துகளை இணைத்து இலக்கியம் படைத்துள்ளனர். இக்கருத்தை வெளிக்கொணரும் விதமாக, திருநெல்வேலி தெக்ஷண மாற நாடார் சங்கம் கல்லூரி தமிழ்த்துறை மற்றும் கிராமியக் கலை இலக்கிய மன்றம் இணைந்து நடத்தும் பன்னாட்டுக் கருத்தரங்கில் 'இலக்கியமும் ஆன்மிக அறிவியலும் என்ற தலைப்பில் கருத்தரங்கு நடத்தி அதில் சுமார் 80-க்கு மேற்பட்ட ஆய்வுக் கட்டுரைகளை எழுதச் செய்து அதை ஆய்வுக் கோவையாக வெளியிட விளைவது பாராட்டத்தக்க நிகழ்வாகும். வளர்ந்து வரும் நாகரீக உலகத்திற்கு ஏற்றவாறு இலக்கியத்தில் காணப்படும் அறிவியல் மற்றும் ஆன்மிக சிந்தனையை எடுத்தியம்பும் விதமாக, தமிழ்ப்பணியைச் சிறப்பிக்கும் எமது கல்லூரி தமிழ்த்துறை சுயநிதிப்பிரிவு மற்றும் கிராமியக் கலை இலக்கிய மன்றத்தின் இந்த புதுவிதமான முயற்சி மற்றும் முன்னேற்றத்தை நினைத்து நான் உவகை கொள்கிறேன். மேலும், அவர்களின் தமிழ்ப் பணி மென்மேலும் சிறக்க வேண்டியும், தொடர்ந்து வளரவேண்டியும் என் உளமார்ந்த வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

10.3.2023

PRINCIPAL
TIRUNELVELI DAKSHINA MARA NADAR SANGAM COLLEGE
T. KALLIKULAM-627 113
TAMILNADU.




THE TINNEVELLY

# DAKSHINA MARA NADAR SANGAM

(Registered under Societies Registration Act XXI of 1860 as S.No. 6 of 1948)
No. 70, Salai Street, SINDUPOONDURAI,
TIRUNELVELI - 627 001.

e_mail : dmnsnellai@gmail.com
Off : 0462 - 2333202
Cell : 94453 71202





| R.K. KALITHASAN NADAR | T. RAJAKUMAR NADAR | A. SELVARAJ NADAR |
|---|---|---|
| President | Secretary | Treasurer |
| Cell : 94437 10927 | Cell : 98408 30333 | Cell : 93667 01196 |


## வாழ்த்துரை

*Date :* ...............................

கல்தோன்றி மண்தோன்றாக் காலத்தே வாளொடு
முன்தோன்றிய மூத்தகுடி

என்ற புறப்பொருள் வெண்பாமாலை செய்யுள் மூலம் உலகில் தோன்றிய மொழிகளுள் முதன்மையானது தமிழ் தான். நம் தாய் மொழி உலகத்தின் மணிமகுடம். உலகில் உள்ள பல நாட்டவர்கள் நம் முன்னோர்களை ஒரு காலத்தில் ஏளனம் செய்தார்கள். ஆனால் நம் முன்னோர் அறிவில் சிறந்தவர்கள் என்பதை அவர்கள் படைத்த இலக்கியங்கள் மூலம் அறியலாம். பண்டையத் தமிழர்கள் இயற்கையை வழிபட தொடங்கியவுடன் அந்த வழிபாட்டோடு அறிவியலையும் வரையறுத்து அதை மக்கள் பின்பற்றவும் செய்து, அதன் மூலம் நல்ல நிலையில் வாழ்ந்துள்ளனர். "இலக்கியமும் ஆன்மீக அறிவியலும்" என்னும் தலைப்பில் ஆய்வு செய்ய முற்படும் போது பண்டையத் தமிழர்களின் பக்தி நெறியையும் அறிவியல் புலமையையும் அறிய முடிகிறது. பாமரமக்களுக்கும் உண்மையான ஆன்மிகத்தையும் அதனோடு தொடர்புடைய அறிவியலையும் உணரும் வண்ணம், திருநெல்வேலி தெக்ஷிண மாற நாடார் சங்கம் கல்லூரி தமிழ்த்துறை மற்றும் கிராமியக் கலை இலக்கிய மன்றம் இணைந்து நடத்தும் "இலக்கியமும் ஆன்மீக அறிவியலும்" என்ற பன்னாட்டு கருத்தரங்கில் சுமார் 80 தரமான ஆய்வுக் கட்டுரைகளை சிறந்த நூலாக்கி வெளியிட முயற்சி செய்த அனைவரையும் வாழ்த்துகிறேன்.

வாழ்க. வளமுடன்!

அன்புடன்......

R.K. காளிதாசன் நாடார்

**TIRUNELVELI DAKSHINA MARA NADAR SANGAM COLLEGE**

(Accredited by NAAC with B+ Grade)

T. KALLIKULAM - 627 113. Tamil Nadu.

E_mail : tdmnsoffice @ gmail.com

OFFICE : 04637 - 220250

V.P. RAMANATHAN NADAR M.Com., M.B.A.,
Secretary & Correspondent

Dr. (Major) D. RAJAN M.Sc., M.Phil., Ph.D.,
Principal

Ref.No. : ......................

Date : 02.03.2023

## வாழ்த்துரை

தமிழ் இலக்கியங்கள் அனைத்தையும் ஆராய்வதன் மூலம் நம் முன்னோர்களின் வாழ்வியல் முறைகளையும், அவர்களிடம் இருந்த அறிவியல் சிந்தனைகளையும அறிந்துகொள்ள முடிகிறது. நம் முன்னோர்களின் அறிவியல் சிந்தனைகளையும், அதனோடு தொடர்புடைய ஆன்மீக அறிவையும் இந்நூல் உள்ளடக்கியுள்ளது.

எந்த ஒரு அணுகுமுறையிலும் ஆராய்ந்துணரும் வகையில் தமிழ் இலக்கியங்கள் அமைந்துள்ளன என்பதற்கு இந்நூல் சிறந்த சான்றாகும். தமிழ் இலக்கியங்களில் அறிவியல் சிந்தனைகளை ஆராயுடமிடத்து நம் முன்னோர்களின் அறிவியல் புலமை வியப்பில் ஆழ்த்தும். இந்நூல் தமிழ் இலக்கியங்களின் பல்வேறு முகங்களையும் விளக்கும் உன்னத படைப்பாகும்.

கருத்தரங்க கட்டுரைகள் புதிய கருத்துக்களை மையமாக கொண்டிருப்பதால், ஆய்வு மாணவர்களுக்கும் வழிகாட்டியாகவும் பேராசிரியர்களுக்கு பயனுள்ளதாகவும் அமையும்.

கருத்தரங்க கட்டுரைகளை நூல் வடிவத்தில் வெளிக்கொணர்வதற்கு பெரும் முயற்சியினை மேற்கொண்ட திருநெல்வேலி தெக்ஷண மாற நாடார் சங்கம் கல்லூரி தமிழ்த்துறை பேராசிரியர்களுக்கும் கிராமியக் கலை இலக்கிய மன்றத்திற்கும் என் வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்

இதுபோன்று

தங்கள் பணி சிறந்திட

தமிழ் செழித்திட வாழ்த்துகிறேன்...

SECRETARY
Tirunelveli Dakshina Mara Nadar Sangam College
T. KALLIKULAM.




THE TINNEVELLY

**DAKSHINA MARA NADAR SANGAM**

(Registered under Societies Registration Act XXI of 1860 as S.No. 6 of 1948)

No. 70, Salai Street, SINDUPOONDURAI,

TIRUNELVELI - 627 001.

e_mail : dmnsnellai@gmail.com

Off : 0462 - 2333202

Cell : 94453 71202





| R.K. KALITHASAN NADAR | T. RAJAKUMAR NADAR | A. SELVARAJ NADAR |
|---|---|---|
| President | Secretary | Treasurer |
| Cell : 94437 10927 | Cell : 98408 30333 | Cell : 93667 01196 |


## வாழ்த்துரை

*Date :* ...............................

அன்புடையீர்,

தமிழர்களின் கலாச்சாரத்தையும் பண்பாட்டையும் அறிய உறுதுணையாக இருப்பவை இலக்கியங்கள். தமிழ் இலக்கியங்கள் தமிழர்களின் பெருமையை உலகிற்கு எடுத்துரைப்பவை. மக்களை நன்னெறிப்படுத்தி ஒழுக்கத்தைப் புகட்டுவது ஆன்மீகமாகும். அந்தவகையில், ‘இலக்கியமும் ஆன்மீக அறிவியலும்’ என்னும் பொருண்மையில் அமைந்துள்ள இந்நூல் அருமையான சிந்தனை சேகரிப்பாகும். இந்நூல் தமிழ் இலக்கியத்திலுள்ள அறிவியல் சிந்தனைகளையும், ஆன்மீக கருத்துகளையும் தெளிவாக வெளிப்படுத்தி மக்களையும் மாணவர்களையும் நன்னெறிப்படுத்தும் என்பதில் ஐயமில்லை. மாணவர்களுக்கும், தமிழ் ஆர்வலர்களுக்கும் மிகவும் பயனுள்ளதாகவும் அறிவுசார்ந்த தேடலின் இடமாகவும் அமைந்துள்ளது.

இத்தகைய படைப்பினை நூல் வடிவத்தில் வெளிக்கொணர்வதற்கு அரும்பெரும் முயற்சியினை மேற்கொண்ட திருநெல்வேலி தெக்ஷிண மாற நாடார் சங்கம் கல்லூரி தமிழ்த்துறை பேராசிரியர்களுக்கும் கிராமியக் கலை இலக்கிய மன்றத்திற்கும் என் வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்கிறேன். தமிழைப் போற்றுகிறேன்…

**வாழ்த்துக்களுடன்....**

T. Rajakumar

T. ராஜகுமார் நாடார்



THE TINNEVELLY
# DAKSHINA MARA NADAR SANGAM
(Registered under Societies Registration Act XXI of 1860 as S.No. 6 of 1948)
No. 70, Salai Street, SINDUPOONDURAI,
TIRUNELVELI - 627 001.
e_mail : dmnsnellai@gmail.com
Off : 0462 - 2333202
Cell : 94453 71202



| R.K. KALITHASAN NADAR | T. RAJAKUMAR NADAR | A. SELVARAJ NADAR |
|---|---|---|
| President | Secretary | Treasurer |
| Cell : 94437 10927 | Cell : 98408 30333 | Cell : 93667 01196 |


## வாழ்த்துரை

Date : ...............................

திருநெல்வேலி தெசஷிண மாற நாடார் சங்கம் கல்லூரி கிராமியக் கலை இலக்கிய மன்றம் மற்றும் சுயநிதிப்பிரிவு தமிழ்த்துறையுடன் போதி ஆய்விதழ் இணைந்து "இலக்கியமும் ஆன்மீக அறிவியலும்" என்னும் பொருண்மையில் பன்னாட்டுக் கருத்தரங்கம் நடத்துவது மிகவும் சிறப்புக்குரிய நிகழ்வாகும். பண்டையத் தமிழர்களின் வாழ்வியல், ஆன்மிகத்தோடு தொடர்புடையது. அதனால் தான் தமிழகம் உலகளவில் ஆன்மிக பூமியாக உள்ளது. மனிதன் தன்னுடைய வாழ்வில் எல்லா நிலைகளிலும் ஆன்மிகத்தை நம்பியே வாழ்ந்தான். தனக்குள் புதைந்திருக்கும் தெய்வீகத் தன்மையை வெளிக் கொணர வைப்பது ஆன்மிகம். நம் முன்னோர்கள் வகுத்த ஆன்மீகம், அறிவியலோடு தொடர்புடையது என்று உலக அறிஞர்கள் கூறுகின்றார்கள். அந்த வகையில் "இலக்கியமும் ஆன்மீக அறிவியலும்" என்னும் தலைப்பில் நடத்தப்படும் இப்பன்னாட்டுக் கருத்தரங்கில் ஆய்வுக் கட்டுரைகளைத் தொகுத்து நூலாக வெளியிட்டிருப்பது கிராமியக் கலை இலக்கிய மன்றம் மற்றும் தமிழ்த்துறையின் சீரிய முயற்சியாகும். தமிழகத்தின் ஆன்மிக அறிவியலுக்கு ஈடு இணையான இவ்வுலகில ஒன்றும் இல்லை. தமிழ்த்துறைப் பேராசிரியர்களின் தமிழ்ப் பணியை மனதாரப் பாராட்டுகிறேன். அதோடு மேலும் பல சிறப்புகளைப் பெற்று வாழ்வை சாதனையாக்க மனதார வாழ்த்துகிறேன்.

மகிழ்வுடன்......

A. செல்வராஜ் நாடார்

# S.K.T.B. காமராஜ் B.A., B.L.,

TDMNS இயக்குநர் & TDMNS கல்லூரிக்குழு உறுப்பினர்

## திருநெல்வேலி தெக்ஷண மாற நாடார் சங்கம்.
## திருநெல்வேலி - 1

நாள்: ....................

அன்புடையீர்,

இலக்கியமும் ஆன்மீக அறிவியலும் என்ற பொருண்மையில் நடைபெறுகின்ற பன்னாட்டுக் கருத்தரங்கம் சீருடனும், சிறப்புடனும், சீர்மையுடனும் நடைபெற எங்கள் இதயம் கனிந்த இனிய நல்வாழ்த்துகளையும் வந்தனங்களையும் தெரிவித்துக்கொள்கிறோம். !

மேலும் இந்த கருத்தரங்கை மேன்மையுடன் நடத்துகின்ற திருநெல்வேலி தெக்ஷண மாற நாடார் சங்கம் கல்லூரியின் தமிழ்த்துறை (சுயநிதிப்பிரிவு) மற்றும் கிராமியக்கலை இலக்கிய மன்றத்தையும் மனதார பாராட்டுகிறோம்.!

அவ்வாறே இந்நிகழ்வு சிறப்புற இதில் பங்களிப்பு கொள்ளும் பேராசிரிய பெருந்தகைகளுக்கும், நன் மாணவ கண்மணிகளுக்கும் ஆக்கம்தரும் ஆன்றோர் மற்றும் சான்றோர் பெருமக்களுக்கும் எங்கள் நன்றியையும் வணக்கத்தையும் உரித்தாக்கிக் கொள்கிறோம்.

இடம்: திருநெல்வேலி

நாள்: 27.02.2023

அன்புடன்...

S.K.T.B. காமராஜ் 27/2/2[illegible]
B.A., B.L.,

# வாழ்த்துரை

திருநெல்வேலி தக்ஷண மாற நாடார் சங்கம் கல்லூரியின் தமிழ்த்துறை மற்றும் கிராமியக் கலை இலக்கிய மன்றமும் இணைந்து, "இலக்கியமும் ஆன்மீக அறிவியலும்" எனும் பொருண்மையில் மார்ச் 29, 2023 ல் நடத்தவிருக்கும் பன்னாட்டுக் கருத்தரங்கு வெற்றி பெற வேண்டும் என வாழ்த்துவதில் உவகை கொள்கிறேன்.

தமிழர் தம் பண்டைய வாழ்வியல் அறிவியல் பூர்வமானது. சமகால சூழலியல் கோட்பாடான நெக்ஸஸ் மற்றும் சிஸ்டம் வழிமுறை என்பது இப்பெயர் சூட்டல் நடைபெறும் முன்னமே ஒரு 3000 ஆண்டுகள் முன்னமே தமிழனால் கடைபிடிக்கப்பட்ட வாழ்வியலாக இருந்திருக்கிறது. சிஸ்டம் நோக்கு என்பது இப்புவி வாழ்வை கழுகுப் பார்வையில் பார்ப்பது. உதாரணமாக பூமியைக் கோளமெனப் பார்ப்பது. சாதாரணமாக புவி நம் கண்ணிற்குத் தடையாக நேர்கோடு போல் தோற்றமளித்தாலும் அதைக் கோளமென்று தமிழன் கண்டிருக்கிறான். அக்கோளத்தில் பல்வேறு கண்டங்கள், பலவகைக் கடல்கள் இருப்பதை அறிந்திருக்கிறான். கண்டளங்களில் மலையும் மலை சார்ந்த பகுதியைக் குறிஞ்சியென அழைத்து அது குணங்களால் காடும் காடு சாந்த முல்லையிலிருந்து வேறுபடுவதைக் கண்டிருக்கிறான். அவன் கண்ட நானிலத்தில் மருதமும், நெய்தலும் சேரும். கிபி 4ம் நூற்றாண்டு வாக்கில் எழுதப்பட்ட சிலப்பதிகாரம் முல்லையும், மருதமும் திரிவுறும் போது பாலை எனும் வெற்றுவெளி தோன்றுவதாகச் சொல்கிறது. ஒவ்வொரு திணைக்குமுரிய முதற்பொருள், கருப்பொருள், உரிப்பொருள் என்னென்ன எனப்பகுத்து அறிந்திருக்கிறான் தமிழன். நான்கு திணைகளின் கருப்பொருளாக

மாயோன் மேய காடுறை உலகமும்
சேயோன் மேய மைவரை உலகமும்
வேந்தன் மேய தீம்புனல் உலகமும்
வருணன் மேய பெரும்புனல் உலகமும்
முல்லை குறிஞ்சி மருதம் நெய்தல் எனச்
சொல்லிய முறையால் சொல்லவும் பெறுமே

என தொல்காப்பியர் சொல்கிறார். இது ஆழ்பொருள் கொண்டது. செமத்தியக் கருத்தியலுக்கு நேர் எதிராக இறைவன் எங்கிருந்தோ குதித்தவன் அல்ல அவன் நாம் வாழும் மண்ணின் நீட்சியாக நம்முள்ளே உறைகிறான் என்று சொல்வது.

அவ்வாறு இறைவன் வாழ்கிறான் எனில் அவன் நம் உறவாக உள்ளான் என்றுதானே பொருள். ஏனெனில் ஈக்கோ சிஸ்டம் எனும் சூழல் திணையில் எல்லாம் எல்லாவற்றிடனும் தொடர்புடையனவாக உள்ளன, சார்ந்தும் உள்ளன. இதை சமகால சூழலியல் நெக்ஸஸ் என்று சொல்லும். தமிழன் கண்ட திணைக் கோட்பாடு என்பது நெக்ஸஸ் புரிதலோடு உருவாக்கப்பட்டது. இறைவனை உருவகமாக, உள்ளுறை உவமமாக திணையின் கருப்பொருளாக அதை இயக்கும் செயலியாகக் கண்டது தமிழ் மண். ஆரிய வேதமானது இந்திரன், வாயு, அக்னி, ப்ரிதிவி, நீர், மண்ணெனக் கண்டு வழிபட்டுக் கொண்டிருக்கும் போது தமிழன்,

மாநிலஞ் சேவடி யாகத் தூநீர்
வளைநரல் பௌவம் உடுக்கை யாக
விசும்புமெய் யாகத் திசைகை யாகப்
பசுங்கதிர் மதியமொடு சுடர்கண் ணாக
இயன்ற எல்லாம் பயின்றகத் தடக்கிய
வேத முதல்வன் என்ப
தீதற விளங்கிய திகிரி யோனே

இறைவனைப் பிரபஞ்ச உருவில் காண்கிறான். வடவேதம் போல் அவன் இந்திரனோ? அக்னியோ? வாயுவோ என்றெல்லாம் மயங்காமல் அவன் வேத முதல்வன் அவன்

சக்கரத்தண்ணலான திருமால் என்று தெளிவாகச் சொல்லி விடுகிறது சங்கத்தமிழ். திருவாய்மொழி எனும் நம்மாழ்வாரின் பாசுரங்கள் இறைவனின் வாய்மொழியாகவே வருவதால் அதுவே தமிழ் வேதமெனக் கண்டனர் தமிழர். வடமொழி வேதம் அந்தணர் போற்றுவது, அரசு போற்றுவது ஆயின் திருவாய்மொழியோ அனைவர்க்கும் உரியது அது திருவின் வாய்மொழி என்றும் வர்ணாஸ்ரமக் குறையேதுமில்லாமல் எல்லோர்க்கும் பொது என்றும் வைத்தான் தமிழன். திருமால் நாம் கண்ணால் காணும் பிரபஞ்சமாக இருக்கின்ற அதே நேரத்தில்,

தீயினுள் தெறல் நீ; பூவினுள் நாற்றம் நீ;
கல்லினுள் மணியும் நீ; சொல்லினுள் வாய்மை நீ;
அறத்தினுள் அன்பு நீ; மறத்தினுள் மைந்து நீ;
வேதத்து மறை நீ; பூதத்து முதலும் நீ;
வெஞ் சுடர் ஒளியும் நீ; திங்களுள் அளியும் நீ;
அனைத்தும் நீ; அனைத்தின் உட்பொருளும் நீ; ஆதலின்,
உறையும் உறைவதும் இலையே; உண்மையும்
மறவியில் சிறப்பின் மாயமார் அனையை;
முதல்முறை, இடைமுறை, கடைமுறை, தொழிலில்
பிறவாப் பிறப்பு இலை; பிறப்பித்தோர் இலையே;

எனும் படி அவன் எவற்றினுள்ளும் உறையும் உட்பொருளாக, கருப்பொருளாக உள்ளான் என்பதை தொல்காப்பியத்திற்கும் மூத்தது எனும் பரிபாடலில் சொல்லிப் போனான் தமிழன்.

சமிஸ்கிருதம் தேவபாஷை, ஐயர் ஓதும் வேத மந்திரங்கள் உயர்வு என்பதெல்லாம் பின்னால் வந்த அரசமைப்புகள் தங்கள் இறையாண்மைக்காக உருவாக்கிக்கொண்ட பொய் கருத்தியல்கள். அரசமைப்பு உருவாகும் முன்னமே தமிழ் கண்ட வேத முதல்வன் திருமால் அவன் எப்பொருளாகவும், அப்பொருளின் உட்பொருளாகவும் உள்ளான் என்று கண்டு தெளிந்தது தமிழகம். எனவேதான் பக்தி எனும் அன்புமுறை தமிழகத்தில் பிறந்தது என வடவேதம் ஓதுவோரும் ஏற்கின்றனர். அன்பின் ஐந்திணையே ஆழ்வார் பாசுரங்கள். அதீத அன்பே பக்தி. பக்தி பெருக்கிடும் இடம் கோயில். கோயில் இல்லா ஊரில் குடியிருக்க வேண்டாம் என்று சொல்லி இந்தியாவிலேயே மிக அதிகமாகக் கோயில்கள் உள்ள மாநிலம் தமிழ்நாடு.

இக்கோயில் அனைவர்க்கும் உரியது. அங்கு பூசனை செய்பவன் அதை இறைத்தொண்டாகச் செய்கிறான். அதுவோர் வேலை இல்லை. பிரபஞ்ச அரசனான இறைவன் உறையும் இடம் கோ+இல் = கோயில் என்பது. அவன் அர்ச்சாவதாரமாக அங்கு உள்ளான். அவன் திருமேனி வாடாமல் தொண்டூழியம் செய்பவன் பூசாரி என்று கோயில் ஒழுகு எழுதி வைத்தவர் தமிழ்த் தலைவன் என்று போற்றப்படும் இராமானுசர். இதுவே தமிழ் மரபு.

இம்மரபில் அறிவியல் உண்டு, ஐந்திணையுண்டு, அது காட்டும் அன்பு உண்டு. அறவாழி அந்தணனே இறைவன். கோயில் மொழி தமிழ். தேவ பாஷை தமிழ் என்பதில் தமிழர்களுக்கு இன்றாவது தெளிவு வர வேண்டும். "வேண்டிய வேதமோதி விரைவில் கிழியறுத்தான்" என்று பெரியாழ்வார் வாழ்வு சுட்டிக்காட்டுவது போல் வேண்டாததை விலக்கி வேண்டியதை ஓதி இறையருள் பெறுவோமாக.

அன்புடன்

பேரா. முனைவர் நா. கண்ணன்
தமிழ் மரபு அறக்கட்டளை (பன்னாட்டு அமைப்பு)
இணைத்தலைவர், தோற்றுனர், மலேசியா

# தொகுப்புரை

தமிழகத்தின் தெற்கே திருநெல்வேலி மாவட்டத்தில் ராதாபுரம் தாலுகாவில் உள்ள தெ. கள்ளிகுளத்தில், திருநெல்வேலி தெட்ஷண மாற நாடார் சங்கம் கல்லூரியானது 1971-ஆம் ஆண்டு தொடங்கப்பட்டு இன்று பொன்விழாவை கடந்து பவள விழாவை நோக்கி பொலிவுடன் நடைபயில்கிறது. 52 ஆண்டுகள் கிராமப்புற மாணவர்களின் மேம்பாடு ஒன்றினையே முதன்மை நோக்கமாகக் கொண்டு கல்விப் பணியை செய்து தேசிய தரமதிப்பீட்டில் B+ பெற்று திகழ்கின்ற எமது கல்லூரியில் 2014-2015 ஆம் கல்வியாண்டில் இளங்கலைத் தமிழ் பாடப்பிரிவு ஆரம்பிக்கப்பட்டு சிறப்பாக இயங்கி வருகிறது.

2018 ஆம் ஆண்டு 'கோயிற்கலை- பன்முகப் பார்வை' மற்றும் 2019 ஆம் ஆண்டு 'தென் தமிழகத்தின் அகழாய்வுப் பணிகள்' என்ற பயிற்சி பட்டறையும் மேலும் 2020 இல் 'புறநானூற்றுப் பொருண்மை சங்க இலக்கியமே அறிவியலாக' என்ற இரண்டு நாள் இணைய வழி பன்னாட்டு கருத்தரங்கத்தினையும் நடத்தியுள்ளது. மேலும் எமது கல்லூரியில் 2017-2018 ஆம் கல்வியாண்டில் கிராமியக் கலை இலக்கிய மன்றம் ஆரம்பிக்கப்பட்டு எம் கல்லூரி மாணவர்களின் முன்னேற்றத்திற்காக பல்வேறு பயிலரங்குகள், கருத்தரங்குகள் கிராமியக் கலை நிகழ்ச்சிகள், கண்காட்சிகள் போன்ற பல்வேறு நிகழ்ச்சிகளைச் சிறப்புற நடத்தி வருகிறது. 2018-ஆம் ஆண்டு 'நாடகத்தின் நிழல் வடிவம் தோல் பாவைக் கூத்து' என்னும் தலைப்பில் ஒருநாள் பயிலரங்கும், 2020-ஆம் ஆண்டு' தமிழர்பண்பாடும் பயன்பாட்டுப் பொருட்களும்' எனும் தலைப்பில் ஒருநாள் கருத்தரங்கினை இணையவழியாக நடத்தி வெற்றி கண்டுள்ளது. 2022-ஆம் ஆண்டு மே மாதம் 'நாட்டுப்புற இயலில் பண்பாட்டுப் பதிவுகள்' என்ற தலைப்பில் பன்னாட்டு கத்தரங்கினை நடத்தி அதில் 80 ஆய்வுக் கட்டுரைகளைத் தொகுத்து இரண்டு தொகுதியாக போதி ஆய்விதழுடன் இணைந்து வெற்றிகரமாக நடத்தியுள்ளது.

'இலக்கியமும் ஆன்மீக அறிவியலும்' என்ற தலைப்பில் பன்னாட்டுக் கருத்தரங்கம் 2023-ஆம் ஆண்டு மார்ச் மாதம் நடைபெற இருக்கிறது. பண்டையத் தமிழர்களின் ஆன்மீகம் என்பது அறிவியலோடு தொடர்புடையது என்பதை உலக மக்கள் அறியும் நோக்கில் இக்கருத்தரங்கம் நடத்தப்பட உள்ளது.

தமிழ்த்துறையோடு கிராமியக்கலை இலக்கிய மன்றமும் இணைந்து நடத்தும் பன்னாட்டுக் கருத்தரங்கில் தமிழ்ச் சான்றோர்கள், பேராசிரியர்கள், தமிழ் ஆர்வலர்கள், ஆய்வு மாணவர்கள் என பல்வேறு தரப்பினரையும் பங்கு பெறச் செய்ய வேண்டும் என்று தீர்மானிக்கப்பட்டது.

இலக்கியமும் ஆன்மீக அறிவியலும் என்ற பொருண்மையில் திருநெல்வேலி தெட்சணமாற நாடார் சங்கம் கல்லூரி தமிழ்த் துறையும் கிராமியக் கலை இலக்கிய மன்றமும் இணைந்து நடத்தும் பன்னாட்டுக் கருத்தரங்கில் ஆன்மீகமும் அறிவியலும், காப்பியங்களில் ஆன்மீக அறிவியல், பக்தி இலக்கியங்களில் அறிவியல் சிந்தனைகள், இக்கால இலக்கியங்களில் அறிவியல் சிந்தனைகள், சிற்றிலக்கியங்களில் ஆன்மிக அறிவியல், நீதி இலக்கியங்களில் ஆன்மிக அறிவியல், இலக்கியங்களில் அறிவியல் சிந்தனைகள் இது போன்ற பல பொருண்மைகளில் ஆய்வுகளை அமைத்துக் கொள்ள நினைத்தோம். அதனடிப்படையில் தமிழ் ஆர்வலர்கள், பேராசிரியர்கள், ஆய்வு மாணவர்கள் ஆய்வை மேற்கொண்டு தரமான 80 க்கு மேற்பட்ட ஆய்வுக் கட்டுரைகளை வழங்கியுள்ளனர். இவ்வாய்வுக் கட்டுரைகளை இரண்டு தொகுதியாக வெளியிடுகிறோம்.

தமிழ் இலக்கியக் களங்களான இலக்கியம், இலக்கணம், நாட்டுப்புற இலக்கியம், ஆன்மீக இலக்கியம், நீதிஇலக்கியம், நவீன இலக்கியம், கோயிற் கலை என பல்துறையில் கட்டுரைகள் அமைந்திருக்கின்றன. கருத்தரங்கை நடத்தத் திட்டமிட்ட எங்களுக்கு இது மனநிறைவைத் தந்தது. எங்களின் இந்த முயற்சிக்கு ஆதரவு தந்த பேராசிரியர்கள், ஆய்வாளர்கள் நாலா திசையிலிருந்தும் கட்டுரைகளை அனுப்பித் தந்தனர். தமிழ் ஆய்வுலகில் நாங்கள் மேற்கொள்ளும் முயற்சிக்கு தொய்வு இல்லை என்று நம்பிக்கையூட்டிய அத்தனை நல் நெஞ்சங்களையும் மனதார வாழ்த்துகிறோம்.

‘இலக்கியமும் ஆன்மீக அறிவியலும்’ என்ற பன்னாட்டுக் கருத்தரங்கு நடத்துவதற்கு அனுமதித் தந்த கல்லூரி மற்றும் சங்கத் தலைவர் திரு.R.K.காளிதாசன் நாடார், செயலாளர் T.ராஜகுமார் நாடார், பொருளாளர் திரு.A.செல்வராஜ் நாடார் மற்றும் கல்லூரி செயலர், தாளாளர் திரு.V.P. இராமநாதன் நாடார், கல்லூரி முதல்வர் முனைவர். மேஜர் D. ராஜன் அவர்களுக்கும் நனறியை உரித்தாக்குகிறோம்.

இந்த பன்னாட்டுக் கருத்தரங்கம் சிறப்புற அமைய உதவிப் புரிந்த தமிழ்த்துறைத் தலைவர் சு.கிரிஜா மற்றும் தமிழ்த்துறை பேராசிரியர்களுக்கும் கிராமியக்கலை இலக்கியமன்ற உறுப்பினர்களுக்கும் கட்டுரைகளை நல்ல முறையில் ஒரே எழுத்துருவிற்கு மாற்றியும் திருத்தம் செய்துக் கொடுத்த உதவிப் பேராசிரியர் முனைவர் N.ஹரிபிரகாஷ் மற்றும் கல்லூரி அலுவலர் R.ரெங்கசாமி அவர்களுக்கும் நூலாக வடிவமைத்த போதி ஆய்விதழ் நிறுவனர் முனைவர் S.பாலகிருஷ்ணன் அவர்களுக்கும் நன்றியை உரித்தாக்குகின்றோம். மேலும் கருத்தரங்கிற்கு தேவையான ஆலோசனைகளை வழங்கிய கல்லூரி நிர்வாகத்தினர், பேராசிரியர்கள், அலுவலக உதவியாளர்கள் ஆகியோருக்கும் நெஞ்சம் நிறைந்த நன்றிகள்.

மகிழ்வுடன்

முனைவர் செ.சோனாகிறிஸ்டி
உதவிப் பேராசிரியர்

முனைவர் அ.சவரிராயம்மாள்
உதவிப் பேராசிரியர்

திரு.சு.முருகவேல்
உதவிப் பேராசிரியர்
கிராமியக் கலை இலக்கிய மன்ற ஒருங்கிணைப்பாளர்

திரு.சு.பால்மோகன்
உதவிப் பேராசிரியர்

# BODHI
## INTERNATIONAL JOURNAL OF RESEARCH IN HUMANITIES, ARTS AND SCIENCE
An Online, Peer-reviewed, Refereed and Quarterly Journal

**Vol: 7** **Special Issue 2** **March 2023** **E-ISSN: 2456-5571**


**Aim & Objectives**

Academic Excellence in research is sustained by promoting research support for young Scholars. Our Journal on Humanities, Arts and Science of research is motivating all aspects of encounters across disciplines and research fields in a multidisciplinary view, by assembling research groups and consequently projects, supporting publications with this inclination and organizing programmes. Internationalization of research work is the unit seeks to develop its scholarly profile in research through quality of publications. And visibility of research is creating sustainable platforms for research and publication, such as series of books; motivating dissemination of research results for people and society.

**Disclaimer**

Contributors are advised to be strict in academic ethics with respect to acknowledgment of the original ideas borrowed from others. The Publisher & editors will not be held responsible for any such lapse of the contributor regarding plagiarism and unwarranted quotations in their manuscripts. All submissions should be original and must be accompanied by a declaration stating your research paper as an original work and has not been published anywhere else. It will be the sole responsibility of the authors for such lapses, if any on legal bindings and ethical code of publication.

**Communication**

Papers should be mailed to bodhijournal@gmail.com

**CONTENTS**


| S.No. | Chapters | Page No. |
|---|---|---|
| 1 | மாறன் மனமும், மறந்து போன புரட்சியும் **நா. கண்ணன்** | 1 |
| 2 | திருஞானசம்பந்தர் தேவாரத்தில் சைவ நாற்பாதங்கள் **சி. அனிதா ராணி** | 7 |
| 3 | ஆண்டாள் பிரியதர்ஷினி சிறுகதைகளில் குடும்பப் பெண்களின் நிலைப்பாடு **அ.கோதேஸ்வரி & முனைவர் தா.ஷமிலா ஜோஸ்டர்** | 11 |
| 4 | தொல்காப்பியமும் அறிவியலும் **முனைவர் அ. சவரிராயம்மாள்** | 19 |
| 5 | திருவாசகத்தில் கருஉருவாதல் சிந்தனைகள் **முனைவர் கோ.சி. கோலப்பதாஸ்** | 23 |
| 6 | வரலாற்றுப் பார்வையில் (ம) பள்ளர்களின் கல்வெட்டுக்களும் செப்பேடுகளும் **க.தேவதாஸ்** | 28 |
| 7 | நற்றிணையில் பெயர்ச்சொற்களாய் வரும் ஈரெழுத்து ஒருமொழிகள் **பி. சுமித்திரா தேவி & முனைவர் A. விஜயலெட்சுமி** | 33 |
| 8 | புறநானூற்றில் அறிவியல் சிந்தனைகள் **க. சிந்து** | 39 |
| 9 | பாரதியாரின் பன்முகச் சிந்தனைகள் **முனைவர் பா. நேருஜி** | 43 |

| | | |
|---|---|---|
| 10 | தண்ணீர்தேசம் நாவல் உணர்த்தும் அறிவியல் சிந்தனைகள் **முனைவர் ஜெ. கோகிலா** | 48 |
| 11 | சிலப்பதிகாரம் புகார்க்காண்டத்தில் அறிவியல் சிந்தனைகள் **முனைவர் மா. செல்வத்தரசி** | 52 |
| 12 | திருப்பாவை கூறும் ஆன்மீகமும், அறிவியலும் **சு. தெய்வ ஜெயஜோதி& முனைவர் இரா. திலகா** | 57 |
| 13 | 'திருவாசகம் உணர்த்தும் அறிவியல்' **முனைவர் அ. கல்பனாதேவி** | 62 |
| 14 | போர்க்கள மெய்ப்பாடுகள் **முனைவர் அ.தேன்மொழி** | 66 |
| 15 | முக்கூடற்பள்ளில் காணலாகும் அறிவியலும் ஆன்மீகமும் **ச. கவிதா & சு. விஜயா கலைவாணி** | 73 |
| 16 | கோளறு பதிகம் உணர்த்தும் ஆன்மிக அறிவியல் **முனைவர் ச. சகுந்தலை** | 76 |
| 17 | சங்க இலக்கியங்களில் வேளாண்மை நுட்பம் **திருமதி ம. மரிய தெரஸ்** | 82 |
| 18 | புறநானூற்றில் விஞ்ஞான அறிவியலும் மருத்துவ முறைகளும் **முனைவர் அ. வசந்தி** | 87 |
| 19 | சங்க இலக்கியம் கூறும் தமிழர்களின் அறிவியல் அறிவு **த. ரெனில் ரெஞ்சினி** | 92 |
| 20 | ஆன்மீகமும் அறிவியலும் **சு. பால்மோகன்** | 95 |
| 21 | கவிமணி கவிதைகளில் ஆன்மீக அறிவியல் **முனைவர் மு. சாந்தினி** | 101 |
| 22 | சங்க இலக்கியத்தில் அறிவியல் **ஜோ. மேரி பிரவீணா** | 104 |
| 23 | மனவளக்கலை மன்றத்தின் பணியும் பயனும் **முனைவர் பா. சிங்காரவேலன்** | 109 |
| 24 | ஜெயமோகனின் விஷ்ணுபுரம் நாவலில் இலக்கியங்களில் இயற்கை **மா. வள்ளி** | 114 |
| 25 | தண்ணீர் தேசம் புதினத்தில் அறிவியல் சிந்தனைகள் **பொன். கனகா** | 119 |
| 26 | திருக்குறள் கூறும் அறிவியல் உண்மைகள் **உ. அஸினா பேகம்** | 124 |
| 27 | புறநானூற்றில் அறிவியல் **முனைவர் அ. பாரதிராணி** | 128 |
| 28 | ஆறுபடை வீடுகளின் சிறப்பு **முனைவர் ஜெ.போ. சாந்திதேவி** | 132 |
| 29 | சங்க இலக்கியங்களில் வியக்கும் அறிவியல் **முனைவர் த. தனலெட்சுமி** | 135 |
| 30 | தமிழ் இலக்கியங்களில் அறிவியல் சிந்தனைகள் **முனைவர் செ.பிரீடா** | 140 |
| 31 | திருமந்திரத்தில் கருவியல் **வே. துர்கா பரமேஸ்வரி** | 145 |
| 32 | தமிழ்ப் பக்தி இலக்கியங்களில் இசைக்கலைகள் **முதுகலைமானி அ.கல்யான்சரன்** | 150 |
| 33 | ஆயிரமாயிரம் நாட்களின் விளைபொருளே மனம் **திருமதி சு. சத்யா** | 155 |
| 34 | நீதிக்கட்சி **முனைவர் ச. அமுதவல்லி** | 160 |
| 35 | சங்க இலக்கியத்தில் தொழில்நுட்ப அறிவியல் **S. ஜெயந்தி & S. ஜெனிபா** | 163 |
| 36 | ஆலயங்களும் அறிவியலும் **ப. ஆதிபாலா** | 167 |
| 37 | பெண்மொழி **மு. பேச்சியம்மாள்** | 172 |
| 38 | புதுமைப்பித்தன் சிறுகதைகளில் நவீனத்துவத்தின் பன்முக வெளிப்பாடுகள் **முனைவர் சா. கணேசன்** | 178 |
| 39 | நாட்டுப்புற இலக்கியக்களில் அறிவியல் சிந்தனைகள **தெ. முத்து லெட்சுமி** | 184 |

40 இலக்கியங்கள் சுட்டும் இசை மருத்துவத்தின் அறிவியல் சான்றுகள் 188
**முனைவர் சின்னையா - சூரியகுமார்**

41 சங்க இலக்கியத்தில் ஆன்மீக அறிவியல் 195
**ஜெ. செந்தில் குமாரி**

42 தமிழ்ச்செல்வியின் சிறுகதைகளில் காணலாகும் பெண்ணியச் சிக்கல்கள் 199
**திருமதி. கி. உலகாண்டேஸ்வரி &**
**முனைவர் திருமதி. வெ. ஷீலா**

43 திருஞானசம்பந்தரின் இறைநெறி முறைகள் 206
**திருமதி கோ. கனக செல்வி &**
**முனைவர் திருமதி. வெ. ஷீலா**

# மாறன் மனமும், மறந்து போன புரட்சியும்

**நா. கண்ணன்**
பேராசிரியர் (மேனாள்)
கீல் பல்கலைக் கழகம், ஜெர்மனி

இன்றைய சூழலில் உலக சமூகம் பிரச்சனைகளை எதிர் கொண்டே நகர்கிறது. பிரச்சனைகள் இல்லையென்றால் புரிதல் இல்லை. பிரச்சனைகள் பெரும்பாலும் அறியாமையால் விளைவன. நீண்ட தொன்மையுள்ள தமிழ்ச் சமூகம் காலம் காலமாக எதிர்வினை செய்து கொண்டே வளர்ந்துள்ளது. தங்கத்தைப் புடம் போடுவதால் அழிவது தூசுகளே. தங்கம் அழிவதில்லை. அது போல் தமிழும், அதைப் பேசும் மக்களும் இத்தனை நூற்றாண்டுகள் தம்மை நிலை நிறுத்தி வாழ்ந்து வருகின்றனர்.

அன்பின் ஐந்திணை கண்ட தமிழ்ச் சமூகமே பக்தி எனும் அன்பு நெறியைக் கண்டு இந்தியாவிற்கும் உலகிற்கும் பரப்பியது. தமிழ்ச் சமயம் கோயில்களை நம்பி இல்லையெனினும் கோயிலின் மூலமாகவே பக்தி நெறி பரப்பப்பட்டு வந்தது. இந்தியாவிலேயே மிக அதிகக் கோயில்கள் கொண்ட மாநிலமாக தமிழகம் திகழ்கிறது. கோயில் நிர்வாகம் என்பது பெரிய பொறுப்பு. கோயில்களை சமயம் பயன்படுத்திய அதே அளவில் அரசுகளும் தங்கள் தேவைகளுக்கு பயன்படுத்தின. கோயிலின் நிலைப்பிற்கு புராணங்கள் தேவைப்படுகின்றன. மக்களிடம் நம்பிக்கை கொண்டு வர தல புராணங்கள் எழுகின்றன. வேதம் எனும் பழம் மறையில் தத்துவ மணிகள் இருந்தாலும், நிறையத் தேவையில்லாத சடங்குகள், மானுடவியல் கதைகள், நம்பிக்கைகள் இருந்தன. வேதங்கள் பண்டைய இந்தியர் கண்ட ஞானம் எனக் கொண்டால் அந்த ஞானத்தைக் கண்டு சொல்ல உபநிடதங்கள் தோன்றுகின்றன, அதை விளக்க இதிகாசங்கள் தோன்றுகின்றன. அதே சமயத்தில் 18 புராணங்களும் தோன்றுகின்றன. புராணங்கள், ஐதீகங்கள் என்பவை பண்டைய மனிதனின் ஆழ்மனப்பதிவுகள். மேற்பூச்சாக கற்பனை மிகுந்த ஒரு கதையாடல் போல இருக்கும். இக்கதையாடல் முழுக்க, முழுக்க சமய உண்மைகளை விளக்க வந்தவை எனக் கொள்ள முடியாது. அதிலும் மானுடவியல் கூறுகள் அதிகமிருக்கும். மூடநம்பிக்கைகள் இருக்கும், அதீத கற்பனை வளமிருக்கும். இப்புராணங்களை சமூகம் உருவாக்கி, பயன்படுத்திக் கொண்டே வந்திருக்கிறது.

தமிழ்ச் சமூகம் தொன்று தொட்டு தொழில் அடிப்படையில் பகுக்கப்பட்டு இருந்ததை வள்ளுவர் காண்கிறார்.

**பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும் சிறப்பொவ்வா**
**செய்தொழில் வேற்றுமை யான்**

பிறப்பு என்பது எல்லோருக்கும் பொது எனினும் சமூகத்தில் நாம் செய்யும் தொழில் நம்மை சிறப்புடைய தொழில், சிறப்பில்லா தொழில் எனப் பாகுபடுத்துகிறது. பிற உயிரினங்களை ஒப்பு நோக்கும் போது மனித இனம் மட்டுமே மாண்புகள் சார்ந்து, விழுமியங்கள் சார்ந்து இயங்குகிறது. எனவே செய்யும் தொழிலிலும் தராதரம் என்பது இயற்கையாக வந்துவிடுகிறது.

**பகுத்துண்டு பல்லுயிர் ஓம்புதல் நூலோர்**
**தொகுத்தவற்றுள் எல்லாந் தலை**

நூலோர் தொகுத்தவற்றுள் எல்லாம் தலையாய அமைவது உலகின் பல்லுயிர் தன்மையைப் போற்றி மதிப்பது என்கிறார்

வள்ளுவர். சமகால சூழலியில் அறிவியல் உலகின் இயக்கமே புவியில் மண்டிக்கிடக்கும் பல்லுயிர் வளத்தினால்தான் என்கிறது. இவ்வளம் குறைபடாமல் இருக்க வேண்டுமெனில் உயிர்கொலை தவிர்க்க வேண்டும் என்பது தமிழ்ச் சான்றோர் முடிவு. கடந்த 50 ஆண்டுகளில் மட்டும் உலகின் 60மூ உயிரினங்கள் அழிக்கப்பட்டுள்ளன. இருக்கின்றன வனவிலங்குகளுக்குத் தேவையான இருப்பிடம் அபகரிக்கப்பட்டு அவற்றின் அழிவிற்கு வித்திடுகின்றான மனிதன். பறவைகள் பலவிதம், அவஔ ஒவ்வொன்றும் ஒருவிதம் என இருந்த காலமுண்டு. உலகில் மிக அதிகமாக, ஏறக்குறைய 90மூ ஒரே பறவை இருக்கிறது, அது கோழி. உலகில் உள்ள பல்லுயிர்களில் தலமைத்துவத்துடன் நிற்கும் ஒரே இனமாக மனித இனம் நிற்கிறது. பல்லுயிர் வளம் குறைந்தால் நாம் சுவாசிக்கும் உயிர்வளி (ஆக்சிஜன்) உற்பத்தி குறைந்துவிடும். ஆழி சூழ் உலகு மனிதக் கழிவுகளால் சீர்கெட்டுப் போனால், பல்லுயிர் பெருக்கம் குறைந்து உயிர்வளித் தோற்றம் பாதிக்கபடும். அது மனித, பிற உயிர் அழிவிற்கு இட்டுச் செல்லும். எனவேதான் வள்ளுவன் சொல்கிறான்,

**கொல்லான் புலாலை மறுத்தானைக் கைகூப்பி**
**எல்லா உயிரும் தொழும்**

எனும் போது உயிர்க்கூட்டம் அனைத்தும் தம்மை அழிக்கத் துணியாத மனிதனைத் தொழும் என்பது ஓர் புரிதல். வள்ளுவர் கொல்லாமை எனும் கருத்தில் இரண்டு அதிகாரங்கள் எழுதியுள்ளார். அதிலிருந்து என்ன தெரிகிறது எனில் கொல்லும் தொழில் செய்பவன் சிறப்பற்ற தொழில் செய்பவன் என்று தமிழ்ச் சமூகம் கருதியிருக்கிறது. இதற்கு எதிர்மறையாக உயிர்க்காப்பதில் செந்தண்மை பூண்டு ஒழுகுபவன் உயர் குடியாகக் கருதப்பட்டிருக்க வேண்டும்.

**அந்தணர் என்போர் அறவோர்மற் றெவ்வுயிர்க்கும்**
**செந்தண்மை பூண்டொழுக லான்**

அந்தணர் என்போரை அறவோர் என்கிறது தமிழ் மறை. கொல்லாமை ஓர் அறம். பல்லுயிர் ஓம்புதல் ஓர் அறம். மனத்துகண் மாசிலன் ஆதல் ஓர் அறம். எல்லா உயிர்க்கும் செந்தண்மை பூண்டு ஒழுகுதல் இதிலடங்கும். இவ்வறங்கள் உடையோர் அந்தணர் என உயர்த்திப் பேசுகிறது. நல்லொழுக்கம் உடையோர் பெரியோர் என்பதை ஒரு குறள் விளக்கும்.

**ஒழுக்கம் உடைமை குடிமை இழுக்கம்**
**இழிந்த பிறப்பாய் விடும்**

எனவே ஒரு குடியின் சிறப்பு, கீழ்மை என்பது அவரவர் செய்யும் ஒழுக்க நெறிகளால் வருகிறது என்கிறது வள்ளுவம்.

**மறப்பினும் ஓத்துக் கொளலாகும் பார்ப்பான்**
**பிறப்பொழுக்கங் குன்றக் கெடும்**

எனும் குறளுக்கு விளக்கம் சொல்லும் போது பார்ப்பான் தான் கற்ற வேதத்தை மறந்தால் கூட பின்பு கற்றுக்கொண்டு உய்ய முடியும், ஆயின் அவனுக்கென்று சொல்லப்பட்ட நல்ல ஒழுக்கங்களிலிருந்து அவன் பிறழ்ந்துவிட்டால் அவனுக்கு உய்ய வழியே இல்லை என்கிறார்கள் உரையாசிரியர்கள்.

ஆக தமிழ்ச் சமூகத்தின் கட்டமைப்பு எதனால் அமைகிறது எனக் கண்டோம். அதில் பார்ப்பனர்க்கான இடம் உயரிடத்தில் இருக்கிறது. அது பிறப்பால் அமைவதில்லை, அவன் செய்யும் அறச்செயலால் அது அமைகிறது என்கிறது வள்ளுவம். இதை அப்படியே விளக்கும் முகமாக அமைகிறது தமிழ் வைணவ வரலாறு. இதுவொரு மறக்கப்பட வரலாறு. அதை தூசு தட்டிப் பார்க்க வேண்டிய காலம் வந்துவிட்டது.

பிராமணர்கள் தங்கள் அறத்திலிருந்து பிறழும் போதெல்லாம் சமூகப் புரட்சிகள் இந்தியாவில் நடந்திருக்கின்றன. அதை முன்னெடுத்திச் சென்றவர் அரச குலத்தவர் என்பது சுவாரசியமான உண்மை. முதல் புரட்சியை உருவாக்கியவர் சித்தார்த்த கௌதம புத்தர். இவர் அன்றிருந்த உயிர்க்கொலை (யாகங்களின் பலி) செய்யும் சமயத்தின் கீழ்மை கண்டு மாற்றாக அன்பின் அறவழி காட்டியவர். கிறிஸ்துவிற்கு முன் 500 ஆண்டுகள் வாக்கில் இவ்வழி இந்தியாவின் கிழக்கும் மேற்கும் பரவுகிறது. ஏறக்குறைய அதே நூற்றாண்டில் உருவானதுதான் ஜைனமும். ஜீனன் என்றால் வெற்றி கொண்டவன் என்று பொருள். இச்சமயம் இந்தியாவெங்கும் கோலோச்சுகிறது, தமிழகத்தையும் சேர்த்து.

இவ்விரு சமுதாயப் புரட்சிகளுக்குப் பிறகு ஏற்பட்ட ஒரு புரட்சிதான் தமிழ் வைணவப் புரட்சி. இது பொது ஆண்டு எட்டாம் நூற்றாண்டில் தென் தமிழ் நாட்டில் நிகழ்கிறது. ஆயின் ஒரு முக்கிய மாற்றத்துடன். வட இந்தியப் புரட்சிகள் அரச குலத்தைச் சார்ந்தோர் பிராமண குலத்திற்கு எதிராக மாற்று நெறியை உருவாக்கினர். ஆயின் தென்னகத்தில் வள்ளுவன் வழியில் செந்தண்மை பூண்ட ஒருவர், அவர் அந்தணரே இல்லையெனினும் அவரே அறவாழி அந்தணன் என்று சொல்லுவதாக அமைகிறது தமிழகத்துப் புரட்சி. அதுவும் இதை ஒரு பிராமணர் பிரகடணப்படுத்துவதாக காட்டுகிறது தமிழ்ச் சமய வரலாறு. காரி, மாறன், சடகோபன் என்றெல்லாம் அழைக்கப்பட்ட அரசகுலத்தைச் சார்ந்த ஒருவரின் செந்தண்மை கண்டு மனமுருகி ''வேறொன்றும் நான் அறியேன் வேதம் தமிழ் செய்த மாறன் சடகோபன் வண்குருகூர் ஏறெங்கள் வாழ்வாம்'' எனப் போற்றி அவரைப் பிராமண குலத்தின் புதிய குருவாகப் பிரகடணப்படுத்துகிறார் மதுரகவி எனும் வேதமறிந்த பிராமணர். செந்தண்மை என்பது பிறப்பு சார்ந்தது அன்று அது குணம் சார்ந்தது, நன்னெறி சார்ந்தது, அதுவே மாறும் சமூகத்திற்கான நீதி என்பது இப்புதிய புரட்சியின் அடிப்படை. நம்மாழ்வார் என்று பின்னால் வாஞ்சையுடன் அழைக்கப்பட்ட சடகோபனின் பனுவல்கள் தமிழ் வேதம் என அறிவிக்கப்படுகின்றன. இவர் இயற்றிய திருவிருத்தம், திருவாசிரியம், பெரிய திருவந்தாதி மற்றும் திருவாய்மொழி என்பவை வடவேதங்களான ரிக், யஜுர், அதர்வண, சாம வேதங்களைக் காட்டிலும் உயர்வானது என நிறுவுகின்றனர் தமிழ் அந்தணர்கள்.

**வான்திகழும் சோலை மதிளரங்கர் வண்புகழ்மேல்**
**ஆன்ற தமிழ்மறைகள் ஆயிரமும், - ஈன்ற முதல்தாய் சடகோபன், மொய்ம்பால் வளர்த்த**
**இதத்தாய் இராமானுசன்**

எனும் பாடல் பல முக்கிய விஷயங்களைச் சொல்கிறது. தாய் என்பவள் யார்? தந்தையைத் தனயனுக்குக் காட்டுபவள் தாய். உலகின் முதல் தாய் இறைவன். அவனிடமிருந்து இப்பிரபஞ்சமும், உயிரகளும் தோன்றுகின்றன. அவனை தமிழகுக்குக் காட்டிய முதல் தாய் சடகோபன் என்கிறார்கள். சரி அந்த இறைவன் யார்? வேதங்களில் தெளிவில்லை. அது அக்னியோ, இந்திரனோ, வேறு ஏதேனும் தேவனோ எனும் குழப்பம் அங்கு இருக்கிறது. ஆயின் எவ்விதக் குழப்பமும் இல்லாமல் அது பரிபாடல் போற்றும் தமிழ் வழித் தெய்வமான நாரணனே எனத் தெளிவாய் சொல்வது சடகோபனின் தமிழ் மறைகள். மதுரகவி எனும் அந்தணர் வள்ளுவர் வழியில் சடகோபனைக் கண்டு சொன்னபின் பல தமிழ் அந்தணர்கள் இச்செவ்விய நெறியைப் பரப்புகின்றனர். அதில் மிக முக்கியமானவர் எதிராசர் என

அழைக்கபடும் இராமானுச மாமுனி. இதனால் அவரை மொய்ம்பால் இதத்தாய் என்கின்றனர் தமிழர். ஆக, தமிழ் அடியார்களுக்கு இரண்டு தாய்மார்கள் கிடைத்துள்ளனர். ஒன்று நம்மாழ்வார், இரண்டு இராமானுசர்.

இப்புரட்சியின் அடுத்த முக்கிய அம்சம் தமிழ் வேதம் யாவர்க்கும் பொது என்பது!

**மனையும் பெருஞ்செல் வமுமக்க ளுமற்றை வாழ்வுந் தன்னை**
**நினையும் பதமென நின்றபி ரான்குரு கூர்நிமலன்**
**புனையுந் தமிழ்க்கவி யால் இருள் நீங்கிப் பொருள்விளங்கி**
**வினையுந் திரிவுற் றனகுற்ற நீங்கின வேதங்களே!**

இந்த இனிய பாடலின் முக்கியக் கருத்து குருகூர்ப்பிரான் என்றழைக்கப்படும் நம்மாழ்வாரின் தமிழ் மறை தோன்றியதால் ஆன்மீக வானில் ஒளி தோன்றி, மூதறிஞர் பொருள் விளங்கி, வினைகளால் திரிவுற்று இருந்த வட வேதங்கள் இறுதியில் இவ்வொளியால் குற்றம் நீங்கின என்பது. வடமொழி வேதத்தின் குற்றம் என்ன? அதன் திரிவு என்ன? எனக் கேட்கப்புக்கின் பல பேருண்மைகள் வெளிப்படும். முதல் வினை வட வேதம் தெளிவில்லாமல் இருப்பது. வல்லப பாண்டியயன் எது பரம்பொருள் எனக் கேட்டபோது பெரியாழ்வார் திராவிட வேதம் ஓதி தெளிவுபடுத்தியதை, வேண்டிய வேதமோதி விரைவில் கிழியறுத்தான் என்பர். வேண்டாத வேதமொன்றுண்டோ எனில் பண்டைய வேதத்தில் வேண்டாத பல சரக்குகள் உள்ளன என்பது பொருள். அவை உயிர்க்கொலை செய்யும் யாகங்களாக இருக்கலாம், ஏதோ ஒரு காலத்தில் கடைபிடிக்கப்பட்ட இன்று தேவையில்லாத சடங்குகளாக இருக்கலாம், சமூகப்பாகுபாடுகள் பற்றிய கருத்துக்களாக இருக்கலாம். அதாவது சாதி உயர்வு தாழ்வு சொல்லும் வர்ணாஸ்ரம கோட்பாடாக இருக்கலாம். இவையெல்லாம் அறவே களையப் பெற்ற வேத (மெய்ப்பொருள்) சாரமடங்கிய பனுவல்களே நாலாயிர திவ்யப்பிரபந்தங்கள் என்று பொருள்.

அது மட்டுமல்ல வட வேதங்களில் நிறையப் பொருள் மயக்கம் இருப்பதாயும், அவையெல்லாமற்று தெளிவைத் தருவதாய் தமிழ் வேதங்கள் உள்ளதாய் வேதாந்த தேசிகர் போன்ற மகான்கள் சொல்வது ஊன்றிக் கவனிக்கத்தக்கது.

**செய்யதமிழ் மாலைகள்நாம் தெளிய வோதித்**
**தெளியாத மறைநிலங்கள் தெளிகின் றோமே.**

என்பது ஸ்ரீ தேசிகப் பிரபந்தம், அதிகார சங். 1.

இவையெல்லாம் விட தமிழ் வேதத்திற்கு ஒரு சிறப்புண்டு. அதாவது வட வேதம் அந்தணர்குரியது, தமிழ் வேதமோ எவ்வித சாதி வேறுபாடு, இன வேறுபாடுகளின்றி அனைவர்க்கும் உரியது. திருக்குறளின் சிறப்பை இவ்வாறே விளக்குவர் பெரியோர்.

**செய்யா மொழிக்கும் திருவள்ளுவர் மொழிந்த**
**பொய்யா மொழிக்கும் பொருள்ஒன்றே – செய்யா**
**அதற்குரியர் அந்தணரே ஆராயின் ஏனை**
**இதற்குரியர் அல்லாதார் இல்**

மாறாக, தமிழைத் தாய்மொழியாகவும், வட வேதத்தை பயிற்று மொழியாகவும் கொண்ட அந்தணர்கள் நம்மாழ்வாரின் திருவாய்மொழி கேட்டு, பொருள் உணர்ந்து, மெய்ப்பொருள் தெளிவுற்று, மெய் சிலிர்த்து, கைகள் கூப்பி உணர்ச்சிப் பிழம்பில் கண்கள் குளமாகி நிற்பர் என்று கம்பநாட்டாழ்வான் கூறுகிறார்.

**உயிர்த்தா ரைபிற்புக் குறுகுறும் பாமொரு மூன்றனையுஞ்**

**செயிர்த்தார் குருகைவந் தார்திரு வாய்மொழி செப்பலுற்றால்**
**மயிர்த்தா ரைகள்பொடிக் குங்கண்கள் நீர்மல்கு மாமறையுள்**
**அயிர்த்தார் அயிர்த்த பொருள்வெளி யாமெங்கள் அந்தணர்க்கே**

இது எத்தகைய புரட்சி! அதுவரை இருந்து வந்த மதிப்பீட்டை அப்படியே தலைகீழாக மாற்றிப்போட வைத்த புரட்சியிது. இது தமிழ் மண்ணில் நடந்திருக்கிறது. நாதமுனிகள் தொடங்கி மணவாள மாமுனிகள், வேதாந்த தேசிகர் காலம்வரை தமிழ் வெறியோடு இருந்த இந்த நெறி காலப்போக்கில் நலிந்து வெறும் அந்தணர் வாய் சாற்றுமுறையாகப் போய்விட்டது.

மாறன் மனமென்ன? திருவாய்மொழியின் ஆழ்பொருள் என்ன? எனும் தேடல் திருவரங்கத்து அந்தணரிடையே குறைந்தது 500 ஆண்டுகள் இருந்திருக்கிறது. இதை அவர்கள் வியாக்கியானமென்றும், நிரவாகமென்றும் அழைத்து நாலாயிரத்தின் ஒவ்வொரு சொல்லையும் அலசி ஆராய்ந்து இருப்பது தெரிகிறது. அன்பின் ஐந்திணையாக மிளிரும் நாலாயிரமும் இலக்கிய நயமும், ஆன்மீக நயமும் சேரப்பெற்று தமிழ் மொழியின் அரிய பொக்கிஷமாக இருக்கிறது. ஆயின் இதன் சிறப்பை, இதை முறையாக ஓதும் சமகால அந்தணர்கள் முழுமையாய்ப் புரிந்தார் இல்லை. ஆழ்வார்கள் வழியில் சாதிமதமற்ற ஓர் நன்னெறியைப் பரப்பிய இராமானுசரையும் சரியாக மதித்துப் போற்றவில்லை. இல்லையெனில் அப்பெருந்தகைக்கு ஆயிரம் கோடி செலவில் தெலுங்கானா மாநிலம் சமதர்மச் சிலையெழுப்பிக் கொண்டாடும் போது தமிழகத்தின் அரசியல் தலைவர்களோ, ஆன்மீகத் தலைவர்களோ பாராட்டி மகிழவில்லை. மாறாக இராமானுசரை ஓர் அந்தணர் எனப்பார்த்து மனம் குமையும் நிலையிலேயே தமிழகம் உள்ளது.

ஆயின், ''கொலை வாளினை எடடா மிகு கொடியோர் செயல் அறவே'' என்று பாடிய பாரதிதாசன் "முத்தியோ சிலரின் சொத்தென இருக்கையில், இத்தமிழ் நாடுதன் இருந்தவப் பயனாய் இராமானுசனை ஈன்றதன்றோ! இந்நாடு வடகலை ஏன் என எண்ணித் தென்கலை ஈன்று திகழ்ந்ததன்றோ!'' என்று பாடுகிறார். இதையறியாத தமிழர் வைணவ மரபு சமிஸ்கிருத மரபு என்றும், வைணவம் ஆரிய மதமென்றும் பொய்யுரைத்து வருகின்றனர். பாரதிதாசன் வழியில் முத்தமிழ் காவலர் கலைஞர் கருணாநிதி அவர்கள் சமயத்தில் புரட்சி கண்ட மகான் என்று இராமானுசர் பற்றிய ஒரு நீண்ட தொலைக்காட்சித் தொடரொன்று எழுதி கலைஞர் தொலைக்காட்சியில் வெளியிட்டார்.

எனவே இக்கட்டுரை வழி, தமிழ் மண்ணில் நடந்த ஓர் மாபெரும் தமிழ் எழுச்சி பற்றி, அதன் தன்மை பற்றி விளக்கியுள்ளேன். இதை அந்தணர் புரிந்து கொண்டு தம் குறைகள் ஏதெனும் இருப்பின் அதை நீக்கி மீண்டும் இராமானுசர் வழிக்குத் திரும்ப வேண்டும். பிற தமிழர் இந்நன்னெறி அந்தணர்க்கு மட்டும் உரியதன்று மொத்தத் தமிழருக்கும் உரியது எனப் பீடுடன் தழுவ வேண்டும். ஆ.மார்க்ஸ் முன்பு விளிம்பு நிலை மாந்தர் பற்றி நடத்திய ஒரு கருத்தரங்கில் வைணவம் தலித்திற்குரியது எனக் குரல் கொடுத்தார். அந்த உரிமை பாராட்டிற்குரியது. ஏனெனில் அண்ணல் காந்தி "ஹரிஜனம்'' என சமூகத்தில் தாழ்த்தப்பட்ட மக்களை அழைத்த போது, அவருக்கு ஆயிரம் வருடங்களுக்கு முன்பே இராமானுசர் அவர்கள் எம்குலத்தார் எனப் பொருள்படும்படி, "திருக்குலத்தார்'' என அழைத்து மேல்கோட்டை திருநாராயணர் கோயிலில் அவர்களை உள் அழைத்து

ஆலயப்பிரவேசம் செய்வித்தார் இது சரித்திரம்.

அது மட்டுமன்றி பெண்ணியக் கருத்துக்கள் நிரம்பிய ஒரு நெறி திருமாலியம். இராமானுசர் காலத்தில் பெண்களை ஆலய நிர்வாகத்தில் ஈடுபடுத்தி, சமூகமே அறியும் வண்ணம் பெண்களுக்குப் பல சமயப் பொறுப்பு அளித்தவர் இவர். அத்துழாய், ஆண்டாள், பொன்னாச்சி, தேவகி, அம்மங்கி, எதிராச வல்லி போன்றோர் பெயர்கள் இன்று சரிதத்தில் இருக்கக் காரணமானவர் இத்துறவி. எனவேதான் இவரமைத்த சம்பிரதாயம் திருமகள் சம்பிரதாயம் (ஸ்ரீசம்பிரதாயம்) என்றழைக்கப்படுகிறது. இவர் ஆண்டாளின் திருப்பாவையில் என்றும் லயித்து இருந்ததால் அவர் திருப்பாவை ஜீயர் என்றே அழைக்கப்பட்டிருக்கிறார். ஆண்டாளின் வாழி திருநாமத்தில், ''பெரும்பூதூர் மாமுனிக்கு பின்னானாள் வாழியே!'' என்பது ஒரு கூற்று.

தொன்தமிழின் மேன்மை தாங்கிய மரபான தமிழ் வேதமரபு நம் கண் முன்னே. அப்புரட்சியின் கனல் நீற்றுப்போகாமல் இன்றுமுள்ளது. இன்றைய அரசியல் சமய வெறுப்பைத் தூண்டும் அரசியலாக, பார்ப்பனர், பார்ப்பனர் அல்லாதார் எனப் பிரிவு படுத்தும் அரசியலாக உள்ளது. ஆனால் அது முழுக்க உண்மைக்குப் புறம்பான பொய். தமிழ் வேதமான நாலாயிரம் ஓரிடத்தில் கூட சாதி வேறுபாடு பேசவில்லை. ஆயின் மாறாக அந்தணரைச் சாடுகிறது, அவர்தம் அறநெறி எது எனக்காட்டுகிறது, பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும் என்கிறது. அதுமட்டுமல்லாமல்,

**பழுதிலா ஒழுகலாற்றுப் பல சதுப்பேதிமார்கள்**
**இழிகுலத்தவர்கள் ஏலும் எம் அடியார்கள் ஆகில்**
**தொழுமினீர்! கொடுமின் கொண்மின் என்று நின்னோடும் ஒக்க**
**வழிபட அருளினாய் போலும் மதிள் திருவரங்கத்தானே!**

திருமால் அடியார்களுக்குள் பேதமின்மையால் ''கொடுமின், கொள்மின்'' என தொண்டரடிப்பொடி ஆழ்வார் சொன்னபடி திருமண ஒப்பந்தம் செய்து கொள்ளுங்கள் என்கிறது தமிழ் வேதம். ஈ.வே.ரா பெரியார் தோன்றுவதற்கு ஆயிரம் வருடங்கள் முன்பே புரட்சி செய்தவர்கள் ஆழ்வார்கள். கனல் தெரிக்கும் வசனங்களை வியாக்கினங்களில் அளித்தவர்கள் உரையாசிரியர்கள். வள்ளுவன் சொன்ன வழியில் பார்ப்பனரை ஆற்றுப்படுத்தி சமூக நலன் பேணும் நன்னெறியாக தமிழ் வேத நெறியுள்ளது.

எனவே இக்கட்டுரை கண்டபின் அனைவரும் தெளிவு பெற்று மறந்து போன ஒரு தமிழ் மரபைப் பேணுவோமாக.

# திருஞானசம்பந்தர் தேவாரத்தில் சைவ நாற்பாதங்கள்

**சி. அனிதா ராணி**
பகுதி நேர முனைவர் பட்ட ஆய்வாளர்
விவேகானந்தா கல்லூரி, அகஸ்தீஸ்வரம்
மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகம்
திருநெல்வேலி

**முன்னுரை**

உயிர்களிடத்தில் யான் எனது என்ற தன்முனைப்பு அடங்க வேண்டுமாயின் சரியை, கிரியை, யோகம், ஞானம் என்னும் நிலைகளில் நின்று வழிபாடு செய்தால் சிவவுணர்வு மேலோங்கி சிவதரிசனம் கிடைக்கும். சைவ நாற்பாதங்கள் என்பது சைவ மக்கள் பிறவித்துன்பம் நீங்கி, பிறவாமையாகிய பேரின்பத்தை வேண்டி, இறைவனின் பாதங்களை அடைவதற்கு பின்பற்ற வேண்டியபடி முறைகளாகும். இதன் மறுபெயர்கள் சைவ நன்னெறிகள், சைவ நாற்படிகள், சிவ புண்ணியங்கள், நால்வகை நெறிகள் என்பன ஆகும். திருஞானசம்பந்தர் தேவாரத்தில் இடம் பெற்றுள்ள சைவ நாற்பாதங்கள் பற்றிய செய்திகளை ஆராய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

**சைவ நாற்பாதங்கள்**

ஆணவம், கன்மம், மாயை என்ற மூன்று மலங்களால் ஆட்பட்ட உயிர்கள் அம்மலங்களின் சார்பால் பல பிறப்புகளைப் பெறுகின்றன. பிறப்புகள் தோறும் தத்தம் வினைகளுக்கு ஏற்ப நுகர்ச்சிப் பொருட்களைப் பெறுகின்றன. நுகர்ச்சிப் பொருட்களை அனுபவிக்கின்ற பொழுது இன்பதுன்பங்களை அடைகின்றன. இன்பதுன்பங்களை அனுபவிக்கின்ற பொழுது இறையருளைச் சார்கின்றன. இறையருள் கிடைப்பதற்கு உயிர்கள் முயலுகின்றன. அவ்வாறு முயலுகின்ற பொழுது உயிர்களின் தன்மைக்கு ஏற்ப முயற்சிகள் நடைபெறுகின்றன. இம்முயற்சிகளைத் தான் சைவநாற்பாதங்கள் என்கின்றனர். இச்சைவ நாற்பாதங்களை சரியை, கிரியை, யோகம், ஞானம் என சைவ சித்தாந்த நூல்களும் திருமுறைகளும் நான்காக வகுக்கின்றன.

**சரியை**

இறைவனை அடைவதற்குரிய முதல் பாதம் சரியை, சரியை என்பது உடலால் தொண்டு செய்வது. ஆண்டான்- அடிமை உறவிலிருந்து செய்யப்படுதலின் இதனை அடிமை நெறி அல்லது தாசமார்க்கம் என்பர். இத்தொண்டினை, திருக்கோவிலில் அலகிடுதல், மெழுகுதல்.

1. கோவிலை ஒட்டி நந்தவனம் அமைத்தல், மலர் பறித்துத் தார், மாலை, கண்ணி தொடுத்து இறைவனுக்குச் சாத்துதல். திருவிளக்கிடுதல்.
2. இறைவனைப் புகழந்து பாடுதல்.
3. அடியவர்களைக் கண்டால் பணிந்து அவர்க்குத் தொண்டு செய்தல் என விளக்குவர்.

உடலால் செய்யும் புறத்தொண்டினைச் சிவன் திருக்கோவிலுக்குச் செய்யும் புறத்தொண்டு என்றும், சிவனடியார்க்குச் செய்யும் தொண்டு என்றும் இருவகைப்படுத்தலாம். இங்குக் கூறப்படும் உடலின் மூலம் நிகழும் தொண்டுகளை உண்மை அன்போடு செய்து வந்தால், சிவலோகம் சார்வதற்குத் தொடக்க நிலைப்பேற்றை அடைந்ததாகக் கொள்ளலாம்.

இறைவனைக் காண விரும்புவர்களும், ஒவ்வொரு சைவனும் மேற்கொள்ள வேண்டிய தொண்டுகளை நாவுக்கரசர்,

**“நிலை பெறுமாறு எண்ணுதியேல்**
**நெஞ்சே நீ வா**

**நித்தலும் எம்பிரானுடையகோயில் புக்குப்**
**புலவர்தன் முன் அலகிட்டு மெழுக்கு மிட்டுப்**
**பூமாலை புனைந்தேத்திப் புகழந்து பாடி''**
**நாவு. தேவா. 6-31-3**

எனக் குறிப்பிடுகின்றார்.

திருஞானசம்பந்தர் அன்றலர்ந்த மலர்களை சாத்தி வணங்கி உய்தி பெற அடியவர்களே வாருங்கள். உயர்ந்த உம் அன்போடு எம் அன்பையும் ஏற்றருளும் இறைவன் உறையும் கோயில் என்பதை,

**''வம்மின் அடியீர் நாண் மலரிட்டுத் தொழுது உய்ய**
**உம்மன்பினொடு எம்மன்பு செய் ஈசன் உறையும் கோயில்''**
**ஞான. தேவா. 1-11-3**

என்ற பாடலில் கூறுகின்றார்.

அழகு திகழும் காலை, மாலைப் பொழுதுகளில் பணி செய்வதால் சிறப்பு மிகுந்து விளங்கும் தொண்டர்கள் தொழுது, ஆடி மகிழும் முன்றிலை உடையது இறைவர்க்குரிய இடமாகும். என்பதை,

**''பொழிலார் தரு இலைவாழைகள் எழிலார் திகழ் போழ்தில்**
**தொழிலான்மிகு தொண்டர்வர் தொழுதாடிய மூன்றில்''**
**ஞான. தேவா. 1-17-4**

என இப்பாடலில் குறிப்பிடுகின்றார்.

திருஞானசம்பந்தர் சரியை நெறியின் பயனை அறிவுறுத்தும் வகையில்,

**''தேனை யேறுநறு மாமலர் கொண்டடி சேர்த்துவீர்**
**ஆனை யேறுமணி சாரல் அனேகதங்காவதம்**
**வானை யேறுநெறி சென்றுண ருந்தனை வல்விரேல்**
**ஆனை யேறுமுடியான் அருள் செய்வதும் வானையே''**
**ஞான. தேவா. 2-5-6**

தேனை மிகுதியாகப் பெற்ற மணம் கமழும் சிறந்த மலர்களைப் பறித்து இறைவன் திருவடிகளில் சேர்ப்பிக்கும் அடியவர்களே, வீடுபேறும் அடைவதற்கு பின்பற்றும் சரியை, கிரியை முதலான நெறிகளில் நின்று அவனை உணர நீவீர் வல்லீராயின் முதலான நெறிகளில் நின்று அவனை உணர நீவீர் வல்லீராயின் யானைகள் ஏறி உலாவும் அழகிய சாரலை உடைய அனேகதங்காவதத்துள் விளங்கும் ஆன் ஐந்தாடும் முடியானாகிய சிவபிரான் உங்களுக்கு அவ்வானுலகப் பேற்றினை வழங்கி அருளுவான் என்று கூறுகின்றார்.

சரியை தொழிலில் விருப்பமுடைய மெய் தொண்டர்கள் வாழும் ஊர் திருத்தோணிபுரம் என்பதை

**''துண்ணென விரும்பும் சரியைத் தொழிலர்''**
**ஞான தேவா – 3-81-7**

என்ற பாடலில் பதிவு செய்கின்றார்.

தொண்டர்கள் சரியைத் தொழிலில் விரும்பி வழிபட்டு நிற்கின்றார்கள் என்பதை,

**''தொண்டருந் தன்தொழில் பேண நின்ற''**
**ஞான. தேவா. 3-106-10**

என்று கூறியுள்ளார்.

சரியை நிலையில் வழிபாடு செய்பவர்கள், மனஒழுங்கும், கடமையுணர்ச்சியும், ஒப்பற்ற அன்பினையும் பெறுவர் என்பது திண்ணம் என்பதனை இப்பாடலடிகள் மூலம் திருஞானசம்பந்தர் புலப்படுத்துகின்றார்.

**கிரியை**

கிரியை என்பது வடசொல். தமிழில் செயல்நிலை என்பர். இறைவனை அடையும் நிலைகளுள் கிரியை இரண்டாம் இடத்தைப் பெறுகிறது. தந்தை, மகன் உறவில் நின்று செய்யும் திருத்தொண்டு என்பதால் இதனை சற்புத்திர மார்க்கம் அல்லது மகன்மை நெறி என்பர். இந்நிலை சரியைக்கு அடுத்து நிகழப் பெறுவதாம். புறத்தொண்டோடு அகநிலையிலும் சேர்ந்து வழிபாடியற்றுவது கிரியை நிலையாம்.

அகத்தொழில், புறத்தொழில் இரண்டாலும் அருவுருவத் திருமேனியாகிய சிவனை

வழிபடுதல் கிரியை ஆகும். இக்கிரியைக்குரிய செயல்களாகப் பின்வருவன கூறப்பெறும். மணமலர், தூபம், தீபம், திருமஞ்சனம், அமுது படைத்தல் முதலான வழிபாட்டிற்குரிய பொருட்களைக் கைக்கொண்டு ஐந்து வகையான தூய்மைகளைச் செய்து ஆசனமிட்டுப் பரஞ்சோதியாகிய சிவனைப் பாவனையாக எழுந்தருளச் செய்து உண்மை அன்போடு அர்ச்சனை செய்து வழிபாடு செய்தலாம். மேலும் முத்தீ கொண்டு வேள்வி இயற்றுதலும் இதனுள் அடங்கும் என்பர்.

மனத்தாலும், உடலாலும் தொண்டு செய்து வழிபடுவோர் சிவனருகில் இருத்தல் அல்லது சிவசாமீப்பியம் பெறுவர்.

இதனை நாவுக்கரசர்,

**"வாழ்த்த வாயும் நினைக்க மடநெஞ்சும்**
**தாழ்த்தச் சென்னியும் தந்த தலைவனைச்**
**சூழ்த்த மாமலர் தூவித் துதியாதே**
**வீழ்த்த வாவினை யேன் நெடுங்காலமே"**

**நாவு. தேவா. 5-90-7**

எனக் குறிப்பிடுகின்றார்.

திருஞானசம்பந்தர் கிரியை நெறியை அறிவுறுத்தும் வகையில்,

**"நறைமலி தருமள றொருமுகை நகுமலர் புகைமிகு வளரொளி**
**நிறைபுனல் கொடுதனை நினைவொடு நியதமும் வழிபடும் அடியவர்**
**குறைவில பதமனை தரவருள் குணமுடை இறையுறை வனபதி**
**சிற புனலமர் சிவபுரமது நினைபவர் செயமகள் தலைவரே"**

**ஞான. தேவா. 1-21-4**

மணம் மிகுந்த சந்தனம், அரும்புகள், இதழ் விரிந்த மலர்கள், குங்கிலியம், சீதாரி முதலிய தூபம், ஒளிவளர் தீபங்கள், நிறைந்த நீர் ஆகியவற்றைக் கொண்டு நீராட்டியும், மலர் சூட்டியும், ஒளிகாட்டியும் தன்னை நாள்தோறும் நினைவோடு வழிபடும் அடியவர், குறைவிலா நிறைவான சாமீபம் முதலான முக்திகளை அடைய அருள் செய்யும் குணம் உடைய இறைவன் உறையும் அழகிய பதி, நீர்நிலைகள் பலவற்றாலும் வளம் நிரம்பி விளங்கும் சிவபுரமாகும் என்ற பாடலில் கிரியை நெறியினைப் புலப்படுத்துகின்றார்.

சிவ வழிபாட்டினை அன்போடு செய்யும் போது அது இறைவனுக்கு அருகில் இருக்கும் அருளைப் பெற்றுத் தரும் என்பதில் ஐயமில்லை என்பதற்கு இப்பாடல்கள் சான்றாகும்.

**யோகம்**

சைவ நாற்பாதத்தில் இந்நெறி தோழை நெறி எனவும் கூறப்பெறும். யோகம் என்பதற்குப் பொருள் ஒன்றுதல் என்பதாகும். அதாவது உயிரானது இறைவனோடு ஒன்றுதல் ஆகும். அவ்வாறு ஒன்றும் பொழுது மனத்தால் ஒன்றி நிற்பது ஆகும். மனம், புத்தி, கண், கை, கால், ஆகியவற்றைப் புறத்தே ஒன்றச் செய்து அடக்கி அகத்திலே கொண்டு வந்து இறைவனோடு ஒன்றச் செய்தலாகும். இது எட்டு வகையாகக் கூறப்படுவதும் உண்டு. அவை இயமம், நியமம், ஆசனம், பிராணாயாமம், பிரத்தியாகாரம், தாரணை, தியனம், சமாதி என்பனவாகும். இவ்யோக நெறியினை ஒவ்வொரு சைவ அடியார்களும் பெறவேண்டும் என்ற விழைவுடன் திருஞானசம்பந்தர் தம் தேவாரத்தில் பாடி நெறிபடுத்தும் பாடல்,

**"சினமலி அறுபகை மிகுபொறி சிதைதரு வகைவளி நிறுவிய**
**மனனுணர் வொடுமலர் மிசையெழு தருபொருணியதமும் உணர்பவர்**
**தனதெழில் உருவது கொடுவடை தகுபரன் உறைவது நகர் மதிள்**
**கனமருவிய சிவபுரம் நினைபவர் கலைமகள் தர நிகழ்வரே**

**ஞான. தேவா. 1-21-5.**

என்ற பாடலில் காமம், குரோதம், லோபம், மோகம், மதம், மாற்சரியம் எனப்படும் ஆறுபகைகளையும் வென்று மெய், வாய், கண், மூக்கு, செவி ஆகிய ஐம்பொறிகளையும் அடக்கும் வகையில் காற்றை நிறுத்தியும்,

விடுத்தும் செய்யப்படும் பிரணாயாமத்தையும் புரிந்தும், தியானித்தலால் உள்ளத்தல் தோன்றியருளும் ஒளிப்பொருளாகிய சிவபெருமானை நாள்தோறும் உணர்பவராகிய யோகியர்கட்குத் தனது எழில் உருவாகிய சாரூபத்தை தந்தருளும் சிவபெருமான் என்று குறிப்பிடுகின்றார்.

யோக நெறியை மேற்கொள்வோர் சிவ வடிவ நிலையை அடைவர். ஒவ்வொரு சைவ அடியார்களும், யோக நெறியினைப் பின்பற்ற இறைவன் திருநாமத்தை ஓதல், கேட்டல், சிந்தித்தல், முதலான செயல்களிலும் ஈடுபட வேண்டும் என்ற கருத்து பெறப்படுகிறது.

### ஞானம்

"ஞானம்" என்பதற்குத் தமிழில் மெய்யறிவு என்பது பொருள் சரியை, கிரியை, யோகங்களால் பெறுவது ஞானம். ஞானத்தால் அடைவது சிவப்பேறு ஆகும். சைவ நாற்பாதத்தில் இந்நெறி ஞான பாதம் எனவும் கூறப்பெறும். சிவ பிரானை வழிபடும் போது யோக நெறியில் நின்று தியானம் மேற்கொண்டு சமாதி நிலையை அடைவர். இங்குச் சமாதி நிலையே ஞானத்தின் முதிர்ச்சி என்பர். உடலோடு கூடிய உயிர்கள் சிவனை அடைந்து மெய்ஞ்ஞானம் பெறுதலே பரமுக்தியாகும். என்பது சைவர்களின் ஒறுதி. திருஞான சம்பந்தர் தம் தேவாரத்தில் ஞான நிலையை விளக்கும் விதமாக,

**"ஊனமிலர் ஆகிஉயர் நற்றவமெய் கற்றவை உயர்ந்த அடியார்**
**ஞானமிக நின்று தொழ நாளும் அருள் செய்யவல நாதனிடமாம்"**

**ஞான. தேவா. 3 – 71 – 3**

என்று மனம், வாக்கு, காயம் ஆகிய திரிகரணங்களால் செய்யப்படும் குற்றங்கள் இல்லாதவர்களால், நல்ல தவத்தை மேற்கொண்டு, பதிநூல்களை நன்கு கற்று கேட்டுத் தெளிய உணர்ந்த அடியார்கள் ஞானத்தால் வணங்க நாள்தோறும் அருள் செய்ய வல்லவன் சிவபெருமாள் என்பதனைப் புலப்படுத்துகிறார்.

வெறும் ஏட்டுக் கல்வி அறிவுடையோர்க்கு சிவபெருமானின் அருட்பண்பை உணர்தற்கும், உரைப்பதற்கும் இயலாது என்பதனை,

**"ஆதி அந்தம் ஆயினாய் ஆல வாயில் அண்ணலே**
**சோதி அந்தம் ஆயினால் சோதி உள்ளொர் சோதியாய்**
**கீதம்வந்த வாய்மையால் கிளர்தருக்கினார்க்கு அல்லால்**
**ஓதி வந்த வாய்மையால் உணர்ந்து உரைக்கல் ஆகுமே"**

**ஞான. தேவா. 3 – 52 – 7**

உலகத் தோற்றத்திற்கும், ஒடுக்கத்திற்கும் நிமித்த காலணமாய் விளங்கும் சிவபெருமான். பேரொளிப் பிழம்பாய் விளங்குபவர். பெருஞ்சோதிக்குள் சோதியாய் ஒளிர்பவர். உபதேச வழியாகச் சிவஞானம் பெற்ற பக்குவமுடைய ஆன்மாக்களுக்கு அல்லாமல் ஏனைய அபரஞானமாகிய கல்வி அறிவுடையோர்க்கி சிவபெருமாளின் அருள் கிடைக்காது என்பதனை இப்பாடலில் வலியுறுத்துகிறார்.

### முடிவுரை

இறைவனின் அருளால் மானிடப் பிறப்பெடுத்த ஒவ்வொருவரும் அவனை எண்ணி, அவன் தாள் வணங்கி, அவனை அடைவதையே லட்சியமாகக் கொள்ளவேண்டும். எங்கும் நிறைந்த ஈசனை சைவ நாற்பாதங்கள் நான்கு வழிகளில் எது விருப்பமோ, அந்த வழியில் அடைவோம். பிறப்பிலா பேரின்பத்தைப் பெறுவோம் என்ற வாழ்வியல் நெறியை திருஞானசம்பந்தர் தேவாரப் பாடல்கள் மக்களுக்கு உணர்த்துகின்றன.

### அடிக்குறிப்புகள்

1. அருள் நந்தி சிவாச்சாரியார், சிவஞான சித்தியார், திருவிடை மருதூர் ஆதினம். 1999.
2. அருணா சலம். ப, சைவ சமயம் ஓர் அறிமுகம், இராமவர்மபுரம், நாகர்கோவில். 1979.
3. நாராயண வேலுப்பிள்ளை. எம். (உரையாசிரியர்) பன்னிரு திருமுறைகள்- தொகுதி 10, சென்னை, நர்மதா பதிப்பகம் 2000.

Vol. 7 Special Issue 2 March 2023 E-ISSN: 2456-5571

# ஆண்டாள் பிரியதர்ஷினி சிறுகதைகளில் குடும்பப் பெண்களின் நிலைப்பாடு

**அ.கோதேஸ்வரி**
முனைவர் பட்ட ஆய்வாளர், தமிழ் ஆய்வு மையம்
பதிவு எண்:18211284022011
தூய சவேரியர் கல்லூரி, (தன்னாட்சி), பாளையங்கோட்டை
இணைவு: மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகம்
அபிஷேகப்பட்டி, திருநெல்வேலி

**முனைவர் தா. ஷமிலா ஜோஸ்டர்**
உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை, தமிழ் ஆய்வு மையம்
தூய சவேரியர் கல்லூரி, (தன்னாட்சி), பாளையங்கோட்டை
இணைவு: மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகம்
அபிஷேகப்பட்டி, திருநெல்வேலி

***ஆய்வுச் சுருக்கம்***

*சமுதாயத்தின் ஒரு அங்கமாக விளங்குவது குடும்பம். குடும்பத்தில் முதியோர்கள், கணவன், மனைவி, உடன்பிறந்தவர்கள், குழந்தைகள் அனைவரும் சேர்ந்து ஒரு தலைமையின்கீழ் வாழ்வது கூட்டுக்குடும்பமாகும். குடும்பமாக வாழ்வதே நாகரிகமாக அன்றிலிருந்து இன்றுவரை கருதப்படுகிறது. சமுதாயத்தின் ஒரு அங்கமான குடும்பத்தில் முக்கியப் பங்கு வகிப்பவர்கள் பெண்கள். இந்த நாட்டை பொறுத்தவரை குடும்பப் பெண் என்பவள் ஏனென்று கேட்கத் தெரியாத எடுபிடி வேலையாள். பிள்ளைப்பெற்று தரும் இயந்திரம் விடுப்பு எடுக்காத, சம்பளம் இல்லாத வேலைக்காரி என்று மூளை சலவை செய்யப்பட்டவள். தாயாக, மனைவியாக, மகளாக, மாமியாராக, மருமகளாக, குழந்தைகளாக என பல்வேறு பரிமாணங்களில் வலம் வருபவர்கள். இவ்வாறாக ஒவ்வொரு பரிமாணங்களிலும் ஒவ்வொரு காலக்கட்டத்திலும் பெண்களின் நிலைப்பாட்டை, ஆண்டாள் பிரியதர்ஷினியின் சிறுகதைகளின் வழி ஆராய்வது இக்கட்டுரையாகும்.*

## முன்னுரை

சங்க காலத்தில் தாய்வழிச்சமூகம் முதன்மை பெற்று விளங்கியது. குடும்பப் பொறுப்பு பெண்களிடமே இருந்தது. தற்காலத்தில் நிலைமை மாறிவிட்டது. குடும்பத்தின் உறுப்பினர்களாக பலர் இருந்தபோதிலும் பெண்களின் பங்கு இன்றியமையாதது. பெண்ணை மையமிட்டே குடும்பம் இயங்குகிறது. அந்தவகையில், ஆண்டாள் பிரியதர்ஷினி படைப்புகளில் குடும்பப் பெண்களின் நிலைப்பாட்டை ஆராய்வதாய் இக்கட்டுரை அமைகிறது.

## குடும்பத்தில் பெண்கள்

ஒவ்வொரு காலக்கட்டத்திலும் குடும்பப் பெண்களின் நிலைபாடு மாறிக்கொண்டே இருக்கிறது. மகளாக இருக்கும் போது ராணியாக இருந்தநிலை மாறி, மனைவியாகும் போது அடிமையாகும் நிலை ஏற்படுகிறது. இவ்வாறாக குடும்பப் பெண்களின் நிலைப்பாட்டை ஆராயப்படுகிறது. தாய், மனைவி, மகள், மருமகள், மாமியார் என அனைத்துக் குடும்பப் பெண்களின் நிலைப்பாட்டைக் காணலாம்.

## இளம்பெண்களின் நிலை

இன்றைய காலக்கட்டத்தில் காதலில் விழாத இளம்பெண்களே இல்லை. மனம் ஒத்த ஆண், பெண் இருவருக்கிடையே ஏற்படுகின்ற நிகழ்வே காதல் எனப்படுகிறது. “ஆணின் இளமை பெண்மைக் கவரவும், பெண்ணின் இளமை ஆணைக் கவரவும் கவர்ச்சி அமைந்துள்ளது.

இத்தகைய தூய கவர்ச்சியே காதல் எனப்படுகிறது"[1] என்று விளக்கம் தருகிறார் மு.வ.

காதலில் பெரும்பாலும் ஏமாறும் நிலையிலேயே பெண்கள் காணப்படுகின்றனர். இவ்வாறாக இளம்பெண்கள் காதலில் ஏமாறும் நிலையை 'காதல் என்பது எதுவரை' என்னும் சிறுகதையில் எடுத்துக்காட்டியுள்ளார் படைப்பாளி. தன்னுடைய மகள் பானுவை நன்கு படிக்க வைப்பதையே நோக்கமாகக் கொண்டு துணி ஏற்றுமதி செய்யும் தொழிற்சாலையில் துணிதைக்கும் வேலை செய்து வருகிறாள் அவள் அம்மா. பெண்கள் கல்லூரியில் சேர்த்து படிக்க வைக்கிறாள். வேறொரு கல்லூரியில் படிக்கும் தனபாலை விரும்புகிறாள். அவனுடன் ஊர் சுற்றிவிட்டு வீட்டிற்கு தாமதமாக வருகிறாள். அதைப் பற்றி மகளிடம் கேட்கிறாள் தாய். அதற்கு பானு அவன் என் புருஷன் என்கிறாள். அதற்கு அவள் அம்மா தான் காதலித்து ஏமாந்த கதையைக் கூறி அவளுக்கு அறிவுரை கூறுகிறாள். இதனை,

> **"இத்தனை வருஷமாய்ச் சொல்லாத உண்மையை இப்பச் சொல்கிறேன். தாலி கட்டின புருஷனுக்கு உன்னை பெத்துக்கல்ல நான். படிக்கிற காலத்தில மனசை அலையவிட்டு கட்டுப்பாடு இல்லாத இருந்தேன். எவனோ ஒரு போக்கிரி என் கூடப் படிச்சவனோட பேச்சில மயங்கி போயி அம்மா அப்பாவை எதிர்த்துவிட்டு மெட்ராஸ் ஓடி வந்தேன். கல்யாணம் ஆகிறதுக்கு முன்னாடியே என்னை அனுபவிச்சிட்டு நடுத்தெருவில் விட்டுவிட்டு ஓடிட்டான். என் வயத்தில நீ. படிப்போ முடிக்கல, உறவோ என்னை ஒதுக்கியாச்சி என்ன பண்ண?"**[2]

என்னும் தாயின் கூற்றின் மூலம் அறியலாம். மேலும், ஒரு தாய், தான் செய்த தவறினை எடுத்துக்கூறி தன் மகளைக் காதலில் ஏமாறும் நிலையிலிருந்து காப்பாற்றுகிறாள். சமுதாயத்தில் பெண்கள் பலர் படிக்க வேண்டிய வயதில் காதலில் மயங்கி, எதிர்காலத்தை இழக்கின்றனர். இத்தகைய நிலையில் இளம்பெண்கள் காணப்படுகின்றனர் என்பதைச் சுட்டிக்காட்டி இளம்பெண்களுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்தியுள்ளார் ஆசிரியர். இவ்வாறாக காதலில் ஏமாறும் நிலைப்பாடு இளம்பெண்களிடையே காணப்படுகிறது.

**மனைவியின் நிலை**

மனைவி தன்னைவிட அறிவிலும் சிந்தனையிலும் உயர்ந்து இருப்பதை விரும்பாத கணவன் காலங்காலமாகக் கடைப்பிடித்து வரும் மரபுகளால் அவளை ஒடுக்க நினைக்கிறான். ஆண்டாள் பிரியதர்ஷினி தனது சிறுகதைகளில், மனைவி என்பவள் கணவனிடம் அடிமையாக இருக்கும் நிலையில் சித்தரித்துள்ளார். மனைவியின் திறமையைக் கூட வெளிக்கொணர தடைசெய்யும் ஆணாதிக்கவாதிகளாக ஆண்கள் உள்ளனர். 'தீ நாக்குகள் சரஸ்வதியைத் தின்றபோது' என்னும் சிறுகதையில் இதனை எடுத்தியம்புகிறார் ஆசிரியர். இச்சிறுகதையில் சரஸ்வதி, கவிதை எழுதுவது, கோலம் போடுவது, படங்கள் வரைவது என பல்வேறு திறமைகளைப் பெற்றிருக்கிறாள். அவளுடைய கணவன், அவளின் ஆர்வத்திற்கு முற்றுப்புள்ளி வைக்கிறான். இதனை,

> **"ஃபிளாட்டுல என்னத்துக்கு கோலம்? கோலப்பொடிக்கு புடிச்ச கேடு பைசாவைக் கண்டால் என்ன குஷியோ உனக்கு என்று சொல்லித் திட்டுகிறான்"**[3]

என்னும் வரிகள் எடுத்துரைக்கின்றன. மேலும் அவளது படைப்புத்திறனை ஏளனமாக பேசும் நிலையை,

> **"என்னடி கிழிக்கப்போறே, நீ எழுதாடித்தான் அவனவன் வீங்கிகிட்டுக் கெடக்கானா, இலக்கிய உலகம் ஸ்தம்பிச்சிருதாக்கும்? தூங்கனும் வா என்று பேனாவைத் தூக்கி வீசுகிறான்."**[4]

என்னும் வரிகள் காட்சிப்படுத்துகின்றன. இவ்வாறாக பெரும்பாலான குடும்பத்தில் மனைவியை அடிமையாகும் நிலை காணப்படுகிறது. இத்தகைய ஆண்களின் ஏளனப்பேச்சு அவர்களின் முன்னேற்றத்திற்குத் தடைக்கற்களாக அமைகின்றன. இதன்மூலம் குடும்பத்தில் மனைவியின் நிலைப்பாட்டை அறியமுடிகிறது. மேலும், "குடும்ப அமைப்பு என்பது ஆண்களின் அதிகாரச் செயல்பாட்டினால் கட்டிக்காக்கப்படுகின்றது. அதனால் ஆண்களின் அதிகாரத்தை வளர்த்தெடுக்கும் தலைமையிடமாகக் குடும்ப அமைப்பைக் கொள்ளலாம். குடும்ப அமைப்பில் ஆண்கள் தலைமையிடம் பெறுவதால், அஃது ஆண்கள் பெண்கள் மீது அதிகாரம் செலுத்த ஏதுவாக அமைகிறது"[5] என்னும் பிரேமாவின் கருத்து இங்கு ஒப்புநோக்கத்தக்கது.

கணவன் மனைவியிரிடையே சண்டைகள் வரலாம். ஆனால் சந்தேகம் மட்டும் வந்துவிடவே கூடாது. அது குடும்ப வாழ்க்கையையே பாதிக்கும். "ஒரு பெண் குடிகாரக் கணவனோடு கும்மாளமாய் குடித்தனம் செய்ய இயலும். அடிக்கின்ற கணவனுடன்கூட அன்புடன் வாழ்ந்திடுவாளாம், படிக்காத கணவனோடு கூட பக்குவமாய் வாழ்ந்திடுவாளாம். சிடுமூஞ்சி கணவனோடு சிக்கலின்றி வாழ்ந்திடுவாளாம். ஆனால் சந்தேகப்படும் கணவனோடு சத்தியமாய் வாழ முடியாது"[6] என்கிறார் தாயம்மாள் அறவாணன்.

'வார்த்தை' என்னும் சிறுகதையில், சுந்தரம் என்பவன் மனைவி சரசுவை திருமணமானதிலிருந்து அவள் இறக்கும் வரை அவளைச் சந்தேகிக்கிறான். சந்தேகத்தின் நரகத்திலேயே அவளுடைய வாழ்க்கை நாற்பது வருடங்கள் தாண்டிவிட்டது. திருமண மேடையிலே தாலி கட்டி முடிந்ததும் சரசுவை சந்தேகிக்கிறான். திருமணமான அன்று இரவே அவன் மீண்டும் சரசுவை நெருப்பில் பொசுக்குவது போல வார்த்தைகளை வீசுகிறான்.

**"சாந்தி முகூர்த்த அறைக்குள் நுழைந்தவனை முழுசுமாய்த் தின்று முடித்துக் கேட்டான் வேற எவனையாவது நினைச்சுக்கிட்டே என்னோட இருந்தியா? முழு மனசோடவா?"**[7]

என்ற வார்த்தைகளால் அவளைக் கொன்றான். துன்பம் தாளாமல் தன் தாயிடம் வந்து சரசு அழுது புலம்புகிறாள். அதற்கு அவள் தாய் ஆணினமே பெண்களை சந்தேகிக்கத் தான் செய்யும். எனவே சகித்துக் கொண்டு வாழ அறிவுரை கூறுகிறாள். இதனை,

**"சம்பிரதாயக் கட்டாயத்துலதான் இங்கு முக்கால்வாசிப் பெண்ணுங்க தாலி சுமக்கிறாங்க. அனுசரிச்சுப் போயிட்டா, உனக்கும் எனக்கும் என்னடி? இந்த ஜென்மத்துக்கு வாங்கின வரம் அவ்வளவு தான்னு வாழ்ந்து முடிச்சிரு"**[8]

என்ற வரிகள் மூலம் அறியமுடிகிறது. பெண்களைக் கணவன் சந்தேகப்படுத்திக் கொடுமைப்படுத்தினாலும் அவனோடு சேர்ந்து வாழவே இச்சமூகம் நிர்பந்திக்கிறது. கட்டமைக்கிறது. கணவன், சந்தேகப்படுவதால், பெண்களின் வாழ்க்கை எந்த அளவிற்கு சீரழிகிறது என்பதையும், அதனால் அவர்கள் அடையும் மன உளைச்சலையும் காணமுடிகிறது. இவ்வாறாக கொடிய உள்ளம் கொண்ட கணவன்மார்களால் மனைவி சந்தேகத்திற்குள்ளாகும் நிலைப்பாட்டை ஆண்டாள் பிரியதர்ஷினி எடுத்துரைக்கிறார்.

"ஒருத்தியும் ஒருவனும் நடத்தும் இல்வாழ்வு இன்ப வாழ்வாக இருக்க வேண்டுமேல், இருவர் மட்டும் நம்பிக்கையும் உண்மையும் இருத்தல் நல்லது. ஒருவரை ஒருவர் ஐயுறல் கூடாது. ஐயத்துடன் வாழும் வாழ்வு இன்ப வாழ்வாகாது நரக வாழ்வாகும்"[9] என்னும் பத்ம பிரியாவின் கருத்து இங்கு ஒப்புநோக்கத்தக்கது.

**மகளின் நிலை**

மகள் எப்பொழுதும் தந்தையின் இளவரசியாவாள். ஆனால் 'ரிஷியும் மனுஷியும்' என்னும் சிறுகதையில், நிலைமை தலைகீழ். இச்சிறுகதையில், மனநலம் பாதிக்கப்பட்ட மகளை தந்தையே வெறுத்து ஒதுக்கும் நிலைப்பாட்டைப் பதிவுசெய்கிறார் ஆசிரியர். இதில், முரளியுடைய மனைவி இரண்டு வருடங்களாக மனநிலை பாதிக்கப்பட்ட நிலையில் இருக்கிறாள். முரளியின் அம்மா காமாட்சி, அவளை அனாதை இல்லத்திற்கோ இல்லை தந்தை வீட்டிற்கோ விடும்படி கூறுகிறாள். முரளியின் குழந்தை, சாரு தன் அம்மாவைத் தானே பார்த்துக் கொள்கிறேன் என்கிறாள். மாமனாருக்கு கடிதம் எழுதுகிறான் முரளி. அதற்கு அவன் மாமனார்,

> **"மாப்பிள்ளை உங்க காலில வேணும்னாலும் விழுறேன். இங்க கொண்டு வந்து விட்ராதீங்க. அவமானத்துல தூக்கு மாட்டிக்க வேண்டியது தான். உலக்கை உலக்கையா மூணு நிக்குது. கல்யாணத்துக்கு அவளும் இங்க வந்துட்டா, அப்புறம் கல்யாணம் பேசவும் ஜாதகத்தைக் கொடுக்கவும் வாங்கவும்னு ஒருத்தனுங்க வீட்டு வாசப்படி ஏறமாட்டான். எம் பொண்ணுங்க வாழ்க்கை உங்க நல்ல மனசுல தான் இருக்கு. இல்லைன்னா அந்த அரிர்ஷ்டக் கட்டையோட பராமரிப்புச் செலவுக்கு உருண்டு பெரண்டு ஏதெச்சும் அனுப்புறேன். சொல்லக்கூடாது இருந்தாலும் கேக்கறேன். கடைசிப்பொண்ணு இளமையா பளிச்சின்னு இருப்பா. வெறுமனே குத்துவிளக்கு முன்னாடி தாலி கட்டி அழைச்சிட்டுப் போனாலும் சந்தோசம் தான். குணமாக்க முடியாததை ஒதுக்க வேண்டியதுதானே"**[10]

என்று பதிலளிக்கிறார். இக்கூற்றின் வாயிலாக, மனநலம் பாதிக்கப்பட்ட மகளை, தந்தையே ஒதுக்கும் நிலைப்பாட்டை அறியமுடிகிறது. மேலும், தனது இன்னொரு மகளையும் அவனுக்கே மணமுடிக்க வேண்டிக்கொள்ளும் போது, இரண்டாந்தாரமாக மகளைத் திருமணம் முடித்துக் கொடுத்தாலும் பரவாயில்லை, தனது மூத்த மகளைக் கவனித்துக் கொள்ள முடியாது என்னும் மனநிலையைக் காணமுடிகிறது. இதன்வாயிலாக, தந்தையே மகளைப் பாரமாக நினைப்பது புலனாகிறது. இவ்வாறாக, தந்தையால், மகள் ஒதுக்கப்படும் நிலைப்பாட்டை ஆண்டாள் பிரியதர்ஷினி எடுத்துரைக்கிறார்.

**தாயின் நிலை**

உறவுகளில் உன்னதமானவள் தாய். குடும்பத்தின் தலைவி. தாயைச் சார்ந்தே, குடும்பத்திலுள்ள அனைவரும் வாழ்கின்றனர். எனவேதான், 'மாதா பிதா குரு தெய்வம்' என்பதில் தாயை முதன்மைப்படுத்தியுள்ளனர். "முதலில் ஒரு பெண்ணுக்குத் தரப்பட்ட அடையாளம் 'தாய்' என்பதாகும். ஒரு பெண்ணுடைய தாய்மைப் பங்களிப்பு, ஒரு தாயாக அவளுடைய செயல்பாடு, அவளின் சமூகப் பயன்பாட்டை அதிகரிக்கிறது. தாய்மை என்கிற மகத்துவத்திற்காக, தலைமுறையை உருவாக்கும் பொறுப்பைச் சுமக்கிற மேன்மைக்காக, பெண்ணிற்குக் கல்வியும், செல்வமும், வாக்கும், உயர்வும் தரப்பட வேண்டும்."[11]

குழந்தைகளின் எதிகாலத்தைத் தீமானிப்பவர்கள் பெற்றோர்களே. பெற்றோர்களின் வளர்ப்பிலேதான் குழந்தையின் நடத்தை வெளிப்படுகிறது. 'அக்டோபர்-2' என்னும் சிறுகதையில், சரசு என்பவள் தனது பெண் குழந்தைகளின் எதிர்காலத்திற்காக ஓயாமல் உழைக்கிறாள். உடல்நலம் சரியில்லை என்றாலும் கூட, தன் உடலைக் கவனிக்காமல் தன் குழந்தையின் எதிர்காலத்தைக் கருத்தில் கொண்டு உடலுழைப்பைக் கொடுக்கிறாள். இதனை,

> **"உடல் நோவு, ஜூரம் என்று 'அக்காடா' என்று உட்கார முடியாது. அத்தனை வீட்டுக்காரர்களும் துளைத்தெடுத்து விடுவார்கள்.**

**உடம்பைப் பற்றிய பிரக்கைளுயே இல்லாமல் ஓடும் சரசுவுக்கு வலி கிடையாதா? முறுக்குப் பிழிவது மாதிரி உடம்பைப் பிழிந்தெடுக்கும் நோவு கிடையாதா? இத்தனை ரோதனையும் பொறுத்துப் பிழைப்பது எதற்காக? செல்லிக்காகதானே. அந்தப் பிஞ்சுக்காகத் தானே? கழுகுகளிடமிருந்து அந்தப் பெண்குஞ்சை மானமாய்க் காப்பாற்ற வேண்டுமென்ற பதைபதைப்புக்காகத் தானே"**[12]

என்னும் வரிகள் உணர்த்துகின்றன. இதன் வாயிலாக, தனது குழந்தைகளுக்காக ஒரு தாய் படும் துன்பத்தினையும், செய்யும் தியாகத்தையும் அறியமுடிகிறது. இவ்வாறாக தாய் என்பவள் குழந்தைகளுக்காகவே வாழ்ந்து உழைக்கும் நிலைப்பாட்டினை ஆசிரியர் எடுத்துரைக்கிறார்.

**மாமியாரின் நிலை**

மாமியார் என்பவள், திரைப்படங்களிலும் தொலைக்காட்சித் தொடர்களிலும் கொடூரமாகவே சித்தரிக்கப்படுவர். ஏனெனில், சிலரைத் தவிர பெரும்பாலும் சமூகத்தில் மாமியார் என்பவள், மருமகளைக் கொடுமைச் செய்பவர்களாகவே காணப்படுகின்றனர். ஆனால், மாமியாரைக் கொடுமைப்படுத்தும் மருமகளும் இருக்கவே செய்கின்றனர் என்பதை,'தொட்டாற்சிணுங்கி' என்னும் சிறுகதை எடுத்துரைக்கிறது.

இச்சிறுகதையில், மாமியார் பத்மாவதி, மருமகளுடன் ஆரம்பத்தில் பாசமாகவே இருந்தாள். தாயும் பிள்ளையுமாகவே இருவரும் பிணைப்புடன் இருக்கின்றனர். ஆனால், மாமியாருக்கு நோய் ஒன்று வரவே அவளை ஒதுக்குகிறாள் மருமகள். அது மட்டுமல்லாமல், தனது மகளான அனுவையும் பத்மாவதியிடம் இருந்து விலக்கி வைக்கிறாள். பேத்தியின் பிரினைத் தாங்காது துடிக்கிறாள் பாட்டி பத்மாவதி. மாமியாரிடம் தொட்டுப்பேசக் கூடாது என அனுவை எச்சரிக்கிறாள் மருமகள். இதனை,

**"சனியனே.. எத்தனை தரம் சொல்றது? பாட்டி பக்கத்திலே போகாதே... தொடாதே.. மெலே படுக்காதே அப்படின்னு.. மர மண்டையிலே ஏறாதே உனக்கு? ம்? பிடிவாதம்... மூணு வயசுக்குள்ளாற முப்பது வயசுப் பிடிவாதம்.."**[13]

என்னும் வரிகள் எடுத்துரைக்கின்றன. மாமியாரை ஒதுக்கும் நிலையை,

**"இப்பவே ப்ரண்ட்ஸ் ஒருத்திகூட வீட்டுக்கு வரமாட்டேங்குறா. ஹோம்ல போய் இருங்கன்னா கேக்க மாட்டேங்கறேள். நாங்களும் அவஸ்தைப்படணுமா? ஏன் இந்தப் பழிவாங்கற புத்தி? பேசாம நாம வேற வீடு பார்த்துண்டு போறேன். நீங்க வளைய வாங்கோ. நாளைக்கே நான் வெளில போறேன். அதான் ஒரே வழி..."**[14]

என்னும் வரிகள் காட்சிப்படுத்துகின்றன. இதன்மூலம் நோயின் காரணமாக மருமகள் மாமியாரை வெறுக்கிறாள். ஒதுக்குகிறாள். இவ்வாறாகக் குடும்ப அமைப்பில், நோயின் காரணமாக மாமியார் ஒதுக்கப்படும் நிலைப்பாட்டை ஆசிரியர் எடுத்துரைக்கிறார்.

**மருமகளின் நிலை**

பிறந்த வீட்டில் மகளாக இருக்கும் போது இளவரசியாக வாழ்ந்தவள், புகுந்த வீட்டிற்கு மருமகளாக செல்லும் போது, சம்பளம் இல்லாத பணியாளாக மாற்றப்படுகிறாள். இல்லத்தரசி என்னும் பெயரில் அவள், சமையல்காரியாக, சலவைத்தொழிலாளியாக, துப்புரவுத் தொழிலாளராக, பராமரிப்பாளராக வலம் வருகிறாள். இன்றைய காலக்கட்டத்தில் பெரும்பாலான குடும்பங்களில் மருமகள்கள் வேலைக்காரியாகவே நடத்தப்படுகின்றனர்.

குடும்பப் பெண்கள் அனுபவிக்கும் கொடுமைகளில் மிக முக்கியமானது மாமியார் கொடுமை. மருமகள் வேலைக்குச் சென்ற போதிலும், பேரக்குழந்தைகளைக் கூட கவனிக்காத மாமியாரின் செயல்பாட்டைக் குறித்து 'புருஷலட்சணம்' என்னும் சிறுகதை

பேசுகிறது. இச்சிறுகதையில், முரளிக்கும் ராஜிக்கும் அஸ்வின் என்னும் மகன் இருக்கிறான். அஸ்வினுக்கு உடல்நலம் சரியில்லாத காரணத்தால், ராஜி அலுவலகத்தில் விடுப்பு சொல்ல வேண்டும் என நினைக்கிறார்கள். ஆனால், அதிகாரிகள் திட்டுவார்கள் என பயந்து தனது மாமியாரை, குழந்தையைப் பார்க்கச் சொல்லிக் கேட்கிறாள். அதற்கு மாமியார்,

> **"ராவெல்லாம் சரியான தூக்கமில்லை கண்ணு எரிகிறது தலையோடு காலாய்ப் போர்த்துக்கிட்டுக் கட்டையைக் கிடத்தினால் போதும்னு இருக்கு. புள்ளையப் பார்த்துக்க கட்டியப் பார்த்துக்கண்ணு கழுத்தறுக்கறாடா உம் பொண்டாட்டி"**[15]

என்று கூறுகிறாள். பிறகு கணவனிடம் சொல்கிறாள். அவனும் கண்டுகொள்ளவில்லை. அஸ்வின் பள்ளி செல்லும்போது, அங்கே பேருந்து விபத்தில் இறந்து விடுகிறான். மாமியார் குழந்தையைக் கவனிக்காத அலட்சியப் போக்கால், மருமகள் பெற்ற குழந்தையை இழக்க நேரிடுகிறது. இவ்வாறாக, மாமியாரின் அலட்சியப் போக்கினையும் அக்கறையின்மையையும் எடுத்துரைக்கிறார் ஆண்டாள் பிரியதர்ஷினி.

குடும்ப அமைப்பில் பெண் பாலியல் ஒடுக்குதலுக்கு உட்படுத்தப்படுகிறாள். இத்தகைய செயல் எல்லா சமூக அமைப்பிலும் காணப்படுகிறது. பெண்ணைக் காலம் காலமாக ஆணுக்குக் கீழானவள் என்று தீர்மானம் செய்து இல்லறத்தில் பாலியல் ஒடுக்கதலுக்கு உட்படுத்தப்படுவது இல்லற பாலியல் ஒடுக்குதல் எனப்படும். "பெண் என்பவள் குடும்ப சமூக அமைப்பில் பாதிக்கப்பட்ட ஜீவனாகவே உள்ளாள். இதனால் ஆண். பெண் இடையிலான பாலியல் முரண்பாடுகள் வளர்ந்துள்ளன"[16] என்று அப்துல் சமது கூறுகின்றார்.

குடும்பத்தின் முக்கிய உறுப்பிரனாக இருக்கும் மருமகளை அனைவரும் தன் மகளைப்போல எண்ண வேண்டும். இல்லையெனில் பெண்ணாகவாவது மதிக்க வேண்டும். ஆனால், இன்றைய சமூகத்தில் பெண்கள் அவ்வாறு நடத்தப்படுவதில்லை. பொது இடங்களில் பாதுகாப்பில்லாமல் போவதோடு, வாழும் குடும்பத்திலேயே பாதுகாப்பில்லாத சூழல் உருவாகியுள்ளது. "குடும்பம், அரசு, சமூகம், மதம் ஆகிய அனைத்துத் தளங்களிலும் பெண்கள் மீதான வன்முறைகள் நிகழ்த்தப்படுகின்றன"[17] என்ற கூற்றிலிருந்து பெண்களின் பாதுகாப்பின்மையை அறியலாம்.

இவ்வாறாக குடும்பத்திலேயே பெண்களுக்கு பாதுகாப்பில்லாத நிலையை ஆண்டாள் பிரியதர்ஷினி 'தீ' என்னும் சிறுகதையில் எடுத்துக்கூறியுள்ளார். இச்சிறுகதையில், அண்ணமலை என்பவன், மனைவி சரசுவை பிற ஆடவரோடு பாலியல் உறவுக்கு செல்லுமாறு வற்புறுத்துகிறன்றான். இதற்கு மாமியாரும் துணைபோகிறாள். பணத்தின் மீதுள்ள ஆசையால் மனைவியை இத்தகைய கேவலமான செயலுக்கு ஆட்படுத்த எண்ணுகிறான். குழந்தையைப் பெற்றெடுத்து மூன்று மாதமே ஆன மனைவியை, வயதான ஒருவனுடன் உறவுகொள்ள கட்டாயப்படுத்துகிறான். இதற்கு சம்மதிக்காத மனைவியிடம்,

> **"வர்றது யாருன்னு தெரிஞ்சாதான் ஐந்தானை விரிப்பீங்களோ? அனாவசியக் கேள்வி கேக்காத, புருஷன் சொல்றதைக் கேளு"**[18]

என்று கோபத்தோடு கூறுகிறான். மேலும்,

> **"சப்பிக் கொண்டிருந்த குழந்தையைப் பிரித்தெடுத்து முரட்டுத்தனமாய் எழுப்பினாள் மாமியார். தாய்ப்பால் கொட்டிய மார்பும் தாய்மை கொட்டிய முகமுமாய் இருந்தாள் சரசு. மூன்றாம் மனுஷனை மடியேந்தத் தள்ளிவிட்டாள்"**[19]

என்னும் மாமியாரின் கூற்றிலிருந்து, தாயாக இருக்க வேண்டிய மாமியார் மருமகளைப் பாலியல் ஒடுக்குமுறைக்கு உள்ளாக்கும் நிலையை அறியமுடிகிறது. மேலும்,

**“இந்தா, சும்மாக்கெட. முரண்டு புடிக்காத. எம்புள்ளை வண்டி வாங்க உங்கப்பனும் பணம் தரமாட்டான். நீயும் சம்பாரிச்சுத் தரமாட்டேன்னா என்ன அர்த்தம்? தம்பி, இவ ஒத்துவாராளான்னு பாரு, இல்லாட்டி வெரட்டி அனுப்பு. உனக்கு வேற கல்யாணம் கட்டி வைக்கிறேன். ஆம்பளை நீ ராஜா, எத்தனை கல்யாணம் வேணும்னாலும் கட்டிக்கலாம். சீரு செனத்தி, தட்சணைன்னு அத்தனையும் வருமானம் தான். நம் ஊருல பொண்ணுக்கா பஞ்சம்”**[20]

என்று மாமியார் கூறுவதிலிருந்து, மருமகள் வேறொருவடன் உறவு கொள்ள சம்மதிக்காத நிலையில் அவளைக் கட்டாயப்படுத்துவதையும், அவ்வாறு நடந்துக்கொள்ளவில்லையெனில் மகனுக்கு வேறொரு திருமணம் செய்யப் போவதாக மிரட்டுவதையும் அறியமுடிகிறது. இதன்மூலம் மருமகள், மாமியாரால் கொடுமைப்படுத்தும் நிலையையும், பாலியல் வன்முறைக்கு உட்படுத்தும் நிலையையும் காணமுடிகிறது. இச்சிறுகதையில், மருமகள்களுக்கு குடும்ப அமைப்பில் பாதுகாப்பில்லாத நிலைப்பாட்டைக் குறித்து பேசியுள்ளார் ஆசிரியர் ஆண்டாள் பிரியதர்ஷினி.

**“குடும்பம், அரசு, சமூகம், மதம் ஆகிய அனைத்துத் தளங்களிலும் பெண்கள் மீதான வன்முறைகள் நிகழ்த்தப்படுகின்றன”**[21] என்கிறார் பிரேமா.

**கைம்பெண்களின் நிலை**

இந்திய சமுதாயத்தில் கணவரை இழந்த பெண்கள் கைம்பெண்கள் என்றழைக்கப்பட்டனர். இவர்கள் வாழத்தகுதியற்றவர்களாகக் கருதப்பட்டனர். சமூகத்தால் நிந்திக்கப்பட்டு, வெறுக்கப்பட்டு அநீதிக்கு ஆளானார்கள். எந்த வித சமூக அந்தஸ்தும் இல்லாமல் மூலையில் முடங்கி கிடந்தனர். கணவனை இழந்த துன்பத்துடன் எவ்வித உரிமையும் இல்லாமல் சொந்த விருப்பு வெறுப்புகளை மனதிற்குள் புதைத்துக் கொண்டு இந்த உலகில் நரக வாழ்க்கை வாழ்ந்தனர். கலர் சேலை அணிதல், பொட்டு வைத்தல், ஆபரணங்களை அணிதல், நல்ல உணவு உண்ணுதல் ஆகியவை இல்லாமலும் கணவர் கட்டிய தாலியை அவிழ்த்து விடுதல் போன்ற பல இழி செயல்களுக்கு ஆளாக்கப்பட்டாள். உலக பந்தங்கள், ஆசாபாசங்கள் ஆகியவை கைம்பெண்களுக்கு தடுக்கப்பட்டன. இந்த மனிதாபிமானமற்ற கொடுமைகளால் ஒடுக்கப்பட்டு நடைபிணமாக வாழ்ந்து வந்தனர். இவ்வாறு கைம்பெண்கள் சமூகத்தால் தீண்டத்தகாதவர்களாக கேவலமான நிலையில் வாழ்ந்து வந்தனர். உடன்கட்டை ஏறும் வழக்கம் ஒழிக்கப்பட்ட போதிலும், இன்றைய காலக்கட்டத்திலும் இதுபோன்ற கொடுமைகள் நிகழ்த்தப்படுகின்றனன.

சமூகத்தால் கைம்பெண்கள் தூற்றப்படுகின்றனர். சுப காரியங்களிலும், கோயில் நிகழ்ச்சிகளிலும் கைம்பெண்கள் ஒதுக்கப்படுகின்றனர். இவர்கள் எதிர்கொள்ளும் பிரச்சனைகளைக் குறித்து ‘நதியைக் கைதி பண்ண’ என்னும் சிறுகதை பேசுகிறது. இச்சிறுகதையில், சிவசுவும் சரஸ்வதியும் காதலித்து மணம் புரிந்து கொண்டனர். இரண்டு பெண் குழந்தைகள் பிறந்த பின்பு சிவசுக்கு சிறுநீரகப்பாதிப்பு ஏற்பட்டு இறந்துவிடுகிறான். அப்போது தீபாவளி பண்டிகை வருகிறது. சரசு தன் குழந்தைகளுக்கு புது ஆடை, பட்டாசு எல்லாம் வாங்கி வருகிறாள். கணவனை இழந்த சரசு சிறிது நாட்களில் இயல்பு நிலைக்குத் திரும்புவதை இச்சமூகம் ஏற்றுக்கொள்ளவில்லை. இதனை,

**“அங்குள்ள மக்கள் பொம்பளையாடி இவ. விவஸ்தை கெட்டவ, புருஷன் செத்ததை ஸ்விட்டோட கொண்டாடுறா, ஒரே மாசத்துல பண்டிகை கேக்குதாக்கும் அப்படி அலையனுமா ஸ்வீட்டுக்கும் புது புடவைக்கும் செத்தது சொந்தப் புருஷனோ வச்சிக்கிட்டவனோ துக்கம்**

**அனுஷ்டிக்காம துடைச்சுப் போட்டுட்டாலே ஒரு வருஷம் கூடவா காத்திருக்க முடியாது"[22]**

என்ற பெண்களின் கூற்றின் வாயிலாக அறிய முடிகிறது. சரசு அமங்கலியாக சித்தரிக்கிறார்கள். அவள் எப்பொழுதும் சோகமாக இருக்க வேண்டும் என எண்ணுகிறார்கள். ஆனால் ஆண்களுக்கு இத்தகைய நிலை இல்லை. சரசு இயல்புநிலைக்குத் திரும்புதை ஏற்றுக்கொள்ளாமல், அவளைத் தூற்றுகிறது. இவ்வாறாக கைம்பெண்கள் சமூகத்தால் தூற்றப்படும் நிலைப்பாட்டை ஆண்டாள் பிரியதர்ஷினி சிறுகதைகள் எடுத்தியம்புகின்றன.

## முடிவுரை

காதலில் பெரும்பாலும் ஏமாறும் நிலையிலேயே பெண்கள் காணப்படுகின்றனர். இளம்பெண்கள் காதலில் ஏமாறும் நிலைப்பாட்டையும், மனைவி என்பவள் கணவனிடம் அடிமையாக இருக்கும் நிலையிலும் சித்தரித்துள்ளார். கொடிய உள்ளம் கொண்ட கணவன்மார்களால் மனைவி சந்தேகத்திற்குள்ளாகும் நிலைப்பாட்டையும் கூறியுள்ளார். மனநலம் பாதிக்கப்பட்ட மகளை, தந்தையே ஒதுக்கும் நிலைப்பாட்டையும், உறவுகளில் உன்னதமானவளான தாய், ஓயாத உழைப்பைக் கொண்டவளாகவும், பிள்ளைகளை நல்வழிப்படுத்துபவர்களாகவும் சித்தரித்துள்ளார் ஆண்டாள் பிரியதர்ஷினி. குடும்ப அமைப்பில், நோயின் காரணமாக மாமியார் ஒதுக்கப்படும் நிலைப்பாட்டையும், குடும்பத்திலேயே பெண்களுக்கு பாதுகாப்பில்லாத நிலையையும், கைம்பெண்கள் சமூகத்தால் தூற்றப்படும் நிலைப்பாட்டையும் எடுத்துக் காட்டியுள்ளார் ஆண்டாள் பிரியதர்ஷினி. இவ்வாறாக குடும்பப் பெண்களின் நிலைப்பாடு இருப்பதை இக்கட்டுரையின் வழி அறியமுடிகிறது.

## அடிக்குறிப்புகள்

1. மு.வரதராசனார், திருவள்ளுவர் அல்லது வாழ்க்கை விளக்கம், ப.50, பாரி நிலையம், சென்னை, முதல்பதிப்பு 1948.
2. ஆண்டாள் பிரியதர்ஷினி சிறுகதைகள், ப.814, ஏகம் பதிப்பகம், சென்னை.
3. மேலது, ப.322
4. மேலது, ப.324
5. பிரேமா, பெண் எழுத்துக்களின் அரசியல், ப.10, அறிவுப்பதிப்பகம், ராயப்பேட்டை, சென்னை, 2007.
6. தாயம்மாள் அறவாணன், பெண் இன்று நேற்று நாளை, ப.70, பச்சைப்பசேல், மோகன் நகர், புதுச்சேரி, 2003.
7. ஆண்டாள் பிரியதர்ஷினி சிறுகதைகள், ப.155
8. மேலது, ப.156
9. மா.பத்ம பிரியா, பெண்ணிய இலக்கியப் பதிவுகள், ப.67, பாவை பப்ளிகேசன்ஸ் வெளியீடு, இராயப்பேட்டை, சென்னை, ஜுலை 2010.
10. ஆண்டாள் பிரியதர்ஷினி சிறுகதைகள், ப.593
11. தி.இராசகோபாலன், ப.டேவிட் பிரபாகர் (ப.ஆ.,) பன்முக நோக்கில் பெண், ப.36, தமிழ்த்துறை, சென்னைக் கிறித்தவக் கல்லூரி, சென்னை, 1999.
12. ஆண்டாள் பிரியதர்ஷினி சிறுகதைகள், ப.328
13. மேலது, ப.704
14. மேலது, ப.709
15. மேலது, ப.460
16. அப்துல் சமது, இஸ்லாமியத் தமிழ்ப் புதினங்கள் சித்தரிக்கும் அறியப்படாத வாழ்வும் பண்பாடும், ப.27, உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை, மு.ப. 2004.
17. பிரேமா, பெண் எழுத்துக்களின் அரசியல், ப.9
18. ஆண்டாள் பிரியதர்ஷினி சிறுகதைகள், ப.107
19. மேலது, ப.106
20. மேலது, ப.107
21. இரா.பிரேமா, மு.க.நூ., ப.9
22. ஆண்டாள் பிரியதர்ஷினி சிறுகதைகள், ப.134

# தொல்காப்பியமும் அறிவியலும்

**முனைவர் அ. சவரிராயம்மாள்**
உதவிப்பேராசிரியை, தமிழ்த்துறை
தி.தெ.மா.நா.ச.கல்லூரி, தெற்கு கள்ளிகுளம்

***ஆய்வுச் சுருக்கம்***

*தொல்காப்பியம் தமிழர்களின் முதல் அடையாளம். தமிழ்மொழியைக் காப்பது மட்டுமின்றி, தமிழ்மொழியை உலகளவில் பெருமைப்பட வைத்த நூல். உலகில் தோன்றிய மொழிகளுக்கு எல்லாம் எழுத்திலக்கணமும், சொல்லிலக்கணமும் உண்டு. ஆனால் பொருள் இலக்கணம் வகுத்துள்ள ஒரே உலகமொழி என்ற பெருமை தமிழ்மொழிக்கு கிடைப்பதற்கு காரணம் தொல்காப்பியர் இயற்றிய தொல்காப்பியம். அதனால் தான் அவர் 'நல்காப் புகழ் தொல்காப்பியன்' என்று அறிஞர்களால் புகழப்படுகிறார். சுமார் 3000 ஆண்டுகளுக்கு முன்பு கிடைத்த தொல்காப்பியம் தமிழர்களின் வாழ்வியலையும் நாகரிகத்தையும் மட்டுமே கூறுவதோடு நிறுத்திவிடாமல் இன்றைய அறிவியல் அறிஞர்கள் கூறிய அறிவியல் உண்மைகளையும் தொல்காப்பியத்தில் கூறியுள்ளார். அவர் கூறிய அறிவியல் உண்மைகளை தற்காலத்தில் உள்ள அறிவியல் சிந்தனைகளோடு தொடர்புபடுத்தி ஆராய்வது இவ்வாய்வுக் கட்டுரையின் நோக்கமாகும்.*

## உயிரியல் பற்றிய அறிவு

நம் முன்னோர்களுக்கு உயிரியல் பற்றிய அறிவு இவ்வுலகம் தோன்றிய நாள் முதல் இருந்துள்ளது என்பதை, தமிழ்க்கு கிடைத்த முதல் தொல்காப்பியம் வழி அறியமுடிகிறது. உலகத்தில் முதன்முதலில் தாவரங்களுக்கு உயிர் உண்டு என்று கூறியவர் நமது உயிரியல் அறிஞர் தொல்காப்பியர் ஆவார். இவர் உலகில் தோன்றிய உயிர்களை ஓரறிவு முதல் ஆறறிவு உயிராக வகைப்படுத்தியுள்ளார்.

**"ஒன்றறிவதுவே உற்றறிவதுவே**
**இரண்டறிவதுவே அதனொடு நாவே**
**மூன்றறிவதுவே அவற்றொடு மூக்கே**
**நான்கறிவதுவே அவற்றொடு கண்ணே**
**ஐந்தறிவதுவே அவற்றொடு செவியே**
**ஆறறிவதுவே அவற்றொடு மனனே**
**நேரிதின் உணர்ந்தோர் நெறிப்படுத்தினரே"**
**(தொல்-பொருள், 27)**

என்ற வரிகளின் மூலம் உயிரினங்களில் பல்வேறு நிலைகளை தான் மட்டும் அறிந்ததாக கூறாமல் 'நேரிதின் உணர்ந்தோர் நெறிப்படுத்தினரே' என்று கூறுவதன் மூலம் தனக்கு முன்னரே தமிழர்கள் உலகில் உள்ள ஓரறிவு முதல் ஆறறிவு உயிர்களை அறிந்துள்ளார் என்பதை அறியமுடிகிறது.

**"புல்லும் மரனும் ஓர் அறிவினவே**
**பிறவும் உளவே அக்கிளைப் பிறப்பே"**
**(தொல்-மரபியல், 28)**

ஓரறிவில் கூறப்பட்டுள்ள உயிரினங்கள் தொடு உணர்வால் மட்டும் அறியும் தன்மை கொண்ட உயிர்கள். புல், மரம், செடி, கொடிகள் குறிப்பாக தாவர இனங்கள் அனைத்தும் ஓரறிவுடைய உயிரினமாக தொல்காப்பியர் வகைப்படுத்தியுள்ளார்.

**"நத்தும் முரளும் ஈரறி வினவே**
**பிறவும் உளவே அக்கிளைப் பிறப்பே"**
**(தொல்-மரபியல், 29)**

உடலின் தொடு உணர்வுடன், நாவாலும் அறியும் திறன் கொண்ட உயிர்களை ஈரறிவு உயிர்களாக வகைப்படுத்தப்பட்டுள்ளது. இவ்வுயிர்கள் சுவையை உணரும் தன்மை கொண்டது. குறிப்பாக நத்தை, முரள், மீன்கள், சிப்பி, கடல் வாழ் உயிரினங்கள் இவற்றுள் அடங்கும்.

**"சிதலும் எறும்பும் மூவறி வினவே**
**பிறவும் உளவே அக்கிளைப் பிறப்பே"**
**(தொல்-மரபியல்,30)**

தொடு உணர்வு, சுவை உணர்வு, மூக்கு உணர்வு ஆகிய உறுப்புகளைக் கொண்ட உயிரினங்களை மூவறிவு உயிரினங்களாக

வகைப்படுத்தப்பட்டுள்ளது. இவற்றுள் கரையான், எறும்பு வகைகள் அடங்கும்.

**"வண்டும் தும்பியும் நான்கறி வினவே**
**பிறவும் உளவே அக்கிளைப் பிறப்பே"**

**(தொல்-மரபியல்,31)**

மூன்றறிவு உயிரியல் அடையாளத்தோடு பார்வைத் திறன்களையும் கொண்ட உயிரினங்களை நான்கறிவு உயிரினமாக வகைப்படுத்தப்பட்டுள்ளது. வண்டும், தும்பியும் நான்கறிவு உயிரினங்களாகும்.

**"மாவும் புள்ளும் ஐயறி வினவே**
**பிறவும் உளவே அக்கிளைப் பிறப்பே"**

**(தொல்-மரபியல்,32)**

மெய், வாய், கண், காது, மூக்கு ஆகிய புலன்களையும் கொண்டு அறியும் திறனுடைய உயிரினங்களை ஐந்து அறிவுடைய உயிரினங்களாகும். இதில் விலங்குகள், பறவைகள் அடங்கும்.

**"மக்கள் தாமே ஆறறி வுயிரே**
**பிறவும் உளவே அக்கிளைப் பிறப்பே"**

**(தொல்-மரபியல்,33)**

ஐந்து புலன்களுடன் மனதால் உணரும் தன்மை கொண்ட (நல்லது, கெட்டது) உயிர்களை ஆறறிவு உயிர்களாக வகைப்படுத்தப்பட்டுள்ளது. இந்த ஆறறிவு வகைக்குள் மனிதனை வகைப்படுத்தியுள்ளார். தொல்காப்பியர் கூறிய கருத்தை பிற்காலத்தில் மாணிக்கவாசகர் தன்னுடைய திருவாசகத்திலும் கூறியுள்ளார்.

**"புல்லாகிப் பூடாய்ப் புழுவாய் மரமாகிப்**
**பல மிருகமாகிப் பறவையாய்ப் பாம்பாகிக்**
**கல்லாய் மனிதராய்ப் பேயாய்க் கணங்களாய்**
**வல்லசுர ராகி முனிவராய்த் தேவராய்"**

**(சிவபுராணம்-26)**

என்ற வரிகளின் மூலம் இவ்வுலகில் உயிரியல் கோட்பாட்டை வகுத்த முதல் விஞ்ஞான அறிஞர் தொல்காப்பியர் என்பது புலப்படுகிறது.

## தொல்காப்பியத்தில் மருத்துவம்

இன்றையக் காலக்கட்டத்தில் தினம் தினம் புதுப்புது வகையான நோய்கள் பரவுகின்றன. அதற்கு மருத்துவ விஞ்ஞானிகளால் உடனடியாக தடுப்பு மருந்துகளும் கண்டுபிடிக்கப்படுகின்றன. ஆனால் சுமார் 2000 ஆண்டுகளுக்கு முன்னரே விஞ்ஞான வளர்ச்சி இல்லாதக் காலத்திலும் நம் முன்னோர்கள் பலவகையான மருத்துவ முறைகளைக் கையாண்டு நலமான வாழ்வு வாழ்ந்துள்ளனர் என்பதை இலக்கியங்கள் மூலம் அறியமுடிகிறது. என்பதை,

**"அற்றால் அளவறிந்து உண்க அஃதுடம்பு**
**பெற்றான் நெடிதுய்க்கும் ஆறு"**

**(குறள்-943)**

என்ற குறள் மூலம் அளவறிந்து உண்டு நம் முன்னோர்கள் ஆரோக்கியமாக வாழ்ந்துள்ளார்கள் என்பதை அறியமுடிகிறது. தொல்காப்பியம் தமிழர்களின் அடையாளத்தினைக் கூறுவதோடு, பலவகையான மருத்துவக் கூறுகளையும் விளக்குகிறது. பல நோய்கள் உடம்பில் ஏற்படுகின்றன. அந்த நோயின் தன்மையை கண்களால் பார்க்க முடியாது. ஆனால் அந்நோயின் ஆபத்துகளை உணர முடியும். இதனை,

**"நோயும் வேட்கையும் நுகர்வும் என்றாங்கு**
**ஆவயின் வரூஉம் கிளவி யெல்லாம்**
**நாட்டிய மரபின் நெஞ்சு கொளின் அல்லது**
**காட்ட லாகாப் பொருள் என்ப"**

**(தொல்-பொருளியல்,53)**

என்ற தொல்காப்பிய நூற்பா மூலம் அறியமுடிகிறது. மேலும், கருவுற்றிருக்கும் பெண்களுக்கு நோய் குறிப்புகள் பற்றியும் தொல்காப்பியர் கூறியுள்ளார்.

**"வயா என்கிளவி வேட்கைப் பெருக்கம்"**

**(854)**

இல்லற வாழ்வில் உள்ள கட்டுபாடுகளை மனிதர்கள் கடைபிடித்து ஒழுக்க நெறியுடன் வாழ வேண்டும் என்பதற்காக பெண்களுக்கு மாதம் தோறும் ஏற்படக் கூடிய விலக்கு காலத்தில் ஆண் பெண் உறவு கூடாது என்பதை இல்லறத்தின் ஒழுக்கமாக தொல்காப்பியர் வரையறுத்துள்ளார்.

**"பூம்பின் புறப்பாடு ஈராறு நாளும்**
**நீத்த கன்றுரையார் என்மனார் புலவர்"**

**(தொல்-பொருள்-1133)**

இக்காலத்தில் வேம்பு சிறந்த உயிர்க்கொல்லி மருந்தாக பயன்படுகிறது. அதன் காப்புரிமையை உலக அரங்கில் அமெரிக்கா பெற்றுள்ளது.

ஆனால் வேம்புவின் பயன்பாடுகள் பற்றி உலக நாடுகளுக்கு தெரிவதற்கு முன்னரே நம்முடைய தமிழர்கள் பயன்படுத்தியுள்ளனர். அதிலும் குறிப்பாக, வேப்பம் மரத்தின் காற்று உடலிற்கு நல்லது என்று அனைத்து கோயில்களிலும் வேம்பு வைத்து வழிபட்டுள்ளனர். பல நூற்றாண்டுகளுக்கு முன்பே தமிழர்களிடம் வேம்புவின் பயன்பாடு இருந்துள்ளது என்பதை தொல்காப்பியம் மூலம் அறியமுடிகிறது.

**"வேம்பும் கடுவும் போல வெஞ்சொல்**
**தாங்குதல் இன்றி வழிநனி பயக்குமென்று"**
**(செய்யுளியல்,40)**

**தொல்காப்பியத்தில் இயற்கை**

பண்டையக் காலத்தில் மனிதன் இயற்கையை அழித்து தன்னுடைய வாழ்வை நடத்தினான். குறிப்பாக, காட்டிலுள்ள மரங்களை வெட்டினான். மிருகங்களை வேட்டையாடினான். இன்றையக் காலக்கட்டத்திலும் மனிதர்கள் இயற்கையை அழித்துதான் வாழ்கிறார்கள். இன்று மக்கள் தொகைப் பெருக்கத்தின் காரணமாக சுற்றுச்சூழல் மாசுபாட்டின் மூலம் பலவிதமான நோய்கள் ஏற்பட்டு மனிதனுடைய வாழ்வாதாரம் பாதிப்பு அடைகின்றன. ஆனால் இவ்வுலகம் பஞ்சபூதங்களால் உண்டானது என்றும், மனிதன் நல்ல நிலையில் வாழ்வதற்கு இயற்கையை பேண வேண்டும் என்று பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன்னரே தொல்காப்பியர் கூறியுள்ளார்.

**"நிலம் தீ நீர்வளி விசும்பொடு ஐந்தும்**
**கலந்த மயக்கம் உலகம் ஆதலின்**
**இருதிணை ஐம்பால் இயல்நெறி வழாமைத்**
**திரிவில் சொல்லொடு தழாஅல் வேண்டும்"**
**(தொல்-பொருள்.மரபியல்,91)**

தொல்காப்பியரின் கருத்துக்கு ஏற்ப இயற்கையின் மகத்துவத்தை உணர்ந்த மாணிக்க வாசகர் தன்னுடைய இறைவனை இயற்கையின் அடையாளமாக உவமைப் படுத்தியுள்ளார்.

**"வானாகி மண்ணாகி வளியாகி ஒளியாகி**
**ஊனாகி உயிராகி உண்மையுமாய் இன்மையுமாய்**
**கோனாகி யான்எனதென் றவரவரைக் கூத்தாட்டு**
**வானாகி நின்றாயை என்சொல்லி**
**வாழ்த்துவனே"**
**(சிவபுராணம்-15)**

என்ற பாடலின் மூலம் பண்டையக் காலத்தில் மக்கள் இயற்கையைச் சார்ந்து தான் வாழ்ந்துள்ளார்கள். அதனால் தான் மக்கள் வாழ்ந்த நிலத்தின் அடிப்படையில் மக்களை பிரித்துள்ளனர் என்பதை,

**"முதல்கரு வுரிப்பொரு லென்ற மூன்றே**
**நுவலுங் காலை முறை சிறந்தனவே"**
**(தொல்-பொருள்,949)**

மேலும்,

**"முல்லைக் குறிஞ்சி மருதம் நெய்தலெனச்**
**சொல்லிய முறையால் சொல்லவும் படுமே"**
**தொல்-பொருள்,951**

என்ற வரிகளின் மூலம் தமிழர்களின் வாழ்வியலை மலையும் மலை சார்ந்த நிலத்தை குறிஞ்சி என்றும், காடும் காடு சார்ந்த நிலத்தை முல்லை என்றும், வயலும் வயல் சார்ந்த நிலத்தை மருதம் என்றும், கடலும் கடல் சார்ந்த நிலத்தை நெய்தல் என்றும் வரையறுத்து மக்கள் வாழ்வியலை அமைத்துள்ளனர் என்பதை அறியமுடிகிறது.

குறிஞ்சி - வேட்டுவர் இனமக்கள்
முல்லை - ஆயர்,ஆய்ச்சியர்
மருதம் - உழவர், உழத்தியர்
நெய்தல் - பரதவர், முக்குவர்

**ஆய்வு முடிவுரை**

தொல்காப்பியம் தமிழர்களுக்கு கிடைத்த முதல் இலக்கண நூலாகும். இந்நூல் தோன்றிய காலத்தில் உலக மக்களிடம் விஞ்ஞான அறிவு என்ற ஒன்று அரும்பாத காலம் ஆகும். அந்த காலத்திலே சுமார் மூவாயிரம் ஆண்டுகளுக்கு முன்னரே உயிர்களின் தோற்றம் பற்றியும், மருத்துவம் இயற்கை, வானியல், கணிதம் பற்றிய அறிவு தொல்காப்பியரிடம் இருந்துள்ளது என்பதை, அவர் இயற்றிய தொல்காப்பியம் மூலம் அறியமுடிகிறது. இதன் மூலம் உலகில் தோன்றிய முதல் விஞ்ஞானி தொல்காப்பியர் தான் என்பதை நினைத்து நாம் பெருமிதம் அடைய முடிகிறது.

**அடிக்குறிப்புகள்**

1. முனைவர் தமிழண்ணல், தொல்காப்பியம் பொருளதிகாரம், மணிவாசகர் பதிப்பகம், 31, சிங்கர் தெரு, பாரிமுனை, சென்னை, மூன்றாம் பதிப்பு 2003.
2. பரிமேலழகர் உரை, திருக்குறள், சாரதா பதிப்பகம், சென்னை.
3. இரா.இராசகோபாலன், திருவாசகம் தெளிவுரை, அண்ணாநகர், மதுரைச்சாலை, திருப்பத்தூர், பதிப்பு 1994.

# திருவாசகத்தில் கருஉருவாதல் சிந்தனைகள்

**முனைவர் கோ.சி. கோலப்பதாஸ்**
உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை
பயோனியர் குமாரசுவாமி கல்லூரி, நாகர்கோவில்

***ஆய்வுச் சுருக்கம்***
*தமிழகத்தில் தோன்றிய அருளாளர்களின் ஒருவர் மாணிக்கவாசகர். இவர் அறுபத்து மூன்று நாயன்மார்களில் ஒருவர் அல்லர். மாணிக்கவாசகர் அருளிய நூல்கள் இரண்டு அவை திருவாசகம், திருக்கோவையாரும் ஆகும்.இதில் ஆன்மாவின் தவிப்பு, இயக்கம், சோகம், அச்சம் போன்றவை பதிவு செய்யப்பட்டுள்ளன. திருவாசகத்திற்கு உருகார் ஒருவாசகத்திற்கும் உருகார் என்பது ஆன்றோர் வாக்கு. மாணிக்கவாசகருக்காக சிவபெருமான் இரண்டு திருவிளையாடல்களை நிகழ்த்தியுள்ளார்.திருவாசகம், அறிவியல் கருத்துகளோடு அறிவியல் செய்திகளையும் உள்ளடக்கிய நூலாகும்.உலகில் உலகில் தோன்றிய சிறியதாகிய எறும்பு முதுலாக எல்லா பிறப்பு உயிர்களும் இயற்கையோடு ஒட்டிய வாழ்வு வாழ்கின்றன மனிதன் மட்டும் இயற்கைக்கு மாறாகவும் முரண்பாடாகவும் வாழ்கிறான்.கரு உருவாவதும், தப்பிப் பிழைப்பதும் உயிரின் வினைக்கேற்ப நிகழும் என்பது சைவ சமயம் கூறும் தத்துவம். கருவில் உருவாகும் அனைத்து உயிர்களும் தப்பிப்பிழைப்பதில்லை. உயிர் பிற உயிரினங்களில் பிறப்பதிலிருந்து தப்ப வேண்டும் தாயின் வயிற்றில் பத்துமாதம் வளருங்கால் ஒவ்வொரு மாதமும் ஒவ்வொரு கேட்டிலிருந்து தப்ப வேண்டும். இவை அனைத்தும் படைத்த இறைவன் மட்டுமே அறிவான். அந்த பரம்பொருள் உயிரோடு தான் இருக்கிறான் கூடவே இருக்கிறான் இதன் மெய்ப்பொருள் இறைவனுக்கு மட்டுமே தெரியும்.*

**முன்னுரை**

தமிழகத்தில் தோன்றிய அருளாளர்களின் ஒருவர் மாணிக்கவாசகர் அவருக்குத் திருவாதவூரார் ஆளுடை அடிகள் என்னும் வேறு வேறு பெயர்களும் வழங்கப்படுகின்றன. மாணிக்கவாசகர் அறுபத்து மூன்று நாயன்மார்களில் ஒருவர் அல்லர் எனினும் அவருடைய தேனூறும் பாடல்களையும் அவரைப்பற்றி வழங்கும் வரலாற்றையும் அறிந்து உணர்ந்தவர்கள் அவரையும் நாயனர் என்றே போற்றியுள்ளனர் பழைய கல்வெட்டுகளில் அவர் வாதவூராளி நாயனர் என்றே குறிக்கப்பட்டுள்ளர் அவரது வாழ்க்கை வரலாற்றை தெரிவிக்க நூல்கள் சில உள்ளன மாணிக்கவாசகர் அருளிய நூல்கள் இரண்டு அவை திருவாசகம், திருக்கோவையாரும் ஆகும் இவை எட்டாம் திருமறையாக சைவத் திருமறை பன்னிரண்டினுள் இந்நூலகள் இடம் பெற்றுள்ளன இவற்றுள் திருவாசகம் மாணிக்கவாசகரின் ஆன்மை யாத்திரையை தெரிவிப்பது இது இறை இன்பச் சுவையை ஆசிரியர் அருளால் சிறிதே. சுவைத்தறிய ஆன்மா இறைவனோடு ஒன்றுவதற்கு துடித்த துடிப்பினை தெரிவிக்கிறது இதில் ஆன்மாவின் தவிப்பு, இயக்கம், சோகம், அச்சம் போன்றவை பதிவு செய்யப்பட்டுள்ளன அருள் நூல்களில் திருவாசகம் போல் கற்போர் நெஞ்சினை கரையச் செய்வது பிரிதொன்றில்லை என்றே கூறலாம். சிவபிரகாசர் ராமலிங்க அடிகள் போன்றோர் அதனை பெரிதும் போற்றி புகழ்ந்துள்ளனர் சிவப்பிரகாசர் நால்வர் மணிமாலையில் திருவாசகத்தை வேதத்தினும் மேலானதாக கொண்டாடுகிறார் வேதம் அறிவிற்கு விருந்தாகலாம் ஆனால் அது உள்ளத்தை உருக்குவது அன்று என்கிறார். 1 ஆனால் திருவாசகத்தை ஒரு முறை ஓதினால் கருங்கல் மனமும் கரைந்து உருகுகிறது மணலில் தோண்ட பெற்ற கேணியில் தண்ணீர்வருவது போல கண்ணீர் பெருகுகிறது திருவாசகத்தை ஓதுவார் இறையன்பர் ஆகிறார். மாணிக்கவாசகருக்காக

சிவபெருமான் பிட்டுக்கு மண் சுமந்தும், பிரம்படிபட்டும், பரியை நரியாக்கியும் திருவிளையாடல்களை நிகழ்த்தியுள்ளார்.

**திருவாசகத்தில் போற்றித் திருஅகவல்**

பக்திப் பனுவலாகவும் பைந்தமிழ் நூலாகவும் இலங்கும் திருவாசகம், அறிவியல் கருத்துகளோடு அறிவியல் செய்திகளையும் உள்ளடக்கிய நூலாகும். திருவாசகத்தின் நான்காவது பதிகம் போற்றித் திருவகவல் இப்பகுதி இது போற்றி என்று முடியும் தொடர்களால் ஆகியதால் இப்பெயர் பெற்றதுநிலைமண்டில ஆசிரியப்பாவாலான இப்பதிகம் இறைவனின் முதன்மையைப் போற்றுகிறது. இதில் மொத்தம் 159 போற்றிகள் உள்ளன மர்ரே பதிப்பின் இறுதியில் மிகை பாடல்கள் பகுதியில் 156-157 ஆகிய அடிகளுக்கு இடையில் நாகம் அணியும் ஆகா போற்றி என்னும் ஓர் அடி சில சுவடிகளில் அச்சுப் புத்தகங்களிலும் காணப்படுவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது அதனை காணும் போது 160 போற்றிகள் அமையும் என்னும் பாடப்பட்டதோ என்னும் எண்ணம் உண்டாகிறது அல்லது பிற்காலத்தில் எவரேனும் அவ்வெண்ணிக்கையை வருமாறு ஒரு அடியை சேர்த்திருக்கவும் கூடும் இதில் முதல் போற்றி மிக நீண்ட தொடரால் ஆகியது அதில் இறையன்பு உண்டாகுவதற்கு என்னென்ன தடைகள் இருக்கின்றன என்பது தெரிவிக்கப்படுகிறது.[2]

போற்றித்திரு அகவலின் முதற்பகுதி (வரி-12-27) இன்றைய மருத்துவத்தின் கருவியல் (Embriology) என்ற அறிவியல் கருத்துகளை ஒத்திருக்கின்றது. இப்பகுதி உயிர்களின் உற்பத்தி பற்றிப் பேசுகிறது. திருமூலரும் திருமந்திரத்தில் கரு உருவாதல் குறித்து நாற்பது பாடல்களில் பேசி உள்ளார் என்பதனையும் இங்கு நினைவில் கொள்ள வேண்டும்.

**உயிர்களின் உற்பத்தி**

உயிர்கள் தான் செய்த வினை பயனுக்கு ஏற்ப மறுபிறவி எடுக்கும் என்பது ஆன்மீகம் ஆகும். உயிர் உடம்போடு வடிவம் கொள்ளும் போது இருவகையான உடம்பை எடுக்கும் அதனை தூல உடம்பு எனவும் சூக்கும உடம்பு என்று கூறுகிறோம்.

**மானுடப் பிறப்பினுள் மாதா உதரத்து**
**ஈனமில் கிருமிச் செருவினிற் பிழைத்தும்**
**ஒருமதித் தான்றியின் இருமையிற் பிழைத்தும்**
**இருமதி விளைவின் ஒருமையிற் பிழைத்தும்**
**மும்மதி தன்னுள் அம்மதம் பிழைத்தும்**
**ஈரிரு திங்களிற் பேரருள் பிழைத்தும்**
**அஞ்சு திங்களில் முஞ்சுதல் பிழைத்தும்**
**ஆறு திங்களில் ஊரலர் பிழைத்தும்**
**ஏழு திங்களில் தாழ்புவி பிழைத்தும்**
**எட்டுத் திங்களில் கட்டமும் பிழைத்தும்**
**ஒன்பதில் வருதரு துன்பமும் பிழைத்தும்**
**தங்க தசமதி தாயொடு தான்படும்**
**துக்க சாகரத் துயரிடைப் பிழைத்தும்**
**(திருவாசகம்-போற்றித்திருஅகவல்-அடி:13-25)**

கடலால் சூழப்பட்ட இப்பேருலகில் உருவத்தில் பெரிதாகிய யானை முதல் உருவத்தில் சிறியதாகிய எறும்பு ஈராக எல்லா பிறப்புகளிலும் பிறந்து இளைத்ததை "யானை முதலாக எறும்பு ஈராக" என்கிறார் உலகில் உலகில் தோன்றிய அனைத்து உயிரகளும் இயற்கையோடு ஒட்டிய வாழ்வு வாழ்கின்றன. உண்பது, உறங்குவது, இன்பம் அனுபவிப்பது, இனவிருத்தி செய்வது போன்றவை எல்லா உயிரகளுக்கும் பொதுவானது மனிதன் மட்டும் இயற்கைக்கு மாறாகவும் முரண்பாடாகவும் பலசெயல்களில் ஈடுபடுகிறான். இயற்கையோடு ஒத்து வாழும் விலங்கினங்களில் வாழ்நாட்களில் பெரிய முரண்பாடுகள் எதுவும் தோன்றுவதில்லை அவைகளுக்கு கொடிய நோய் தாக்கமும் கொடூரமான வகையில் மரணமோ நிகழ்வதில்லை இயற்கைக்கு முரணாக வாழும் மனிதர்களுக்கு வாழ்வு போராட்டமாக உள்ளது உயிர் ஒரு செல்

தாவரத்திலிருந்து வளர்ச்சி பெறுகிறது. மனிதனாக உருவாக யோனியிலிருந்து பிழைத்து மனித பிறவியில் புகுவதை "ஊனமில் யோனியின் உள்வினை பிழைத்தும்" என்கிறார் மாணிக்கவாசகர் எல்லா பிறப்பும் பிறந்து இழைத்த உயிர் மனித பிறவியில் புகும் போது நச்சுத்தன்மை கொண்ட ப்ரோசோடைட்டின் என்னும் கிருமி கரு உருவாவதை தடுக்கும் அதனால் அந்த நச்சுத்தன்மையிலிருந்து காப்பாற்றி மனித பிறவி கிடைப்பதற்கு அருள் செய்த திறத்தை நினைத்து "மானுட பிறப்பினுள் மாதா உதரத்து ஈனமில்க் கிருமி செறிவினில் பிழைத்தும்" என்கிறார் மாணிக்கவாசகர்.[3]

### கருபிழைத்தல்

கரு உருவாவதும், தப்பிப் பிழைப்பதும் உயிரின் வினைக்கேற்ப நிகழும் என்பது சைவ சமயம் கூறும் தத்துவம். பெண்ணின் கருப்பையில் பெல்லோபியன் குழாய்ப் பாதையின் முதிர் அண்டம் விந்தணுவுடன் இணைந்து கருமுட்டை (Zygote) உண்டாகிறது. இதுவே கருவுறுதல் (Fertilization) எனப்படுகிறது. இக்கரு சிறிது சிறிதாக வளர்ந்து நிரம்பும் பருவுடம்புடன் பிறக்கும். இவ்வாறு வளர்ந்து பிறத்தற்கு இடையே உள்ள அழிவு நிலைகள் பலவுண்டு. மக்களாகப் பிறக்கும் உயிர்களும் அத்துணை அழிவுகட்கும் தப்பிப் பிழைத்தல் வேண்டும். "ஈனமில் கிருமி" எனக் குன்றுதல் இல்லாத பல அழிவுகளின் திறத்தைக் குறிப்பிடுகிறார் மணிக்கவாசகர்.

கருவுற்ற முட்டையை உருபெருக்கி (Microseope) மூலம் பார்க்கும் போது ஒரு மாதம் கடந்த கரு வளர்ச்சி தான்றிக்காயைப் போல் தலை பிரட்டை வடிவில் உள்ளது என்று இன்றைய விஞ்ஞான உலகம் ஆய்வு செய்துள்ளது இதனையே "ஒரு மதி தாந்தியின் இறுதியில் பிழைத்தும் திருமதி விளைவின் ஒருமையில் பிழைத்தும்" என்கிறார் மாணிக்கவாசகர் 4 நாத விந்து இணைப்பு கருப்பையனுள் செல்லும்போது வாழ்க்கை போராட்டம் துவங்கிவிட்டதை உணர்த்துகிறார் முந்திச் செல்லும் விந்தணுடன் இணைந்து செல்லும் நச்சுத்தன்மை உள்ள மதநீரை பிரித்து எடுத்து முழு வளர்ச்சி பெறுவதற்கு ஒவ்வொரு மாதமும் இறைவன் துணை நிற்கும் அருள்திறத்தை வியந்து மாத வரிசையில் போற்றுகின்றார்

கருவுற்ற முட்டை அடையும் வளர்ச்சிகளை - வளர்கருவின் நிலைகளை (Embryo) "ஒரு மதித் தான்றியின் இருமையிற் பிழைத்தும், இரு மதி விளைவின் ஒருமையின் பிழைத்தும்" என்ற வரிகள் சுட்டுகின்றன. தான்றிக் காயின் அளவில் 4 மி.மீ. அளவில் சிறிதாக இருக்கும். கருப்பையின் திசுச் சுவர்கள் ஆழமாகப் பதிந்து வளரத் தொடங்கும். அந்நிலையில் தாயின் அறியாமையால் அழிதல், தானே அழிவுறுதல் என இரு நிலைகளில் கருச்சிதைவு ஏற்படலாம். ஆகவேதான் மணிவாசகர், "இருமையிற் பிழைத்தும்" என்கிறார்.

### உடல் உறுப்புக்கள் உருவாதல்

இரண்டாம் மாதத்தில் கருவானது சுமார் முக்கால் அங்குலம் நீளமுள்ளதாகவும், மூலக்கரு முட்டையை விடச் சுமார் 40,000 மடங்கு பெரியதாகவும் அமையும். இந்நிலையில் உயிர்வளியானது கருவிற்குச் செல்லும். விரல்கள், கண், செவி, நாசி, வாய் முதலிய உறுப்புகளின் ஆரம்பகால முளைகள் வெளிக்கிளம்பு கின்றன' இரத்த ஓட்டமும் முழுமையடைகிறது என்ற கருவியல் நூல் செய்திகளை உள்ளடக்கி, இரு மாதங்களில் வளர்ச்சியையும் உள்ளடக்கி, "இருமை, ஒருமைகளினின்று பிழைத்து" எனக் குறிப்பாகச் சுட்டியுள்ளார்.

மூன்றாம் மாதத்தில் கருவுற்ற மங்கையர் புளிப்புப் பண்டம், மண் முதலியவற்றை உண்ணும் மசக்கை ஏற்படும். இச்செயலை

"வயவுறு மகளிர் வேட்டுண்ணின் அல்லது பகைவருண்ணா வருமன் விடையே" (புறம் 20) என்று புறநானூறு பேசுகிறது. கருவைப் பற்றிய கவலையின்றி மண் முதலியவற்றை உண்ணும் மசக்கையிலிருந்து கரு அழியாமல் தப்ப வேண்டும்.

இரண்டாம் மாதம் வெளிக் கிளம்பிய கண்ணின் ஆரம்பகால முளைகள் ஈரிரு திங்களான நான்காம் மாதத்தில் நன்கு திறக்கும் என்பது கருவியல் செய்தி. இப் பார்வைப் புலத்தின் வளர்ச்சி பற்றிய எண்ணத்தை உள்ளடக்கி மணிவாசகர், "பேரிருள் பிழைத்தும்" எனக் கட்புலன் வளர்ச்சியைக் குறிப்பிடுகிறார்

**குழந்தை வளர்ச்சிநிலை**

ஒருவன் பிற உயிரினங்களில் பிறப்பதிலிருந்து தப்ப வேண்டும் தாயின் வயிற்றில் பத்து மாதம் வளருங்கால் ஒவ்வொரு மாதமும் ஒவ்வொரு துன்பத்திலிருந்தும் தப்ப வேண்டும் அதன் பின் வளரும் பருவத்தில் சில துன்பங்களிலிருந்து தப்ப வேண்டும் வளர்ந்த நிலையில் பெண்களின் கவர்ச்சி, ஆவா, செல்வம், வறுமை, வெகுளி, அழுக்காறு இவை போலும் இழிந்த கேடுகள் இவற்றிலிருந்து தப்ப வேண்டும் இவற்றை தப்பி தெய்வம் உண்டு என்னும் நம்பிக்கை உண்டாக வேண்டும்.

மூன்றாம் மாதத்தில் தாயின் கருவில் பெருகும் கொழுப்பு நீரில் புதையுண்டு போகாமல் உயிா் தப்பி பிழைத்தல் வேண்டும் அதனால் தான் "மூன்றாம் மாதத்தில் செய்த அருள் திறத்தை மும்மதி தன்னுள் அம்மதம் பிழைத்தும்" என்கிறார்[5]

நான்காம் மாதத்தில் உண்டான கர்ப்பச் சிதைவிலிருந்து பிழைத்ததையும் ஐந்தாம் மாதத்தில் இறந்தபடாமல் பிழைத்ததையும் நினைந்து "ஈர் இரு திங்களில் பேர் இருள் பிழைத்தும் அஞ்சு திங்களில் முஞ்சுதல் பிழைத்தும்" என்கிறார்

ஐந்தாம் மாதம் கருவிற்கு உயிர் சக்தி உண்டாகும் அவற்றிலிருந்து விடுதலை ஆகியும் ஆறாம் மாதத்தில் கருப்பையில் தினவு ஏற்பட்டு கருச்சிதைவு ஏற்படாமல் அதிலிருந்து பிழைத்ததையும், அவையங்கள் முறையாக அமைந்து உயிா் வளர்ச்சி பெறும். ஏழாம் திங்களில் வளர்ச்சி பெறாத குழந்தையாக பிறப்பதிலிருந்து காப்பாற்றியதையும் நினைத்து ஆறு திங்களில் ஒரு அலர் பிழைத்தும் "ஏழு திங்களில் தாழ் புவி பிழைத்தும்" என்கிறார்.[6]

எட்டாம் மாதத்தில் கருவின் வளர்ச்சி இணை தாங்க முடியாமல் தவிக்கும் தாய் படும் கட்டத்தை நினைத்து அவற்றிலிருந்து பிழைத்ததையும் ஒன்பதாம் மாதம் வளர்ச்சி பெற்ற கரு அசையும் போது ஏற்படும் துயரிலிருந்து பிழைத்ததையும் எண்ணி "எட்டு திங்களில் கட்டமும் பிழைத்தும் ஒன்பதில் வருதரு துன்பமும் பிழைத்தும் என்கிறார்" கரு முழு வளர்ச்சி பெறுவதற்கு 280 நாட்கள் ஆகும் என்பதனை கணக்கில் கொண்டு தக்க தசமதி சந்திரனை கணக்கில் கொண்டு பத்து மாதம் தாய் படும் துக்க சாகரத்தோடும் செயல்படும் துயரத்தின் என்றும் காப்பாற்றியதை நினைந்து கூர்ந்து தக்க தசமதி தாயொடு தான் படும் துக்க சாகரத்தோடும் சேய்படும் துயரத்தினின்றும் காப்பாற்றியதை நினைவு கூர்ந்து "தக்க தசமதி தாயொடு தான் படும் துக்க சாகரத் துயரிடைபிழைத்தும்" என்கிறார்.[7]

பத்தாம் மாத இறுதியில் நாளமில்லாச் சுரப்பி களின் செயற்பாட்டால் கருப்பை சீராகச் சுருங்கத் தொடங்கும். அதனால் கரு-குழந்தை வெளித்தள்ளப்படும். இக்கருப்பைச் சுருக்கத்தால் தாய்க்கு வலி (Labour Pain) ஏற்படுகிறது என்பது மருத்துவ நூல் தரும் செய்தி. இடநெருக்கடியால் குழந்தை துன்புறலாம். இத்துன்பங்களினின்று இறையருளால் தாயும் சேயும் பிழைத்தல் வேண்டும் என இறைமையைப் போற்றும் திருவாசகத் தொடர்கள்,

பழந்தமிழரின் மருத்துவ அறிவினையும் போற்றி நிற்கிறது

கரு உற்பத்தியாகும் காலத்தில் இருந்து முழு வளர்ச்சி பெற்று சிசுவாக வளரும் வரை அக்கரு பெரும் துன்பங்களை எல்லாம் நினைத்து பாடுகிறார் ஒருபுறம் மலப்பை ஒருபுறம் மூத்திரப்பை ஒருபுறம் தாயார் வயிற்றிலிருந்து கிளம்பும் ஜடாராக்கினி ஒருபுறம் தாயார் உண்ணும் உணவின் காரத்தன்மை அத்துடன் கருவளர வளர கருப்பையில் கரு நசுக்கப்படும் துன்பத்திலிருந்து ஒரு சீவன் பிழைத்ததை 12 வரிகளில் உணர்த்துகிறார் மாணிக்கவாசகர் உயிர் பிழைத்தல் என்பது ஓர் அறிவியல் விந்தை ஆகும்.

## முடிவுரை

ஒரு தாயின் வயிற்றில் ஒரு கரு பத்து மாதங்கள் வளர்கிறது அது ஆணா, பெண்ணா, அலியா, இரட்டை குழந்தையா, ஊனமுற்றதா, மந்த புத்தியை உடையதா என்பது யாருக்கும் தெரியாது தாயின் கருப்பையில் கரு உருவாவதற்கு காரணமான தந்தையும் அறியவில்லை கருப்பையில் அதை ஏற்ற தாய்க்கும் தெரியாது தான் கருவுற்றதையோ குழந்தையின் அமைப்பையோ அவள் கண்கொண்டு பார்க்க முடியாது ஆனால் இவை அனைத்தும் படைத்த இறைவன் மட்டுமே அறிவான். அந்த பரம்பொருள் உயிரோடுதான் இருக்கிறான் கூடவே இருக்கிறான் ஆனால் மெய்ப் பொருளாகிய இறைவனுக்கு மட்டுமே தெரியும். இன்று பிறப்பியல் கொள்கை அறிவியல் வளர்ச்சியால் மாறி உள்ளது எனலாம். குழந்தை இல்லாத தம்பதியினர் வாடகை தாய் மூலமாகவும் சோதனை குழாய் மூலமாகவும் (டெஸ்ட் டியூப் பேபி) குழந்தைப் பெற்றுக் கொள்கின்றனர் குழந்தை என்பது இறைவன் கொடுத்தக் கொடை ஆகும். ஆனாலும் ஒருதாயின் கருவறையில் தான் ஒரு குழந்தை கருவாகி உயிராக முடியும் தாவரங்கள், விலங்குகள், பறவைகள், நகர்வன, ஊர்வன போன்ற அனைத்து உயிர்களையும் படைத்து காப்பவன் இறைவன் ஆவான் உயிர்களை அழிப்பதும் கூட இறைவனின் திருவிளையாட்டு ஒவ்வொரு முறையும் நாம் பிறப்பெடுக்கும் போது ஒரு படி மேல் நாம் உயர வேண்டும் அப்படி உயர்ந்தால் தான் இந்த மனித பிறவி பயனுடைய பிறவி ஆகும் இல்லை என்றால் பிறப்பே அர்த்தம் அற்றது ஆகும்.

## அடிக்குறிப்புகள்

1. ஞானபரம்பரை, ப.1 தொகுதி -2 தெ.ஞானசுந்தரம, மூன்றாம் பதிப்பு, 2014, வர்த்தமானன் பதிப்பகம், சென்னை-17
2. மேலது, ப.41,
3. திருவாசகம் ஓர் யோக விளக்கம், ப.241 தவத்திரு. அன்னை சகுந்தலா, முதல் பதிப்பு, 2007, செல்வகணபதி பதிப்பகத்தார், எண்.146. பெரிய தெரு, முத்துக் கிருஷ்ணாபுரம், கடையநல்லூர், திருநெல்வேலி மாவட்டம்.
4. மேலது. ப.242
5. திருவாசகம் ப. 232 உ.ஆ.ஸ்ரீமத் சித்பவானந்தர், ஸ்ரீகிருஷ்ணதபோவனம், திருப்பராய்த்துறை, திருச்சி, இரண்டாம் பதிப்பு 1970
6. திருவாசகம் ஓர்யோக விளக்கம், ப. 243 அன்னைசகுந்தலா, முதல்பதிப்பு, 2007, செல்வகணபதி பதிப்பகத்தார், 146 பெரிய தெரு, முத்துக் கிருஷ்ணாபுரம், கடையநல்லூர், திருநெல்வேலி மாவட்டம்
7. மேலது ப.243

# வரலாற்றுப் பார்வையில் (ம) பள்ளர்களின் கல்வெட்டுக்களும் செப்பேடுகளும்

**க. தேவதாஸ்**
முனைவர்பட்ட ஆய்வாளர்
செந்தமிழ்க் கல்லூரி, தமிழ் உயராய்வு மையம், மதுரை

***ஆய்வுச் சுருக்கம்***
*தேவேந்திரகுல வேளாளர்களாகிய மள்ளர்களின் (பள்ளர்களின்) வரலாற்றினை முறையாகத் தொகுத்து விளக்கும் நூல்களும் ஆய்வுகளும் இது நாள் வரையில் ஒழுங்குபடுத்தப் படவில்லை; ஆயினும் தேவேந்திர குல மள்ளர்களின் வரலாற்று ஆவணங்களாக அவர்களைப் பற்றிய செய்திகள் கல்வெட்டுக்களிலும் செப்பேடுகளிலும் சிறுசிறு குறிப்புக்களாகவும் விளக்கங்களாகவும் ஆங்காங்கே சிதறிக் கிடக்கின்றன. இவற்றை ஆவணப்படுத்தினால் தேவேந்திர குல மள்ளர்களின் வரலாற்றினையும் பண்பாட்டினையும் தெளிவாக அறிந்து கொளள்லாம். இந்த முன்முயற்சியில் எழுதப்படுவதே இவ் ஆய்வுக் கட்டுரையாகும்.*

## முன்னுரை

முதுகுடி குடும்பர் பெரியதேவப்பள்ளர் (விருதுநகர் மாவட்டம் இராசபாளையம்), திருக்கச்சூர் திருமடைவிளாகத்தில் பள்ளர் (இப்பள்ளக் குடியினருக்கு வரியில்லை), வீரக்குடும்பன் நீராணிக்கன், திருமங்கலம் அரசப்பட்டியில் திருமலைநாயக்கர் என்பன குறித்த மள்ளர்களின் கல்வெட்டுச் செய்திகளும், பள்ளர்களின் பழனிச் செப்பேடு, நத்தம் செப்பேடு முதலான செப்பேடுகளும் இவ் ஆய்வுக்கட்டுரையில் விளக்கப்படுகின்றன.

## முதுகுடி குடும்பர் பெரியதேவப்பள்ளர்

தமிழக வரலாற்றுப் பின்புலத்தில் நோக்கும் போது சோழ மன்னன் இராசராசன் காலம் முதல் 'மள்ளர்', பள்ளராயினர் என்ற உண்மை புலனாகிறது. பிற்காலப் பாண்டியர் ஆட்சிக் காலத்தில் ஒருசில தமிழகப் பகுதிகளில் 'பள்ளர்' என்னும் சொல்லாட்சி நிலைபெற்றுவிட்டது. தமிழகத்தின் வடபகுதிகளில் வாழ்ந்த மள்ளர், தமிழகத் தென்பகுதிகளிலும் வாழத் தொடங்கினர் என்பதற்குக் கல்வெட்டு சான்றளிக்கின்றது.

விருதுநகர் மாவட்டம் இராசபாளையம் அருகில் முதுகுடி என்னும் ஊர் உள்ளது. முன்னோர்கள் முதுமையான குடியில் வாழும் ஊர் என்னும் பொருளில் முதுகுடி எனப் பெயரிட்டுள்ளனர். இவ்வூரில் மள்ளரைப் பற்றிய கல்வெட்டு உள்ளது. ஆதலால் மள்ளர் தமிழகத்தின் பழங்குடியினர் என்பது உறுதியாகின்றது. இவ்வூரில் (முதுகுடியில்) மள்ளர் இனத்தவர் குலசேகரப் பாண்டியன் காலத்திலிருந்து இன்று வரை வாழ்ந்து வருகின்றனர். இவர்களுள் ஒருவனே பெரியதேவப் பள்ளன் ஆவான். இவன் குலசேகரப் பாண்டியன் காலத்தில் முதுகுடிப் பகுதியில் பெருமழை பெய்தது. ஏரிகளும் குளங்களும் கண்மாய்களும் நிரம்பி வழிந்தன. இவற்றில் ஒன்று முதுகுடியிலிருந்த கருங்குளமாகும். கொள்ளளவைத் தாண்டி கருங்குளத்திற்கு நீர் வந்துகொண்டிருந்தது. இனிக்காலந் தாழ்த்தினால் மழைநீர் கருங்குளத்தை உடைத்து ஊரை அழித்து விடும் என்ற நிலை ஏற்பட்டது. இதனால் மனவலிமையுடன் 'ஊரை நான் காக்கின்றேன்' எனக்கூறி முதுகுடிக்குடும்பன் பெரிய தேவப்பள்ளன் மண்வெட்டியுடன் புறப்பட்டான். தேவையான இடத்தில் குளத்தை வெட்டி முதுகுடி என்னும் ஊரைக் காத்தான். இதில் பெரிய தேவப்பள்ளன் தனது உயிரை நீத்தான். பெரியதேவப் பள்ளனின் இச்செயலை முதுகுடி

மக்கள் அனைவரும் போற்றி வணங்கினர். பெரியதேவப்பள்ளன் புறநானூற்று மள்ளர் வழியில் வந்தவன் ஆதலால் மக்கள் வணங்கும் நடுகல் தெய்வமும் ஆனான். பெரியதேவப் பள்ளனுக்கு ஒரு மகள் (ஒரேயொரு வாரிசு) இருந்தாள். அவளுக்கு முதுகுடி ஊர்மக்கள் கருங்குளத்தில் கீழே உள்ள வளமான அரைமா நிலத்தைக் கொடையாகக் கொடுத்தனர். கொடை நிலத்தை 'உதிரப்பட்டி' என்றனர். பெரியதேவனின் வீரச்செயலை முக்கோண வடிவக் கல்லில் கல்வெட்டாகவும் வெட்டி வைத்தனர். அக்கல்வெட்டு இவனை

**"முதுகுடி குடும்பரில் பெரியதேவப் பள்ளன்" (செ.இராசு, கொங்கு, 1972, ப.301)** எனக் குறிப்பிட்டுள்ளது. இப்பெரியதேவப் பள்ளன் மள்ளரில் குடும்பர் வகுப்பைச் சேர்ந்தவன் ஆவான். மதுரை மாவட்டத்திலுள்ள பேரையூர் வட்டம், இராசபாளையத்திற்கு மிக அருகாமையில் அமைந்திருப்பதால் பேரையூர் வட்ட மள்ளர்கள் முதுகுடி குடும்பர் பெரியதேவப்பள்ளனை, தமது மூதாதையராகப் பெருமையுடன் போற்றி வணங்கி வருகின்றனர்.

### திருமடை விளாகத்தில் பள்ளர் - பள்ளக்குடிக்கு வரியில்லை

பிற்காலப் பாண்டியர் ஆட்சியின் இறுதிக் காலத்தில் இசுலாமிய ஆட்சியாளர்கள் தென்னிந்தியப் பகுதிகளில் குறிப்பாகத் தமிழ்நாட்டின்மீது அடிக்கடி படையெடுத்து தமிழ்நாட்டைக் கொள்ளையிட்டனர். தென்னிந்திய மக்களையும் கோவில்களையும் காப்பதற்காகத் துங்கபத்திரை ஆற்றின் கரையில் விஜயநகரப் பேரரசு தோற்றுவிக்கப்பட்டது. சாளுவ நரசிங்கராயர் என்பவர் விஜயநகர மன்னர் வழியில் வந்தவர் ஆவார். இவர் இசுலாமியர் படையெடுப்பிலிருந்து தமிழக மக்களைப் பாதுகாக்க தொண்டை மண்டலத்துத் திருக்கச்சூர் மலைமீது குடியிருப்பு வளாகத்தை அமைத்தார். சாளுவ நரவிங்கராயர் படைப்பிரிவில் கோடதிம்மு நாயக்கரும் கரணக்கர் சிலமுரசரும் பணியாற்றினர். இவ்விருவரும் மன்னனின் நன்மைக்காக திருக்கச்சூர் மலையில் கோவில் ஒன்றைக்கட்டி, வாஸ்து முறைப்படி குடியிருப்பு வீடுகளையும் கட்டி அப்பகுதிக்கு 'மருந்துக்கு நாதயபுரம்' எனப் பெயர் சூட்டினர். இவ்வீடுகளைக் கைக்கோளர், பள்ளர் உள்ளிட்ட சாதியினருக்கு அளித்தனர். இவ்வாறு இவர்கள் குடியிருக்கப் பெற்ற வீடுகளுக்கு ஆடிமாதம் முதல் ஆறு மாதங்களுக்கு வரி கொடுக்கத் தேவையில்லை. ஆறுமாதம் முடிந்ததும் வாடகையாகக் கால்பணம் கொடுக்க வேண்டும். இவர்கள் தங்கள் சமுதாயத்திற்குரிய மடங்களை அமைத்துக் கொள்ளவும் உரிமை பெற்றனர். பிற மதத்தினருக்கு குடியிருப்பு வீடுபெறும் உரிமையில்லை. **"பள்ளர் குடிக்கு மட்டும் வாசல்பணம் சர்வமானியம்" (தென்னிந்தியக் கல்வெட்டுகள், தொகுதி ஏழு, 336 / 26)** என்று கல்வெட்டு குறிப்பிடுகின்றது.

திருக்கச்சூர் திருமடை விளாகத்தில் பள்ளர் குடியினர் பிற சமுதாயத்தினரைப் போன்று வீடுகளைப் பெற்றதுடன் மடத்தையும் அமைத்துக் கொண்டனர். முன்னோர்கள் கோவிலைக் கட்டி கோவிலைச் சுற்றி வீடுகளையும் அவர்கள் இணைந்து ஒன்று கூடுவதற்கு மடங்களும் அமைத்துக் கொடுத்தனர் எனக் கருதுவதற்கு இந்தக் கல்வெட்டு சான்றளிக்கின்றது. இதற்கு இக்காலச் சாட்சியாக சிவகங்கை மாவட்டம் திருப்பத்தூர் வட்டம் பிள்ளையார்பட்டிக்கு அருகிலுள்ள குன்றக்குடி ஆதின மடம் 'கோயிலை மையமிட்ட குடிகள்; குடிகளை மையமிட்ட கோயிலும் ஆதின மடமும்' எனச் செயல்பட்டு மக்கள் பணிகளைச் செய்து வருவதாக அமைகின்றது.

மதுரை, திருப்பரங்குன்றம், பழனி, கோவை பேரூர் ஆகிய ஊர்களில் இன்றும் கோயிலைச் சுற்றி ஒவ்வொரு சமுதாயத்தார்க்கும் மடங்கள் இருப்பது இத்தகைய அடிப்படையிலேயே என்று

கருதலாம். திருக்கச்சூர் மலைமேல் அமைக்கப்பெற்ற குடியிருப்பு வளாகத்தை **“திருமடை விளாகம்” (செ.இராசு, ‘பள்ளக்குடிக்கு வரியில்லை’, மள்ளர் மலர், ஜனவரி - 2001, பக்.18-21)** என்பர். இன்றும் இப்பகுதியில் பள்ளக்குடியினர் சிறப்பாக வாழ்ந்து வருகின்றனர்.

**அரசப்பட்டியில் திருமலைநாயக்கர்**

ஒருநாள் மன்னர் திருமலைநாயக்கர் பொது மக்களைச் சந்திக்கப் புறப்பட்டு திருமங்கலத்திற்கு (மதுரை) அருகிலுள்ள கவுண்டன் கோட்டையில் வந்து தங்கினார். பொதுமக்கள் திருமலை நாயக்கரைக் கண்டு தங்கள் குறைகளைக் கூறிச் சென்றனர். கவுண்டன்பட்டிக்கு அருகில் அரசப்பட்டி என்ற ஊர் உள்ளது. இவ்வூரில் வீரக்குடும்பன் நீராணிக்கன் என்பவன் வாழ்ந்து வந்தான். அவன் அரசப்பட்டியிலுள்ள நிலங்களுக்குத் தண்ணீர் பாய்ச்சும் நீராணிக் குடும்பனாக வேலை செய்து வந்தான். தங்கள் பகுதிக்கு வந்த மன்னர் திருமலை நாயக்கரை வீரக்குடும்பன் சந்தித்தான். அரிசி, பருப்பு, ஆட்டுக்கிடாய், பாதகாணிக்கை பணம் இருபது வைத்துக் கொடுத்து மன்னரை வணங்கினான். மன்னரும் மகிழ்ந்து வீரக்குடும்பனிடம் உனக்கு என்ன வேண்டுமென்று கேட்டார். **“நான் அரசப்பட்டியில் நிலங்களுக்கு நீர்பாய்ச்சும் நீராணிக்குடும்பன்; ‘நான் இப் பணி செய்ய மானியமாக நிலம் வேண்டுமெனக்’ கேட்டான். திருமலை நாயக்கர் அதிகாரிகளின் உதவியோடு சான்றுகளைச் சரிபார்த்து வீரக்குடும்பனுக்கு அரசப்பட்டியில் வளமான நஞ்சை நிலத்தைக் கொடுத்தான்” (நடன.காசிநாதன் முதலியோர், திருமலை நாயக்கர் செப்பேடுகள், 1994, செப்பேடு எண் : 7)** அந்நிலக்கொடை செப்பேட்டில் பொறிக்கப் பெற்று வீரக்குடும்பனுக்கு வழங்கப்பெற்றது.

விஜயநகர மன்னர்களுக்கும் மதுரை நாயக்கர் மன்னர்களுக்கும் மள்ளர் சமுதாயத்தார்க்கும் இடையே இணக்கமான நல்லுறவு இருந்ததையே திருக்கச்சூர் கல்வெட்டும் அரசப்பட்டி செப்பேடும் உணர்த்துகின்றன. எனினும் ஒரு காலத்தில் நிலவுடைமையாளர்களையும் வீரர்களாகவும் விளங்கிய மள்ளர்கள் பிற்காலப் பாண்டியர் மற்றும் நாயக்கர் காலத்தில் உழவுத்தொழில் கூலி பெறுபவர்களாகத் தள்ளப்பட்டனர்; மன்னர்களிடம் தானமாக நிலம்பெறும் நிலைக்குத் தாழ்ந்துவிட்டனர் என்று முதுகுடிக் கல்வெட்டும் அரசப்பட்டி செப்பேடும் தரும் செய்திகளாக உள்ளன.

**“இம்மாற்றம் பிற்காலப் பாண்டிய மன்னர்களும் நாயக்க மன்னர்களும் மள்ளர்களிடம் பெண்கேட்டு, அவர்கள் பெண்கொடுக்க மறுத்ததால் ஏற்பட்ட விளைவு” (குணா, ‘மள்ளர் பள்ளரான வரலாறு’, மள்ளர் மலர், செப்டம்பர் - 2001. குருசாமிசித்தர் (தொகு.ஆ.) ‘நாயக்கர் ஆட்சியினால் வீழ்த்தப்பட்ட தேவேந்திரர்களின் வீரவரலாற்றுக் கதைப்பாடல்கள்’, தமிழர் பண்பாட்டு வரலாறு, 1996, ப.249.)** எனக் குணா குறிப்பிடுகின்றார்.

**பழனிச் செப்பேடு**

நமக்குக் கிடைத்துள்ள பழனிச் செப்பேடு மள்ளர் சமுதாயத்தின் முதல்மகன் பிறப்புக் குறித்தும், அவன் தமிழ்நாட்டிற்கு அளித்த மாபெரும் நெல்கொடை குறித்தும் பேசுகின்றது.

சிவபெருமான் உலக மக்களுக்கு நெல்லரிசி உணவை விளைவித்துக் கொடுக்கும் ஒருமகன் வேண்டுமென நினைத்தார். எனவே அவர் வள்ளிக்கொடியில் ஓர் ஆண்மகனை உருவாக்கினார். இவ்வாறு தோன்றிய ஆண் குழந்தையை உமையாள் தேவேந்திரனிடமிருந்து கொடுத்து நல்ல மகனான வளர்ந்துவருமாறு ஆணையிட்டாள். இந்திரனும் இந்திராணியும்

அக்குழந்தைக்கு வள்ளல் மகன் எனப் பெயர் சூட்டி வளர்த்து வந்தனர். வளர்ந்த நிலையில் வள்ளல்மகன் அன்னப்பறவையின் மூக்கிலிருந்து உதிர்ந்த விதையைக்கொண்டு பயிர்வளர்த்தான். அப்பயிர் தேவலோகத்தில் செந்நெல்லாக விளைந்தது. விளைந்த நெல்லை அறுவடை செய்து அரிசியாக்கிய வள்ளல்மகன் ஒருநாள் பாலமுதத்துடன் செந்நெல் அமுதத்தையும் சிவனுக்குப் படையல் செய்தான். அச்செந்நெல் அமுதை உண்டு சுவைத்த சிவபெருமான், வள்ளல்மகனை மண்ணுலகம்சென்று செந்நெல் விளைவிக்கப் பணித்தான். நந்தியெம் பெருமான் வள்ளல் மகன் உழவு செய்து செந்நெல் விளைவிக்க, உழவு மாடுகளைப் படைத்து உடன் அனுப்பி வைத்தான்.

மண்ணுலகம் வந்த வள்ளல்மகன் சேர சோழ பாண்டியர் ஒதுக்கித் தந்த நிலங்களில் ஏர்பூட்டி உழுதான். வானுலகத்திலிருந்து அரம்பைகள் பூலோகம் வந்து வள்ளல்மகன் உழவோட்டிய நிலத்தில் நாற்று நடவு செய்தனர். அவர்களுள் இருபெண்களை வள்ளல் மகன் மனைவியராக ஏற்றான். அவ்விரு பெண்களையும் சோழரும் பாண்டியரும் தம் மகள்களாக ஏற்றனர். நடவு செய்த நெற்கதிர் முற்றி விளைந்தது. சோழரும் பாண்டியரும் மகிழ ஒரு நல்லநாளில் வள்ளல் மகன் முற்றிய நெல்மணிகளை அறுவடை செய்தான். தாங்கள் உண்பதற்கு வள்ளல்மகனால் நெல் வந்தது என்று உலக மக்கள் போற்றி மகிழ்ந்தனர். வள்ளல் மகனால் இவ்வாறு விளைவிக்கப் பெற்ற செந்நெல் தமிழகம் முழுவதும் உலகத்திற்கும் பரவிட வளம்சேர்த்தது. வள்ளல் மகனே, மள்ளர்மகனாவான்; அவனது வருகையால் உழவர் குறிப்பாக மருதநிலத் தமிழர் நெல் நாகரிக மக்களாக மாற்றம் பெற்றனர். தமிழர் நாகரிகமும் பண்பாடும் பெற்றமைக்கு மள்ளர் மகனாகிய வள்ளல் மகன் விளைவித்துத் தந்த செந்நெல்லே காரணமானது.

வள்ளல் மகனின் வழித் தோன்றல்களாக (மள்ளர் மகன்) ஏராளமாக மக்கள் தோன்றினர். வள்ளல் மகனின் பிள்ளைகள் 'மள்ளர்' எனப்பட்டனர். இம்மள்ளர் நெல் விளைவித்து நெல்லின் மக்கள் என்னும் பெயரைப் பெற்றனர். மள்ளர் நெல்லினை விளைவித்ததோடு, தமிழர்க்கே உரிய வீரத்திலும் புகழை நிலைநாட்டினர். நெல் தந்த வள்ளல் மகன் கதையை பழனிச் செப்பேடு மேற்கூறியவாறு வரலாறாக விரித்துக் கூறுகின்றது. இதனை மள்ளர் இனத்தின் தோற்றத் தொன்மமாகவும் கொள்ள முடிகின்றது.

வள்ளல் மகன் வழியில் தோன்றிய மள்ளர் அனைவரும் தமிழ்க்கடவுள் முருகன் குடியிருக்கும் பழனியில் (பழனிமலை) ஒரு நாள் ஒன்று கூடினர். பழனி தெற்கு வீதியில் தென்மேற்கு மூலையில் அவர்களின் முன்னோனாகிய இந்திரன் பெயரால் தேவேந்திர மடம் ஒன்றைக் கட்டினர். தலைக்கட்டுக்கு ஒரு பணம், தண்டுவானுக்கு அரைப்பணம், கலியாணம் செய்யும் மாப்பிள்ளை வீட்டுக்கு மூன்று பணம், பெண்வீட்டுக்கு இரண்டு பணம், திருவிழாவுக்குப் பெரிய ஊருக்கு ஐந்து பணம், சிற்றூருக்கு மூன்று பணம் என்ற வகையில் தேவேந்திர சமுதாயத்தார் அனைவரும் பழனி தேவேந்திரர் மடத்துக்கு அளித்தல் வேண்டும். பட்டயத்துடன் மடத்து ஐயர் தங்கள் ஊருக்கு வந்தால் அவருக்குப் படி கொடுக்க வேண்டுமென முடிவுசெய்து **(குருசாமி சித்தர், தே.ஞானசேகரன், தமிழர் பண்பாட்டு வரலாறு, 'பழனிச் செப்பேடு, 1996, ப.275)** அதனைச் செப்பேடாக வெட்டிக் கொண்டனர்.

கல்வெட்டுக்களும் ஏனைய மரபுவழி வாய்மொழிக் கதைகளும் கூறாத மள்ளரினம் பற்றிய புராணக்கதை விவரித்துக் கூறுகின்றது. மள்ளர்கள் தங்களுக்குள் வழிவழியாக வழங்கி

வந்த வாய்மொழி மரபுக்கதைக்குப் பழனிச் செப்பேட்டில் புராணக்கதை வடிவம் கொடுத்துள்ளனர். இதனை மேலும் ஆராய்ந்த சி.பரமேஸ்வரி, **"தமிழகத்தின் அனைத்துப் பகுதிகளிலும் வாழ்ந்த மள்ளர்களுடைய குலப்பிரிவு முழுமையும் பழனிச் செப்பேட்டில் விவரிக்கப்படுகிறது. மள்ளர், வேந்தனாகிய இந்திரன் வழியினர் என்ற கருத்துக்கும் இச்செப்பேடு வலுச் சேர்க்கிறது" (சி.பரமேஸ்வரி, தேவேந்திரகுல வேளாளர் வரலாறும் சமூக அரசியல் எழுச்சியும், 2000, ப.46)** எனக் கூறியுள்ளார்.

**நத்தம் செப்பேடு**

பழனியில் தேவேந்திரர் மடத்தை அமைத்துக் கொண்ட மள்ளர் சமுதாயத்தார் அதன் அடுத்த படி நிலையாக தங்கள் சமுதாயத்திற்கான ஆதின குருக்களையும் தெரிவு செய்து கொண்டனர் என்பதை நத்தம் செப்பேடு விளக்கமாகக் கூறுகின்றது. சாதிக் குழுக்களைத் தெரிவு செய்வதற்காக தெய்வேந்திர மள்ளர் குலத்தார் அனைவரும் ஒரு நல்ல நாளில் கானாட்டு அய்யனார் கோயில் முன்பாகக் கூடினர். நத்தம் புதுப்பட்டி செம்புலிங்க பண்டாரத்தைச் சாதிக்குருவாகத் தேர்வு செய்து பட்டம் கட்டினர். மள்ளர் ஆதினக் குருக்களுக்குக் காணிக்கையாக மள்ளர் அனைவரும் நன்மைக்கு ஐந்தும் தீமைக்கு ஐந்தும் பணம் கொடுத்தல் வேண்டும். குருக்கள் மள்ளர் வீடு தேடி வந்தால் வீட்டுக்கு ஒரு பணம் கொடுக்க வேண்டும். வீடு தேடி வரும் ஆதின குருக்களை மள்ளர் அனைவரும் படியரசி, பாக்கு வெற்றிலை கொடுத்து வணங்கவேண்டும் என முடிவு செய்தனர். ஆதின குருக்களை இவ்வாறு தேர்வு செய்ததை முதலில் பனையோலையில் எழுதினர். பின்னர் செப்பேட்டில் பொறித்து **(சி.பரமேஸ்வரி, தமிழர் பண்பாட்டு வரலாறு, 1996, பக். 292-294)** செப்பேட்டைக் குருக்களிடம் ஒப்படைத்தார்.

**நிறைவுரை**

கல்வெட்டுக்களிலும் செப்பேடுகளிலும் மள்ளர்களின் தோற்ற வரலாறு, தொன்மை குறித்த செய்திகள் இவ்வாறு சிதறிக் கிடக்கின்றன. இவற்றைத் தொகுத்து மள்ளர்களின் பண்பட்ட வாழ்க்கையினையும் பண்பாட்டுக் கூறுகளையும் வெளிப்படுத்துவது காலத்தின் கட்டாயத் தேவையாக உள்ளது.

# நற்றிணையில் பெயர்ச்சொற்களாய் வரும் ஈரெழுத்து ஒருமொழிகள்

**பி. சுமித்திரா தேவி**
பகுதிநேர முனைவர் பட்ட ஆய்வாளர்
பதிவு எண்: 18121174022020
ராணி அண்ணா அரசு மகளிர் கல்லூரி
மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகம், திருநெல்வேலி

**முனைவர் A. விஜயலெட்சுமி**
தமிழ் உதவிப்பேராசிரியர்
ராணி அண்ணா அரசு மகளிர் கல்லூரி
மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகம், திருநெல்வேலி

***ஆய்வுச் சுருக்கம்***
*சங்க இலக்கியங்களில் எட்டுத்தொகையுள் முதன்மையாக அமைந்துள்ளது நற்றிணை. சங்க இலக்கியங்கள் அனைத்துமே சொல்வளம் மிக்கவை. சொற்கள் இலக்கிய ரீதியாகவும், இலக்கண ரீதியாகவும் வகைப்படுத்தப்படுகின்றன. இலக்கண முறையில், பெயர்ச்சொல், வினைச்சொல், இடைச்சொல், உரிச்சொல் என சொல் நான்கு வகையாக பிரிக்கப்படுகின்றது. அவற்றுள் ஈரெழுத்து ஒருமொழியாக வரும் பெயர்ச்சொற்கள் நற்றிணையில் இடம்பெற்றுள்ளன. அவற்றைக் குறித்து ஆராயப்படுகிறது.*

### முன்னுரை

நற்றிணை தனிப்பாடல்களாகப் பல்வேறு காலங்களில் வாழ்ந்த பலராலும் பாடப்பட்டு பின்னர் ஒரு புலவரால் தொகுக்கப்பட்டது. இ∴து எட்டுத்தொகை நூல்களுள் ஒன்றாகும். எட்டுத்தொகை நூல்கள் இவையெனப் பாடும் வெண்பாவால் முதலிடம் பெற்றுத்திகழ்வது நற்றிணை ஆகும். 'நல்' என்பது அடைமொழியாகும். இந்நூலில் பெயர்ச் சொற்களாய் வரும் ஈரெழுத்து ஒருமொழிகள் குவிந்துக் கிடக்கின்றன. அவற்றைக் குறித்து இக்கட்டுரை ஆராய்கிறது.

### ஈரெழுத்து ஒரு மொழி

இரண்டு எழுத்துக்கள் சேர்ந்து பொருள் தரும் சொல் ஈரெழுத்து ஒரு மொழி எனப்படும். மொழியின் நிலை மூவகை எனப் பிரித்து அப்பகுதியில் ஈரெழுத்து ஒரு மொழியைக் குறித்த செய்தி பதிவாகியுள்ளது.

**"ஓர் எழுத்து ஒருமொழி ஈர் எழுத்து ஒருமொழி**
**இரண்டு இறந்து இசைக்கும் தொடர்மொழி உளப்பட**
**மூன்றே மொழி நிலை – தோன்றிய நெறியே"[1]**

**(நூ.எ.45)**

ஓரெழுத்தொருமொழி, இரண்டெழுத்தொரு மொழி, இரண்டெழுத்துக்கள் கடந்து நிற்கும் தொடர்மொழி ஆகிய மூவகை மொழிநிலைகள் உள்ளன.

### பெயர்ச்சொற்கள்

பெயர்ச்சொல் என்பது ஒன்றன் பெயரை உணர்த்தும் சொல் ஆகும். பொருள், இடம், காலம், சினை, குணம், தொழில் என்னும் ஆறின் அடிப்படையில் பெயர்ச்சொற்கள் தோன்றும். பெயர்ச்சொல் பொருட்பெயர், இடப்பெயர், காலப்பெயர், சினைப்பெயர், பண்புப்பெயர், தொழிற்பெயர் என அறுவகைப்படும். இப்பெயர்ச்

சொற்களைக் குறிக்கும் ஈரெழுத்து ஒருமொழிகள் நற்றிணையில் கையாளப்பட்டுள்ளன. அவற்றைக் குறித்து ஆராயப்படுகிறது.

**பொருட்பெயர்**

உயிர் உள்ள, உயிர் இல்லாத பொருள்களின் பெயர்களைக் குறிப்பது பொருட்பெயர் எனப்படும். இவற்றுள் உயர்திணைப் பொருள்கள், அஃறிணைப் பொருள்கள் ஆகிய அனைத்துப் பொருட்களும் அடங்கும்.

'ஆழி' என்னும் பதத்திற்கு, ''கடற்கரை, கடல், சக்கரம், உருளை, வட்டம், மோதிரம், கட்டளை. கணவனைப் பிரிந்த மனைவியிழைக்குங் கூடற் சுழி, பண்டி''[2] என்று பொருள் விளக்கம் தருகிறது கழகத்தமிழ் அகராதி.

**'ஆழி'** என்னும் சொல் தேர்ச் சக்கரத்தைக் குறிக்கும் சொல் நற்றிணைப் பாடலில் இடம்பெற்றுள்ளது.

**''யாழி மருங்கின் அலவன் ஓம்பி'' (நற்:11)**

'தாம் ஊர்ந்து வருகின்ற தேரின் ஆழியிடத்துப் படாதவாறு' என்ற பாடல் விளக்கத்தில் 'ஆழி' என்பது தேர்ச்சக்கரத்தைக் குறித்தது.

**''இரைதேர் நாரை யெய்தி விடுக்குந்'' (நற்:35:6)**

'ஆண்டு இரையைத் தேடுகின்ற நாரை வரக்கண்ட ஞெண்டு' என்னும் பொருளில் 'இரை' என்பது உணவைக் குறித்தது.

**''எண்பிழி நெய்யோடு வெண்கிழி வேண்டாது'' (நற்:328:8)**

'முதன் மழை பெய்தவுடன் வருவேன் என்றனன் ஆதலின், இனி எள்ளைப் பிழிந்தெடுக்கும் நெய்யையும் வெளிய கிழியையும் விரும்பிப் பெறாது' என்ற பாடல் விளக்கத்தில், **'எண்'** என்பது எள்ளுவைக் குறித்தது.

'கணை' என்ற சொல்லுக்கு, ''திரண்டவடிவு, திரட்சி, அம்பு, காம்பு, வளைதடி, ஒரு நோய், கரும்பு, சிவிகைமேல் வம்பு, திப்பிலி, நிறைவு''[3] என்று கழகத் தமிழ் அகராதி பொருள் தருகிறது.

**''கணையர் கிணையர் கைபுனை கவணர்'' (நற்:108:4)**

'அழகிய குடியிலுள்ள கணையுடையவரும் கை விரலிலே கோத்த கவணுடையவரும்' என்னும் விளக்கத்தில் **'கணை'** என்பது 'அம்பு' என்ற பொருளைத் தருகிறது.

**''காழ்பெய் அல்குற் காசுமுறை திரியினும்'' (நற்:66:9)**

'காஞ்சியணிந்த அல்குலின் மேல் காலுகின்ற பொற்காசு இனம் முறை பிறழ்ந்து' என்னும் பொருளில்,**'காசு'** என்ற பதம் பொற்காசைக் குறிப்பிட்டது.

**''கணையர் கிணையர் கைபுனை கவணர்'' (நற்:108:4)**

இப்பாடலில், **கிணை** என்ற பதம் பறைவகையைக் குறித்தது,

**'கூழ்'** என்னும் ஈரெழுத்து ஒருமொழி உணவைக் குறிக்கும் பொருளில் நற்றிணைப் பாடலில் பயின்று வந்துள்ளது.

**''கூழுடை நன்மனைக் குழுவின் இருக்கும்'' (நற்:367:5)**

'மிக்க உணவையுடைய நல்ல மனையின் கண்ணே கூடினவாயிருக்கும்' என்பது இதன் பொருளாகும்.

**''கோடுதுணர்ந்து அன்ன குருகொழுக்கு எண்ணி'' (நற்:159:4)**

'சங்குகளைக் குலையாகத் தொடுத்தாற் போன்ற குருகுகளின் வரிசையை எண்ணி' என்ற பொருளில், **'கோடு'** என்பது சங்கைக் குறித்தது.

'கோல்' என்ற பதத்திற்கு, ''அஞ்சனக்கோல், அம்பு, அளவுக்கோல், இலந்தை, ஊன்றுகோல், எழுதுகோல், குதிரைச் சம்மட்டி, கோலெண்ணேவல், செங்கோல், தடி, துலாக்கோல், தூண்டில், தெப்பம், புள்ளி, மரக்கொம்பு, மரக்கோல்,

சித்திரந்தீட்டுங் கோல், முத்திரைக் கோல், தீக்கடை கோல், திரட்சி, மூட்கோல், அழகு, சவுக்கு”[4] என்று பொருள் தருகிறது கழகத் தமிழ் அகராதி.

**“வலவன் கோலுற அறியா” (நற்:78:10)**

‘தேர்ப்பாகன் தன் தாற்றுக்கோலாலே தூண்டப்பட்டறியாத’ என்னும் பொருளில் **‘கோல்’** என்பது குதிரையைச் செலுத்தும் தாற்றுக்கோலைக் குறித்தது.

**“மாயிருந் தாழி கவிப்பத்” (நற்:271:11)**

‘முன்னாலேயே என்னைப் பெரிய தாழியிலிட்டுக் கவிக்கும்படி என் உயிரைக் கொண்டு போகாத கூற்றமானது’ என்னும் பொருளில் **‘தாழி’** என்னும் ஈரெழுத்து ஒருமொழி இறந்த உடலை அடக்கம் செய்யும் மட்பாண்டம் என்ற விளக்கத்தைத் தந்துள்ளது.

**“விழுநீர் வியலகந் தூணி யாக” (நற்:16:7)**

இப்பாடல் வரிக்கு, ‘யானோவெனில் பெரிய கடல் சூழ்ந்த அகன்ற நிலனே அளக்கு மரக்காலாகக் கொண்டு’ என்பது பொருளாகும். இதில், **‘தூணி’** என்பது அளவு கருவியாக வந்துள்ளது.

‘நீறு’ என்ற சொல்லுக்கு கழகத்தமிழ் அகராதி, “சாம்பர், சுண்ணம், துகள், நீறென்னேவல், புழுதி, திருநீறு, நீற்றின சுண்ணாம்பு”[5] என்று பொருள் தருகிறது.

**“சேறாடு இரும்புறம் நீறொடு சிவண” (நற்:82:8)**

‘சேற்றில் உழலுதலானே அச்சேறு பூசப்பெற்ற கரிய முதுகு புழுதி படிந்திருப்ப அப்புழுதியுடனே விளங்கச்சென்று’ என்னும் பொருளில் **‘நீறு’** என்பது சேற்றைக் குறிப்பிட்டது.

**இடப்பெயர்**

ஏதேனும் ஓர் இடத்தைக் குறிக்கும் பெயர் இடப்பெயர் எனப்படும். இடப்பெயர்களைக் குறிக்கும் ஈரெழுத்து ஒரு மொழிகளும் நற்றிணைப் பாடல்களில் இடம்பெற்றுள்ளன.

**“அடியறிந்து ஒதுங்கா ஆரிருள் வந்தெம்” (நற்:156:1)**

நீ தானும் இரவில் வருநெறி தவறின் அந்நெறியை மெல்ல அடி வைத்து அறிந்து ஒதுங்கிச் செல்லுதற்குங் கூடாத நிரம்பிய இருட்பொழுதினில் வந்து’ எனும் பொருளில் **‘அடி’** என்னும் ஈரெழுத்து ஒருமொழி காட்டுவழிப் பாதையைக் குறித்தது.

**“குறும்ப லூரயாஞ் செல்லும்” (நற்:9:12)**

‘அடுத்துள்ள பல ஊர்களையுமுடையன’ என்னும் பொருளில் **‘ஊர்’** என்னும் ஈரெழுத்து ஒருமொழியாகிய இடப்பெயர் வந்துள்ளது.

**“பாயிரும் பனிக்கழி துழைஇப் பைங்கர்” (நற்:31:3)**

‘பரவிய பெரிய குளிர்ச்சியையுடைய கழியிடத்தைத் துழாவியெடுத்துத் தான் விரும்பிய’ என்ற பொருளில் ‘கழி’ என்பது இடத்தைக் குறித்தது.

‘குறி’ என்பது தலைவனும் தலைவியும் சந்திக்கும் இடமாகும்.

**“தான்செய் குறியில் இனிய கூறி” (நற்:204:8)**

‘தான் முன்பு செய்த குறியிடத்து அழைத்துக் கொண்டுபோய்’ எனும் பொருளில் **‘குறி’** எனும் இடத்தைக் குறிக்கும் சொல் பயின்று வந்துள்ளது.

‘சேரி’ என்பது ஊர்ப்பெயராகும். இச்சொல் நற்றிணையில் 342, 380 ஆகியப் பாடல்களில் காணப்படுகின்றது.

**“சேரி சேரா வருவோர்க் கென்றும்” (நற்:342:4)**

‘நீ இருக்கின்ற சேரியைச் சார வருபவர்க்கு எக்காலத்தும் அருள் செய்யவேண்டும் என்று’

என்னும் பொருளில் **சேரி** என்பது ஊரைக்குறித்தது.

'துறை' என்ற மொழிக்கு,''ஆறு, இடம், இறங்குதுறை, எல்லை, கலித்துறை, காரியம், தங்குமிடம், நீர்த்துறை, நூல், பாவினத்தொன்று, வழி, பகுதி, தமிழ்ப்பொருட் கூறு''[6] என்று விளக்கம் தருகிறது கழகத்தமிழ் அகராதி.

**''மால்வரை மறையத் துறைபுலம் பின்றே'' (நற்:67:2)**

'பெரிய அத்தம் என்னும் சிலம்பினூடு சென்று மறைதலானே யாருமின்றி நமது கடற்றுறை தனிமையா யிராநின்றது' என்னும் பொருளில் **'துறை'** என்ற பதம் கடல் துறையைக் குறித்தது.

'பாழ்' என்ற பதத்திற்கு கழகத்தமிழ் அகராதி, ''அழிவு, ஆகாயம், கெடுதி, சூனியம், நட்டம், பாழென்னேவல், வீண், வெறுமை''[7] என்று பொருள் தருகிறது.

**''பேரூர் பாழ்காத் திருந்த தனிமகன் போன்றே'' (நற்:153:10)**

'ஊரில் வாழும் குடிமக்கள் எல்லாம் குடியோடி அகன்றுவிட்ட பெரிய பாழ் நகரத்தை' என்னும் பொருளில் **'பாழ்'** எனும் சொல் பாழடைந்த ஊரைக் குறித்தது.

புழை என்ற சொல்லிற்கு, ''துவாரம், குழாய், நுழை''[8] என்று பொருள் தருகிறது பவானந்தர் அகராதி.

**''கொன்முரண் இரும்புலி அரும்புழைத் தாக்கிச்'' (நற்:151:2)**

'கொல்லுகின்ற வலிய கரிய புலியை நுழைதற்கரிய முழையருகில் மோதிக்கொன்று போகட்டு' என்ற பொருளில் **'புழை'** என்பது குகை எனும் இடப்பெயரைக் குறித்தது.

### பண்புப் பெயர்

ஒரு பொருளின் பண்பை உணர்த்தும் பெயர் பண்புப்பெயர் எனப்படும். நிறம், சுவை, வடிவம், அளவு ஆகியவற்றின் அடிப்படையில் பண்புப்பெயர் வரும்.[9] பண்புகளைக் குறிக்கும் ஈரெழுத்தில் அமைந்த பண்புப்பெயர்களும் நற்றிணைப் பாடல்களில் காணப்படுகின்றன.

**''தேம்பட ஊதுவண்டு இமிருங் கோதை'' (நற்:187:7)**

'தேனைப் பொருந்த வுண்ணுகின்ற வண்டுகள் ஒலிக்கின்ற மாலையணிந்த' என்னும் பொருளில் **'தேம்'** எனும் சொல் 'இனிமை' என்னும் பண்பைக் குறித்தது. ''தேம் - இனிமை, நறுமணம், தேன், தேனீ, வண்டு, கள், ஈரம், மதம், நெய், இடம், நாடு, திக்கு''[10] என்று பொருள் தருகிறது திருமகள் அகராதி.

**''பேதை ஆசினி ஒசித்த'' (நற்:51:10)**

'அறியாமையால் ஆசினியை முறித்து மலருதிர்ந்து' என்னும் பொருளில் **'பேதை'** என்பது அறியாமைப் பண்பை உணர்த்தியது. இதே சொல் 144-ஆவது பாடலிலும் இடம்பெற்றுள்ளது.

**''ஆரரண் கடந்த மாரி வண்மகிழ்த்'' (நற்:190:2)**

'பகைவருடைய புகுதற்கரிய அரணங்களை வென்று கொண்ட மாரி போல் நின்ற கைவண்மையையும்' என்னும் பாடல் விளக்கத்தில் **'வண்'** என்ற ஈரெழுத்து ஒருமொழி வள்ளல்தன்மையைக் குறித்தது.

**''வாலா வேழம் வணர்குரல் கவர்தலின்'' (நற்:393:4)**

இப்பாடல் வரிக்கு, 'கரிய களிற்றியானை வளைந்த தினைக்கதிரை கொய்து கொண்டு போதலாலே' என்பது பொருள்படும். இதிலிருந்து **'வாலா'** என்னும் ஈரெழுத்து ஒருமொழி 'கருமை' என்னும் நிறப்பண்பைக் குறித்ததை அறியமுடிகிறது.

### தொழில் பெயர்

ஏதேனும் ஒரு தொழிலைக் குறிக்கும் சொற்கள் தொழிற்பெயர் எனப்படும். அல், தல் முதலிய விகுதிகளைப் பெற்று வரும். தொழிற்பெயராய் வரும் ஈரெழுத்து

ஒருமொழிகளும் நற்றிணைப் பாடல்களில் இடம்பெற்றுள்ளன.

'ஆடு' என்னும் சொல் வெற்றியைக் குறிக்கும் பொருளில் நற்றிணைப் பாடலில் இடம்பெற்றுள்ளது.

**"ஆடுகொள் நெஞ்சமொடு அதர்பார்த்து அல்கும்" (நற்:329:7)**

'தாம் வெற்றி கொள்ளும் கருத்துடனே நெறியைப் பார்த்து உறைகின்ற மலைவழியிலே சென்றாராயினும்' என்னும் பொருளில் **'ஆடு'** என்ற ஈரெழுத்து ஒருமொழி வெற்றி கொள்ளுதலைக் குறித்தது.

**'இறை'** என்னும் ஈரெழுத்து ஒருமொழி 'தங்குதல்' என்னும் தொழிற்பெயராய் நற்றிணைப் பாடலில் கையாளப்பட்டுள்ளது.

**"கருங்கோட்டுப் புன்னை இறைகொண் டனவே" (நற்:67:5)**

'கரிய கிளைகளையுடைய புன்னை மரங்களிலே தங்குதல் கொண்டன' என்னும் விளக்கத்தைப் பார்க்கும் பொழுது, 'இறை' என்ற பதம் தங்குதலைக் குறித்ததை அறியலாம்.

**'ஊழ்'** எனும் சொல் 'முறையாக தோன்றுதல்' என்னும் பொருளில் இடம்பெற்றுள்ளது.

**"மனைநடு மௌவலொடு ஊழ்முகை அவிழக்" (நற்:115:6)**

'முல்லை கூரை மேலாலே சென்று படர்ந்து அவ்விரண்டும் முறையே அரும்பவிழ்ந்து மலருமாறு இன்று நாட்காலை எதிர்போந்து கார்பருவம் செய்யலாகியது கண்டாய்' என்பது இப்பாடலின் பொருளாம்.

**"கொன்ற யானைச் செங்கோடு கழாஅ" (நற்:247:2)**

'யானையின் சிவந்த தந்தம் கழுவும்படி' என்னும் விளக்கத்தில் **'கழா'** என்னும் ஈரெழுத்து ஒருமொழி 'கழுவுதல்' எனும் தொழில்பெயராக வந்துள்ளது.

**"கடுந்தேர் ஏறியுங் காலின் சென்றும்" (நற்:349:1)**

'விரைந்த செலவினையுயை தேரிலேறிச் சென்றும் பின்பு காலால் நடந்து சென்றும் இவளுக்கு ஏவல் செய்து ஒழுகுபவனாகி' என்னும் பொருளில் **'கால்'** என்ற சொல் 'நடந்து செல்லல்' என்னும் பொருளைத் தந்துள்ளது.

**'கோள்'** எனும் பதம் 'குத்துதல்' எனும் பொருளில் இடம்பெற்றுள்ளது.

**"கருங்கால் குருகின் கோளுய்ந்து போகிய" (நற்:211:4)**

'குத்துக்குத் தப்பிப் பிழைத்தோடிய' எனும் பொருளில் இப்பாடல் வரி அமைந்துள்ளது.

**"செலீஇய சேறி யாயின் இவனே" (நற்:19:7)**

எனும் இப்பாடல் வரியில், 'நினது தேரைப் பாகன் செலுத்தலாலே நின்னூர்க்குச் செல்லும் பொருட்டுப் போகாநின்றனை யாதலால்' எனும் பொருளில், **'சேறி'** எனும் ஈரெழுத்து ஒருமொழி 'ஊரை நோக்கி செல்லுதல்' என்ற விளக்கத்தைத் தருவதை அறியமுடிகிறது.

**"முல்லை தாய கல்லதர்ச் சிறிநெறி" (நற்:343:1)**

இப்பாடல் வரியில், 'முல்லைக் கொடி படர்ந்த மலைவழி ஆகிய சிறிய நெறியைச் சாராது' எனும் பொருளில் **'தாய'** என்ற ஈரெழுத்து ஒருமொழி படர்தலைக் குறித்து வந்துள்ளது.

**"அந்துகில் தலையின் துடையினள் தப்புலந்து" (நற்:120:9)**

'அழகிய முன்றானையினுனியாலே துடைத்துக் கொண்டு' எனும் பொருள்விளக்கத்தில் **'துடை'** என்னும் பதம் துடைத்தலைக் குறித்து இடம்பெற்றுள்ளது.

**'பறை'** எனும் ஈரெழுத்து ஒருமொழி பறத்தலைக் குறிக்கும் பொருட்டு கையாளப்பட்டுள்ளது.

**"இறகு புடைத்து இற்ற பறைப்புன் தூவி" (நற்:329:5)**

‘முதிய பருந்து தன் சிறகை அடித்துக் கொள்ளுதலால் உதிர்ந்த பறத்தயையுடைய புல்லிய இறகை’ எனும் பொருளில் ‘பறை’ என்பது பறத்தலைக் குறித்ததை அறிய முடிகிறது.

**“வேர்பிணி வெதிரத்துக் கால்பொரு நரலிசை”**
**(நற்:62:1)**

‘வேர்கள் ஒன்றோடொன்று பிணிப்புண்ட மூங்கில்களிலே காற்று மோதுதலால் உண்டாகிய ஒலிக்கின்ற ஓசையானது’ என்ற பொருள் விளக்கத்தைப் பார்க்கும்போது, **‘பிணி’** என்ற ஈரெழுத்து ஒரு மொழி, ‘பின்னிப்பிணைதல்’ என்ற பொருளைத் தந்ததை அறியமுடிகிறது.

**“யாங்ஙனம் விடுமோ மற்றே மால்கொள”**
**(நற்:338:6)**

‘இவை போதாமல் இன்னும் காமமயக்கம் மீதூருமாறு துன்பத்தைச் செய்யும்’ என்னும் பொருளில் **‘மால்’** என்ற பதம் மயக்கமடைதலைக் குறித்தது.

**“பெருந்தோள் நெகிழ அவ்வரி வாடச்”**
**(நற்:358:1)**

‘முன்னொரு பொழுது நம்முடைய பெரிய தோள் தளர்வடைய அழகிய வரி வாட்டமுறச் சிறிய மெல்லிய கொங்கைகளிலே பெரிய பசலை பரவ’ எனும் பொருள் விளக்கத்தில் **‘வாட’** என்ற பதம் வாடுதலைக் குறிப்பிட்டது.

**“வினையிடை விலங்கல் போலும் புனைசுவர்ப்”**
**(நற்:252:6)**

‘காரியத்தின் கண்ணே குறுக்கிட்டுத் தடுத்த செய்தில போலும்” என்னும் விளக்கத்தில், **‘வினை’** என்பது செயல் ஆற்றுதலைக் குறித்து பயன்படுத்தப்பட்டுள்ளது.

## முடிவுரை

நற்றிணையில், பெயர்ச்சொற்களாய் வரும் ஈரெழுத்து ஒருமொழிகள் குறித்து ஆராயப்பட்டது. பொருட்களைக் குறிக்கும் பொருட்பெயராக, **ஆழி, எண், கணை, காசு, கிணை, கூழ், கோடு, கோல், தாழி, தூணி, நீறு,** ஆகிய ஈரெழுத்து ஒருமொழிகளும், இடங்களைக் குறிக்கும் இடப்பெயராக, **அடி, ஊர், கழி, குறி, சேறி, துறை, பாழ், புழை** போன்ற ஈரெழுத்து ஒருமொழிகளும், பண்புகளைக் குறிக்கும் பண்புப்பெயராக, **தேம், பேதை, வண், வாலா** போன்ற ஈரெழுத்து ஒருமொழிகளும், தொழிலைக் குறிக்கும் தொழிற்பெயராக, **ஆடு, இறை, ஊழ், கழா, கால், கோள், சேறி, தாய, துடை, பறை, பிணி, மாய், மால், யாழ், வாட, வினை** ஆகிய ஈரெழுத்து ஒருமொழிகளும் நற்றிணையில் புலவர்களால் எடுத்தாளப்பட்டுள்ளன என்பது இக்கட்டுரையில் கண்டறியப்பட்டுள்ளது.

## அடிக்குறிப்புகள்

1. சொ.சிங்காரவேலன் (உ.ஆ), தொல்காப்பியம் எளிய உரை, ப.14, ஞானவேல் பதிப்பகம், மயிலாடுதுறை, முதல் பதிப்பு 1988.
2. கழகத்தமிழ் அகராதி, ப.80, கழகப்புலவர் குழுவினர் (தொகுப்பு), திருநெல்வேலி தென்னிந்திய சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம் லிமிடெட், சென்னை, 101-ஆவது பதிப்பு 2017.
3. மேலது, ப.411
4. மேலது, ப.617
5. மேலது, ப.625
6. மேலது,ப.563
7. மேலது, ப.670
8. பவானந்தம்பிள்ளை.ச.,பவானந்தர் தமிழ்ச் சொல்லகராதி, ப.358, நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட், அம்பத்தூர், சென்னை, ஆறாம் பதிப்பு டிச.2014.
9. தொல்காப்பியம் - சொல்லதிகாரம், ப.180, இராமசுப்ரமணியம். வ.த., திருமகள் அகராதி, ப.601, திருமகள் நிலையம், தி.நகர், சென்னை, ஐந்தாம் பதிப்பு செப்டம்பர் 2012.

Vol. 7 Special Issue 2 March 2023 E-ISSN: 2456-5571

# புறநானூற்றில் அறிவியல் சிந்தனைகள்

**க. சிந்து**
உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை
ஸ்ரீ சாரதா மகளிர் கல்லூரி (தன்னாட்சி), அரியகுளம், திருநெல்வேலி

***ஆய்வுச் சுருக்கம்***
*சங்க இலக்கியங்கள் மக்களின் வாழ்வியல் நெறிகளை எடுத்துக் கூறுவதோடு மட்டும் அல்லாமல் அறிவியல் சார்ந்த பதிவுகளையும் உள்ளடக்கி அமைந்துள்ளன. அவற்றை நாம் அறிவியல் கண்ணோட்டத்தோடு அணுகுவதோ, பார்ப்பதோ இல்லை. நம்மவர்களில் பலர் வெறும் இலக்கியப் பார்வையோடு நின்று விடுகின்றனர். இலக்கியங்களில் உள்ள அறிவியல்தான் விஞ்ஞானிகளின் ஆய்வுக்கும் உறுதுணையாகின்றன. இன்றைய மக்கள், தம் வாழ்வியல் மேம்படவும், வளம் பெறவும், நலமுறவும், வசதிகள் எய்தவும், உதவக் கூடியது அறிவியலாகும். விஞ்ஞானம், புவியியல், இயற்பியல், வேதியியல், வானியல், உயிரியல், பயிரியல், மண்ணியல் முதலான பல துறைகளை உள்ளடக்கியது தான் அறிவியல். இவ்வாறான அறிவியல் உருவாக, வளர, மலர உலகின் பல விஞ்ஞானிகள் ஈடுபட்டுக் கொண்டிருக்கின்றனர் என்பது நாம் அனைவரும் அறிந்த உண்மையாகும். ஆனால் தமிழர்கள் பண்டைக் காலம் தொட்டே அறிவியல் அறிவு பெற்றிருந்ததை சங்க இலக்கியங்களான எட்டுத்தொகை மற்றும் பத்துப்பாட்டு நூல்கள் பதிவு செய்திருக்கின்றன. அவற்றில் எட்டுதொகை நூல்களில் ஒன்றான புறநானூற்றில் அறிவியல் சிந்தனைகள் அமைந்திருப்பதனை இக்கட்டுரையில் காணலாம்.*

**முன்னுரை**

தமிழர்கள் அறிவியல் துறையில் புலமை பெற்றிருந்தனர் என்பதற்கான சான்றுகள் பழந்தமிழ் இலக்கியங்களில் காணப்படுகின்றன. மேலை நாட்டார் கண்டறிந்த பல அறிவியல் உண்மைகளை அவர்களுக்கு முன்னரே நம் அருந்தமிழர் அறிந்திருந்தனர். தமிழ் நூல்கள் பலவற்றிலும் அறிவியல் செய்திகள் ஆங்காங்கே காணப்படுகிறது. அதிலும் புறநானூற்றில் இடம் பெறும் அறிவியல் சிந்தனைகள் அளப்பரியதாகும். அது குறித்த செய்திகளை வழங்குவதே இக்கட்டுரையின் நோக்கமாக அமைகின்றது.

**ஞாயிறு மண்டலம்**

வான்வெளியில் மிகப்பெரிய விண்மீன் ஞாயிறு, ஞாயிற்றைச் சுற்றியுள்ள பாதையை ஞாயிற்று வட்டம் என்று புறநானூறு குறிப்பிடுகிறது.

**“செஞ்ஞாயிற்றுச் செலவும் அஞ்ஞாயிற்றுப்**
**பரிப்பும் பரிப்புச் சூழ்ந்த மண்டிலமும்”**[1]

என்ற உறையூர் முதுகண்ணன் சாத்தனாரின் பாடல் வாயிலாக, சூரியன் செல்லும் வழியும், அச்சூரியனது இயக்கமும், சூரிய இயக்கத்தால் சூழப்பட்ட நில மண்டிலமும், அதன் இயக்கம் அக்கரமாய் நிற்கும் விண்வெளி மண்டலம் பற்றிய அறிவியல் உண்மைகளை அறிய முடிகிறது.

**காற்றில்லா மண்டிலம்**

பிறநாட்டு அறிவியலாளர்கள் அண்மை நூற்றாண்டுகளில் தான் காற்றின் அடிப்படையில் விண்மண்டலத்தைப் பிரித்தனர். அதில் காற்றில்லா மண்டிலமும் உள்ளதென கண்டறிந்தனர். ஆனால் ஈராயிரம் ஆண்டுகளுக்கு முன்பே விண்வெளியில் காற்றில்லாதப் பகுதியும் உள்ளது என்பதை புறநானூற்றுப் புலவர் வெள்ளைக்குடி நாகனார் உலகறியச் செய்துள்ளார்.

வரி விதிப்பை நீக்குவதற்கு அறிவுரை கூறும் புலவர் வெள்ளைக்குடி நாகனார், சோழன் குளமுற்றத்துத் துஞ்சிய கிள்ளி வளவன் என்னும் வேந்தனிடம் வரி விதிப்பை நீக்குமாறு வேண்டினார். அப்பொழுது அவர், பழந்தமிழ்நாட்டு எல்லையையும் மூவேந்தர்

சிறப்பையும் குறிப்பிடும் வகையில், கடல்களால் சூழப்பெற்று, காற்று வழங்காத வானத்தின் கீழ் உள்ள நிலத்தை ஆளும் மூவேந்தர் என்கிறார்.

**“நளிஇரு முந்நீர் ஏணி யாக,**
**வளியிடை வழங்கா வானம் சூடிய**
**மண்திணி கிடக்கைத் தண்தமிழ்க் கிழவர்”**[2]

என்னும் பாடலடிகளில் தான் புலவர், இவ்வாறு, காற்று பயன்பாட்டில் இல்லாத வான் மண்டிலத்தைக் குறிப்பிட்டுள்ளார்.

மார்க்கண்டேயனார் என்னும் மற்றொரு புலவர், இடம் விட்டு இடம் பெயரும் காற்று இல்லாத வானம் என்பதை,

**“மயங்குஇருங் கருவிய விசும்புமுக னாக**
**இயங்கிய இருசுடர் கண்எனப் பெயரிய**
**வளியிடைவழங்கா வழக்கரு நீத்தம்”**[3]

எனக் கூறுகிறார். வளிமண்டிலம் சூழ இருப்பது ஞாலம் ஆதலின் அதனைக்கடந்து நிற்கும் விசும்பை நீத்தம் என்றார் என நீத்தம் என்பதற்கான விளக்கத்தையும் அளிக்கிறார். எனவே, காற்று இல்லாத பகுதியை விசும்பு என அழைத்துள்ளனர் என்பதையும் காற்று நீங்கி இருத்தலால் நீத்தம் எனப் பெயர் பெற்றது என்பதையும் அறியலாம்.

விண்ணறிவியலிலும் காற்றறிவியலிலும் சிறந்திருந்த தமிழ் முன்னோர், உயரச் செல்லச் செல்லக் காற்றின் பயன்பாடு குறைந்து செல்வதை உணர்ந்திருந்தனர். இதனையே புறநானூற்றுப்பாடல்கள் நமக்குப் புலப்படுத்துகின்றன.

**காற்றறிவியல்**

காற்றின் சிறப்பு மற்றும் அதன் வலிமை குறித்தும் புறநானூற்றுப் பாடலில் புலவர்கள் எடுத்துக்கூறுவதனைக் காண முடிகின்றது. புலவர் மாங்குடி மருதனார், கப்பலை இயக்கும் ஆற்றலைக் காற்று பெற்றிருந்ததை,

**“வளிபுடைத்த கலம் போல”**[4]

என்னும் உவமையில் குறிப்பிடுகின்றார்.

புலவர் ஐயூர் முடவனார்,

**“வளிமிகின், வலியும் இல்லை”**[5]

எனக் காற்றுப் புயலாக மிகும் பொழுது அதன் வலிமையைத் தடுக்க இயலாது எனக் குறிப்பிடுகின்றார்.

புலவர் மதுரை மருதன் இளநாகனார்,

**“கடுவளி தொகுப்ப ஈண்டிய**
**வடுஆழ் எக்கர் மணலினும் பலவே!”**[6]

என மணலினும் பலவாக வாழுமாறு வாழ்த்தும் பொழுது, காற்று மணலைக் கொண்டுவந்து கொட்டும் அளவு வலிமையாகக் கடற்காற்று வீசுவதைக் குறிப்பிடுகின்றார்.

**விண்ணியல் விஞ்ஞானம்**

கடைச்சங்க காலத்தில் எழுந்த தமிழ் இலக்கியங்களில் உள்ள அறிவியல் சிந்தனைகள் போற்றக்கூடியதாக அமைந்துள்ளது. அதில், எட்டுத்தொகை நூல்களில் ஒன்றான புறநானூற்றில் விண்ணியல் விஞ்ஞானம் பேசப்படுவதனைக் காணலாம்.

**“செஞ்ஞா யிற்றுச் செலவும்**
**அஞ்ஞா யிற்றுப் பரிப்பும்,**
**பரிப்புச் சூழ்ந்த மண் டிலமும்,**
**வளி திரிதரு திசையும்,**
**வறிது நிலைஇய காயமும், என்றிவை**
**சென்றளந்து அறிந்தார் போல, என்றும்**
**இனைத்து என்போரும் உளரே, .. ..”**[7]

உறையூர் முதுகண்ணன் சாத்தனார் சூரியன் செல்லும் வழியும் அச்சூரியனின் இயக்கமும் அவ்வியக்கத்தால் சூழப்பட்ட மண்டிலமும் காற்று இயங்கும் திசையும், ஆதாரம் இன்றி நிற்கும் வானமும் ஆகியவற்றையெல்லாம் தாமே அவ்விடம் சென்று ஆராய்ந்து கண்டவரைப் போல அதன் இயல்புகளைக் கூறும் அறிவுடையோரும் இங்கு உளர் என்று விண்ணியல் விஞ்ஞானம் குறித்துப் பேசப்படுகிறது.

ஐம்பெரும் பூதங்களான நிலனையும், வானையும், காற்றையும், நெருப்பையும், நீரையும் உலகம் கொண்டுள்ளது என்று புறநானூற்று நூலில் முரஞ்சியூர் முடிநாகராயர் என்ற புலவர் சங்கப் பாடல் சமைத்துள்ளார்.

**“மண் திணிந்த நிலனும்,**
**நிலம் ஏந்திய விசும்பும்,**

**விசும்பு தைவரு வளியும்,**
**வளித் தலைஇய தீயும்,**
**தீ முரணிய நீரும் என்றாங்கு**
**ஐம்பெரும் பூதத்து இயற்கை ..”[8]**

இதில், மண் செறிந்த நிலமும், நிலத்திலிருந்து ஆகாயமும், ஆகாயத்திலிருந்து காற்றும், காற்றிலிருந்து நெருப்பும், நெருப்பிலிருந்து நீரும் உண்டாயின என்ற அறிவியல் பேசப்படுவதையும் காண்கின்றோம்.

பண்டைத் தமிழர்கள் நாள், கோள், நட்சத்திரங்கள், திசைகள் ஆகியவற்றை நன்கு அறிந்திருந்தனர் என்பதனை,

**“ஆடு இயல் அழல் குட்டத்து**
**ஆர் இருள் அரை இரவில்**
**முடப்பனையத்து வேர்முதலாக்**
**கடைக் குளத்துக் கயம்காயப்,**
**பங்குனி உயர் அழுவத்துத்,**
**தலை நாள்மீன் நிலைதிரிய,**
**நிலை நாள்மீன் அதன்எதிர் ஏர்தரத்,**
**தொல் நாள்மீன் துறையடியப்,**
**பாசிச் செல்லாது, ஊசித் துன்னாது,**
**அளர்க்கத்திணை விளக்காக, .. ..”[9]**

என்ற கூடலூர் கிழாரின் பாடல் வழி அறிய முடிகின்றது.

1. ஆடு - மேடராசி.
2. அழல் குட்டம் - கார்த்திகை நாள்
3. முடப்பனையத்து - முடப்பனை (ஆறு மீன்களின் தொகுதி) போன்ற அனுட நாள்.
4. தொன்னாண்மீன் - மிருகசீரிடம்
5. பாசி - கீழ்த்திசை.
6. ஊசி - வடதிசை.
7. அளக்கர்த் திணை - கடலாற் சூழப்பட்ட பூமி.

கடலாழமும், நிலப்பரப்பும், காற்றியங்கு திசையும், விரிந்த வானமும், செஞ்ஞாயிற்றின் வெம்மையும் ஆகிய விண்ணியல் பேசப்படுவதையும் புறநானூற்றில் காண்கின்றோம்.

**“இரு முந்நீர்க் குட்டமும்,**
**வியன் ஞாலத்து அகலமும்,**
**வளி வழங்கு திசையும்,**
**வறிதுநிலைஇய காயமும், .. ..**
**செஞ் ஞாயிற்றுத் தெறல் .. ..”[10]**

என்ற பாடல் வழி, குறுங்கோழியூர் கிழார் புறநானூற்றில் வெளிப்படுத்துகின்றார்.

சோழன் நலங்கிள்ளி ஆட்சியில், வானின்கண் செலுத்துபவன் இல்லாது தானே இயங்கும் வானவூர்தியில் அன்று சென்றனர் என்று உறையூர் முதுகண்ணன் சாத்தனார் என்ற புலவர் பாடல் யாத்தார் என்பதையும் புறநானூற்றில் இருந்து அறிகின்றோம்.

**“.. .. .. .. .. .. விசும்பின்**
**வலவன் ஏவா வான ஊர்தி**
**எய்துப, என்ப, .. .. ..”[11]**

சோழன் குளமுற்றத்துத் துஞ்சிய கிள்ளிவளவன் ஆட்சியில், தூங்கு எயில், இமயத்திலே பொறித்த விற்பொறி ஆகிய எந்திரங்களை மாறோக்கத்து நப்பசலையார் எனும் புலவர் பாடலில் அமைத்துப் பாடியுள்ளார். இப்பாடல்கள் வழி அன்றைய மக்கள் விஞ்ஞானத்துடன் வாழ்ந்தனர் என்பதும் தெளிவாகின்றது.

## முடிவுரை

தமிழர்கள் அறிவிலும், ஆழ்ந்த சிந்தனையிலும் பழங்காலம் தொட்டே சிறந்து விளங்கியுள்ளனர் என்பதை சங்க கால நூல்கள் உணர்த்துகின்றன. ஞாயிறு மண்டிலம், காற்றில்லா மண்டிலம், காற்றறிவியல், விண்ணியல் விஞ்ஞானம் போன்றவற்றில் சிறந்த அறிவியல் சிந்தனை உடையவர்கள் தமிழர்கள் என்பதனை புறநானூற்று வழி அறிந்து கொள்ள முடிந்தது.

## அடிக்குறிப்புகள்

1. புறநானூறு (மூலமும் உரையும்), அ.ப.பாலையன், ப.41, முதற்பதிப்பு-2008, சாரதா பதிப்பகம், ராயப்பேட்டை, சென்னை.
2. மேலது, ப.47
3. புறநானூறு (மூலமும் உரையும்) தொகுதி - 2, முனைவர் கு.வெ.பாலசுப்ரமணியன்,
4. ப.785, மூன்றாம் பதிப்பு - 2007, நியூ செஞ்சுரி புக் ஹவுஸ்(பி) லிட், அம்பத்தூர், சென்னை

5. புறநானூறு (மூலமும் உரையும்), ஞா. மாணிக்கவாசகன் (உ.ஆ), ப.48, உமா பதிப்பகம், சென்னை
6. மேலது, ப.87
7. புறநானூறு (மூலமும் உரையும்), அ.ப.பாலையன், ப.55, முதற்பதிப்பு-2008, சாரதா பதிப்பகம், ராயப்பேட்டை, சென்னை.
8. மேலது, ப.41
9. மேலது, ப.2
10. புறநானூறு (மூலமும் உரையும்) தொகுதி - 2, முனைவர் கு.வெ.பாலசுப்ரமணியன், ப.540, மூன்றாம் பதிப்பு - 2007, நியூ செஞ்சுரி புக் ஹவுஸ்(பி) லிட், அம்பத்தூர், சென்னை
11. புறநானூறு (மூலமும் உரையும்), ஞா.மாணிக்கவாசகன் (உ.ஆ), ப.35, உமா பதிப்பகம், சென்னை
12. மேலது, ப.49

# பாரதியாரின் பன்முகச் சிந்தனைகள்

**முனைவர் பா. நேருஜி**
உதவிப் பேராசிரியர்,தமிழ்த் துறை
செந்தமிழ்க் கல்லூரி, தமிழ் உயராய்வு மையம், மதுரை

மகாகவி பாரதி தன்னை ஒரு கவிஞனாகப் பாவித்துக் கொண்டு கவிதைகளால் வாழ்க்கையை நிரப்பியவர். தெய்வ பக்தியும் தேசபக்தியும் அவரின் வாழ்வையும் வாக்கையும் இயக்கிய இருபெரும் உணர்வுகள் ஆகும். பல்வேறு கோணங்களில் பாரதியை படைப்பாளர்கள் அடையாளப்படுத்தியுள்ளனர். பாரதியார் பத்திரிகைகளில் எழுதி நூலாக்கம் பெறாத கதை, கட்டுரை, கவிதைச் செல்வங்களைக் கண்டறிந்து பதிப்பித்து நூலாக்கம் செய்தவர் சீனி.விசுவநாதன். பாரதியை உலகிற்குக் கவிஞராக அறிமுகப்படுத்தியுள்ள அளவிற்கு, அவரை உரைநடை ஆசிரியராக, புனைகதை எழுத்தாளராக அவரை நாம் இன்னும் அறிமுகம் செய்யவில்லை இந்த ஆய்வுக் கட்டுரையில் பாரதியின் கவிதைகளை அடியொற்றி கருத்துக்களால் ஒரு தாயின் வயிற்றில் பிறந்தோர், மண்ணின் மைந்தர், மேலவர் கீழவர், அச்சம் தவிர், பெரிய கடவுள் காக்க வேண்டும், பெண்விடுதலை, தொழிலின் பெருமை, பிற உயிர்களிடத்து அன்பு, பாரதி ஒரு சகாப்தம் போன்ற கருத்துக்களின் அடிப்படையில் சமூகத்தில் பல்வேறு பிரச்சனைகளில் பாரதி சிந்தனை செலுத்தியவர் என்பதனை அறியமுடிகிறது. அவர் பாடாததுறை இல்லை, பாடுபடாத துறையும் இல்லை என்பர். பாரதியின் பன்முகச் சிந்தனைகளை, ஆளுமைத்திறனை என்று பல்வேறு கோணங்களில் உணர்ந்துவரும் நிலையில் ‘பாட்டுத் திறத்தாலே இவ்வையத்தைப் பாலித்திட வேணும் என்று கூறிய அவரது வரிகளில் கூற வேண்டுமெனில்,

**”யாமறிந்த புலவரிலே கம்பனைப்போல்**
**வள்ளுவர்போல் இளங்கோவைப்போல்”**

என்ற வரிகளுடன் பாரதியைப்போல் என்ற சொல்லையும் சேர்த்து பூமிதனில் யாங்கணுமே பிறந்ததில்லை உண்மை வெறும் புகழ்ச்சி இல்லை என்று கூறலாம். கம்பன், வள்ளுவன், இளங்கோ, பாரதி என வரிசைப்படுத்துதல் ஏற்புடையதாகும்.

### ஒரு தாயின் வயிற்றில் பிறந்தோர்

பாரதி வாழ்ந்த காலத்தில் இந்தியாவின் மக்கள்தொகை முப்பதுகோடி. வாழ்ந்த மக்களுள் அவர்களுக்குள் பேசிக்கொள்ளும் மொழிகளாக இருந்தவை பதினெட்டு. முப்பதுகோடி மக்கள் பதினெட்டு மொழிகள் பேசிடினும் ‘இந்தியா வேற்றுமையில் ஒற்றுமை உடைய நாடு’. சாதிகள் ஆயிரம் இருந்தாலும் அந்நியர் வந்து புகல் என்ன நீதி? தம்முள் சண்டை செய்தாலும் சகோதரர்கள்தான் என்கிறார். ஏனெனில் அனைவரும் பாரதத்தாய் என்ற ஒரு தாயின் வயிற்றில் பிறந்தோர் என்று பாரதி குறிப்பிடுகின்றார்.

**ஆயிரம் உண்டிங்கு ஜாதி – எனில்**
**அன்னியர் வந்து புகல் என்ன நீதி? – ஓர்**
**தாயின் வயிற்றில் பிறந்தோர் - தம்முள்**
**சண்டை செய்தாலும் சகோதரர் அன்றோ?**

என்றும், ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு, ஒற்றுமை நீங்கின் அனைவருக்கும் தாழ்வே என்றும் பாடியுள்ளார்.

### மண்ணின் மைந்தர்

பாரதநாடு எங்கள் தாய், தந்தை மற்றும் மூதாதையர்கள் எனப் பலரும் வாழ்ந்தநாடு.

அவர்களின் சிந்தனையில் ஆயிரம் எண்ணங்கள் தோன்றி வளர்ந்து சிறந்து விளங்கிய நாடு.

**எந்தையும் தாயும் மகிழ்ந்து குலாவி**
**இருந்ததும் இந்நாடே - அதன்**
**முந்தையர் ஆயிரம் ஆண்டுகள் வாழ்ந்து**
**முடித்ததும் இந்நாடே - அவர்**
**சிந்தையில் ஆயிரம் எண்ணம் வளர்ந்து**
**சிறந்ததும் இந்நாடே**

என்கிறார். தாய் வழிச் சமூகம் மாறி தந்தை வழிச் சமூகமான பிறகு மகனுக்கு உடைமைகள் என்ற நிலை வந்தது, இன்று மகளுக்கும் சொத்தில் பங்கு உண்டு என்ற நிலை உள்ளது. பாரதி,

**செந்தமிழ் நாடெனும் போதினிலே - இன்பத்**
**தேன்வந்து பாயுது காதினிலே - எங்கள்**
**தந்தையர் நாடெனும் பேச்சினிலே ஒரு**
**சக்தி பிறக்குது மூச்சினிலே**

இதில் தாங்கள்தான் இம்மண்ணின் மைந்தர்கள் என்றும் இது எங்கள் பரம்பரைச் சொத்து என்றும் ஆங்கிலேயர்களுக்கு எதிராக மக்களிடையே உணர்ச்சி விதை விதைத்தவர்.

### மேலவர் கீழவர்

பாரதியார் ஔவையார் குறிப்பிட்டுள்ள சாதி இரண்டொழிய வேறில்லை என்று சொல்லிய சொல்லை அமிழ்தம் என்பேன் என்கிறார். நீதி நெறியினின்று பிறர்க்கு உதவும் நேர்மையர் மேலவர் என்றும் மற்றோர் கீழவர் என்றும் குறிப்பிடுகிறார். மேலும் சாதியின் அடிப்படையில் ஏழை என்றும் அடிமை என்றும் எவரும் இல்லை என்றும் இழிவு கொண்ட மனிதரென்பது இந்தியாவில் இல்லையே என்றும் பாடுகிறார். சாதி, சமய சண்டைக்கு எதிராகப் போடா என்ற வசைமொழியைப் பயன்படுத்துகிறார்.

**ஜாதிச் சண்டை போச்சோ? — உங்கள்**
**சமயச் சண்டை போச்சோ?**
**நீதி சொல்ல வந்தாய்!**
**நிற்கொணாது போடா.**

என்கிறார். மேலும், சுதந்திர இந்தியாவைப் பற்றி பாரதி, நல்ல காலம் வருகுது, நல்ல காலம் வருகுது சாதிகள் சேருது சண்டைகள் தொலையுது, என்றும் சாதிகள் இல்லையடி பாப்பா - குலத், தாழ்ச்சி உயர்ச்சி சொல்லல் பாவம் என்றும் பாடியுள்ளார்.

### அச்சம் தவிர்

அடிமைப்பட்டிருந்த பாரத தேசத்தில் மக்களிடையே சுதந்திர உணர்வை ஏற்படுத்தத் தத்துவ ரீதியான உணர்ச்சிப் பாடலாக,

**அச்சமில்லை அச்சமில்லை அச்ச மென்பதில்லையே**
**இச்சகத்துளோரெலாம் எதிர்த்து நின்ற போதினும்**
**துச்சமாக எண்ணி நம்மைத் தூறு செய்த போதினும்**
**...... ...... ...... ....... ..........**
**உச்சிமீது வானிடிந்து வீழுகின்ற போதினும்**

அச்சம் தவிர் என்று பாடியுள்ளார்.

### பெரிய கடவுள் காக்க வேண்டும்

மகாகவி பாரதி பற்றி பாரதிதாசன் அவரின் பன்முகப் பெருமைகளைப் பல கோணத்தில் பதிமூன்று போற்றிகள்

1. பைந்தமிழ்த் தேர்ப்பாகன்
2. செந்தமிழ்த் தேனீ
3. சிந்துக்குத் தந்தை
4. குவிக்கும் கவிதைக் குயில்
5. பகை கவிழ்க்கும் கவிமுரசு
6. நீடுதுயில் நீக்கப் பாடி வந்த நிலா
7. காடு கமழும் கற்பூரச் சொற்கோ
8. கற்பனை ஊற்றாம் கதையின் புதையல்
9. படரும் சாதிப் படைக்கு மருந்து
10. அயலார் எதிர்ப்புக்கு அணையா விளக்கு
11. மண்டும் மதங்கள் அண்டா நெருப்பு
12. திறம் பாட வந்த மறவன்

13. புதிய அறம் பாட வந்த அறிஞன்

என்று வர்ணித்துவிட்டு, என்னென்று சொல்வேன் என்னென்று சொல்வேன் என்று வாழ்த்தி வணங்குகிறார். இவற்றை மெய்ப்பிக்கும் வகையில் பாரதியின்,

**மனதிலுறுதி வேண்டும் வாக்கினிலே இனிமை வேண்டும்**
**நினைவு நல்லது வேண்டும் நெருங்கின பொருள் கைப்பட வேண்டும்**
**கனவு மெய்ப்பட வேண்டும் கைவசமாவது விரைவில் வேண்டும்**
**தனமும் இன்பமும் வேண்டும் தரணியில் பெருமை வேண்டும்**
**கண்திறந்திட வேண்டும் காரியத்தில் உறுதி வேண்டும்**
**பெண் விடுதலை வேண்டும் பெரிய கடவுள் காக்க வேண்டும்**
**மண் பயனுற வேண்டும் வானகம் இங்கு தென்பட வேண்டும்**
**உண்மை நின்றிட வேண்டும்**

என்பதில் பெரிய கடவுள் காக்க வேண்டும் என்ற பாடலடி நோக்கத்தக்கதாகும். மேலும், காணிநிலம் வேண்டும் என்று பராசக்தியிடம் வேண்டும் பொழுது, காட்டு வெளியினிலே— அம்மா! நின்றன் காவலுற வேணும்- என்றன் பாட்டுத் திறத்தாலே - இவ்வையத்தைப் பாலித்திட வேணும் என்ற பாடலடிகள் மகாகவியின் உயர்ந்த கற்பனையை அடையாளப்படுத்துகிறது.

**பெண் விடுதலை**

பாரதத்தில் பெண் விடுதலை பற்றி பாடிய ஆண் கவிஞர்களுள் பாரதி போற்றத்தக்கவர் ஆவார்.

**மாதர் தம்மை இழிவு செய்யும்**
**மடமையைக் கொளுத்துவோம்**

என்கிறார். பெண்ணியச் சிந்தனையாகப் பெண்குழந்தைக்கு ஊட்டும் அறிவுரையில்,

**ஓடி விளையாடு பாப்பா நீ**
**ஓய்ந்திருக்க லாகாது பாப்பா**
**கூடி விளையாடு பாப்பா**
**ஒரு குழந்தையை வையாதே பாப்பா**
**பாதகஞ் செய்பவரைக் கண்டால் - நாம்**
**பயங்கொள்ள லாகாது பாப்பா!**
**மோதி மிதித்துவிடு பாப்பா – அவர்**
**முகத்தில் உமிழ்ந்துவிடு பாப்பா!**

என்கிறார். புதுமைப் பெண்ணைப் படைக்கும் பொழுது சற்றுக் கடுமையாகவே, ஆணும் பெண்ணும் நிகரெனக் கொள்வதால் அறிவிலோங்கி இவ்வையம் தழைக்குமாம் என்றும் நாணும் அச்சமும் நாய்கட்கு வேண்டுமாம் என்கிறார். மேலும், நிமிந்த நன்னடையும் நேர்கொண்ட பார்வையும் நிலத்தில் யார்க்கும் அஞ்சாத நெறிகளும் திமிர்ந்த ஞானச் செருக்கும் இருப்பதால் செம்மை மாதர் திறம்புவ தில்லையாம்! என்கிறார். பெண்கள் பற்றி தம் விடுதலைக் கும்மியில்,

**பட்டங்கள் ஆள்வதும் சட்டங்கள் செய்வதும்**
**பாரினில் பெண்கள் நடத்த வந்தோம்**
**எட்டுமறிவினில் ஆணுக்கிங்கே பெண்**
**இளைப்பில்லை காணென்று கும்மியடி...**
**ஏட்டையும் பெண்கள் தொடுவது தீமையென்**
**றெண்ணி யிருந்தவர் மாய்ந்து விட்டார்**
**வீட்டுக்குள்ளே பெண்ணைப் பூட்டிவைப்போம் என்ற**
**விந்தை மனிதர் தலைகவிழ்ந்தார்**

என்கிறார். கற்பு பற்றிய கோட்பாடு பற்றி பாரதி, கற்புநிலை என்று சொல்ல வந்தார் இரு கட்சிக்கும் அஃது பொதுவில் வைப்போம் என்றும் புதிய ஆத்திசூடியில் தையலை உயர்வு செய்ய வேண்டும் என்றும் வலியுறுத்திப் பாடியுள்ளார். இதற்கு வலிமை சேர்க்கும் வகையில் மனதில் உறுதி வேண்டும் என்ற திரையிசைப் பாடல், சாத்திரங்கள் பெண் இனத்தை மூடி மறைத்ததம்மா அந்த ஆத்திரத்தில் பாரதிக்கும் மீசை துடித்ததம்மா

என்ற வைரமுத்துவின் வைர வரிகள் மனங்கொள்ளத்தக்கது.

**தொழிலின் பெருமை**

உழவுத் தொழில் மற்றும் பிற தொழில்களின் உயர்வைக் கூறும் பாரதி முதலாளிகளின் சுரண்டலுக்கு எதிரான பதிவாக,

**உழவுக்கும் தொழிலுக்கும் வந்தனை செய்வோம் - வீணில்**
**உண்டு கழித்திருப்போரை நிந்தனை செய்வோம்**
**விழலுக்கு நீர்பாய்ச்சி மாயமாட்டோம் - வெறும்**
**வீணருக்கு உழைத்துடல் ஓயமாட்டோம்**

என்கிறார். மேலும், உலக மக்கள் யாவரும் ஓர் நிகர் என்கிறார். சமத்துவம் சகோதரத்துவம் பேசுகிறார். அனைத்து மக்களும் சமம் என்பதனை வலியுறுத்தி பாரதி,

**எல்லாரும் ஓர் குலம் எல்லோரும் ஓரினம்**
**எல்லாரும் இந்திய மக்கள்**
**எல்லாரும் ஓர் நிறை எல்லாரும் ஓர் விலை**
**எல்லாரும் இந்நாட்டு மன்னர் - ஆம்**
**எல்லாரும் இந்நாட்டு மன்னர்**

என்கிறார். புதியதோர் உலகம் படைப்போம் என்ற நிலையில், மனிதர் உணவை மனிதர் பறிக்கும் வழக்கம் இனியுண்டோ? மனிதர் நோக மனிதர் பார்க்கும் வாழ்க்கை இனியுண்டோ? இனியொரு விதிசெய்வோம் - அதை எந்த நாளும் காப்போம் தனி ஒரு மனிதனுக்கு உணவு இல்லை எனில் இச்ஜகத்திணை அழித்திடுவோம் என்கிறார். மேலும், மெல்லத் தமிழ் இனி சாகும் என்று அப்பொழுது ஒரு பேச்சு எழுந்தது. பேதையர் சிலர் அறியாமையினால் உரைத்தனர். பாரதி பொங்கி எழுந்தார்.

**புத்தம் புதிய கலைகள் - பஞ்ச**
**பூதச் செயல்களின் நுட்பங்கள் கூறும்**
**மெத்த வளருது மேற்கே - அந்த**
**மேன்மைக் கலைகள் தமிழினில் இல்லை**

என்றவுடன், சென்றிடுவீர் எட்டுத் திக்கும் - கலைச் செல்வங்கள் யாவும் கொணர்ந்திங்கு சேர்ப்பீர் என்கிறார்.

**பிற உயிர்களிடத்து அன்பு**

பாரதியார் வள்ளலாரைப் போல அனைத்து உயிர்களிடத்தும் அன்பு செலுத்தியவர். அனைத்து உயிர்களும் இன்புற்று வாழ வேண்டும் என்று தெய்வங்களை வணங்கியவர்..

**பேசாப் பொருளை பேச நான் துணிந்தேன்**
**கேட்கா வரத்தைக் கேட்க நான் துணிந்தேன்**
**மண்மீதுள்ள மக்கள், பறவைகள்**
**விலங்குகள், பூச்சிகள், புற்பூண்டு, மரங்கள்**
**யாவும் எம் வினையால் இடும்பை தீர்ந்தே**
**இன்பமுற்று அன்புடன் இணங்கி வாழ்ந்திடவே**
**செய்தல் வேண்டும், தேவ தேவா**

என்கிறார். களிப்பு (மகிழ்ச்சி) நிலையில் கூட பாரதி, காக்கை குருவியைத் தன் இனமாக,

**காக்கை குருவி எங்கள் ஜாதி – நீள்**
**கடலும் மலையும் எங்கள் கூட்டம்**
**நோக்கும் திசையெலாம் நாமன்றி வேறில்லை**
**நோக்க நோக்க களியாட்டம்**

என்று பாடியுள்ளார்.

**பாரதி ஒரு சகாப்தம்**

பாரதி தன்னைப் பற்றியதாக, நல்லதோர் வீணை செய்தே அதை நலங்கெடப் புழுதியில் எறிவதுண்டோ சொல்லடி சிவசக்தி எனை சுடர்மிகு அறிவுடன் படைத்துவிட்டாய் வல்லமை தாராயோ இந்த மாநிலம் பயனுற வாழ்வதற்கே என்ற பொதுநல நோக்குடையவர் ஆவார். தாய்நாடு என்ற பேச்சுவழக்கை மாற்றி தந்தையர் நாடு என்ற புதிய சிந்தனையை விதைத்தவர். சுதந்திர தாகம் கொண்டவர். தண்ணீர் விட்டோ வளர்த்தோம்?

சர்வேசா! இப்பயிரைக் கண்ணீராற் காத்தோம் கருகத் திருவுளமோ?, என்று தணியும் இந்தச் சுதந்திர தாகம்? என்று மடியும் எங்கள் அடிமையின் மோகம்?, எங்கும் சுதந்திரம் என்பதே பேச்சு - நாம் எல்லாரும் சமம் என்பது உறுதி யாச்சு என்கிறார். உண்மையான விடுதலை என்பது மனிதர் யாரும் ஒருநிகர் சமானமாக வாழ்வது, சாதி வேறுபாடும் தீண்டாமையும் ஒழிந்து சகோதர சமத்துவ நிலை காணவேண்டுவதும் என்கிறார். சுதந்திரம் அடைவதற்கு முன்பாகவே தீர்க்கத்தரிசியாக நின்று,

**ஆடுவோமே பள்ளு பாடுவோமே**
**ஆனந்த சுதந்திரம் அடைந்து விட்டோமென்று**
**ஆடுவோமே பள்ளு பாடுவோமே...**

என்று சுதந்திர பள்ளு பாடினார். சுதந்திர பாரதத்தில் தாம் படைக்க எண்ணிய சமுதாயத்தில் இளைஞர்கள் எப்படி இருக்க வேண்டும் என்பதனை,

**ஒளிபடைத்த கண்ணினாய் வா வா வா,**
**உறுதிகொண்ட நெஞ்சினாய் வா வா வா,**
**களிபடைத்த மொழியினாய் வா வா வா,**
**கடுமைகொண்ட தோளினாய் வா வா வா,**
**தெளிவுபெற்ற மதியினாய் வா வா வா,**
**சிறுமை கண்டு பொங்குவாய் வா வா வா,**
**எளிமை கண்டு இரங்குவாய் வா வா வா,**
**ஏறுபோல் நடையினாய் வா வா வா**

என்று சுதந்திர பாரதத்தை வாழ்த்துகிறார்.

## நிறைவுரை

மகாகவி பாரதி, அன்றைய காலத்தின் நிலையை, சேமமுற வேண்டுமெனில் தெருவெல்லாம் தமிழ் முழக்கம் செழிக்கச் செய்ய வேண்டும். மறைவாக நமக்குள்ளே பழங்கதைகள் சொல்வதிலோர் மகிமை இல்லை. திறமான புலமையெனில் வெளிநாட்டோர் அதை வணக்கம் செய்தல் வேண்டும் என்கிறார். தாய்மொழி கற்காதவரைப் பார்த்து வேறுவேறு பாஷைகள் கற்பாய் நீ வீட்டு வார்த்தை கற்கிலாய் போ போ போ, ஜாதி நூறு சொல்லுவாய் போ போ போ என்று அடிமை இந்தியாவை உருவகப்படுத்திப் பாடியுள்ளார். காலனையே, காலா உனை நான் சிறு புல்லென மதிக்கிறேன் என்றன் காலருகே வாடா சற்றே உனை மிதிக்கிறேன் என்கிறார். பாரதி நமக்குத் தொழில் கவிதை, நாட்டிற்கு உழைத்தல் இமைப்பொழுதும் சோராதிருத்தல் என்று தன்னை ஒரு பாவலனாகவே காட்டிக்கொள்கிறார். மகாகவி பாரதியார் யார்? என்பதற்கு அடையாளமாக,

**அக்கினிக் குஞ்சொன்று கண்டேன் - அதை**
**அங்கொரு காட்டிலோர் பொந்திடை வைத்தேன்**
**வெந்து தணிந்தது காடு – தழல்**
**வீரத்தில் குஞ்சென்றும் மூப்பென்றும் உண்டோ?**
**தத்தரிகிட தத்தரிகிட தித்தோம்**

என்று புரட்சிக் கனலாக அடையாளப் படுத்தப்பட்டு, தமிழால் பாரதி தகுதி பெற்றதும் தமிழ் பாரதியால் தகுதி பெற்றதும் ஈங்கு நினைவுகூர்ந்து போற்றத்தக்கது.

## அடிக்குறிப்புகள்

1. க.அருணாசலம், பாரதியார் சிந்தனைகள், சோமு புத்தக நிலையம், சென்னை, 1984.
2. குருசாமி, ம.ரா.போ (பதிப்பாசிரியர்), பாரதி பாடல்கள் ஆய்வுப் பதிப்பு, தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர், ஏப்ரல் 1987.
3. ர.சண்முகம், பாரதி கண்ட சமுதாயம், அறிவு நிலையம், திருவல்லிக்கேணி, சென்னை - 600 005, முதற்பதிப்பு 1982

# தண்ணீர்தேசம் நாவல் உணர்த்தும் அறிவியல் சிந்தனைகள்

**முனைவர் ஜெ. கோகிலா**
உதவிப்பேராசிரியர்
செந்தமிழ்க்கல்லூரி, மதுரை

செம்மொழி சிறப்போடு மேம்பட்டு விளங்குகின்ற மொழி தமிழ் மொழி. இம்மொழியினை அறிவியல் கண்கொண்டு நோக்க வேண்டும் என்பது இன்றைய தமிழ் ஆர்வலர்களின் கருத்தாகும். ஏன், எதற்கு, எப்படி, எவ்வாறு, எங்கே, எத்தனை போன்ற வினாக்களுக்கு விடை தருவதாக அறிவியல் துறை அமைந்துள்ளது. அவ்வகையில் தமிழ் இலக்கியங்களை அறிவியல் கருத்துகளோடு ஒப்பிட்டு பதிவு செய்திருப்பது சிறப்புக்குரியது.

வைரமுத்து அவர்கள் தமிழுக்கு செய்த தொண்டுதான் இந்த நாவல். அகத்தையும். அழகையும் மட்டும் பாடி வந்த தமிழரை அறிவியல் பக்கமும் திசை திருப்ப செய்த ஒரு சிறு முயற்சி தான் இந்த நாவல். சூழ்நிலைக்கு ஏற்ப தன்னை மாற்றிக் கொள்ளும் உயிரினங்கள் மட்டுமே நிலைத்து வாழும் என்பது பரிணாமத்தின் விதி. மொழியும் இதற்கு விதிவிலக்கல்ல. பண்பட்ட இலக்கியத்தால் வளர்ந்து வந்த தமிழ் விஞ்ஞான சிறகடித்து பறக்க வேண்டிய சூழலில் இயற்றமிழ், இசைத்தமிழ், நாடகத் தமிழுடன் விஞ்ஞானத்தமிழும் கைகோர்த்து நடக்க வேண்டியது காலத்தில் கட்டாயம் என்பதனை கருத்தில் கொண்டு வைரமுத்து அவர்களால் வெளியிடப்பட்ட நாவல் தான் தண்ணீர் தேசம்.

தண்ணீர் தேசம் கவிஞர் வைரமுத்து அவர்களால் எழுதப்பட்ட நாவலாகும். 1996 இல் தமிழ் வார இதழ் ஆனந்த விகடனில் 24 தொகுதிகளாக வெளிவந்த படைப்பாகும். இதில் கடல் தண்ணீர் மற்றும் உலகம் பற்றிய பல அறிவியல் உண்மைகள் எளிய கவிதை நடையில் விவரிக்கப்பட்டுள்ளது. கதைப்போக்கு சிதையாமலும், இலக்கிய உணர்ச்சி குறையாமலும் கதையின் போக்கினூடே கவிஞர் வைரமுத்து தனது தண்ணீர் தேசம் நூலில் மிகுதியான அறிவியல் கருத்துக்களை பதிவு செய்துள்ளார். இந்நாவல் தெரியாத புரியாத பல உலக உண்மைகளை தெரிவிக்கின்ற வகையில் அமையப் பெற்றுள்ளது. அவ்வகையில் இந்நாவலில் இடம்பெற்றுள்ள அறிவியல் கருத்துகளை எடுத்துரைப்பதே இக்கட்டுரையின் நோக்கமாக அமைகின்றது.

### தொல்காப்பியத்தில் அறிவியல் பாகுபாடு

இலக்கண நூலாகிய தொல்காப்பியம் இலக்கணத்தை அறிவியல் முறையில் நமக்கு அளித்ததோடு மட்டுமின்றி பல்வேறு வகையான பறவைகள் விலங்குகள் தாவரங்கள் போன்ற உயிரின வகைகளையும் விரிவாக எடுத்துக் கூறியுள்ளது

**‘‘ஒன்றறி வதுவே உற்றறி வதுவே**
**இரண்டறி வதுவே அதனோடு நாவே**
**நேரிதின் உணர்ந்தோர் நெறிப்படுத்தினரே**
**(தொல்-571)**

என்று தொல்காப்பியர் உலகில் உள்ள உயிரினங்களை நெறிப்படுத்தி கூறியுள்ளார். இதன் மூலம் தொல்காப்பியர் உயிரினங்களை அவற்றின் புலன் உணர்வு அடிப்படையில் ஆறு வகைகளாக பாகுபாடு செய்துள்ளார் என்பது தெளிவாகின்றது.

**உயிரினத் தோற்றம்**

மக்கள் உயிர் வாழ்வதற்கு உயிரினங்கள் இன்றியமையாதவை ஆகும். இத்தகைய உயிரினங்கள் மறுசுழற்சி என்ற முறையில் வாழ்ந்து வருகின்றன.

> **"முதல் உயிர் பிறந்தது மூன்றரை கோடி ஆண்டுகளுக்கு முன்புதான் குரங்கிலிருந்து மனிதன் குதித்தது 35 லட்சம் ஆண்டுகளுக்கு முன்புதான்." (த.தேசம்.ப.எ.117)**

என்று வைரமுத்து அவர்கள் உயிரின தோற்றம் குறித்து குறிப்பிடுகின்றார். மக்கள் உயிர் வாழ்வதற்கு உயிரினங்கள் இன்றியமையாதவை ஆகும். இத்தகைய உயிரினங்கள் மறுசுழற்சி என்ற முறையில் வாழ்ந்து வருகின்றன.

**கருவறையும் கடல் நீரும்**

கடல் நீரும், கடல் காற்றும் மனித உடல் வளர்ச்சிக்கு மிகவும் ஏற்ற மருத்துவ குணம் நிறைந்தவை ஆகும். மனித வாழ்க்கைக்கும், ஆரோக்கியத்திற்கும் உதவும் கடல் நீர் தாயின் கருவறையோடு தொடர்புடையது என கருதுகின்றனர். அவ்வகையில்,

> **"கடலில் பிறந்த முதல் உயிர்**
> **தண்ணீரில் தானே சுவாசித்து இருக்க முடியும்**
> **அந்த மரபுரிமையின் தொடர்ச்சியில் தான் இன்றும்**
> **கர்ப்பத்தில் வளரும் சிசு**
> **தண்ணீர் குடத்தில் சுவாசிக்கிறது"**
> **(த.தேசம்.ப.எ.7)**

என்று வைரமுத்து அவர்கள் கடல் நீரையும், தாயின் கருவறையில் உள்ள தண்ணீர் குடத்தையும் ஒப்புமைப்படுத்தி கூறியுள்ள விதம் அருமை.

**உயிரினங்களின் இயல்புகள்**

உயிரியியலிலும், சூழ்நிலையியல் அல்லது இயற்கை அறிவியலிலும் (Ecology), ஓர் உயிரினம் என்பது நிலம், நீர், காற்றில் காணப்படும் உயிர் வாழும் பண்புடைய அனைத்து வகை நுண்ணுயிர்கள், தாவரங்கள், பூச்சிகள், விலங்குகள் போன்றவற்றைக் குறிக்கும். வாழும் உயிர்த் தொகுதிகளனைத்தும் உயிரினங்களாகும்.

> **"மழைத்துளிகளை உண்டு வாழுமாமே சாதகப் பட்சிகள்" (த.தேசம்.ப.எ.168)**

என சாதகப் பட்சிகள் உண்ணும் உணவு குறித்து எடுத்துரைக்கிறார் வைரமுத்து. உயிரினங்களின் உடல் அமைப்பிற்கு ஏற்றவாறு அவற்றின் பழக்கவழக்கங்களும் அமைகின்றன. இவற்றையே அவ்வுயிர் இனங்களில் இயல்பு எனக் கூறுவது மிகவும் பொருத்தமானதாக இருக்கும். வாழும் தன்மைக்கு ஏற்ப உயிரினங்கள் சில அற்புத இயல்புகளை பெற்று வாழ்கின்றன.

> **"சூரியக்கதிர் இருக்கிறதே இது 350 அடி ஆழம் வரை தான் தண்ணீர் துளைக்கும் தண்ணீர் தெளிவதற்குள் தப்பித்தோடி விடும் (த.தேசம்.ப.எ.134)**

என்று வைரமுத்து அவர்கள் உயிரினங்களின் உடல் அமைப்பு அவை வாழும் வாழ்க்கை முறைகளை தீர்மானிப்பது எப்படி என்பதனை வெளிப்படுத்துகின்றார். உயிரினங்களின் இத்தகைய சிறப்பு இயல்புகள் நாம் அறிய முற்படுகையில் அவை நம்மை வியப்பில் ஆழ்த்துகின்றன.

**பூமியின் அனுபவமும் இயக்கமும்**

நாம் வாழ்கின்ற பூமியை பற்றி பல்வேறு அறிஞர்கள் தங்கள் கருத்துகளை வெளிப்படுத்தியுள்ளனர். அக்கருத்துகள் பூமியைப் பற்றி ஒவ்வொருவரும் தெரிந்து கொள்ளக்கூடிய உண்மைகளை வெளிக்காட்டுவதாக அமைந்துள்ளது.

> **"தன்னை திருப்பி போடுவதன் மூலம் தான்**
> **பூமி சூரியனிடம் அனுபவம் பெறுகிறது.**

**வசந்தம் - கோடை - மழை - குளிர் - வெயில் - புயல்**
**என்ற அனுபவங்கள் இல்லையேல்**
**எப்போதோ பூமி இறந்து போயிருக்கும்" (த.தேசம்.ப.எ.31)**

என்று கவிஞர் பூமியின் அனுபவங்கள் பூமியின் இயக்கத்திற்கு மிகவும் இன்றியமையாததாக இருக்கின்றது என்று குறிப்பிடுகின்றார்.

## மனிதனும் நீரும்

"மனித குலம் பயன்படுத்துவதெல்லாம் மிச்சமுள்ள 1 சதத்தை தான் அய்யோ! அந்த 1 சதமும் தீர்ந்து விட்டால் .......? தீராது தண்ணீர் பூமிக்கு வெளியே போய் விட முடியாது. ஒவ்வொரு மனிதனும் பருகுவது பயன்படுத்தப்பட்ட பழைய தண்ணீரைத் தான்" (த.தேசம்.ப.எ.44)

இதன் மூலம் மனித குலம் பயன்படுத்தும் ஒரு சதம் நீரும் தீர்ந்துவிட்டால் உயிரினங்களின் நிலை என்ன ஆகுமோ? என நாம் பயப்பட வேண்டாம். ஏனெனில் மனித குலம் பயன்படுத்தும் நீர் பூமிக்கு வெளியே போய் விட முடியாது. உலகில் உள்ள ஒவ்வொரு உயிரினமும் பருகுவது பயன்படுத்தப்பட்ட பழைய நீரைத் தான் என்ற மறுக்க முடியாத அறிவியல் உண்மையை வைரமுத்து அவர்கள் எடுத்துரைத்துள்ள விதம் சிறப்புக்குரியது.

## நிலவு

பூமியிலிருந்து பிரிந்த ஒரு பகுதி தான் நிலா என்று ஆராய்ச்சியாளர்கள் பல்வேறு ஆய்வு ஆதாரங்களை தொகுத்து அளித்துள்ளனர் எனவே இதன் மூலம் பூமியிலிருந்து தோன்றிய ஒரு பகுதி நிலா என்பது மறுக்க முடியாத ஒன்றாகின்றது.

**"பௌர்ணமி பார்த்தால் கடல் பொங்குகிறது அது ஏன்?"**
**"பிரிந்து போன மகளைப் பார்த்தால் பெற்ற தாய்**
**பொங்க மாட்டாளா?" (த.தேசம்.ப.எ.180)**

என்று வைரமுத்து நிலவின் தோற்றம் குறித்து குறிப்பிட்டுள்ளது உற்று நோக்கத்தக்கது.

## புயலின் இரு குணங்கள்

புயலின் செயலினை வீரத்திற்கும், வேகத்திற்கும் இலக்கியங்கள் சுட்டுகின்றன. ஆங்கிலத்தில் வெவ்வேறு பெயர்களால் புயல்கள் அழைக்கப்பட்டாலும் தமிழ் மொழியில் அதன் வன்மையும், மென்மையும் எடுத்தாளப்பட்டுள்ள விதம் தனிச்சிறப்புக்குரியது

## புயலின் குணங்கள்

1. பூமத்திய ரேகையிலிருந்து கீழ்நோக்கி வலப்புறம் சுற்றுவது.
2. பூமத்திய ரேகையில் இருந்து மேல் நோக்கி இடப்புறம் சுற்றுவது (த.தேசம்.ப.எ.274)

என்று புயலின் இரு குணங்களை தண்ணீர் தேசம் கதையில் கடலுக்குள் சென்ற காதலர்கள் புயலில் சிக்கித் தவிக்கும் நிகழ்வை அறிவியலின் கண் கொண்டு வைரமுத்து அவர்கள் அழகுற எடுத்துரைத்துள்ளார். மிகப்பெரிய அளவில் புயல் வீசும் பொழுது புயலின் வடிவம் கண்ணுக்குப் புலப்படும் படியாக அமைகின்றது. கூம்பு வடிவ அமைப்பை பெற்றுள்ள சுழலானது கீழ்நோக்கி சுழலுவதாகவோ அல்லது மேல் நோக்கி சுழலுவதாகவோ காணப் பெறுகின்றது.

**"பூமியின் வெப்ப காற்றை உள்வாங்கி,**
**அதை பூமிக்கு மேலே அனுப்புவது புயல்தான்.**
**50 கோடி லிட்டர் தண்ணீரை உறிஞ்சிக் கொண்டோடி வந்து பூமியில் ஊற்றுவது அதுதான்"(த.தேசம்.ப.எ.274)**

பூமியின் வெப்பத்தை மாற்ற புயலானது வெப்ப காற்றை எல்லாம் உள்வாங்கி பூமிக்கு மேலே அனுப்புகிறது என வைரமுத்து குறிப்பிடுகின்றார்.

இவ்வாறாக நுட்பமான பல அறிவியல் கருத்துகளை வைரமுத்து அவர்கள் தனது தண்ணீர் தேசம் நாவலில் கதையின் போக்கிற்கு எவ்விதமான இடையூறும் நேராமல் மிக அழகாக வெளிப்படுத்தியுள்ளார் என்பதனை அறிய முடிகின்றது. தமிழ் மக்களின் அறிவியல் அறிவினை மேலும் விரிவு படுத்துவதாக அவரது கருத்துகள் அமைந்துள்ளன. அறியாமை இருளில் இருக்கும் மக்களை மாற்றி அவர்களுக்கு அறிவியல் வெளிச்சத்தை பாய்ச்சுகின்ற அரிய பணியினை வைரமுத்து அவர்கள் தமது தண்ணீர் தேசத்தின் வாயிலாக மேற்கொண்டுள்ளார். வைரமுத்து அவர்களின் அறிவியல் நூல்களின் அறிவும் அதனை இலக்கியத்தில் எடுத்துரைக்கும் பாங்கும் சிந்திக்க தகுந்ததாக அமைந்துள்ளது என்பதில் எவ்வித சந்தேகமும் இல்லை.

Vol. 7 Special Issue 2 March 2023 E-ISSN: 2456-5571

# சிலப்பதிகாரம் புகார்க்காண்டத்தில் அறிவியல் சிந்தனைகள்

**முனைவர் மா. செல்வத்தரசி**
உதவிப் பேராசிரியர்
செந்தமிழ்க் கல்லூரி, மதுரை

***ஆய்வுச் சுருக்கம்***

*இலக்கியம் படைத்த தமிழறிஞர்கள் தமிழோடு இணைந்த அறிவியல் பிரிக்க முடியாத ஒன்று என்பதனை விளக்கியுள்ளனர். ஒரு காட்சி என்பது அறிவியலும் தமிழும் இணைந்ததாகும். காட்சி சிறக்க தமிழ் கருத்துக்கள் முக்கியம், அதே கருத்தைப் பிரதிபலிக்கும், இயக்கும் கருவி அறிவியல். மக்களைப் பாட சிலப்பதிகாரம் படைக்கப் பட்டிருப்பினும் தமிழ்ச் சிந்தனை நீரோட்டத்தில் அறிவியல் உயர்ந்து விளங்குகிறது. சிலப்பதிகாரம் அன்றைய மக்களின் வாழ்வியலைச் சுட்டினும், புகார்க்காண்டத்தில் அறிவியல் கருத்துக்கள் நிறைந்து காணப்படுகின்றன. கட்டிடக்கலை, கப்பல் போக்குவரத்து வாணிபம், வானியல் செய்திகள், இசைக் கருவிகள், அணிகலன்கள் என்று அறிவியல் கருத்துக்கள் இழையோடிக் காணப்படுகிறது. அதனையே எடுத்துரைப்பதாகவும் கட்டுரையானது அமைகிறது.*

## முன்னுரை

காப்பிய இலக்கியம் மன்னரையும் சாதாரண மனிதனையும் பாட எழுந்தவையாகும். அறம், பொருள், இன்பம், வீடுபேறு எனும் உறுதிப் பொருள்களை கொண்டிலங்குபவை பெருங்காப்பியங்கள் எனப்பட்டன. அவற்றுள் இரட்டைக் காப்பியங்களுள் ஒன்றான சிலப்பதிகாரம் புகார்க் காண்டத்தில் அறிவியல் கருத்துக்கள் மிகுந்துள்ளன. சிலப்பதிகாரம் படைத்த இளங்கோவடிகள் இயற்கையோடு மக்களை இயைபுபடுத்தி காட்டியிருப்பினும், மானுட வாழ்வையும் அறிவியல் கருத்துக்களையும் பின்னிப் பிணைத்திருக்கிறார். இப்பகுதியில் தமிழோடு இயைந்து கருத்து நிலையில் உயர்ந்து விளங்குகிறது அறிவியல். அத்தகையதொரு நிலையினை இக்கட்டுரை முன் வைப்பதாக அமைகிறது.

## சிலப்பதிகார காப்பிய இலக்கியம்

பாட்டிடை இட்ட செய்யுள் சிலம்பாகும். சேர சோழ பாண்டிய மன்னர்களின் செயலினை அடிப்படையாகவும் மனித வாழ்வில் அறங்களை மையமிட்டவையாகவும் விளங்குகிறது.

> **"அரசியல் பிழைத்தோர்க்கு அறம் கூற்று ஆவதூஉம்**
> **உரைசால் பத்தினிக்கு உயர்ந்தோர் ஏத்தலும்**
> **ஊழ்வினை உருத்து வந்து ஊட்டும் என்பதூஉம்"**

என்ற முப்பொருள் உண்மையினைக் கொண்டது இக்காப்பிய இலக்கியம். மனித வாழ்வில் அறம், பொருள், இன்பம், வீடுபேறு என்ற கருத்துக்களைக் கொண்டதால் இக் காப்பியத்தை பெருங்காப்பியம் எனப்படுகிறது. எக்காலத்தும் வாழும் மனிதர்களுக்கு அறத்தை வலியுறுத்துவதாக அமைகிறது. எனவே சிலம்பில் புகார்க்காண்டத்தில் அறியலாகும் அறிவியல் கருத்துக்களை எடுத்துரைப்பதனை நோக்கமாகக் கொண்டு கட்டுரை அமையலாகிறது.

## அறிவியலும் இயற்கையும்

அறிவியல் (Science) என்பது 'அறிந்து கொள்ளுதல்' எனப்படும். Scientia எனும் இலத்தீன் சொல்லில் இருந்து பெறப்பட்ட சொல்லாகும். அறிவியல் என்பது நிறுவ முடிந்த விளக்கங்கள் என்றும் அறிவை

ஒருங்கமைத்து உருவாக்கும் முறையான நிறுவனம் ஆகும். அறிவியல் எனப்படும் ஒவ்வொரு கூறும் சிலப்பதிகார புகார்க் காண்டத்தில் காணப்படுகின்றன.

இயற்கைப் பொருளாக மனிதர்கள் திங்களையும், ஞாயிற்றையும், மழையையும் போற்றி இருக்கின்றனர். நிலவானது இரவு நேரத்தில் ஒளிதரக்கூடிய ஒன்றாக குளிர்ச்சி மிகுந்ததாக இருக்கிறது. நிலவின் ஒளியை அறிவியல் பொருளாகக் கொள்கின்றோம். சூரியனில் இருந்து வரும் ஒளிக்கதிர்களானது உயிரினங்கள் வளர்வதற்கு உதவுகிறது. சூரிய ஒளியிலிருந்து மனிதர்களுக்கு விட்டமின் 'D' (Vitamin D) என்னும் உயிர்ச்சத்துக் கிடைக்கிறது. மழை மண்ணில் உயிர்கள் வாழ்வதற்கு உதவுகிறது. மழை என்பது அறிவியல் சுழற்சி உடையது. க.பலராமன் என்பார்,

> **"தண்ணீர் சுழற்சி என்பது இயற்கையாக நிகழக்கூடிய ஒன்றுதான். இருப்பினும் இந்நீர்ச் சுழற்சி நிகழ்ந்து கொண்டே இருக்கவேண்டும். நீர்ச்சுழற்சியினை ஆங்கிலத்தில் Hydrological cycle (ஹைட்ரோலாஜிகல் சைக்கிள்) என்பார்கள்"**[1]

என்கிறார். மழை நீர் சென்று சேரும் இடம் கடலாகவும், கடலிலிருந்து மீண்டும் ஆவியாகி மேகமாகக் கருக்கொள்கிறது; குளிர்ந்த காற்றுப்பட்டதும் மீண்டும் மழையாகப் பொழிகிறது. மனித உயிர்களுக்கு நன்மை பயக்கும் இயற்கையான இவ் அறிவியலை மனிதர்கள் வணங்கியதாக புகார்க் காண்டம் குறிப்பிடுகிறது. அந்திமாலை சிறப்புச்செய் காதையில்,

> **"விரி கதிர் பரப்பி உலகம் முழுது ஆண்ட**
> **ஒரு தனித் திகிரி உரவோன் காணேன்**
> **அம் கண் வானத்து அணி நிலா விரிக்கும்**
> **திங்கள் அம் செல்வன் யாண்டு உளன் கொல் எனத்**
> **திசை முகம் பசந்து செம்மலர்க் கண்கள்"**
> (1-5)

சூரியனும், நிலவும், திசைகளும் என்று இயற்கையாக இடம்பெற்றுள்ள ஒவ்வொரு வரிகளிலும் அறிவியல் சிந்தனைகள் மிகுந்து காணப்படுகின்றன.

**கடல் வாணிபத்தில் அறிவியல்**

காட்டுமிராண்டி வாழ்விலிருந்து விடுபட்ட மனிதர்கள் வேட்டை, வேளாண் என்று தொழில் செய்து வாழ்ந்து வந்திருக்கின்றனர். அதன் தொடர்ச்சியாக வாணிபத் தினை மேற்கொண்டுள்ளனர். புகார் நகர் வாணிபத் தலமாக விளங்கியிருக்கிறது. பல நாடுகளுக்கும் சென்று பொருளீட்டியும் வந்திருக்கின்றனர். பல நாடுகளில் இருந்து வந்த பொருட்கள் புகாரில் குவிந்து கிடந்திருக்கின்றன. இத்தகையதொரு வாணிபத்தை கலம், (கப்பல்) போன்ற அறிவியல் சாதனங்களைப் பயன்படுத்தி இருக்கின்றனர். புகாரில் மனை அறம் படுத்த காதையில்,

> **"கலத்தினும் காலினும் தருவனர் ஈட்ட குலத்தில் குன்றாக் கொழுங்குடிச் செல்வர்"** (7-8)

என்ற செய்தி அறியப்படுகிறது. இவ்வாறு புகாரில் வணிகர்கள் வாணிபத்தின் மூலம் குலப்பெருமை குன்றாது வாழ்ந்துள்ளனர்.

**புகாரில் கட்டிடக்கலை**

மலைகளிலும் காடுகளிலும் வாழ்ந்து திரிந்த மனிதர்கள் தமக்கென்று இல் (வீடு) கட்டி வாழ முற்பட்டனர். அத்தகையதொரு நிலையில் அறிவியல் துறை சார்ந்த கட்டிடக் கலையின் வளர்ச்சியை புகார்க் காண்டத்தில் அறியமுடிகிறது. மாத்தளை சோமு என்பார்,

> **"தமிழரின் மூதாதையர்களான திராவிடப் பழங்குடி மக்கள் கட்டிப் போற்றிய, நாடு நகர அமைப்புகள், சிந்துவெளியில் சீரும்**

**சிறப்பும் பெற்றுத் திகழ்வதைக் காணுகிறோம். கி.மு.3000 அளவிலே அமைக்கப்பட்ட மொகஞ்சதாரோ ஹரப்பா நகரங்களின் கட்டடங்களும், மாளிகைகளும், மண்டபங்களும் தெப்பக்குளங்களும் திராவிடக் கட்டடக்கலையின் பாணியில் உருவானவை என சர் ஜோன் மார்ஷன்,ஈராசுப் பாதிரியார் முதலிய அறிஞர்களின் கருத்தாகும்''**[2]

என்கிறார். சிலப்பதிகாரம் புகார்க் காண்டம் புகாரின் நகர அமைப்புகள், இல்லத்தின் அமைப்புகள், அரங்கத்தின் அமைப்புகள் போன்றவற்றை எடுத்துரைத்துள்ளன. கோவலன் திருமணத்திற்குப் பின் கண்ணகியோடு மாளிகையிலம் அதாவது ஏழடுக்கு மாளிகையில் கோவலன் வாழ்ந்த குறிப்புகள் உள்ளன. அரங்கேற்று காதையில்,

**''எண்ணிய நூலோர் இயல்பினில் வழா அது,**
**மண்ணகம் ஒருவழி வகுத்தனர் கொண்டு**
**புண்ணிய நெடுவரைப் போகிய நெடுங்கழைக்**
**கண்ணிடை ஒருசாண் வளர்ந்தது கொண்டு**
**நூல் நெறி மரபின் அரங்கம் அளக்கும்**
**கோல் அளவு இருபத்து நால் விரலாக**
**எழு கோல் அகலத்து எண் கோல் நீளத்து''**
**(95-101)**

என்கிறது. நடன மாதான மாதவி தன் நாட்டியத்தை அரங்கேற்ற ஆடல் அரங்கம் சிறப்பாக அமைக்கப்பட்டிருக்கிறது. அளவைகளுக்கு முதலில் கைவிரல்களை கோலாகப் பயன்படுத்தி உள்ளனர். நீள அகலத்தினைக் கணக்கில் கொண்டு மேடையினை அமைத்திருக்கின்றனர். உள்ளே வெளியே சென்று வருவதற்கென தனித்தனி வாயில்கள் அமைக்கப்பட்டிருக்கின்றன. அரங்கில் நிறுத்தியுள்ள தூண்களின் நிழல் அரங்கினுள் விழாதபடி, ஏற்ற இடங்களில் விளக்குகளை ஏற்றி வைத்திருக்கின்றனர். ஒருமுகத் திரைச்சீலையும் பொருமுக திரைச்சீலையும் மேல்கட்டுத் திரைச் சீலையாகக் கரந்து வரல் எழினியும் பொருத்தமாக அமைத்திருக்கின்றனர்.

சுவர்களில் சித்திர வேலைப்பாடமைந்த சித்திரங்களை வரைந்து வைத்திருக்கின்றனர். சித்திரங்கள் ஓவியங்கள் எனப்பட்டன. மாத்தளை சோமு என்பார்,

**''ஒரு ஓவியம் பார்த்த மாத்திரத்திலேயே பார்ப்பவர் மனதைத் திருடிக் கொண்டால் அது மிகச்சிறந்த ஓவியமாகும்''**[3]

என்கிறார். மாதவி ஆடுவதற்கு அமைக்கப்பட்ட மேல் விதானத்தில் சித்திர வேலைப்பாடமைந்து காணப்படுகிறது. இவ்வாறு அமைக்கப்பட்ட அரங்கு எண் கணிதம் நிறைந்துள்ளது. ஓரொற்று வாரம்,ஈரொற்று வாரம், ஒரு தாளத்திற்கு, இரு தாளத்திற்கு என்று கணித அமைப்பினைக் கொண்டிருந்திருக்கிறது. பழந்தமிழர்களிடம் அளவை முறைகள் இருந்தமையால் வணிகத்தை கடல் கடந்து கொண்டு சென்றிருக்கின்றனர். புகாரில் மேல்மாடங்கள், சாளரங்கள் அமைப்புடன் கூடியதாக இல்லங்கள் அமைக்கப்பட்டிருக்கின்றன. இன்றைய பொறியியல் துறையின் கட்டட அமைப்பு என்பது விண்ணைத் தொடும் அளவிற்கு உயர்ந்து விளங்குகிறது. புகாரில் கட்டடத்துறை என்ற அறிவியல் முறையுடனும் கணித அமைப்புடனும் இடம்பெற்றிருக்கின்றன என்பதை அறியமுடிகிறது.

**வானியல் அறிவியல்**

விண்ணும் மண்ணும் மனித வாழ்வில் அறிவியலாக இடம்பெற்றுள்ளமை அறிய முடிகிறது. விண்ணிலிருக்கும் கதிரவனையும் நிலவையும் இணைத்து கிழமையாக்கியுள்ளனர். ஞாயிறு, திங்கள், செவ்வாய், புதன், வியாழன், வெள்ளி, சனி என்று வாழ்வியலோடு இணைத்துள்ளனர். புகார்க் காண்டத்தில் கண்ணகியின் கணவன் துருவ நட்சத்திரமாக விளங்கியிருக்கிறான். நட்சத்திரம் என்பது

ஒளியுடையதாகும். கோவலன் கண்ணகியின் திருமணம்,

**"வான் ஊர் மதியம் சகடு அணைய வானத்துச்**
**சாலி ஒருமீன் தகையாளைக் கோவலன்"** (50-51)

வானத்து மதியும் உரோகிணி நட்சத்திரத்தைச் சேர்ந்த நல்ல வேளையில் அருந்ததி போலும் சிறப்புடைய பெண்ணை மணந்தான் என்கிறது மங்கல வாழ்த்துக் காதை. நாளங்காடி விழாவில் சித்திரை நட்சத்திரம் இடம் பெற்றுள்ளது. நட்சத்திரங்களின் தலைவன் சந்திரன் என்பதும் குறிப்பிடப்பட்டுள்ளது. நடப்பியலில் இருபத்தேழு நட்சத்திரங்களும் பனிரெண்டு ராசிகளும் மனித வாழ்வியலோடு இணைந்துள்ளதும் குறிப்பிடத்தக்கதாகும்.

**இசைக் கருவிகள்**

ஆதிமனித வாழ்க்கை நாடோடி வாழ்க்கை எனலாம். அத்தகைய வாழ்க்கைக்கு முன்பே மழை, இடி, நீர், மர அசைவு, பறவை ஒலி, மிருகங்களின் ஒலி போன்றவற்றைக் கேட்டனர். பின்பு அதனையே தன்னுடைய மனதிற்கு இதமாகக் கண்டனர். அவற்றை ஓசையெனும் இசையாக்கிக் கொள்ள முற்பட்டனர். அதன் மூலம் இசைக் கருவிகள் பிறந்தன. இசை என்பது தமிழரின் உணர்வோடு கலந்துவிட்ட ஒன்றாகும். இசைக்கு மயங்காத மனமும் இல்லை எனும் அளவிற்கு விலங்குகள், பயிரினங்கள் போன்றவையும் இசையை விரும்பியமையும் வளர்ந்தமையும் அறியப்படுகிறது. ஐவகை நில அமைப்பில் பண்கள் தோன்றின. இவற்றை இசைக் கருவிகளால் மீட்ட முயன்றனர். அதன் வளர்ச்சி நிலையினை புகார்க் காண்டத்தில் காணலாம். அவையாக குழல், யாழ் போன்றவையும் தாள லயத்தோடு எழுப்பும் ஒலி மத்தள இசை இவை யாவும் அறிவியல் கருவிகளாக அறிய முடிகிறது. அந்திமாலை சிறப்புச்செய் காதையில்,

**"குழல்வளர் முல்லையில் கோவலர் தம்மோடு"** (15)

கோவலர்கள் புல்லாங்குழலில் முல்லைப் பண்ணினை இசைத்துள்ளனர். மேலும் குழல், தோல் கருவிகள், யாழ் இவற்றை பாணர்கள் பரிசில் பெற இசைத்துள்ளனர். ஏழு சுரங்களான குரல், துத்தம், கைக்கிளை, உழை, இளி, விளரி, தாரம் எனும் ஏழு இசையும் அறிய முடிகிறது. இன்னும் கானல்வரியில் பத்தர், ஆணி, கோடு, நரம்பு என்னும் உறுப்புக்கள் குறைவற நிறைவுடன் இருக்கும் யாழினை வசந்த மாலையிடம் வாங்கிய மாதவி பண்ணல், பரிவட்டனை, ஆராய்தல், தைவரல், செலவு, விளையாட்டு, கையூழ், குறும்போக்கு என்று வகுக்கப்பட்ட எட்டு வகைக் கலை நயத்துடனும் வீணையை மீட்டி இசை எழுப்பியுள்ளாள். இசைக் கருவிகள் அறிவியல் சார்ந்தவை என்பதும் இதனால் அறியலாகிறது.

**அணிகலன்கள்**

பண்டைய காலத்து மக்கள் அதிகமான அணிமணிகளை அதாவது நகைகளை அணிந்துள்ளனர். அணிகலன்கள் அணிந்திருப்பதன் மூலம் பொருளாதார நிலை வெளிப்படுகிறது. மேலும் அன்றைய மனிதர்கள் அணிகலன்களை அதிகம் அணியக் காரணம் அவர்கள் ஆடை உடுப்பது குறைவு. எனவே அணிகலன்களை அதிகமாக அணிந்திருக்கின்றனர். மாத்தளை சோமு என்பார்,

**"அக்காலத்தில் ஆண்களும் பெண்களும் மிகக் குறைந்த அளவில் ஆடை அணிந்தார்கள். அரையில் மட்டும் ஆடையுடுத்தி, அரைக்கு மேலே வெற்றுடம்பாக இருந்தார்கள்"**[4]

என்கிறார். இத்தகையதொரு சூழலில் அவர்களுக்கு அணிகலன்கள் தேவை அதிகமாக இருந்திருக்கின்றன. சிலப்பதிகாரம் புகார்

காண்டத்தில் அறிவியலுடன் அணிகலன்கள் இணைந்தமை எடுத்துரைக்கப்பட்டுள்ளது.

மன்னனிடம் போரில் தோற்றோடிய மாற்று அரசனின் வெண்கொற்றக் குடை பறிக்கப்பட்டிருக்கிறது. அதன் கணுக்கள் தோறும் நவமணிகளை பதித்துள்ளனர். அதனையே மாதவியின் நடனமாடும் நாடக அரங்கில் தலைக்கோலாக வைத்திருக்கின்றனர். அது இந்திரனின் மகனான சயந்தனாக விளங்கியிருக்கிறது. மாதவியின் நடனத்தைப் பாராட்டி பச்சை மாலையும், தலைக்கோல் பட்டமும், ஆயிரத்தெட்டு பொன் கழஞ்சும் வழங்கியிருக்கிறான். பெண்கள் அணியக்கூடிய மோதிர வகைகள், சங்கிலிகள், தொய்யகம், புல்லகம் இவை தவிர அணிகள் என்று ஒவ்வொரு உடற்பகுதிக்கும் வெவ்வேறு அணிகலன்களை அணிந்துள்ளனர். அணிகலன்கள் உருவாக்குதல் என்பது அறிவியல் சார்ந்ததாகும். இவைபோல் கைவினைப் பொருள்களும் அறிவியல் தொடர்புடையன என்பதும் தெரியலாகிறது.

சிலப்பதிகாரம் புகார்க் காண்டத்தில் அறிவியல் செய்திகளும் கருத்துக்களும் நிறைந்து காணக்கிடக்கின்றன. இவை மனிதர்களின் பரிணாம வளர்ச்சியால் பரிணமித்தவை எனலாம்.

## முடிவுரை

மனித நாகரிக வளர்ச்சியில் பல்வேறு கலைகள் வளர்ந்துள்ளன. மொகஞ்சதரோ, கரப்பா நாகரிகங்களில் கட்டடக்கலையின் அமைப்பு என்பது வியக்கச் செய்யும் ஒன்றாகும். தமிழரின் வாழ்வியலை அறிவியல் நோக்கோடு காணுதல் வேண்டும். படைப்பாளர்கள் அறிவியல் சிந்தனைகளைத் தமிழோடு இணைத்து தங்களது படைப்பிலக்கியங்களை பேரிலக்கியங்களாகத் திகழச் செய்திருக்கின்றனர். சிலப்பதிகார புகார்க்காண்டத்தில் அறிவியல் கருத்துக்களை சிறப்புற அமைத்துள்ளமை கட்டுரையின் வழி அறியமுடிகிறது.

## அடிக்குறிப்பு

1. க.பலராமன்,'பழந்தமிழ் அறிவியல்', ப.113. உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை, 2009.
2. மாத்தளை சோமு, 'வியக்க வைக்கும் தமிழர் அறிவியல்', ப.242. உதகம் (உலகத் தமிழாய்வுக் கழகம்), திருச்சி, 2005.
3. மேலது., ப.119
4. மேலது, ப.173

# திருப்பாவை கூறும் ஆன்மீகமும், அறிவியலும்

**சு. தெய்வ ஜெயஜோதி**
ப. எண். 19213274022001
முனைவர் பட்ட ஆய்வாளர் (முழுநேரம்), தமிழ் உயராய்வு மையம்
விவேகானந்தா கல்லூரி, அகஸ்தீஸ்வரம்
மனோன்மணியம் சுந்தரனார்பல்கலைக்கழகம், திருநெல்வேலி

**முனைவர் இரா. திலகா**
உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை, தமிழ் உயராய்வு மையம்
விவேகானந்தா கல்லூரி, அகஸ்தீஸ்வரம்
மனோன்மணியம் சுந்தரனார்பல்கலைக்கழகம், திருநெல்வேலி

***ஆய்வுச் சுருக்கம்***
*பக்தி இலக்கியங்கள் எளிய மக்களின் பக்தி வாழ்க்கைக்கு வழிகாட்டும் பாதைகளாக விளங்குகின்றன. சமயத்தையும் பக்தியையும், அடிப்படையாகக் கொண்டு எழுந்தவைப் பக்தி இலக்கியங்கள் ஆகும். அவற்றுள் சைவ இலக்கியமும், வைணவ இலக்கியமும் பக்தியையும், அறிவியலையும் மேம்படுத்துவதை அடிப்படையாகக் கொண்டு விளங்குகிறது. வைணவ இலக்கியங்களில் ஆண்டாள் அருளிய திருப்பாவைப் பாடல்களில் ஆன்மீகமும், அறிவியலும் என்ற தலைப்பில் இக்கட்டுரை அமைகிறது.*

## முன்னுரை

தமிழ் இலக்கிய வரலாற்றில் பக்தி இலக்கியத்திற்கு பெருமிடமுண்டு. அவற்றுள் வைணவ நெறியைப் பின்பற்றி பக்தியால் சிறந்து விளங்கிய பன்னிரு ஆழ்வார்களுள் பெண் ஆழ்வார் ஆண்டாள் ஆவார். இவர் திருமாலின் மீது கொண்ட பக்தி நெறியையும், அறிவியலையும் திருப்பாவை பாடல்கள் மூலம் வெளிப்படுத்தியுள்ளார். ஏழாம் நூற்றாண்டில் வாழ்ந்த ஆண்டாள் அறிவியல் விஞ்ஞானம் பற்றி அப்போதே தன்னுடைய பாடல்கள் மூலம் கூறியுள்ளார். அதன்வழி திருப்பாவை கூறும் ஆன்மீகமும், அறிவியலும் குறித்து ஈண்டு விளக்கப்படுகின்றது.

## பக்தி இலக்கியம்

பக்தி இலக்கியம் கி.பி. ஏழு முதல் ஒன்பதாம் நூற்றாண்டு முடிவு வரை தமிழகத்தில் செயற்பட்ட சமய சமூக அரசியல் இயக்கமாகும். தமிழைப் பக்தியின் மொழி என்று சிறப்பித்துக் கூறுவர். இறைவன் மீது பக்தர்கள் உள்ளம் உருக வழிபாடு செய்து பாடியனவையே பக்தி இலக்கியங்கள் ஆகும். தமிழில் பக்தி இலக்கியங்கள் என்பது சைவம், வைணவம் என இரு சமயங்களை மையமாகக் கொண்டது. ஆழ்வார்கள் வைணவ சமயத்தினையும், நாயன்மார்கள் சைவ சமயத்தினையும் வளர்த்து பல்வேறு இலக்கியங்களைப் படைத்தனர். பக்திப் பாடல்கள் எண்ணற்றவை. எனினும், நாயன்மார்கள் பாடிய பன்னிரு திருமுறைகளும், ஆழ்வார்கள் பாடிய நாலாயிர திவ்வியப் பிரபந்தமும் பக்தி இலக்கியங்கள் என்ற சிறப்புக்கு உரியவை ஆகின்றன.

## ஆண்டாளின் வாழ்க்கை குறிப்பு

ஸ்ரீவில்லிபுத்தூர் ஒரு காலத்தில் ஆலமரங்கள் நிறைந்தப் புதராக இருந்தது. வேடர்க்குடியில் பிறந்தவர்கள் பலர் அங்கு வாழ்ந்து வந்தார்கள். அங்கு விஷ்ணுசித்தர் என்னும் ஓர் அந்தணர் வாழ்ந்து வந்தார். இவருக்கு

பெரியாழ்வார், பட்டர்பிரான் எனும் பெயர்கள் உண்டு. ஒருநாள் பெரியாழ்வார் இறைவனுக்கு பூமாலை சூட்ட பூக்களை பறிக்க தோட்டத்திற்கு சென்ற போது துளசிச் செடியின் அருகில் ஒரு பெண் குழந்தையைக் கண்டெடுத்தார். அக்குழந்தைக்கு கோதை எனப் பெயரிட்டு அன்புடன் வளர்த்து வந்தார். கோதையை இவர் கண்டெடுத்த நாள் ஆடி மாதம் பூரம் நட்சத்திர நாளாகும். கோதை இளம்வயதிலேயே கண்ணன் மீது மிகுந்த பக்தியுணர்வும், தமிழில் நல்ல திறமைக் கொண்டவராகவும் இருந்தார்.

ஒரு நாள் பெரியாழ்வார் கொண்டு வந்த மாலையில் ஒரு நீண்ட தலைமயிர் இருப்பதைக் கண்ட கோவில் அர்ச்சகர்கள், மாலை தீட்டுப்பட்டு விட்டது எனக் கூறி புதியமாலைக் கொண்டு வருமாறு கூறினார்கள். அன்றிரவு இறைவன் அவரது கனவில் தோன்றி கோதை அணிந்த மாலைகளையே எனக்கு சூட்ட வேண்டும் எனக் கேட்டுக் கொண்டார். இதனாலேயே "சூடிக்கொடுத்த சுடர்க்கொடி" என்றும் "இறைவனையே ஆண்டவள்" என்றும் ஆண்டாள் போற்றப்படுகிறாள்.

ஆண்டாள் திருமணப் பருவம் அடைந்தார். அப்போது திருவரங்கத்தில் கோவில் கொண்டுள்ள அரங்கநாதரிடம் மனதைப் பறிகொடுத்தேன். அதனால் அங்கு செல்ல வேண்டும் என தந்தையாரிடம் தெரிவித்தார். இறைவனையே மணப்பதென்று பிடிவாதமாக இருந்தார். என்ன செய்வதென்று அறியாது கவலையில் இருந்த பெரியாழ்வாரின் கனவில் தோன்றிய இறைவன், கோதையை மணப்பெண்ணாக அலங்கரித்து திருவரங்கம் கோவிலுக்கு அழைத்து வருமாறு பணித்தார். திருவரங்கப் பெருமானைப் பார்த்த பின்னர் தந்தையாருடன் ஆண்டாள் ஸ்ரீவில்லிபுத்தூர் திரும்பினாள். ஸ்ரீவில்லிபுத்தூரில் ஆண்டாள் அரங்கநாதர் திருமணம் பங்குனி உத்திரநாளில் நடைபெற்றது. ஆண்டாளின் பாடல்கள் திருப்பாவை, நாச்சியார் திருமொழி என்னும் இரு தொகுப்புகளாக உள்ளது. திருப்பாவையில் முப்பது பாடல்களும், நாச்சியார் திருமொழியில் 143 பாடல்களுமாக மொத்தம் 173 பாடல்களை நாலாயிரதிவ்வியப் பிரபந்தத்தில் ஆண்டாள் பாடியுள்ளார்.

**"திருவாடிப் பூரத்துச் செகத்துதித்தாள் வாழியே**
**திருப்பாவை முப்பதும் செப்பினாள் வாழியே**
**பெரியாழ்வார் பெற்றெடுத்த பெண்பிள்ளை வாழியே**
**பெரும்புதூர் மாமணிக்குப் பின்னானாள் வாழியே**
**ஒரு நூற்று நாற்பது மூன்றுரைத்தாள் வாழியே**
**உயர் அரங்கர்க்கே கண்ணி உகந்தளித்தாள் வாழியே**
**மருவாகும் திருமல்லி வளநாடி வாழியே**
**வண் புதுவை நகர்க்கோதை மலர்ப்பதங்கள் வாழியே" (வா.நா)**

### திருப்பாவை

ஆண்டாள் பாடிய பாடல்களின் தொகுப்புகளில் ஒன்று திருப்பாவை ஆகும். இது முப்பது பாடல்களை கொண்டது. உலகில் தமிழ் பேசும் மக்கள் மார்கழி மாதத்தில் பாவை நோன்பு இருப்பர். அந்த நேரத்தில் விடியும் முன்பே எழும் கன்னியர் பிற பெண்களையும் துயில் எழுப்பிக் கொண்டு ஆற்றில் நீராடி இறைவனைத் துதித்து வழிபடுவர். தான் மட்டும் முக்தி பெற நினைக்கவில்லை. மக்கள் அனைவரும் பக்தி நெறியில் பரந்தாமனின் பரமபதத்தை அடைய வழிகாட்டினாள் ஆண்டாள்.

**"மலர்மிசை ஏகினான் மாணடி சேர்ந்தார்**
**நிலமிசை நீடுவாழ் வார்" (குறள்: 3)**

என்கிறார் வள்ளுவர். இறைவனின் திருவடியை அடைய விரும்புபவர்கள் இவ்வுலகில் நீண்ட புகழோடு வாழ்வார் என்ற திருக்குறளுக்கேற்ப ஆண்டாள் இறைவனின் திருவடி அடைந்து இன்றும் புகழோடு தெய்வமாக வாழ்ந்து வருகின்றாள். பெண்களுக்கு ஒரு வழிகாட்டியாக வாழ்ந்த ஆண்டாள் இயற்றிய திருப்பாவைப் பாடல்கள் முப்பதும் படிப்போர் இறைவனின்

திருவடிகளை அடையும் சிறப்பினைப் பெறுவர் என்பதை உணர்த்துகிறது.

**"பைங்கமலத் தண்தெரியல் பட்டர்பிரான் கோதை சொன்ன**
**சங்கத் தமிழ்மாலை முப்பதும் தப்பாமே**
**இங்கிப் பரிசுரைப்பார்,ஈரிரண்டு மால்வரைத்தோள்**
**செங்கண் திருமுகத்துச் செல்வத் திருமாலால்**
**எங்கும் திருவருள் பெற்றின்புறுவ ரெம்பாவாய்"**
**(திருப் - 30)**

**பாவை நோன்பு**

ஆண்டாளின் திருப்பாவைப் பாடலில் பாவை நோன்பு முக்கிய இடம் பெறுகின்றது. பாவை நோன்புக்குச் சங்க நூல்களிலும் சான்று இருக்கிறது. அதைப் பழந்தமிழர் "தை நீராடல்" என்று அழைத்தனர்.

**"தாய் அருகா நின்று தவத்தைந்நீர் ஆடுதல்**
**நீ உரைத்தி வையை நதி"**
**(பரி.பா – 11) (பாடல்வரி-91, 92)**

என்ற வரிகள் சங்க காலத்தில் கன்னிப் பெண்கள் தை நீராடி நோன்பு நோற்றதை உணர்த்துகிறது.

**மார்கழி மாதத்தின் சிறப்பு**

பண்டைய தமிழர்கள் தங்கள் வாழ்வை இறைவழிபாட்டிற்கு முக்கியத்துவம் கொடுத்துத் தமிழ் மாதங்கள் ஒவ்வொன்றையும் சிறப்பு மிக்கதாகக் கொண்டாடி மகிழ்ந்தனர். இதிலே மார்கழிமாதம் மிகவும் சிறப்பு வாய்ந்ததாக அமைகிறது.

பகவத் கீதையில் மார்கழி தான் மாதத்தில் சிறந்த மாதம் என கிருஷ்ணர் கூறுகிறார். இதனால் ஆண்டாள் மார்கழி மாதத்தை பாவை நோன்பு நோற்க சிறந்த மாதமாக கருதுகிறாள்.

**"ஸாமங்களிலே பிருஹத் ஸாமம் யான்**
**சந்தங்களில் யான் காயத்ரீ**
**மாதங்களிலே மார்கழி யானே**
**ருதுக்களிலே யான் வசந்தம்தான்"**
**(ப.கீ-அ-10 பா. 35)**

என்ற பகவத்கீதை பாடல்வரிகள் மார்கழி மாதம் இறைவனுக்கு உகந்த மாதம் என்பதைச் சுட்டிக் காட்டுகிறது.

திருப்பாவையில் முதல் பாடல் "மார்கழித திங்கள்" என தொடங்குகிறது.

**"மார்கழித் திங்கள் மதி நிறைந்த நன்னாளால்**
**நீராடப் போதுவீர் போதுமினோ நேரிழையீர்"**
**(திருப். 1)**

என்று பாடி இறைவனை மனமுருக வேண்டி இறைவன் நமக்கு அருள் தருவான் என்கிறார் ஆண்டாள்.

மார்கழி மாதம் தமிழ் மாதங்களில் மிகவும் உன்னத மாதமாக அமைகின்றது. கடும்பனி பொழியும் குளிர் மிகுந்த விடியற்காலை வேளையிலே மக்கள் எழுந்து நீராடி இறைவனைத் தொழுதால் மனமும், உடலும் செம்மை பெறும் என்பது விஞ்ஞானப்பூர்வ உண்மையாகிறது. சமயம் சார்ந்த மாதமாக வைணவர்கள் பெருமாள் கோவில்களில் திருப்பாவை பாடுவதும், சைவர்கள் திருவெம்பாவைப் பாடுவதும் வழிவழியாக இன்றுவரை நடைபெற்று வருகிறது. இது மனதளவில் மக்களை இறைநிலைக்கு ஆட்படுத்துகின்றது. இருப்பினும் விடியற்காலையில் வீசும் ஓசோன் காற்றை மூச்சு விடுவதால் நலமான உடலையும், பலத்தையும் மக்கள் பெறுகின்றனர் என்பது உண்மையாகும்.

**ஆன்மீகமும், அறிவியலும்**

ஆண்டாள், திருப்பாவையில் ஆன்மீகத்தைப் பற்றி மட்டும் சொல்லவில்லை, அறிவியலையும் சொல்கிறாள். ஏழாம் நூற்றாண்டில் வாழ்ந்த ஆண்டாள் அறிவியலை பற்றி பாடுவது வியப்பை ஏற்படுத்துகிறது. திருப்பாவை நான்காம் பாடலில் நீர்சுழற்சி பற்றிய அறிவியலை பற்றி பாடுகிறாள். ஆவியாதல், மேகமாதல்,

மழையாதல் போன்றவற்றை இறைவனோடு ஒப்பிட்டுக் கூறுகிறாள்.

மழை எவ்வாறு வருகிறது? அது கடலில் இருக்கும் நீர் ஆவியாகி மேலே சென்று மேகமாகி கறுத்து பின்பு நீராக பொழிவது தான் மழை. இது ஒரு அறிவியல் பார்வை. நவீன விஞ்ஞானிகள் இப்போது கூறுவதை ஆண்டாள் அன்றே கூறிவிட்டார். அவள் இந்த பாடலில் மழை பகவானே நீ ஒரு உதவி செய்ய வேண்டும். மழை என்பது உலகத்தில் வாழும் அனைத்து உயிரினங்களுக்கும் மிக மிக அவசியம் எப்படி நீ பொழிய வேண்டும் என சொல்கிறேன் கேள் என்கிறாள்.

மழை கண்ணா நீ கடலுக்குள் புகுந்து முகந்து மேலே சென்று மேகமாகி அதுவும் ஊழி முதல்வன் போல் கறுக்க வேண்டும். மழை வருவதை நாம் எப்படி கண்டு அறிவோம். மேகம் கறுத்தால் மழை வரப் போகிறது என்று அர்த்தம். திருமாலின் கருநிறம் போல் கறுத்து மின்னல் வரவேண்டும். அந்த மின்னல் ஒளி பத்மநாபன் கையில் இருக்கும் சுதர்சன சக்கரம் போல் மின்ன வேண்டும். எப்போதும் மின்னல் வந்தால் இடி தொடர்ந்து வரும். அறிவியல் அடிப்படையில் பார்த்தால் ஒளி, ஒலி ஒரே நேரத்தில் வரும். ஆனால் மின்னல் ஒளி வேகமாக பயணம் செய்வதால் அது முதலில் வருகிறது. பின்பு ஒலி அதாவது சத்தம் இடி வடிவில் வருகிறது. அதனால்தான் ஆண்டாள் மின்னலை சொல்லி இடியை கூறுகிறாள். அந்த இடி சத்தம் திருமாலின் வலம்புரி சங்கு போல் சத்தம் இட வேண்டும்.

பின்பு தாமதம் இல்லாமல் திருமாலின் சாரங்கம் வில் அம்பு போல மழை பொழிய வேண்டும். இப்படி நீ பெய்தால் உலகில் உள்ள அனைவரும் நன்றாக வாழ்ந்து மார்கழி பாவை நோன்பிற்கு மகிழ்ச்சியோடு நீராடுவோம் என்று கூறுகிறாள். என்ன விந்தை எட்டு வரிகளில் எவ்வளவு அழகாக சொல்கிறாள். என்னவொரு ஆன்மீக அறிவு, என்னவொரு அறிவியல் அறிவு. இந்த இரண்டையும் இணைத்து ஆன்மீகம் வேறு, அறிவியல் வேறு அல்ல இரண்டுமே சேர்ந்தது தான் வாழ்க்கை என்று காட்டுகிறாள் ஆண்டாள்.

**“ஆழி மழைக்கண்ணா! ஒன்று நீ கைகரவேல்**
**ஆழியுள் புக்கு முகந்துகொடு ஆர்த்தேறி**
**ஊழி முதல்வனு ருவம்போல் மெய்கறுத்துப்**
**பாழியந் தோளுடைப் பற்பநா பன்கையில்**
**ஆழிபோல் மின்னி வலம்புரிபோல் நின்றதிர்ந்து**
**தாழாதே சாரங்க முதைத்த சரமழைபோல்**
**வாழ உலகினில் பெய்திடாய் நாங்களும்**
**மார்கழி நீராட மகிழ்ந்தேலோ ரெம்பாவாய்”**
**(திருப். 4)**

காலத்தையும் நேரத்தையும் கூட இயற்கையில் உள்ள அறிவியலை திருப்பாவையில் கண்டறியலாம். திருப்பாவை 13-ம் பாடலில் அறிவியல் சொல்லும் தத்துவம் “வெள்ளி எழுந்து வியாழன் உறங்கிற்று”. இந்த வரியில் ஆண்டாளின் அறிவியல் மற்றும் வானியலில் இருந்த ஆழ்ந்த அறிவு நமக்கு தெரிகிறது. இங்கு முதலில் வெள்ளி வந்த பிறகு வியாழன் உறங்க சென்றதாக கூறுகிறாள். வெளிச்சம் வந்தவுடன் தான் இருள் மறையும். வியாழன் என்பது குருவாகவும், வெள்ளி என்பது சுக்கிரனாகவும் குறிப்பிடுகிறாள். வியாழன் இரவு முழுவதும் வானத்தில் பிரகாசிக்கும். விடிவதற்கு சுமார் இரண்டு மணி நேரத்திற்கு முன்பாக வானில் கீழ் திசையில் வெள்ளி எனும் சுக்கிரன் தோன்றும். அப்போது வியாழன் மெல்ல மெல்ல மறையும் மங்கும். கீழ்திசையில் வெள்ளி தோன்றுவதை தான் நம் முன்னோர்கள் விடிவெள்ளி என்று கூறுவர்.

**“பிள்ளைக ளெல்லாரும் பாவைக் களம்புக்கார்**
**வெள்ளி யெழுந்து வியாழ முறங்கிற்று”**
**(திருப். 13)**

இந்த வரியைத்தான் ஆண்டாள் விடியற்காலை வந்து விட்டது என்று உணர்ந்து தோழிகளை எழுப்புகிறாள்.

வெள்ளி எழுவதும் வியாழன் உறங்குவதும் மார்கழி மாதத்தில் மட்டுமே மிக துல்லியமாக தெரியும் என்று வல்லுனர்கள் கூறுகின்றனர்.

திருப்பாவை 22 பாடல் ஆறாவது வரியில் ஆண்டாள் இறைவனை தன்னுடைய இரு கண்களால் பார்க்க சொல்கிறாள். அந்த இரு கண்களை "திங்களும் ஆதித்தியனும் எழுந்தாற் போல்" என்று கூறுகின்றாள். இங்கே திங்கள் என்பது சந்திரனை குறிக்கும். ஆதித்யன் என்பது சூரியனை குறிக்கும். ஒரு கண் சந்திரன் மற்றொரு கண் சூரியன். அந்த இரண்டும் உதிப்பது போல உங்கள் இரு கண்களையும் திறந்து எங்கள் மேல் நோக்கினால் எங்கள் மேல் உள்ள சாபம் எல்லாம் நீங்கி விடும் என்று ஆண்டாள் சந்திரனையும், சூரியனையும் அறிவியல் நோக்கோடு பாடியிருக்கிறாள்.

**"செங்கண் சிறுச்சிறிதே எம்மேல் விழியாவோ**
**திங்களும் ஆதித் தியனும் எழுந்தாற்போல்"**
**(திருப் - 22 வரி -5,6)**

## முடிவுரை

வைணவ நெறியைப் பின்பற்றி பக்தியால் சிறந்து விளங்கிய பன்னிரு ஆழ்வார்களில் ஆண்டாளும் ஒருவர். திருப்பாவையில் ஆண்டாளின் அழகான பக்தியைக் கண்குளிரக் காண முடிகிறது. திருப்பாவை பாடல்கள் மூலம் இறைவனை அடையும் வழியை மட்டுமல்லாமல் அறிவியலையும் வியந்து பார்க்கும் வகையில் கூறுகிறாள். மார்கழி மாதத்தின் சிறப்பையும், ஆன்மீகத்தையும் அறிவியலையும் திருப்பாவை மூலம் விளக்கியுள்ளார்.

## அடிக்குறிப்பு


1. பா. அன்பரசு திருப்பாவை, திருவெம்பாவை மூலமும் உரையும்.
2. நர்மதா பதிப்பகம், 10, நானா தெரு, பாண்டிபஜார், தியாகராயநகர், சென்னை – 17.
3. திருப்பாவை பா. 30, ப. 43
4. திருப்பாவை பா. 1, ப. 17
5. மேலது பா. 4, ப – 20
6. மேலது பா. 13, ப-28
7. மேலது பா. 22, ப-37
8. ஞா. மாணிக்கவாசகன், பரிபாடல் மூலமும் உரையும்
9. உமா பதிப்பகம், 18∴171, பவளக்காரா தெரு, மண்ணடி, சென்னை – 1
10. பரிபாடல், பா- 11, ப. 192
11. துளஸிராம், ஸ்ரீமத் பகவத்கீதை மூலமும் செய்யுள் வடிவிலான தமிழாக்கமும்
12. விவேகானந்த கேந்திரம், கன்னியாகுமரி, கிராம முன்னேற்றத் திட்டம்
13. நிர்வாக அலுவலகம்: 73 சிவந்தாகுளம் முதல் தெரு, தூத்துக்குடி – 628 003.
14. பகவத்கீதை அத்தியாயம் 10 பா. 35 , ப-115

# திருவாசகம் உணர்த்தும் அறிவியல்

**முனைவர் அ. கல்பனாதேவி**
தமிழ்த்துறை உதவிப்பேராசிரியர்
வாவு வஜீஹா வனிதையர்
கலை மற்றும் அறிவியல் கல்லூரி, காயல்பட்டணம்

***ஆய்வுச் சுருக்கம்***
*பக்தி இலக்கிய உலகில் அனைவராலும் போற்றத்தக்க திருவாசகம் பல அறிவியல் கருத்துகளை உள்ளடக்கியதாக அமைந்துள்ளது. மாணிக்கவாசகர் சிவபெருமானிடம் அணுவாக, புல்லாக, மரங்களாக, பறவையாக, விலங்குகளாக, மக்களாக என எல்லாப் பிறப்புகளும் பிறந்து ஓய்ந்தேன் என்று கூறுவதிலிருந்து பல்வகை உயிரினங்களின் தோற்றம் பற்றிய கருத்துகள் வெளிப்படுகிறது. இறைவன் ஐம்பூதங்களின் வடிவமாக இருப்பவன் என்று எடுத்துரைக்கப் பட்டுள்ளது. உலகம் உருண்டை என்ற கருத்தின் மூலம் தெளிந்த வானியல் அறிவு வெளிப்படுகிறது. அணுச்சேர்ப்புக் கொள்கை, அணுப்பிரிப்புக் கொள்கை பற்றிய கருத்துகள் எடுத்துக் கூறப்பட்டுள்ளது. உடலில் கருக்கொண்ட உயிரானது ஒவ்வொரு மாதமும் எவ்வகை வளர்ச்சி அடைந்து பல இன்னல்களுக்கிடையில் பூமியில் எவ்வாறு பிறப்பெடுக்கிறது என்பதை அழகாக எடுத்தியம்புகிறது. கார்காலத்தில் மேகமானது கடல் நீரை ஆவியாகக் கொண்டு கருக்கொண்டு எவ்வாறு மழைநீராக பூமியில் பொழிகிறது என்ற கருத்தை விவரிக்கிறது. இதுவே இக்கட்டுரையின் ஆய்வுச் சுருக்கமாகும்.*

## முன்னுரை

மானிடச் சிந்தைக்கு எட்டாத விந்தைகளை வியந்து, அவை மனித சக்திக்கு அப்பாற்பட்டவை என்று அவற்றைப் புறக்கணிக்காமல் உண்மையை உணரும் விதம் உரைப்பதே அறிவியல். இத்துறை பல பிரிவுகளை உள்ளடக்கியதாக இருப்பினும் இவற்றைத் தன்னுள் அடக்கி மிளிரச் செய்வது தமிழ் இலக்கியமே!. அறிவியல் சிந்தனைகள் என்பது பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே நம் முன்னோர்களால் கையாளப்பட்டு வந்துள்ளது. பல ஆண்டுகளுக்கு முன் இருந்த தமிழ் இலக்கியங்களை அருளிச் செய்த புலவர் பெருமக்களும் மன்னர்களும் சித்தர்களும் ஞானிகளும் அறிவியல் கருத்துகளை தம் தம் இலக்கியங்களில் பதிவு செய்துள்ளனர். அவ்வகையில் மாணிக்கவாசகர் எழுதிய திருவாசகம் உணர்த்தும் அறிவியல் கருத்துகளை எடுத்துரைப்பதாக இக்கட்டுரை அமைகிறது.

## அறிவியலும் திருவாசகமும்

எந்தவொரு கருத்தையும் செய்தியாக மட்டும் கருதாது அதனை ஒரு பரிசோதனை மூலம் செய்து உணர்த்துவதே அறிவியலாகும். இயற்கையாகவே நாம் செய்யக்கூடிய ஒவ்வொரு செயலுக்குப் பின்பும் அறிவியல் கூறு இருக்கிறது. அன்றாட வாழ்வில் நாம் அருந்துகிற நீர் முதலாகப் பயன்படுத்தலாகும் பொருட்கள் வரை எல்லாவற்றிலும் அறிவியல் சார்ந்த நிகழ்வுகளே இடம் பெறுகின்றன. இயற்கை நிகழ்வுகளான மழை, இடி, மின்னல் கூட வேதிவினையின் காரணமாக நிகழ்கின்றன. எனவே மனிதனையும் அறிவியல் கூறுகளையும் பிரிக்க இயலாத நிலையில் நாம் வாழ்ந்து கொண்டிருக்கிறோம்.

பக்தி இலக்கியக் காலம் என்னும் அளவிற்குப் பரந்து விரிந்து கிடக்கும் பக்தி இலக்கியப் பரப்பில் மாணிக்கவாசகரால் படைக்கப்பட்ட திருவாசகம் முக்கியத்துவம் வாய்ந்ததாகும். படித்தோரைத் தன்பால் இழுத்து மனதை உருகச் செய்யும் திருவாசகம் தமிழ் மொழியின் இணையற்ற படைப்பாகும்.

இந்நூல் பன்னிரு திருமுறைகளில் எட்டாம் திருமுறையாக அமைந்துள்ளது. சிவபுராணம் முதலாக அச்சோப்பதிகம் ஈறாக 656 பாடல்களாகத் தொகுக்கப்பட்டுள்ளது. இறைவனை வழிபடும் பக்திப் பாசுரமாக இந்நூல் அமையினும் அறிவியல் கருத்துகளைத் தாங்கியதாக அமைந்துள்ளது.

**உயிரினங்களின் தோற்றம்**

உயிரினங்கள் தோற்றம் பெறுவதற்கான தட்பவெப்பம், நீர், காற்று, நிலம் என அனைத்தும் பூமியில் இருப்பதால் முதன் முதலில் உயிரினங்கள் பூமியில் தான் தோன்றியிருக்க வேண்டும் என்று அறிவியலாளர்கள் ஆய்வு செய்துள்ளனர். அவ்வுயிரினங்களையும் நுண்ணுயிர்கள், தாவரங்கள், விலங்குகள் எனப் பிரித்து வைத்திருந்தனர். அவ்வுயிர்களைப் பற்றி திருவாசகம்,

**"புல்லாகிப் பூடாய்ப் புழுவாய் மரமாகிப்**
**பல்விருக மாகிப் பறவையாய்ப் பாம்பாகிக்**
**----- ------- --------**
**-------- ------ ------**
**செல்லாஅ நின்றஅத் தாவரச் சங்கமத்துள்**
**எல்லாப் பிறப்பும் பிறந்திளைத்தேன்**
**எம்பெருமான்" (திரு.6)**

என்று கூறுகிறது.

சிவபெருமானிடம் அணுவாக, புல்லாக, செடியாக, மரங்களாக, புழுவாக, பாம்பாக, பறவையாக, விலங்குகளாக, மக்களாக என எல்லாப் பிறப்புகளும் பிறந்து ஓய்ந்தேன் என்று மாணிக்கவாசகர் கூறுவதிலிருந்து பல்வகை உயிரினங்களின் தோற்றம் பற்றிய கருத்துகள் இந்நூலில் அமைந்துள்ளதை அறிய முடிகிறது.

**ஐம்பூதங்களின் இயக்கம்**

நிலம், நீர், காற்று, நெருப்பு, ஆகாயம் எனும் ஐம்பூதங்களால் இவ்வுலகம் ஆனது என்று அறிவியலாளர்கள் ஆய்ந்து கூறியுள்ளனர். தொல்காப்பியம் உலகமானது பஞ்ச பூதங்களால் ஆனது என்பதை,

**"நிலம் தீ நீர் வளி விசும்போடு ஐந்தும்**
**கலந்த மயக்கம் உலகம் ஆதலின்"[1]**

எனும் நூற்பா மூலம் எடுத்துரைக்கிறது. ஐம்பூதங்களின் சிறப்பைப் பற்றி,

**"மண் திணிந்த நிலனும்**
**நிலனேந்திய விசும்பும்**
**விசும்பு தைவரு வளியும்**
**வளித்தலைஇய தீயும்**
**தீ முரணிய நீரும்"[2]**

என்று புறநானூறு கூறுகிறது.

இறைவனின் சிறப்பைப் புகழ்ந்துரைக்கும் போது திருவாசகம் ஐம்பூதங்களோடு இணைத்து புகழ்ந்துரைக்கிறது.

**"நிரந்தரஆ காயம் நீர்நிலம் தீகால்'**
**பூதங்கள் ஐந்தாகிப்" (திரு.6)**
**"நினையப் பிறருக் கரிய நெருப்பை**
**நீரைக் காலை நிலனை விசும்பை"**
**(திரு.7)**

எனும் வரிகளில் இறைவன் ஐம்பூதங்களின் வடிவமாக இருப்பவன் என்ற கூறுவதன் மூலம் ஐம்பூதங்கள் பற்றிய செய்திகளை அறிய முடிகிறது.

**உலகத்தின் வடிவம்**

15 ஆம் நூற்றாண்டிற்கு முன்பு வரை பிற நாட்டினர் உலகம் தட்டையானது என்ற எண்ணம் கொண்டிருந்தனர். போலந்து நாட்டைச் சார்ந்த நிக்கோலஸ் கிராப்ட் என்பவர் உலகம் உருண்டை என்று கண்டறிந்து கூறினார். ஆனால் அதற்கு பல நூறு ஆண்டுகளுக்கு முன்பு வாழ்ந்த தமிழர்கள் உலகம் உருண்டை என்னும் உண்மையைத் தெரிந்து வைத்திருந்தனர்.

**"சுழன்றும் ஏர்ப்பின்னது உலகம் அதனால்**
**உழந்தும் உழவே தலை"[3]**

என்ற திருக்குறள் வாயிலாக உலகம் உருண்டை என்ற கருத்தை உலகத்திற்கு முதன் முதலாக எடுத்துரைத்தவா் திருவள்ளுவராவா்.

திருவாசகம் திருவண்டப்பகுதியில்,

**"அண்டப் பகுதியின் உண்டைப் பிறக்கம்**
**அளப்பெருந் தன்மை வளப்பெருங் காட்சி"**
**(திரு.25)**

**"ஒன்றெனுக் கொன்று நின்றெழில் பகரின்**
**நூற்றொரு கோடியின் மேற்பட விரிந்தன**
**இன்னுழை கதிரின் துன்அணுப் புரையச்**
**சிறியவாகப் -------- --------- " (திரு.31)**

என்று கூறுகிறது. இத்திருவாசக வரிகள் தெளிந்த வானியல் அறிவை வெளிப்படுத்துகின்றன. பெருவெடிப்புக் கொள்கையின்படி இப்பேரண்டம் விரிந்து நிற்பதை அழகாக வெளிப்படுத்துகிறது.

**அணுவின் இயல்பு**

இன்றைய அறிவியல் அணுவைப் பிளக்கவும் சேர்க்கவும் முடியும் என்று ஆய்ந்திருக்கிறது. ஐன்ஸ்டீன் அணுவைப் பிரித்தால் ஆற்றல் வெளிப்படும் என்று கூறினார். ஔவையார் திருக்குறளைப் புகழ்ந்துரைக்குமிடத்து,

**"அணுவைத் துளைத்தேழ் கடலைப் புகட்டி**
**குறுகத் தறித்த குறள்"**[4]

என்று கூறுகிறார். கம்பரும் தன் இராமாயணத்தில்,

**"சாணினும் உளன், ஓர் தன்மை அணுவினை சதக்கூறிட்ட**
**கோணினும் உளன், மாமேருக் குன்றிலும் உளன், நீ சொன்ன**
**தூணினும் உளன், நீ சொன்ன சொல்லிலும் உளன்"**[5]

எனும் வரிகளின் மூலம் பத்தொன்பதாம் நூற்றாண்டு வரை அறியாத அறிவியல் உண்மைகளை விளக்குகிறார்.

அணுவினைப் பற்றி திருவாசகம்,

**'அணுத்தரும் தன்மையில் ஐயோன் காண்க'**
**(திரு.23)**

**'அநேகன் ஏகன் அணு அளவில் இறந்தால்'**
**(திரு.161)**

**'சென்று சென்றணுவாய்த் தேய்ந்து தேய்ந்தொன்றாம்' (திரு.237)**

**"இல்நுழை கதிரின் துன்ன ணுப்புரையச்**
**சிறியவாகப் பெரியோன் --------------"**
**(திரு.23)**

இதன் மூலம் அணுச்சேர்ப்புக் கொள்கையும் அணுப்பிரிப்புக் கொள்கையும் பற்றிய கருத்துகள் அன்றே அரும்பியுள்ளதை அறியலாம்.

**கரு தோற்றம் - வளர்ச்சி நிலை**

பெண்ணின் உடலில் கருக்கொண்ட உயிரானது ஒவ்வொரு மாதமும் எவ்வகை வளர்ச்சி அடைந்து பூமியில் பிறப்பெடுக்கிறது என்பதை இன்றைய அறிவியல் அழகாக எடுத்துரைக்கிறது. உயர்திணை உயிர்கள் மட்டுமின்றி அறிணை உயிர்களின் கரு வளர்ச்சியையும் அறிவியல் எடுத்துரைக்கிறது. இக்கருத்துகளை மிக நுட்பமாக திருவாசகம் எடுத்தியம்புகிறது.

**"மானுடப் பிறப்பினுள் மாதா உதரத்து**
**ஈனமில் கிருமிச் செருவினிற் பிழைத்தும்**
**ஒருமதித் தான்றியின் இருமையிற் பிழைத்தும்**
**---------- ------------ -------**
**ஆண்டுகள் தோறும் அடைந்த அக்காலை**
**ஈண்டியும் இருத்தியும் எனப்பல பிழைத்தும்" (திரு.34)**

எனும் வரிகளில் யானை முதல் எறும்பு வரை அவற்றின் கருப்பையில் துன்பங்களிலிருந்து நீங்கியும், தாயின் வயிற்றில் கருவாய் இருந்தபோது பல்வேறு கிருமிகளின் பாதிப்பிலிருந்து தப்பி, முதல் மாத முடிவில் கரு முட்டை பிளவுபடுதலில் இருந்து தப்பி, ஒன்பதாம் மாதம் வரை பல இன்னல்களில் இருந்து தப்பி, பத்தாவது மாதத்தில் குழந்தை பிறக்கும் நேரத்தில் தாயும் குழந்தையும் அனுபவிக்கும் துன்பங்களில்

இருந்து பிழைத்து பூமியில் பிறக்கும் என்று மாணிக்கவாசகர் கூறுகிறார்.

இவ்வாறு கருவின் வளர்ச்சி நிலை பற்றி திருவாசகம் கூறுமிடம் அறிவியல் ஆய்வாளர்களுக்கே வியப்பை ஏற்படுத்தும் வண்ணம் அமைகிறது.

### மழைப்பொழிவு

நீர் மழையாக மண்ணிற்கு வருவதும் ஆவியாகி விண்ணிற்குச் செல்வதுமான சுழற்சி எக்காலத்தும் நிகழ்ந்து கொண்டிருப்பது. இவ்வியக்கம் உலகை வளப்படுத்துகிறது. இவ்வியக்கம் இல்லையெனில் மழைவளம் குன்றும். புவியின் தட்பவெப்ப நிலை மாறும். கார்காலம் மழை பெய்யும் காலமாகும். இக்காலத்தில் மேகமானது கடல் நீரை ஆவியாகக் கொண்டு கருக்கொண்டு மழைநீராக பூமியில் பொழிகிறது. இந்நிகழ்வை திருவாசகம்,

**'முன்னிக் கடலைச்**
**சுருக்கி யெழுந்துடையாள்' (திரு.16)**

என்று கூறுகிறது. மேகம் கார்காலத்திற்கு முன்பே கடலில் நீர் குறையும்படி கவர்ந்து கொண்டு மழை பொழிவிப்பதாகவும், அம்மழைப் பொழிவிற்கு முன் இடி, மின்னல், வானவில் தோன்றியதாகவும் கூறுகிறது. இந்நிகழ்வை உமையம்மையின் அழகுடன் ஒப்புமைப்படுத்தி மாணிக்கவாசகர் கூறியுள்ளார்.

### முடிவுரை

இருபதாம் நூற்றாண்டின் இணையற்ற வளர்ச்சிக்குக் காரணமான அறிவியல் பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே தமிழ் இலக்கியத்தில் வேரூன்றியிருந்தது என்பதை அறிய முடிகிறது. உயிரினங்களின் பல்வேறு பிரிவுகளைப் பற்றியும், ஐம்பூதங்களின் செயல்பாடுகள் பற்றியும் திருவாசகம் வழி அறிய முடிகிறது. உலகம் உருண்டை வடிவமானது, அணுவைப் பிரிக்க முடியும் என்ற கருத்துகளையும் திருவாசகம் உணர்த்துகிறது. கருவானது உடலில் கருக்கொண்டு எத்தகைய வளர்ச்சி நிலைகளை அடைகிறது என்பதை அறிய முடிகிறது. மேகம் கருக்கொண்டு மழை பொழிவதற்கான காரண காரியங்களை அறிய முடிகிறது. இவ்வாறு பல அரிய சிந்தனைகளின் வெளிப்பாடாகவே திருவாசகம் அமைகிறது.

### அடிக்குறிப்புகள்


1. தொல்காப்பியம் - கு.வெ. பாலசுப்பிரமணியம் (உ.ஆ), மரபியல், நூற்பா.எண்-635, மூன்றாம் பதிப்பு 2022, நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், சென்னை.
2. புறநானூறு - கு.வெ.பாலசுப்பிரமணியம் (உ.ஆ), பாடல் எண்-2, ஐந்தாம் பதிப்பு 2014, நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், சென்னை.
3. திருக்குறள் - எம்.நாராயணவேலுப் பிள்ளை (உ.ஆ), குறள் எண்-1031, பதிப்பாண்டு 2011, நர்மதா பதிப்பகம், சென்னை.
4. தமிழ் இலக்கிய வரலாறு, முனைவர். பெ.சுயம்பு, பக்க எண்.129, பத்தொன்பதாம் பதிப்பு, பாரதி பதிப்பகம், திசையன்விளை.
5. கம்பராமாயணம் - வெ.மு.கோபால கிருஸ்ணமாச்சாரியார் (உ.ஆ), முதற்பதிப்பு 2006, உமா பதிப்பகம், சென்னை.

# போர்க்கள மெய்ப்பாடுகள்

**முனைவர் அ. தேன்மொழி**
உதவிப் பேராசிரியர், தமிழ்த்துறை
மங்கையர்க்கரசி மகளிர் கலை மற்றும் அறிவியல் கல்லூரி, பரவை, மதுரை

மக்கள் வாழக்கூடிய பகுதிகளம் என்ற சொல்லால் அழைக்கப்பட்டது. களம் என்பதற்கு இடம் (கூடுமிடம், ஒரு செயல் நடக்குமிடம்) என்று பொதுவாகப் பொருள் கூறப்படுகின்றது. ஆடுகளம் என்பது விளையாடுமிடம் என்றும் தொழில் செய்யும் இடம் தொழிற்களம் என்றும் வழங்கப்படுகிறது. அது போல் போர் நடக்குமிடம் போர்க்களமாகும். போர் நடைபெறும் போர்க்களத்தின் நிகழ்வுகளை நம் கண்முன்னே தோன்றுமாறு புலவர்கள் இலக்கியங்களில் பதிவு செய்துள்ளனர். போரில் நடைபெறும் நிகழ்வுகளைப் பலதரப்பட்ட காட்சிகளாக்கி இலக்கியங்கள் விரிவாக விளக்கியுள்ளன. இத்தகைய கள வருணனைகள் போர்க்களக் காட்சிகளை நெஞ்சில் பதியவைக்கும் முயற்சிகளாக இடம் பெற்றுள்ளன. இக்காட்சிகளின் வழி போர்வீரர்களின் மெய்பாடுகளையும் காணமுடிகிறது. வீரத்தினைவெளிகாட்டும் இடத்து வீரர்களிடையே பெருமித உணர்வு மேலோங்கி உள்ளதைக் காணமுடிகிறது.

போர்க்களத்தில் எழும் ஒலிகளை கேட்கும் போது ஒரு விதமான அச்சம் மனதில் தோன்றுவதை உணர முடிகிறது. போர்க்களத்தில் பகைநாட்டவரைக் காணும் வீரர்கள் வெகுண்டெழுவதையும் போரில் நிகழும் உயிரிழப்புக்கள் அவலச்சுவையை ஏற்படுத்தியுள்ளதையும் இலக்கியங்கள் பதிவு செய்துள்ளன. போரின் இறுதியாக இரு தரப்பினரில் யாரேனும் ஒருவர் வெற்றி பெற்று உவகையுடன் நாடுதிரும்பியுள்ளனர்.

**பெருமிதம்**

போருக்குரிய காரணங்களுள் ஒன்றாக வீரர்களின் மறவுணர்வும், வீரமரணம் பற்றிய நம்பிக்கையும் காணப்படுகின்றன. "மறவர்களின் மிகைப்பட்ட மறப்பண்பு போருக்குத் தோற்றுவாயாக அமைந்துள்ளது. தன்னுறு தொழிலினராய் மறவர்கள் விளங்குவதும், அவ்வாறு விளங்கும் மறவர்களின் வீரமேம்பாட்டை வெட்சித்திணைப் பாடல்கள் விளக்குவதும் இதற்குச் சான்றாகும்"[1] எனப் போருக்குவீரர்கள் மறவுணர்வும் அதனால் ஏற்படும் பெருமித உணர்வும் ஒரு காரணமாக அமைந்துள்ளதை அறிஞர் குறிப்பிடுவர்.

"அமரில் அமரர் உலகு அடைந்தாலும் சரி வெற்றி வாகை சூடினாலும் சரி, வீரர் தம் வாழ்வும் சாவும் அக்கால மக்களால் பாராட்டப்பட்டன"[2] ஆயர்குல மகளிர் கொல்லேறுதழுவும் வீரனைமணந்து கொள்ள விரும்பியுள்ளனர். காளையின் கொம்புக்கு அச்சம் கொள்பவனை ஆயர் மகள் அடுத்த பிறவியில் கூடக் கணவனாக ஏற்கமாட்டாள் என்பதை,

> **"கொல்லோற்றுக் கோடு அஞ்சுவானை மறுமையும்**
> **புல்லாளே ஆயமகள்" (கலி. 103)**

என்று குறிக்கிறது கலித்தொகை. வீரனைத் தன் கணவனாகப் பெறுவதனையே பண்டைய பெண்கள் சிறப்பாகக் கருதி பெருமிதம் கொண்டுள்ளனர்.

புறநானூற்றுத் தாய் தன் மகனை வீரன் எனக் கூறிக் கொள்வதிலேயே பெருமைப் பட்டுள்ளதை,

**"வெள்ளை வெள்யாட்டுச் செச்சை போலத்**
**தன்னோர் அன்ன இளையர் இருப்பப்**
**பலர் மீது நீட்டிய மண்டை என் சிறுவனைக்**
**கால் கழி கட்டிலில் கிடப்பித்**
**தூவெள் அறுவை போர்ப்பித் திலதே"**
**(புறம். 286)**

என்றும்,தன் மகன் களிறெறிந்து விழுப்புண்பட்டுக் களத்தில் மாண்டான் எனக் கேட்ட நரைமுதிர்ந்த தாயொருத்தி அவனை ஈன்றபொழுதினும் பெரிது வந்து கண்ணீர் விட்டுள்ளதை,

**"மீன்உண் கொக்கின் தூவிஅன்ன**
**வால்நரைக் கூந்தல் முதியோள் சிறுவன்**
**களிறுஎறிந்துபட்டனன் என்னும் உவகை**
**ஈன்றஞான்றினும் பெரிதே,கண்ணீர்**
**நோன்கழைதுயல்வரும் வெதிரத்து**
**வான்பெயத் தூங்கியசிதரினும் பலவே"**
**(புறம். 277)**

என்றும், சங்ககாலத் தாய்மார்கள் மகனின் இழப்பைவிட அவனது வீரச்செயல் கண்டு பெருமிதம் கொண்டதை,

**"கொண்ட வாளொடு படுபிணம் பெயராச்**
**செங்களம் துழவுவோள் சிதைந்து வேறாகிய**
**படுமகன் கிடக்கைகாணூஉ**
**ஈன்றஞான்றினும் பெரிதுஉவந் தனளே!"**
**(புறம். 278)**

என்றும் புறப்பாடல்கள் எடுத்துரைக்கின்றன.

போர்க்களத்தில் வீரமரணம் அடைந்த வீரனைப் பெற்றதாய் தன் மகனின் வீரச்செயல் குறித்து மிகவும் பெருமிதம் கொண்டாள். அப்போது அவளுடையவற்றிய முலைகளில் பால் ஊறிச் சுரந்தன என்பதை,

**"இடைப்படை அழுவத்துச் சிதைந்து வேறாகிய**
**சிறப்புடையாளன் மாண்புகண் டருளி**
**வாடுமுலை ஊறிச் சுரந்தன**
**ஓடாப் பூட்கைவிடலைத் தாய்க்கே"**
**(புறம். 295)**

என்றுரைக்கிறது புறநானூறு.

ஒரு ஆண்மகன் வீரப்பண்புடையவனாக விளங்குவதையே ஆணும் பெண்ணும் பெருமிதமாக எண்ணியுள்ளனர். ஆண் மக்கள் தம் வீரப்பண்பை வெளிப்படுத்தகளம் தேவைப்பட்டது. அந்தக் களம் போர்க்களமாகத் திகழ்ந்துள்ளது. ஆண்மகனின் வீரப்பண்புகளை நிரூபிக்க போர்க்களம் தேவைப்பட்டதால் வீரம் போற்றப்பட்ட தோடு பெருமிதமாகவும் கருதப்பட்டது.

**அச்சம்**

எட்டுத் திசைகளும் அதிரும் படியாகப் போர்க்களத்தில் ஒலிகள் எழுப்பப்பட்டன. இவ்ஒலிகள் மக்களுக்கு அச்சத்தையும் அதிர்ச்சியையும் ஏற்படுத்தி பார்ப்போரும் கேட்போரும் பயந்து நடுங்கும் படியாக இருந்ததோடு மக்களின் காதுகளைச் செவிடாக்கும் தன்மையுடையதாகவும் இருந்துள்ளது. படைகள் போர்க்கெழும் போது எழுந்த ஒலிகளும், போரிட்ட போது எழுந்த ஒலிகளும், வெற்றி பெற்ற போதும் தோல்வியைத் தழுவிய போதும் எழுந்த ஒலிகளும் உலகே நடுங்கும் படியாக இருந்தன என்பதை இலக்கியங்கள் எடுத்துரைக்கின்றன. வீரக் கழலணிந்த வீரர்கள் போர் முரசின் அழைப்பைக் கேட்க விரும்புகின்றனர் என்பதை,

**"பொதுவில் தூங்கும் விசியுறு தண்ணுமை**
**வளிபொரு தெண்கண் கேட்பின்**
**அதுபோரென்னு மென்னையுமுளனே"**
**(புறம்.89)**

என்கிறது புறநானூறு. ஆரவார ஒலியுடன் பகைவர்களைக் கொன்று அழித்ததை,

**"............ வயின் வயின்**
**உடன்று மேல் வந்தவம் பமள்ளரை**
**வியந்தன்றும் இழிந்தன்றும் இலனே அவரை**
**அழுந்தப் பற்றிஅகல் விசும்பு ஆர்ப்புஎழக்**
**கவிழ்ந்து நிலம் சேர அட்டதை**
**மகிழ்ந்தன்று மலிந்தன்றும் அதனினும் இலனே"**
**(புறம்.77)**

என்று புறநானூறு பதிவு செய்கிறது.

குட்டுவன் சேரல் போர் செய்த போர்க்களம் பல்வேறு ஒலிகளைக் கொண்டிருந்தது. உலகில் இருளையெல்லாம் போக்கும் கதிரவன் மறையாத நடுப்பகல் பொழுதில் வெள்ளிய நரிகளின் ஊளையும், கோட்டான்களின் ஓசையையும் உடையதாகப் போர்க்களம் விளங்கியதை,

**"ஞாயிறு கோடா நண்பகல மயத்துக்**
**கவலைவெண்ணரி கூஉமுறைபயிற்றிக்**
**கழல்கட் கூகைக் குழறுகுரற் பாணிக்**
**கருங்கட் பேய்மகள் வழங்கும்"**
**(பதிற்.22)**

என்று பதிற்றுப்பத்து விளக்குகின்றது. போர்க்களத்தில் நரி ஊளையிடுதல், கூகைக் குழறுதல், பேய்மகள் ஆடுதல் ஆகிய நிகழ்வுகள் இரவுப் பொழுதில் நிகழக்கூடியவை. ஆனால் சேரன் பகைவரோடு பொருத போர்க்களத்தில் நடுப்பகலில் இத்தகு ஆரவார ஒலிகளைக் கேட்க முடிகிறது என்பது படிப்போருக்கும் அச்சத்தை கொடுப்பதாக அமைந்துள்ளது.

அச்சத்தைத் தோற்றுவிக்கும் போர் ஒலிகள் இயற்கையை பாதிப்பதோடு மனிதனின் உள்ளத்திலும் அமைதியற்ற நிலையையும் உருவாக்குகின்றன. போருக்கான ஒலியைக் கேட்கும் போது வீரர்கள் தன்னிலையை இழந்து போர் வெறிக்கு உள்ளாகின்றனர். அளவுக்கு மீறிய ஒலிகளால் மனிதன் தன் கேட்கும் திறனை இழக்கவும் வாய்ப்புள்ளது.

## வெகுளி

போர்க்களத்தில் படைகளும் படைவீரர்களும் ஒருவரை ஒருவர் தாக்கிக் கொள்ளும் செயல் காண்பவர்களை அதிரவைப்பதாக உள்ளது. போரில் தான் வெற்றி பெற வேண்டும் என்பதை மட்டுமே குறிக்கோளாகக் கொண்டு பல உயிர்களைக் கொன்று குவிக்கும் அளவிற்கு கோபமும் கொலை வெறியும் கொண்டவர்களாகப் போர் வீரர்கள் தோன்றினர். பகைவர்களை அழிக்கும் வேகமும், துடிப்பும், ஆவேசமும் இருப்பதைப் போரிட்ட முறைகளால் அறிய முடிகிறது.

அதியமான் நெடுமான் அஞ்சி போர்க்களத்தில் போரிட்டசெயல்பாட்டை,

**"வலம்படுவாய்வாள் ஏந்தி ஒன்னார்**
**களம்படக் கடந்த கழல் தொடித் தடக்கை"**
**(புறம்.91)**

என்றும்,

**"நீயே ஐயவி புகைப்பவும் தாங்காது ஒய்யென**
**உறுமுறை மரபின் புறநின்று உய்க்கும்**
**கூற்றத்து அனையை" (புறம்.98)**

என்றும் புகழ்கின்றார் ஔவையார்.

அதியமான் எழினி பகைவர் பலரைக் கொன்று வீழ்த்திட வல்லவனாகத் திகழ்ந்ததை,

**"ஒருவன் ஆர்உயிர் உண்ணாய் ஆயின்**
**நேரார் பல் உயிர் பருகி,**
**ஆர்குவை மன்னோ, அவன் அமர் அடுகளத்தே"**
**(புறம். 230)**

என்கிறது புறநானூறு.

மனிதன் தனக்குள் வைத்திருந்த சினம், கோபம், வெறுப்பு போன்றவற்றை ஒன்று சேர்த்து வெளிப்படுத்தும் இடமாகப் போர்க்களம் இருந்துள்ளதை அறிய முடிகிறது. மனித உயிர்களை பொருட்படுத்தாமல் வெற்றி ஒன்றை மட்டும் எண்ணிச் செய்யும் போர்களால் மனித மாண்பு சிதைவதை உணர முடிகிறது.

## அழுகை

உறவுகளே மனித குலத்தை இயக்குகின்றன. போரின் போது பலரும் தன்னுடைய உறவுகளை இழந்து வருந்து கின்றனர். தாய் மகனையும், பிள்ளைகள் தந்தையையும், மனைவி கணவனையும், மக்கள் மன்னனையும் இழந்து துயர் உற்றனர். ஏழினி தகடூரிலே போர் செய்து போர்க்களத்தில் இறந்தான். பெற்றத்தாயை இழந்த குழவி போல் அவன் சுற்றத்தினர் வருந்தினர். மக்கள் கடும்

பசியால் வருந்திய நெஞ்சோடு வாடினர் என்பதை,

**“பொய்யா எழினி பொருதுகளம் சேர**
**ஈன்றோள் நீத்த குழவி போலத்**
**தன்அமர் சுற்றம் தலைத்தலை இனையக்**
**கடும்பசி கலக்கிய இடும்பைகூர் நெஞ்சமொடு”**
**(புறம். 230)**

என்கிறது புறநானூறு.

இளையவரும் முதியவருமாக ஊரார் பலர் பகைப்புலத்தை நோக்கிச் சென்றனர். இடைவழியில் நடந்த போரில் முதியவளின் மகன் புண்பட்டு வீழ்ந்தான். புகைவரை முறியடித்துத் துரத்திய பின் தரையில் விழுந்து கிடந்த அந்த வீரனை எழுப்ப முயன்றனர். அவன் எழவில்லை. விழுப்புண்பட்ட அவன் மார்பு மண்ணைத் தழுவப் பிணமாய் கிடந்தான். அவன் இறந்த செய்தி அவன் தாய்க்கு எட்டியது. ஆவனை நாள்தோறும் பாராட்டி மகிழ்ந்த அந்த முதியவளின் உள்ளம் துயருற்றது. அவளது இரங்கத்தக்க நிலையை,

**‘‘புள்ளார் யாணர்த் தற்றேஎன்மகன்**
**வளனும் செம்மலும் எமக்குஎனநாளும்**
**ஆனாதுபுகழும் அன்னை**
**யாங்குஆகுவள்கொல் அளியள் தானே”**
**(புறம். 254)**

என்கிறது புறநானூறு.

போருக்கு முன்னும் பின்னும் பாரி மகளிரின் நிலையை ஒப்பிட்டுப் பார்க்கும் போது, பாரி மகளிர் மயிலாடும் சோலை சூழ்ந்த குன்றின் மீது ஏறி நின்று போர் தொடுக்க வந்திருக்கும் பகைவரையும் அவர்தம் குதிரைப் படைகளையும் கண்டனர். ஆனால் அப்போது அவர்கள் மனத்தில் அச்சம் தோன்றவில்லை. முாறாக ஆர்வம் தோன்றியது. உடனே அங்கிருக்கும் குதிரைகளை ஒன்று இரண்டு என்று எண்ணத் தொடங்கினர். ஆனால் போருக்குப் பின்பு அவர்கள் கண்டகாட்சி பெரிதும் இரங்கத்தக்கது. சின்னச் சிறுகுடிசை, அதைச் சூழ்ந்த முள்வேலி, அருகே பீர்க்கங்கொடி படர்ந்த குப்பைமேடு, அதில் நின்று அவ்வழியே செல்லும் உப்பு வண்டிகளை ஒன்று இரண்டு என எண்ணினர் என்று தந்தையை இழந்த மகளிரின் நிலையைக் கபிலர்,

**“பாரிமாய்ந்தெனக் கலங்கிக் கையற்று**
**நீர்வார் கண்ணேம் தொழுநிற் பழிச்சிச்**
**சேறும் வாழியோபெரும்பெயர்ப் பறம்பே**
**கோல்திரள் முன்கைக் குறுந்தொடிமகளிர்**
**நாறுஇருங் கூந்தல் கிழவரைப் படர்ந்தே”**
**(புறம். 113)**

**‘‘………….பீரைநாறியசுரைஇவர்**
**மருங்கின்**
**ஈத்தலைக் குப்பைஏறிஉமணர்**
**உப்புஓய் ஒழுகைஎண்ணுபமாதோ**
**(புறம். 116)**

என்று பதிவு செய்கின்றார். போர்க் களத்தில் தன் கணவன் இறந்தான் என்ற செய்தியை அறிந்த மனைவி போர்க்களம் சென்று தன்னுடைய தனிமைத் துயரை நினைத்து கதறிப் புலம்புவதனை புறநானூறு குறிப்பிடுகின்றது.

**“என்திறத்துஅவலம் கொள்ளல் இனியே**
**வல்வார் கண்ணி இளையர்,திளைப்ப**
**நகாஅல்எனவந்தமாறேஎழாநெல்**
**பைங்கழைபொதிகளைந் தன்னவிளர்ப்பின்,**
**வளைஇல் வறுங்கைஓச்சிக்**
**கிளையுள் ஒய்வலோ? கூறுநின் உரையே”**
**(புறம். 253)**

சோழனுடைய போர்க்களத்திலே கணவனை இழந்த பெண்கள் நான்கு திசைகளிலும் அலறி ஓடுகின்றனர். இக்காட்சி மரங்கள் அடர்ந்த சோலையில் பெருங்காற்றுப் புகுந்து வீசுவதைக் கண்டு அஞ்சி மயிலினங்கள் வெவ்வேறு திசைகளிலே சிதறி ஓடுவதைப் போல இருந்தது என்பதை,

**“கடி காவில் காற்றுஉற்றுஎறியவெடிபட்டு**
**வீற்றுவீற்றுஓடும் மயில் இனம் போல் - நாற்றிசையும்**
**கேளிர் இழந்தார் அலமருபசெங்கண்**
**சினமால் பொருதகளத்து”**
**(கள.நா. 29)**

என்று பொய்கையார் குறிப்பிடுகிறார்.

போர், ஒரு தரப்பினருக்கு வெற்றியையும் மற்றொரு தரப்பினருக்குத் தோல்வியையும் தந்தாலும் உயிர் இழப்புஎன்பது இருதிறத்துப் படைகளுக்குமே பொருந்தும். போரினால் மக்கள் உறவுகளை இழந்து தங்கள் எதிர்காலம் கேள்விக் குறியாகி நிற்க மிக்கவருத்தத்தையே சந்திந்துள்ளனர். வீரம் போற்றப்பட்டாலும் இழப்பு என்பது மீண்டுவராத ஒன்றாகி நிற்கும் போது வருந்துவதும் அழுவதும் மனித இயல்பு என்பதனை உணர முடிகிறது.

**அவலச்சுவை**

இலக்கியங்கள் பலவற்றிலும் இரத்தம் தோய்ந்த போர்க்களம் காட்சிப்படுத்தப் படுகிறது. போர்க்களத்தில் இரத்தமானது ஆற்றுநீர் போலவும் கடல் போலவும் பெருக்கெடுத்து ஓடியது. அதில் மனித உடல்களும், விலங்குகளின் உடல்களும், படைக்கலன்களும் அடித்துச் செல்லப்படுகிறது. இவ்வாறு தமிழ் இலக்கியங்கள் குருதி பாய்ந்த போர்க்களத்தைக் காட்சிப்படுத்துகின்றன.

குருதி பாய்ந்தோடும் போர்க்களத்தை புறநானூறும், பதிற்றுப்பத்தும் காட்சிப்படுத்து கின்றன. என்பதனை,

**“கொய்சுவல் புரவி....**
**வளிவழக் கறுத்தவங்கம் போலக்**
**குருதியம் பெரும்புனல் கூர்ந்தொழிந் தனவே”** **(புறம். 368)**

என்று புறநானூறும்,

**“நெய்த்தோர் தொட்ட செங்கைமறவர்**
**நிறம்படு குருதிநிலம் படர்ந் தோடி**
**மழைநாட் புனலினவற்பரந் தொழுக”**
**(பதிற். 49)**

என்று பதிற்றுப்பத்தும் குறிப்பிடுகின்றன.

போர்க்களத்தில் புண்பட்டதாலும் பகைவர்களால் யானையின் தும்பிக்கை வெட்டப்பட்டதால் அவைவலியில் துடித்ததையும், காவலாயிட்ட தோற் பரிசையினையும் கிழித்துக் கொண்டு அம்பு பாய்ந்ததால் குதிரைகள் புல் உண்ணமுடியாதநிலையில் இருந்ததையும்,

**“எடுத்தெறி எ.்.கம் பாய்தலின் புண்கூர்ந்து**
**பிடிகணம் மறந்தவேழம் வேழத்துப்**
**பாம்புபதைப் பன்னபரூஉக்கைதுமியத்...**
**வைந்நுனைப் பகழி மூழ்கலிற் செவிசாய்த்து**
**உண்ணாதுஉயங்கும் மாசிந் தித்தும்”**
**(முல்.பா. 68-74)**

என்று குறிப்பிடுகிறது முல்லைப் பாட்டு.

போர்க்களத்தில் யானைகளும், குதிரைகளும் அம்புதைக்கப்பட்டும் வாளால் வெட்டப்பட்டும் வலியுடன் துடித்ததை இலக்கியம் வழி அறிய முடிகிறது. சோழனது போக்களத்தில் யானையின் கழுத்துக்குக் கீழ் மார்புப் பகுதிகளில் வேல் அம்புகள் பாய்ந்து வலியை ஏற்படுத்தின. இந்நிலையில் பாகர் துணையின்றி வலியைப் பொறுத்துக் கொண்டு உடல் நடுங்க யானைகள் நிலங்களில் மலைகள் போன்றுகிடந்தன என்பதை,

**“இணைவேல் எழில் மார்வத்து இங்க,புண் கூர்ந்து**
**கணைஅலைக்குஓல்கியயானை,துணை இலவாய்,**
**தொல் வலியின் தீரா, துளங்கினவாய் மெல்ல**
**நிலம் கால் கவவுமலைபோன்றசெங்கண்**
**சினமால் பொருதகளத்து”** **(கள.நா. 21)**

என்கிறது களவழி நாற்பது.

களவழி நாற்பது போர்க்களம் குருதி படிந்து குருதிக் கடலாக விளங்கியதை பல

பாடல்களில் எடுத்துரைக்கிறது. குளத்தின் கரையிலுள்ள மதகுகளின் வழியாக நீர் பாய்வது போன்று களத்தில் கிடந்த முரசின் வழியாக யானையின் குருதியானது இடையறாது பெருக்கெடுத்து ஓடியதை,

**''ஞாட்பினுள் எஞ்சியஞாலம் சேர்,யானைக் கீழ்ப்**
**போர்ப்பு இல் இடி முரசின் ஊடு போம் ஒண் குருதி**
**கார்பெயல் பெய்த பின்,செங்குளக் கோட்டுக் கீழ்**
**நீத் தூம்புநீர் உமிழ்வபோன்றுபுனல் நாடன்**
**ஆர்த்துஅமர் அட்டகளத்து''**

**(கள.நா. 2)**

என்றும், யானைகள் இரத்த வெள்ளத்தில் குளித்ததால் சிவந்த உடலைப் பெற்று சாதிலிங்கமலை போன்று விளங்கியதை,

**''அஞ்சனக் குன்று ஏய்க்கும் யானைஅமர் உழக்கி**
**இங்குலிகக் குன்றேபோல் தோன்றுமே''**

**(கள.நா. 07)**

என்றும் காட்சிப்படுத்துகிறது.

போர்க்களத்தில் சிதைந்த உடல்களின் நிலைபடிப்பவர் உள்ளத்தில் வியப்பையும் அச்சத்தையும் ஏற்படுத்துகின்றன. மனிதன் மனிதாபிமான உணர்வை இழந்து தன்னை ஒத்த சக மனிதர்களையும் பிற உயிரினங்களையும் சிதைத்துக் கொன்று குவிப்பது மனிதமனம் கல்லாகிப் போனதைக் காட்டுகிறது.

**உவகை**

போரின் வெற்றியைக் கொண்டாடும் விதமாகக் கள் குடித்து மகிழ்ந்துள்ளனர். இதனைத் தொல்காப்பியர் உண்டாட்டு என்று குறிப்பிடுகிறார். போரில் வெற்றி பெற்ற மறவர்கள் கள் உண்டு களித்து உவகை கொண்டதை இலக்கியம் வழி அறிய முடிகிறது.

மன்னர்கள் வீரர்களுக்குத் தன் கையாலேயே கள் வழங்கியுள்ளனர். இதனை,

**"புத்தகல் கொண்டபுலிக்கண் வெப்பர்**
**ஒன்று இரு முறை இருந்துஉண்டபின்றை"**
**(புறம். 269)**

**"நறவும் தொடுமின் விடையும் வீழ்மின்**
**பாசுவலிட்டபுன்கால் பந்தர்ப்**
**புனல்தரும் இளமணல் நிறையப் பெய்மின்" (புறம். 262)**

என்ற பகுதிகள் உணர்த்துகின்றன.

வெற்றி பெற்ற படைவீரருக்கு எப்போதும் ஒளி மங்கிடாத பொன்மலர்கள் வழங்கப் பட்டதையும் இறையிலி நிலங்கள் வழங்கப் பட்டதையும் போரில் இறந்து பட்ட வீரர்களின் பெயரால் அவர் தம் உறவினர்க்கு ஊர்கள் பரிசளிக்கப் பட்டதையும்,

**"ஓடல் செல்லாப் பீடுடையாளர்**
**நெடுநீர்ப் பொய்கைப் பிறழிய வாளை**
**நெல்லுடைநெடுநகர்க் கூட்டுமுதல் புரளும்**
**தண்ணடைபெறுதல்" (புறம். 287)**

என்று குறிப்பிடுகிறது புறநானூறு.

போரில் வென்ற சேரன் செங்குட்டுவன் கங்கையின் தென்கரையில் அமைந்திருந்த படை வீட்டில் மகிழ்ந்திருந்தான். தன் மகிழ்ச்சிக்குக் காரணமாகிய தனது படை வீரர்கள் வருக என அழைத்துப் பொன்னால் செய்தவாகைப் பூவினை ஒரு நாள் முழுவதும் கொடுத்துக் கொண்டிருந்தான். அதன் பின் பாடும்வகை அறிந்து பாடிய புலவருக்கும் பரிசில்களை வழங்கினான் என்பதை,

**"நீணில மன்னர் நெஞ்சுபுகல் அழித்து**
**வானவர் மகளிரின் வதுவை சூட்டுஅயர்ந்தோர்**
**.................................................................**
**புறம் பெறவந்தபோர்வாள் மறவர்**
**வருகதாம் எனவாகைப் பொலம்தோடு**
**.................................................................**
**பாடுதுறைமுற்றியகொற்றவேந்தன்**

**ஆடுகொள் மார்போடுஅரசுவிளங்கு இருக்கையின்”**

**(சிலம்பு. 27(25-47))**

என்று குறிப்பிடுகிறது சிலம்பு.

வெற்றி பெற்ற மன்னன் தன் வெற்றியின் மகிழ்வினைத் தம் வீரர்களுடன் பகிர்ந்து மகிழ்கின்றான். அவன் தன் வீரர்களுக்கு விருந்தளித்தும், பரிசளித்தும் சிறப்புச் செய்கின்றான். வீரர்களின் தகுதிக்கு ஏற்ப பொன்னாலாகிய மலர்களையும், இறையிலி நிலங்களையும் தருகின்றான். போரில் இறந்து பட்ட வீரர்களின் உறவினர்களுக்கு ஊர்களைத் தருகின்றான். வீரர்களுக்குப் பரிசுகள் வழங்குவது என்பது மன்னனின் கொடையின் அடையாளமாகக் கருதப்படுகிறது. இது உவகையின் வெளிப்பாடும் ஆகும்.

## முடிவுகள்

போர்க்களத்தில் பல்வேறு வகைப்பட்ட மெய்ப்பாடுகளைக் காண முடிகிறது. வீரர்கள் தங்கள் வீரத்தினை உலகிற்கு வெளிப்படுத்துவதில் பெருமிதம் கொண்டவர்களாக இருந்துள்ளனர். போர்க்களத்து எழும் ஒலிகளும் வீரர்களின் செயல்களும் மனித, விலங்குகளின் குருதி நீரில் குறைவுற்ற உடல்கள், இறந்தவர்களின் உடல்கள் மூழ்கிக் கிடக்கின்ற காட்சிகளும் மனிதர்களிடத்தில் அச்சத்தையும் அவலத்தையும் தோற்றுவிப்பதோடு வீரர்கள் தன் வீரத்தை வெளிப்படுத்துவதிலும் தன் நாட்டிற்காகக் கடமையாற்றுவதிலும் பெருமிதம் கொண்ட தோடு பகை நாட்டு வீரர்களைக் காணும் போது வெகுண்டெழுந்துள்ளதையும் அறிய முடிகிறது. போரின் நிறைவாக வீரர்களுக்குப் பரிசளித்தும் அவர்களை ஊக்கு வித்தும் மன்னர்கள் தங்கள் கொடைத்திறனை வெளிப்படுத்தியுள்ளனர். இந்நிலையில் வீரர்கள் தன் நாட்டிற்கு கிடைத்த வெற்றியையும் தனக்கு கிடைத்த பரிசுகளையும் கண்டு மனம் மகிழ்ந்துள்ளனர் என்பது போர்க்கள மெய்ப்பாடுகளாகக் காணப்படுகின்றன.

## அடிக்குறிப்புகள்

1. அரங்க இராமலிங்கம், சங்க இலக்கியத்தில் வேந்தர், ப.138.
2. கதிர் மகாதேவன், ஒப்பிலக்கிய நோக்கில் சங்ககாலம், ப. 59.

# முக்கூடற்பள்ளில் காணலாகும் அறிவியலும் ஆன்மீகமும்

**ச. கவிதா**
பகுதி நேர முனைவர் பட்ட ஆய்வாளர்
ஏ.பி.சி. மகாலெட்சுமி மகளிர் கல்லூரி, தூத்துக்குடி
மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக் கழகம்
திருநெல்வேலி

**சு. விஜயா கலைவாணி**
ஏ.பி.சி.மகாலெட்சுமி மகளிர் கல்லூரி, தூத்துக்குடி

***ஆய்வுச்சுருக்கம்***
*இலக்கியங்கள் பெரும்பாலும் காதல், வீரம் எனும் இரண்டையும் மையப்பொருளாகக் கொண்டு கருத்துக்களை பதிவு செய்கின்றன. அவ்விலக்கியங்களில் அறிவியல் சிந்தனைகள் இலைமறை காயாக மறைந்திருப்பதை ஆராய்வ தன் மூலம் உணரலாம். அந்த வகையில் முக்கூடற்பள்ளு இலக்கியத்தில் காணலாகும், கார்மேகம், மழைபொழிவு, இடி, மின்னல், வானவில், உயிரியல் கருத்துக்கள் போன்ற ஆன்மீக அறிவியல் சிந்தனைகளை இக்கட்டுரை ஆராய்கிறது.*

## முன்னுரை

பழமையும் சிறப்பும் வாய்ந்த தமிழ் மொழியில் இலக்கியங்கள் சிறந்த இடத்தை வகிக்கின்றன. அவற்றுள் சிற்றிலக்கியங்கள் தமக்கென தனித்த முத்திரையிணைப்பதித்துள்ளது எனலாம். இன்றைய அறிவியல் வளர்ச்சியில் இலக்கியங்களின் பங்களிப்பு பெரிது எனலாம். வானியல் செய்திகள், மழைபொழிவு, கார்மேகம், இடி, மின்னல், வானவில், என்பன போன்ற அறிவியல் செய்திகளை ஆன்மீகம் சார்ந்த சிந்தனைகளோடு இக்கட்டுரை முன் வைக்கிறது.

## அறிவியலும் ஆன்மீகமும்

அறிவியல் என்ற தமிழ் சொல்லுக்கு ஏற்றவட சொல் விஞ்ஞானம் ஆகும். இதற்கு எதிர்மாறான சொல் மெஞ்ஞானம். அதாவது மெய்யான அறிவைப் பெறுவது. ஆன்மீகம் என்பது ஆன்மாவைப் பற்றி அறிதல். அதுவே மெய்யான அறிவு என்பர். அறிவியலால் விளக்க முடியாத பல கருத்துகளை ஆன்மீகம் வழி உணரலாம். பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே ஆன்மீகத்தில் கூறிய கருத்துக்களை தற்போது அறிவியலாளர் உண்மையென நிரூபித்துள்ளனர்.

## முக்கூடற்பள்ளியின் சிறப்புகள்

பள்ளு இலக்கியங்களுள் சிறப்பு வாய்ந்ததாகப் போற்றப்படுவது முக்கூடற்பள்ளு இதன் ஆசிரியர் என்னயினாப் புலவர். முக்கூடலில் கோயில் கொண்டிருக்கும் அழகர் மீது பாடப்பட்டது. முக்கூடல் திருநெல்வேலி மாவட்டத்தில் உள்ள ஊராரும் தாமிரபரணி நதியோடு சிற்றாரும் கயத்தாறும் கூடும் இடமே முக்கூடல் என்று வழங்கப்படுகிறது. பள்ளு இலக்கியங்கள் உழவர்களின் வாழ்வியல் நிகழ்ச்சிகளை எடுத்துக் கூறும் சிறப்பினவாகத் திகழ்கின்றன. இவ்விலக்கியம் 'பள்ளேசல்' என்றும் 'பள்ளிசை' என்றும் வழங்கப்படுகிறது. நெல்லு வகையை எண்ணினாலும் பள்ளு வகையை என்ன முடியாது என்பது முதுமொழி முக்கூடற்பள்ளு இலக்கியத்தில் வழக்கில் இருந்த பழமொழிகள் பயின்று வருவது சிறப்பிற்குரியதாகும்.

**கார்மேகமும் கைலாயமும்**

மழை மேகங்கள் நீர்நிறைந்து இருப்பதால் கருப்பாகவும், சிலசமயம் வெளிரிய வண்ணமாகவும் தோன்றும். இதனை தமிழில் கார்மேகம், கருமேகம், நீர்மேகம், நிறைமேகம் என்று அழைப்பர். கடல் நீரானது ஆவியாகி மேலெழுந்து பின் பூமியில் மழையாக பொழிகிறது என்று முல்லைப் பாட்டு கூறுகிறது.

**"நனந்தலைஉலகம் வளைஇ நேமியோடு**
**நீர்செலநிமிர்ந்தமால் போல்"**[1]

என்னும் வரிகளில் நப்பூதனார் மழை பொழிவு பற்றி கூறும் கருத்து முக்கூடற்பள்ளுவிலும் இடம் பெற்றிருக்கிறது.

**"வேலாவலய முந்நீர் மேய்ந்து கருக் கொண்ட முகில்**
**காலான தூன்றியந்தக் காலமுறை காட்டியதே"**

என்று மழைபொழிவிற்கான அறிவியல் காரணத்தை கூறுகிறார். மேலும்

**"பூவுக் குயர்ந்தகலைமின் னோடு**
**மேவிக் ககலத் தயனுமாய்ப்**
**புனலைத் தரித்துவரையிலேறிக்**
**கனலைத் தரித்தசிவனுமாய்த்"**

- என்று கார்மேகம் மலையில் படிவதைப் பார்ப்பதற்கு சிவனைப் போல் தோன்றுவதாக இறைவழி அறிவியில் கருத்தினை கூறுவது சிறப்புக்குறியது.

**கார்மேகமும் கார்மேக வண்ணனும்**

மேகத்தில் உள்ள நீர்த்துளிகளில் சூரிய ஒளி ஊடுருவி சிதறலடைந்து எதிரொலிப்பதால் உருவாகும் நிகழ்வே வானவில் மேகங்கள் கடல்நீரில் படிவதால் வானவில் தோன்றுவதாக ஆசிரியர் கூறுகிறார்.

**"கடலிற் படிந்துதிருவிற் கோட்டி**
**அடல்முக் கூடல் அறியுமாய்"**

- மேலும் அவ்வானவில் முக்கூடலில் கோவில் கொண்டுள்ள திருமாலின் பார்ப்பதற்கு தோற்றம் போன்று காட்சியளிப்பதாக கூறுகிறார்.

**கார்மேகமும் கருநாகமும்**

கருக்கொண்ட மேகங்கள் வானில் ஒன்றொடு ஒன்று மோதுவதால் இடி முழக்கம் தோன்றும். இடி முழக்கத்தின் போது பூமியில் ஏற்படுகின்ற அதிர்வினால் பாம்புகள் அஞ்சி நடுங்கும் என்று முத்தொள்ளாயிரம் நூல் கூறுகிறது.

**"அருமணிஐந்தலைஆடரவம் வானத்த**
**உருமேற்றைஅஞ்சி ஒளியும்"**[2]

- இக்கருத்தினை முக்கூடற்பள்ளின் ஆசிரியரும், மேகங்கள் பாம்புகள் நடுங்கும் இடி முழக்கத்துடன் தோன்றும் என்பதை

**"தாவிப் பறந்துபணிகள் பதுங்கக்**
**கோவித் தெழுந்து கருடனும்"**[6]

- என்னும் வரிகளில் கூறுவதன் மூலம் உயிரியல் சார்ந்த கருத்துக்கள் வெளிப்படுவதை அறிய முடிகிறது.

**மின்னல்**

மேகங்கள் ஒன்றுடன் ஒன்று உரசும் போதோ, வேறு காரணங்களாலோ ஏற்படுகின்ற மின்னூட்டத்தின் ஒளிக்கீற்றினை மின்னல் என்கிறது அறிவியல் தென் மற்றும் கிழக்குத் திசையில் மின்னல்கள் தோன்றினால் மழை பொழிவு இருக்கும் என்று மக்கள் நம்புகின்றனர்.

**"மலையாள மின்னல் ஈழமின்னல்**
**சூழ மின்னுதே!**
**நேற்று மின்னுங் கொம்பு சுற்றிக்**
**காற்றடிக்குதே"**

காற்று சூழன்று வீசினால் மழை பொழிவு இருக்கும் என்கின்ற வானியல் செய்திக்களையும் இவ்வரிகள் மூலம் அறியலாம்.

**ஊனும் உயிரும்**

மழைவளம் இல்லையேல் இவ்வுலகில் எவ்வுயிரும் நிலைத்திருக்க இயலாது. இயற்கை செழிக்கவும் உயிர்கள் இயங்கவும் நீர்வளம் முதன்மையானது.

**நீரின்றமையாதுலகெனின் யார்யார்க்கும்**
**வானின்றமையாதொழுக்கு**[3]

என்பது வள்ளுவன் வாக்கு இக்கருத்தினையே நற்றினையும் நவில்கிறது.

**“நீரின்றமையாஉலகம் போலத்**
**தம்மின் றமையாநந்நயந் தருளி”**[4]

மேலும் உலக உயிர்களுக்கு இன்றியமையாதது நீர் வளம் என்பதை

**“தானேயாகிஉலகுக் குரிமை**
**ஊனேயாகிஉயிருமாய்”**

என்னும் முக்கூடற்பள்ளின் வரிகள் மூலம் உணரலாம்.

**முடிவுரை**

ஆன்மீகத்தில் அறிவியல் சிந்தனைகள் கூறியிருப்பதை இலக்கியங்கள் வழி அறியலாம். கடல் நீரை முகர்ந்த மேகமானது மீண்டும் அந்நீரை மழையாக பூமியில் பொழிகிறது என்றும் சூரியனின் ஒளிக்கதிர்கள் மேகங்களில் படிவதால் வானவில் தோன்றுகிறது என்றும் இலக்கியங்கள் வாயிலாக அறிந்து கொள்ளலாம். இடி முழக்கத்தினால் ஏற்படும் நில அதிர்வினால் புறசெவி இல்லாத பாம்புகள் அஞ்சி நடுங்கும் என்னும் உயிரியல் கருத்துக்கள் இடம் பெற்றுள்ளன. மின்னல்கள் எதிர்த்து மின்னினாலும் காற்று சுழன்று வீசினாலும் மழைபொழியும் என்ற மக்களின் நம்பிக்கைகளிலும் அறிவியல் கருத்துகள் இருப்பதை அறிய முடிகிறது. இது போன்ற அறிவியல் செய்திகள் முக்கூடற்பள்ளுவில் இடம் பெறுவதை இக்கட்டுரை வழியாக அறியமுடிகிறது.

**அடிக் குறிப்புகள்**

1. முல்லைப்பாட்டு—பா— 15 முனைவர். இரா.மோகன் நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், சென்னை—ஐந்தாம் பதிப்பு— அக் - 2014
2. முத்தொள்ளாயிரம் - பா — 56 — உரையாசிரியர் சா.டேவிபிரதாப்சிங், மாணிக்கவாசகர் பதிப்பகம், சென்னை-முதற்பதிப்பு — 2002
3. திருக்குறள் - குறள்எண் 20 பதிப்பாசிரியர் குன்றக்குடி பொன்னம் பல அடிகளார், உலகத் திருக்குறள் பேரவை, சிவகங்கை, முதற்குறிப்பு— 2016
4. நற்றினை—பா—1—உரையாசிரியர், வெ.பாலசுப்பிரமணியன், நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், சென்னை—ஐந்தாம் பதிப்பு— 2014

# கோளறு பதிகம் உணர்த்தும் ஆன்மிக அறிவியல்

**முனைவர் ச. சகுந்தலை**
உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை
பூ சா கோ கலை அறிவியல் கல்லூரி, கோயம்புத்தூர்

*ஆய்வுச் சுருக்கம்*

*எப்பொருள் எத்தன்மைத் தாயினும் அப்பொருள்*
*மெய்ப்பொருள் காண்பது அறிவு.*

*(குறள் 355)*

*எனத் திருவள்ளுவர் பெருந்தகை உணர்த்தியதனை முதன்மையாகக் கொண்டு ஆய்வது அறிவு. இக்குறளே அறிவியலின் அரிச்சுவடி ஆகும். ஆன்மிகம் என்பது ஆன்மக் கொள்கைகளின் பிழிவுச் சாரமேயாகும். அறிவியல் என்பது சிந்தனைகளின் அறிவார்ந்த அலசல் ஆகும். ஆகவே, அறிவியலும் ஆன்மிகமும் ஒன்றையொன்று பிரிக்க முடியாத மலரும் மணமும் போலவாகும். ஆன்மிகத்தில் அறிவியல் நிறைந்திருக்கின்றன. இக்காலச் சூழலில், அவற்றை தெளிவுபட எடுத்துரைத்தல் மிக மிக அவசியமாகிறது. மக்கள் சமுதாயம் இவற்றை உணர்ந்து பயன்பெற வழிவகை செய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும். அவ்வகையில், திருஞானசம்பந்தர் பாடியருளிய கோளறு பதிகத்தினை முதன்மைப் படுத்தி, அதில் ஆன்மீக அறிவியல் செய்திகள் நிறைந்திருப்பதைச் சிந்தித்துப் பயனடைவோம் என்பது உறுதி.*

## முன்னுரை

உலகில் மனித நாகரீகம் தோன்றிய பின் மொழி தான் முதல் அறிவியல் கண்டுபிடிப்பாகக் கருதலாம். ஏனைய செம்மொழிகள் வழக்கிழந்த போதிலும், தெய்வ மொழியாகிய தமிழ் அறிவியல் செய்திகளை உள்ளடக்கி இருப்பதாலேயே, அன்றும் இன்றும் வாழ்ந்து கொண்டிருக்கின்றது: என்றும் வாழும். இறைவனது அருளைப் பெற்ற அருளாளர்களால் பாடியருளப் பட்டவை திருமுறைகள் ஆகும். கி.பி ஏழாம் நூற்றாண்டில் திருஞானசம்பந்தர், மூன்று வயதிலேயே ஞானப்பாலை அருந்தி, பாடியருளிய ஆன்மிகப் பாடல்கள் முதல் மூன்று திருமுறைகளாகப் போற்றப்படுகின்றன. அவற்றில், இரண்டாம் திருமுறையில் 85 வது பதிகமாக உள்ள கோளறு பதிகத்தில் இடம்பெறும் ஆன்மிக அறிவியல் செய்திகளை இறையருளால் ஈண்டு சிந்திப்போம்.

## ஆன்மிகமும் அறிவியலும்

அறிவியல் என்பது, ‘‘உலகில் இரு பன வற்றை இயற்கை நியதிகளைக் கவனித்தும், சோதித்தும், நிரூபித்தும் பெறும் அறிவு அல்லது மேற்குறிப்பிட்ட அறிவை வகைப்படுத்திய ஒரு துறை” என்பது கிரியாவின் தற்கால தமிழ் அகராதி தரும் விளக்கமாகும்.[1]

ஆன்மிகம் என்பது ஆன்ம + இகம் = ஆன்மிகமாயிற்று. ஆன்மிகம் என்பது உடல் ஆன்மா இவற்றிற்கு இடையேயான வேறுபாட்டை குறிக்கும். பொருள் சார்ந்த உலகியல் விசயங்களுடன் முரண்பட்டதாக ஆனால், மனம் கடந்த பெருநிலையை உணர்த்துவது ஆன்மிகமாகும்.(மனம் உடல் இருமைத் தன்மையையும் உணர்த்துகிறது)

“எல்லாச் சாலைகளும் ரோமாபுரியை நோக்கி செல்கின்றன என்ற ஒரு ஆங்கில முதுமொழி உண்டு. இதனை நம் நாட்டு பழமொழி, ஆறுகள் யாவும் ஆழ் கடலை நோக்கிச் செல்கின்றன என்று கூறும். சாலைகளும், ஆறுகளும், ரோமாபுரியும், ஆழ்கடலும் குறியீடுகளாக நின்று ஒரு பேருண்மையை உணர்த்துகின்றன. சமயங்கள் யாவும் இறைவனை அடைய வழிகாட்டுகின்றன என்பது தான் அந்த பேருண்மை”[2] இவ்வறிவியல்

காலத்தில், அறிவியல் ஆன்மிகத்துக்கு வழி அமைப்பதை உணரலாம்.

இவ்வுலகின் மிகப்பெரும் விஞ்ஞானியாகிய ஐன்ஸ்டீன் அறிவியல் இல்லாத இறைநெறி குருட்டுத்தனம் அதே போல் இறை நெறி இல்லாத அறிவியல் முடம் என்று அறிவியலையும் ஆன்மிகத்தையும் இணைத்து குறிப்பிடுகின்றார்.[3] எனவே ஆன்மீகமும் அறிவியலும் ஒன்றை ஒன்று பின்னிப் பிணைந்துள்ளன எனத் தெரிய வருகிறது.

கோளறு பதிகம் (கோள் +அறு + பதிகம்)

திருமறைக்காடு என்னும் வேதாரண்யத்தில், திருஞானசம்பந்த பெருமானும், நாவுக்கரசர் பெருமானும் சைவத் திருத்தொண்டு செய்து கொண்டிருந்தனர். அச்சமயம் பாண்டிய நாடாகிய மதுரையில், சைவம் தாழ்ந்து பிற சமயம் உயர்ந்து இருந்தது. இந்த அவல நிலையை எண்ணி மனம் வருந்திய மங்கையர்க்கரசியார், திருஞானசம்பந்தப் பெருந்தகையாரைப் பாண்டிய நாட்டிற்கு எழுந்தருளும்படி அமைச்சர் குலச்சிறையார் மூலம் அழைப்பு விடுத்தார். திருஞானசம்பந்தரும் மதுரை செல்ல முடிவெடுத்தார். அச்சமயம் சமணர்களால் பல துன்பங்களை அனுபவித்த திருநாவுக்கரசர், சமணர்கள் பொல்லாதவர்கள் நீங்கள் சிறு பிள்ளை ஆகையால் நீங்கள் போக வேண்டாம் எனத் தடுத்தார். மேலும், நாளும் கோளும் நன்றாக இல்லை எனவும் கூறினார். அதற்கு திருஞானசம்பந்தர், நாம் போற்றுவது சிவபெருமானின் திருவடிகள் சார்ந்த சமுதாய நலமே எனவே, இறைவன் அடியார்களுக்கு அவை நல்லவையே செய்யும் என்று கூறி கோளறு திருப்பதிகத்தை பாடியருளினார். முதல் பாடல் தொடங்கி பாடல் தோறும் நான்குமுறை நல்ல நல்ல என்று சொல்லி ஒன்பதாவது பாடலில் மட்டும் மூன்று முறை என மொத்தம் 39 முறை நல்ல நல்ல என்று சொல்லக்கூடிய ஒரே திருப்பதிகம் இக்கோளறு திருப்பதிகம் ஆகும்.

**வேயுறு தோளிபங்கன் விடமுண்டகண்டன்**
**மிக நல்ல வீணை தடவி**
**மாசறு திங்கள் கங்கை முடிமேலணிந்து**
**என் உளமே புகுந்த அதனால்**
**ஞாயிறு, திங்கள், செவ்வாய்,புதன், வியாழன், வெள்ளி,**
**சனி, பாம்பு இரண்டு உடனே**
**ஆசறு நல்ல நல்ல அவை நல்ல நல்ல**
**அடியார் அவருக்கு மிகவே (2 - 85 -1)**

பார்வதி தேவியை ஒரு பாகமாகக் கொண்டு விடத்தை கழுத்தில் வைத்து திருமுடியில் பிறையையும் கங்கையையும் அணிந்துள்ள சிவபெருமான் என் உள்ளத்தில் புகுந்ததனால் கோள்கள் நல்லவையே செய்யும் என்ற அருளியுள்ளார். இதில் கோள்களின் கதிரவீச்சுக்கள் பூமியில் வீழ்வது இயற்கையின் நியதி செவ்வாய் சனி, ராகு கேது ஆகியன அதிக தீமை தரக்கூடியவை என்பது பொதுவான கருத்தாகும்.ஆனால், சூரிய மண்டலத்தில் உள்ள அனைத்து கோள்களும் நன்மை தீமை இரண்டையும் செய்யும் தன்மையுடையன் கோள்களின் தீமையை நீக்கி நன்மை செய்யவே திருஞானசம்பந்தர் இப்பதிகத்தினைப் பாடியருளி உள்ளார். 1962 ஆம் ஆண்டு நடந்த நிகழ்வு அவ்வாண்டில், எட்டு கிரகங்கள் ஒரே ராசியில் கூடியது அந்நிலையில், எத்தனை உயிர்கள் இம்மண்ணில் அழியுமோ என்றஞ்சிய மக்கள், காஞ்சி மகா பெரியவரிடம் சென்று என்ன செய்வது? ஏதாவது ஒரு வழி சொல்ல வேண்டும் என்றனர் அதற்கு அவர், இதற்கு தீர்வு நான் தர வேண்டியது இல்லை. ஏற்கனவே திருஞானசம்பந்தர் பெருமான் கோளறு பதிகம் என்ற மருந்தை அருளி இருக்கின்றார். எட்டு கிரகங்கள் அல்ல, 8,000 கிரகங்கள் ஒன்று சேர்ந்தாலும், ஒன்றும் நேராது. ஆகவே, நீங்கள் பயப்படாமல் ஒன்று கூடி இப்பதிகத்தினை பாடுங்கள் எதிர்வினைகள்

நீங்கும் என்று அருளினார். என்பது இவண் நோக்கத்தக்கதாகும்.

கோள்களின் இயக்கத்தால், நாள்கள், நட்சத்திரங்கள் மாற்றமடைகின்றன. "இந்த உலகை சிவமாகக் கொண்டால் சூரியன் சக்தியாகின்றான். அது போல அணுவின் உட்கருவும் சக்தியாகின்றது. மனிதனின் உயிர்ப்பு ஆற்றல் இதயத்துடிப்பில் இருப்பது போலவே இந்த அகிலத்தின் ஆற்றல் கதிரவனிலும் அணுவின் ஆற்றல் அதன் உட்கருவிலும் அடங்கியுள்ளன[4] என்று கூறுவர். அறிவியல் என்ற அறிவு நுட்பத்திற்கும், நுட்பமாய் விளங்குவது நமது ஆன்மிகம்.

அனைத்து கோள்களுக்கும் பிறப்பிடமாகியும், அக்கோள்கள் தன்னைச் சுற்றிவர நடுவே அசையாது இருத்தலினாலே ஞாயிறு (சூரியன்) கோளரசு என்னும் பெயர் பெறுகிறது. ஜோதிட நூல்களின்படி,

**ஞாயிறு (சூரியன்) - தலை**
**திங்கள் (சந்திரன்)- முகம்**
**செவ்வாய் (அங்காரகன்) - மார்பு**
**புதன் (புதன்)- இடை**
**வியாழன் (குரு) - வயிறு**
**வெள்ளி (சுக்கிரன்)- குதம்**
**சனி (சனி)- தொடை**
**பாம்பு 1 (ராகு) -கைகள்**
**பாம்பு 2 (கேது) - கால்கள் என கோள்களோடு உடல் உறுப்புகளைத் தொடர்புப் படுத்தி காட்டப்பட்டுள்ளன.**

**சித்தர் இலக்கியங்கள்,**

**ஞாயிறு (சூரியன்) —வலது மூக்குத் துவாரம்**
**திங்கள் (சந்திரன்) - இடது மூக்குத் துவாரம்**
**செவ்வாய் (அங்காரகன்) - வலது மூக்கு எலும்பு**
**புதன் (புதன்) -இடது மூக்கு எலும்பு**
**வியாழன் (குரு) - இடது காது**
**வெள்ளி (சுக்கிரனவலது காது**
**சனி (சனி)- கடைநாக்கு**
**பாம்பு 1 (ராகு) குறி**
**பாம்பு 2 (கேது) குதம்**

இவ்வாறு கோள்களோடு உடல் உறுப்புகளைத் தொடர்பப்படுத்தி காட்டுகின்றன. எடுத்துக்காட்டாக, சனி - இதனோடு தொடர்புடைய உடல் உறுப்பு கடைநாக்கு. பொதுவாக சனியின் தாக்கத்தால், அதிகமாக மக்கள் பாதிக்கப்படுகின்றனர் எனச் சொல்லப்படுகிறது. சனியின் வாகனம் காகம். கா கா என அழைத்து காகத்திற்கு சாதம் வைத்தல் என்ற முறையை கடைபிடிக்கும் போது சனியின் தாக்கம் குறைகிறது. இங்கு கடை நாக்கில் ஒலிக்கப்படும் மொழி கா (க்,ங்) என்பதால், அறிவியல் பூர்வமாக நோக்கும் போது, கா கா என்ற ஒலிகளை உச்சரித்தால் கடை அன்னம் அதிர்கிறது. இதனால் சனியின் கதிர்கள், உடலைப் பாதிக்காமல் பாதுகாக்க முடிகிறது. இப்படி இதுபோல ஒவ்வொரு கோளுக்கும் ஒலிகள் உண்டு என்பதை உணர்ந்து திருஞானசம்பந்தர் பெருந்தகை, தாம் பாடிய பதிகத்தில், பொதித்து வைத்தருளியுள்ளார். இவ்வாறு அருளிய பதிகத்தை முழுமையாக நம்பிக்கையோடு அவற்றைப் பாடும்போது, உடல் உறுப்புகள் அதிர்ந்து கோள்களின் தாக்கம் நம்மை ஒன்றும் செய்யாதவாறு இக் கோளறு பதிகத்தினைப் பாடியருளி யுள்ளார்.

மேலும் நல்ல நல்ல என நான்கு முறை ஒவ்வொரு பாடலிலும் ஞானசம்பந்தர் பாடியருளியுள்ளார். அறிவியல் சார்ந்து நோக்கும் போது, எதிர்மறை எண்ணங்கள், செயல்கள் ஆகியனவற்றை தடுக்கிறது. இதனால் நல்ல நல்ல நேர்மறை எண்ணங்கள் செயல்கள் நடைபெறும் என்பது திண்ணம்.

திருஞானசம்பந்தர் கோள்களின் இயக்கத்தை உணர்ந்து அதன் நுட்பம் அறிந்தது அறிவியல் ஆகும். பொதுவாக இயற்கையாக அமைந்த இக்கோள்கள் பூமியில் மானுடத்தை பாதிக்கின்றன. திருஞானசம்பந்தர், கோள்கள் பூமியில் வாழ்கின்ற சமுதாய மக்களுக்கு

பலவாறு தீங்கிழைப்பன என உணர்ந்தார். அதனால், நட்சத்திரங்களில் ஒன்பதோடும் ஒன்று பத்து (ஒன்பதாவது நட்சத்திரம் ஆயில்யம்) மகம் ஒன்பதோடு ஏழு 16 (விசாகம்) 18 (கேட்டை) 6 திருவாதிரை உடனாய நாட்கள் -- பரணி, கார்த்திகை, பூரம், சித்திரை, சுவாதி, பூராடம், பூரட்டாதி ஆகிய இவை அனைத்தும் அடியார்களுக்கு நல்லவையே செய்யும் என அருளியுள்ளார்.

திருமகள், கலைமகள், கொற்றவை, பூமகள், திசை காக்கும் தெய்வங்கள் அடியார்களுக்கு நல்லவையே செய்யும் என்றும், கொதிக்கும் கோபம் நிறைந்த எமன், நெருப்பு, எமதூதர்கள், கொரோனா போன்ற கொடிய வியாதிகள் அடியார்களை வந்து அணுகாது என்றும் அருளுகின்றார். இயற்கை சீற்றங்களாகிய நிலநடுக்கம், இடி, மின்னல், வேறு பல பூதங்களின் சீற்றங்கள் இவை அடியார்களை வந்து அணுகா என்றும், கொடிய விலங்குகள் ஆகிய சிங்கம், புலி, யானை, பன்றி, பாம்பு, கரடி, மனிதக் குரங்கு போன்றவையும் அடியார்களை வந்து வருத்தாது என்றும் அருளுகின்றார். வெப்பொடு குளிர், வாதம், அதிகமான பித்தம், ஏனைய நோய்கள், இடர்கள் அனைத்தும் அடியார்களை வந்து அடையா எனத் தெளிவு படுத்துகின்றார்.

பிறமத தாக்கம், வாழ்வியல் பிரச்சனைகள், மனித உடல், உயிர், மனநடுக்கம், மனநலம் பாதிப்பு ஆகிய அனைத்தையும் திருஞானசம்பந்தர் பட்டியல் இட்டுக்காட்டுகின்றார். இவைகளில் இருந்து மனித சமுதாயம் மீண்டு வாழ வழி வகுப்பதாக இக்கோளறு பதிகத்தைத் திருஞானசம்பந்தர் ஆன்மீக அறிவியலைப் பின்புலமாகக் கொண்டு பாடியருளுகின்றார். இப்பதிகத்தின் பத்தாவது பாடலில்,

**"திருநீறு செம்மை திடமே**
**அத்தகு நல்ல நல்ல அவை நல்ல நல்ல**
**அடியார்அவருக்கு மிகவே"** [5] **(2- 85- 10).**

உண்மையையும், உறுதியையும் உடையது இறைவனது திருவெண்ணீறு ஆகும் என்பதனை தீர்க்கதரிசியாக மதுரைக்குச் செல்வதற்கு முன்பே திருஞானசம்பந்தர் உறுதியாக **திருநீறு செம்மை திடமே** என்று பாடி அருளியம்மை ஆன்மீக அறிவியலாகக் கருத முடிகிறது.

திருநீற்றின் சிறப்பினை மதுரைக்குச் சென்ற பிறகு, திருஞானசம்பந்தர் திருநீற்று பதிகமாகவே பாடியருளியுள்ளார். ஆன்மீகத்தில் அறிவியல் நுட்பம் உள்ளதை தெளிவுபடுத்துதலில் நம் சான்றோர்க்கு இணை இந்த உலகில் யாரும் இல்லை என்றே கூறலாம். அனுதினமும் திருநீற்றை வைத்துக் கொள்வதற்கான செயலில் அறிவியல் நுட்பம் மறைந்துள்ளது. மனித உடலின் நெற்றி என்பது மிக முக்கியமான பாகம் ஆகும் நெற்றியின் வழியாகவே மனித உடலானது அதிக அளவிலான சக்தியை வெளியிடவும் உள்ளிருக்கவும் செய்கிறது. நெற்றியில் உள்ள கெட்ட நீரை இழுத்து விடுவதால், தலைவலி நீங்கும் என்ற மருத்துவமும் நிறைந்தது திருநீறு.

**மந்திரமாவது நீறு வானவர் மேலதுநீறு**
**சுந்தரமாவது நீறு துதிக்கப்படுவது நீறு**
**தந்திரமாவது நீறு சமயத்தில் உள்ளது நீறு**
**செந்துவர் வாயுமைபங்கன் திரு ஆலவாயான் திருநீறு.** [6] **(2-66-1)**

என்று திருஞானசம்பந்தர் திருநீற்றுப் பதிகத்தை தொடங்கி,

**வெந்துயர் தீர்ப்பது நீறு**
**கவினை தருவது நீறு**
**மதியை தருவது நீறு**
**சித்தி தருவது நீறு**
**அவலம் அறுப்பது நீறு**
**பேணி அணிபவர்க்கெல்லாம் பெருமை கொடுப்பது நீறு**
**முக்தி தருவது நீறு**

என்று அருளுகின்றார். முதல் ஆறு பாடல்களில் திரு ஆலவாயான் திருநீறு

என்பதில் திரு என்பது அம்மையை குறிப்பதாகவும், அதுவே அருள் இவ்வருளுடன் கூடிய திருநீறு பாண்டியனின் வலப்பக்க வெப்பநோயைத் தீர்க்கிறது. **“ஒரு சிட்டிகை திருநீறு தான் பாண்டிய நாட்டை புற சமய இருளிலிருந்து மீட்டு எடுத்தது”**[7]

திருநீறு முறைப்படி தயாரித்தல் ஐந்து வகையாக கூறப்படுகிறது. கற்பம், அநுகற்பம், உபகற்பம், அகற்பம், வில்வப்பழம் மூலம் செய்தல் ஆகியனவாகும். பொதுவாக, உலகில் உள்ள பொருளை எரியிலிட்டால் சங்கைத் தவிர மற்றவை கருமையாகும். உதாரணமாக வெள்ளைத்தாள், துணி ஆகியன ஆனால் கரியசாண உருண்டையை எரியிலிட்டால், வெந்து வெண்நீறும் ஆகின்றது. இது ஆணவ மலத்தை எரித்து நீக்குகின்றது. இப்பதிக பாடல்களைச் சொல்லும்போது, மூச்சுப் பயிற்சி தானே சரியாகும். என்பது அறிவியல் உண்மையாகிறது.

ஒன்பது கோள்களும் உலகத்தை வலம் வரும் இக்கோள்களை நம்புகிறவர்கள்,ஈசனை அறியாதவர்கள். முன்பு அதன் மேவி முதல்வனாகிய ஈசன் அருள் இன்பம் பெற மாட்டார். இருள் சூழ வாழ்வார் என்பதனைத் திருமூலர்,

**“ஒன்பதின் மேவி உலகம் வலம் வரும்**
**ஒன்பதும் ஈசன் இயல் அறிவாரில்லை**
**முன்பு அதன் மேவி முதல்வன் அருள் இலார்**
**இன்பம் இலார் இருள் சூழ நின்றாரே”.**[8]
**திருமந்திரம் 1992**

என அருளியிருப்பது இவண் நோக்கத்தக்கது.

திருஞானசம்பந்தர் கோளறு பதிகப் 11ஆவது பாடலில்

**“தாநுறு கோளும் நாளும் அடியாரை வந்து**
**நலியாத வண்ணம் உரை செய்**
**ஆன சொல் மாலை ஓதுமடியார்கள்**
**வானில் அரசாள்வர் ஆணை நமதே”**[9]
(2-85-11)

என நிறைவு செய்கிறார். இப்பதிகத்தில் சொல்லப்பட்ட அனைத்து துன்பங்களுக்கும் காரணம் கோள்கள் என்றவாறு காட்டியருளுகின்றார். இம்முடிவு ஆன்மீக நெறியாகிறது. பொதுவாக மக்கள் கோள்களின் தாக்கத்தை தடுக்கப் பரிகாரங்கள் நவக்கிரகங்களைச் சுற்றுதல் போன்றவற்றை மேற்கொள்கின்றனர். திருஞானசம்பந்தரின் ஆணைப்படி, இறைவனை இறையறா அன்பு கொண்டு சிந்தித்தால், கோள்களால் ஏற்படும் துன்பங்கள் நீங்கும். திரு ஐந்து எழுத்தை இடைவிடாது ஓதினால், மனம் செம்மையாகி உடலும் உயிரும் உறுதி பெறும். 1947 ஆம் ஆண்டு ஆகஸ்ட் 15ஆம் நாள் அன்று நாம் சுதந்திரம் அடைந்தபோது இக்கோளறு பதிகம் ஓதிப் பின் ஆங்கிலேயத் துரையிடம் இருந்து நேரு அவர்களால் செங்கோல் பெறப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது.

## முடிவுரை

அறிவியல் வேறு ஆன்மீகம் வேறு என்னும் கருத்து புறந்தள்ளபபட வேண்டியது. இன்றைய அறிவியல் கோள்களை புறநிலையில் வைத்து ஆய்வு செய்கிறது. ஆன்மீகம் கோள்களை அகநிலையில் ஆராய்ந்து, பின் புறநிலைக்குச் செல்கிறது. நேற்றைய உலகமானது எளிய அறிவியலால் இயங்கிற்று என்றால், இன்றைய உலகம் அறிவியல் கண்டுபிடிப்புகளால் ஆட்டி வைக்கப்படுகிறது எனலாம். இவ்அறிவியல், கோள்கள் பற்றிய ஆராய்ச்சி மக்கள் சமுதாய வசதிக்கு வழி செய்கிறது. ஆனால், ஆன்மீக கோள்கள் பற்றிய ஆராய்ச்சி மானுடம் மனதையும், உடலையும் பாதுகாப்பதோடு, மனித அறிவு, பண்பாடு முதலான பண்புகளை வளர்க்க உதவுகிறது. திருஞானசம்பந்தர் முதலான அருளாளர்கள், அனைவரும் தாம் பெற்ற இறை ஆற்றலை நமக்குப் பாடல்களாக அருளிக் கொடுத்துச் சென்றுள்ளார்கள். **ஈண்டு திருஞானசம்பந்தர் ஆன்மீக அறிவியலாக**

**தாம் உணர்ந்ததை பாடல்களாகப் பாடியருளி மக்கள் சமுதாயம் பயன்பட வேண்டும் என்ற உயர்நோக்கில், நினைத்தது ஆன்மீகம். அதனை பதிகமாக தந்து அருளிய நிலை அறிவியல் ஆகும்.** இப்பதிகத்தில் 39 முறை நல்ல நல்ல என்று சொல்லும் போது உறுதியாக நல்லதே நடக்கும் என்பது அனுபவ உண்மை. **ஞாலம் கருதினும் கைகூடும்.** என்ற திருவள்ளுவரின் வாய் மொழிக்கேற்ப காலம் அறிந்து, இக் கோளறு பதிகத்தினைப் படித்து எக்கொடிய நோய்களும், எத்துன்பமும் நம்மை அணுகாமல், வையத்துள் வாழ்வாங்கு வாழ்ந்து இறையருளை பெறுவோம்.

**அடிக்குறிப்புகள்**


1. பழந்தமிழ் இலக்கியங்களில் அறிவியல் சிந்தனைகள் முனைவர் க.மங்கையர்க்கரசி பக்க எண் - 16, வெளியீடு – 2017 லாவண்யா பதிப்பகம், சென்னை-05
2. ஆன்மீகமும் அறிவியலும் நா சுப்பு ரெட்டியார் பக்க எண் 15 வெளியீடு 1985, பாரிநிலையம், சென்னை-1
3. தமிழ் புதுக்கவிதைகளில் அறிவியல் முனைவர் க.முருகேசன் பக்க எண் - 11 வெளியீடு 2007 சாரதா பதிப்பகம், சென்னை - 05
4. பழந்தமிழ் புலவர்களின் அறிவியல் அறிவாற்றல் முனைவர் ரா. குமரன், பக்க எண் - 30 வெளியீடு - 2018காவியா பதிப்பகம், சென்னை - 24
5. திருஞானசம்பந்தம் மூர்த்தி நாயனார் தேவாரப் பதிகங்கள் தருமையா தீனம் வெளியீடு - 1955
6. திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார் தேவார பதிகங்கள் தருமையா தீனம் வெளியீடு- 1955
7. தமிழ் வேதம் மாத இதழ்சிவ ஆ.பக்தவச்சலம் பக்க எண் - 9 வெளியீடு - 1985 குடியாத்தம், சங்கர் பிரிண்டர் சென்னை - 42
8. திருமந்திரம் திருமூலர் பத்தாம் திருமுறை பக்க எண்- 266 வெளியீடு- 2016 பாடல் எண் - 1961 கற்பகம் பல்கலைக்கழகம், கோவை – 21
9. திருஞானசம்பந்த மூர்த்தி நாயனார் தேவார திருப்பதிகங்கள் தருமையாதீனம், வெளியீடு - 195 5

# சங்க இலக்கியங்களில் வேளாண்மை நுட்பம்

**திருமதி ம. மரிய தெரஸ்**
முதுநிலை தமிழ் ஆசிரியை
கன்கார்டியா மேல் நிலைப் பள்ளி
வடக்கன் குளம்

## முன்னுரை

**சுழன்றும் ஏர்பின்னது உலகம் அதனால் உழந்தும் உழவே தலை** என்ற குறளுக்கேற்ப உலகம் பற்பல தொழில்களைச் செய்து திரிந்தாலும் ஏர்த்தொழிலைச் சார்ந்தே இயங்கிக் கொண்டிருக்கிறது. ஒருவன் எத்தொழிலைச் செய்தாலும் உழவுத்தொழிலின் துணையின்றி உயிர்வாழ இயலாது. எனவே உழவுத்தொழிலே மற்றெல்லாத் தொழில்களிலும் தலையாயது என்பதைத் திருவள்ளுவர் கூறியுள்ளார். வேளாண்மை இன்றோ நேற்றோ நம்முடைய வாழ்க்கையில் கலந்தது கிடையாது. ஆதி மனிதன் சுமார் பத்தாயிரம் வருடங்களுக்கு முன்னரே அவனுக்குத் தேவையான உணவை அவனே விளைவித்து அறுவடை செய்ய ஆரம்பித்துவிட்டான். உலகின் எந்த நாகரீகங்களையும் புரட்டிப்பார்த்தாலும் அவற்றில் வேளாண்மை, மக்கள் வாழ்வியலோடு ஒன்றி இருக்கிறது. ஆதிச்சநல்லூர் அகழ்வாய்வுகளில் முதுமக்கள் தாழியில் நெல்,வரகு,பயிர்களின் உமி கிடைத்திருக்கிறது. நம் தமிழ் இலக்கியங்களிலும் வேளாண்மை அதிகமாக எழுதப்பட்டும் உள்ளன. சொல்லப்போனால் வேளாண்மையோடு தொடர பில்லாத தமிழ் இலக்கியங்களே கிடையாது. அவ்வளவு இறுக்கமாக வேளாண்மை தமிழர் வாழ்வியலோடு கலந்திருக்கிறது. என்பதை இவ்வாய்வு கட்டுரை மூலம் காண்போம்.

**மழை நீரின் முக்கியத்துவம் துப்பார்க்குத் துப்பாய துப்பாக்கி துப்பார்க்கு துப்பாய தூஉம் மழை**

(குறள் 12)

உண்பவர்க்கு உணவுப் பொருளை விளைவித்து தருவதும், தானும் ஒரு உணவாக இருப்பதும் மழையாகும். 'மாரியல்லாது காரியமல்லை' என்ற பழமொழிக்கேற்ப மனித வாழ்வின் அடிப்படைத் தேவை உணவு, உடை, உறைவிடம். இவற்றுள் முதலிரண்டும்வேளாண்மையை ஆதாரமாகக் கொண்டவை. வேளாண்மையோ நீரை அடிப்படையாகக் கொண்டது.மழையே பயிர்க் கூட்டமும் உயிர் கூட்டமும் மகிழ்ச்சியாக வாழப் பெருந்துணைப் புரிகிறது.

**நீர் இன்றி அமையா யாக்கைக்கு எல்லாம்
உண்டி கொடுத்தோர் உயிர் கொடுத்தோரே!
உண்டி முதற்றே உணவின் பிண்டம்
உணவெனப்படுவது நிலத்தொடு நீரே
நீரும் நிலமும் புணரியோர் ஈண்டு
உடம்பும் உயிரும் படைத்திசினோரே!**

(புறம்.18)

நீர் இன்றி அமையாத உடல் உணவால் அமையாது உணவையே முதன்மையாகவும் உடையது. எனவே உணவைத் தந்தவர் உயிரைத் தந்தவர் என்று நீரின் இன்றியமையாமையும் எடுத்துரைக்கின்றது.

## நிலப்பாகுபாடு

தமிழின் மிகப்பழமையான நூலான தொல்காப்பியம் நிலத்தை ஐந்திணைகளாக பிரித்துள்ளது.

**மலையும் மலை சார்ந்த இடமும் குறிஞ்சி
காடும் காடு சார்ந்த இடமும் முல்லை
வயலும் வயல் சார்ந்த இடமும் மருதம்
கடலும் கடல் சார்ந்த இடமும் நெய்தல்
மணலும் மணல் சார்ந்த இடமும் பாலை**

இந்த பகுத்தல்களோடு அந்தந்த பகுதிகளில் வாழும் மக்களின் வாழ்க்கை முறை, உணவு பழக்க வழக்கங்கள், அங்கு வாழும் செடி கொடிகள், விலங்குகள், கடவுள்கள் என அனைத்தையும் விவரித்துள்ளனர். விளை நிலங்களை அதன் தன்மைக்கு ஏற்ப பிரித்துள்ளனர். அவை வன்புலம், மென்புலம், பின்புலம், களர்நிலம் ஆகும்.

**வன்புலம்**

குறிஞ்சி, முல்லை பகுதிகளில் உள்ள நிலம் கரடு முரடாகவும் நீர் குறைந்து இருப்பதாலும் அவற்றை வன்புலம் என்றனர்.

**வன்புலக் காட்டு நாட்டதுவே**
**(நற்றிணை 59)**

**மென்புலம்**

நீர் வளம் அதிகமாக இருப்பதாலும், வேளாண்மை செய்ய ஏற்ற நிலமாக இருக்கும் மருத நிலத்து மண்ணை மென்புலம் என்று அழைத்தனர்.

**மென்புல வைப்பின் நன்நாட்டுப் பொருந**
**(புறம் 42:15)**

**புன்புலம்**

இயற்கையான நீர் பாசன வசதியில்லாமல், செயற்கையாக மனிதனால் பாசனவசதி ஏற்படுத்தபபட்ட நிலத்தினைப் புன்புலம் என்று அழைத்தனர்.

**புன்புலம் வித்தும் வன்கை வினைஞர்**
**(பதிற்றுப்பத்து 58:15)**

**களர் நிலம்**

எந்தவித வேளாண்மை பயன்பாட்டிற்கும் உதவாத நிலத்தினைக் களர்நிலம் என்றனர். புறநானூறு இதனை புறங்காடு என்று குறிப்பிடுகிறது.

**களர்படு கூவல் தோண்டி நாளும்**
**புலைத்தி கழீஇய தூவென் அறுவை**
**(புறநானூறு 311, 312)**

**நிலத்தைப் பதப்படுத்துதல்**

நிலத்தைப் பதப்படுத்தி அதை விவசாயத்திற்கு தயார் செய்வதில் தமிழர்கள் கைத்தேர்ந்தவர்களாக இருந்தனர். நிலத்தை ஏரினால் உழுவதின் மூலம், மண்ணில் காற்றோட்டம் அதிகமாக கிடைத்து பயிர் முளைப்பதை அதிகப்படுத்துகிறது. உழுத வயலின் மேடு பள்ளங்களைச் சரிசெய்ய 'தளம்பு' என்ற கருவியைப் பயன்படுத்தியதாக இந்த புறநானூறு வரி சுட்டுகிறது.

**"மலங்குமிளிர் செறுவின் தளம்பு தடித்திட்ட" (புறம் 61:3)**

உழுத இடங்களில் கால்நடைகளின் சாணத்தையும் இலைதழைகளையும் எருவாகப் பயன்படுத்தினர்.

**காஞ்சித் தாது உக்கன்ன தாது எருமன்றத்து (கலித்தொகை 108:60)**

நிலத்தை உழுபவன் பலம் புழுதி காற்புலம் ஆகுமாறு காயச்செய்து பயிரிடுவானாயின் அந்நிலத்திற்கு ஒரு பிடி எருவும் இடவேண்டாம் என்கிறது.

**விதையைத் தெரிவுசெய்தல்**

வேளாண்மையில் விதைகளைத் தேர்வு செய்து அவற்றைப் பூச்சி தாக்காமல் பாதுகாத்துக் கொள்வது எவ்வளவு முக்கியம் என்பதைத் தமிழர்கள் உணர்ந்துள்ளனர்.

**குறித்து மாறு எதிர்ப்பை பெற அமையின் குரல் உணங்கு விதைத்திணை**
**(புறம் 333:11-12)**

இப்பாடலில் விதைகளைக் காயவைத்து விதைக்க பயன்படுத்தியது கூறப்பட்டுள்ளது.

**கருவிகளும் உத்திகளும்**

நெற்கழனிகள் காளைகளின் உதவியுடன் உழப்பட்டன. கழனியில் தழைகளை விவசாயிகள் தங்கள் கால்களை வைத்து மிதித்து மூழ்கடித்தனர். நாற்றுகள் வளர்ந்த பின்னர் அவற்றை இடம் மாற்றி நட்டனர்.

களையெடுப்பதைப்பற்றி திருக்குறளில் ஒரு அரசன் நாட்டை பராமரிப்பதுடன் ஒப்பிடப்படுகிறது. பயிர் சுழற்சி முறை பின்பற்றப்பட்டது. ஒரே பருவத்தில் பருத்தியும் சிறுதானியங்களும் பயிரிடப்பட்டது.

விவசாயத்தின் அடிப்படை கருவியான ஏரை 'நாஞ்சில் கலப்பை' என்று அழைத்தனர். பயிரிடும் நிலத்தை சமப்படுத்த 'பரம்பு கருவி' பயன்படுத்தப்பட்டது. 'பள்ளியாடுதல்' என்பது களை எடுக்கவும் பயன்பட்டது. பயிர்களுக்கு உள்ள நெருக்கத்தைக் குறைக்கவும் பயன்பட்டது. கிணறுகளிலிருந்து நீரெடுக்க 'கபில' என்ற தொழில் நுட்பத்தைப் பயன்படுத்தினர். பறவைகள் விலங்குகள் சேதப்படுத்தாமல் இருக்க 'கவண்' மற்றும் 'கவண்வில்லை'பயன்படுத்தினர். அறுவடை அரிவாள் கொண்டு நடத்தப்பட்டது.

**விதைக்கும் காலம்**

'ஆடிப்பட்டம் தேடி விதைத்தல்' என்ற பழமொழிக்கேற்ப மழை வரும் காலங்கள் அறிந்து நம் முன்னோர் வேளாண் தொழில் செய்தனர். மழை வருமுன் ஏற்படும் அறிகுறிகள் என்னென்ன என்பதைப் பற்றிய இன்றைய வானிலை அறிக்கைகளை அன்றே நம் சிற்றிலக்கியமான 'உழத்திப்பாட்டு' என்றழைக்கப்படும் 'பள்ளு' இலக்கியத்தில் கூறப்பட்டுள்ளது.

**ஆற்று வெள்ளம் நாளைவரத்**
**தோற்றுதேகுறி மலையாள**
**மின்னல்ஈழமின்னல் சூழ மின்னுதே**
**நேற்று மின்னும் கொம்புச் சுற்றிக்**
**காற்றடிக்குதே— கேணி**
**நீர் சொறித்தவளை கூப்பிடுதே!**
**சேற்றுநண்டு சேற்றில் வளை ஏற்றடைக்குதே!**
**மழைதேடி யொருகோடி வானம்பாடி பாடுதே**
**(பள்ளு)**

**நீர்ப்பாசனம்**

'நீரின்றி அமையாது உலகம் என்ற நற்றிணை வரிகளிலே தமிழன் நீரை எவ்வண்ணம் போற்றினான் என்பதை அறிய முடிகிறது. குளங்கள்,ஏரிகள்,அணைகள் மூலம் விவசாய நிலங்களுக்குக் நீர் கொண்டுவரப்பட்டன. கிணறு வெட்டி நிலத்தடி நீரை பயன்படுத்தவும் மக்கள் கற்றுக்கொண்டிருந்தனர். மாடுகளையும் எறுமைகளையும் வைத்து நீரை இரைத்தனர். அனைத்து மக்களுக்கும் நீர் கிடைப்பதற்கு அதிகாரிகள் பணி செய்வது கடமையாயிருந்தது.

**அறையும் பொறையும் மணந்த தலையை**
**ஏண்நாள் திங்கள் அணையக்**
**கொடுங்கரை**
**தெண்ணீர் சறுகுளம் கள்வது மாதோ**
**(புறம் 18:1-3)**

இந்த புறநானூற்றுப் பாடலில் ஒரு ஏரி எப்படி இருக்க வேண்டுமென்று விவரிக்கப்படுகிறது. நிறைய நீர் சேமிக்கும் வகையிலும் பிறை வடிவிலும் இருக்க வேண்டும் என்கிறது. மழை நீர், ஆற்றுநீர், ஊற்று நீர் ஆகியவற்றை சிறிய பெரிய நீர் நிலைகளில் சேமிக்க வேண்டும் அதனை வேளாண்மைக்குப் பயன்படுத்த வேண்டும் என்பதை நம் முன்னோர் திட்டமிட்டுப் பயன்படுத்தினர்.

**பயிர் பாதுகாப்பு**

**செல்லான் கிழவ நிருப்பின் நிலபுலத்து**
**இல்லாளின் ஊடி விடும்**
**(குறள் 1039)**

கணவன் தன்னிடத்து வந்து தனக்கு வேண்டிய கடமைகளைச் செய்யாமல் போனால் மனைவி எப்படி ஊடுவாளோ அதை போல நாள்தோறும் நிலத்திற்குச் சென்று பயிர் பாதுகாப்பு செய்யாதவனை நிலமும் ஊடும் என்கிறார் வள்ளுவர். பூச்சிகளும் கால்நடைகளும்

தாக்காத வண்ணம் பயிரைக் காத்தல் வேண்டும்.

**எருவிடல் களை நீக்குதல்**

நிலத்தை உழுது எருவிடல் பயிருக்கு நன்று. களையை அகற்றிக் காத்தல் அதற்கு நீர்பாச்சுவதைவிட நன்று. பயிர் நிலத்தில் வேரூன்றும் வரை அந்நிலத்தை நன்றாக உழுவது இன்றிமையாததும் வேண்டப்படுவதாகும். உழுதுவிட்டு வெறும் மண்ணில் பயிர் செய்தால் பயிர நன்றாகச் செழித்து வளராது. எனவே எருவிடுதல் அவசியம் என்பது தோன்ற ஏரினும் எருவிடுதல் நன்று எனச் சிறப்பிக்கப்படுகிறது.

**ஏரினும் நன்றால் எருவிடுதல் கட்டபின்**
**நீரினும் நன்றதன் காப்பு**

**(குறள் 1038)**

இயற்கை உரங்கள் மட்டுமே சங்க காலத்தில் பயன்படுத்தப்பட்டது. உழவிற்கு முன்னும் பின்னும் வயல்களில் இயற்கை உரங்களைப் பயன்படுத்தினர். கால்நடைகளின் கழிவுகள் பசுந்தாள், உரப்பயிரான தக்கைப் பூண்டு, அகத்தி, கணப்பை, முல்லி அவுரி முதலியன பயன்படுத்தப்பட்டன. நட்டபின் வயலில் வளர்ந்த நாற்றின் முதலிலை சுருள் விரித்தது. அப்பருவத்தைக் கண்ட உழவர் இதுதான் களையெடுக்கும் பருவம் என்றார்.

எந்நிலமாயினும் அதை நன்னிலமாக்கும் மண்புழு வேளாண்மைக்கு சிறந்த உரமாக பயன்படுகிறது. என்பதை,

**உழைப்போர் உமைப்பில் உழுவோர் தொழில்படும்**
**உழுவோர்க் கெல்லாம் வேந்துநீ**
**எம்மண்ணாயினும் நன் மண்ணாக்குவை**

என மனோன்மணியம் குறிப்பிடுகிறது.

**அறுவடை செய்தல்**

அறுவடைக்குத் தயாரான முற்றிய செந்நெற்கட்டுகளை அடுக்கிப் போராகக் குவிப்பர் என்பதை,

**எரிதரு செந்நெற் சூட்டின் அடுக்கிய**
**அடுக்கல் சேர்ப்பார்**

**(பெரியபுராணம் 73)**

நெற்கற்றைகள் குவிந்த பெரிய மலை போன்ற போரை மேலேயிருந்து சாயச் செய்வர். பெரிய வண்டிகளைச் செலுத்தும் கருமையான எருமைக் கூட்டங்கள் வலமாகச் சுற்றிச் சுற்றி மிதிக்கும் இத்தோற்றமானது கரிய மேகங்கள் பெரிய பொன்மலைச் சாரல் மீது வலமாகச் சுற்றுகின்ற காட்சி போல் இருக்கும் என்பதை,

**சாலியின் கற்றை துற்ற தடவரை முகடு சாய்த்துக்**
**காலிரும் பகடு போக்கும் கரும்பெரும் பாண்டில் ஈட்டம்**
**ஆலியமுகிலின் கூட்டம் அருவரைச் சிமயச் சாரல்**
**போல்வலங் கொண்டு சூழும் காட்சியில் மிக்கதன்றே**

**(பெரிய புராணம் 74)**

**பண்ட மாற்று**

பண்டைய தமிழகத்தில் பண்டமாற்று முறையே வழக்கில் இருந்தது. மருத நிலத்தில் விளைந்த நெல்லுக்கு நிகராக நெய்தல் நிலத்தின் உப்பு பண்டமாற்று பொருளாகக் கருதப்பட்டது.

**நெல்லின் நேரே வெண்கல் உப்பு**

**(அகநானூறு 140:7)**

**நெல்லும் உப்பும் நேரே**

**(அகநானூறு 390:8)**

**நாட்டுப்புற இலக்கியங்களில் வேளாண்மை**

நாட்டுப்புற இலக்கியங்கள் படிக்காத பாமர மக்களிடம் உருவானவை. களையெடுக்கும் போதும், நீர் இறைக்கும் போதும், அறுவடை காலத்திலும் ஓய்வு நேரங்களிலும் அவர்களது அனுபவ அறிவால் உருவாக்கப்படுபவை. நாட்டுப் பாடல்களும் பழமொழிகளும், விடுகதைகளும் பழந்தமிழர் அறிவு மரபின் நீட்சி எனலாம். தமிழக நாட்டுப்புற

இலக்கியங்களான பாடல்கள், கதைப்பாடல்கள், பழமொழிகள், விடுகதைகள், நம்பிக்கையில் வேளாண்மை செய்திகள் இடம் பெற்றுள்ளன.

**காய் காய்க்கும் மரம்**
**பழம் பழுக்காத மரம்**
**இது எந்த மரம்?**
**முருங்கை மரம்**
**பயிரின் வயது பற்றி**
**எள்ளும் தெனயும் எழுபது நாள்**
**எள்ளும் கொள்ளும் எழுபது நாள்**

என்பது அறிவியல் செய்தியுள்ள பழமொழி ஆகும்.

**பயிர் இடைவெளி பற்றி**
**நண்டோட நெல்லு……**
**நரியோட கரும்பு …….**
**வண்டியோட வாழை……**
**தேரோட தென்னை……..**

என அறிவியல் உண்மையை விளக்கி நிற்கிறது.

## வேளாண் மேலாண்மை

இலக்கியம் நம் இதயத்தில் புதைந்து எப்போது வேண்டுமானாலும் கிளர்ந்து விடுகிற விதை. மனித இனம் தோன்றிய போதே மேலாண்மையும் குளிர்த்து விட்டது. வேளாண்மைக்குள்ளும் மேலாண்மைக் கூறுகள் உண்டு. சரியான பயிரைத் தேர்ந்தெடுத்தல், உரிய நேரத்தில் விதைத்தல், நீர் மேலாண்மையை நெறிப்படுத்தல், அறுவடைக்குப் பின் பாதுகாத்தல், உரிய விலை வரும் வரை இருப்பு வைத்தல் என்று ஒவ்வொரு கட்டத்திலும் விழிப்புணர்வும் பொறுப்புணர்வும் நிருவாக நெறியும் இருந்தால் தான் வேளாண்மை செழிக்கும். கம்பராமாயணத்தில் தசரதன் தன் நாட்டை மிகவும் செப்பமாகவும் நுணுக்கமாகவும் ஆட்சி செய்தான். என்பதைக் கம்பர்,

**வையகம் முழுவதும் வறிஞர் ஓம்பும் ஓர்**
**செய் எனக் காத்து இனிது அரசு**
**செய்கிறான்**

**(பாலகாண்டம் 179)**

வறியவன் ஒருவன் தன் சிறு வயலைப் பாதுகாப்பது போல, இவ்வுலகம் முழுவதையும் பாதுகாத்து மிகச்சிறந்த முறையில் ஆட்சி செய்தான் என்று கூறப்பட்டுள்ளது. மனமே ஒரு வேளாண்மைக்குட்பட்ட மேலாண்மை உடையதே.

## முடிவுரை

மனித உயிரகள் வாழ அடிப்படையாக விளங்குவது வேளாண்மை அதனால் தான் உழவு உலகிற்கு அச்சாணி! என்று வள்ளுவரும், உழவுக்கும் தொழிலுக்கும் வந்தனை செய்வோம் என்று பாரதியாரும், போற்றுகின்றனர். எந்த ஒரு துறையும் அழிகிறது என்றால் அதாவது அடுத்த தலைமுறைக்கு அது கடத்தப்படாமல் போகிறதென்றால் அதன் பழமையும், வரலாறுப் பெருமையும் உரைப்படாமல் போவதே காரணம். வேளாண்மையும் அப்படித்தான். இக்கட்டுரையில் குறிப்பிட்டவை எல்லாம் மேலோட்டமான பார்வைதான். இன்னும் எவ்வளவோ வேளாண் நுட்பங்கள்களை நம் இலக்கியங்கள் தாங்கி நிற்கின்றது. அவற்றை அடுத்த தலைமுறைக்கு எடுத்துச் செல்வது நம் கடமை. இயற்கையிலிருந்து விலகி மண்ணுக்கும் மண்ணில் வாழும் உயிரகளுக்கும் ஊறு விளைவிக்கின்ற நிலை மாறவும் இயற்கை வேளாண்மை புது பொலிவு பெறவும் கரம் கோர்ப்போம்.

உழைப்போம் ! உயர்வோம் !

# புறநானூற்றில் விஞ்ஞான அறிவியலும் மருத்துவ முறைகளும்

**முனைவர் அ. வசந்தி**
உதவிப்பேராசிரியர்
தமிழ்த்துறை போப் கல்லூரி, சாயர்புரம்

***ஆய்வுச் சுருக்கம்***
*விண்மீனின் ஈர்ப்பு விசையின் ஒன்றுக்கொன்று சுழற்சி முறையில் சுழன்று கொண்டிருக்கும் ஓய்வு என்று இல்லா கடின உழைப்பாளிகள் கோள்கள். இந்தக் கோள்களின் சுழற்சியில் ஒன்றுப் பிரிந்து விட்டாலும் விண்ணிலும் மண்ணிலும் மாற்றம் ஏற்படுகிறது. அந்த மாற்றங்களை அறிவியல் முறைகளிலும் சிந்திக்கின்றனர் புலவர்கள். நம்பிக்கையில் தீய நம்பிக்கைகள், நல்ல நம்பிக்கைகள் என்ற இரண்டு நம்பிக்கையின் வரிசையில் இணைத்து வாழ்க்கையில் ஏற்படுகிற சிக்கல்களுக்கு தீர்வு காண்கின்றனர். மருத்துவத் துறையில் நோய்கள் வராமல் பாதுகாக்கும் விழிப்புணர்வையும், தோள்களில் வடுக்கள் ஏற்படாதவாறு மருந்துகள் பயன்படுத்துவதையும் உணவு முறையில் நீர், கீரை, தேன் சிறந்த மருத்துவ உணவாக விளக்கியிருப்பதைஇக்கட்டுரையில் காணலாம்.*

## முன்னுரை

தமிழர் தங்கள் இலக்கியங்களில் நிலா, ஞாயிறு, எரிநட்சத்திரம், விண்மீன்கள், வானவில், பௌர்ணமி, அமாவாசை, கோள்களின் சுழற்றி போன்றவைகளின் இயக்கங்களை தங்கள் வாழ்க்கையுடன் இணைத்திருப்பதைப் பார்க்க முடிகிறது. வானில் நடைபெறுகின்ற செய்திகளை விஞ்ஞானப் புலவர்கள் இன்றைய அறிவியல் அறிஞர்களின் கண்டுபிடிப்புகளை விட வியக்கத்தக்கவாறு மன்னனின் படைப்புலன் மற்றும் மன்னனின் வாழ்க்கையின் இடர்பாடுகளை கோள்களின் சீற்றத்தில் விளக்கியுள்ளனர். மருத்துவ முறையில் உணவு முறைகள் சரியாக இருந்தால் நோயின்றி வாழலாம் என்பதை விளக்குவதாக இக்கட்டுரை அமைந்துள்ளது.

## விசம்பை கணித்த அறிஞர்கள்

**“செஞ்ஞாயிற்றுச் செலவும் அஞ்ஞாயிற்றுப்
பரிப்பும் பரிப்புச் சூழ்ந்த மண்டிலமும்
வளிதிரி தரு திசையும்
வறிது நிலைஇய காயமும் என்றிவை
சென்றளந் தறிந்தோர் போல என்றும்
இணைத்து என்போகும் உளரே அனைத்தும்
அறிவு அறிவாகாச் செறிவினையாகித்”**

**(புற.பா.30) (1)**

விண்வெளிக்குச் செல்லாமல் விண்ணின் செயல்களைச் சொல்லும் அறிவுப் படைத்த அறிஞர்கள்.சூரியனின் பயணம் அதனைச் சுற்றியுள்ள கோள்கள் (மண்டிலம்) காற்றுச் செல்லும் திசையும் ஆதாரம் இல்லாமல் நிற்கும் வானம் என்று இவற்றை எல்லாம் நேரில் சென்று அளந்ததுப் போல் கணித்துச் சொல்லும் அண்டை நாட்டு படைவீரர்களின் அறிவியல் பார்வைகளைச் சாத்தனார் என்னும் பெரும்புலவர் சோழன் நலங்கிள்ளியிடம் கூறுகிறார்.

## உவுவமதியை (முழுநிலா) வணங்குதல்

**“முந்நீர் நாப்பண் திமில்சுடர் போலச்
செம்மீன் இமைக்கும் மாசு விசும்பின்
உச்சி நின்ற உவவுமதி கண்டு
கட்சி மஞ்ஞையின் சுரமுதல் சேர்ந்த”**

**(2)(பா.எண்.60)**

உவுவமதி என்றால் பௌர்ணமி, கடலின் நடுவே உள்ள மரக்கலங்களிலுள்ள விளக்குப்

போல சிவந்த விண்மீன் ஒளிரும். ஆகாயத்தின் உச்சியில் முழுநிலவு இருந்தது.

**“வலன் இரங்கு முரசின் வாய்வாள்**
**வளவன் வெயில் மறைக் கொண்ட**
**உருகெழுசிறப்பின மாலை வெண்குடை**
**ஒக்குமால் எனவே” (3)(பா.எண்.60)**

வெயிலை மறைப்பதற்காக அவன் கொண்ட அச்சம் பொருந்தியச் சிறந்த மாலை அணிந்த குடைப் போன்றது அந்த முழு நிலா என்று நினைத்து அவ்வாறு தொழுதோம். பௌர்ணமி அன்றுக் கடலில் மீன்கள் துள்ளி விளையாடுவதையும் மாந்தர்கள் தெருவீதியில் அச்சமில்லாமல் பிரயாணம் செய்வதையும், படைவீரர்கள் மற்றும் உப்பள வியாபாரிகளின் பிரயாணத்தில் சிக்கல்கள் ஏற்படாதவாறு வழிகாட்டும் உவவுமதியை வணங்குகிறோம்.

**எரிமீன் விழுதல்**

கூடலூர்கிழார் ஒரு வானியல் கணியர் என்று அழைக்கலாம். அவர் ஒருநாள் எரிமீன் ஒன்று வானத்திலிருந்து விழுந்தது. அந்தக் காட்சியைக் கண்ணுற்றப் புலவர் அப்போது இருந்த வானத்து விண்மீன்களின் இருப்பிடங்களையும் தன் நாட்டு அரசன் யானைக் கட்சேய் மாந்தரஞ்சேரலின் பிறந்த நாளில் இருந்த விண்மீன் நிலைகளையும் ஒப்பிட்டுக் கணித்துப் பார்த்தார். அரசன் ஏழாம் நாள் இறந்து விடுவான் என்பதைக் கணித்தறிந்தார். தான் கணித்தப்படி அரசன் இறக்கும் நாள் வந்தது. தான் கணித்த அந்த நாளிலேயே அரசன் இறந்தான். அதுகண்டுத் தன்னை விரும்பிய மகளிரையும், தான் விரும்பிய மகளிரையும் மறந்து விட்டு அரசன் போய்விட்டானே என்று வருந்திப் பாடியப் பாடல்.

**“ஆடு இயல் அழல் குட்டத்து**
**ஆர் இருள் அரை இரவில்**
**மூடப் பனையத்து வேர் முதலாக்**
**கடைக் குளத்துக் கயம் காய**
**பங்குனி உயர் அழுவத்துத்**
**தலைநாள் மீன் நிலை திரிய**
**நிலை நாள் மீன் அதன் எதிர் ஏர்தர**
**தொல் நாள் மீன் துணைபடிய**
**பாசிச் செல்லாது ஊசி முன்னாது**
**அளக்கர்த் திணை விளக்காகக்கனை**
**எரிபரப்பு கால் எதிர்பு பொங்கி.**
**(4)(பா.எண் 229)**

**“கைம்மீன் புகையினும், தூமம் தோன்றினும்”**
**(117) (5)**

சனிமீன் புகைமூட்டத்துடன் புகையைக் கக்கிக் கொண்டே எரிமீன் விழுதல். இவ்வாறு எரிமீன் விழுவதை இயற்கைச் சீற்றங்கள் எனலாம்.

**வெள்ளிமீன்**

பண்டைக் காலத்தில் இயற்கையோடு இயற்கையாக மக்கள் இயைந்த வாழ்க்கை வாழ்ந்தனர். விண்ணில் நடைபெறுகிறச் செய்திகளைப் பார்வையிட்டு தங்கள் சமுதாயத்தில் ஆண்டு முழுவதும் மக்கள் பஞ்சமில்லா வாழ்க்கை எவ்வாறு வாழலாம் என்ற விழிப்புணர்வுகளை அறியத் தூண்டும் விதமாக பாடல் அமைந்துள்ளது.

**“அலங்கு கதிர்க் கனலி**
**நால்வயின் தோன்றியினும்**
**இலங்கு கதிர் வெள்ளி**
**தென்புலம் படரினும் (புற.35) (6)**

இப்பாடலில் வெள்ளிமீன் தென்திசையில் தோன்றியுள்ளது. அதனால் மழைப் பெய்து விடும் என்கின்றனர். கதிரையுடைய கதிரவன் நான்கு திசைகளிலேத் தோன்றினாலும், விளங்கும் கதிரையுடைய வெள்ளி தென்திசையிலேச் சென்றாலும் அழகான குளிர்ந்தக் காவிரியாறு பலக் கால்வாய்களாக ஓடி உண்பிக்கும் என்கிறார்.

**விண்மீன்களின் இயக்கம்**

**“வெங்கதிர்ச் செல்வன் போலவும் குடதிசைத்**
**தண்கதிர் மதியம் போலவும் நின்று**
**நிலைஇயர் உலகமோடு உடனே”**
**(7)(பா.56)**

நிலவு குளுமையானக் காட்சியை அளிக்கிறது. சூரியன் ஒளிமிக்கச் சுடராக உலாவுவதைக் காணமுடிகிறது.

**மருத்துவ முறைகள்**

மருத்துவத் துறையில் ஈடுபடுகிற மருத்துவராக இருந்தாலும் நாடிப் பார்க்கின்ற முறைகள் இருந்தன. முதியோர்களின் வைத்திய முறைகளை பார்த்தாலும் கைநாடி பார்த்தப் பின்புத் தான் நோய்களைக்கூறுவர். அதற்குப் பின்புத் தான் நோயாளியின் உடல் அறிகுறிகளை கேட்பதை இன்று வரை பார்க்க முடிகிறது.

> **"நோய் நாடி நோய் முதல் நாடி அதுதணிக்கும் வாய் நாடி வாய்ப்பச் செயல்"**
>
> **(குறள் 948) (8)**

ஒரு மருத்துவர் தன்னைக் காணவரும் நோயாளியின் கைப்பிடித்து நாடிப் பார்த்து நோய் இன்னது என அறிதலும், அந்நோய் வந்ததற்கான காரணத்தை நோயாளி வழிக் கேட்டு அறிதலும், பின்னர் அந்நோயைத் தீர்க்கும் மருந்து முதலானவற்றை முடிவுச் செய்தலும் மருத்துவருக்கு உரிய கடமை என்கிறார் வள்ளுவர்.

**மனைகளில் வேம்பு**

மனையில் உள்ளவர்கள் நோய்வாய்ப்பட்டாலோ, அல்லது ஊரில் உள்ளவர்களுக்கு நோய்க்குறி காணப்பட்டாலோ, நோய்த்தடுப்பு முறையில் மனையையும், மனையைச் சுற்றியுள்ள பகுதிகளையும் தூய்மைப்படுத்துவர். அதைப் போல வெளிப் புறமிருந்து நோய்க்கிருமிகள் மனைக்குள் புகாமல் மனையைப் பாதுகாக்கும் பொருட்டு கம்பங்களில் வேப்ப இலையைக் கட்டியிருப்பர். வீட்டில் உள்ள அனைவருக்கும் சுக்கு, மஞ்சள், வேப்பிலை போட்டுக் கசாயம் செய்து குடிக்கக் கொடுப்பார்கள். சின்னம்மை, பெரியம்மை என்ற அம்மை நோய்கள் வந்தால் வேப்பிலை மஞ்சள் அரைத்து புண்கள் உள்ள இடத்தில் பூசியிருப்பதை இன்று வரை பார்க்க முடிகிறது.

**காயம் ஆற்றுதல்**

"தீம்கனி இரவமொடு வேம்பு மனைச் செரீஇவாங்கு மருப்பு யாழொடு பல்இயம் கறங்கக்கைபயப் பெயர்த்து மைஇழுது இழுகி ஐயவி சிதறி, ஆம்பல் ஊதி இசைமணி எறிந்து காஞ்சிபாடி நெடுநகர் வரைப்பின் கடி நறை புகை இக்காக்கம் வம்மோ - காதல் அம் தோழி! வேந்துறு விழுமம் தாங்கிய பூம்பொறிக் கழற்கால் நெடுந்தகை புண்ணே! (பா.281) (9)

வீட்டு முகப்பில் இனிய கனிகளைத் தரும் இரவமொடு வேப்பம் இலைகளைச் செருகியும், அவனுக்கு மையிட்டும் வெண் சிறு கடுகுத் தூவியும், ஆம்பலம் குழல் ஊதியும், மணி ஓசை எழுப்பியும், வீடு முழுதும் நறுமணம் புகைப் பரப்பியும் இவ்வீரன் பட்ட புண்ணைக் காப்போமாக் பேய் தொட்டு அவனை வருத்தாமல் காப்போமாக.

**தழும்புகள் ஏற்படாதவாறு பாதுகாத்தல்**

வேல், வாள், ஈட்டி போன்ற ஆயுதங்களால் ஏற்படுகிற புண்களில் வடுகள் ஏற்படும். அந்த வடுகள் ஏற்படாதவாறுத் தோளின் நிறம் பழைய நிலைக்கு வருவதற்கு அத்திமரத்தின் பால் மற்றும் மரப்பட்டைகளை காயங்களில் அரைத்து வைப்பதைக் காணலாம்.

> **"வடுவின்றி வடிந்த யாக்கையான் கொடையெதிர்ந்து"** (180)(10)

**புண்களில் பஞ்சுகள் வைத்துக் கட்டுதல்**

> **"கதுவாய் போகிய துதிவாய் எ.்.கமொடு பஞ்சியும் களையாப் புண்ணர்"** (பா.எ.353) (11)

இக்கால மருத்துவத்தில் புண்ணுக்கு மருந்து வைத்துக் கட்டும் போது புண்ணின் மேல் பஞ்சு வைத்துக் கட்டும் முறை, பண்டைக் காலத்திலிருந்து இருப்பதைக் காணமுடிகிறது.

## நீண்ட நாள் வாழ்வதற்கு வழிமுறைகள்

**"சிறியிலை நெல்லித் தீம் கனிகுறியாது" (பா.91) (12)**

நெடுமலை உச்சியின் பிளவுகளில் கிடைத்த அரிய நெல்லிக்கனியை அதன் பெருமையை மறைத்து வைத்து எனக்குத் தந்தாய். அது உண்டால் நீண்ட நாள் வாழமுடியும் என்கிறார்.

மருந்தாக அமையும் நீர், உணவே உடலுக்கு வலிமையைக் கொடுக்கும் உடலின் வளர்ச்சிக்கும், ஆரோக்கியத்திற்கும், ஜீரணத்திற்கும் நீர் அவசியமானதொன்று.

**"நீர் இன்று அமையா யாக்கைக்கு எல்லாம் உண்டி கொடுத்தோர் உயிர் கொடுத்தோரே உண்டி முதற்றே உணவின் பிண்டம் உணவு எனப்படுவது நிலத்தொடு நீரே" (பா.18 (13)**

நீர் இல்லை என்றால் மக்கள் உயிா வாழ முடியாது. உணவு, நீர் இரண்டும் மிக அவசியமான உணவுப் பொருள். அந்த இரண்டும் இருந்தால் நீண்டக் காலம் வாழலாம். இரண்டு உணவுப் பொருட்களைத் தந்தவர் உயிர்க் கொடுத்தவர் எனச் சொல்லலாம்.

## உணவே மருந்து

### கீரை

வேளைக் கீரையை ஏழ்மையின் காரணத்தால், புசிக்க உணவின்றி வறுமையில் வாடியோர் உண்டதாகக் குறிப்பர். வேளைக்கீரை, புளிப்புச் சுவைக் கொண்டது. வறுமையுற்றவர்க்கு ஏற்படுகிற தூக்கக் குறைவு, மலச்சிக்கல், சோர்வு ஆகியவற்றிலிருந்து குணமாகுவதற்கு வேளைக்கீரையை உணவாக உண்ணலாம்.

**"வேளை வெந்தை வல்சியாக" (பா.246)**

என்று புறநானூறு குறிப்பிடும் வேளைக்கீரையால் புளிப்புச் சுவையையும் கொண்டது. (ப.268) (14)

### தேன்

தேன், பல்வேறு வகையான மலர்களின் மகரந்தத்தைத் தேனீக்கள் உறிஞ்சி சேமித்து வைக்கும் மதுரமாகும். தேனின் இனிப்புச் சுவையால் அதனைத் தீந்தேன் என்றும் கூறுவர். தேன், தமிழ் மருத்துவத்தின் துணை மருந்தாகப் பயன்படுத்துவதை அறியலாம்.

**"பாற்பெய் புன்கந் தேனொடு மயங்கி"(15) (பா.34)**

என்று பால்சோறோடு தேன் கலந்து உண்டதாகப் புறநானூற்றில் காணமுடிகிறது.

## முடிவுரை

சங்க இலக்கியமாகிய புறநானூற்றில் அறிவியல் சிந்தனைகள் எண்ணிக்கைக்கு அதிகமாக புதைந்துள்ளது. அதில் சிலப் பாடல் வரிகள் மட்டும் தான் மேற்க்கோளாக எடுத்துரைக்கப்பட்டது. விண்ணின் சுழற்சி, மண்ணில் வாழும் மாந்தரை மகிழ்வடையச் செய்கிறது. சில இடங்களில் பேரிடரை உருவாக்குகிறது. நோயாளிக்கு மருத்துவமுறைகளில் இரண்டு விதமான வைத்திய முறைகளில் நோயாளியைக் குணப்படுத்தலாம். 1. தமிழ் வைத்தியம், 2. ஆங்கில வைத்தியம் என்பர். இரண்டு வைத்திய முறைகளின் நுட்பங்களை விளக்குவதாக இக்கட்டுரை அமைந்துள்ளது.

## அடிக்குறிப்புகள்

1. புறநானூறு மூலமும் உரையும் பேராசிரியர் மாணிக்கம் ப.எண் 88. பதிப்பு 2013.
2. புறநானூறு மூலமும் உரையும் பேராசிரியர் மாணிக்கம் ப.எண் 88. பதிப்பு 2013.

3. புறநானூறு மூலமும் உரையும் பேராசிரியர் மாணிக்கம் ப.எண் 88. பதிப்பு 2013.
4. புறநானூறு செய்யுளும் செய்திகளும் டாக்டர் ஆர்.ஸ்ரீநிவாசன் ப.எண்.251பதிப்பு 2019.
5. புறநானூறு செய்யுளும் செய்திகளும் டாக்டர் ஆர்.ஸ்ரீநிவாசன் ப.எண்.141பதிப்பு 2019.
6. புறநானூறு மூலமும் உரையும் பேராசிரியர் மாணிக்கம் ப.எண் 98. பதிப்பு 2013.
7. புறநானூறு மூலமும் உரையும் பேராசிரியர் மாணிக்கம் ப.எண் 136. பதிப்பு 2013.
8. திருக்குறள் பரிமேலழகர் உரை ப.எண் 401. பதிப்பு 1958.
9. புறநானூறு செய்யுளும் செய்திகளும் டாக்டர் ஆர்.ஸ்ரீநிவாசன் ப.எண்.293பதிப்பு 2019.
10. புறநானூறு மூலமும் உரையும் பேராசிரியர் மாணிக்கம் ப.எண் 352. பதிப்பு 2013.
11. புறநானூறு செய்யுளும் செய்திகளும் டாக்டர் ஆர்.ஸ்ரீநிவாசன் ப.எண்.351பதிப்பு 2019.
12. புறநானூறு செய்யுளும் செய்திகளும் டாக்டர் ஆர்.ஸ்ரீநிவாசன் ப.எண்.120பதிப்பு 2019.
13. புறநானூறு செய்யுளும் செய்திகளும் டாக்டர் ஆர்.ஸ்ரீநிவாசன் ப.எண்.44பதிப்பு 2019.
14. புறநானூறு செய்யுளும் செய்திகளும் டாக்டர் ஆர்.ஸ்ரீநிவாசன் ப.எண்.268பதிப்பு 2019.
15. புறநானூறு செய்யுளும் செய்திகளும் டாக்டர் ஆர்.ஸ்ரீநிவாசன் ப.எண்.64பதிப்பு 2019

# சங்க இலக்கியம் கூறும் தமிழர்களின் அறிவியல் அறிவு

**த. ரெனில் ரெஞ்சினி**
முனைவர் பட்ட ஆய்வாளர்
முஸ்லிம் கலைக்கல்லூரி, திருவிதாங்கோடு
மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகம்
திருநெல்வேலி

***ஆய்வு சுருக்கம்***

*தமிழன் அறிவியலின் முன்னோடி பூமியைப் பற்றி மட்டுமல்லாது சூரிய மண்டலத்தில் இருக்கும் சில கோள்கள் பற்றியும்இ தமிழர்கள் அறிந்திருந்தார்கள். அத்தோடு மட்டுமல்லாமல் வான்வெளிப்பயணங்கள் குறித்த செய்தி உள்ளது. சித்தர்கள் என்போர் பண்டைய தமிழகத்தின் அறிவியலார்கள் ஆவர். அவர்கள் வானியல், மருத்துவம், வேதியியல் ஆகிய துறைகளில் ஆராய்ச்சி செய்தனர்.*

## முன்னுரை

**“அறிவு அற்றம் காக்கும் கருவி”**

என்கிறார் வள்ளுவர். அறிவியல் என்றதுமே நம் நினைவுக்கு வருவது கண்ணாடி குடுவைகளும் நுட்பமான கருவிகள் கொண்ட ஆய்வுக் கூடங்களும் கணிப்பொறி போன்ற அறிவியல் கண்டுபிடிப்பு கருவிகளும் தான். ஆனால் ஆதிகாலத்தில் காடுகளில் வாழ்ந்து கொண்டிருந்த மனிதன் தன் இரண்டு கால்களையம் ஊன்றி நடக்க தொடங்கிய அன்றைக்கே அறிவியல் துளிர் விடத் தொடங்கியது பண்டைக்காலம் தொட்டு அறிவியல் அறிவும் தெளிவும் சிந்தனையும் தமிழர் சமுதாயத்தில் நிலவி வந்திருக்கிறது. அறிவியல் தமிழ் என்ற ஒரு பார்வை அண்மைக் கால்த்தில் மிக வேகமாக பரவி வருகிறது. அதனுடைய நோக்கம் இலக்கியங்களில் மேலை நாட்டு அறிவியல் வல்லுனர்களின் கருதுகோள்களை காணமுயற்சிப்பது அன்று ஆனால் அதே நேரத்தில் பல அறிஞர்களிடம் அறிவியல் கண்ணோட்டம் இருந்தது என்பதை உணர்த்தும் அறிவியல் செய்திகளைத் தமிழ் மொழியில் ஆக்கவும் புதிய முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன

## தொல்காப்பியத்தில் அறிவியல் சிந்தனைகள்

**“ஒன்றறி வதுவே உற்றறி வதுவே**
**இரண்டறி வதுவே அதனொடு நாவே**
**மூன்றறி வதுவே அவற்றொடு மூக்கே**
**நான்கறி வதுவே அவற்றொடு கண்ணே**
**ஐந்தறி வதுவே அவற்றொடு செவியே**
**ஆறறி வதுவே அவற்றொடு மன்னே”**

என்று உயிர்களின் பரிணாம வளர்ச்சியை உயிர்களின் உடம்பினோடும் அதனோடு இயைந்த மெயஇ வாயஇ மூக்குஇ கண்இ செவி எனும் ஐம்பொறிகளும் ஐவகை வாயில்களையும் பெற்று அறிவினால் சிறந்து விளங்கும் இயல்பினை அறிவியல் நோக்கில் குறிப்பிட்டுள்ள தொல்காப்பியம் போற்றத்தக்கது தொல்காப்பியர் உலகத்தில் இயல்பினை காட்டும் பொழுது

**“நிலம் தீ நீரவளி விசும் பொடைந்துங்**
**கலந்த மயக்கம் உலகம் ஆதலில்**

என்ற நூற்பாவில் நிலமும்இ நீரும், தீயும், காற்றும் வானும் என்னும் ஐம்பெரும் பொருள்களின் கலவையே உலகம் என்று குறிப்பிடுகின்றார்.

## தமிழர்களின் நீரியல் அறிவு

**“நீரின்றி அமையாது உலகு”**

என்பதால் தமிழர்களுடைய நீரியல் அறிவு பற்றி பேசுகிற நூலுக்கே கூவ நூல் ஆகும். தமிழர்களின் நீரியல் பற்றி பேசுகிற அறிவிற்கே நீரியல் அறிவு. தமிழர்கள்

முற்காலத்திலேயே என்னென்ன வகை மரங்கள் புல்கள் நிற்குமிடத்திலுமஇ புற்றுக இருக்குமிடத்திலேயும் நீரூற்றுகள் இருக்கும் என்பதனை தமிழர்கள் அறிந்துள்ளனர். அத்தகைய அறிவைப் பெற்றிருந்தார்கள் என்பதனை இப்பாடலின் மூலம் பைந்தமிழ் பாவலன் தமிழருடைய நீரியல் அறிவை பதிவு செய்கிறார்.

**பரு மர கரு ஆல் அத்திபாற்பொடி**
**மருதுடன் இலுப்பையும் வஞ்சி மாப்புழி**
**தரு நொச்சி இத்தி இகழ்வாலை**
**தருமொத்த எறும்பு விளங்க காணுமே**

இப்பாடலின் மூலம் என்னென்ன மரங்கள் நிற்கும் இடங்களில் நீரூற்றுகள் காணப்படுகின்றன என்பதை அறியமுடிகிறது.

**சங்க கால தமிழர்களின் விஞ்ஞான அறிவு**

**செஞ் ஞாயிற்றுச் செலவும்,**
**அஞ் ஞாயிற்றுப் பரிப்பும்,**
**பரிப்புச் சூழ்ந்த மண்டிலமும்,**
**வளி திரிதரு திசையும்**
**வறிது நிலைஇய காயமும்இ என்று இவை**
**சென்று அளந்து அறிந்தோர் போல, என்றும்**
**இணைத்து என்போரும் உளரே**

**(புற பாடல் எண்: 30)**

என்பது புறநானூற்றுப்பாடல் சூரியன் ஒரு பாதையில் நகர்ந்து கொண்டிருக்கிறது. இது இவ்வளவு கால எல்லையில் இவ்வளவு தூரம் கடக்கும். அதனால் தான் அதன் வேகத்தை கணிக்கக் கூடியதாக இருக்கின்றது. இது செல்லும் வான்மண்டலத்தில் ஒரு எல்லை வரை காற்றின் திசை இப்படி இருக்கும். ஈர்ப்பு சக்தியும் அதற்கு உண்டு. அதற்கு மேலே காற்று அல்லாத அண்ட வெளியும் இருக்கின்றது. அதிலே ஈர்ப்பு விசை இல்லை. இவை யாவற்றையும் ஆராய்ந்து அறிந்து வானில அறிஞர்களும் நம்மிடையே இருக்கின்றார்கள் சூரியனை பற்றியும் அதன் சுழற்சி முறை பற்றியும் அறிவியல் பூர்வமாக கடந்த நூறு ஆண்டுகளுக்கு முன்பே விஞ்ஞானிகள கண்டறிந்தனர். ஆனால் சோழர்காலத்தில் உள்ள புலவர் பெருமக்கள் விமானத்தைப் பார்த்தனர். ஆனால் அன்றே பாடல்களில் விமானத்தைப் பற்றியும்இ அது பறப்பதை குறித்தும் கூறியுள்ளனர். இது மட்டுமல்லாமல் எதிரிகளால் நாடு சூறையாடப் பட்டபோது அன்னப்பறவைப் போன்ற விமானத்தில் பறந்த போது விமான விபத்துக்குள்ளாகின போது தான் காட்டில் சீவகன் பிறந்தான் என்பதை திருத்தக்கத்தேவரின் சீவகசிந்தாமணி குறிப்பிட்டுகிறது. இவ்வாறு பலப்பல அறிவியல் விஞ்ஞானங்களை புதைத்து வைத்துள்ளனர் சங்ககால தமிழர்கள்.

**சங்ககால தமிழர்களின் வானசாஸ்திரம்**

**“சுடர்வதாகி எழும்பியங்க தாயமான காலமேஇடர்வதாயிப் புவியும் விண்ணும் ஏகமாய் அமைந்த பின் படர்வதாகி நின்றவாதிப் பஞ்சபூத மாகியே அடர்வதாகி அண்டம் யாவும் ஆள்வதாக நின்றதே” புதிணென் சித்தர் பாடல்கள்**

அதாவது ஒளி மிகுந்த சுடர்விட்ட ஒன்று இடர்விட்டு சிதறி பூமிகளும் கோள்களும் உண்டாயின மூலபிரகிதியானது பூமியின் பஞ்ச பூதங்கள் எங்கும் அடர்ந்து பரவி நின்று அண்டங்களை எல்லாம் ஆள்வதாக நின்றது. இப்புவி அத்திப்பழம் போல் பேரண்டம். அதற்குள் உள்ள வித்துகள் போல சிற்றண்டங்கள், பேரண்டங்கள் என்று இந்த சித்தர் குறிப்பிட்டுள்ளது. பிரம்மிப்பை ஊட்டுகிறது.

16-ம் நூற்றாண்டில் தொலை நோக்கியை கலிலேயோ கண்டு பிடித்த பின் தான் சனிக்கோளும் அதன் வளையங்களும் கண்டுபிடிக்கப்பட்டன. ஆனால் அதற்கு நூற்றாண்டுக்கு முன்னரே தமிழலக்கியங்களில் சனிக்கோள் புதைந்து ஒரு வளையம் போல அமைய அப்புகை அதனை சூழ்ந்து அமைந்து

இருப்பதாக எழுதியுள்ளான். தமிழன் இளங்கோவடிகள் நடுக்காண் காதை என்னும் நூலில்

**கரியவன் புகையினும் புகைக்கொடி தோன்றினும் விரிகதிர் வெள்ளி தென்புலம் படரினும்**

**(நடுகாண் காதை : 105)**

சூரியனைக் குறித்தும், சனிக்கோளினைக் குறித்தும் சங்க காலத்தில் உள்ள தமிழர்கள் அன்றே வகுத்துள்ளனர்.

## முடிவுரை

அறிஞர்கள் இன்று பல விஞ்ஞானக் கண்டுபிடித்து சாதனை புரிந்தும் வருகின்றனர். ஆனால் சங்க காலத்திலேயே தமிழர்கள் அனைத்து அறிவியல் விஞ்ஞானத்தையும் குறித்தும் பாடல்கள் வாயிலாகவும் குறிப்புகள் வாயிலாகவும் தெளிவாக குறிப்பிட்டள்ளதை அறிய முடிகிறது.

## அடிக்குறிப்புகள்

1. அறிஞர் சா.வே. சுப்பிரமணியம், தொல்காப்பியம் முதற்பதிப்பு, ப-442
2. புலியூர் கேசிகன், புறநானுறு முதல்பதிப்பு, ப-45
3. முத்துபாண்டி, சித்தர் மரபும், சீரிய வாழ்வும் முதல்பதிப்பு, ப-219

Vol. 7 Special Issue 2 March 2023 E-ISSN: 2456-5571

# ஆன்மீகமும் அறிவியலும்

**சு. பால்மோகன்**
உதவிப் பேராசிரியர் தமிழ்த்துறை
தி.தெ.மா.நா.ச. கல்லூரி, தெ.கள்ளிகுளம்

***ஆய்வுச்சுருக்கம்***

*உலக நாடுகளில் எல்லாம் முதன்மையானதாகவும் முனிவர்கள், சித்தர்கள், ஆழ்வார்கள், நாயன்மார்கள் வாழ்ந்த புண்ணிய திருநாடகவும் பாரதம் திகழ்கிறது. உலகில் உள்ள எல்லா சமயத்திற்கும் தோற்றமும், தோற்றுவித்தவர்களின் பெயர்களும் தெரியும். ஆனால், இந்து சமயம் தோன்றிய வரலாறும், தோற்றுவித்தவரின் பெயரும் எவரும் அறியிலர். இவ்வுலகம் தோன்றிய நாள் முதல் மக்களிடையே இயற்கையை போற்றி வழிபடும் வழக்கம் இருந்துள்ளது. அதுவே, காலப்போக்கில் இந்து மதத்தின் தோற்றமாகவும் இருந்துள்ளது. உலகத்தின் பல சமயங்களின் தோற்றமாக பாரதம் இருந்துள்ளது. அந்த பாரத நாட்டின் மக்கள் ஆன்மீகத்தை தங்களுடைய உயிருக்கு மேலாக போற்றி இன்றும் பின்பற்றி வருகிறார்கள். பாரத நாட்டின் ஆன்மீகம் அறிவியலோடு தொடர்புடையது என்பதை அறிந்த நம் முன்னோர்கள் சாதாரண மக்களும் பயனடையும் பொருட்டு அறிவியலோடு தொடர்புடைய ஆன்மீகத்தை வரையறுத்துள்ளார்கள். அதனை உலக மக்கள் அறியும் பொருட்டு ஆன்மீகமும் அறிவியலும் என்ற தலைப்பில் ஆய்வு மேற்கொள்ளப்படுகிறது.*

## ஆன்மீகமும் அறிவியலும்

நெற்றியில் விபூதி அணிந்து எந்நேரமும் இறைவனின் நாமத்தை உச்சரித்துக் கொண்டு கோவிலுக்கு நன்கொடைகள் செலுத்துவது மட்டும் ஆன்மிகம் இல்லை. மாறாக, மனதில் தீய எண்ணங்கள் இல்லாமல் அடுத்தவருக்கு நல்லது செய்யாவிட்டாலும் கெடுதல் செய்யாமல் மனசாட்சிக்கு பயந்து வாழ்வதும் ஒருவகை ஆன்மீகம். அதனால் தான் திருமூலர் உள்ளத்தை இறைவன் குடியிருக்கும் ஆலயமாக பாவிக்கிறார்.

> **“உள்ளம் பெருங்கோயில் ஊனுடம்பு ஆலயம்**
> **வள்ளற் பிரானர்க்கு வாய்க் கோபுரவாசல்**
> **தெள்ளத் தெளிந்தோர்க்குச் சீவனே சிவலிங்கம்**
> **கள்ளப்புலன் ஐந்தும் காளா மணிவிளக்கே”**
> **- (திருமந்திரம் 1823)**

என்று ஆன்மீகத்திற்கு விளக்கம் தருகிறார். அறிவியல் என்றால் “ஒன்றைப் பற்றிய ஒரு கருதுகோளை முன்வைத்து நேர்பட நிகழ்வுகளை துல்லியமாகப் பார்த்து தரவுகளை பெற்று பரிசோதனை முடிவுகளை கண்டுபிடித்து நிறுவுவதே அறிவியல் வழிமுறை” (ta.m. wikipedia.org) என்று விளக்கம் தருகிறது. அறிவியலையும் ஆன்மீகத்தையும் குறித்து அறிவியல் மேதை ஐன்ஸ்டீன்,

> **“ஆன்மீகத்தை அறியாத அறிவியல் முடம்**
> **அறிவியலை அறியாத ஆன்மீகம் குருடு”**

என்று அறிவியலையும் ஆன்மிகத்தையும் தொடர்புப்படுத்தி மக்கள் பின்பற்ற வேண்டும். அப்போதுதான் மக்களுடையு வாழ்வு சிறக்கும் என்று ஆன்மீக அறிவியலுக்கு விளக்கம் தருகிறார். உதாரணமாக, இந்துக்கள் பிள்ளையார் முன் நின்று நெற்றியில் குட்டி தோப்புக்கரணம் போட்டு வழிபாடு நடத்துகிறார்கள். நெற்றியில் குட்டுவதன் மூலம் குண்டலினி சக்தி தட்டி எழுப்பப்படுகிறது. அதனால் உடல் சுறுசுறுப்பு அடையும். அதுபோல நம்முடைய நெற்றிப் பொட்டில் உடலின் சகல நரம்புகளும் சேர்வதால் அங்கே குட்டுவதால் அது நம்முடைய உடல் ஆரோக்கியத்தை அதிகரிக்கும் என்ற அறிவியல் புலப்படுகிறது.

## திருநீற்றின் மகிமை

இந்துக்களின் வழிபாட்டு முறைகளில் திருநீறு முக்கிய இடம் பெறுகிறது. திருநீற்றில் மிகப்பெரிய நோய் எதிர்ப்பு சக்தி உள்ளது.

அதை அறிந்து தான் நமது முன்னோர்கள் அதை தெய்வத்தின் பிரசாதமாக பயன்படுத்தி மக்களுடைய நல்வாழ்வுக்கு வித்திட்டனர். சாணத்தில் இருந்து திருநீறு பெறப்படுகிறது. அந்த பசுஞ்சாணத்தின் மருத்துவ பயனை,

**"ஆவினது சாண மடிப்படுவீக்கம்முதிரந்**
**தாவி வருகிருமி சார்ந்தகப -மேவுசுரந்**
**தங்குந்தா கம்போக்குஞ் சாற்றின்மெய்ச்**
**சுத்திப்பால் தெங்கின்பாலுக்கு கொக்குந்**
**தேர்"**

**- (குணபாடம் தாது வகுப்பு பக்கம் எண் 649)**

என்ற பதார்த்த குணசிந்தாமணி செய்யுள் மூலம் அறிய முடிகிறது. பசு மாட்டின் சாணத்தை எடுத்து அதை வெயிலில் காயவைத்து பின் அதனை உமியால் மூடி புடம் போட்டு எடுக்க வேண்டும். அந்த சாண உருண்டைகள் வெந்து நீறாகி இருக்கும் இதுவே உண்மையான திருநீறாகும். திருநீற்றை நெற்றியில் பூசுவதால் உடலின் வெப்பம் தணியும். அதுபோல மூட்டு வலி வரும் இடங்களில் திருநீற்றை பூசினால் உடலில் உள்ள கெட்ட நீரை உறிஞ்சி ஆரோக்கியமான வாழ்வு தரும். அதனால் தான் திருநீற்றின் மகிமை உணர்ந்த திருஞானசம்பந்தர்,

**"காண இனியது நீறு கவினைத் தருவது நீறு பேணி அணிபவர்க்கு எல்லாம் பெருமை கொடுப்பது நீறு மாணம் தகைவது நீறு மதியைத் தருவது நீறு சேணம் தருவது நீறு திரு ஆலவாயன் திருநீறே"**

**- (திருநீற்றுப் பதிகம்)**

என்ற பதிகத்தை பாடி கூன்பாண்டியனின் வெப்பநோயை தீர்த்ததை அறிய முடிகிறது. சைவ சமயத்தின் அடையாளமாக திகழும் திருநீறு, இந்துக்களின் புனித சின்னமாக போற்றப்படுகிறது. திருநீற்றை நமது நெற்றியில் பூசுவதால் மனிதனுக்கு ஏற்படக்கூடிய வாதம், பித்தம், கபம், ஆணவம், கன்மம், மாயை, காமம், வெகுளி, மயக்கம், சந்தேகம், விபரீதம், இறப்பு நிகழ்வு ஆகியவற்றிலிருந்து திருநீறு நம்மை பாதுகாக்கும் என்று வள்ளலார் கூறுகிறார்

**"பாடற்கினிய வாக்களிக்கும் பாலுஞ்சோறும்**
**பரிந்தளிக்கும் தேடற்கினிய அடியவந்தம்**
**கூட்டமளிக்கும் குணமளிக்கும்**
**ஆடற்கினிய நெஞ்சே! நீ அஞ்சேல்**
**என்மேல் ஆணை கண்டாய், தேடற்கினிய**
**திருவளிக்கும் சிவாய நம என்றிட நீறே!"**

**-(திருவருட்பா)**

## துளசி நீர்

நீரும் துளசியிலையும் சேர்த்து செம்பு பாத்திரத்தில் வைக்கப்பட்ட துளசி நீர் வைணவத் தலங்களில் தீர்த்தமாக வழங்கப்படுகிறது. துளசியிலை சாற்றால் சயநோய் கூட்டம் எல்லாம் ஒழிந்து போகும் என்கிறது தேரன் காப்பியம் இதனை

**"துளசியி னிலைசரந் துய்த்திடச் சுரப்பணி**
**யளவுநோ யின்மெலா மறுவது திண்ணமே"**

**- (குணபாடம் மூலிகை வகுப்பு பக்கம் எண் 532)**

என்ற பாடல் வரிகள் மூலம் அறிய முடிகிறது. மேலும், இது வாத, கப பிணிகளையும், உடல் வெப்பத்தையும் அகற்றும் தன்மையுடையது. இதனை அறிந்துதான் நம் முன்னோர்கள், பெருமாள் ஆலயங்களில் துளசி நீற்றை தீர்த்தமாக பயன்படுத்தியுள்ளார்கள் என்பது புலப்படுகிறது.

## மஞ்சள்

சில திருத்தலங்களில் மஞ்சள் பிரசாதமாக வழங்கப்படுகிறது. மஞ்சள் மிகுந்த மருத்துவ குணம் உடையது என்பதும் சிறந்த கிருமி நாசினி தன்மை உடையது என்பதும் அறிவியல் சான்றுகளுடன் நிரூபணமான உண்மையாகும். ஆலயங்களில் தரப்படும்

மஞ்சளை நம் நெற்றியில் பூசுவதால் தலைவலி, நீரேற்றம், வியர்வை நாற்றம் ஆகியவற்றை விலக்கும் தன்மையுடையது என்பதை,

**"தலைவலி நீ ரேற்றஞ், சளையாத மேகம்**
**உலைவுதரு பீனசத்தி னூடே -வலிசுரப்பு**
**விஞ்சு கடிவிடமும் வீறுவிரணங்களும் போம்**
**மஞ்சள் கிழங்குக்கு மால்"**

**-(குணபாடம் மூலிகை வகுப்பு பக்கம் எண் 721)**

என்ற அகத்தியர் குணபாட செய்யுள் மூலம் அறியலாம்.

**சந்தனம்**

சந்தனம் மணமூட்டியாக பயன்படும் நறுமண பொருள். அது தன்னுள்ளே மிக்க மருத்துவ பயன்களையும் கொண்டிருப்பது கருதியே நம் முன்னோர்கள் அதனை கோவில் பிரசாதமாக பயன்படுத்தியுள்ளார்கள். சந்தனத்தை நம் உடலில் பூசுவதினால் உடலில் குளிர்ச்சி தன்மையும், உடலழகும், உடலில் உள்ள பருக்களையும் அகற்றும் தன்மையுடையது என்பதை கீழ்கண்ட பாடல் வரிகள் மூலம் அறிய முடிகிறது.

**"நற்சந் தனமரத்தா னல்லறிவு மின்பு மெழிற்**
**பொற்செந்த திருவருளும் பூதலத்துள்**
**மெச்சுஞ் சரும வளம் தனிமோ கமுமாம்**
**பிரமிநோ யேகும் பிறழ்ந்து."**

**-(குணபாடம்)**

**சர்க்கரைப் பொங்கல்**

இந்து ஆலயங்களில் வழிபாடு முடிந்த உடன் சர்க்கரை பொங்கல் வழங்குவது வழக்கம். சர்க்கரை பொங்கல் சாப்பிடுவதால் சுவையின்மை, வாந்தி, வெறி இவைகளை விலக்கும்

**"வாயின் அரோசகத்தை மாற்றிவம**
**னம்போக்கும் ஆயில்பித்த கோபத்தை**
**யாற்றுங்காண் நேயச் செருக்கரைச்செந்**
**தாளாற் றிருத்துமட மாதே! சர்க்கரை**
**பொங்கற் பாதம் தான்."**

**- (அகத்தியர் குணபாடம்)**

என்ற பாடல் வரி மூலம் அறிய முடிகிறது.

**மார்கழியும் அறிவியலும்**

மாதங்களில் சிறப்பான மாதம் என்று ஆன்மீகவாதிகளால் போற்றப்படும் மார்கழி மாதத்தை ஒரு சிலர் 'பீடை மாதம்' என்று கூறுகின்றனர். அதனால் அந்த மாதத்தில் திருமணம் போன்ற மங்கள நிகழ்ச்சிகள் நடைபெறாது. விவசாயிகள் புதிதாக பயிரிட மாட்டார்கள். ஏனென்றால் மார்கழி மாதம் விதைகள் முளைக்காது என்றும் கூறுவது உண்டு. ஆனால் பகவத்கீதையில் மாதங்களிலே நான் மார்கழி என்று கிருஷ்ணர் கூறுயள்ளார். தேவர்கள் பாற்கடலில் அமிரதத்தை கடைந்தது மார்கழி மாதத்தில்தான். திருமாலை தன்னுடைய கணவனாக அடைவதற்கு ஆண்டாள் நோன்பு இருந்து திருப்பாவை அருளியது மார்கழி மாதத்தில்தான். அதுபோல, மார்கழி மாதத்தில் மனிதனுக்கு நன்மை பயக்கும் அதிக சக்தி கொண்ட பிராணவாயு பூமிக்கு அதிகமாக வருகிறது. பிராணவாயு பெண்களுக்கு அதிக பயன்களை தருவதால் மார்கழி மாதம் அதிகாலை நான்கு மணிக்கு எழுந்து நீராடி திருமாலை வழிபட்டால் நாம் நினைத்த காரியம் கைகூடும் என்று நம்பி பெண்கள் மார்கழி மாதம் அதிகாலை இறைவனை வழிபட நோன்பு இருந்தார்கள். அதன் மூலம் உடலில் பிராணவாயு மூலம் கிடைக்கும் அதீத சக்தி கிடைக்கிறது. இதன் மூலம் ஆண்டாள் மார்கழி மாதம் நோன்பு இருந்து திருப்பாவை பாடி திருமாலை வழிபட்டதில் அறிவியலும் உள்ளது என்பதை அறிய முடிகிறது.

**"மார்கழி திங்கள் மதி நிறைந்த நன்னாளால்**
**நீராட போதுவீர் போதுமினோ நேரிழையீர்**

**சீர் மல்கும் ஆயர்பாடிச் செல்வச் சிறுமீர்காள் கூர்வேல் கொடுந் தொழிலன் நந்தகோபன் குமரன் ஏரார்ந்த கண்ணி யசோதை இளஞ் சிங்கம் கார்மேனிச் செங்கண் கதிர்மதியம் போல் முகத்தான் நாராயணனே நமக்கே பறை தருவான் பாரோர் புகழ படிந்தேலோர் எம்பாவாய்''**

**-(திருப்பாவை)**

மேலும் பசு மாட்டின் சாணம் அற்புத பலன்களைத் தரும். ஒப்பற்ற கிருமி நாசினி என்பது உலகளவில் பல அறிஞர்கள் கண்ட உண்மை. நம் வீட்டை சுற்றி இருக்கும் கிருமிகளை அழிப்பதற்காகத்தான் அதிகாலை எழுந்து, பசும் சாணத்தால் வீட்டின் முற்றத்தை தெளித்து, எறும்புகள் உணவு உண்ணும் வகையில் அரிசி மாவால் கோலம் போட்டு அதில் சாணத்தில் பிள்ளையார் பிடித்து வைத்து வழிபட்டால் நல்லது என்று கூறி நம் முன்னோர்கள் வாழையடி வாழையாக அதை பின்பற்றினார்கள். காலையில் எழுந்து கோலம் போடுவதால் பெண்களின் கற்பனை திறனும், குனிந்து கோலம் போடுவதால் உடல் ஆரோக்கியம் என்ற அறிவியல் உள்ளதை அறிய முடிகிறது.

## ஆலய அமைப்பும் அறிவியலும்

'கோயில் இல்லா ஊரில் குடியிருக்க வேண்டாம்' என்பது ஆன்றோர் மொழி அதற்கேற்ப நம் முன்னோர்கள் குடி இருக்கும் ஊர்களில் கோயில் அமைவிற்கு அதிக முக்கியத்துவம் கொடுத்தார்கள் உடலுக்கு தலை பிரதானம் போல ஆலயங்களுக்கு பிரதானமாக உள்ளது கர்ப்பகிரகம். அதனால் தான் கர்ப்பகிரகத்தை தாயின் கருவறைக்கு உவமையாக அறிஞர்கள் கூறுகிறார்கள். கர்ப்பகிரகம் சிறியதாகவும் உள்ளே முழுவதும் இருட்டாகவும் இருக்கும். அதன் பின்னணியில் பல அறிவியல் நுட்சமங்களும் தேவரகசியங்களும் அடங்கியுள்ளன. ஆலயங்களை துல்லியமாக கணக்கிட்டு உருவாக்கிய நம் முன்னோர்கள் இவ்வுலகின் சக்திகளை கிரகிக்கும் பகுதியாக கருவறையை அமைத்தனர். இவ்வுலகில் உள்ள புறக்கதிர்கள் எல்லாம் மின்னூட்டம் பெற்று கோயில் கருவறையில் மீதுள்ள கலசங்கள் மூலம் கருவறைக்குள் இருக்கும் மூலவர் மீது பாயும். அந்த மின்னூட்டம் இருட்டாக இருக்கும் பகுதியில் தங்காது. கருவறையை தவிர மற்ற பகுதிகள் வெளிச்சமாக இருப்பதால் ஆலயத்தின் மற்ற பகுதிகளுக்கு அந்த மின்னூட்டம் பரவும். ஆலயத்திற்கு சென்று வழிபடும் மக்களும் அதீத சக்தியை பெறுகின்றனர். அதனால் தான் ஔவையார் “ஆலயம் தொழுவது சாலமும் நன்று” என்று கூறுகிறார். இத்தனை சிறப்புகளை உடைய ஆலயத்தை நம் முன்னோர்கள் சாதாரணமாக அமைத்துவிடவில்லை. கோயிலின் கட்டிட தேர்வு செய்யப்படும் இடத்தில் தானியங்களை விதைத்து அந்த தானியங்கள் மூன்று நாட்களில் முளைத்து விட்டால் உத்தமமான இடம் என்று கூறி அந்த இடத்தில் கோயில் கருவறையை அமைத்தார்கள். கருவறையில் உருவாகும் சக்தியானது இடமிருந்து வலமாக சுற்றுவதாக விஞ்ஞானிகள் தற்போது கண்டுபிடித்துள்ளனர். ஆனால் நம் முன்னோர்கள் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே இதை கண்டுபிடித்து கருவறையை இடமிருந்து வலமாக சுற்றி வழிபட்டனர். ஆண்கள் மேல் சட்டை அணியாமல் சுற்றினால் சக்தி அலைகள் நேரடியாக உடலுக்குள் புகுந்து நல்லது செய்யும். அதிலும் பிரம்ம முகூர்த்தத்தில் சென்று இறைவனை வழிபட்டால் அதிக நன்மைகள் பெறலாம் என்று நம் முன்னோர்கள் கூறுகின்றனர்.

**''சிலைகளின் பீடத்தில் அரிய மூலிகைகளும், ஆற்றல் வாய்ந்த மந்திர தகடுகளும்'' பதிக்கப்பட்டுள்ளன.**

இந்த எந்திரமும் மூலிகைகளும் வெளிப்படுத்தும் ஆற்றலும் அபிஷேக தீர்த்தத்தில் கலக்கப்பட்டதால் தான் அதனை தலையில் தெளித்து அல்லது

உட்கொள்ள செய்தார்கள் அதனால் உடலில் ஒரு புத்துணர்ச்சி உண்டாகும். இதன் மூலம் நம் முன்னோர்கள் கோயில் அமைத்து வழிபட்டதிலும் பல அறிவியல் பொதிந்துள்ளன என்பதை அறிய முடிகிறது.

**பக்தி இலக்கியமும் அறிவியலும்**

உலகியல் நடைமுறைகளை சாதாரண மக்களுக்கு தெரியப்படுத்தியது இலக்கியம். மார்கழி மாதம் நோன்பு இருந்தால் மழை பெய்யும் என்பது இந்துக்களின் நம்பிக்கை. ஆனால் அந்த நம்பிக்கையிலும் அறிவியல் உள்ளது. பல நூற்றாண்டுகளுக்கு முன் கடலில் உள்ள நீர் மேகமாக சென்று பூமிக்கும் மழையாக பொழிகிறது என்ற உண்மையை அறிவியல் அறிஞர்கள் கண்டுப்பிடித்தார்கள். ஆனால், மார்கழி நோன்பு இருந்த ஆண்டாள் கண்ணனை வாழ்த்தி பாடிய பாடலில் மேகத்தை நோக்கி கடலின் மீது இறங்கி நீரைப் பற்றிக் கொண்டு உலக மக்களுக்கெல்லாம் மழையாக பொழிவாயாக! என்று கூறும் இடத்தில் ஆண்டாளின் அறிவியலை அறிய முடிகிறது.

> **"ஆழிமழைக் கண்ணா ஒன்றும் நீ கைகரவேல் ஆழியுள் புக்கு முகந்து கொடார்த்தேறி ஊழி முதல்வன் உருவம் போல் மெய்க்கறுத்துப் பாழியந் தோளுடை பத்மநாபன் கையில்**
> **ஆழி போல் மின்னி வலம்புரி போல் நின்ற தீர்ந்து தாழாதே சாரங்கம் உதைத்த சரமழை போல வாழ உலகினில் பெய்திடாய் நாங்களும் மார்கழி நீராடி மகிழ்ந்தாலோர் எம்பாவாய்."**
>
> **-(திருப்பாவை 4)**

இன்றைக்கு மனிதர்களுக்கு பார்வையில் ஏதாவது குறைபாடு என்றால் கண் மாற்று அறுவை சிகிச்சை நடைபெறுகிறது. ஆனால் கண் மாற்று அறுவை சிகிட்சை என்ற ஒன்று தோன்றாத காலத்தில் சேக்கிழார் தான் இயற்றிய பெரியபுராணத்தில் சிவனின் கண்ணில் ரத்தம் வடிந்ததால் கண்ணப்ப நாயனார் அவருடைய கண்ணை சிவனுக்கு மாற்றி கண் மாற்று முறையை அன்றே நிகழ்த்தி உள்ளார் என்பதை,

> **"மற்றவர் பிழிந்து வார்த்த மருந்தினால் திருக் காளத்தி கொற்றவர் கண்ணிற் புண்ணீர் குறை படாது இழியக் கண்டும் இற்றையின் நிலைமைக்கு என்னோ இனசெயல் என்று பார்ப்பார் உற்ற நோய் தீர்ப்பது தூனுக்கு கூனெனும் என்னும் உரைமுன் கண்டார்."**
>
> **- (பெரியபுராணம் 821)**

> **"இதற்கினி என்கண் அம்பால் கிடந்து அப்பின் எந்தையார் கண் அதற்கு இது மருந்தாய் புண்ணீர் நிற்கவும் அடுக்கும் என்று மதத்து எழும் உள்ளத்தோடு மகிழ்ந்து முன் னிருந்து தங்கன் முதற் சரம் அடுத்து வாங்கி முதல்வர் தம் கண்ணில் அப்ப."**
>
> **- (பெரியபுராணம் 822)**

என்ற இரண்டு பெரிய புராண பாடல்கள் மூலம் நம் முன்னோர்களுக்கு கண் மாற்று அறுவை சிகிட்சை என்ற மருத்துவ அறிவியல் சிந்தனை இருந்துள்ளது என்பதை அறிய முடிகிறது.

**முடிவுரை**

ஒரு காலத்தில் பாரதத்தையும் அவர்களுடைய வழிபாட்டு முறைகளையும் உலகில் உள்ள பிற நாடுகளில் வாழும் மக்கள் ஏளனம் செய்தார்கள். கடவுள் இல்லை என்று சொன்ன கண்ணதாசன் பிற்காலத்தில் இந்துக்களுடைய ஒவ்வொரு நம்பிக்கையிலும் ஆழ்ந்த அறிவியல் உள்ளது என்பதை உணர்ந்து பிற்காலத்தில் "அர்த்தமுள்ள இந்துமதம்" என்ற புகழ்பெற்ற இலக்கியத்தை படைத்தார். அதுபோல உலக மக்களும்

பாரதத்தின் ஆன்மிகம் அறிவியலோடு தொடர்புடைய ஆன்மிகம் என்பதை உணர்ந்துள்ளார்கள். ஆனால் பொய்யான திராவிடம் பேசும் நயவஞ்சர்களுக்கு நமது வழிபாட்டு முறைகளின் புனிதத்தை உணர்த்தும் நோக்கில் இவ்வாய்வு கட்டுரை அமைந்துள்ளது.

**பார்வை நூல் பட்டியல்**


| | | | |
|---|---|---|---|
| 1 | ஞா .மாணிக்கவாசகன் | - | திருமூலர் திருமந்திரம், (மூலமும் விளக்க உரையும்), உமா பதிப்பகம், சென்னை. |
| 2 | க.வெள்ளைவாரணன் | - | பன்னிருதிருமுறை (தெளிவுரை), கௌரா புத்தகம் மையம், சென்னை. |
| 3 | பத்மதேவன் | - | திருவருட்பா (தொகுப்பும் உரையும்), ஸ்ரீ ஹிந்து பப்ளிகேஷன்ஸ், சென்னை. |
| 4 | சாண்டில்யன | - | திருப்பாவை மீனாட்சி, புத்தக நிலையம்,மதுரை. |
| 5 | கிருபானந்த வாரியார் | - | பெரியபுராணம், வாரியார் பதிப்பகம், சென்னை. |
| 6 | ரா. தியாகராஜன் | - | குணபாடம் தாது வகுப்பு, இந்திய மருத்துவம் மற்றும் ஹோமியோபதி துறை, சென்னை 106. |
| 7 | கா.சா. முருகேச முதலியார் | - | குணபாடம் மூலிகை வகுப்பு, இந்திய மருத்துவம் மற்றும் ஹோமியோபதி துறை, சென்னை 106. |

# கவிமணி கவிதைகளில் ஆன்மீக அறிவியல்

**முனைவர் மு. சாந்தினி**
உதவிப்பேராசிரியர், தமிழ் உயராய்வு மையம்
விவேகானந்தா கல்லூரி, அகஸ்தீஸ்வரம்

தமிழை ஆன்மீக மொழி என்பர். அந்த வகையில் எல்லாக் காலங்களிலும் தமிழில் பலவகையான பக்தி இலக்கியங்கள் தோன்றி உள்ளன.

> **"ஆன்மீக உணர்வு நிறைந்த வாழ்க்கையில் தான் முழுமையான திருப்திகாண முடியும். அப்பொழுதே சமுதாயம் சீரடையும்"**

என்றார் அப்துல் கலாம்[1]. அவரின் வார்த்தைகளுக்கு ஏற்றார் போல் பாரதத்தின் வருங்கால தூண்களான குழந்தைகளின் மனதில் விதைக்கப்படும் நற்கருத்துக்கள் நாளைய சிறந்த பாரதத்தை உருவாக்கும் என்பதை நன குணர்ந்த கவிமணி கூறிய ஆன்மிக கருத்துக்களைக் காண்போம்.

## தேசிகவி நாயகம் பிள்ளை

இவர் 1876 ஆம் ஆண்டு, ஆடி 14-ஆம் நாள் கன்னியாகுமரி மாவட்டம் தேரூரில் சிவதாணுப் பிள்ளை, ஆதிலட்சுமி அம்மையாருக்கு மகனாகப் பிறந்தார். தமிழ், மலையாளம், ஆங்கில மொழிகளில் தேர்ச்சிபெற்றார். தொடக்கக் கல்வி ஆசிரியர், ஆசிரியர் பயிற்சிப் பள்ளி ஆசிரியர், பெண்கள் கல்லூரி தமிழ் விரிவுரையாளராகப் பணிபுரிந்தார். தொடக்கக் கல்வி ஆசிரியராக பணியாற்றிய போது ஆங்கில மொழியில் இருப்பது போல் தமிழ் மொழியிலும் குழந்தைப்பாடல்கள் வேண்டுமென்று தமிழில் பல இனிய பாடல்களை எழுதினார். இவருடைய நூல்களை கவிதை நூல்கள், இசைப்பாடல்கள், உரைநடை நூல்கள் என மூன்று வகையாகப் பிரிக்கலாம். மலரும் மாலையும், ஆசிய ஜோதி, நாஞ்சில் நாட்டு மருமக்கள் வழி மான்மியம், உமர்கய் யாம் பாடல்கள் இவை நான்கும் கவிமணியின் கவிதைகள் ஆகும். இவருடைய கவிதைகள் உண்மை, எளிமை, இனிமை வாய்ந்தவை. ஏளிமையானவை என்றாலும் பல உயர்ந்த கருத்துக்களை உள்ளடக்கியவை.

## ஆன்மீகம்

மதம், ஆன்மீகம், சமயம் இவை மூன்றும் ஒருபொருள் உணர்த்தும் சொற்கள் ஆகும். முதியை வளர்ப்பதற்கும், வலிமைப்படுத்துவதற்கும் உரியது தான் மதம்.ஆன்மா இறைவன் திருவடிகளை அடைவதற்கு பதமாதல் சமயம். ஆன் மாவை அறியும் அறிவே ஆன்மீகம் ஆகும்.

> **"சமயம் என்பது புனிதமான ஒன்றைப் பற்றிய நம்பிக்கைகளும்,செயல்களும் அடங்கிய ஓர் ஒருங்கிணைந்த முறையாகும்"**

என்பார் எமிலிதர்கைம்.

> **"பகுத்தறிவிற்கு எட்டாததும், செயலறிவிற்கு உட்படாததுமான உலகத்துடன் தொடர்பு கொள்ள ஏற்படுத்திக் கொண்ட முறையே சமயம்" என்கிறார் ஓடியா.**[2]

## சமயத் தோற்றம்

உலகம் எப்பொழுது தோன்றியது மனிதன் எப்போது தோன்றினான் எனத்திட்ட வட்டமாகக் கூற முடியாதோ அப்படித் தான் சமயம் தோன்றிய ஆண்டையும் வரையறுத்துக் கூற முடியாது. உலகின் பலபகுதிகளில் வாழ்ந்த மக்கள் தாங்கள் வாழ்ந்த சூழல் மற்றும் அறிவுக்கு ஏற்றாற்போல் சமயங்களை உருவாக்கிக் கொண்டனர். உலகம் முழுவதும் இந்து, கிறிஸ்தவம், இஸ்லாம், பௌத்தம், சமணம், பார்சி எனப் பலமதங்கள் உள்ளன. முதல் மூன்றும் அதிகமான மக்களால் பின்பற்றப்படும் சமயங்கள் ஆகும்.

### தெய்வங்கள்

எல்லா ஆற்றலும் உடைய தாய், எல்லா உலகங்களையும் படைத்துக்காத்து, அழித்துவரும் பரம்பொருள் தான் தெய்வம். எல்லாவற்றையும் கடந்து. இருப்பதனாலேயே இறைவனை “கடவுள்” என்று அழைத்தனர். கவிமணி இந்து சமயத்தைச் சார்ந்தவர் என்றாலும், சமயப் பொறை உடையவர் ஆதலால் இயேசுபிரான், புத்தர் பற்றியும் கவிதைகள் பாடியுள்ளார். மேலும் இறைப்பணிக்காக தங்கள் வாழ்வை அர்ப்பணித்த இராமகிருஷ்ண பரமஹம்சர், சாரதா தேவி, விவேகானந்தர் பற்றியும் கவிதைகள் இயற்றியுள்ளார்.

### உள்ளமே கோவில்

சிவன், திருமால் இயேசு, அல்லா, புத்தர், அருகர் என பல்வேறு பெயர்களில், உருவங்களில் வெவ்வேறு மதத்தினர் வழிபட்டாலும் பரம் பொருள் ஒன்று தான். எங்கும் நீக்க மறநிறைந்திருக்கும் இறைவனை கோயிலுக்குச் சென்று தான் வழிபட வேண்டும் என்பது இல்லை. இறைவன் நம் முடைய உள்ளத்தில் உள்ளார் என்பதை தாயு மானவர் கீழ்க்கண்டவாறு குறிப்பிடுகிறார். “நெஞ்சமே கோவில் நினைவே சுகந்தம் அன்பே மஞ்சனநீர் பூசை கொள்ளவாராய் பராபரமே”[3]

இதே போல் கவிமணி அவர்களும் ஒரு இஸ்லாமிய சமயத்தைச் சார்ந்த சிறுமி, இந்து சமய தோழி யோடுசு சீந்திரம் கோயிலுக்கு சென்றபோது ஒவ்வொரு சிற்பங்களையும் காண்பித்து உங்கள் தெய்வம் எங்கு உள்ளார் என்று வினவிய போது ஒரு சிறந்த வழிபாட்டு முறையை எடுத்துரைத்துள்ளார்

> **“உள்ளத்தில் உள்ளாடி அது நீ உணர வேண்டும் அடி உள்ளத்தில் காண்பாய் எனில் கோயில் உள்ளேயும் காண்பாய் அடி”**
>
> **(மலரும் மாலையும்: 44)**

### எல்லா உயிர்களும் இறைவனின் வடிவம்

இந்து சமயம் அனைத்து உயிரகளையும் பரம் பொருளின் வடிவமாக மதிக்கச் சொல்கிறது. காரணம், உயிரகள் அனைத்தையும் இறைவன் வடிவமாக கருதினால் எங்கும் அன்பு நிறைந்து இருக்கும். உலகமே எவ்வித தீமைகளும் இன்றி அமைதியாய்த் திகழும். குவிமணி எனது சுகதுக்கங்கள் என்ற கவிதையில் பிறைச் சந்திரனில் சிவபெருமானையும், சூரிய உதயத்தில் பார்வதி தேவியையும், தாமரை மலர்களில் திருமாலையும், யானை கூட்டங்களில் பிள்ளையாரையும் மயில் கூட்டங்களில் முருகனையும் பார்ப்பதாகப் பாடியுள்ளார்.

(மலரும் மாலையும்: 476-480)

### பழிப்பதுபோல் இறைவனைபுகழ்தல்

**“திக்கற்றவர்களுக்குத் தெய்வமேதுணை”** என்னும் பழமொழிக் கேற்ப மக்கள் தங்களுடைய துன்ப நேரங்களில் எல்லாம் வல்ல இறைவனை வணங்குவது வழக்கம்.

சிலர் இறைவனை வணங்கும் போது உரிமையோடு ஒருமையில் அழைப்பது உண்டு. பாரதியார் கண்ணனைத் தன்னுடையத் தோழனாக, அடிமையாக எல்லாம் பாடியுள்ளார். கவிமணியும் நாஞ்சில் நாட்டு மருமக்கள் வழி மான்மியம் நூலில் “விநாயகர் வணக்கம்” என்னும் பாடலில் விநாயகரை பழிப்பது போல் உயர்த்திப் பாடியுள்ளார். உலகம் போற்றும் ஒருவனான உனது தந்தை சிவன் கையில் மண்டையோடு ஏந்தியவன். இருப்பிடம் இல்லாதவன். இறந்து உண்பவன். உன்னுடையமாமனான திருமாலோகபட நாயகன். கையில் சக்கரம் இருந்தும் யாருக்கும் ஒருபொருளை ஈயாதவன். ஆதலால் நீதந்தை வீடுமாமன் வீடு என தங்க இடமின்றி சந்தியும் தண்ணீர் கரையும் மரத்தடியில் இருப்பிடமாகக் கொண்டவன். இரு வழிகளிலும் தங்க முடியாது இட்டடும் எங்கள் வருத்தமெல்லாம் அறிந்திட வல்லவன் நீயே! உன் திருவடி பணிந்து மருமக்கள் வழி மான்மியம் பாடத் தொடங்கினேன் (மரு.மா.27.28)

### நேர்த்திக்கடன்

பக்தர்கள் தங்கள் விரும்பிய பொருள் கிடைப்பதற்கும், செயல்களில் வெற்றி பெறுவதற்கும் இறைவனை வேண்டும் போது, மொட்டை அடிப்பது, அலகு குத்துவது, அன்னதானம் செய்வது, தேங்காய் உடைப்பது என பல விதமாக வேண்டிக் கொள்வர். இதனை நேர்த்திக்கடன் என்பர். இது

பண்டமாற்று முறைபோன்றது. இறைவனை வேண்டிதனக்கு குழந்தைவரம் கிடைத்ததால் சுஜாதை என்னும் பெண் பல விதமான உணவுகளைப் பக்குவமாகச் சமைத்து பொன்னாலானப்பாத் திரங்களில் கொணர்ந்து இறைவனுக்குப் படைத்தார். (ஆ.ஜோதி:113)

### பாவமன்னிப்புக் கேட்டல்

அனைத்து மதங்களும் மனிதனை நல்வழிப்படுத்த பாவம் செய்தால் தண்டனை நிச்சயம் என கூறியுள்ளது. இந்துக்களிடம் காசி, கன்னியாகுமரி, ராமேஸ்வரம் போன்ற புனித தீர்த்தங்களில் நீராடினால் தாங்கள் அறிந்தும் அறியாமலும் செய்த பாவங்கள் நீங்கும் என்ற நம்பிக்கை உள்ளது. நாம் அறியாமல் செய்தத வறை உணர்ந்து விட்டாலேபாதி பாவம் குறையும். அதிலும் கடவுளிடம் மன்னிப்பு கேட்டுவிட்டால் பாவம் நம்மை அண்டாது. கடவுள் நம்மை மன்னிப்பார். கவிமணி தான் செய்த தவறுகளை மன்னித்து விடுமாறு அழகம்மை தேவியிடம் வேண்டுகிறார்

### சரணடைதல்

பகவான் கிருஷ்ணர் என் மீதுயாருக்குப் பூரண நம்பிக்கை இருக்கிறதோ அவர்களுக்குத் தான் உதவி செய்வேன். வெறும் வாய் சொற்களுக்கு மயங்கமாட்டேன் என்கிறார். சுரணாகதி என்பது எளிதான தல்ல. முழு சரணாகதி மூலம் தான் இறைவனின் கருணை கிடைக்கும். குவிமணி வயதான காலத்தில் தொழுநோயால் அவதிப்பட்டார். தன்னுடைய நோய் தீரமுருகப் பெருமானிடம “பண்டிதருமகை விட்டார் பத்தியமும்தீர்ந்ததுயான உண்ட மருந்தால் குணமோ ஒன்றில்லை -அண்டர் அமராவதி காத்த அண்ணலே! செந்தில் குமார எனையாண்டு கொள்” (ம.மா:21) என வேண்டுகிறார்.

### இறைவனிடம் வேண்டுபவை

இறைவனைத் தொழும் பக்தர்கள் இறைவன் நாமத்தை போற்றுவதோடு மட்டுமல்லாமல் தனக்கு எல்லாவித நன்மைகளும் செல்வங்களும் கிடைக்க வேண்டும் என்று வணங்குவர். ஆனால் கவிமணியோ மகிழ்ச்சியான வாழ்வுக்குத் தேவையான நற்பண்புகளை அழகம்மை தேவியிடம் வேண்டியுள்ளார். மாசில்லாத அன்பு வளர வேண்டும். ஆசை அழிய வேண்டும். அருள் வேண்டும். காமம் அகல வேண்டும். உள்ளம் தெளிய வேண்டும். ஐம்புல சேட்டை அடங்க வேண்டும். உன் பதமே உள்ளம் நாட வேண்டும் என்பதாகும் (ம.மா:587,585,591,593)

### வழிபாட்டுப் பொருள்கள்

இந்துகள் இறைவன் இயற்கை மூலம் தமக்கு அளித்த சிறந்த பொருட்களை இறைவனுக்குப் படையல் இட்டு வழிபடுவதை ஒரு வித நன்றிக்கடனாகக் கருதுகின்றனர். தேங்காய், பழம், வெற்றிலை, பாக்கு இவற்றோடு ஆடு கோழிகளைப் பலியிடுவர். ஆனால் கவிமணியோ ஆலடிமாடன் கொடை விழாக்களில் ஆடு பலியிடு வதைத்தடுத்து, தீய எண்ணங்களைப் பலியிடுவதே சிறந்தது என்று ஞானதீபம் கவிதையில் கூறியுள்ளார். (ம.மா: 558,561)

### முடிவுரை

மொத்தத்தில் இந்துமதம் அனைவரும் பின்பற்றுவதற்கு எளியமதம் மட்டுமல்ல. அரசமரம் சுற்றுவது, கற்பூரம் காண்பிப்பது என பல அறிவியல் சிந்தனைகளைக் கொண்டமதம். எனவே கவிமணி கூறிய படி நம் உள்ளத்தில் உள்ள இறைவனைக், காணும் உயிர்களில் எல்லாம் உணர்ந்து, தீய எண்ணங்களைப் பலியிட்டு, முழு நம்பிக்கையோடு வழிபட்டு, வாழ்வில் வளம் பெறுவோம்.

### அடிக்குறிப்புகள்

1. ஏ.பி.ஜே. அப்துல்கலாம், அக்னிச் சிறகுகள், 1999, ப.193
2. Emile Durikhim, The Elementary form of Religious life, 1965.ப.62
3. எம்மார். அடைக்கலசாமி, தமிழ் இலக்கிய வரலாறு, 1991, ப.228.

# சங்க இலக்கியத்தில் அறிவியல்

**ஜோ. மேரி பிரவீணா**
எம்.ஏ, பி.எட்,...

***ஆய்வுச் சுருக்கம்***

*சங்க இலக்கியங்கள் அக்காலத்தில் வாழ்ந்த தமிழர்களின் தினசரி வாழ்க்கை நிலைமைகளைப் படம் பிடித்துக் காட்டுவதாக உள்ளன. பண்டைத்தமிழர்களின் காதல், போர், வீரம், ஆட்சியமைப்பு, வணிகம், ஆன்மிகம், அறிவியல் போன்ற நடப்புகளைச் சங்க இலக்கியப்பாடல்கள் வழி அறிய முடிகிறது.* ***'அறிவுஅற்றம் காக்கும் கருவி'*** *என* ***திருவள்ளுவர்*** *கூறியுள்ளார். அறிவின் நுட்பமான மலர்ச்சியே அறிவியலாகும்.தமிழ் இலக்கியத்தில் மேலைநாட்டு சிந்தனையாளர்களான* ***தேல்ஸ்*** *(கி.மு639-544),* ***அனார்கலி மாண்டர்*** *(கி.மு611-547),* ***ஷீனோபான்ஸ்*** *(கி.மு576-480),* ***எம்படோகில்ஸ்*** *(கி.மு504-433),****அரிஸ்டாட்டில்*** *(கி.மு 384-322), போன்றோர் வெளியிடாத பல அறிவியல் கருத்துகள் பொதிந்து கிடக்கின்றன. சங்க இலக்கியத்தில் பழந்தமிழர்கள் பெற்றிருந்த உயிரியல் சார்ந்த அறிவைப் பற்றிய குறிப்புகள் குறுந்தொகை, ஐங்குறுநூறு பாடல்களின் வழி அறிய முடிகிறது. அக்கால மக்கள் பெற்றிருந்த வானியல் சார்ந்த அறிவு பற்றி சிறுபாணாற்றுப்படை, நெடுநல்வாடை, குறுந்தொகை, புறநானூறு போன்ற நூல்களின் வழி அறிய முடிகிறது.*

*காற்று வீசும் திசை காலம் பற்றிய செய்தியையும்,மழை பற்றிய இக்கால அறிவை அக்காலத்திலே மக்கள் பெற்றிருந்த செய்தியையும் நற்றிணை வழி அறிய முடிகிறது. புவி வெப்ப மடைதலால் ஏற்படும் துன்பங்கள் பற்றியும் நீர்க்கடிகாரம் பற்றியும் சங்க பாடல்களிலேயே விளக்கப்பட்டுள்ளன*

***''நோய் நாடி நோய்முதல் நாடி அதுதணிக்கும் வாய் நாடி வாய்ப்பச் செயல்''***

***(குறள்-948)***

*என்ற குறளுக்கு ஏற்ப நோய் பற்றியும், நோய் தணிக்கும் முறை பற்றியும் பல்வேறு செய்திகள் காணக்கிடக்கின்றன. சங்க இலக்கியங்களில் பயின்று வந்துள்ள அறிவியல் சார்ந்த கருத்துக்களை முன்வைப்பதாக இக்கட்டுரை அமைந்துள்ளது.*

## முன்னுரை

சங்க இலக்கியம் சங்ககாலத் தமிழர்களின் வாழ்வியல் முறைகளையும் அவர்கள் இயற்கையோடு ஒன்றி வாழ்ந்த வாழ்க்கை முறையையும் எடுத்துரைக்கும் கால கண்ணாடியாகவும் உள்ளது. அக்கால மக்கள் பெற்றிருந்த பல்வேறு அறிவியல் சார்ந்த கருத்துகளை சங்க இலக்கிய பாடல்களின் வழி தெளிவாக புரிந்துக்கொள்ள முடியும். சங்க கால இலக்கியத்தில் இடம்பெறும் அறிவியல் சார்ந்த செய்திகளை இக்கட்டுரையில் காண்போம்.

## அறிவியல்

அறிவியல் என்பது அறிந்து கொள்ளுதல் எனப் பொருள்படும் ளஉநைவெயை என்னும் இலத்தின் சொல்லில் இருந்து பெறப்பட்டது ஆகும். அறிவியல் என்பது புடவி பற்றி நிறுவ முடிந்த விளக்கங்கள் முன் கணிப்புகளின் வடிவத்தில் அறிவை ஒருங்கமைத்து உருவாக்கும் முறையான நிறுவனம் ஆகும். நிகழ் நிலை அறிவியல் இயற்கை அறிவியல், சமூக அறிவியல், முறை சார் அறிவியல் என மூன்றாகப் பகுக்கப் படுகிறது. ஆறிவின் அடிப்படையில் ஆராய்ந்து, உண்மைகளை கண்டு பிடித்து, முறைப்படி நிறுவும் ஒரு துறை என அறிவியலுக்கு தமிழ் விக்சனரி விளக்கம் அளிக்கிறது.

## சங்க இலக்கியம்

சங்க இலக்கியங்கள் அக்கால கட்டத்தில் வாழ்ந்த தமிழர்களின் வாழ்க்கை நிலைமைகளை படம் பிடித்து காட்டுவதாக உள்ளன. சங்க இலக்கியங்கள் என்பது செவ்வியல் இலக்கியங்கள்

ஆகும். பண்டையத் தமிழர்களின் காதல், போர், வீரம், ஆன்மிகம், அறிவியல், ஆட்சியமைப்பு, வணிகம் போன்ற நடப்புகளைச் சங்க இலக்கியப் பாடல்களின் வழி அறிய முடிகிறது. 19ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த தமிழ் அறிஞர்களான சி.வை **தாமோதரம் பிள்ளை, உ.வே.சாமிநாத ஐயர்** ஆகியோரின் முயற்சியினால் சங்க இலக்கியங்கள் அச்சுருப் பெற்றன.

எட்டுத்தொகையும், பத்துப்பாட்டும் தான் சங்க இலக்கிய நூல்கள். இவை பதினெண் மேற்கணக்கு நூல்கள் எனவும், சங்க மருவிய காலத்து நூல்கள் பதினெண் கீழ்க்கணக்கு நூல்கள் எனவும் பெரும்பிரிவுகளாகத் தொகுக்கப்பட்டுள்ளன.

## உயிரியல் அறிவு

பழந்தமிழர்கள் உயிரியல் சார்ந்த அறிவைப் பெற்றிருந்தனர். குறுந்தொகையில் உயிரியல் பற்றிய சிந்தனையை,

**‘‘யாவதும் அறிகிலர் கழறு வோரே**
**தாயின் முட்டைபோலவுட்கிடந்து**
**சாயின் அல்லது பிறதெவனுடைத்தே**
**யாமைப் பார்ப்பி னன்ன**
**காமங் காதலர்கையறவிடினே’’**

**--- கிளிமங்கலங்கிழார்**
**(குறுந்தொகை பாடல் - 152)**

என்ற பாடல் அழகாக விவரிக்கிறது. தூயால் காக்கப்படாத யாமைப் பார்ப்பு போலத்தானும் இறந்துபடப் போவதாக தலைவி உரைக்கிறாள். இதன் மூலம் ஆமையின் இனப்பெருக்கம் குறித்த செய்திப் பற்றி அறிய முடிகிறது.

ஆமை நீர்நிலையை அடுத்த மணற்பாங்கான பகுதியில் முட்டையிடும். ஆயின் அடை காக்காது. வேயில் சூடுபட்டு அதிலிருந்தே குஞ்சு வெளிப்படும். இதே கருத்தை,

**‘‘தீம்பெரும் பொய்கை யாமை இளம்பார்ப்புத்**
**தாய்முகம் நோக்கி வளர்ந்திசின் ஆ அங்கு’’**

**-புலவிப்பத்து**

என்ற **ஐங்குறுநூறு 44 – வது** பாடலின் வழி அறிய முடிகிறது. இப்பாடல் தாயின் முகத்தை பார்த்தே ஆமை குஞ்சுகள் வளரும் என்ற கருத்தை வழியுறுத்துகிறது.

## வானியல் அறிவு

நம் பண்டையத் தமிழர்கள் கதிரவனை நாள்மீன் என்றும் கோள்களை கோள்மீன் எனவும் குறித்தனர். வுானை உற்று நோக்கி ஆய்ந்து அறிவியல் நுட்பங்களை இலக்கியங்களில் பதிவு செய்தனர். தமிழர் புவி மையக் கொள்கையைக் கடந்து ஞாயிறு மையக் கொள்கை அறிந்த செய்தியினை,

**‘‘வாள்நிற விசும்பின் கோள்மீன் சூழ்ந்த**
**இளங்கதிர் ஞாயிறு எள்ளும்**
**தோற்றத்து’’**

**-சிறுபாணாற்றுப்படை (238 - 245)**

நிலநடுக்கோட்டருகே வாழ்ந்த மனிதன் மட்டுமே சூரியன் வடக்கு நோக்கி நகர்ந்த உத்ராயத்தையும், தெற்கு நோக்கி நகர்ந்த தாட்சினாயத்தையும் துல்லியமாக அறிந்திருந்தான். திராவிட இனம் நிலநடுக்கோட்டுப் பகுதியில் வாழ்ந்ததால் சற்றும் பிசகின்றி இவ்வயனங்களை அறிந்தும் கணித்தும் இருந்ததை வலனேர்பு, தென்னேர்பு ஞாயிற்றின் வடக்கு நோக்கிய செலவு எனக் குறிப்பிட்டுள்ளார். ஒரு நேர்க்கோலை செங்குத்தாக நிறுத்தி அதன் நிழலினுடைய நீளத்தைக் கொண்டு நேரத்தைத் துல்லியமாக கணித்துள்ளனர். இதனை **நாழிகைக்கோல், ஞாயிற்றுக் கடிகை** என்று **நெடுநல்வாடை (73-78)** குறிப்பிட்டுள்ளது.

அரசர்கள் தம் மாளிகையின் மேற்கூரையில் இன்று நாம் கோளரங்குகளின் உட்கூரையின் மீது காட்சிகளைக் காண்பது போல, ராசி மண்டலங்களையும், 27 விண்மீன் கூட்டங்களையும் அதனூடே நிலவு சஞ்சரிப்பதையும் ஓவியங்களாக வரைந்து வைத்தனர். இக்காட்சியை **நெடுநல்வாடை (159-163)** பாடலடிகள் தெரிவிக்கின்றன.

சூரியன் கார்த்திகை மார்கழியில் தென்முனையை அணுகு கிறான். அருகேயுள்ள வெள்ளியும் தெற்கு நோக்கிச் செல்வதாகச் தோன்றும். வடகிழக்குப் பருவமழை முடிந்துவிட்ட காலம் இது என்ற கருத்தை, **கார்த்திகைக்குப் பிறகு மழையில்லை கர்ணனுக்குப் பிறகு கொடையில்லை** என்ற கருத்தைப் **பட்டினப்பாலை (1-6)** பாடல் கூறுகிறது.

**காற்று**

காற்று எத்திசையிலிருந்து வருகிறது எள்பது ஒரு முக்கியமான வானிலைத் தகவலாகும். நற்றிணை ஒவ்வொரு திசையிலிருந்தும் வரும் காற்றுக்கும் பெயரிட்டு குறிப்பிட்டுள்ளது.

1. **கொண்டல் - கீழ்க்காற்று (பா.எண் 74-8, 89-1)**
2. **கோடை - மேல் காற்று (பா.எண் 297, 162-10, 299-3, 549)**
3. **3.வாடை – வடதிசையிலிருந்து வரும் காற்று (பா.எண் 5-8, 196 ,109-6, 152-6, 280)**
4. **வளி – பொதுப்பெயர் (பா.எண் 56-2)**
5. **கால் - மழையுடன் சேர்ந்தே வீசும் காற்று (பா.எண் 2-9)**
6. **ஊதை – பொதுவான வாடையை ஊதை என்பர் (பா.எண் 15-3, 26)**

**சூரியன்**

செவ்வியல் இலக்கியத்தில் சூரியன் உதிப்பதும் மறைவதும் பற்றிய வருணனைகள் கீழைக்கரை மக்களின் அனுபவமாகவே பாடப்பட்டுள்ளன.

**''முந்நீர் மீமிசைப் பலர் தொழத் தோன்றி''** என்ற **நற்றிணை (பா.எண் 283-6)** பாடல் சூரியன் உதிப்பதையும்,

**''சுடர்கெழு மண்டிலம் மழுங்க ஞாயிறு**
**குடகடல் சேரும் படகூர் மாலையும்''**

**(அகம்- 378)**

என்ற அகநானூற்றுப் பாடலின் வழி சூரியன் மேலைக்கடலில் மறைவதையும் அறிய முடிகிறது.

**மருத்துவம்**

சங்க இலக்கியங்களில் மருத்துவம் பற்றிக் குறிப்பிடுகையில் மகப்பேறு மருத்துவம், அறுவை மருத்துவம், நம்பிக்கை மருத்துவம் போன்றவை முக்கிய பங்காற்றுகின்றன. கருவுற்ற பெண்கள் விரும்பும் சுவை பற்றி,

**''முந்நாற்றிங்கணிறை பொறுத்தசை,**
**ஒதுக்கல் செல்லாப் பசும்புளி வேட்கைக்**
**கடுஞ்சூல் மகளிர் போல நீர்''**

**(குறுந்தொகை – 287)**

என்ற பாடல் வழி அறிய முடிகிறது. மேலும் **ஐங்குறுநூறு 51-வது** பாடலிலும் இது பற்றிய செய்தியைக் காண முடிகிறது. கருவுயிர்த்தப் பின் செய்யப்பட்ட மருத்துவம் பற்றி,

**"புனிறு நாறு செவிலியொடு புதல்வன் துஞ்ச**
**ஐயவி அணிந்த நெய்யாட்டு ஈரணிப்**
**பசுநெய் கூர்ந்த மென்மை யாக்கை"**

**(நற்றிணை – 40 -6-8)**

ஏன்ற நற்றிணை பாடல் வழி அறிய முடிகிறது. மேலும் நற்றிணை பாடல் வழி அறிய முடிகிறது. மேலும் **நற்றிணை 355, 370** பாடல்களிலும், **பரிபாடல் 6 வது** பாடலிலும் இவை பற்றிய செய்திகள் காணக் கிடக்கின்றன.

போரில் புண்பட்ட வீரர்களுக்கு செய்யப்பட்ட மருத்துவம் பற்றிய செய்தியை, **பதிற்றுப்பத்து – 38-வது** பாடலிலும், **42 புறநானூறு – 82-வது** பாடலிலும் காணலாம். உயிர் வாழ்வதற்கு உடலின் வளர்ச்சிக்கு உணவு அவசியம், உடல் உறுப்பின் ஊனங்கள் அவற்றின் மருத்துவம் சார்ந்த செய்திகளைப் பற்றி **புறநானூறு 28 ஆம்** பாடலில் காண முடிகிறது.

**வானவெளிப் பயணம்**

வானவெளிப் பயணம் பற்றி நம் முன்னோர்கள் அறிந்திருந்த செய்தியை,

**"வலவன் ஏவா வானஊர்தி எய்துப ……"**

**(புறநானூறு பா.எண் 27)**

விமானிகளே இல்லாத விமானம் பற்றிய செய்தியை இது அமைந்துள்ளது. இது தமிழர்களின் வானவெளிப்பயணம் பற்றிய அறிவை வெளிப்படுத்துவதாக உள்ளது.

**புவிவெப்ப மடைதலும் பருவ மழை மாறுதலும்**

புவிவெப்ப மடைதலால் பாலை நிலம் பாதிக்கப்படுவதை பின்வரும் அகநானூற்றுப் பாடல் விளக்குகிறது.

**''கதிர் கையாக வாங்கி ஞாயிறு**
**பைதரப் பெறுாதலின் பயங்கரந்து மாறி**
**விடிவாயப்பட்ட வியன்கண் மாநிலம்''**

**(அகநானூறு பா.எண் 164–1)**

இப்பாடல் வரிகள் ஞாயிற்றின் கதிர்கள் ஈரத்தைக் கவர்ந்ததையும், பசுமையற்ற நிலங்களில் வெடிப்புகள் ஏற்பட்டதையும், இலைகள் வாடிப்போய் உதிர்வதையும் விளக்குகிறது.

**நீர்க்கடிகாரம்**

நல்ல காரியம் செய்வதற்கு முன் நேரத்தை பார்ப்பது உண்டு. சங்க காலத்தில் போருக்கு புறப்படும் முன் ரேத்தைப் பார்ப்பதற்காக நாளிகை கணக்கர்கள், கோவில்களிலுள்ள கிடாரமாகிய நீர்க்கடி காரத்தைக் கொண்டு நீரின் அளவைக் கொண்டு நாளிகைகளைக் கணக்கிட்டுக் கூறினர் என்பதை,

**''எறிநீர் வையகம் வெலீஇய செல்போய்நின்**
**குறு நீர்க்கன்னல் இனைத்து என்று இசைப்ப''**

**-((முல்லைப்பாட்டு 57-58)**

என்ற முல்லைப்பாட்டின் வழி அறிய முடிகிறது. அக்கால மகளிர் வட்டிலைக் கொண்டு நேரத்தைக் கணக்கிட்ட செய்தியை **அகநானுறு 44 – 1-8 –வது பாடலும்** மற்றும் **குறுந்தொகை 261 – வது பாடலும்** தெளிவாக விளக்குகின்றன.

**நியுட்டனின் விதி**

**''வேழம் வீழ்த்த விழுத்தொடைப் பகழி**
**ஆழல் புற்றத்து உடும்பில் செற்றும்**
**வல்வில் வேட்டம் வலம் படுத்து இருந்தோன்''**

**-(புறநானூறு–152)**

என்ற புறநானூற்றுப் பாடல் எய்த வில்லானது யானை, புலி, புள்ளிமான், உடும்பு போன்ற விலங்குகளை வீழ்த்திய வில்லின் வேகம் குறைந்து ஒன்றிலிருந்து மற்றொன்றைத் தாக்கி விசை நிலைப் பெற்றதாகக் கூறுமிடத்து நீயுட்டனின் விதி உணர்த்தப்படுகிறது.

அதே போல **புறநானூறு 192. 8-10 –** வது பாடலில் வரும் செய்தியும் நியுட்டனின் இரண்டாவது விதிக்கு பொருந்தியுள்ளது.

**முடிவுரை**

இவ்வாறாக சங்க இலக்கியத்தினை மாறுபட்ட கோணத்தில் பார்த்து நம் முன்னோர்களின் அறிவினை பகிர்தல் வேண்டும். இப்போக்கு நம் இளம் தலைமுறையினருக்கு தொன்மை, அறிவியல் சிந்தனை ஆகியவற்றை பறை சாற்றுவதாக அமையும்.

**பயன்பட்ட நூல்கள**


1. புறநானூறு மூலமும் உரையும், NCHB பதிப்பகம், சென்னை, முதல் பதிப்பு – 2004.
2. பத்துப்பாட்டு முதல் மற்றும் இரண்டாம் தொகுதி மூலமும் உரையும், NCHB பதிப்பகம், சென்னை, முதல் பதிப்பு – 2004.
3. நற்றிணை மூலமும் உரையும், NCHB பதிப்பகம், சென்னை, முதல் பதிப்பு – 2004.
4. அகநானூறு மூலமும் உரையும், NCHB பதிப்பகம், சென்னை, முதல் பதிப்பு – 2004.

5. குறுந்தொகை மூலமும் உரையும் NCHB பதிப்பகம், சென்னை, முதல் பதிப்பு -2004.
6. தமிழ் இலக்கிய வரலாறு, மு.வ சாகித்திய அகாடமி, 22ஆம் பதிப்பு – 2006.
7. செவ்வியல் நோக்கில் செம்மொழி இலக்கியங்கள், ப.ஆ. இராம மூர்த்தி, மெய்யப்பன் பதிப்பகம், சிதம்பரம், முதல் பதிப்பு – 2008.
8. சங்க இலக்கியச் சிந்தனைகள், தொகுதி – 2, ப.ஆ.இராம குருமூர்த்தி, மெய்யப்பன் பதிப்பகம், சிதம்பரம், முதல் பதிப்பு – 2009.
9. சங்க இலக்கியக் கட்டுரைகள், ப.ஆ.இராம குருமூர்த்தி, மெய்யப்பன் பதிப்பகம், சிதம்பரம், முதல் பதிப்பு – 2007.
10. சிறுபாணாற்றுப்படை விளக்கம், எ.கந்தசாமி முதலியார், ஒற்றுமை ஆபீர், தியாகராய நகர், சென்னை – 1947.
11. பதிற்றுப்பத்து மூலமும் உரையும், வ.த.இராமசுப்பிரமணியம், திருமகள் நிலையம்.
12. ஐங்குறுநூறு மூலமும் உரையும், ஔவை துரைசாமிப்பிள்ளை, கௌரா பதிப்பகம் / சாரதா பதிப்பகம் - 2006.
13. முல்லைப்பாட்டு ஆராய்சியுரை, மறைமலையடிகள், கௌரா பதிப்பகம் / சாரதா பதிப்பகம் - 2017.

# மனவளக்கலை மன்றத்தின் பணியும் பயனும்

**முனைவர் பா. சிங்காரவேலன்**
உதவிப் பேராசிரியர், தமிழ் உயராய்வு மையம்
அரசு கலைக்கல்லூரி, மேலூர்

தமிழ்மொழியைப் பக்தியின் மொழி என்பர். தமிழகம் ஞானியர், யோகியர், சித்தர்கள், சிந்தனையாளர்கள், நாயன்மார்கள், ஆழ்வார்கள், அறிவியலாளர்கள் எனப் பலரும் பிறந்து, வளர்ந்து, வாழ்ந்த புண்ணிய பூமி இது. வாழ்வியல் அனுபவங்களைக் கதைகளாய், கவிதையாய், பண்ணோடு கூடிய பாடல்களைப் பதிவு செய்திருப்போர் பலர். அவர்களில் ஒருவர் வேதாத்திரி மகரிஷி ஆகஸ்ட் 14, 1911 ஆம் ஆண்டு நெசவுத்தொழில் செய்யும் செங்குந்த கைக்கோளர் வகுப்பில் வரதப்ப முதலியார் சின்னம்மாள் தம்பதியரின் எட்டாவது மகனாய் பிறந்தவர். குடும்ப சூழலின் காரணமாக அதிகம் படிக்க வாய்ப்பு இல்லாத காரணத்தால் குடும்பத் தொழிலைச் செய்யத் தொடங்கினார். பதினெட்டு வயதில் தனியார் நிறுவனத்தில் பணியாற்றும் போது, ஆயுர்வேத மருத்துவர் எஸ்.கிருஷ்ணராவின் நட்பு கிடைக்க தியானம், யோகா போன்றவற்றைக் கற்றுத்தேர்ந்தார். இரண்டாம் உலகப்போரின் போது முதலுதவிப் பயிற்சியாளராகப் பணியாற்றினார். பொருளாதாரத் தன்னிறைவு பெற நெசவுத்தொழிலை விரிவுபடுத்த முயன்று தோல்வியுற்றார். 35 ஆம் வயதில் தன்னிலை விளக்கமாக இறைநிலை உணர்ந்தார். உலகில் உள்ள பல யோகா, தியானக்கலை, நுணுக்கங்களில் மனிதர் பயன்பெற எது தேவை என்பதை உணர்ந்து, அவற்றை மக்களுக்கு வழங்கும் நோக்கில் ‘மனவளக்கலை’ மன்றத்தைத் தொடங்கினார்.

உலக சமாதானம் என்ற தலைப்பில் 200 பாடல்களைத் தமிழ், ஆங்கிலம் எனும் இருமொழிகளில் வெளியிட்டார். விஞ்ஞானமும், மெய்ஞ்ஞானமும் கலந்த பாடல்களை இயற்றினார்.

1958-ல் உலக சமுதாய சேவா சங்கத்தை உருவாக்கினார். இன்று இந்தியா, மலேசியா, சிங்கப்பூர், ஜப்பான், தென்கொரியா, அமெரிக்கா உள்ளிட்ட நாடுகளில் பல கிளைகளைக் கொண்டு இயங்கி வருகிறது.

வேதாத்திரி மகரிஷி அவர்கள் இறைநிலை விளக்கம், வாழ்வியல் விழுமியங்கள், பிரம்மஞான சாரம், ஞானக்களஞ்சியம் என்ற நூல்களை எழுதியவர். 1984-ல் பொள்ளாச்சிக்கு அருகில் அருட்பெருஞ் சோதி நகரையும், அங்கு அறிவுத் திருக்கோவில் ஒன்றையும் உருவாக்கிய பெருமைக்குரியவர். உருவ வழிபாடோ, திருநீறு போன்ற பிரசாதமோ அங்கு வழங்கப்படுவதில்லை. ஆனால் ஒவ்வொரு மனிதனையும் தன்னை அறியும் அறிவை உடற்பயிற்சி, யோகா, தியானம், அகத்தாய்வு வழி கற்றுத் தருவதற்கு மிகுந்த பயிற்சி பெற்ற ஆசிரியர்கள் பலர் உள்ளனர். திருவள்ளுவர், திருமூலர், வள்ளலார், பதினெண்சித்தர்கள், தாயுமானவர் உள்ளிட்ட பண்பாளர்களின் கருத்துக்களை எளிமைப்படுத்தி அறிவியல் சிந்தனையோடு தருகிறார் ‘வேதாத்திரி மகரிஷி. அவற்றைக் கட்டுரை வழிக் காண்போம்.

## தவத்தின் பயன்

**“அகத் தவத்தால் ஐம்புலனை அடக்கி**
**அறிவறிந் திடலாம்**
**அகத் தவத்தால் ஆறுகுண**
**ஆளுமைப் பேறடைந்திடலாம்**
**அகத் தவத்தால் இல்லறத்தை**

**அன்பகமாய் ஆற்றிடலாம்**
**அகத் தவத்தால் அனைத்துயிர்கள்**
**அருநட்பைப் பெற்றிடலாம்**

மெய், வாய், கண், மூக்கு, செவி எனும் ஐந்து புலன்களையும் அடக்கலாம். பேராசை, சினம், கடும்பற்று, முறையற்ற பால் கவர்ச்சி, உயர்வு தாழ்வு மனப்பான்மை, வஞ்சம் என்ற கெட்ட குணங்கள் நீங்கும். மனைவி மக்களையும், உலக உயிர்களையும் நேசிக்கும் பண்பு மலரும். அதனால் தவம் செய்யக் குருவின் வழிகாட்டுதலோடு கற்றுக் கொள்ள வேண்டும் என்கிறார் மகரிஷி. தவத்தின் பயன்களாக பின்வருவனவற்றைக் கூறுகிறார்.

1. மனம் விரிவு பெறுதல் 2. இயற்கை விதி அறிதல் 3. எண்ணம், சொல், செயலில் விழிப்புடன் இருத்தல் ஆகியவையும், ஐந்து வல்லமைகளாக,

1. நுண்மான நுழைபுலம் 2. ஏற்புத்திறன் 3. தக அமைத்தல் 4. பெருந்தன்மை 5. ஆக்கத்திறன் என்றும், ஐந்து மேன்மைகள்,

1. இசைவு 2. நிறைவு 3. மகிழ்வு 4. மெய்யறிவு 5. அமைதி ஆகியவற்றைப் பெறுவதற்கு மனவளக்கலை மன்றம் வழிகாட்டுகிறது.

**உடற்பயிற்சி**

மனிதர்கள் இன்பத்தை உடலால் தான் அனுபவிக்கின்றனர். உடல் முழு நலத்துடனும், ஆரோக்கியத்துடனும் திகழ்ந்தால் மட்டுமே இன்பம் நிலவும். உடல் நலம் குன்றினால் நோய் ஏற்படும். எதிர்காலம் துன்பம் நிறைந்தாக மாறிவிடும். இதனை அறிந்த நம் முன்னோர்கள் "நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்" என்று கூறினர்.

**"பரமாய சக்தியுள் பஞ்சமா பூதம்**
**தரம் மாறித் தோன்றும் பிறப்பு"**

-ஔவைக் குறள்

பருவுடல்-மண், நீருடல் - இரத்தம், காற்றுடல் - உடம்பு முழுவதும் நிறைந்திருக்கும், வெப்ப உடல் - சீரான வெப்பநிலை, நுண்ணுடல் - உயிர், ஆன்மா என்பதை ஈராயிரம் ஆண்டுக்கு முன்பு வாழ்ந்த ஔவை மனித உடம்பைப் பகுத்தாராய்ந்து கூறியுள்ளார். இதில் நுண்ணுடலில் ஏற்படும் குழப்பம் மற்ற உடல்களைப் பாதிக்கும். எனவே உடலும் உயிருக்கும் நல்லுறவு கொண்டிருக்க உடற்பயிற்சியும், அதன் பின் மனப்பயிற்சியும் வேண்டும் என்பதை வேதாத்திரி மகரிஷி குறிப்பிட்டுள்ளார்.

**"கருவமைப்பு ஆகாரம் எண்ணம் செய்கை ககனத்தில் கோள்கள் நிலை சந்தர்ப்பத்தால் வரும் இயற்கை நிகழச்சிகளின் மோதல் எல்லாம் வாழும் உயிர்கட்டுப் பல ரசாயனங்கள் தரும் மாற்றம் தரமொக்க இன்ப துன்பம் தகுந்த அளவாம் இதிலோர் சக்தி மீறிப் பெருகி ரத்தம் சுழல் தடுக்க நோயாய் மாறிப் பின்னும் அதிகரித்துவிட மரணம் ஆகும்" - (உலக சமாதானம்-பா.எ.21)**

கருவமைப்பு, கோள்களின் நிலை, இயற்கைக் காரணங்கள், உணவு, எண்ணம், செய்கை, சந்தர்ப்ப மோதல் ஆகியவை செயற்கைக் காரணங்களாகும். உடலில் ஏற்படும் இரசாயன இயக்கங்கள் மாறுபாடு அடையும்போது மரணம் ஏற்படுகிறது. இதிலிருந்து உடலும் மனமும் ஆரோக்கியம் பெற இரத்தம் ஓட்டம், வெப்ப ஓட்டம், காற்றோட்டம் போன்றவை தடைபடாமல் இருக்க.. எளிய முறை உடற்பயிற்சியை உருவாக்கி மக்கள் பயன்படும்படி வழங்கிச் சென்றுள்ளார் மகரிஷி.

**அகத்தாய்வு**

அகத்தாய்வு என்பது தற்சோதனைப் பயிற்சி ஆகும். 1. எண்ணம் ஆராய்தல் 2. ஆசை சீரமைப்பு 3. சினம் தவிர்த்தல் 4. கவலை ஒழித்தல் 5. தெய்வநிலை விளக்கம் நான் யார்? என்ற பயிற்சிக்குப் பிறகு வாழ்த்தும் பயினும் என்ற பயிற்சியும் இடம் பெறுகிறது.

மனவளக்கலை மன்றத்தில் இருப்பவர்கள். ஒருவரை ஒருவர் பார்க்கும் போது **'வாழ்க வளமுடன்'** என்கின்றனர். தவம் இயற்றும் போது அன்னை, தந்தை, குரு, உடன்பிறந்தோர், உலகத்தார் அனைவரின் நலத்தையும் வணங்கி தியானத்தைத் தொடங்குகின்றனர்.

1. **நான் எனது வாழ்நாளில் யாருடைய உடலுக்கும் மனதுக்கும் துன்பம் தரமாட்டேன். துன்பப்படும் உயிர்களுக்கு என்னால் முடிந்த உதவிகளைச் செய்வேன்.**

இவ்வாறான கருத்துக்களை மக்கள் பயிற்சியின் வழி கற்று, தொடர்ந்து வாழ்வில் பின்பற்றி வந்தால் உலகியல் துன்பங்களில் இருந்து விடுபட இயலும். அதற்கு மனவளக்கலை பயிற்சி அளிக்கிறது.

**ஆக்கினை**

மூலதாரத்தில் உறங்கிய குண்டலினி சக்தியை ஆசிரியர் தன் தவ வலிமையால் முதுகுத்தண்டு வழியாக தூக்கி நடத்தி வந்து, நெற்றியில் புருவமத்தியில் வைக்கிறார்.

> **'இருவிழிகள் மூக்குமுனை குறிப்பாய் நிற்க எண்ணத்தைப் புருவங் களிடை நிறுத்தி ஒருமையும் குருநெறியில் பழகும் போது உள்ளொளியே பூரித்து மூலமான கருவுக்கு மேனோக்கு வேகமூட்டும் கருத்துக்கு இந்நிகழ்ச்சி உணர்வாய்த் தோன்றும் அருவ நிலை யாம் ஆதி உருவாய் வந்த அத்துவித ரகசியமும் விளக்க மாகும்'' (உலக சமாதானம் - 233)**

ஆக்கினைத் தவத்தால் பொருள் கவர்ச்சி நீங்கும். தன்னிலை விளக்கம் கிடைக்க வழி திறக்கும். விரும்பிய நல்வழியில் நிற்கும் திறன் கிடைக்கும், புலன்கள் அடங்கிப் போகும் என வேதாத்திரி மகரிஷி குறிப்பிடுகிறார்.

**சாந்தியோகம்**

ஆசணவாய்க்கு ஓர் அங்குலம் மேலே மனதைத் குவிக்கவேண்டும். அப்போது சாந்தி யோகம் எளிதில் பிடிபடும். சாந்தி தவம் உயிராற்றலை ஆக்கினைக்கும், அதற்கு மேலேயும் தூக்கிப் பிடிக்க உதவும். தொடக்க காலத்தில் தவமியற்றுதல் என்பது உயிருக்கு ஆபத்தை விளைவிக்கும் பிரமை, பைத்தியம் போன்ற கொடிய வியாதிகளுக்கு அடிகோலும். ஆனால் மகரிீயின் முயற்சியினால் தவக்கலை அதீதத்தை உடல்நலனுக்கும், உள்ளத்தின் நலனுக்கும் பயனாக்கிக் கொள்ளவும் சாந்தியோகம் உதவுகிறது. இதனை,

> **''தவவேகம் உடல் பலத்தை மீறும்போது தணித்தடவும் வழியுண்டாம்''** என்கிறார்.

**துரியம்**

உச்சந்தலையில் உணர்வை நிறுத்தித் தவம் இயற்றுதல் பிரம்மரந்திரத் தவமாகும். இதற்குத் துரிய நிலைத்தவம் அல்லது துரியமாகும். ஆக்கினைச் சக்கரத்தில் கையால் தொட்டு உணர்வு கொடுத்த ஆசிரியர், தன் இருவிழி அருட்பார்வை மூலம் துரிய தீட்சை கொடுக்கிறார். ஐம்புலனாக விரித்தே பழகிய மனம் ஆக்கினையில் ஒரே புலனாகச் சுருங்கி நின்றது. இத்துரிய தவத்தில் ஒரு புலனும் மறைய மனமானது மூல நிலையான உயிராகவே நிற்கிறது. உயிர் உயிராக நின்று, மனம் அமைதி பெறுவதற்கான தயாரிப்பு நடைபெறுகிறது என்கிறார் மகரிஷி. துரிய நிலைத் தவத்திற்கு சகஸ்ராதார யோகம்

என்ற பெயருண்டு. சகஸ்ரம் என்றால் ஆயிரம். மூளையில் ஆயிரக்கணக்கான சிற்றறைகள் உண்டு. உயிர் சக்தியானது ஒவ்வொரு அறையிலும் புகுந்து புகுந்து வருவதால், ஒவ்வொருவரும் ஒரு விதமான உணர்வைப் பெறுகின்றனர். பழிச்செயல் பதிவுகளிலிருந்து தூய்மைக்கு ஏற்றதோர் பயிற்சி துரியநிலை யோகமாகும். மாணவர்கள் இத்தவத்தினை அறிவதன் மூலம் நினைவாற்றல் பெருகும். மனம் ஒருநிலைப்படும் என்கிறார் மகரிஷி.

**துரியாதீத தவம்**

துரிய நிலைத் தவத்தில் உயிரைப் பற்றியே நினைத்திருந்து உயிராக மட்டுமே இருக்கின்றோம். இங்கு துரியாதீத தவத்தின் பயனாக பிரம்மாகவே மாறி நிற்கிறோம். அதாவது சமாதி என்றால் ஆதிக்குச் சமமாதல் என்று பொருள். ஆதியாகிய பிரம்மத்திற்குச் சமமான நிலைக்கு மனிதன் உயர்ந்து விடுதலாகும். துரியாதீதமே வீடுபேறு. மனிதன் எதை நினைக்கிறானோ அதுவாகவே மாறிவிடுகிறான். எனவே தனக்கு அப்பாற்பட்ட ஒரு மகத்தான சக்தி இருக்கிறது என்பது தெரிகிறது. இதனை

**ஐயப்படா அது அகத்துணர் வானைத்**
**தெய்வத்தோ டொப்பக் கொளல்**

**-(குறள் - 702)**

என்ற குறளையும் இவ்விடத்தில் ஒப்பிட முடிகிறது.

யோகத்தின் மூலம் மாசடைந்த மனதை, மெய்ப்பொருளில் சேர்த்து விடுகின்றோம். துரியாதீதத்தின் வெற்றி மனமாசு நீங்களில் முழுமையடைகிறது. இதனைப் பக்தி மார்க்கத்தில் சரணாகதி என்பர் இறைவனின் பெருமையை ஏற்றுக்கொண்டு, மதித்து அவனிடம் தன் உடல் பொருள் ஆவியைப் பூரணமாக ஒப்புக்கொடுத்தல் என்பர். இறைவன் வேறு மனிதன் வேறு அல்ல. இரண்டும் ஒன்றாகவே மாறி விடுவதைக் குறிப்பிடுகின்றனர். இத்தத்துவத்தை மிக எளிமையாக விளக்குகிறார் மகரிஷி "மண்ணில் ஆழமாகப் போகப் போகத் தான். தண்ணீர் கிடைக்கும். மனத்தின் ஆழமே துரியாதீதம் என்கிறார்.

**"இறை நிலையோ டெண்ணத்தைக் கலக்கவிட்டு ஏற்படும் ஓர் அமைதியில் விழிப்பாய் நிற்க நிறை நிலையே தானாக உணர்வதாகும்"**

"கறை நீங்கி அறிவு மெய்ப்பொருளாய் மாறும்" கறை நீங்கி என்றால் ஆணவம், கன்பம், மாயை என்ற மும்மலங்களும் இந்த உயிரிலிருந்து நீங்கி மெய்ப்பொருளாகவே மாறுகின்ற நிலை என்று ஒரு தவத்திற்கு வேதாத்திரி மகரிஷி எண்ணற்ற கருத்துக்களை ஒப்புமைப்படுத்திக் கூறிடும் பங்கு சிறப்புக்குரியதாகும்.

**மனம்**

மனத்தின் தன்மை எதுவோ அதுதான் மனிதனுடைய தன்மை. மனத்தை வளப்படுத்த வேண்டியது அவசியமாகும். "மனத்தை அடக்க நினைத்தால் அலையும், மனத்தை அறிய நினைத்தால் அடங்கும்". எனவே மனத்தை மனத்தால் அடக்க வேண்டும் என்கிறார் மகரிஷி. இதனை ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பே திருமூலர் திருமந்திரத்தில்

**உள்ளத்தின் உள்ளே உள பல தீர்த்தங்கள் மெள்ளக் குடைந்து நின் றாடார் வினைகெடப் பள்ளம் மேடும் பறந்து திரிவரேகள்ள மன முடைக் கல்வியில் லோரே.** என்கிறார்.

மனத்தின் மகத்துவத்தை உணராதவர். அறிவில்லா தவர்கள் அவர்கள் தனக்கும் சமுதாயத்துக்கும் துன்பம் விளைவித்துக் கொண்டு தான் இருப்பார்கள். இன்பமும் அமைதியும் மனத்திற்குள்ளிலிருந்து தான் வர வேண்டும் என அறியாமல் எங்கெல்லாமோ அவற்றைத் தேடி அலைந்து துன்புறுவார்கள் என்கிறார். திருமூலரின் கருத்தை இருபதாம்

நூற்றாண்டில் எளிமைப் படுத்திக் கூறியவர் மகரிஷி.

**“எச்செயலும் மூலமெனும் எண்ணத்தாலாம்**
**இன்ப துன்பக் காரணமும் அதுவேயாகும்**
**இச்சையெனும் தீ எழுந்து எரியும் போது**
**இயங்கும் உடற்கருவிகளால் அறிவைக்**
**கொண்டு அச்சமற அனுபவித்தே**
**அணைக்கலாகும் அதைத் தணிக்க**
**வேறுவழியில்லை அதனால் நச்சுவிளை**
**இச்சைகளை விளைவிக்காத நல்லொழுக்க**
**வாழ்க்கைக்கு முறைவகுத்தேன்”**

என்று மகரிஷி பாடல் புனைந்துள்ளார்.

### கர்மவினை நீக்கல்

மனிதர்களின் முற்பிறவியில் எண்ணிய எண்ணங்கள், செய்த செயல்கள், அனுபோக அனுபவங்கள் எல்லாம் வினைப் பதிவுகளாகின்றன. இதனை சஞ்சித கர்மம் (சேமித்த வினைப்பயன்) என்றும், பிராரப்த கர்மம் (செயல்படுகின்ற வினைப்பயன்) என்றும், ஆகாமிய கர்மம் (வர இருக்கின்ற வினைப்பயன்) என்றும் பிரிக்கின்றனர். மனிதனை ஆட்டிப்படைப்பது சஞ்சித கர்மம் தான். இதனை மக்கள் வழக்கில் ‘வினை விதைத்தவன் வினையறுப்பான், தினை விதைத்தவன் தினை அறுப்பான்’ என்றும், விதையொன்று போட்டால் சுரை ஒன்றா முளைக்கும் என்றும் கூறுவர். எனவே முன்வினைப்பயன், பிறவிப்பிணியைப் போக்க தியானம், யோகா போன்ற பயிற்சியில் ஈடுபட்டு அகத் தூய்மையை வளர்த்துக் கொண்டால், சஞ்சித கர்மத்தைப் போக்கலாம் என்கிறார் மகரிஷி.

### தியானம்

எண்ணத்தை ஒழுங்குபடுத்த முறையான பயிற்சிகள் அவசியம். பழைய யோக நூல்கள் பிரத்தியாகாரா, தாரணா, தியானம், சமாதி என நான்காகப் பகுக்கின்றனர்.

**பிரத்தியாகாரா – ஓடிக்கொண்டிருக்கும் மன ஓட்டத்தைத் திருப்பி விடுவது, மாற்றியமைப்பது தாரணா – ஒரு பொருள் மீது, செயல் மிது, நினைவின் மீது மனத்தை நிறுத்தி வைக்கப் பழகுவது தியானம் – மனம் எங்கிருந்து புறப்படுகிறதோ, அவ்விடத்திலே மனத்தை நிலை நிறுத்தப் பழகுவது. சுமாதி – மனத்தை ஒன்ற வைத்துத் தானும் அதுவாகவே மாறி விடுகின்ற நிலை**

மக்கள் தியானம் செய்வதன் மூலம் ஐம்புலன்களை அடக்கும் திறன் பெறுகின்றனர். இதனை வள்ளுவர்

**ஒருமையுள் ஆமைபோல் ஐந்தடக்க**
**லாற்றின் எழுமையும் ஏமாப் புடைத்து**
**-(குறள் - 126)**

ஓர் ஓட்டுக்குள் தன் ஐந்துறுப்புகளையும் அடக்கும் ஆமையைப் போல், ஒருவர் தனம் ஐம்பொறிகளையும் அடக்கும் திறன் பெற்றால் அது எல்லாக்காலத்திற்கும் பாதுகாப்பைத் தரும் என்கிறார். இதனை பக்தி இலக்கியங்களும் வலியுறுத்துவதைக் காணமுடிகிறது. புலனின்பம் குறையும் போது, மனம் ஒரு நிலைப்படுகிறது. எண்ணம் சீராக இயங்குகிறது. நல்லவற்றையே மனம் நாடிச் செல்கிறது. உலகியல் இன்பம் தவிர்க்க உற்றதுணையாக தியானம் அமைகிறது.

### நிறைவாக

சித்தர்களின் பாடல்வழி அறிவையும், அகத்தையும் சீரமைத்து, உடம்புக்குள் உத்தன் கோயில் கொண்டிருப்பதை ஒவ்வொருவரும் பயிற்சியின் வழி கண்டடையச் செய்தவர் மகரிஷி. கோயில் குளம் அலைந்து திரியும் மக்களே, உள்ளம் கோயில், உயிர் இறைவன் என்று அறியச் செய்தவர். மனவளக்கலை மன்றத்தை நாடி வருவோரிடம் பொருளைப் பெறாமல், அருளை, அமைதியை வழங்கி வருவோர் பலர். அறிவியல் பூர்வமாகக் கண்டு உணர்ந்ததை மக்களின் மனநலத்திற்கும், உடல் நலத்திற்கு வழங்கிய வள்ளல் பிறந்த மண்ணில் நாமும் வாழ்ந்தோம் என்ற பெருமைப்படுவதுடன், பயிற்சியில் பங்கு பெறுவோம். பலன்கள் இருப்பதைக் கண்டு மகிழ்வோம்.

**வேதாத்திரி மகரிஷியைப் போற்றுவோம்!**
**வாழ்க வளமுடன்**

# ஜெயமோகனின் விஷ்ணுபுரம் நாவலில் இலக்கியங்களில் இயற்கை

**மா. வள்ளி**

முனைவர் பட்ட ஆய்வாளர், (முழுநேரம்) தமிழ்த்துறை
அரசு ஆடவர் கலைக்கல்லூரி, கிருஷ்ணகிரி

***ஆய்வுச் சுருக்கம்***

*ஜெயமோகனால் எழுதப்பட்ட விஷ்ணுபுரம் (1997) நாவல் தமிழ் இலக்கிய உலகில் பெரிய கவனத்தைப் பெற்றதோடு மட்டுமல்லாமல் விவாதத்தையும் ஏற்படுத்தியுள்ளது. விஷ்ணுபுரம் நாவல் வெளிவந்த பிறகு தமிழ் இலக்கியத்தின் முக்கியமான ஆளுமையாக உருவெடுத்தார் ஜெயமோகன். இந்த புதினம் இந்திய அளவில் மிகச் சிறந்த பத்து நாவல்களில் ஒன்றாக விமர்சகர்களால் கணிக்கப்படுகிறது. இந்நாவல் குறித்த விமர்சனத்தை முன்னெடுக்கிறது இந்நாவல் பாண்டிய மன்னரின் தலைமைக் குருவான அக்னிதந்தர் என்னும் பார்ப்பனர், மேற்கு மலைத் தொடர்ச்சிப் பகுதியில் வாழும் பழங்குடியினர் பற்றிய கதைக்கருத்துகளை கொண்டு உருவாகியுள்ளது. இப்புதினம்.*

## முன்னுரை

இருபதாம் நூற்றாண்டுத் தமிழ்ப் புதின வளர்ச்சியில் ஒரு மாபெரும் சாதனையை ஜெயமோகனினின் விஷ்ணுபுரம் என்ற நாவல் உருவாகியுள்ளது. பாண்டிய மன்னர்களின் குருவாக கருதப்படும் அக்னிதத்தர் என்ற பார்ப்பனர், மேற்கு மலைத் தொடர்ச்சிப் பகுதியில் வாழும் பழங்குடியினர் பன்னெடுங்காலம் வழிபட்டு வந்த மூப்பனை விஷ்ணு வாக்கியத்துடன் விஷ்ணுபுரம் என்ற நகரையும் உருவாக்குகிறார். வைதீக இந்து சமயம் செழித்தோங்குவதற்கு கேற்ற வகையில் ஐதீகங்களும், அற்புதங்களும், சுட்டுக்கதைகளும் தொடர்ந்து கற்பிக்கப்படுகின்றன. பாண்டிய மன்னர்களின் ஞான நகரமாக மாறிய விஷ்ணுபுரம் பின்னர் பௌத்தர்கள். களப்பிரர்கள், சமணர்கள், பார்ப்பனர்கள் போன்றோரின் ஆளுமைக்குட்படுகிறது. காலச் சுழற்சியில் கைவிடப்பட்டுச் சிறிய கிரமமான விஷ்ணுபுரம் இறுதியில் சோனா ஆற்றுப்பெருக்கில் அழிவடைகிறது.

## நாவலின் இலக்கிய கூறுகள்

இப்புதினத்தில் கோயில் கலாச்சரப் பின்னனி கொண்ட பழைய இந்திய பண்பாட்டு வரலாறு, அரசர் வரலாறு, சமய வரலாறு, சாதிய வரலாறு எல்லாம் இணைந்த பல்வேறு காலங்களின் இணைவொருமை கொண்டதான இந்திய வரலாற்றுத் தடங்களைப் பதிவு செய்துள்ளார். ஜெயமோகன் அவர்கள் வரலாற்றுப் புதினமாக அமையும் இப்புதினத்தில் தனிநபர் இயக்கம் குறித்த ஒர் தோற்றமாகவும் இணைந்துள்ளது. காவிய பாணிக்கூறுகளை உள்ளடக்கி படி மங்களின் மொழியால் உருவாக்கப்பட்டுள்ளன “விஷ்ணுபுரம்” இருபதாம் நூற்றாண்டுத் தமிழின் மற்றுமொரு காலத்தை வென்று நிற்கும் காவியம் என கருதப்படுகிறது. பலகுரல் தன்மையும், உட்சிக்கல்களும், இவ்வியல்புகளை விரிவாக கொண்ட நாவல் “விஷ்ணுபுரம்” இந்நாவல் இந்திய புராண மரபையும், தமிழின் காப்பிய மரபையும் இணைந்த ஆ நவய கஉைவழை தென்மை யுடையது. இது புராண இதிகாசச் சொல்லாடல் மூலம் இந்திய புராண இதிகாசக் கட்டமைப்பை மேற்பரப்பில் கொண்டு வருகிறது. வரலாறும் புராணமும் புனைவும், சொல்நினைவும் புராதனப் படிமங்களும் ஒன்றை ஒன்று மறு பொருள் படுத்தியமைய அர்த்தத்தைக் கலைத்து வருகின்றன. இந்திய வரலாறு, அறம், தத்துவம் என்ற பொதுக்கள நம்பிக்கைகளுக்கு உள்ள ‘இறை’ வெவ்வேறு கதைத் தடங்களின் வழியே நகர்த்தப்படுவதன்

மூலம் அது முன்பு உருவாக்கப் பட்டுவந்த வழிகளும் தடங்காட்டப்படுகின்றன. இதன் பிரதியாக்கம் தன்னைத் தானே கட்ட விழ்த்து ஒரு பகுதியில் கட்டமைக்கப் பட்டவைகளை வேறு ஏதோ ஒரு பகுதில் சிதற வைத்துவிடும் தன்மை உடையது. விஷ்ணுபுரம் நாவல் காரக்காரிய அறிவுடன் சகலவிதமான தொன்மங்களையும், பழமரபுக் கதைகளையும் நுணிகி ஆராய்கிறது. வைதீக இந்து சமயத்தினரான சூரியதத்தர் தன்னுடைய முன்னோரை 'மம்மி'யாக வைத்து வழிபட்டார். ஸ்ரீபாதந் திருவிழாவின் இறுதி நாளில் குடும்ப நிறுவனத்தை விட்டு வெளியே வந்து வரன் முறையற்ற புணர்ச்சியில் மக்கள் ஈடுப்பட்டனர் என்ற தகவல்களை பதிவு செய்துள்ளார் ஜெயமோகன் அவர்கள்.

**விஷ்ணுபுரம் நாவல் இலக்கியங்களில் ஒரு பார்வை**

இந்தியாவில் பல்வேறு காலகட்டங்களில் நிலவிய இறையியல், சமய மெய்யியல், சித்தாந்தங்கள், நுண்கலைகள் ஆகியவற்றைப் பற்றி இந்நாவல் எடுத்துரைக்கிறது. கருத்தியல் ரீதியில் பல்வேறு சம்பவங்களையும் இந்நாவல் எடுத்துரைக்கிறது. காப்பிய மரபின் நீட்சியையும் காப்பிய புனைவில் அதீதத்தையும் சுட்டிக் காட்டியுள்ளது. விஷ்ணுபுரம் நாவலில் பல்வேறு திரிசனங்கள் இடம்பெறுகின்றன. இந்நாவலை மிகவும் ஆற்றல் மிக்கதாகச் செய்வது இந்த தரிசனங்கள்தான். ஜெயமோகனைத் தவிர தத்துவ தரிசனங்கள் குறித்த ஆழ்ந்த பார்வையோடு இப்படி ஒரு தமிழ் நாவலைச் செய்வதற்கு வேறுயாரும் இல்லை. ஒற்றை தரிசனம் என்பது வாழ்வியலை விளக்க முடியாது. (ஞானி, தமிழ் நாவல்களில் தேடலும் திரட்டலும், பக்.5) ஜெயமோகனே குறிப்பிட்டுள்ளபடி நாத்திகக் கூறுகள் வாழ்வியலை மறுக்கும் எதிர்மறைக் கூறுகள் அதிகம் இந்நாவில் உள்ளன. நவீன கால களம் நாவலுக்குள் குறைவாகவே இருக்கிறது (மேலது, பக்.7) பல்வேறு வகைகளில் கல்கி புனிதப்படுத்திய வரலாற்று நாவலின் கூறுகளை ஜெயமோகன் கலைத்துப்போடுகிறார்.

விஷ்ணுபுரம் நாவலின் பிரமாண்டம் வாசகனைப் பெரு மூச்சடையச் செய்வதுடன் பிரமிப்பையும் தருகிறது. மொழி மீதான தொழில் நுட்ப ஆளுமை நாவலின் இலக்கைத் தாண்டியும் இருத்துச் சென்று விட்டது. காப்பிய மரபின் நீட்சி என்ற பார்வையும், காப்பியப் புனைவின் அதீதமும் விஷ்ணுபுரத்தின் அக்கத்தில் அடிப்படையாக உள்ளன. வழக்கமான இடத்தில் பயணித்துக் கொண்டிருக்கும் தமிழ் நாவல் போக்கில் புதிய பாங்கினை முதன்மைப் படுத்தும் 'விஷ்ணுபுரம்' தனித்து வமான நாவலாக விளக்குகிறது.

(ந. முருகேச பாண்டியன், இலக்கிய ஆளுமைகளின் படைப்புத்திறன் பக்.89) வைதீக இந்து சமயம், தனது மேலாண்மையைத் தக்க வைத்துக் கொள்ளச் செய்திடும் தந்திரங்கள், சூதுக்கள், புறட்டுகள், செயற்பாடுகளின் தளமாக விளக்குகிறது. இந்நாவல் வைதீக இந்து சமயத்தின் முதன்மை அங்கமாக விளங்கும் பார்ப்பனியம் பிறரை ஒதுக்குவதுடன் தன்னை அடித்தட்டு மக்களிடமிருந்து ஒதுக்கிக் கொள்வதையும் வழக்கமாகக் கொண்டுள்ளார். ஆட்சியதி காரத்தினைத் தக்க வைத்துக் கொள்வதற்காகக் கருத்தியல் ரீதியில் சமயத்தினைப் பயன்படுத்தும் பார்ப்பனியத் தந்திரங்களையும் கபட முயற்சிகளையும் நாவல் முழுக்க நுட்பமாக ஜெயமோகன் சித்தரித்துள்ளார்.

வரலாற்றின் ஒரு காலகட்டத்தை விவரிக்க விஷ்ணுபுரம் முடியவில்லை. ஆனால் அது வரலாறு இயங்கக் கூடிய விதம் ஒரு விரிவான சித்திரத்தை தருகிறது. ஆகவே அது ஒரு வரலாற்று நாவல்தான். நாவலின் முதல் பகுதியில் வரும் ஐதீகமனிதர்கள்

எல்லாகும் இரண்டாம் பகுதியில் நிஜ மனிதர்களாக வருகிறார்கள். நிஜ மனிதர்கள் அனைவரும் மூன்றாம் பகுதியில் ஐதீகங்கள் ஆகிவிடுகிறார்கள். வரலாறு என்பது ஐதீகங்கள் மூலம் எப்படி நெசவு செய்யப்படுகிறது என்பதனை இந்நாவல் காட்டுகிறது.

நேரடியாக தத்துவ போராட்டங்கள் நடந்த காலமான 5ம் நூற்றாண்டு முதல் இஸ்லாமிய படையெடுப்பான 13ம் நூற்றாண்டு வரையிலான தமிழக வரலாற்றை நாவல் குறிப்பாக காட்டுகிறது. புல உட்குறிப்புகள் மிக முக்கியமானவை. உதாரணமாக பௌத்த மதம் வரும் போது வணிகர்கள் ஆதிக்கம் பெறுகிறார்கள். பக்தி இயக்கம் வரும்போது மூன்றாம் தள ஜாதிகள் ஆதிக்கம் பெறுகிறார்கள். ஆயினும் விஷ்ணுபுரத்தின் வரலாற்றை பார்வையின் முக்கிய அம்சம் அது பழங்குடி மரபுக்கு தரும் முக்கியத்துவம் தான். இது இந்நாள் வரை பிற ஆசிரியர்கள் கவனிக்காத ஒரு கோணம். எப்படி தமிழ் பண்பாட்டை வைதீகம் தோற்கடித்ததோ அதேபோல் ஒரு பெருடம் பழங்குடி பண்பாடு எல்லா வரலாற்றுக்கும் அடியில் உள்ளது. விஷ்ணுபுரண்டு படுக்கும் பிரளயம் வரும்போது மிஞ்சுவசு அது மட்டுமே என்று காட்டுகிறது. இந்நாவல் இப்படி ஒன்றை ஒன்று வெட்டும் 3 அடுக்குகளாக நாவல் வரலாற்றை சித்தரிக்கிறது. அதேபோல வரலாறு போராலே மற்ற விசையங்களாலோ உருவாவது இல்லை என்று நாவல் காட்டுவதும் முக்கியமானது. கருத்துக்களால் ஆனது என்று காட்டுகிறது இந்நாவல். ரிக்வேதம் முதல் கடைசியல் தாந்த்ரீகம் வரை கருத்துகள் மூலம் நகரும் வரலாறு இதில் காட்டப்பட்டுள்ளது.

### விஷ்ணுபுரம் கருத்துகளும் விமர்சனங்களும்

கதை எழுதப்பட்ட உத்தி மட்டுமே விஷ்ணுபுரத்தின் வெற்றி முதல் பாகத்தில் இயல்பாக செருகப்பட்ட பல்வேறு கதைகள் பாதியில் நிறுத்தப்படுகின்றன. பின்னர் மூன்றாம் பாகத்தில் அவற்றின் முடிவுகள் பல்வேறு புதிய கதாபாத்திரங்கள் மூலமாக வழிந்து சொல்லப்படுகின்றன. எல்லாக் கதைகளும் பாதி உண்மையாகவும் பாதி புனையப்பட்ட கதைகளாகவும் கிடக்கின்றன. உதாரணமாக சித்திரை என்ற சிறுமி பாத்திரம். அவள் லாய அதிகாரியின் பேத்தி. அவர்களின் குல தெய்வம் செங்கழல் கொற்றவை என்ற பத்தினிப் பெண். அவளைப் பாண்டிய மன்னன் திருமணம் செய்ய ஆடை, ஆபரணங்களை அவள் இல்லத்துக்கு அனுப்புகிறான். அனைத்தையும் அணிந்து கொண்டு திருமணத்துக்குத் தயாராகிறாள். அவளின் தாத்தா விபூதி எடுத்துவரும் முன்னர் அவள் அறை தீப்பிடித்து எரிகிறது. இத்துடன் முதல் பாகத்தில் இந்த அத்தியாயம் முடிந்து, மூன்றாம் பாகத்தில் ஒரு பாட்டி வாயிலாக இக்கதை சித்திரை தான் திடீரென பெரிய சுடராகத் தோன்றி செங்கழல் கொற்றவையாக மாறியதாக முடிகிறது. அதன் காரண காரியங்கள் எதுவும் விளக்கப்படவில்லை. இதைப் போன்ற பல முரண்பாடுகள் நூல் முழுவதும் விரவிக் கிடக்கின்றன.

இதைப் போன்று பல கதைகள் அவற்றின் நாயகர்கள் முறையே பிங்கலன், பீதாம்பரம், திருவடி, சங்கர்ஷணன், திரிவிக்கிரமர், கோபிலர், சூரியதத்தர், அஜிதர், காசியபர், வீர நாராயணர், பெருந்தச்சர், பவதத்தர், மகா காலன், பெரு மூப்பன், வீர வல்லாளன் அநிருத்தன், லட்சுமி, நீலி, பத்மாட்சி, லலிதாங்கி, சாருகேசி, பரவை, வைஜெயந்தி ஆகியோர் எல்லாக் கதைகளிலும் ஆரம்பம் நன்றாகவே இருக்கிறது. முப்பது சதவீதம் நம் கற்பனையிலும், மீதி நாற்பது சதவீதம் மிகைப் படுத்தப்பட்டும் முடிகின்றன.

விஷ்ணுபரம் நூல் அட்டையில் பாம்பணையில் துயிலும் சிறிது சிதைந்த மகாவிஷ்ணுவின் சிலை உள்ளது. ஆனால் கதைப்படி

விஷ்ணுபுரத்தில் உள்ள சிலையானது மல்லாந்து படுத்திருக்கும் ஒரு மனிதனின் சிலை இதில் வரும் கதைகளின்படி அச்சிலையானது விஷ்ணுவே அல்ல, அது பெருமூப்பன் என்பவனின் சிலை அல்லது ஆயிரம் வருடங்களுக்கு முன்னால் வாழ்ந்த மனிதர்கள் செதுக்கிய சிலை. அரசியல் மற்றும் அதிகார ஆசையுடன் விஷ்ணுபுரத்தை ஆள்வதற்காக பலரின் தந்திரத்தால் உருவாக்கப்பட்ட நகரமே விஷ்ணுபுரம் அவர்கள் அந்த சிலையை விஷ்ணுவாக மாற்றிப் பிரமாண்ட மான கோபுரங்களையும், சாஸ் திரங்களையும் ஏற்படுத்தினர். வழிவழியாக பாண்டிய மன்னர்களின் ஆளுகைக்கு உட்பட்ட இந்நகரை தத்தர்கள் என்ற பெயர் கொண்ட குரும்பரை வழி நடத்துகின்றனர்.

விஷ்ணுபுரத்தில் நடைபெறும் மகாபாரதத் திருவிழாவிற்கு நாடெங்கிலும் இருந்து பக்தர்கள் வருகின்றனர். லட்சம் பேருக்கு மேல் வருவதாகவும், மக்கள் கூட்ட நெரிசல் பற்றியும் பல பக்க வர்ணனைகள் தெறிகின்றன. அப்பேர்ப்பட்ட நகரில் பெரிய தொழிலாளர்கள் என்று பார்த்தால், கணிகையர்கள் தான் முதலிடம் வகிக்கிறார்கள் பின்னர் முறையே பண்டிதர்கள், துப்புரவுத் தொழிலாளர்கள். வணிகர்கள், பிச்சைக்காரர்கள். நிறைய பிராமணர்கள் இருக்கிறார்கள், சூத்திரர்களை திட்டுவதும், பந்தியில் இடம் பிடித்து உண்பதும் அவர்கள் தொழிலாக சித்தரிக்கப்பட்டுள்ளது. இப்படி நாடெங்கிலும் இருந்து வந்திருக்கும் பக்தர்கள் ஒரு காட்சியில் கூட இறைவனை மனமுருகிப் பிரார்த்திப் பாக எந்தக் குறிப்புகளும் இல்லை. அங்கே கிடைக்கும் அப்பங்களை உண்பதும், சபையில் ஏதாவது பரிசு கிடைக்குமா என்று ஏங்குவதும், வயிறு புடைக்கக் கள்ளைப் பருகுவதும், தாசித் தெருவில் கணிகையரை தரிசிப்பதுமாவும் இருக்கின்றனர். அனைத்து வர்ணனைகளிலும் மிகை தென்படுகிறது. இவ்வாறு கதையின் பாதிக்கு மேலான கருத்தை ஒருவர் மறுப்பதும் ஒருவர் ஏற்பதுமாகச் கதைச் சென்றிருக்கிறது என்பதை இருநாவல் உணர்த்துகிறது.

**விஷ்ணுபுர கதைசிந்தனை**

கதையில் அழகுணர்ச்சி என்பது சிறிதும் இல்லை, ஆலயங்கள் கூட அழகை விட பிரம்மாண்டத்தை மட்டும் வெளிப்படுத்துகின்றன. கோபுர வாசலும், தோரணங்களும், லட்சம் யானைகளும், சோனா நதியும் எல்லாமே பிரம்மாண்டம் என்று கூவும் மொழிகள் அலுப்பூட்டுகின்றன. வாசனைகளை விட நாற்றங்களே அதிகம். இந்த கதையில் ஒரே ஒரு வெண்குதிரை மட்டும் அழகாக இருந்தது. அதுவும் வெறி பிடித்துக் காணாமல் போய்விடுகிறது. மூன்றாம் பாகத்தில் அந்த புரவிக்கும் கோவில் எழுப்பப்பட்டுள்ளதை குறிப்பிட்டுள்ளார்.

ஒரு வேலை அந்த குதிரையால் இறந்து போன ஆழ்வாரின் நினைவாக குதிரைக்குக் கோவில் எழுப்பியிருப் பார்களோ என்னமோ, என்று ஒரு கேள்வி உள்ளது. மற்றபடி எல்லா கதா நாயகர்களும் ஒவ்வொரு கணிக்கையர்களால் ஞானம் பெறுகிறார்கள். கற்பு தெறி தவறியவர்கள் எல்லாரும் ஞானம் பெறுகின்றனர். ஓினச் சேர்கையாளர்கள் பெரிய ஞானிகளாக சித்தரிக்கப்படகின்றனர், வித்யார்த்திகள் யாருக்குமே ஞானமோ, தியானமோ கை கூடுவதில்லை. அனைவரும் தாம் பிரம்மச்சாரிகளாக இருப்பதை எண்ணி வருத்திக்கொண்டே இருக்கிறார்கள். அவர்களின் குருவானவர்கள் தத்தம் இளமையில் எந்த சுகத்தையும் அனுபவிக்காமல் தொலைத்து விட்டதை எண்ணி கவலைப்பட்டே முக்தி அடைகின்றனர். நிறைய பேர் இறந்தே போகிறார்கள் கதை நெடுகிலும் யார் இறந்தாலும் ஒரு கருப்பு நாய் வந்துவிடுகின்றது. மர்ம தேசம் நாடகத்தில் வருவது போல யாருக்குமே வெற்றி மனப்பாங்கோ, தர்ம சிந்தனையே,

மகிழ்ச்சியோ கிடைப்பதே இல்லை. யாரேனும் ஒருவர் பெரிதாக வெற்றி பெற்று விட்டால் உடனே தாம் வெற்றி கொள்ள இனி எதுவுமே இல்லையே என்று வருந்த ஆரம் பிக்கிறார்கள். அல்லது தாம் பெற்ற வெற்றியை தோல்வியாக, குற்ற உணர்வாக எடுத்துக் கொண்டு குமைகிறார்கள். உதாரணம் ஞான சபையில் காவியத்தை அரங் கேற்றிய சங்கர்ஷணன், கிருஷ்ண பட்ச பரிட்சையில் வென்ற அஜிதர். (ஊமைச் செந்நாய் ஆசிரியர் ஜெயமோகன்) என்ற கதையில் வரும் வெள்ளைக்காரன் யானையைக் கொன்றதும் இதே உணர்வுகளைத் தான் அடைக்கின்றன.

## தொகுப்புரை

இக்கதையில் அழிவு ஒன்றே தான் பிரதானமாக இருக்கிறது. பிரளயதேவி சிலையைப் பற்றியும் அதன் கண்கள் திறக்கப்பட்டவுடன் பிரளயம் தொடங்கு வது மற்றும் மகா காசியப்பர் பற்றிய பகுதிகள் மட்டுமே மிகுந்த உயிர்ப்புடன் இருக்கின்றன. விஷ்ணு சிலை கட்டப்பட்டதைப் பற்றியோ, வழிபாடுகள் பற்றியோ, பிரம்மாண்ட கோவில் எழுந்ததைப் பற்றியோ, பலமுறை பிரளயம் அழித்த கோவில் எப்படி மீண்டது என்பதைப் பற்றிய எதுவுமே இல்லை. இவ்வாறு விஷ்ணுபுரம் நாவல் அழிவை மட்டுமே முன் வைக்கிறது. இறுதியில் இக்கதையின் அழிவை பற்றி கருத்துக்களை மட்டுமே முன் வைத்துள்ளார். ஜெயமோகன் அவர்கள்.

## முடிவுரை

வைதீக இந்து சமயத்திற்கும், பௌத்தத்திற்குமான முரண்பாடு 'விஷ்ணுபுரம்' நாவலின் கதை யோட்டத்தில் முக்கிய பங்கு வகிக்கிறது. பேரதிகாரம் ஏதுவாக இருந்தாலும் தன் கனத்தால் தானே சிதைந்து அழியும் வரலாற்றுண்மையை விஷ்ணுபுரம் நாவல் உணர்த்துகிறது.

## அடிக்குறிப்புகள்


1. முனைவர் துரை சீனிச்சாமி. தமிழியல் கோட்பாடுகள் வெளியீடு அனன்யா
2. தஞ்சாவூர் முதற்பதிப்பு செப்டம்பர் 2005.
3. முனைவர் கா.ஆபத்துக்காத்த பிள்ளை, இலக்கிய விழுமியங்கள்
4. திருவல்லிக்கேனி, சென்னை, முதற்பதிப்பு 2009.
5. ஜெயமோகன் விஷ்ணுபுரம் கும்பகோணம் அகரம் பதிப்பகம் முதற்பதிப்பு- 1997.

Vol. 7 Special Issue 2 March 2023 E-ISSN: 2456-5571

# தண்ணீர் தேசம் புதினத்தில் அறிவியல் சிந்தனைகள்

**பொன். கனகா**
உதவிப் பேராசிரியர், தமிழ்த்துறை
வ.உ.சிதம்பரம் கல்லூரி, தூத்துக்குடி

***ஆய்வுச் சுருக்கம்***
*இக்கட்டுரையில் கவிஞர் வைரமுத்து எழுதிய தண்ணீர் தேசம் எனும் நாவல் வெளிப்படுத்தக் கூடிய, அறிவியல் சிந்தனைகள் ஆராயப்பட்டுள்ளது. தண்ணீர் தேசம் நாவல் குறித்தான செய்தி எடுத்துரைக்கப்பட்டுள்ளது. தண்ணீர், கடல், உலகம் முதலானவை குறித்து நாவல் வெளிப்படுத்தும் அறிவியல் உண்மைகள் ஆராயப்பட்டு விளக்கப்பட்டுள்ளது. ஆராயப்பட்டு கண்டெடுக்கப்பட்ட உண்மைகள் அனைத்தும் முடிவுரையில் கொடுக்கப்பட்டுள்ளது. அதன்பின் பிற இலக்கியங்களிலிருந்து கையாளப் பட்ட மேற்கோள்களின் விவரங்களும் கொடுக்கப்பட்டுள்ளது.*

## முன்னுரை

இலக்கியம், காலத்திற்கு ஏற்பத் தன் பாடு பொருளையும், பரிணாமத்தையும் விரிவுபடுத்த வல்லது. நாம் வாழும் உலகம் அறிவியல் உலகமாக மாறிக் கொண்டிருக்கும் வேளையில், இலக்கியங்களும் அறிவியலைப் படைப்பிலக்கியத்தில் பயன்படுத்தத் தொடங்கின. புதினம், சிறுகதை, புதுக்கவிதை ஆகிய இக்கால இலக்கிய வடிவிலும் அறிவியலின் தாக்கம் இடம்பெற்றன. அவ்வகையில், கவிஞர் வைரமுத்து எழுதிய தண்ணீர் தேசம் நாவலில் இடம் பெற்றுள்ள அறிவியல் சிந்தனைகளை ஆராய்வதாக இக்கட்டுரை அமைகின்றது.

## தண்ணீர் தேசம் புதினம்

தண்ணீர் தேசம் கவிஞர் வைரமுத்து எழுதிய நாவல். 1996ல் தமிழ் வார இதழ் ஆனந்தவிகடனில் 24 தொகுதிகளாக வெளிவந்தது. இது மீனவர்களின் வாழ்க்கைப் போராட்டத்தை விவரிக்கும் புதினம். கடல், தண்ணீர், உலகம் பற்றிய பல அறிவியல் உண்மைகள் இப்புதினத்தில் எளிய கவி நடையில் விவரிக்கப்பட்டுள்ளன.

காதலின் அளவைச் சொல்லுமிடத்து ***"நீரின் ஆரளவின்றே சாரல்"***[1] என்று குறுந்தொகை குறிப்பிட்டதோடு நின்றுவிட்டது. இந்நாவலோ, கடலின் ஆழத்தைக் காதல் கொண்டு அளந்துவிட்டது. நான்கு மீனவர்களோடு ஒரு காதலன் காதலி கடலுக்குச் செல்கின்றனர். கடல் குறித்த உண்மைகளைக் கலை நயத்துடன் வெளிப்படுத்துகின்றான் காதலன். கடல்பற்றி காதலிக்கு எழும் சந்தேகங்களைப் போக்கும் விதமாய், அறிவியற் கருத்துக்களை நாவல் அடுக்கியுள்ளது.

## தேசம் & தேகத்தில் தண்ணீர்

உலகில் தோன்றிய அனைத்து உயிர்கட்கும் அவசியமான ஒன்று நீர். விண்ணில் உள்ள கோள்களில் பூமியில் மட்டுமே நீர் நிறைந்ததாலே, பூமியில் உயிர் வாழ முடிகின்றது. இப்பூமி 70% தண்ணீரால் சூழப்பட்டுள்ளது. ஆனால், மொத்தத் தண்ணீரின் அளவில் 97% கடல் நீர். மீதமுள்ள 3 சதம் மட்டுந்தான் நன்னீர். இதனை, *"மிச்சமுள்ள 3 சதம்தான் நிலம்கொண்ட நீர்"* (த.தே.ப.34) என்ற நாவல் வரிகள் உணர்த்துகின்றது.

மேலும், 3 சதத்தில், 1 சதம் பனிப் பிரவேசங்களில் உறைந்துகிடக்கிறது. 1 சதம் யாரும் கண்டுகொள்ள முடியாத ஆழத்தில், பயன்படுத்த முடியாத பள்ளத்தில் கிடக்கிறது என்பதை வலியுறுத்தி, *"மனிதகுலம்*

*பயன்படுத்துவதெல்லாம், மிச்சமுள்ள 1 சதத்தைத்தான். அய்யோ.. அந்த ஒருசதமும் தீர்ந்துவிட்டால்?.” (த.தே.ப.34)* என்ற கேள்வியை நாவல் முன்வைக்கின்றது.

நீரின் முக்கியத்துவத்தை நன்கு அறிந்திருந்த கவிஞர் வைரமுத்து, தனது கவிதையில்

***“எங்கள் வராக நதியில் தண்ணீர் வர வேண்டுமென்று வரம் வேண்டி.. கரையோரம் ஒற்றைக்கால் தவமிருக்கும் ஒரு நூறு தென்னைமரம்”***[2]

எனத் தென்னை மரத்தின் வாயிலாக நீரின் தேவையை வலியுறுத்துகிறார். இன்றைய இயந்திர யுக மனிதர்களும், நாளை தண்ணீருக்காகத் தவமிருக்கும் காலம் வரலாம்.

இயற்கையால் படைக்கப்பட்ட ஒவ்வொரு உயிரினங்களின் உடம்பிலும் நீர் உள்ளது. ஒவ்வொரு மனிதனின் உடலிலும் நீர் ஒவ்வொரு செல்லிலும் இருக்கிறது. மனித உடலில் மூன்றில் இரண்டு பங்கு நீராகும். *“70 சதம் தண்ணீர் - யானை; 65 சதம் தண்ணீர் - மனிதன்; உன் உடம்பிலும் ஓடுவது 7.2.லிட்டர் உப்புத் தண்ணீர்” (த.தே.ப.05)* என்ற வரிகளின் மூலம் மனித உடலில் உள்ள நீரின் அளவினை நாவல் உணர்த்துகிறது.

## நீல(ள)த் திரை

நாம் சுவாசிக்கும் ஆக்சிஜனில், 70% முதல் 80% வரை கடல் மூலமாக உருவாகுகின்றது. உலகம் முழுவதும் 10 கோடி மக்கள் தங்கள் முக்கியத் தேவையான புரதப் பொருட்களுக்காகக், கடலை நம்பியே உள்ளனர் என்பது ஆய்வாளர்களின் முடிவு. அத்தகு கடல், சூரிய வெப்பத்தை மெதுவாக உள்வாங்கி வெளிவிடும் ஆற்றலுடையது என்பதை, *“சூரிய வெப்பத்தை உடனே உள்வாங்கி, உடனே வெளிவிடுகிறது பூமி. சூரிய வெப்பத்தை மெல்ல மெல்ல உள்வாங்கி, மெல்ல மெல்ல வெளிவிடுகிறது கடல்” (த.தே.ப.33)* என்ற வரிகள் உணர்த்துகின்றது.

மேலும், கடல்நீரில் 3.6 சதம் உப்பு இருக்கிறது, உறைந்த கடல்நீரில் உப்பு இருக்காது, ஒரு டன் கடல்நீரில் 0.000004 கிராம் தங்கம் இருக்கிறது போன்ற செய்திகளையும் நாவல் குறிப்பிடுகின்றது.

பூமி தட்ப வெப்ப நிலையோடு சரியாக இயங்குவதற்கு முக்கியக் காரணம் கடல் எனலாம். அது *“பூமத்திய ரேகைக்கு அருகில் கிடைக்கும் வெப்பத்தைத் துருவப் பிரதேசங்களுக்கும், துருவப் பிரதேசங்களின் குளிரைப் பூமத்திய ரேகைப் பிரதேசங்களுக்கும் எடுத்துச் செல்கிறது” (த.தே.ப.110)* என்ற அறிவியல் உண்மையை நாவல் வெளிப்படுத்துகின்றது. இதன் மூலம், பூமியின் தட்பவெட்பத்தை வாங்கி, பகிர்ந்தளிக்கும் வங்கியாகக் கடல் செயல்படுகிறது என்பதை அறிய முடிகின்றது.

## கடல் பொங்குதல்

பௌர்ணமி நாளன்று, கடல் பொங்கும் என்பது பழங்காலந்தொட்டு முன்னோர்கள் கூறிவரும் வழக்கு. ஆனால், கடல் பொங்குதல் அமாவாசை நாளன்றும் நிகழும் என்பதனை, *“பௌர்ணமியில் சூரியனும் சந்திரனும் எதிரெதிர் திசையில் பூமியை இழுக்கின்றன. அதனால் அலைகள்; அமாவாசையில் சூரியனும் சந்திரனும் ஒரே திசையிலிருந்து பூமியை இழுக்கின்றன. அதனால் அலைகள்.” (த.தே.ப.134)* என்ற அறிவியல் பார்வையோடு நாவல் விளக்குகின்றது. இதன் மூலம், கடல் பொங்குதல் என்பது சூரியனும் சந்திரனும் பூமியை ஈர்ப்பதனால் தான் நிகழ்கிறது என்பதை அறிய முடிகின்றது.

**கடல்வாழ் உயிரினங்கள்**

உலகின் ஆகச் சிறந்த படைப்புகள் உயிரினங்கள் எனலாம். மனிதனைத் தவிர்த்து ஓரறிவு முதல் ஐந்தறிவு வரை கொண்ட உயிரினங்கள் பல்லாயிரக் கணக்கானவை. அவை ஒவ்வொன்றும் ஒவ்வொரு குணாதிசயங்களோடு படைக்கப்பட்டவை.

அவற்றுள் ஆக்டோபஸ் எனும் கடல்வாழ் உயிரினம் பற்றி நாவல் பின்வருமாறு கூறுகின்றது. *"ஆக்டோபஸை எதிரி துரத்தினால், அதன் உடம்பு சில வண்ணத் திரவங்களைக் கக்கும். கடல்நீரை நிறம் மாற்றி எதிரியின் கண்ணைக் குருடாக்கும். தண்ணீர் தெளிவதற்குள் தப்பித்தோடிவிடும்" (த.தே.ப.98)* என்கிறது.

*"சூரியக் கதிர இருக்கிறதே, இது 350அடி ஆழம் வரைதான் தண்ணீர் துளைக்கும்" (த.தே.ப.97)* என்று எடுத்தியம்புவதோடு, அதற்குக் கீழ் வாழ்ந்த *"ஸ்குவிட் போன்ற பிராணிகள் தங்கள் உடம்பிலேயே வெளிச்சம் போட்டு உலவுகின்றன" (த.தே.ப.98)* என்ற செய்தியையும் நாவல் முன்வைக்கிறது.

மேலும், கடல்மேல் மிதக்கும் மெல்லிய வெளிச்சப் பூக்களின் பெயர் நாக்டிலூக்கா என்றும், மழைத்துளிகளை உண்டு வாழ்பவை சாதகப்பட்சிகள் என்றும் பல அரிய உயிரினங்கள் பற்றிய செய்திகளை நாவல் வழி அறிய முடிகிறது.

**உலகம் & உயிரினத் தோற்றம்**

இந்த உலகம் எப்பொழுது தோன்றியது, யாரால் தோன்றியது என்பவை இன்றும் அறிந்திட முடியா புதிராகவே உள்ளது. இதனை ஆராய்ந்தவர்களின் தோராயக் கணக்குப்படி, பூமி தோன்றி 200 கோடி ஆண்டுகள் ஆகின்றன. இதில் உயிரினங்கள் எப்பொழுது தோன்றியது என்பதை நாவல் பின்வருமாறு எடுத்துரைக்கின்றது. *"இதில் முதல் உயிர் முளைத்தது மூன்றரை கோடி ஆண்டுகட்கு முன்புதானாம்" (த.தே.ப.84).*

மனிதன் இந்த உலகம் முழுவதும் தனது அதிகாரத்திற்குரியது; தனக்குரியது என்று எண்ணிக்கொண்டு அகந்தையில் அலைகிறான். ஆனால் பூமியின் காலக்கணக்கில் மனிதன் என்பவன் ஒரு துளி தான் என்பதனை, *"முதல் உயிர்பிறந்தது மூன்றரை கோடி ஆண்டுகளுக்கு முன்புதான் என்றால், குரங்கிலிருந்து மனிதன் குதித்தது 35லட்சம் ஆண்டுகளுக்கு முன்புதான்" (த.தே.ப.84)* என்ற வரிகள் உணர்த்துகின்றது.

முப்பத்தைந்து லட்சம் ஆண்டுகட்கு முன்பிறந்த மனிதப்பிறவி, மூன்றரை கோடி ஆண்டுகட்கு முன்தோன்றிய பிற உயிரினங்களை அடிமைப்படுத்தி, இருநூறு கோடி ஆண்டுகட்கு முன்தோன்றிய பூகோளத்தை ஆள முற்படுவது, மூடத்தனத்தின் உச்சம் என்பதை நாவல் வழி உணரமுடிகின்றது. இதனை தனது கவிதையில்,

***"பூமி தனக்கே சொந்தம் என்று***
***புலம்பித் திரிவது ஒருகாலம்***
***பூமிக்கே நீ சொந்தம் என்று***
***புரிந்து தெளிவதும் ஒருகாலம்"***[3]

என்று கவிஞர் வைரமுத்து குறிப்பிடுகின்றார்.

**மனிதப் பிறவி**

பூமியை ஆள நினைத்த மனிதர்கள் அதற்கான முயற்சிகளைக் கொடுத்தார்களா என்றால் இல்லை. பிறப்பிற்கும் இறப்பிற்கும் இடையில், சாதிக்கும் மூளையிருந்தும் சோதிக்கும் முயற்சி எதுவும் இன்றி, பிறந்தோம் இருந்தோம் இறந்தோம் என்று வாழ்ந்து மாண்டுள்ளனர். *"வாழ்நாளில் 66,000 லிட்டர் தண்ணீர் குடித்தான். ஆயுளில் மூன்றில் 1 பங்கு தூங்கினான். 4 கோடி முறை இமைத்தான். 4½ லட்சம் டன் இரத்தத்தை இதயத்தால் இறைக்க வைத்தான். 35ஆயிரம் கிலோ உணவு- அதாவது எடையில்*

*இந்திய யானைகள் 7 தின்றான். மரித்துப்போனான்."* *(த.தே.ப.46)* என்று மனிதனின் வாழ்நாள் செயல்பாட்டினை அறிவியல் அளவீட்டோடு விளக்குவதோடு, *"இதற்குத் தானா மனிதப்பிறவி?" (த.தே.ப.46)* என்று ஆழமான தொரு கேள்வியையும் நாவல் எழுப்புகிறது. இக்கருத்து,

> ***"உரையும் பாட்டும் உடையோர் சிலரே மரையிலை போலமாய்ந் திசினோர் பலரே"***[4]

என்ற புறநானூற்றுப் பாடலில் இடம்பெற்றுள்ளது.

மேலும் மனித உடலில், ஆண் உடலில் 5.5 லிட்டர் ரத்தமும், பெண் உடலில் 5 லிட்டர் ரத்தமும் ஓடுகிறது என்ற செய்தியையும் நாவல் முன்வைக்கிறது.

**ஆதி மனிதனின் அற்புதக் கண்டுபிடிப்பு**

ஆதிகாலத்தில் வாழ்ந்த மனிதனின் முதல் கண்டுபிடிப்பு நெருப்பு. மனிதன் நெருப்பை உண்டாக்கக் கற்றுக் கொண்டபின்தான் நாகரிகம் தோன்றியுள்ளது. இந்த நெருப்பை அடைவதற்கு மனித ஜாதி பல்வேறு பாடுபட்டிருக்கும். அவர்கள் நெருப்பைக் கண்டறிந்த முறையினை *"உரசியும் - தேய்த்தும் - குடைந்தும் - தீயைத்தேடி அடைந்த மனிதர்களைப் போல் - இதோ நாங்களும்.." (த.தே.ப.161)* என்ற வரிகள் எடுத்தியம்புகின்றன.

> **"சுமார் 8 லட்சம் ஆண்டுகட்கு முன்பு சில மனித இனத்தினர் நெருப்பை அவ்வப்போது பயன்படுத்தியிருக்கக்கூடும்"**[5]

என்றும்,

> **"மனிதனுக்கும் பிற விலங்குகளுக்கும் இடையே முதன்முதலாக ஒரு குறிப்பிடத்தக்க இடைவெளி உருவாவதற்கும் நெருப்பு ஒரு மிகப் பெரிய காரணமாக அமைந்தது"**[6]

என்றும், யுவால் நோவா ஹராரி குறிப்பிட்டுள்ளார். சிக்கி முக்கிக் கல்லுக்குள்ளும், தீக்கடை கோலுக்குள்ளும் பஞ்ச பூதங்களுள் ஒன்றான நெருப்பைப் பிரசவிக்க, மனிதர்கள் முனைந்த முறையை நாவல்வழி அறிய முடிகின்றது.

**புயல்**

புயல் என்றாலே அபாயம், ஆபத்து என்று எண்ணிக் கொண்டிருக்கிறோம். ஆனால், புயல் பூமியின் வரமென்பதை அறிவியல் வழி நாவல் பின்வருமாறு விளக்குகிறது: *"பூமியின் உஷ்ணக்காற்றை உள்வாங்கி, அதைப் பூமிக்கு மேலே அனுப்புவது புயல் தான். ஐம்பது கோடி லிட்டர் தண்ணீரை உறிஞ்சிக் கொண்டு வந்து பூமியில் ஊற்றுவதும் அதுதான்" (த.தே.ப.207).* மேலும் இந்தப் புயலானது பூமத்திய ரேகையிலிருந்து கீழ் நோக்கி வலப்புறம் சுற்றுவது அல்லது மேல் நோக்கி இடப்புறம் சுற்றுவது என்ற இரண்டு முறைகளை மட்டுமே உடையது என்பதையும் நாவல் குறிப்பிடுகின்றது.

*"எப்போதும் இந்த பூமியைச் சுற்றி இரண்டாயிரம் புயல்கள் இருந்து கொண்டே இருக்கின்றன." (த.தே.ப.206)* என்று அரிய தொரு உண்மையை நாவல் முன் வைக்கிறது. இதன் மூலம், சில புயல்கள் வலு வடைந்து உயிரினங்களை வதைக்கிறது, சில புயல்கள் பெரு மூச்சோடு இறந்து விடுகின்றன என்பதை அறிய முடிகிறது.

**முடிவுரை**

இவ்வாறு தண்ணீர் தேசம் நாவலைப் பகுத்தாராயும் போது, நாம் அன்றாடம் பயன்படுத்தும் தண்ணீர் இந்த பூலோகத்தில் எத்தனை சதம் உள்ளது என்பதையும், ஒவ்வொரு உயிரின் உடம்பிலும் எவ்வளவு சதம் தண்ணீருள்ளது என்பதையும் அறிய முடிகிறது. மேலும் கடல் பற்றியும், கடல்

நீரைப் பற்றியும், கடல்வாழ் உயிரினங்களில் சில அதிசய குணமுடையவை பற்றியும் தெரிந்து கொள்ள முடிகிறது. உலகின் தோற்ற காலம் குறித்தும், அதில் மனிதன் தோன்றிய காலம் குறித்தும், அம்மனிதன் நெருப்பினைக் கண்டறிந்த முறையினைக் குறித்தும்துல்லியமாக அறிய முடிகிறது. இயற்கைப் பேரிடர் என எண்ணிக் கொண்டிருக்கும் புயல் குறித்தான அறிவியல் உண்மைகளை அறிய முடிகிறது.

**அடிக்குறிப்புகள்**

1. குறுந்தொகை மூலமும் எளிய உரையும், முனைவர். ரா. பிரபாகரன், பா.எ.03, பதிப்பாண்டு -2017, காவ்யா பதிப்பகம், 14,முதல் குறுக்குத் தெரு, டிரஸ்ட்புரம், சென்னை-24.
2. திருத்தி எழுதிய தீர்ப்புகள், வைரமுத்து, ப.எ.38, இருபத்து நான்காம் பதிப்பு - 2010, திருமகள் நிலையம், சுகன்ஸ் அபார்ட்மெண்ட், சிவப்பிரகாசம் தெரு, பார்த்தசாரதிபுரம், தி.நகர், சென்னை -17.
3. தமிழுக்கு நிறம் உண்டு, வைரமுத்து, ப.எ.45, பத்தாம் பதிப்பு -2010, திருமகள் நிலையம், சுகன்ஸ் அபார்ட்மெண்ட், சிவப்பிரகாசம் தெரு, பார்த்தசாரதிபுரம், தி.நகர், சென்னை -17.
4. புறநானுறு மூலமும் உரையும், புலியூர்கேசிகன் (உ.ஆ), பா.எ.27 (5-6)., முதற்பதிப்பு 2010, சாரதா பதிப்பகம், ஜி-4, சாந்தி அடுக்கம்,3,ஸ்ரீ கிருஷ்ணாபுரம் தெரு,ராயப்பேட்டை,சென்னை-14.
5. சேப்பியன்ஸ்- மனிதகுலத்தின் சுருக்கமான வரலாறு, யுவால் நோவாஹராரி, தமிழில்: நாலட்சுமி சண்முகம், ப.எ.14, நான்காம ் பதிப்பு-2020, மஞ்சுல்பப்ளிஸிங் ஹவுஸ், 2வது தளம், உஷா பிரீட் காம்ப்லக்ஸ், 42 மால்வியா நகர், போபால்-462 003.
6. மேலது., ப.எ.15.

# திருக்குறள் கூறும் அறிவியல் உண்மைகள்

**உ. அஸினா பேகம்**
பதிவு எண் : 20223274022004
முனைவர் பட்ட ஆய்வாளர் (பகுதி நேரம்)
தமிழ் உயராய்வு மையம், விவேகனந்தா கல்லூரி
அகஸ்தீஸ்வரம், மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகம்
திருநெல்வேலி

***ஆய்வுச்சுருக்கம்***

*அறிவியல் என்பது ஆராய்ந்து நிருபிக்கப்படும் உண்மைகளின் தொகுப்பாகும். அந்த உண்மைகள் பெரும்பாலும் மாறாதவைகளாக அமையும். ஆய்வுப் பெருகப் பெருக ஓரளவு மாற்றம் பெறவும் வாய்ப்புண்டு. திருக்குறள் வாழ்வியல் உண்மைகளையும், மெய்ம் மைகளையும் திறம்பட உரைக்கும் நூல், அதில், திருவள்ளுவர் தாம் கண்ட, அறிந்த அறிவியல் உண்மைகளைத் திறம் பட வெளிப் படுத்தியுள்ளார் என்பதை திருக்குறள் கூறும் அறிவியல் உண்மைகள் என்னும் கட்டுரை சிறப்பாக எடுத்துரைக்கின்றது.*

## முன்னுரை

திருக்குறள் உலகப் பொதுமறை, நீதி நூல் என்று சிறப்பித்துப் போற்றப்படுகிறது. மனித வாழ்க்கையை, எளிமைப்படுத்த உதவுவது அறிவியல் ஆகும். அதாவது மனித வாழ்க்கையிலுள்ள கடினங்களைக் குறைத்து எளிமையாக ஒரு செயலை நிறை வேற்ற வாழ்க்கை வசதிகளைப் பெருக்கிக் கொடுப்பது அறிவியலின் பணியாகும். திருக்குறளில் பல அனுபவக் கருத்துக்கள் கூறப்பட்டுள்ளன. என்றாலும் அவை அறிவியல் மனப்பான்மையுடன் அறிவியல் நெறி சார்ந்து கூறப்பட்டுள்ளன என்பதை “திருக்குறள் கூறும் அறிவியல் உண்மைகள்” குறித்து எடுத்தியம்புவதாக இக்கட்டுரை அமைகிறது.

## திருக்குறள்

பதினெண்கீழ்க்கண்கு நூல்களில் ஒன்றான திருக்குறள் உலகப்புகழ் பெற்ற தமிழ் இலக்கியமாகும். இதனை இயற்றியவர் திருவள்ளுவர். உலக இலக்கிய அரங்கில் தமிழனின் பெருமையை நிலை நாட்டும் உயர்வுடையது. இந்நூல் தமிழனின் பெருமையை நிலை நாட்டும் உயர்வுடையது. இந்நூல் இது ஏழு சீர்களைக் கொண்ட ‘குறள்” என்னும் யாப்பில் அமைந்தது. உலகப் பொதுமறை என அழைக்கப்படுகிறது. 133 அதிகாரங்களையும், 1330 குறட்பாக்களையும் கொண்டது. திருவள்ளுவர் கி.மு.மூன்றாம் நூற்றாண்டுக்கும், கி.மு ஒன்பதாம் நூற்றாண்டுக்கும் இடையில் வாழ்ந்தவராக இன்றைய ஆய்வாளர் கூறுகின்றனர். திருக்குறள், சங்க இலக்கிய வகைப்பாட்டில், பதினென்கீழ்க்கணக்கு எனப்படும் பதினெட்டு நூல்களின் திரட்டில் இருக்கிறது.

## அறிவியல் உலகின் கண்கள்

இலக்கியமும் அறிவியலும் உலகின் இரண்டு கண்களாகத் திகழ்கின்றன. இலக்கிய மும் அறிவியலும் இணைந்தே உலகத்தை வாழ் விக்கின்றன. இலக்கியத்திற்கும் அறிவியலுக்கும் உள்ள தொடர்பு அரிஸ்டாட்டில் காலத்தில் இருந்தே வளர்ந்து கி.பி.17 ஆம் நூற்றாண்டில் அறிவியல் அறிஞர்கள் இலக்கிய வாணர்களாகவும் அறிவியல் அறிஞர்களாகவும் திகழும் நிலை உருவானது, இலக்கியமும் அறிவியலும் இணைந்து மனித வாழக்கையின்

வெற்றிக்குப் பாடுபட்டு வருகின்றன. இதை உணர்த்தும் வகையில் திருவள்ளுவர்,

**‘எண்ணென்ப ஏணை எழுத்தென்ப இவ்விரண்டும் கண்ணென்ப வாழும் உயிர்க்கு (குறள் 392)**

என்று அறிவியலும் இலக்கியமும் வாழ்க்கையின் இரண்டு கண்கள் என்று கூறுகின்றார்.

**வேளாண்மை அறிவியல்**

வோளாண்மைத் தொழில் பண்டைக்காலம் முதலே நடந்து வருகின்றது எனினும் இன்றைய நிலையில் வேளாண்மை அறிவியல் சிறப்பான வளர்ச்சி பெற்றுள்ளது. வேளாண்மைக்கும் உயிரினங்களின் வாழ்விற்கும் நீர் மிகவும் இன்றியமையாதது. வான் சிறப்பு என்னும் அதிகாரத்தில் திருவள்ளுவர் மழையின் இன்றியமையாமையைப் பற்றி கூறுகின்றார்.

**“நீரின்றி அமையாது உலகெனின் யார்யார்க்கும் வானின்று அமையாது ஒழுக்கு”**

**(குறள் - 20)**

இக்குறட்பாவின் மூலம் மழையின்றி உலகில் நீர் இல்லை. நிலத்தைப் பயன்படுத்திய பின்னரே அந்நிலத்தில் பயிர் செய்ய முடியும். நிலத்தை பண்படுத் நிலத்தை நன்கு உழவு செய்ய வேண்டும். உழவு முறையைப் பற்றிக் கூறும் வள்ளுவர்.

**‘தொடிப்புழுதி கஃசாவுணக்கிற் பிடித்தெருவும் வேண்டாது சாலப் படும்’ (குறள் 1037)**

புன்செயல் நிலத்தில் உழவன் தனது கால் ஆழமாக அழுந்த தன் நிலத்தை உழுது காயவிட்டால், ஒரு பிடி எருவும் இடாமலேயே அந்நிலத்தில் பயில் செழித்து வளரும் என்பதை மேற்காணும் குறளின் வழி அறிய முடிகின்றது.

நிலத்தை உழுது பயன்படுத்தியபின் எருவிட்டு, நீர் பாய்ச்சிக்களை களைந்து பயிரைக் காக்கவேண்டும் என்பதனை

**‘ஏரினும் நன்றால் எருவிடுதல் கட்டபின் நீரினும் நன்றதன் காப்பு (குறள் - 1038)**

நன்செய் நிலத்தில் உழுதல், எருவிடுதல், களையெடுத்தல், நீர் பாய்ச்சுதல், காவல் காத்தல் போன்ற வேலைகளை செய்தால் பலன் காண முடியும் என் மேற்காணும் குறளில் வழி ஈண்டு அறிய முடிகின்றது. இவ்வாறு வேளாண்மைக்கு நீரின், மழையின் தேவையையும் உழுதலையும் பயிர்பாதுகாப்பபையும் திருவள்ளுவர் அறிவியல் நெறி நின்று விளக்கியுள்ளார்.

**இயற்பியலில் அறிவியல்**

ஒரு பொருளை மட்டும் தொங்கிவிட்டு எடை பார்க்க முடியாது, அதற்கு எதிராக மற்றொரு பொருளையும் சமமாக தொங்கும் படி செய்தால் இரண்டு பொருளும் எடையில் சமம் என்று நெம்புகோலின் தத்துவத்தை அறிந்து கொள்ள முடியும் என்பதனை பின்வரும் குறட்பா வலியுறுத்துகிறது.

**ஒருதலையின் இன்னாது காமம் காப்போமே இருதலை யானும் இனிது**

**– குறள் (1196)**

இரு தலையிலும் எடை இருப்பதால் காவடியாட்டம் காண்பதற்கு இனிமையாக இருக்கும் எடை ஒரு பக்கம் மட்டும் இருந்தால் காவடியும் மரத்திலிருந்து விடுபட்டு நியுட்டன் கண் முன்னாக விழும் ஆப்பிளாக மாறிவிடும் இதனைப் பயன்படுத்தி எடையினை அளப்பதற்கும் ஒரு கோலை கீழ்வரும் குறள் மூலம் விளக்குகிறார்.

**சமன் செய்து சீர்தூக்கும் கோல்போல் அமைந்து ஒருபால் கோடாமை சான்றோர்க்கு அணி**

**– (குறள் - 118)**

என்று அறிவியலார் வியக்கும் வகையில் இயற்பியல் தராசுக்கு இலக்கணம் கூறுகிறார். தராசு தன்னளவில் சமமமாக இருக்க வேண்டும். பின்னர் பொருளை எடை கோடு

சீர்தூக்கும் போது ஒரு பக்கமாகச் சாயாமல் இருந்தால் பொருளும், அதனை அளக்கப் பயன்படும் அலகும் சமம் என்பதை அறிய முடிகின்றது.

கலிலியோ பைசாநகரத்தின் சாய்ந்த கோபுரத்தில் வெவ்வேறு எடையுள்ள இருகுண்டுகளை கீழே விழந் செய்தால் ஒரே சமயத்தில் பூமியை தொடும் என்றார். அதனை

**பீலிபெய் சாகாடும் அச்சிறும் அப்பண்டம்**
**சாலமிகுத்துப் பெயின் (குறள் - 475)**

மயில் இறகு மிகவும் இலேசானது, எனினும் அளவு கடந்து அதனை வண்டியில் ஏற்றினால் வண்டியின் அச்சு முறிந்து போகும். அதுவே மிகுதியாக ஏற்றப்படும் போது அச்சை முறிக்கும் ஆற்றலைப் பெற்று விடுகின்றது என்னும் வள்ளுவரின் அறிவியல் கருத்து தெளிவாகப் புலப்படுத்துகிறது.

**புவியியல்**

மனிதர்களும் பிற உயிர்களும் வாழும் இயற்கை அமைவைப் பெற்றுள்ள அறிவியல் உண்மைகளை தெளிவாக எடுத்துரைக்கிறார்.

**'நில்லாதவற்றை நிலையினை என்றுணரும்**
**புல்லறி வாண்மை கடை (குறள் - 337)**

நிலையில்லாத பொருள்களை நிலையானவை என்று கருதுகின்ற அறிவு புல்லறிவு அறிவு என்கிறார் திருவள்ளுவர் இதனையே நில்லாதனவற்றை நிலையானவை என்று உணர்வது கடையாய அறிவு அவை நில்லாதவை அல்ல இயங்குபவை என உணர்வுதான் உண்மையான அறிவியல் பார்வை என குறள் விழித் தெளிவு விடக் கூறுகின்றார்.

**வேதியியல் அறிவியல்**

பொருள்களின் இயைவை அறியும் துறை வேதியியல் ஆகும். பொருள்களை ஒன்றொடு ஒன்று இணைக்கும்போதும் பொருள்களைப் பிரிக்கும்போது ஏற்படும் மாற்றங்கள் இதனுள் அடங்கும். ஈயம் பூசாத அல்லது நச்சுப் பொருள்கள் இருக்கும் பாத்திரத்தில் பால் ஊற்றினால், அது திரிந்து வேதியியல் மாற்றம் அடையும் என்ற கருத்தைப் பின்வரும் குறட்பா வலியுறுத்துகிறது.

**பண்பிலான் பெற்ற பெருஞ்செல்வம் நன்பால்**
**கலந்தீமை யால்திரிந்தற்று (குறள் - 1000)**

பால் திரிவதைப் போல் பண்பு இல்லாதவனின் செல்வமும் பயனற்றதாகி விடும் என்று திருவள்ளுவர் வேதியியல் மாற்றம் பற்றிக் கூறுகிறார்.

**'ஒளியார் முன் ஒள்ளியர் ஆதல்**
**வெளியார்முன் வான்கதை வண்ணம்**
**கௌவல்**

**(குறள் - 714)**

என்னும் குறளில் வான் - வெண்மை, கதை -சுண்ணாம்பு வண்ணம் - நிறம். இங்கு நீரில் கரைக்கப்பட்ட சுண்ணாம்பு நன்றாக கலக்கவில்லையென்றால் சுண்ணாம்பு அடியில் தங்கும். நீர் மேலே தோன்றும் அது போல படிக்காத பாமரர்களும் கலக்காத சுண்ணாம்பு நீரைப் போன்றவர்கள் என்று மேலே உள்ள குறளின் மூலம் அறிய முடிகின்றது.

**வளியியல்**

காற்று பற்றிய கருத்தாக்கங்களை தெளிவான அறிவியல் மூலம் எடுத்துரைக்கிறார்.

**அல்லல் அருள் ஆள்வார்க்கு இல்லை**
**வளிவழங்கும் மல்லலமா ஞாலம் கரி**

**(குறள் - 245)**

மேலே செல்லச் செல்லக்க காற்றின் அடர்த்தி குறையும் வெப்பம் கூடுதலாகும். ஒரு கட்டம் வரைதான் உடல் வெப்பத்தைத் தாங்கும்.

அடிவளி மண்டலத்தில்தான் உயிர்கள் எளிதாக மூச்சு விட்டு வாழ முடியும். மேலே செல்லச் செல்ல மூச்சு விடுவதும் சிரமமாகி விடும். கவர்ப்பு வளி மண்டலத்தில் (காற்று

மண்டலம்) நுழைந்து விட்டால் மூச்சு விடவும் முடியாது. இதனையே திருவள்ளுவர் "விளி வழங்கும் மல்லல்மா ஞாலம்' என்று அடிவளி மண்டலத்தையே குறிப்பிடுகிறார். இங்கு வாழ்நாள் எளிதில் சுவாசிக்க முடியும். துன்பம் இல்லை. இங்கிருக்கும் காற்று மக்கள் வாழ்வதற்கு ஏற்ப வளப்பம் பொருந்தியது என்பதை 'மல்லல்' என்னும் சொல்லால் தெளிவாக குறிப்பிடுகின்றார்.

### கடலியல்

ஆழி என்னும் சொல், கடலில் ஆழத்தின் அடிப்படையிலான பெயர் பெருங்கடல், விரிகடல் என்னும் பெயர்கள் கடலின் பரப்பு அடிப்படையிலான பெயர்கள், நெடுங்கடல் என்னும் பெயர் கடலில் நீட்சியை அடிப்படையாகக் கொண்ட பெயர் கடலியல் சார்ந்த அறிவியல் உண்மையைப் புலப்படுத்துவதாக அமைகின்றது அனைவரும் குறட்பா

> **'நெடுங்கடலும் தன்நீர்மை குன்னும்**
> **தடிந்துஎழிலி தான்நல்காது ஆகி விடின்**
> **(குறள் -17)**

உப்பின் அளவு கூடினாலும், நீரின் கடினத் தன்மை கூடினாலும், இயற்கையாக அங்கு வாழும் உயிரினங்கள் வாழ வாய்ப்பு குறைந்து போகும், வாய்ப்பு இல்லாதும் போகும், இந்தச் சூழலில் கடலில் வாழ்கின்ற உயிரினங்கள் இடப்பெயர்ச்சி மேற்கொள்ளும், அப்படி இல்லையானால், இறந்து போகும், தாவரங்கள் உள்ளிட்ட ஓரறிவு உயிர்கள் வாடிப் போகும். இத்தகைய வளக்குறைவு நிகழ்வையே 'தன்நீர்மை குன்றும்' என்கிறார் திருவள்ளுவர்.

கடல்நீர் ஆவியாதல், மேகமாதல், மீண்டும் கடலில் மழை பொழிந்து கடல்நீர் பெரிதும் முன்பிருந்த நிலை அடைதல் என்பதைப் பார்க்கும் போது, நீரியல் சுழற்சி என்னும் அறிவியல் உண்மையை திருவள்ளுவர் தெளிவாக எடுத்துரைக்கின்றார்.

### தொகுப்புரை

திருக்குறளின் வாயிலாக பல அரிய அறிவியல் கருத்துக்களை அறிய முடிகின்றது. இயற்பியல், வேதியியல், வளியியல், கடலியல், நீரியல், புவியியல் வேளாண்மை சார்ந்த ஒரு சில கருத்துகள் மட்டும் இன்றயை அறிவியலின் ஒளியில் வெளிச்ச மிட்டுக்காட்டப் பட்டுள்ளன. அறிவியலைப் பற்றி ஒரு தனிநூலே திருவள்ளுவர் இயற்றி இருப்பின், அஃது ஒரு சிறந்த அறிவியல் இலக்கியமாக திகழ்ந்திருக்கும். எனினும், இன்றும் நம்மிடையே வாழும் அறிஞர் பலர், திருக்குறள் காட்டும் அறிவுப் பாதையில் சென்று, பயனுள்ள அறிவியல் நூல்களை இயற்றி வருகின்றனர். இப்பெரும் முயற்சி மிகவும் போற்றத்தக்கதாகும். அது, அறிவியல் புரட்சிக்கு அடிப்படையாக அமையும்.

### அடிக்குறிப்பு


1. திருவள்ளுவரின் அறிவியல் சிந்தனைகள்
2. முனைவர் கு.மோகனராசு
3. மு.பதிப்பு – டிசம்பர், 2016
4. மணிவாசகர் ஆப்செட் பிரிண்டர்ஸ்
5. சென்னை – 600 021
6. பக்கம் - 11, 11, 12, 13, 14, 16
7. திருக்குறளில் அறிவுத்துறைகள்
8. ஜைன் இளைஞர் மன்றம்
9. 1ஏ போக் சாலை
10. சென்னை -17
11. முதற்பதிப்பு 4-12-77
12. பக்கம் - 191, 192
13. திருக்குறளில் அறிவியல்
14. வீ.செ.கந்தசாமி
15. நாட்சன் கணினி
16. 18, பட்டம்மாள் தெரு
17. மந்தவெளி – 18
18. பதிப்பு – 1990
19. ப : 15

# புறநானூற்றில் அறிவியல்

**முனைவர் அ. பாரதிராணி**
உதவிப்பேராசிரியர், தமிழ் உயராய்வு மையம்
அழகப்பா அரசுக்கலைக் கல்லூரி, காரைக்குடி

***ஆய்வுச்சுருக்கம்***

*சிறந்து பிறந்த தமிழ்மொழியின் இலக்கியங்கள் முன்னோர்களின் சீரிய சிந்தனையின் வெளிப்பாடாகும். அவ்வெளிப்பாட்டினைக் கூர்ந்த அறிவின் திறவுகோல் கொண்டு சொற்களின் வழி நிலை நிறுத்தினர். எல்லா நிலைகளைப் பற்றிய அறிவின் பெட்டகமாகத் திகழ்ந்த தமிழர்களின் அறிவியல் சிந்தனைச் செறிவுகள் இலக்கியங்களில் பதிவிடப்பட்டுள்ள முறையினையும் ஒன்றுடன் ஒன்று தொடர்புடைய உலகத் தோற்றம், இயக்கம், வானியல் செய்திகள் என்று பல்வேறு விண்ணியல் மண்ணியல் கூறுகளைத் தெளிவுற எடுத்துரைத்த வழியினை இன்று கற்று அறியும் பல்வேறு அறிவியல் நெறிகள் பண்டைத் தமிழர்களால் எவ்வாறு அறிந்து கொள்ளப்பட்டிருந்தது என்ற கருத்தினையும் இலக்கியச் சான்றுகளின் வழி எடுத்துரைப்பதே இவ்வாய்வின் நெறியாகும்.*

## முன்னுரை

பழந்தமிழரின் வாழ்வியல் அணுவில் தொடங்கி அண்டம் வரைப் பரவிக் கிடக்கின்றது. அறிவின் நுட்பமான வளர்ச்சியே அறிவியல். அறிவியலும் அனுபவமும் கலந்த படைப்பே இலக்கியம். சங்க இலக்கியங்கள் இயற்கையோடு இயைந்து வாழ்ந்த பண்டைத் தமிழர்களின் வாழ்வியல் முறைகளையும், வாழ்க்கை நெறிகளையும் தெற்றெனப் புலப்படுத்துகிறது. இத்தகு சிறப்புடைய சங்க இலக்கியங்கள் அறவியல் சிந்தனைகளை ஆழமாகவும், நுட்பமாகவும் உள் பொதிந்து தந்திருக்கும் முறை போற்றதற்குரியதாய் இன்றைய அறிவியல் வளர்ச்சியின் முன்னோடிகளாக மட்டுமின்றி இன்றைய அறிவியல் சிந்தனைகளுக்கான தூண்டு கோலாகவும் நமது முன்னோர்களே இருந்துள்ளனர்.

## அறிவியல் என்பது

அறிவியல் என்றால் அறிந்து கொள்ளுதல் என்பர். அறிவு + இயல் = அறிவியல். அறிவு என்பது Knowledge என்றும் ,அறியப்படுவது. அல்லது அறிந்து கொள்வது என்றும், “இயல்” என்பது இயற்கையானது என்றும் கூறுவர். இயற்கை சார்ந்த பொருள்கள் மற்றும் நிகழ்வுகளின் உண்மைத் தன்மையை உள்ளது உள்ளபடி உலகிற்கு உணர்த்துவதே அறிவியல். அறிவியலின் அடிப்படை மாற்ற முடியாத, இயற்கையின் விதிமுறைகளுக்கு உட்பட்ட உண்மையின் விளக்கம்.

“அறி என்றால் உணர்தல்”[1] என்று பவாநந்தர் தமிழ் அகராதி பொருள் தருகிறது. அதனடிப்படையில் மனிதன் உணர்ந்ததை அடிப்படையாகக் கொண்டு வெளிப்படுத்துதலே அறிவியல் என்றுரைக்கக் களனாகிறது.

இயற்கையின் வளர்நிலைகளை நமது முன்னோர்கள் தன் அறிவாற்றல் திறத்தால் உணர்ந்து இருந்தனர். அதனால் தான் வள்ளுவப் பெருந்தகை.

> **“எப்பொருள் யார்யார்வாய் கேட்பினும்
> அப்பொருள் மேயப்பொருள் காண்ப
> தறிவு”[2]**
>
> **(குறள் எண் 424)**

என்றார். மெய்ப்பொருள் அறியும் தன்மையைப் பெற்றிருந்ததாலே சங்க இலக்கியங்களும், காப்பியங்களும் இலக்கண நூல்களும் அறிவியல் தெளிவை உலகிற்கு உணர்த்திச் சென்றுள்ளன. அவ்வகையில் சங்க

இலக்கியமான புறநானூற்றில் காணப்படும் முன்னோர்களின் அறிவியல் தெரிவினை இக்கட்டுரை எடுத்துரைக்க முனைகிறது.

**நுண்ணறிவின் வெளிப்பாடு**

தன் ஆற்றலின் விளைவாக அல்லது கற்றறிந்த, கேட்டறிந்த அறிவின் திறவுகோலால் மனிதன் அறிவு பெறுகிறான். ஏனென்றால்

**"அறிவு அற்றம் காக்கும் கருவி செறுவார்க்கும் உள்ளழிக்கல் ஆகா அரண்."**[3]

**(குறள் : 421)**

என்ற வள்ளுவர் கூற்று உருவாக வித்தாய் அமைந்தவர்கள் நம் முன்னோர்கள்.

**"தமிழன் அறிவில் சிறந்தவன் ஏனென்றால்**
**வையகம் போர்த்த வயங்கொலிநீர் - கையகலக் கல்தோன்றி மண் தோன்றாக் காலத்தே வாளொடு முன்தோன்றிய மூத்த குடி தமிழ்க்குடி"**[4]

என்று போற்றப்படுகிறான். மண் உருவாகும் முன்னே தோன்றிய தமிழ்க் குடியின் அறிவியல் கூர்மை எல்லா இலக்கியங்களிலும் சிறப்பான புலப்பாட்டு உத்தியுடன் எடுத்துரைக்கப்பட்டுள்ளன. 'நிலவுலகை மறைத்த நீர் நீங்க' என்று குறிப்பிடுவதிலே பண்டைத் தமிழரின் சிறப்பான அறிவு மெய்ப்பிக்கப்படுகிறது. தொன்மைத் தமிழனின் நுண்ணறிவு பரந்து விரிந்த சிந்தனையைப் புலப்படுத்துகின்றது.

**"மண் திணிந்த நிலனும்**
**நிலன் ஏந்திய விசும்பும்**
**விசும்பு தைவரு வளியும்**
**வளித் தலை இயதீயும்**
**தீ முரணிய நீரும், என்றாங்கு**
**ஐம்பெரும் பூதத்து இயற்கை போல"**

**(புறநானூறு பா.எண்.2: 1-6)**

என்று முரஞ்சியூர் முடிநாகராயர் இயற்கை என்பது ஐந்து கூறுகளால் அமைந்தது என்கிறார். இவை ஐந்தும் ஒன்றுடன் ஒன்று தொடர்புடையது என்ற அறிவியல் சார்ந்த நுட்பத்தையும் விளக்கிச் செல்கின்றார். அணுக்களான மண்துகள்களால் ஆன நிலம், நிலத்தின் மேல் ஓங்கியிருக்கும் வானம், வானளவு தடவி நிற்கும் காற்று. காற்றினால் பெருகும் தீ, தீயுடன் முரண்படும் தண்ணீர் என ஐந்து வகையான மிகை ஆற்றலைப் புறநானூறு முன்னிலைப்படுத்துகிறது. இயற்கைக்கு மிஞ்சிய ஆற்றல் ஏதும் இல்லை என்பதையே இப்பாடல் நிலை நிறுத்துகிறது. இக்கருத்திற்கு வலு சேர்க்க

**"நீர்மிகின், சிறையும் இல்லை, தீமிகின் மன் உயிர் நிழற்றும் நிழலும் இல்லைவளி யாகின், வலியும் இல்லை"**

**(புறநானூறு: பா.எண்.51)**

என்ற ஐயூர் முடவனாரின் பாடல் நமக்குச் சான்றாகிறது. நீர் பெருகினால் அதனைத் தடுக்கும் வலிய அரண் ஏதும் இல்லை, தீ பெருகினால் உலக உயிர்களைக் காக்கின்ற நிழல் இல்லை, காற்று மிகுமானால் அதனைப் பொறுக்கும் வலிமையும் இல்லை. என இயற்கைக்கு அணைபோட இயலாது என்ற சிந்தனையைப் பதிவு செய்துள்ளார் சங்கப் புலவர்.

இன்றைய சூழலில் இயற்கையின் மாறுபாட்டால் செயற்கையின் வருகையால் ஏற்படும் கடல் சீற்றம், புயல், போன்ற பேரிடர் நேரங்களில் இந்நிலைப்பாட்டை அனைவரும் கற்றுணர்கிறோம். இதனையே தொல்காப்பியமும்,

**"நிலம் தீ நீர் வளி விசும்போடு ஐந்தும் கலந்த மயக்கம் உலகம் ஆதலின்"**[5]

**(தொல்-மரபு) - 542**

என்று உலகம் ஐம்பூதங்கள் கலந்த உரு என்று சமைத்துச் செல்கிறார். இந்த உலகம் என்பது ஒன்றுடன் ஒன்று கலந்திருக்கக் காரணம் அண்டப் பகுதி ஒரு பெரிய

வெடிப்புக் கொள்கையின் கீழ் உருவானது என்ற கருத்தினை மாணிக்கவாசகர்.

**“அண்டப் பகுதியின் உண்டைப்பிறக்கும்**
**அளப்பருந் தன்மை வளப் பெருங்காட்சி**
**ஒன்றனுக்கொன்று நின்றெழில்பகரின்**
**நூற்றொரு கோடியின் மேற்பட விரிந்தன**
**இல்நுழைகதிரின் துன்அணுபுரைய”**[6]

என்று திருவாசகத்தில் உணர்த்துகின்றார். இச்சான்றுகளின் வழி தமிழர்களின் நுண்ணறிவுத் திறன் பருப் பொருள் மீதான நுண்ணிய நோக்கினை வெளிப்படுத்தி நிற்கிறது.

**“செங்காயிற்றுச் செலவும்**
**அஞ்ஞாயிற்றுப் பரிப்பும்**
**பரிப்புச் சூழ்ந்த மண்டிலமும்**
**வளிதரு நிலைஇய காயமும் என்று**
**இவை சென்று அளந்து அறிந்தோர் போல”**

**(புறநானூறு பா.எண். 30 1-6)**

என்ற இயன் மொழித்துறைப் பாடல் சிவந்த ஞாயிற்றின் பாதையையும், அதன் இயக்கத்தையும், இயக்கம் சூழ்ந்த கிரணக் கதிர்களின் வட்டத்தையும், காற்று இயங்குத் திசை குறித்தும், எந்த விதமான துணையும் இன்றி பற்றுதலும் இன்றி தனித்து நிற்கும் வானம் பற்றியும், அங்கு சென்று அறிந்தவர் போலக் கூறுவர் உளர் என்கிறார் முதுகண்ணன் சாத்தனார்.

இன்றைய சூழலில் செயற்கைக் கோள்கள் பல கொண்டு வானியல் அறிவினைத் தெற்றெனப் புலப்படுத்தும் விஞ்ஞான உலகத்திற்குப் பண்டைத் தமிழரின் உற்றுநோக்கல் அறிவு உறுதுணையாக உள்ளது என்பதற்கு வானில் உலவும் சூரியனின் பாதை குறித்தும், கிரணங்களின், கதிர்கள் காற்றின் இயக்கம், அந்தரம் என்ற பற்றுக் கோடற்ற வான் குறித்த அறிவினை வெளிப்படுத்திட மேற்கண்ட பாடல் ஏதுவாகிறது.

**“எப்பொருள் எத்தன்மைத் தாயினும்**
**அப்பொருள் மெய்ப்பொருள் காண்ப தறிவு.”**

**(குறள் எண் 355)**

காலையில் ஞாயிறு எழுவதும் மாலையில் மறைவதும் இயல்பான ஒன்று, கதிரோன் கடலில் இருந்து எழுகிறான் என்றுரைப்பர். நமது பூமியானது மூன்று பக்கம் கடலாலும் ஒரு பக்கம் நிலத்தாலும் சூழப்பட்டது என்பதை அனைவரும் அறிவோம்.

கீழ்த்திசையும் மேல்திசையும் கடலால் சூழப்பட்டதால் கடலில் இருந்து ஆதவன் உதயமாவது போல் ஒரு காட்சிப்பதிவு தென்படுகிறது. இக்கருத்தைத் தன் அறிவால் உணர்ந்த முன்னோர்கள் தன் புலமை வெளிப்பாட்டில் புதைந்து வைத்திருக்கின்றனர்.

பெருஞ்சோற்று உதியஞ் சேரலாதனைப் போற்றிப்பாடி அறத்தையும் சிறப்பையும் வலியுறுத்த எண்ணம் கொண்ட முரஞ்சியூர் முடிநாகராயர்

**“நின் கடற் பிறந்த ஞாயிறு பெயர்த்தும்நின்**
**வெண் தலைப் புணரிக் குடகடற் குளிக்கும்**

**(புறநானூறு 2:9-10)**

என்கிறார். கீழ்த்திசை முதல் மேல்திசை வரை தன் நிலப்பரப்பை வெற்றியால் பரவியவன் என்ற சிறப்பை எடுத்து மொழிய விரும்பிய புலவர், கடலில் பிறந்த ஞாயிறு, குடகடலில் குளிக்கச் சென்றது என்று ஞாயிற்றின் தோற்றத்தையும், மறைவையும் நுட்பமாக விளக்குகின்றார்.

இவற்றில் ‘மறைதல்’ என்ற எதிர்மறைப் பொருள் நவில்தல் சிறப்பன்று என்று கரந்து, அடுத்த நாளின் ஆயத்தமாக பிறந்த ஞாயிறு குளித்து புத்தொளி கூட்டச் சென்றதாக எடுத்து மொழிகின்றார். தொன்மம் மாறா தொன்மைத் தமிழர்கள் தம் சொல்லிலும் சிந்தனைத் தெளிவிலும் அறிவியல் சிந்தனையை மிகத் தெளிவாகப் பதிவு

செய்துள்ளனர் என்ற கருத்தே இங்கே நிரல்படுத்தப்படுகிறது.

## முடிவுரை

1. தொன்மைத் தமிழர்கள் அறிவு நிலையில் முதன்மை பெற்றிருந்தனர் நுட்பமான அவர்களின் அறிவுக் கூர்மையால் வானியல் குறித்த சிந்தனையும், உலகம் தோன்றியதின் படி நிலையும் முன்வைக்கப்பட்டுள்ளன.
2. ஐம்பொறிகளின் இணைப்பு உடலாய் உலவுவது போல் ஒன்றுடன் ஒன்று இணைந்த பூதங்களான நிலம், நீர், காற்று, தீ, வான் என ஐந்து கூறுகளின் தொடர்பாகவே உலகம் என்ற ஒன்று சமைக்கப்பட்டுள்ளது என்ற கருத்து தெளிந்துரைக்கப்பட்டுள்ளது.
3. இன்று தனி ஒரு துறையாக வளர்ந்து வரும் அறிவியல் தமிழுக்கான அத்தனைப் பதிவுகளும், முதன்மை மற்றும் துணைமைச் சான்றுகளும் தமிழ் இலக்கியத்தில் நிலைப்பெற்றுள்ளன என்ற கருத்தும் நிறுவப்பட்டுள்ளது.
4. நுண்ணிய சிந்தனையும், நுட்பமான பார்வையும், தெளிவுற அறிந்து தெளிவுபட மொழியும் அறிவும், ஆற்றலும், அறிவியல் நோக்கும் நம் முன்னோர்களின் அறிவின் செறிவை தெளிவாய் எடுத்துரைக்க இக்கட்டுரை களம் அமைந்துள்ளது.

## அடிக்குறிப்புகள்


1. பவானந்தர் தமிழ் அகராதி- திவான் பதுதூர் எஸ். பவானந்தம்பிள்ளை,பக்-35, 1925 -முதல் பதிப்பு, நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிமிடேட், 41 பி, சிட்கோ இண்டஸ்டிரியல் எஸ்டேட்,அம்பத்தூர், சென்னை-600098.
2. திருக்குறள்- டாக்டர். மு.வரதராசனார்பக்-89, 1949 -மு.பதிப்பு திருநெல்வேலி- தென்னிற்திய சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம் லிட்,522, டி.டி.கே.சாலை. சென்னை-600018.
3. திருக்குறள்- டாக்டர். மு.வரதராசனார்,பக்-89, 1949 -மு.பதிப்பு,திருநெல்வேலி- தென்னிற்திய சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம் லிட், 522, டி.டி.கே.சாலை. சென்னை-600018.
4. புறப்பொருள் வெண்பாமலர்- பெருமலைப்புலவர்- பொ.வே.சோமசுந்தரனார்,
5. பக்-51 சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம்,154, டி.டி.கே.சாலை- ஆழ்வார்பேட்டை,சென்னை-18
6. தொல்காப்பியம்- பொருளதிகாரம்- இளம்பூரணனார், பக்-531 மு.பதிப்பு -மே -2005
7. சாரதா பதிப்பகம்,சென்னை-600014.
8. திருவாசகம்-புலவர் கருப்பூர் மு.அண்ணாமலை,பக்-36, பதிப்பு 2020, குமரன் பதிப்பகம்,3. முத்து கிருஷ்ணன் தெரு,பாண்டிபஜார்,சென்னை-14.
9. திருக்குறள்- டாக்டர். மு.வரதராசனார்,பக்-73, 1949 -மு.பதிப்பு,திருநெல்வேலி- தென்னிற்திய சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம் லிட்,22, டி.டி.கே.சாலை, சென்னை-600018.

# ஆறுபடை வீடுகளின் சிறப்பு

**முனைவர் ஜெ.போ. சாந்திதேவி**
உதவிப்பேராசிரியர்
செந்தமிழ்க் கல்லூரி, மதுரை

உலகின் மிகவும் தொன்மை வாய்ந்தது சைவ சமயம். சைவ சமயத்தின் முழுமுதற் கடவுள் சிவபெருமான் சிவனின் புதல்வனாக முருகன் போற்றப்படுகிறார். தமிழ் இலக்கியங்கள் முருகனைக் குறிஞ்சி திணையின் தெய்வமாகப் போற்றப்படுகிறார். முருகனின் கோயில்கள் இயற்கையுடன் கூடிய மலைகளில் தான் எழுந்துள்ளன. அவன் ஆறு இடங்களில் குடியிருக்கும் இடமே அறுபடை வீடுகள். திருப்பரங்குன்றம், திருச்செந்தூர், பழநி, சுவாமிமலை, திருத்தணி, சோலைமலை ஆகியவை ஆகும். மூலாதாரம், சுவாமிசுடானம், மணிபூரகம், அநாகதம், விசுத்தி, ஆக்சை என்ற ஆறு ஆதாரங்களே அறுபடை வீடுகளாம். படைவீடு என்பது போர்புரியும் படைத்தலைவன் படைகளுடன் தங்கி இருக்கும் இடத்தைக் குறிக்கும்.

**திருப்பரங்குன்றம்**

இது அறுபடை வீடுகளில் முதல் படை வீடாகும். இது மதுரையிலிருந்து தென்மேற்கில் 9கிலோமீட்டர் தொலைவில் உள்ளது. இம்மலை 190மீட்டர் உயரம் கொண்டது. கோயில் கோபுரம் 46மீட்டர் உயரம் கொண்டது. மலையின் மீது பஞ்சபாண்டவர் குகை ஒன்று அமைந்துள்ளது. இதில் ஆறு கற்படுக்கைகள் காணப்படுகிறது. கோயிலின் நுழைவாயிலில் பத்து பெரிய கற்தூண்கள் சிற்பக்கலைக்கு எடுத்துக்காட்டாக அமைகின்றன. மற்ற ஐந்து தலங்களில் நின்ற கோலத்தில் அருளும் முருகன், திருப்பரங்குன்றத்தில் மட்டும் தெய்வானையை மணம் முடித்த கோலத்தில் அமர்ந்தபடி காட்சி தருகிறார். இங்கு மட்டுமே வேலுக்கு அபிசேகம் செய்யப்படுகிறது.

நக்கீரர், அருணகிரிநாதர், பாம்பன் சுவாமிகள், சைவக் குரவர்கள் இத்தலம் பற்றி பாடியுள்ளார்கள். இக்கோயிலில் சத்தியகிரீசுவரர், கற்பக விநாயகர், சுப்பிரமணியர், துர்க்கையம்மன் என பஞ்ச தெய்வங்களும் மூலதானத்தை ஒட்டி ஒரே குடவரையில் அருளுகின்றனர்.

இக்கோயில் முன்பு சிவன் கோயிலாகவே இருந்துள்ளது. இப்பொழுதும் மூலவர் சிவன் தான். முருகன் தெய்வானையைத் திருமணம் செய்த தலம் என்பதால் முருகனுக்கு முக்கியத்துவம் தரப்பட்டு சுப்பிரமணிய சுவாமி கோயிலாக மாறிவிட்டது. தேவர்களைத் துன்புறுத்திய சூரபத்மனிடமிருந்து முருகப்பெருமான் அவர்களைக் காப்பாற்றியதால், இந்திரன் தனது மகளான தெய்வானையை முருகனுக்குத் திருமணம் செய்து தந்தார். மாமர வடிவமாக நின்ற சூரபத்மனைக் கொன்ற வெற்றியை உடையவன் முருகன் என்பதனை,

**“மா முதல் தடிந்த மறுஇல் கொற்றத்து**
**எய்யா நல்இசை செவ்வேற் சேஎய்”**

என்று திருமுருகாற்றுப்படை குறிப்பிடுகிறது. முருகப் பெருமான் சூரபத்மனைக் கொன்றதைச் **‘சூர்மருங் கறுத்த சுடநிலை நெடுவேல்’** என்று அகநானூறு குறிப்பிடுகிறது. இத்தலத்தில் கார்த்திகைத் திருவிழா, தெய்வானையை மணந்து கொண்ட பங்குனி உத்திரநாள் ஆகியவை சிறப்பான திருவிழாவாகக் கொண்டாடப்படுகிறது. இத்தலத்தின் புராணப் பெயர் தென்பரங்குன்றம்.

**திருச்செந்தூர் (திருச்சீரலைவாய்)**

இது அறுபடை வீடுகளில் 2-ம்படை வீடாகும். இது திருநெல்வேலியில் இருந்து கிழக்கே 60கிலோமீட்டர் தொலைவில் அமைந்துள்ளது. இது கடற்கரையோரத்தில், அலைகள் வீச அமைந்துள்ள காரணத்தால் இதற்கு திருச்சீரலைவாய் எனப் பெயர் பெற்றது. இங்கு 150அடி உயரம் கொண்ட கோயிலின் கோபுரம் 9 தளங்களைக் கொண்டதாக அமைந்துள்ளது. 120அடி நீளத்தையும், 86அடி அகலத்தையும் கொண்ட சண்முகமண்டபம், இக்கோயிலுக்கு தனிச் சிறப்பைக் கொடுக்கிறது. எல்லா கோயில்களிலும் மூலவர் ஒருவர் தான் இருப்பர். ஆனால் இங்கு இரு மூலவர்கள் இருக்கின்றனர். முருகனே பாலசுப்பிரமணிய சுவாமியாகவும், சண்முகராகவும் இரு மூலவர்களாகக் காட்சியளிக்கிறார்.

அருணகிரிநாதர், நக்கீரர் இத்தலத்தில் பாடியுள்ளார்கள். முருகப்பெருமான் சூரப்பதுமனை ஐப்பசி மாதம் வளர்பிறை சசூடியன்று வெற்றிக் கொண்டு ஆட்கொண்டார். இந்நாளே கந்த சசூடியாகக் கொண்டாடப்படுகிறது. இந்நிகழ்வு இத்தலத்தில் நடந்தது என்பதால் இவ்விழா இன்றும் திறம்பட நடைபெறுகிறது.

**பழநி (திருவாவினர் குடி)**

இது அறுபடை வீடுகளில் மூன்றாம் படை வீடாகத் திகழ்கிறது. இது திண்டுக்கல் மாவட்டத்தில் இருந்து சுமார் 60 கிலோ மீட்டர் தொலைவில் இயற்கை வனப்புடன் அமைந்துள்ளது. ஆவியர் குடியைச் சார்ந்த ஆவிக்கேசர் என்னும் மன்னன் தன் குடிமக்களுடன் ஆட்சி செய்த இடம் பொதினிமலை. இதுவே பின் பழனிமலை என மருவிற்று என வரலாற்றின் மூலம் அறியமுடிகிறது. சிவனும், பார்வதியும் தங்கள் மகன் முருகனை ஞானப்பழம் நீ என அழைத்தால் பழம் நீ என வழங்கப் பெற்று பிற்காலத்தில் பழநி ஆயிற்று.

இத்தலத்தில் ஆண்டிக் கோலத்தில் முருகன் தண்டாயுதபாணியாகக் காட்சியளிக்கிறார். தண்டபாணி சுவாமிகள் கருவறை முழுவதும் கல்லினார் ஆனது. இத்தலத்தில் உள்ள முருகன் சிலை போகர் என்ற சித்தரால் உருவாக்கப்பட்டது எனக் கூறுகின்றனர். இக்கோயிலில் முருகப்பெருமான் குழந்தை வேலாயுத சுவாமி என்று அழைக்கப்படுகிறார். முருகனால் தோற்றுவிக்கப்பட்ட ஆவணப் பொய்கைத் தீர்த்தமும் கோயிலிலுள்ள மகாலட்சுமி, காமதேனு, சூரியன், பூமா தேவி, அக்னி போன்றோரின் சன்னதிகளும், சித்திரங்களும் இத்தலத்தின் வரலாற்றை விளக்குகின்றன. தெய்வானையுடன் முருகன் சிலநாள் இத்தலத்தில் தங்கியிருக்கிறான் என்பதை,

**“தாகில் கொள்கை மடந்தையொடு சிலநாள்**
**ஆவினன்குடி அசைதலும் உரியன்”**

என திருமுருகாற்றுப்படை குறிப்பிடுகிறது. மேலும் பழநியாண்டவர் அருகில் ஒரு சிறிய பேழை உள்ளது. அதில் படிகலிங்க வடிவத்தில் சிவபெருமானும், உமாதேவியும் உள்ளனர். அவர்களை முருகன் பூசிப்பதாக ஐதீகம். இங்கு பங்குனி உத்திரம், கந்த சஷ்டி, சூரசம்காரம் போன்ற விழாக்கள் சிறப்பாகக் கொண்டாடப்படுகிறது.

**சுவாமிமலை (திருவேரகம்)**

இது அறுபடை வீடுகளில் நான்காம் படை வீடாகத் திகழ்கிறது. அப்பனுக்கே பாடம் சொல்லித் தந்த சுப்பையா அருள் பாலிக்கும் தலம் ஆகும். தஞ்சாவூரிலிருந்து 32கிலோமீட்டர் தொலைவில் இக்கோயில் அமைந்துள்ளது. இம்மலையின் தெற்கு நோக்கிய இராசகோபுரம் 5 நிலைகளை உடையது. இறைவனைக் காணச் செல்லும் 60படிகளும் காணப்படுகின்றன. அறுபது படிகருக்கும், அறுபது தமிழ் வருடங்களின் பெயர்களை வைத்துள்ளனர்.

மகாமண்டபத்தில் மயிலுக்குப் பதிலாக முருகனுக்கு இந்திரனால் வழங்கப்பட்ட ஐராவதம் என்ற யானை நிற்கிறது. நெல்லி மரம் சுவாமி மலையின் தல விருட்சமாகும். கட்டுமலையின் உச்சியில் சுவாமிநாதர் நின்றிருக்கும் பீடம் சிவலிங்க ஆவுடையாகவும், அதன் மேல் எழுந்தருளிக்கும் சுவாமிநாத மூர்த்தி பாணலிங்கமாகவும், காட்சி தருவது இத்தலத்தின் சிறப்பம்சமாகும். பிரணவ மந்திரத்தைத் தந்தை சிவபெருமானுக்கு உபதேசித்து, சுவாமிநாதனாகச் சுவாமி மலையில் முருகன் வீற்றிருக்கிறார். தந்தை சீடனாக அமர்ந்து கேட்டதனால் சிவகுருநாதன் என்று முருகப்பெருமானுக்குப் பெயர் ஏற்பட்டது. இவருக்கு அருணகிரிநாதர் 38திருப்புகழ் பாடல்களைப் பாடியுள்ளார்.

**திருத்தணிகை (குன்று தோராடல்)**

அறுபடை வீடுகளில் 5வது வீடு ஆகும். திருவள்ளூர் மாவட்டத்தில் அமைந்துள்ளது. புராணப் பெயர் சிறுதணி ஆகும். ஒரு இலட்சம் ருத்திராட்சங்களால் ஆன ருத்ராட்ச மண்டபம் இங்க உற்சவர் சன்னதியாக உள்ளது.

திருச்செந்தூரில் சூரனை வதம் செய்துவிட்டு அமர்ந்த தலம் அசுரனோடு மோதியதன் காரணமாக இத்தலத்து மூலவரின் நெஞ்சில் பள்ளம் இன்னமும் இருக்கிறதாம். தேவேந்திரன் தெய்வானைக்குக் கல்யாண பரிசாகத் தந்த தலம். இந்தலத்தில் சூரசம்காரம் கிடையாது. ஆடிக்கிருத்திகை விழா சிறப்பாக நடைபெறும். திருநாவுக்கரசர் திருப்புறம்பயம் என்ற தலத்து திருத்தாண்டகத்தில்,

**“கம்மலிற்தோங்கும் கழுநீர்க் குன்றம்”**

என்று திருத்தணி பற்றிக் குறிப்பிட்டுள்ளார்.

**பழமுதிர்ச் சோலை (சோலைமலை)**

அறுபடை வீடுகளில் ஆறாவது வீடு ஆகும். மதுரை மாவட்டத்தில் அமைந்துள்ளது. நாவல் பழங்கள் ஆடி, ஆவணி மாதத்தில் தான் பழுக்கும். இங்கு மட்டும் தான் சசூடி மாதமான ஐப்பசியில் பழுக்கும் அதியசத்தைக் காணலாம். அறுபடை வீடுகளில் இங்கு மட்டும் வள்ளி, தெய்வானையோடு முருகன் காட்சி தருகிறார்.

ஆரம்ப காலத்தில் இங்கு வேல் மட்டுமே இருந்தது. பிற்காலத்தில் முருகப்பெருமான் வள்ளி, தெய்வானையுடன் ஞான தியான ஆதி வேலுடன் ஒரே பீடத்தில் நின்ற கோலத்தில் அருள் பாலிக்கும்நிலை அமைக்கப்பட்டது.

இங்கு நூபுர கங்கை என்ற புனித தீர்த்தம் அமைந்துள்ளது. இதற்கு சிலம்பாறு என்ற பெயரும் உண்டு. இத்தலத்தில் திருமாலும் முருகனும் குடிகொண்டு அருள்புரிகின்றனர். இது சைவ, வைணவ ஒற்றுமைக்கு சான்றாக காணப்படுகிறது. இது அருணகிரிநாதர், ஔவையார் துதித்துப் பாடிய பெருமை வாய்ந்த தலமாகும். குறிஞ்சிக் கடவுளாகிய முருகன் வயோதிகளாகத் தோன்றி நக்கீரனுக்கு காட்சியளித்த இடம் பழமுதிர்ச்சோலையாகும். மக்கள் முருகனை வழிபடும் முறையை,

**“ஆடுகளம் சிலம்பப் பாடி பலவுடன்**
**கோடுவாய் வைத்து கொடுமணி இயக்கி**
**ஓடாப் புட்கைப் பிணிமுகம் வாழ்த்தி**
**வேண்டுனர் வேண்டியாங்கு எய்தினர் வழிபட**
**ஆண்டாண்டு உறைதலும் அறிந்தவாரே”**

என்று திருமுருகாற்றுப்படை கூறுகிறது.

நக்கீரர் முருகனின் பெருமைகளையும், அறுபடை வீடுகளின் பெருமைகளையும் திருமுருகாற்றுப்படை என்ற நூலில் கூறுகிறார். அறுபடை வீட்டின் பெருமை, தலச்சிறப்புக்களைக் இக்கட்டுரை எடுத்தியம்புகிறது.

# சங்க இலக்கியங்களில் வியக்கும் அறிவியல்

**முனைவர் த. தனலெட்சுமி**
இணைப்பேராசிரியர், தமிழ்த்துறைத் தலைவர்
ஸ்ரீ சாரதா மகளிர் கல்லூரி (தன்னாட்சி)
திருநெல்வேலி

***ஆய்வுச் சுருக்கம்***
*பண்டைத்தமிழரின் வாழ்க்கையைப் பிரதிபலிக்கும் இலக்கியமான சங்கநூல்களில் அடங்குவன எட்டுத்தொகை நூல்களும், பத்துப்பாட்டுநூல்களும் ஆகும். இந்நூல்கள் பதினெண்மேற்கணக்கு நூல்கள் என அழைக்கப்படுகின்றன. அந்நூல்களில் அறிவியல் தொட்டுச்செல்லாத இடங்கள் இல்லை எனலாம். அகநூல்கள். புறநூல்கள் என பாகுபடுத்தப்பட்டிருந்தாலும் அறிவியல் நுட்பங்களை அறிந்திருந்தனர். அன்றாட வாழ்க்கை நிகழ்வுகளையும், நம்பிக்கைகளையும், ஒப்புமை அமைப்புகளையும் நாள் கோள்கள் மூலம் பயன்படுத்திய நிகழ்வுகளைத் தரும் சான்று பாடல்கள் கலையோடு அறிவியல் ஒன்றிணைந்து வாழ்ந்த முறையை எடுத்துரைக்கின்றது. அதன் வழி எட்டுத்தொகை, பத்துப்பாட்டு நூல்களில் இடம்பெறும் அறிவியல் கருத்துகளை சான்றுகளுடன் ''சங்க இலக்கியங்களில் வியக்கும் அறிவியல்'' என்னும் தலைப்பில் இக்கட்டுரையில் விவரிக்கப்பட்டுள்ளன.*

## முன்னுரை

சங்க இலக்கியங்கள் வாழ்வியற் இலக்கியங்களாக மதிப்பிடப்படுகின்றன. தமிழர்கள் நாகரிகத்தில் சிறப்புற்று விளங்கியதைப் போல அறிவியல் கலைகளிலும் இணைந்து வாழ்ந்து வந்தனர். மேனாட்டவர் 'சயன்ஸ்'' என்று குறிப்பதைத் தான் நம்மவர் ''அறிவியல்'' என்று அழைத்தனர். 'சய்னஸ்' என்னும் சொல் 'அறிவு' என்னும் கிரேக்கச் சொல்லினின்று தோன்றியது. அறிவு கடந்த நிலையில் மனிதன் அறியாது எல்லையில்லா கற்பிதல்களை விளக்கி எடுத்துரைக்கும் அறிவியல் புரிதல்கள் சங்க இலக்கியங்களில் இடம்பெற்றுள்ளதை இக்கட்டுரையில் காணலாம்.

## பழந்தமிழரின் அறிவியல் புரிதல்கள்

மனிதன் தான்வாழும் சூழ்நிலை, சுற்றியுள்ள உலகம், பிற அண்டங்கள் என வாழ்ந்தவன். அறிவியலைக் கடந்த நிலை என்பது எந்த ஜீவராசிகளும் உயிர்ப்பில்லாத நிலையை விளக்கும். தமிழர்கள் வானநூல், உயிரியல், இயற்பியல், பொறியியல் எனப் பல்வேறு துறைகளில் வல்லுநர்களாக விளங்கினர். அறிவு நிலையில் இலக்கியங்களில் பதிவு செய்துள்ளது, அந்த அறிவியலின் அடிப்படையிலே வாழ்க்கை சக்கரத்தைக் கொண்டு சென்று உள்ளதையும் சான்றுகளின் வழி அறிய முடிகின்றது. இதனையே

**''செஞ் ஞாயிற்றுச் செலவும்,**
**அஞ் ஞாயிற்றுப் பரிப்பும்,**
**பரிப்புச் சூழ்ந்த மண்டிலமும்,**
**வளி திரிதரு திசையும்,**
**வறிது நிலை, காயமும், என்று இவை**
**சென்று அளந்து அறிந்தோர் போல, என்றும்**
**இனைத்து என்போரும் உளரே ....''**[1]

என்னும் பாடலில் உறையூர் முதுகண்ணன் சாத்தனார் என்ற புலவர் பதிவு செய்துள்ளார். அக்காலத்தில் ஆய்வியல் அறிஞர்கள் வாழ்ந்துள்ளனர் என்பதும், தங்கள் சிந்தனை வழி இலக்கியங்களைப் படைத்துள்ளனர் என்பதையும் அறியலாம். அதாவது ஆகாயத்தில் சென்று அவர்களைப் போல

ஞாயிற்றின் பாதை, அதன் இயக்கம், அது செல்லும் இடப்பரப்பு ஆகியவற்றையும் காற்று பரவி நிற்கும் திசைகளையும் ஆகாயத்தின் தன்மைகளையும் கருத்து அளவையால் நுட்பமுடன் அறிந்து விளக்கி உள்ளதை இப்பாடலில் அறிய முடிகின்றது.

**எட்டுத்தொகை நூல்களில் அறிவியல் பயன்பாடு**

சங்ககால மக்கள் வானொலி, தொலைக்காட்சி இல்லாத காலகட்டத்தில் வான நிகழ்வுகளையே வாழ்க்கையோடு இணைத்து வாழ்ந்தனர் என்பதற்கு சங்க நூல்கள் சான்றுகள் தருகின்றன. உலகம் என்பது நிலம், நீர், காற்று, நெருப்பு, ஆகாயம் ஆகிய ஐந்தும் உள்ளடக்கிய பஞ்சபூதங்களால் ஆனது என்பார் தொல்காப்பியர். இதனையே பரிபாடலும் எடுத்துரைக்கின்றது.

**"கரு வளர் வானத்து இசையின் தோன்றி,**
**உரு அறிவாரா ஒன்றன் ஊழியும்:**
**உந்து வளி கிளர்ந்த ஊழ்ஊழ் ஊழியும்:**
**செந் தீச் சுடரிய ஊழியும்: பனியொடு**
**தண் பெயல் தலைஇய ஊழியும்: அவையிற்று**
**உள் முறை வெள்ளம் மூழ்கி ஆர்தருபு,**
**மீண்டும் பீடு உயர்வு ஈண்டி, அவற்றிற்கும்**
**உள்ளீடு ஆகிய இரு நிலத்து ஊழியும் ….."[2]**

எனும் பாடல் வரிகளில் உருவற்ற வானமே முதலிலிருந்தது எனவும் பின்பு ஒவ்வொரு ஊழியிலும் ஒவ்வொரு பூதம் உருவாகி உலகம் தோற்றம் பெற்றன என்று பஞ்சபூதங்களின் தோற்றத்தை எடுத்துரைக்கின்றது பரிபாடல்.

சங்க நூல்களில் கோள்கள் பற்றிய சிந்தனை அதிகமாக பயன்படுத்தப்பட்டுள்ளது. வானில் ஒளிரும் பொருள்களை அவற்றின் தன்மைக்கேற்ப நாள்மீன், கோள்மீன் எனப் பகுத்து ஆராய்ந்துள்ளனர். தாமாகவே ஒளிரும் தன்மையுடையது நாள்மீன் எனவும், ஞாயிற்றிடமிருந்து ஒளியை பெறும் இயல்புடையதை கோள்மீன் என்றும் அழைத்தனர் அத்தகைய கோள் மீன்களில் ஒன்று வெள்ளி. உருவம், பரிமாணம், அடர்த்தி ஆகியவற்றில் பூமியை ஒத்துள்ள இக்கோள் சந்திரனைப் போல எட்டு மடங்கு பெரிதாக உள்ளது. இதனை "வெண்மீன்" என்றும் அழைத்தனர். இக்கோளை சங்கப் புலவர்கள் சங்கநூல்களில் பல்வேறு பகுதிகளில் பயன்படுத்தியுள்ளமையை சங்கப் பாடல்களில் இருந்து அறிந்து கொள்ளலாம்.

**"ஏலா வெண்பொன் போருறு காலை"[3]**

என்னும் பாடல் வரியில் வெள்ளியின் வெண்மையான ஒளியைக் கொண்டு "வெண்மீன்" என்று அழைத்ததையும், நிறத்திற்கேற்றாற் போல் வெண்மையான மலர்களோடு ஒப்பிட்டுக் கூறுவதையும் அறியமுடிகின்றது.

வெள்ளி மீனை குடை போன்ற பல இதழ்களையுடைய கோங்கு பூவிற்கு உவமைக் கூறுகின்றது நற்றிணைப் பாடல் வரிகள்,

**"புல் லிதழ்க் கோங்கின் மெல்லிதழ்க் குடைப்பூ**
**வைகுறு மீனின் நினையத் தோன்றி …"[4]**

என்கின்றது.

அகநானூற்றுப் பாடலில் ,

**"நீளரை இலவத் தூழ்கழி பன்மலர்**
**விழவு தலைக்கொண்ட பழவிறல் மூதூர்**
**நெய்யுமிழ் சுடரில் காலபொரச் சில்கி**
**வைகுறு மீனின் தோன்றும்…" [5]**

விடியற் காலையில் தோன்றும் இலவம்பூக்களை வெள்ளி மீனைப்போல் இருப்பதாகக் குறிப்பிடுகின்றார்.

வெள்ளியை மழைக்கோளாகவும் பண்டைத்தமிழர் கருதினர் என்பதையும் அறிய முடிகின்றது. வெள்ளியை மழைக்கோள் என்று அழைப்பதை நிகண்டுகளிலும் காணலாம். மழை பொழியும் நிகழ்வினை

மழைக்கோள் கொண்டு கணித்தனர். இதனை,

**"வறிதுவடக் கிறைஞ்சிய சீர்சால் வெள்ளி**
**பயங்கெழு பொழுதொடு ஆநியம் நிற்ப ... "[6]**

என்னும் பதிற்றுப்பத்து பாடல் வரிகளில் வெள்ளி வடக்கு சென்றால் மழை பெய்யும் என்ற நம்பிக்கை இருந்ததை அறியலாம்.

கோள்களின் இயக்கத்தால் இயற்கை நிகழ்ச்சிகள் நடைபெறுகின்றன என்பதையும் புலவர்கள் அறிந்திருந்தனர். மழைக்கோள்களின் இயக்கத்தால் மழையின் வரவை அறிந்தவர்கள், அக்கோள் தெற்கே விலகி இருந்தால் மழை இல்லாமைக்கு அறிகுறி என்ற நம்பிக்கையும் கொண்டிருந்தனர். இதனையே,

**"வெள்ளி தென்புலத் துறைய விளைவயல்**
**பள்ளம் வாடிய பயனில் காலை ... "[7]**

என்ற புறநானூற்றுப் பாடல் வரிகளில் அறியமுடிகின்றது. இவ்வாறு கடிகாரம் இல்லாமல் உச்சிப்பொழுதை கணக்கிட்ட சங்ககால மக்கள் அறிவியல் நுட்பங்களில் வாழ்ந்திருப்பது வியப்பொன்றுமில்லை.

**பத்துப்பாட்டு நூல்களில் அறிவியல் பயன்பாடு**

இலக்கியம் என்பது இரசனைக்குரிய படைப்பு மட்டுமல்லாது அனுபவமும் அறிவியலும் கலந்த படைப்பாகும். இதனை பறைசாற்றும் வகையில் பத்துப்பாட்டு நூல்களிலும் அறிவியல் சிந்தனைகள் சிறப்பிடம் பெறுகின்றது. உதாரணமாக அறநூலான வள்ளுவத்தின் பெருமையை உரைக்கும் போது,

**"அணுவைப் பிளந்து ஏழ் கடலைப் புகட்டி**
**குறுகத் தரித்த குறள்" [8]**

என்று கூறுவது கண்களுக்குப் புலப்படாத மிகச் சிறிய மூலக்கூறு என்பது அறிவியலின் கண்டுபிடிப்பாக இருந்தாலும் பல நூறு ஆண்டுகளுக்கு முன்பு வாழ்ந்த ஔவை அதனை அறிந்து கொண்டு அணுவைப் பிளப்பது பற்றி கூறியிருப்பதும் வியப்பிற்குரியதாகும்.

ஞாயிற்று குடும்பத்தின் இரண்டாவது கோளான வெள்ளி குறித்து பதிவுகள் பத்துப்பாட்டு நூல்களிலும் இடம் பெறுகின்றது.

**"பைத்த பாம்பின் துத்தி ஏய்ப்ப**
**கைக்காடு இருந்த எங்கன் அகன் தடாரி**
**இருசீர் பாணிக்கு ஏற்ப, விரிகதிர்**
**வெள்ளி முளைத்த நளிருள் விடியல் ..."[9]**

என்னும் பொருநராற்றுப்படை பாடல் வரிகளில் விரிந்த கதிர்களை உடைய வெள்ளி எழும் விடியற்காலையில் கரிகாலன் அரண்மனையில் பொருநன் புகுந்து தடாரி பண் இசைத்துப் பாடியதைக் கூறியதில், அதன் இயக்கம் வெளிப்படாது, இயல்பாக தோன்றுகின்ற பொழுதைக் கோளோடு ஒப்பிட்டுக் கூறி வெளிப்படுத்தியுள்ள தன்மையைக் காணமுடிகின்றது. வெள்ளியை வெண்மீன் என்று அழைப்பதை,

**"வசையில் புகழ் வயங்கு வெண்மீன்"[10]**

என்று பட்டினப்பாலையிலும் குறிப்பிடுவதைக் காணலாம்.

**".... பைம்பயிர் மிசைதோறும்**
**வெள்ளி யன்ன ஒள்வீ யுதிர்ந்து**
**கரிமுகில் முசுண்டையொடு முல்லை தாஅய்"[11]**

என்னும் மதுரைக்காஞ்சியின் பாடல் வரிகளில் பசுமையான பயிர்களின் இடையில் முசுண்டை மலர்களோடு மலர்ந்து கிடந்த முல்லை மலர்களின் நிறத்தை வெள்ளி மீனோடு ஒப்பிட்டுக் கூறியுள்ளார்.

பொழுதுபுலர்ந்த காட்சியினை பெரும்பாணாற்றுப்படை பாடல் வரிகளில் கூறியுள்ளதாவது,

**“ஓதிம விளக்கின் உயர்மிசைக் கொண்ட**
**வைகுறு மீனின் பையத் தோன்றும்”** [12]

என்று கூறுவதில் விடியற்காலையில் கிழக்கே வெள்ளி தோன்றி, பொழுது விடிந்ததை புலவர்களுக்குத் தெரிவித்ததாகக் கூறப்படுகின்றது. இவ்வாறு இயற்கையின் அளப்பரிய ஆற்றல்களை சங்க இலக்கியங்கள் சுட்டிச் செல்வதோடு, வாழ்வியலோடு இணைந்து செயல்படுவதையும் காண முடிகின்றது.

நட்சத்திரங்களின் அடிப்படையில் உருவாகிய இராசி பற்றிய சிந்தனைகளும் பதிவு செய்யப்பட்டிருப்பதை நெடுநல்வாடையில் காணலாம்.

**“திண்ணிலை மருப்பின் ஆடு தலையாக**
**விண்ணூர்பு திரிதரும் வீங்கு செலல் மண்டிலத்து**
**முரண்மிகு சிறப்பின் செல்வனோடு நிலைஇய**
**உரோகிணி நினைவனள் நோக்கி நெடிதுயிரா ... ”** [13]

என்னும் பாடல் வரிகளில் பாண்டிமா தேவியின் கட்டிலின் மேல் விதானத்தில் வரையப்பட்ட ராசி மண்டல ஓவியத்தைக் குறிக்கும்போது, மேட இராசியுடன் பிற இராசிகளும் கொண்டு செல்லும் ஞாயிற்றுக்கு வேறாக உரோகிணி நட்சத்திரத்தை அண்டிய மதி வரையப்பட்டு இருப்பதாகக் கூறப்பட்டுள்ள செய்தியில் வானியல் நுட்பத்தினை காணமுடிகின்றது. எட்டுதொகை, பத்துப்பாட்டு நூல்கள் மட்டுமல்லாது சிற்றிலக்கியங்கள், காப்பியங்கள். புராணங்கள், பக்தி இலக்கியங்கள் என பன்முக நிலையிலும் அறிவியல் நுட்பங்களை இணைத்து பதிவு செய்யப்பட்டுள்ளதைக் காணமுடிகிறது. இக்கூற்றிலிருந்து கலை இலக்கியமும், அறிவியல் இலக்கியமும் ஒரு நாணயத்தின் இருபக்கங்கள் போல சங்ககால மக்களின் வாழ்க்கை முறை அமைந்ததை அறியமுடிகிறது.

## முடிவுரை

தமிழ் மக்கள் அறிவியல் உணர்விலும், சிந்தனையிலும் பழங்காலத்திலேயே ஆழத்தோய்ந்திருந்தனர் என்பதை கடந்த கால வரலாறுகள் கூறுகின்றன. இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே இலக்கியங்களைப் படைத்த பெருமையைப் பெற்றிருந்தாலும், அறிவியல் அடிப்படையில் வாழ்க்கை சக்கரத்தை நகர்த்திய சிறப்பு உண்டு. இதன்வழி பழந்தமிழர்களின் வானநூற்புலமை வெளிப்படுவதியும் அறியலாம்.

## அடிகுறிப்பு


1. புறநானூறு (மூலமும் உரையும்) தொகுதி - 1, முனைவர் கு.வெ.பாலசுப்ரமணியன், ப.எண். 86, மூன்றாம் பதிப்பு, 2007, நியூ செஞ்சுரி புக் ஹவுஸ்(பி) லிட், அம்பத்தூர், சென்னை-600 098
2. பரிபாடல் (மூலமும் உரையும்), முனைவர் பெ. சுப்பிரமணியன், ப.எண்.19, முதல் பதிப்பு,2004, நியூ செஞ்சுரி புக் ஹவுஸ்(பி) லிட், அம்பத்தூர், சென்னை – 600 098
3. புறநானூறு (மூலமும் உரையும்) தொகுதி - 2, முனைவர் கு.வெ.பாலசுப்ரமணியன், ப.எண்.86, மூன்றாம் பதிப்பு,2007, நியூ செஞ்சுரி புக் ஹவுஸ்(பி) லிட், அம்பத்தூர், சென்னை - 600 098
4. நற்றிணை (மூலமும் உரையும்), முனைவர் கு.வெ.பாலசுப்ரமணியன், ப.எண்.84, மூன்றாம் பதிப்பு,2007, நியூ செஞ்சுரி புக் ஹவுஸ்(பி) லிட், அம்பத்தூர், சென்னை - 600 098
5. அகநானூறு (மூலமும் உரையும்) தொகுதி - 1, முனைவர் கு.வெ. பாலசுப்ரமணியன், ப.எண்.86, மூன்றாம் பதிப்பு, 2007, நியூ

செஞ்சுரி புக் ஹவுஸ்(பி) லிட், அம்பத்தூர், சென்னை - 600 098
6. சங்க இலக்கியச் சிந்தனைகள், இராம.குருமூர்த்தி, ப.எண், 259, முதல் பதிப்பு, 2009, மணிவாசகர் பதிப்பகம், சென்னை - 600 021
7. புறநானூறு (மூலமும் உரையும்) தொகுதி - 2, முனைவர் கு.வெ.பாலசுப்ரமணியன், மூன்றாம் பதிப்பு, 2007, நியூ செஞ்சுரி புக் ஹவுஸ்(பி) லிட், அம்பத்தூர், சென்னை - 600 098
8. தமிழ் இலக்கிய வரலாறு, முனைவர் ச.சுபாஷ் சந்திரபோஸ், ப.எண்.61, 9 ஆம் பதிப்பு, 2019, இயல் வெளியீடு,தஞ்சாவூர் – 613 001
9. பத்துப்பாட்டு (தொகுதி – 1), முனைவர் இரா.மோகன், ப.எண்.83, மூன்றாம் பதிப்பு, 2007, நியூ செஞ்சுரி புக் ஹவுஸ்(பி) லிட், அம்பத்தூர், சென்னை – 600 098
10. பத்துப்பாட்டு (தொகுதி – 2), முனைவர் வி.நாகராசன், ப.எண்.303, மூன்றாம் பதிப்பு, 2007, நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட், அம்பத்தூர், சென்னை - 600 098
11. பத்துப்பாட்டு (தொகுதி – 2), முனைவர் வி.நாகராசன், ப.எண்.11, மூன்றாம் பதிப்பு, 2007, நியூ செஞ்சுரி புக் ஹவுஸ்(பி) லிட், அம்பத்தூர், சென்னை - 600 098
12. பத்துப்பாட்டு (தொகுதி – 1), முனைவர் இரா.மோகன், ப.எண்.216, மூன்றாம் பதிப்பு, 2007, நியூ செஞ்சுரி புக் ஹவுஸ்(பி) லிட், அம்பத்தூர், சென்னை – 600 098
13. பத்துப்பாட்டு (தொகுதி – 2), முனைவர் வி.நாகராசன், ப.எண்.183, மூன்றாம் பதிப்பு, 2007, நியூ செஞ்சுரி புக் ஹவுஸ்(பி) லிட், அம்பத்தூர், சென்னை – 600 098

# தமிழ் இலக்கியங்களில் அறிவியல் சிந்தனைகள்

முனைவர் செ. பிறீடா
உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை
ஸ்ரீ தேவிகுமாரி மகளிர் கல்லூரி, குழித்துறை

***ஆய்வுச் சுருக்கம்***

*நமது முன்னோர்கள் நமக்கு முன்னால் பிறந்தவர்கள் மட்டும் அல்ல. நம் காலத்தில் இருக்கும் எல்லா விஞ்ஞான வளர்ச்சிக்கும் அவர்கள் முன்னோடிகளும் கூட. அறிவின் நுட்பமான மலர்ச்சியே அறிவியலாகும். அந்த வகையில் மருத்துவம், வானியல், அணுவியல், கணிதவியல், இயற்பியல் போன்று பல தளங்களிலும் தடம் பதித்தவர்கள் பண்டைத்தமிழ் மக்களே. தமிழ் இலக்கியங்களில் பயின்று வந்துள்ள அறிவியல் சார்ந்த கருத்துக்களை முன்வைப்பதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.*

## முன்னுரை

இலக்கியம் என்பது சமுதாயத்தைப் பிரதிபலிக்கும் கண்ணாடி என்கிறார்கள் அறிஞர்கள். எந்த ஒரு இலக்கியமும் தான் தோன்றிய அச்சமுதாயத்தின் பண்பாட்டையும், நாகரித்தையும், பொருளாதாரத்தையும், அக்கால மக்களின் அறிவையும் எடுத்துரைப்பனவாக விளங்குவதைக் காணலாம். அறிவியல் என்பது ஆதாரங்களின் அடிப்படையில் ஏற்பது. இந்த அடிப்படையில் தான் நமது தமிழ் இலக்கியங்கள் விஞ்ஞானபூர்வமாக மிளிர்கிறது. பழந்தமிழரின் வாழ்வில் அணுவில் தொடங்கி அண்டம் வரையிலும் அறிவியல் பரவிக் கிடக்கின்றது. இலக்கியம் என்பது வெறும் இரசனைக்குரிய ஒன்றாக மட்டும் இல்லாமல் அனுபவமும் அறிவியலும் கலந்த படைப்பாகவே ஆக்கப்பட்டுள்ளன. இன்று நம் வாழ்வில் நாம் அடைந்திருக்கக்கூடிய அறிவியல் வளர்ச்சிக்கு ஆணிவேராக பழந்தமிழர் வாழ்க்கை அமைந்தது என்றால் மிகையில்லை. மனிதன் தனது சிந்தனையை ஒருமைப்படுத்தி இயற்கையை ஆய்ந்தான், இத்தகையை ஆராய்ச்சி தற்போது வேகத்துடன் வளர்ந்து வருகின்றது. ஒவ்வொரு மனிதனும் ஏதோ ஒரு வகையில் அறிவியலோடு தொடர்பு கொண்டிருக்கிறான்.

## ஐம்பூதக் கோட்பாடு

இவ்வுலகம் எப்படி உருவானது எவ்வாறு இயங்கிக் கொண்டிருக்கிறது என்பது பற்றி அறிஞர்கள் பலரும் பல்வேறு வகையான கருத்துக்களை முன்வைக்கின்றனர். அந்த வகையில் தொல்காப்பியர் உலகத் தோற்றம் பற்றிய கருத்தினை அழகுறப் பதிவு செய்துள்ளார். இவ்வுலகமானது நிலம், நீர், தீ, வளி, விசும்பு ஆகிய ஐம்பெரும் பூதமும் கலந்த கலப்பால் ஆகியது என்கிறார் இதனை,

**“நிலம் தீ நீர் வளி விசும்போடு ஐந்தும்**
**கலந்த மயக்கம் உலகம்”**

**(தொல்.பொருள்.மரபு.635)**

இவ்வண்ணம் தொல்காப்பியா் ஒரு விண்வெளி விஞ்ஞானியாய் விஞ்ஞானம் பேசுவதைக் காண்கிறோம்.

சங்கப் புலவர் முரஞ்சியூர் முடிநாகராயர்,

**“மண் திணிந்த நிலனும்**
**நிலம் ஏந்திய விசும்பும்**
**விசும்பு தைவரு வளியும்**
**வளித் தலைஇய தீயும்**
**தீ முரணிய நீரும் என்றாங்கு**
**ஐம்பெரும் பூதத்து இயற்கை போல”**

**(புறம்: 2-1-6)**

இதிலிருந்து மண் செறிந்த நிலமும், நிலத்திலிருந்து ஆகாயமும், ஆகாயத்திலிருந்து காற்றும், காற்றிலிருந்து நெருப்பும்,

நெருப்பிலிருந்து நீரும் உண்டாயின என்று ஐம்பூதக் கோட்பாட்டை விளக்குகிறார்.

**அணுக் கோட்பாடு**

இயற்பியலின் ஒரு பிரிவாக விளங்குவது அணுவியலாகும். அணுவைப் பிளக்க இயலாது என்று சான்றோர்கள் கருதியிருந்தனர். ஆனால் அந்த அணுவையும் பிளக்க இயலும் என்ற பேருண்மையை ஔவையார் மெய்ப்பிக்கின்றார். இந்நூற்றாண்டை ஆளும் சக்தி மிகுந்த ஆற்றல் பிரிவாக அணுவியல் திகழ்கிறது.

**"அணுவைத் துளைத்து ஏழ் கடலைப்புகட்டி**
**குறுகத் தரித்த குறள்"**

என்று ஔவையார் அணுவாகிய துகளைப் பிளக்க இயலும் என்ற சிந்தனையை நம்முன் வைத்துள்ளார்

கம்பரும் இக்கருத்தினை இரணியவதைப் படலத்தின் மூலம் உணர்த்துகிறார், இரணியன் 'இறைவன் எங்கு உள்ளான்' என்று பிரகலாதனிடம் வினவினான், அப்போது பிரகலாதன்,

**"சாணினு முளனோர் தன்மை**
**அணுவினைச் சத கூறிட்ட**
**கோணினு முளன்" (கம்பராமாயணம்:253)**

என்று ஓர் எளிய அணுவை நூறுபங்காகச் செய்தால் அந்தச் சிறுபகுப்பில் இறைவன் உள்ளான் என்று கூறுவதிலிருந்து கம்பரின் அணுவைப் பற்றியக் கருத்து தென்படுகிறது.

**உயிரினக் கோட்பாடு**

உயிரியல் குறித்த சிந்தனையும் தமிழ் இலக்கியத்தில் சிறப்புற அமைந்துள்ளதைத் தொல்காப்பியம் மூலம் உணரலாம். ஒரு செல்லானது செல் பிரிதலின் மூலம் பல்கிப் பெருகிப் பல உயிர்கள் உருவாகின்றன. பல செல் உயிர்களில் ஒரு செல்லே எல்லா வேலைகளையும் செய்ய வேண்டிய அவசியம் இல்லை. ஒவ்வொரு வேலையும் ஒரு குறிப்பிட்ட செல் தொகுப்புகளால் செய்யப் பெறுகின்றது என்பது உயிரியல் கொள்கை. இதனடிப்படையில் தொல்காப்பியரும் உயிர்களைப் பற்றிக் குறிப்பிடும் போது,

**"ஒன்றறி வதுவே உற்றறி வதுவே**
**இரண்டறி வதுவே அதனொடு நாவே**
**மூன்றறி வதுவே அவற்றொடு மூக்கே**
**நான்கறி வதுவே அவற்றொடு கண்ணே**
**ஐந்தறி வதுவே அவற்றொடு செவியே**
**ஆறறி வதுவே அவற்றொடு மனனே**
**நேரிதின் உணர்ந்தோர் நெறிப்படுத் தினரே"**

**(தொல். பொருள். மரபு. 571)**

என்ற நூற்பா வழி எடுத்தியம்புகின்றார்.

**மருத்துவ அறிவியல்**

நோயும் மருத்துவமும் மனித இன வரலாற்றில் பிரிக்க முடியாதவையாக உள்ளன. இன்றைய மருத்துவத் துறையானது வெகு வேகமாக முன்னேறிக் கொண்டிருக்கிறது. எந்த அறிவியல் கண்டுபிடிப்புகளுமே இல்லாத பண்டைக் காலத்திலும் மகப்பேறு மருத்துவம், அறுவை மருத்துவம், மாற்றுறுப்பு பொருத்துதல், நம்பிக்கை மருத்துவம் போன்றவை காணப்படுகின்றன.

**"மாதா உதிரம் மலமிகில் மந்தனாம்**
**மாதா உதிரம் சலமிகில் மூங்கையாம்**
**மாதா உதிரம் இரண்டொக்கில் கண்ணில்லை**
**மாதா உதிரத்தில் வைத்த குழவிக்கே"**

**(திருமந்திரம்)**

என்ற பாடலைக் கேட்கும்போது தாயின் உதிரத்தில் மலம் மிகுந்தால் பிறக்கும் குழந்தை மந்தபுத்தி உடையதாகவும் நீர் மிகுந்தால் குழந்தை ஊமையாகவும் மலம், நீர், இரண்டும் மிகுதியாக இருந்தால் குழந்தை குருடாகப் பிறக்கும் என்ற கருத்துக்கள் இப்பாடலில் பயின்று வருகின்றன. இக்கருத்துக்கள் இன்றைய

மருத்துவர்களின் ஆலோசனைகளிலும் அமைந்திருப்பதை அறிய முடிகிறது.

**மாற்று உறுப்பு பொருத்துதல்**

நம் உடம்பில் பழுதுட்டு இருக்கும் ஒரு உறுப்பை எடுத்துவிட்டு வேறொரு உறுப்பைப் பொருத்துதல் என்பது இன்றைய மருத்துவ உலகின் சிறப்பம்சமாகும். உதாரணமாக,

**"நாடுவிளங் கொண்புகழ் நடுகதல்**
**வேண்டித்தன்**

**ஆடு மழைத் தடக்கை யறுத்து**
**முறை செய்த**
**பொற்கை நடுந்தார்ப் புனைதேர்ப்**
**பாண்டியன்"**

என்னும் வரிகள் கீரந்தையின் கதவைத்தான் தட்டியதற்குத் தண்டனையாகத் தன் கையைத் தானே துண்டித்துக் கொள்கிறான் பாண்டியன். அதன் பின் பொன்னாலாகிய கையைச் செய்து வைத்துக் கொண்டான். அன்றிலிருந்து பொற்கைப் பாண்டியன் என அழைக்கப்பட்டான் என்கிறது அச்செய்தி. மேலும் இறைவன் கண்ணிலிருந்து குருதி வழிய சிவன் மேல் பேரன்புகொண்ட கண்ணப்பநாயனர் என்பவா் தனது கண்ணைத் தோண்டி அவ்விடத்தில் அப்புகின்றார். கண்பார்வையற்றவர்களுக்கு பிறருடைய கண்ணினை வைத்து அறுவை சிகிட்சை செய்து பார்வை பெற வைக்கும் மருத்துவ அறிவினை மிக எளிமையாக கண்ணப்பர் கதை மூலமாக எடுத்துக் கூறுகின்றார்.

அறிவியல் உலகின் அரிய சாதனையான அறுவை சிகிட்சையினை பதிற்றுப்பத்தில்,

**"மீன்றேற்கொட்பிற் பனிக்கய மூழ்கிச்**
**சிரல்பெயர்ந் தன்ன நெடுவெள்**
**நெடுவசி பரந்த உடுவாழ் மார்பின்**
**அம்புசே ருடம்பினர்ச் சேர்ந்தோ ரல்லது**
**தும்பை சூடாது மலைந்த மாட்சி"**
**(பதிற்றுப்பத்து : 42)**

போரில் வெட்டுண்ட உடலை வெள்;சி கொண்டு தைத்த மருத்துவன் செயலை விளக்குகின்றன.

**வானியலறிவு**

பண்டைக்கால மக்கள் வானவியல் பற்றிய அறிவுடையவராய் விளங்கினர் என்பதை இலக்கியங்கள் மூலமாக உணரலாம். சூரியனையும், அதனைச்சுற்றியுள்ள கோள்களையும் அறிவியல் அறிஞா்கள் சூரிய வட்டம், அதனைச்சுற்றியுள்ள பாதை என்று மொழிகின்றனா். இவ்வாறு வானவெளியில் காணப்படும் இக்காட்சியைப் புறநானூற்றுக் கவிஞர்,

**"செஞ்ஞாயிற்றுச் செலவும் அஞ்ஞாயிற்றுப்**
**பரிப்பும் பரிப்பு சூழ்ந்தமண்டலமும்"**

என்று பாடியுள்ளார்.

உலக இயக்கத்திற்கு இன்றியமையாத நீரைத் தரும் மழைபற்றிய செய்திகளை நவீன தகவல் தொடர்பு சாதனங்கள் நமக்கு எடுத்தியம்புகின்றன. அறிவியல் வளர்ச்சி பெறாத சங்க காலத்திலும் இக்கருத்துகள் அக்கால மக்களிடம் நிலவியிருந்தது.

மழைக்கோளாகிய வெள்ளி வடக்கே சென்றால் மழைஉண்டாகும் தெற்கே சென்றால் மழையின்மையும் உண்டாகும் என்பதை அறிந்திருந்தனர். அதனை

**"வறிது வடக்கிறைஞ்சிய சீா்சால் வெள்ளி**
**பயங் கெழு பொழுதோடா நியம் நிற்ப"**
**(பதிற்:24)**

**"வெள்ளி தென் புலத் துறைய விளைவயல்**
**பள்ளம் வாடிய பயனில் காலை"**
**(புறம்:338)**

என்னும் பாடலடிகள் விளக்குகினறன.

குளிர்கால நிலவின் பவனி மிகப் பிரகாசமாக அமைந்து மனதிற்கு இன்பம் ஊட்டும் என்பதை,

**"பருவவானத்துப் பாற்கதிர் பரப்பி**

**உருவவான்மதி ஊர் கொண்டாங்கு”**
**(சிறு.பா-250.251)**

என்னும் வரிகள் விளக்குகின்றன.

**வானவூர்தி**

அன்றைய மனிதன் கண்ட கனவை இன்றைய அறிவியல் முன்னேற்றம் நிஜமாக்கியது. பறவையைக் கண்ட மனிதன் தானும் அதுபோல பறக்க நினைத்தான். விளைவு விமானத்தின் துணையோடு விண்ணில் பறந்தான். இவ்விமானங்கள் பற்றிய பல குறிப்புகள் சங்கப்பாடல்களிலேயே பயின்று வந்துள்ளமையைக் காண முடிகிறது. சங்க காலத்திலேயே ஆளின்றி இயங்கும் விமானம் இருந்திருக்கிறது என்ற செய்தியைக் குறிப்பிடுகையில்

**“வலவன் ஏவா வானவூர்தி**
**எய்துப என்பதஞ் செய்வினை முடித்தென”**
**(புறம்:27)**

என்னும் பாடலடிகள் மூலம் பகைநாட்டின் செயல்பாடுகளை அறிந்து கொள்வதற்காக ஆளில்லாமல் பறக்கும் விமானங்கள் பயன்படுத்தப்பட்டு வந்தது என்பதை அறிய முடிகிறது.

மேலும் சிலப்பதிகாரத்தில் கண்ணகி கோவலனோடு ஆகாயத்திலிருந்து வந்திறங்கிய விமான ஊர்தியில் ஏறிச் சென்றதாகக் குறிப்பிடுகிறது இதனை இளங்கோவடிகள்,

**“வாடா மாமலர் மாரி பெய்தாங்கு**
**அமரர்க் கரசன் தமர்வந் தேத்தக்**
**கோநகர் பிழைத்த கோவலன் தன்னோடு**
**வானவூர்தி ஏறினள் மாதோ**
**கானமலர் புரிகுழல் கண்ணகி தானென்**
**(சிலம்பு:196-200)**

என்ற வரிகளில் வாடாத பெரிய மலர்களை மழையாகச் சொரிந்து அமரர்களின் அரசனான இந்திரனும் வானோரும் வந்து வாழ்த்த தன் கணவன் கோவலனோடு கண்ணகி தேவ விமானத்தில் ஏறிச்சென்றாள் என்று கூறப்பட்டுள்ளது.

இவை மட்டுமல்லாமல் சீவகசிந்தாமணி, பெருங்கதை போன்ற இலக்கியங்களிலும் விமானம் பறக்க பயன்படுத்தப்பட்டமை குறித்த செய்திகள் காணப்படுகின்றது.

**கணிதவியல்**

மனித வளர்ச்சி கணிதத்தின் அடிப்படையில் அமைந்தது. அறிவியல் பல்கிப்பெருகி வளர்வதற்கு கணிதமும் ஒரு காரணமாகும் இதனை வள்ளுவர்,

**“எண்ணென்ப ஏனை எழுத்தென்ப இவ்விரண்டும்**
**கண்ணென்ப வாழும் உயிர்க்கு”**
**(குறள் - 392)**

எனக் கூறுகிறார். இவை மட்டுமல்லாமல் வெள்ளம், நாழிகை, இமைப்பு, காதம், யோசனை, தாமரை, பதுமம், அனந்தகோடி போன்ற சொற்கள் எண் கணிதக் குறியீடாக விளங்கிய தமிழ் சொற்களாகும்.

**“நெய்தலும் குவளையும் ஆம்பலும் சங்கமும்**
**மைஇல் கமலமும் வெள்ளமும் நுதலிய”**
**(பரி:2)**

என்ற பரிபாடல் அடிகளின் மூலமாக ஆயிரம் கோடி, கோடிகோடி - பத்து நூறாயிரம் கோடி என்ற பேரெண்களைப் பற்றி அறிந்து கொள்ள முடிகின்றது.

**முடிவுரை**

இயற்கையோடு இயைந்த இன்ப வாழ்க்கை வாழ்ந்தவன் பண்டைத்தமிழன். அவன் வாழ்வின் ஒவ்வொரு படிநிலையும் சுற்றுச்சூழலிலேயே அமைந்ததைப் பழந்தமிழ் இலக்கியங்கள் சுட்டிக்காட்டுகின்றன. இன்று உலகில் உள்ள அனைத்து விதமான கண்டுபிடிப்புகளுக்கும் அறிவியல் வளர்ச்சிக்கும் பண்டைய தமிழனே முன்னோடி என்றால் அது மிகையில்லை.

**பார்வை நூல்கள்**


1. இளம் பூரணர், தொல்காப்பியம்
2. புலியூர்க்கேசிகன் சிலப்பதிகாரம்
3. துரைசாமிபிள்ளை.சு – புறநானூறு
4. சோமசுந்தரனார் பொ.வ. – பரிபாடல்
5. சங்கரசுப்பிரமணியன். அ. திருமூலரின் திருமந்திரம்
6. மோகன். இரா.பத்துப்பாட்டு

# திருமந்திரத்தில் கருவியல்

**வே. துர்கா பரமேஸ்வரி**
உதவிப் பேராசிரியர், தமிழ்த்துறை
உண்ணாமலை கலை மற்றும் அறிவியல் கல்லூரி
கோவில்பட்டி

***ஆய்வுச் சுருக்கம்***
*இலக்கியங்களாவன மக்களின் அகம், புறம் மற்றும் அறம் சார்ந்த கருத்துக்களை மட்டும் எதிரொளிப்பதோடு நின்றுவிடாமல் அக்கால மக்களின் அறிவுசார் சிந்தனைகளையும் எதிரொளிக்கின்றன. இலக்கியங்களில் பொதிந்துள்ள அறிவியல் கூறுகளை அறிவதற்கு, அவற்றை அறிவியல் நோக்கோடு அணுகுவது அவசியமாகிறது. இலக்கியங்களை அறிவியல் நோக்கோடு அணுகுவதால், அவை தோன்றிய காலகட்டத்தைச் சார்ந்த மக்களிடையே நிலவிய அறிவியல் சிந்தனைகளைத் தற்கால மக்களும் அறிந்துகொள்ள இயலும். அது, அவ்விலக்கியங்களுக்கான தேவையை உணர்த்துவதோடு மட்டுமல்லாமல் பல்வேறு வகையான அறிவியல் கருதுகோள்களையும் முன்னிறுத்துவதாக அமைகின்றது. திருமந்திரத்தில் உள்ள கர்ப்பக் கிரியைப் பாடல்களில் காணப்படும் கருவியல்சார் கருத்துக்களை ஆராய்வதே இந்த ஆய்வின் நோக்கமாகும்.*
***குறிச்சொற்கள்:*** *திருமந்திரம், கருவியல், கருமுட்டை, விந்தணு, கருப்பை, வெப்பநிலை*

## முன்னுரை

பன்னிரு திருமுறைகளுள் ஒன்றான திருமந்திரம் நான்மறைகளின் சிறப்புகள், ஆகமங்களின் சிறப்புகள், வீடுபேறு அடைவதற்கான வழிமுறைகள் போன்றவற்றை விளக்குவதோடு அல்லாமல், ஏராளமான அறிவியல் சிந்தனைகளைத் தன்னகத்தே கொண்டு விளங்குகின்றது. கணவன் - மனைவி ஆகிய இருவரின் இல்லற வாழ்வின்கண், ஒரு குழந்தை எவ்வாறு மனைவியின் கருப்பையில் உருவாகி வளர்ந்து வெளிவருகின்றது என்பது குறித்து விளக்கும் வகையில் கர்ப்பக் கிரியை பாடல்கள் அமைந்துள்ளன.

## கர்ப்பக் கிரியை

கருவில் நிகழக்கூடிய செயல்பாடுகளை விளக்குவதே கர்ப்பக் கிரியை ஆகும். கர்ப்பக் கிரியையானது திருமந்திரத்தின் இரண்டாவது தந்திரத்தில் 14வது அதிகாரமாக இடம்பெற்றுள்ளது. இதன்கண் 41 பாடல்கள் உள்ளன. ஆண் - பெண் புணர்ச்ச்சியின் கண் கரு உருவாவது முதல் பேறுகாலம் முடிந்து கருப்பையை விட்டு கரு வெளியேறுவது வரையிலான நிகழ்வுகள் கர்ப்பக்கிரியை பாடல்களில் விளக்கப்பட்டுள்ளன.

## கருவியல் (Embryology)

ஒரேயொரு உயிரணுவிலிருந்தே பல மில்லியன் உயிரணுக்களின் தொகுப்பாக, பல்வேறு உடல் உறுப்புகளின் சேர்க்கையாக திகழும் மனிதன் பிறக்கின்றான்.

> *"Embryology is the study of the formation and development of the embryo (or fetus) from the moment of its inception up to the time when it is born as an infant"*[1]

கரு தோன்றியது முதல் குழந்தையாக பிறப்பது வரையிலான காலகட்டத்தில், அது உருவாகி வளர்ந்து வரும் நிலைகளை குறித்து ஆராயும் படிப்பு கருவியல் ஆகும். (மொழிபெயர்ப்பு – கட்டுரையாளர்).

கருப்பைக்குள் வளரும் கருவானது ஒவ்வொரு நாளும் பல்வேறு நிலைகளைக் கடந்து முழு வளர்ச்சி அடைந்து வெளிவருகின்றது. இந்த நிகழ்வுகளை ஆராய்வதே கருவியல் ஆகும்.

**முட்டை செய்தானே**

பெண்ணின் சூல்பையில் கரு முட்டை உருவாவது குறித்து பின்வரும் பாடல் விளக்குகின்றது.

> **“போகத்துள் ஆங்கே புகுந்த புனிதனும்**
> **கோசத்துள் ஆகம் கொணர்ந்த கொடைத் தொழில்**
> **ஏகத்துள் ஆங்கே இரண்டுஎட்டு மூவைந்து**
> **மோகத்துள் ஆங்குஒரு முட்டை செய்தானே”**[2] (465)

இதன் பொருளாவது, இன்பத்துள் பொருந்திய இறைவன் கருவிற்கு உடம்பைத் தந்த கொடைச் செயலால் ஆண், பெண் கூட்டுறவில் முப்பத்தொரு தத்துவங்களைச் சேர்த்து இருவரது மயக்க நிலையில் கருவை ஏற்கக் கூடிய முட்டையைத் தந்தருளினான்.

**பெண்ணின் கரு முட்டை**

ஒரு பெண்ணின் கருப்பைக்கு மேலே வலது புறம் ஒன்று, இடது புறம் ஒன்றாக இரண்டு சூல்பைகள் (Ovaries) அமைந்திருக்கின்றன. இவை, கருப்பையுடன் மெல்லிய தசைக் கயிறுகளால் இணைக்கப்பட்டு இருக்கின்றன. பெண்ணின் கரு முட்டைகள் இந்த சூல்பைகளில் தான் வளர்ச்சி அடைகின்றன. பெண் பிறக்கும் பொழுதே 70,000 முட்டைகளைத் தன்னுடன் கொண்டு வருகின்றாள்[3].

**சூல்பையிலிருந்து முட்டை வெளிவருதல்**

ஒரு பெண் பூப்பெய்திய பிறகு தான் முட்டைகள் ஒவ்வொன்றும் முதிர்ச்சி அடைந்து முற்றத் தொடங்குகின்றன. ஒவ்வொரு மாதவிடாய்க் காலம் முடிந்தவுடன் சூல் பையில் உள்ள சில கரு முட்டைகள் வளர்ச்சி அடையத் தொடங்குகின்றன. அவைகளில் ஒன்று கடந்தகால மாதவிடாய்க்கும் வர இருக்கும் மாதவிடாய்க்கும் இடைப்பட்ட காலத்தில் முழுமையான வளர்ச்சி அடைகின்றது. மாதவிடாயின் பதினான்காம் நாளில் கரு முட்டை சினைப்பையில் இருந்து விடுபட்டு வெளியே வருகின்றது. **(ஆங்கொரு முட்டை)**

**கருமுட்டையின் ஆயுட்காலம்**

கண்ணுக்குப் புலனாகாத இந்தச் சிறு முட்டையானது கருக்குழாயினால் (Fallopian tube) உறிஞ்சப்பெற்று அதன் உள்ளே எடுத்துச் செல்லப்படுகின்றது. இக்குழாயில் தான் கருமுட்டையானது ஆணின் விந்துவை சந்திக்கின்றது. இவ்வாறு 24 மணி நேரத்திற்குள் கருமுட்டையை விந்தணுவானது சந்திக்கும் வாய்ப்பு கிட்டாவிடில் கருமுட்டை அழிந்து விடுகின்றது.[4] எனவே, முட்டையின் ஆயுள் காலம் சராசரியாக ஒரு நாளே ஆகும்.

**கருத்தரிக்கும் வாய்ப்பு**

கரு உருவாவதற்கான அடிப்படை ஆணின் விந்தணு பெண்ணின் கருமுட்டையில் சேர்வதாகும். இவற்றில் கரு முட்டையின் ஆயுள் காலம் ஏறத்தாழ 24 மணி நேரம் என்பதை மேலே கண்டோம். புணர்ச்சி சரியான காலத்தில் நிகழுமானால் அதாவது ஓவரியில் இருந்து முதிர்ந்த முட்டை வெளிப்படும் சமயத்தில் நிகழுமானால் கருத்தரித்தல் நிகழ வாய்ப்புகள் அதிகமாகின்றது[5]. மேலும், சாதாரணமாக ஆணின் உயிர் அணுக்கள் பத்து நாட்கள் வரை உயிர் வாழும் என்றாலும் இரண்டு நாட்கள் வரை கருத்தரிக்க வைக்கும் வலிமையுடன் செயல்படும்.[6] ஏனவே, முட்டை சினைப்பையில் இருந்து வெளிவராத சமயத்தில் ஆணும் பெண்ணும் இணைந்தால் கரு உருவாவதற்கான வாய்ப்பு மிகக் குறைவு. முட்டை வெளிவரக்கூடிய நாட்களில் ஆணும் பெண்ணும் இணைந்தால் உள்புகும் விந்தணுக்கள் வீரியத்துடன் செயல்பட்டு முட்டையை கருத்தரிக்கச் செய்வதற்கான வாய்ப்பு அதிகம். ஆகவே, ஆணும் பெண்ணும் மோகம் கொண்டு கூடும் காலத்தில் சினை

முட்டை வெளிப்பட்டு இருந்தால் தான் கரு உற்பத்தி நிகழ்வதற்கான வாய்ப்புகள் அதிகம் என்பதை **“மோகத்துள் ஆங்கொரு முட்டை செய்தானே”** எனும் அடியின் வாயிலாக அறிய இயலுகின்றது.

**கருப்பையின் தன்மை**

ஒரு பெண்ணின் இனப்பெருக்க உறுப்புகளுள் மிக முக்கியமான ஒன்று பெண்ணின் கருப்பை ஆகும். அந்தக் கருப்பையின் தன்மை குறித்து பின்வரும் பாடல் விளக்குகின்றது.

> ***“அறிகின்ற மூலத்தின்மேல் அங்கி,அப்புச் செறிகின்ற ஞானத்துச் செந்தாள் கொளுவிப், பொறை நின்ற இன்னுயிர் போந்துற நாடிப், பறிகின்ற பத்துஎனும் பாரம் செய்தானே”*** [7] *(452)*

இதன் பொருளாவது, இப்பாடலில் மூலம் என்பது கருத்தரிக்கும் இடத்தைக் குறிக்கிறது[8]. தீயும் நீரும் நிறையக்கூடிய இடம் கருத்தரிக்கும் இடமான கருப்பை ஆகும். அவ்விடத்தில் பொறுமையுடன் உள்ள இனிய உயிரைப் புகும்படிச் செய்து அக்கருப்பையினின்று நீங்கும் கால அளவை பத்து மாதமாக இறைவன் வகுத்தான்.

**வெப்பநிலை உயர்வு**

மனிதனின் சராசரி உடல் வெப்பநிலை $98.4^0$ பாரன்ஹீட் ஆகும். இவ்வெப்பநிலை பெண்ணின் உடலில் குறிப்பிட்ட சில நாட்களில் அதிகரிக்கின்றது. மேலே கூறப்பட்டது போல ஒவ்வொரு மாதமும் ஒரு முட்டை சூல்பையிலிருந்து வெளியேறுகின்றது. இவ்வாறு ஒவரியிலிருந்து முட்டை வெளிப்படும் பொழுது ஹார்மோன் செயல்பாடுகள் நிகழ்வதால் உடலின் சராசரி வெப்பநிலையை விட அப்போதைய வெப்பநிலை $0.8^0$ முதல் $1.5^0$ வரை உயர வாய்ப்பு இருக்கிறது. மாதவிலக்கு ஏற்படுகின்ற வரையிலோ அல்லது கருதரித்துவிட்டாலோ தொடர்ந்து உடலின் வெப்பநிலை சற்று உயர்ந்த நிலையிலேயே இருக்கும்.[9] எனவே, கருப்பை வெப்பத்தன்மை **(அங்கி)** நிரம்பியது ஆகும்.

**பனிக்குடத் திரவம் - அப்பு**

கரு உருவான ஆரம்ப காலங்களில் கருவைச் சுற்றிலும் சவ்வாலானது போன்ற ஒரு உறை மூடியிருக்கும். இதற்கு அமினியன் என்று பெயர். இதில் அமினி எனப்படும் திரவம் சுரக்கின்றது. இதனை பனிக்குடத் திரவம் என்றும் கூறுவர். கரு வளர வளர அமினியன் திரவ உற்பத்தியும் அதிகமாகிக் கொண்டே இருக்கின்றது. இதனால், கருவை மூடிக் கொண்டு இருக்கும் அமினியன் சவ்வு விரிவுகொடுத்துக் கொண்டே இருக்கின்றது.அமினியன் திரவம் கர்ப்பத்தின் ஆறாவது அல்லது ஏழாவது மாதம் வரை உற்பத்தியாகி சேகரிக்கப்பட்டே வருகிறது. பின்னர் ஓரளவு குறைகின்றது[10]. ஆகவே, கருப்பையானது பேறுகாலத்தில் பனிக்குடத் திரவத்தால் **(அப்பு)** நிரம்பியிருக்கின்றது. இப்படியாக கருப்பையானது வெப்பமும் (**அங்கி**), நீரும் (**அப்பு**) நிறைந்து காணப்படக்கூடியது என்று கருப்பையின் தன்மையை **“அறிகின்ற மூலத்தின்மேல் அங்கி அப்புச் செறிகின்ற”** என்பதன் வழி அறிய இயலுகின்றது.

**கருப்பைக்குள் கருவைப் பதியச் செய்தல் (Implantation)**

கருவானது நேரடியாகக் கருப்பையினுள் உருவாவது இல்லை. சூல்பையினுள் இருந்து வெளியாகும் கரு முட்டையானது கருக்குழாயினுள் (Fallopian tube) இருக்கும். இந்த முட்டையுடன் விந்தணு வந்து இணைந்தால் இந்த கருக்குழாயினுள் கரு உருவாகும். இந்தக் கருவானது ஆரம்பத்தில் ஒரே ஒரு உயிரணுவாக இருக்கும். பிறகு, ஒரு உயிரணுவானது இரண்டு உயிரணுவாகப் பிரியும். இரண்டு உயிரணுவானது நான்கு உயிரணுவாகப் பிரியும். இவ்வாறு பிரிந்து பிரிந்து உயிரணுத் தொகுதியாக மாறுகின்றது.

இவை அனைத்தும் கருக்குழாயினுள் நடைபெறுகிறது. இதன் பின்னர் தான் கருவானது கருப்பைச் சுவரை அடைகின்றது (Implantation). ஆகவே, இவை, அனைத்தும் நிகழ்ந்து முடிந்து கருவானது கருக்குழாயில் இருந்து கருப்பையை வந்தடைய 0 - 8 நாட்கள் வரை ஆகின்றது. **(படம்2ல் காண்க)** இவ்வாறு கருக்குழாயில் சராசரியாக எட்டு நாட்கள் வரை பொறுமையாக நின்ற உயிர் பின்னர் கருப்பைக்குள் புகுந்தது என்னும் கருவியற் கருத்தை **“பொறை நின்ற இன்னுயிர் போந்துறநாடி”** எனும் அடியின் வழி அறிய இயலுகின்றது.


## முடிவுரை

கருப்பையில் கரு தோன்றிய தருணம் முதல் குழந்தையாகப் பிறக்கும் வரை கருவின் வளர்ச்சி குறித்து ஆய்வதே கருவியல் என்று கருவியலுக்கான பொருள் தெளிவு படுத்தப்பட்டுள்ளது. ஆணும் பெண்ணும் மோகம் கொண்டு புணரும்பொழுது பெண்ணின் கருக்குழாயில் கருமுட்டை இருந்தால் தான் கருத்தரிக்கும் வாய்ப்பு அதிகம். ஒரு உயிரைத் தாங்கி வளர்க்கக்கூடிய கருப்பையானது வெப்பமும், நீரும் நிறைந்து காணப்படக்கூடியது ஆகும். முதலில் கருவானது சராசரியாக 8 நாட்கள் வரை கருக்குழாயில் வளர்ந்து பின்னரே, கருப்பையை அடைகின்றது. கருவானது தாயின் உடலில் ஏற்படக்கூடிய வெப்பநிலை அதிகரிப்பால் பெரிதும் பாதிக்கப்படக்கூடும். இவ்வாறு ஏற்படக்கூடிய வெப்பநிலை மாற்றத்தை சீராக்கும் பணியை பனிக்குடத்திரவம் செய்கின்றது. இவை போன்ற கருவியல் கருத்துக்களை மேற்கண்ட பாடல்கள் விளக்குகின்றன.


## அடிக்குறிப்புகள்


1. Inderbir Singh G P Pal., - Human Embryology, Eighth edition - 2007. Pg no – 1,2
2. மாணிக்கம்.அ., (உரையாசிரியர்) - பன்னிரு திருமுறைகள் தொகுதி 14, வர்த்தமானன் பதிப்பகம், சென்னை - 600017.
3. ஜனார்த்தனன்.என்., - கர்ப்பவதிகளுக்கு அவசியமான கையேடு, நர்மதா பதிப்பகம், சென்னை - 600017. பக்க எண் - 35
4. மேலது பக்க எண் - 20
5. கணேசன்.பி.சி., - தாய்மைப் பேறும் குழந்தை வளர்ப்பும், வானதி பதிப்பகம், சென்னை - 600017. பக்க எண் - 25
6. ஜேயம் கண்ணன் - மருத்துவ சவால், கர்ப்ப ரக்ஷாம்பிகை மகப்பேறு மையம, சென்னை - 600024. பக்க எண் - 103.
7. முன் கூறிய நூல்(2)
8. முன் கூறிய நூல்(2) - பக்க எண் - 275
9. முன் கூறிய நூல்(5) - பக்க எண் - 33
10. முன் கூறிய நூல்(3) - பக்க எண் - 47

**பின்னிணைப்புகள்**




படம் 1: விந்தணு கருமுட்டையை அடைதல்




படம் 2 : கருமுட்டை கருப்பையை அடைதல்

# தமிழ்ப் பக்தி இலக்கியங்களில் இசைக்கலைகள்

முதுகலைமானி அ.கல்யான்சரன்

***ஆய்வு நோக்கம்***

*தமிழ் பக்தி இலக்கியங்களில் பழங்கால இசைக் கலைஞர்களின் வாழ்வியல் முறைகள், மக்கள் எவ்வாறு இசையை பயன்படுத்திக் கொண்டனர் என்பது பற்றியும், எத்தனை விதமான கருவிகள் கொண்டு பாணர்கள் எனும் இசைக் கலைஞர்கள் கலையை செழிக்கச் செய்தனர் என்பது பற்றியும் கூறும் விதமாக இக் கட்டுரை அமைந்துள்ளது.*

***ஆய்வுச் சுருக்கம்***

*பழங்கால தமிழ் பக்தி இலக்கியங்களில் திருமுருகாற்றுப்படை, பத்துப்பாட்டு, எட்டுத்தொகை, பரிபாடல், தொல்காப்பியம் போன்ற இலக்கியங்களில் உள்ள இசை தடுப்புக்கள், அந் நூலில் உள்ள உள்ள பக்திப் பாடல்கள், அதன் பாடற்பொருள் என்பவை பற்றி கூறும் விதமாக இவ் ஆய்வு சுருக்கம் அமைந்துள்ளது.*

தமிழ் பக்தி இலக்கியங்களிலும் அவற்றிற்கு முற்படத் தோன்றியனவாகக் கருதப்படும் சிலப்பதிகாரம், மணிமேகலை போன்ற காப்பியங்களிலும், அவற்றுக்கும் முற்படத் தோன்றிய சங்க இலக்கியங்களிலும் கூறப்படும் சிவன், திருமால் இயல்புகள் பெரிதும் ஒத்திருக்கின்றன. ஆயின் சங்க இலக்யிங்களை விடவும் காப்பியங்களில் பல செய்திகள் உள்ளன. அவற்றினும் மிகப் பலவாகப் பக்திப் பாடல்களிலும் உள்ளன. அவ்வாறு பலவாக வளர்ந்தாலும் இவ்விலக்கியங்களால் உணர்த்தப்படும் சிவன் திருமால் இயல்புகள் ஒரு காலவழியே வந்தனவென்றே கொள்ளத்தக்கவை. இத்தெய்வங்களின் இயல்புகளை அறியும் போது இவை இந்தியா முழுவதும் பரவியிருந்த சிந்தனைகளே என்பது விளக்கும். இவற்றின் தொடக்க நிலையினைப் புராணங்களில் இதிகாசங்களில், வேதங்களில் கண்டு கூறுமளவுக்குப் பிற நூல்களில் கண்டு கூற முடியாது. வேத காலத்திற்கு முற்பட்டதாக உள்ள சிந்துவெளி நாகரிகத்தின் சின்னங்களும் சிவன் இயல்புகளைப் பற்றிய சில உண்மைகளை விளக்குவனவே. சுருங்கக் கூறின் இந்திய நாட்டின் சமய வளர்ச்சியின் எதிரொலியாகவே சிவன் திருமால் இயல்புகள் தமிழ் இலக்கியத்தில் உள்ளன என்பதில் ஐயமில்லை.

சங்க காலத்திற்கு பின் இந்துசமய உணர்வே பல்வேறு இலக்கியங்களையும் படைக்க உத்திற்று எனல் வேண்டும். இச்சமய இலக்கியங்களை நீதி இலக்கியங்கள், காப்பியங்கள், பக்திப் பாடல்கள் என்ற மூன்று நிலைகளில் ஆராயலாம். இவற்றுள் ஒரு குறிப்பிட்ட வகை இலக்கியத்திற்குப் பின்னரே பிறிதோர் வகை இலக்கியம் தோற்றலாயிற்று எனக் கூறமுடியாது. ஓர் ஆசிரியருக்குப் பின பிறிதோர் ஆசிரியர் தோன்றினார் எனக் கூறமுடியுமே தவிர நீதி நூற்களுக்குப் பின்னரே காப்பியங்கள் தோன்றின. அவற்றிற்குப் பின்னரே பக்திப் பாடல்கள் தோன்றின எனக் கூறமுடியாது. இம் மூவகை இலக்கியங்களும் சமய உணர்வை வெளிப்படுத்தும் சமய இலக்கியங்களே.

### பக்திப் பாடல்கள்

சைவ வைணவங்கள் வைதீகத் துறைகளே என்பதற்குப் பக்திப் பாடல்களே சிறந்த சான்றாகும்.

திருமுறைகளும் நாலாயிரமும் வைதீகத் துறைகளே என்பதை அவை எவ்வாறு விளக்குகின்றன எனப் பார்ப்போம்.

**வேதங்கள்:** சைவ வைணவ இலக்கியங்கள் வேதங்களைப் புகழ்ந்து பாடுவனவே. "மறை பயந்த பண்பன் வேத நல்வாயவர், வேதப்பிரானார்'' என வேதங்களை அருளியவர் என்று திருமாலைக் கூறுவதோடு வேதத்தால் அறியத்தக்கவன் என்ற கருத்தில் வேத நீதியாகி நின்ற நிமலன் என்றும் ஆழ்வார் பாடல்கள் குறிப்பிடுகின்றன.

திருக்கோவில் வளர்ச்சி இந்தியாவின் பல பாகங்களிலும் ஏற்பட்டமையினை வரலாறு கூறும். வடநாட்டில் சில கோவில்களையே நம்மடியார்கள் பாடினாலும் அங்கு ஒருசில கோவில்களே இருந்தன எனக் கூறமுடியாது. அரசர்கள் பலர், இந்தியாவின் பிற பகுதிகளிலும் பல கோவில்களை எடுத்துள்ளனர். எனவே சைவ வைணவ நெறிகள் இந்தியா முழுவதும் பரவியிருந்த ஒரு பண்பாட்டின் விளக்கங்களாகவே வளர்ந்தன என்பது இதனாலும் விளங்கும்.

திருக்கோவில்களோடு இணைத்துக் கூறப்படும் தீர்த்தச் சிறப்பும் இவ்வழிபாடு இந்தியா முழுமையினையும் எண்ணி மேற்கொள்ளப்பட்ட ஒன்று என்பதை உறுதிசெய்வதே வடக்கே கங்கையினையும் தெற்கே குமரியினையும் இதற்கிடையே பல தீர்த்தங்களையும் புனிதமாக மதித்தனர். திருக்குடந்தையின் தீர்த்தப் பெருமையினைக் கூறும் போது

**சாமியோடு சரச்சுவதியவள் கோமியும்**
**உறையும் குடமூக்கிலே**
**காவிரி நல்யமுனை கங்கை சரசுவதி**
**பொற்றாமரை புட்கரணி தெண்ணீரக்**
**கோவியொடு குமரிவரு தீர்த்தஞ் சூழ்ந்த**
**குடந்தை**

என பக்திப் பாடல்கள் பாடுவது இவ்வுண்மையினை உணர்த்தும்.

### பக்தி இலக்கியத்தின் இயல்பு

பக்தி இலக்கியம் மக்களைப் பாடாது இறைவனைப் பாடுவது. இறைவனைப் பாடுவது என்னும் போது திருக்கோவில்களைப் பாடுவது என்பது பொருளன்று. இறையனுபவத்தைப் பாடுவது என்பது தான் பொருள். கவிஞனின் இறையனுபவம் பக்திப் பாடல்களில் எவ்வாறுள்ளது என்பதை ஆராய்வது பயனுடையது. இவ்விறையனுபவம் மெய்யுணர்வனுபவம், பொதுவாக இக்கவிஞர்களை மெய்யுணர்வுக் கவிஞர்கள் என்பர். இங்கு மெய்யுணர்வு என்பதை எவ்வாறு விளக்குவது என்னும் வினா எழுகின்றது. இவர்கள் அனுபவத்தை மெய்யுணர்வு என்றால் பக்தி என்பது என்ன? இதனையும் ஆராய வேண்டும். மேலும் இவ்விலக்கிய வடிவங்களும் இங்குச் சிந்திக்கத்தக்கனவே. தொடக்கத்தில் பாடற் பொருளாகவுள்ள இறையனுபவத்தை ஆராய்வோம்.

### பாடற் பொருள்

எட்டுத்தொகையுள் ஒன்றாகிய பரிபாடலில் திருமாலையும் செல்வேளையும் பாடிய பாடல்கள் உள்ளன. பத்துப்பாட்டுள் ஒன்றாகிய திருமுருகாற்றுப்படை முருகனைப் பாடுகிறது. இவற்றுள் மனிதனை விடுத்து தெய்வத்தை நாடுக எனத் தெய்வத்திடம் ஆற்றுப்படுத்தும் முயற்சியினைக் பத்துப்பாட்டுள் ஒன்றாகிய இத் திருமுருகாற்றுப் படையிலேயே காண்கிறோம். பத்துப்பாட்டில் காணப்படும் பிற ஆற்றுப்படைகள் பொருளற்ற வறிய நிலையிலிருந்து விடுபடுவதற்குக் கலைஞர்களை செல்வர்களிடத்தே ஆற்றுப்படுத்துகின்றன. ஆற்றுப்படையின் இலக்கணமும் இதனையே கூறும். என்பது தொல்காப்பியம். உலகியல் வாழ்வில் பொருள்பெற்று வாழ்தலைக் கருவாகக் கொண்டெழுந்த இவ்வாற்றுப்படை இலக்கியம் இறையியலில் அருள்பெற்று வாழ்தலைக் கருவாகக் கொண்டு மாறிநிற்றலைத் திருமுருகாற்றுப்படை விளக்குகிறதெனலாம்.

பொருளற்ற வறுமையிலும் அருளற்ற வறுமை கொடியது என்ற உணர்ச்சி சமுதாயத்தில் தோன்றி வளர்ந்த நிலைமையினை இப்பாட்டு காட்டிநிற்கிறது. இங்கு அருள் ஆன்மாக்கள் உய்ய இறைவன் சொரியும் பேரன்பே. திருக்குறள் உணர்த்தும் அருள் இதுவன்று. பதினோராம் திருமுறையில் சேர்க்கப்பட்டுத் திருமுறையாகக் கொள்ளப்படும் திருமுருகாற்றுப்படையும் பாடும் பொருளில் ஒரு மாற்றத்தை ஏற்படுத்தியதையே காண்கிறோம்.

திருமுருகாற்றுப்படை பாடிய நக்கீரர் ஒரு மெய்யுணர்வாளர், சிறந்த கவிஞர், இறைவனையன்றி வேறெதனையும் பொருளாகக் கொள்ளாத சிறப்பு இவரிடமுண்டு. இவர் அறிஞர் சிலர் கருதுவது போன்று நெடுநல்வாடை பாடிய நக்கீரரின் வேறாவைரே. இவர்தம் உயிர்த்துடிப்பு இறை துடிப்பே. தாம் பெற்று இன்புற்றதோடமையாது பிறரும் அனுபவிக்கச் சிறந்த கவிதயாகவும் படைத்துள்ளார். இப்பாட்டுப் பல்லாயிரக்கணக்கான முருகனடியார்கள் நாள்தோறும் ஓதிவரும் வேதமாகவும் விளங்குகிறது.

இந்நூல் எப்போது தோன்றயது என்று உறுதியாக எதுவும் கூறமுடியவில்லை. இவர் அடியவர் ஒருவரை ஆற்றுப்படுத்த இப்பாடடைப் பாடினார் என்று கூறுவது போல் தம் போன்ற புலலர் ஒருவரை ஆற்றுப்படுத்த இப்பாட்டைப் பாடினார் என்றும் மரபும் உண்டு. இப்பாட்டுக்குப் புலவராற்றுப்படை எனப்பெயர் வழங்குவதும் இக்காரணத்தினாலேயே எனல் வேண்டும்.

இவ்வாற்றுப்படை போன்று பொருள் பெற வேண்டி மக்களைப் பாடித் திரிந்த கவிஞர்களை அருள்பெற வேண்டிய வேண்டிய இறைவனைப் பாட அறிவுறுத்தினர் இவ்வருட்கவிஞர்கள். திருமுறைகளிலும் நாலாயிரத்திலும் இவ்வறிவுரையினைக் கேட்கலாம். கவிஞர்கள் யாரைப் பாடுகின்றனர்? பொய்ம்மையாளர்களை, அதன் வினைவாகப் பெறும் பொருளும் இல்லை.

**தம்மையே புகழ்ந்திச்சை பேசினும்**
**சார்வினும் தொண்டர் தருகிலாப்**
**பொய்மையாளரைப் பாடாதே எந்தை**
**புகலூர் பாட்டுமின் புலவீர்காள்**
**இம்மையே தம் சோறும் கூறையும்**
**எத்தலாம் இடர் கெடலுமாம்**
**அம்மையே சிவலோக மாள்வதற்கு**
**யானுமையுற வில்லையே**

என்பது சுந்தரர் பாட்டுபொய்மையாளராகிய மனிதரைப் பாடாது மெய்ம்மையாளனாகிய இறைவனைப் பாடினால் நீங்கள் இவ்வுலக வாழ்க்கைக்கு விரும்பும் பொருளும் கிடைக்கும், மறுமை நலனும் வாய்க்கும் மேலும் மக்களைப் பாடும் முயற்சியினால் பொருள் பெறுவதாக விரும்பினும் எத்தனை நாளைக்குப் போதுமான பொருளைப் பெற்றுவிடப் போகிறீர்கள்? இறைவனைப் பாடினாலோ அவன் அருளால் வாழ்க்க இலட்சியம் அனைத்தும் கைகூடுமே.

**என்னாவது எத்தனை நாளைக்குப்**
**போதும் புலவீர்கள்**
**மன்னா மனிதரைப் பாடிப்படைக்கும்**
**பெரும்பொருள்**
**மின்னார் மணிமுடி விண்ணவர்**
**தாதையைப் பாடினால்**
**தன்னாகவே கொண்டு சன்மமும்**
**செய்யாமையும் கொள்ளுமே.**

என்பது நம்மாழ்வார் பாடல் இறைவனைப் பாடுவதால் பிறவித் துன்பமும் நீங்கும். உங்களைத் தன்னாக்கி தானோடு சேர்த்துக் கொள்வான் என்று குறிக்கோளையும் குறிப்பிடுகிறார்.

நம்மாழ்வர் பிறிதொரு அறிவுரையினையும் கவிஞர்களுக்குத் தருகிறார். கவிதைப் படைப்புக்குக் காரணமாகிய ஞான அனுபவம் பொருள் முயற்சியினை முன்வைத்து அழிந்து போவதை அவர் விரும்பவில்லை.

பொருள் நாட்டத்திற்கென உடல் முயற்சியும் மேற்கொண்டு வாழுங்கள் என அறிவுரை கூறுகிறார். கவிதை ஞானமுயற்சியின் பாற்பட்டது என்பதையும் அறிவுறுத்துகின்றார்.

**வம்மின்புலவீர் நும்மெய்வருத்திக் கைசெய்துய்ம்மினோ**
**இம்மன் னுலகில் செய்வரிப்போ தில்லை நோக்கிநோம்**
**நும்மின்கவி கொண்ட நும்நும் இட்டாதெய்வமேத் தினால்**
**செம்மின் சுடர்முடி என்திரு மாலுக்குச் சேரும்.**

இழிந்த மனிதரைப் பாடி உங்கள் ஞானத்தை விலை பேசாதீர்கள் என்று கூறும்போது கவிஞர்கள் வாயிலாகச் சமுதாயத்துக்கு ஓர் உயர்ந்த இலட்சியத்தையும் அறிவுறுத்துகிறார். இவ்வாறு உயர்ந்த இலட்சியத்தை வற்புறுத்தும் போது, தம் கால சமுதாயத்தையும் சுட்டிக்காட்டியே வற்புறுத்துகிறார். இம் மண்ணுலகில் செல்வர் இப்போதில்லை என்று கூறும்போது தம் காலத்துச் சமுதாயத்தையே கூறுகின்றார் எனல் வேண்டும் சமுதாயம் தாழ்ந்துவிட்டமைக்காக இறைவனை நம்புமாறு கூறுகின்றார் என இதற்கு விளக்கம் கொடுத்துவிட முடியாது. இறையுணர்வைத் தருவதற்குச் சமுதாயச் சீர்கேடும் துணை செய்யலாம் என்ற அளவில் அதனையும் பயன்படுத்துகின்றார் என்றே கூறவேண்டும். வறிய நிலையினைக் காரணமாகக் காட்டித் துறவினை வள்ளுவர் வற்புறுத்துவதும் கருதத்தக்கது.

இறைவனைப் பாடுதல் இரண்டு வகை. ஒன்று உலகியல் வட்டாரத்திலிருந்து பாடுதல் பிறிதொன்று இறைவட்டத்திலிருந்து பாடுதல். சிறந்த அடியவர் என்ற அளவுக்கு வளர்ச்சி பெறாதபோதும் ஒருவர் இறைவனைப் பாடலாம். அப்படிப்பட்டவருக்குப் பாடல் பொருள் பலவற்றில் தெய்வமும் ஒன்றாகிறது. அவர் வாழ்க்கை ஒரு கதம்ப வாழ்க்கை. பல்வேறு வகையான உணர்ச்சிக் கொந்தளிப்பில் வாழும்போது தெய்வ நம்பிக்கயின் விளைவாகத் தெய்வத்தை எண்ணியும் பாடிவிடுகிறார். திருமுறைகள், நாலாயிரம் போன்ற தெய்வப் பாடல்களுக்கும் உள்ள வேறுபாடும் இதனால் எழுந்ததே. இறைவனைப் பாடும் பாடலும், இறைவட்டத்தில் இருந்து பாடும்போதே ஞானப்பாடல் மெய்யுணர்வுப் பாடல் ஆகிறது. உலகியல் வட்டத்திலிருந்து பாடும்போது தெய்வத்தைப் பாடினாலும் உலகியற் பாடலே.

### திருப்பல்லாண்டு

இறைவனைப் பல்லாண்டு வாழ வாழ்த்துவதாக அமைந்த செய்யுள்வகை திருப்பல்லாண்டு, நாலாயிரத்திவ்வியப் பிரபந்தத்தில் பெரியாழ்வார் பாடியவொன்றும் ஒன்பதாம் திருமுறையில் சேந்தனார் பாடியவொன்றும் உள்ளன. இவ்விரண்டும் வெவ்வேறு யாப்பினால் அமைந்துள்ளமையின் இதற்கென்று தனித்த யாப்பில்லை என்பதும், வாழ்த்திக் கூறும் அடிப்படை ஒன்றைக் கொண்டு இடச் செய்யுள் அமைந்திருக்க வேண்டும் என்பது பெறப்பட்டுகின்றன. இவ்விரு ஆசிரியர்களுக்கும் முற்பட்ட காலத்திலேயே பல்லாண்டு பாடும் வழக்குண்மையினை,

**பாடுவோர் பணிவார் பல்லாண்டிசை கூறுபத்தர்கள்**
**சித்தத்துள்புகுத்**
**தேடிக் கண்டு கொண்டேன் திருவாரூர் அம்மானே**

என்னும் அப்பர் தேவாரம் உணத்தும். பெரியாழ்வார் கண்ணனுடைய பேரழகுக்கு கண்ணூறு பட்டுவிடக்கூடாதே என்ற தாய்மை உணர்வில் நின்று பல்லாண்டு பாடுவதாகவும், சேந்தனார் ஆன்மாக்கள் உய்ய இறைவன் அருளும் அருட்டிறம் கண்டு பல்லாண்டு கூறுவதாகவும் கொள்ள வேண்டும்.

சைவ மறுமலர்ச்சி காலத்தில் எழுந்த தேவாரப் பாடல்கள் இசைக் களஞ்சியமாகக்

காணப்படுகின்றன. வேற்றுச் சமயங்களின் நெருக்கத்தில் சைவம் சிக்கியிருந்த காலகட்டத்தில் திருஞானசம்பந்தர், அப்பர், சுந்தரர் ஆகிய மூவரும் தோன்றிச் சைவத்தின் உண்மையான பெருமைகளை உலகத்துக்கு உணர்த்திக் காட்ட உன்னதமான தமிழ்ப் பாடல்களை உணர்ச்சிப் பிரிவுகளாக இசையில் தோய்த்தெடுத்து இனிமையான பதிகங்களாக வழங்கியுள்ளளர். பன்னிரு திருமுறைகளுள் முதல் ஏழு திருமுறைகளாக மூவர் தேவாரம் வைத்துப் போற்றப்படுகின்றது. சம்பந்தர் பாடியன 1,2,3 ஆம் திருமுறைகள் இவற்றுள் ஊள்ள மொத்தப் பதிகங்களை 313, பண்கள் 10, சுந்தரர் பாடியது ஏழாந்திருமறை பதிகங்கள் 100, பண்கள் 17. திருஞானசம்பந்தரின் பாடல்களில் பல இசையென்ற சொல்லைச் சுமந்து காணப்டபடடுகின்றன. இசைகள் பாடிட (274:7) என்று அவர் கூறுவதைக் கொண்டு இசைக்கும் பாடல்களுக்கும் வேறுபாடு இன்றி அவர் உணர்ந்துள்ள பாங்கைக் காணலாம். இசை வல்லுநரை அவர் இசை கற்று வல்லார் என்று சிறப்பித்துள்ளார். பாடலில் இசை கலந்து வருவதை அவர் மிகுதியாக விரும்புகிறார் என்பதை அவர் இசை வல்லாரை மேலும் புகழ்வதிலிருந்து அறியலாம்.

**இசைகுலவு மாறு வல்லார் என்றும்**
**இசை கூடும் வமகபாடுபவர் என்றும்**
**இசை கூர வந்தவணம் ஏத்துபவர் என்றும்**

இசைபாடும் திறனுடையோர் திருஞானசம்பந்தரால் சிறப்பிக்கப்படுகின்றனர். தன்னையே திருஞானம் பெற்று பாடுந்திறமைக்காக மகிழ்ந்து காண்கிறார். இசையைப் பக்தியுடன் பாடவேண்டும் என்று அவர் மிகவும் விரும்புகிறார்.

இறைவன் இசையை விரும்புவான் ‘‘திடங்கொள் நாவின் இசைத் தொண்டர் பாடும்’’ இனிய இசைக்கு ஆட்பட்டு அருள்வான். ‘‘பண்ணிய நடத்தொடிசை பாடும் அடியார்கள்’’ இறையருளை எளிதாகப் பெற்று உய்வர். அவர்கள் ‘‘நன்றாங்கிசை மொழிந்து’’ இறைவனை நாடவேண்டும் ‘‘இமைலிந் திசைபாட வல்லார்கள்’’ (240:11) சம்பந்தரின் பாடலுடன் கலந்து பாடினால் இறையருள் தட்டாது திட்டும் என்பது அவரது குறிப்பு.

தொண்டர்கள் இசைபாடியே இறைவனை வணங்க வேண்டும் ‘‘தொண்டர் இசைபாடியும் கூடிக்கண்டு துதிசெய் கோயிலைப் பற்றி சம்பந்தர் பெருமையுடன் பேசுகின்றார். ‘‘முறை முறையாய் இசைபாடு வாரடிமுன் தொண்டர்கள்’’ நல்லருள் வாய்க்கும் பேறுடையவர்கள். இசை, இறை இசை, தமிழிசை, இசையப்பயன் போன்ற பலவற்றைப் பற்றி சம்பந்தர் மிகச் சிறப்பாகக் குறிப்பிட்டுள்ளார். இவற்றிலிருந்து அவருடைய இசைப்பற்று, இசைப்பயிற்சி, இசை ஈடுபாடு அனைத்தும் நன்கு விளங்கும்.

சுந்தரர் தன்னுடைய இசைப் பாடல்களைப் பற்றிக் கூறும்போது ‘‘ஆரூரன் பன்னம் இசைக்கிளவி பத்திவை’’ என்று குறிப்பிட்டுள்ளதைக் காணலாம். ‘‘இன்னிசை’’ என்பதையும் ‘‘இன்னிசைப் பாடல்கள்’’ என்பதையும் நன்கு சிறப்பித்துள்ளார். சம்பந்தரின் சிறப்புக்களை சுந்தரர் எடுத்துக் காட்டும் போது ‘‘இன்னிசையால் தமிழ் பரப்பு ஞானசம்பந்தன்’’ என்று நிறைந்தவை என்பதை நயமாகச் சுட்டியுள்ளதைக் காணலாம். பக்தி எவ்வாறு இருக்க வேண்டும் என்பதைக் குறிப்பிட்டுக் காட்டும்போது ‘‘ஏழிசையின் தமிழால் இசைந்தேறிய பக்தியையும்’’ என்று குறிப்பிடுகிறார்.

**துணை நூற்பட்டியல்**

1. தமிழ் இலக்கிய வரலாறு. மு.அருணாசலம், கடவுள்பதிகம்.
2. தமிழ் இலக்கிய வரலாறு முனைவர் சி.பாலசுப்பிரமணியன்.
3. www.Chenailibrayy.com
4. www.tamizharulagam.in
5. www.Tzmilsurangam.in
6. www.saivan.org

# ஆயிரமாயிரம் நாட்களின் விளைபொருளே மனம்

**திருமதி சு. சத்யா**
உதவிப்பேராசியர், தமிழ்த்துறை
இராஜபாளையம் இராஜாக்கள் கல்லூரி, இராஜபாளையம்

***ஆய்வுச்சுருக்கம்***

*நமது அன்றாட வாழ்க்கை பல்வேறுபட்டத் தேடல்களில் பயணப்படுகிறது. அதில் இன்பம் - துயரம், துயரம் - இன்பம் என்றவாறு ஒரு முடிவற்ற வட்டத்தைச் சுற்றியபடியே நமது வாழ்க்கை அமைகின்றது. வாழ்க்கையில் அனைத்து வளமும் கிடைத்தும்,மெய்யுணர்வு இல்லாமல் வாழும் வாழ்க்கையில் வெறும் மயக்க நிலையே தோன்றும். மெய்யுணர்வைப் பெற்றிடத் திட்டமிடும் நம்முடைய மனமானது ஒரு சிறிய எல்லைக்குள்ளே அடங்கியதாக இருக்கின்றது. தற்போதுள்ள நமது நிலைமையான இம்மையில் மெய்யுணர்வு என்று கருதக்கூடிய மறுமையைக் கண்டறிய பல்வேறு வழிமுறைகளை நாம் கடைப்பிடிக்கின்றோம். இம்மை மறுமைகளை தெள்ளத்தெளிவாக விளக்கிக்காட்டுகிறது ஆன்மீகம். ஆன்மீகத்தை உணர்ந்து தெளிவடைவதற்கு முக்கியக் கருவியாக இருப்பது மனமே. அதனை உணர்ந்து, கடந்து, மெய்யுணர்வில் திளைத்தல் என்ற அனுபவங்கள் கிட்டுவதற்கு உண்டான பயிற்சியை நாம் அடைய வேண்டும். பல்வேறு மனப்போராட்டங்களை மனமானது பற்றுதல் இல்லாத விழிப்புணர்வில் கடந்து வந்தால் மட்டுமே மாசறுகாட்சி அதாவது மெய்யுணர்வை பெற முடியும். இந்த பயிற்சியினை பக்தி இலக்கியங்கள் நமக்கு எவ்வாறு உளவியல் ரீதியான அறிவியலை புகட்டுகின்றது என்ற அடிப்படையல் ஆய்வுக்கட்டுரை அமைந்துள்ளது.*

## முன்னுரை

இன்றைய வாழ்வியலும், வாழ்வியல் சார்ந்த கட்டமைப்புகளும் மக்களுக்கு மன அழுத்தம் தரக்கூடிய வகையிலேதான் அமைந்துள்ளது. இதனை யாராலும் மறுக்க இயலாது. மனச்சோர்வை உண்டாக்குகின்ற நம்முடைய இந்த வாழ்வியலுக்கு அப்பால் உண்மை அறிவைப் புரிந்து கொள்ள முயற்சி செய்கிறோம். மெய்யறிவு உணர்ந்தவர்களால் மட்டுமே மனச்சலனம் இல்லாமல் நிறைவான வாழ்க்கையை வாழ முடியும். மெய்யறிவு என்றக் கட்டமைப்பை ஒரு வரையறையில் அடக்கிவிட இயலாது. வாழ்க்கைக்கான தத்துவங்களை சங்க காலம் தொட்டு சமகாலம் வரை அறிஞர்கள், ஞானிகள், அடியார்கள், சித்தர்கள், வாழ்வியல் ஆராய்ச்சியாளர்கள், ஆன்மீக நெறியாளர்கள் போன்றோர் பலர் விளக்கிச் செல்கின்றனர். அத்துணைத் தத்துவங்களின் விளைபயன் மனிதர்களின் மன அடிப்படையிலேயே அமைகிறது. ஆயிரமாயிரம் நாட்களின் விளைபொருளாக நமது மனம் வடிவமைக்கப்பட்டுள்ளது.

## உளவியல் ஆன்மீகம்

ஒரு காந்தத்தை எத்தனைச் சிறு துண்டுகளாக துண்டாக்கினாலும் வடதுருவம், தென்துருவம் என இரண்டு துருவங்களாகவே காந்த ஆற்றல் செயல்படுவதைப் போன்றே நம் வாழ்வில் இன்பம் துன்பம் என்பது பின்னிப்பிணைந்தது. அவ்வகையில் முரண்பட்ட வாழ்க்கை, ஒழுக்கக் குழைவு மனக்குழப்பம் நிலவும் சூழலிலும் இதனை தீர்வு செய்யும் முயற்சிகளாக சமய சடங்குகள், திருவிழாக்கள் ஆன்மீகம் சார்ந்தச் சொற்பொழிவுகள், சீர்திருத்தக் கூட்டம் போன்ற நேர்மறை சார்ந்த நிகழ்வுகளும் நிகழ்ந்து கொண்டுதான் இருக்கின்றது. அறத்திற்கு புறம்பான நடைமுறைகளும், ஒழுக்க சீர்குலைவும் மிகுந்துள்ள உலகில் ஒரு தனிமனிதன் அமைதியாக வாழ்வது என்பது சவால் நிறைந்ததாகவே உள்ளது. இத்தகைய சூழலில் மனம் சார்ந்த ஒரு புரிதல் அனைவருக்கும் அவசியமாகின்றது. மனம் அளப்பறிய ஆற்றலையும் உருவாக்கும், அழிவுக்குரிய நிலையில் வீழ்த்தவும் செய்யும். மனத்தை செம்மையாக்கும் வழிமுறைகளாகவே ஆன்மீக கதைகளும், இறைநம்பிக்கைகளும்,

சமய கட்டுப்பாடுகளும் தொடர்ச்சியாக பின்பற்றுவதற்குக் காரணமாகும். மனம் செம்மையாகாமல். வெறுமனே புறவழிபாடுக் காரணமாக சமூக மாற்றத்தை காண இயலாது.

**மனத்துக்கண் மாசிலன் ஆதல் அனைத்தறன்**
**ஆலகு நீர பிற (குறள் 34)**[1]

என்கிறார்வள்ளுவர். இதிலிருந்து மனத்தில் களங்கம் இல்லாமையே சிறந்த அறம் என்பதை உணரலாம். ''மனமது செம்மையானால் மந்திரம் செபிக்க வேண்டாம்'' என்று அகத்தியர் வாய்மொழியும் நமக்கு உணர்த்துகிறது.[2] ''உணர்வுள்ளதும் உணர்வற்றதுமாகவுள்ள இந்த மனத்தின் மொத்தச் செயல்முறைகளை நாம் காண்போமாயின் மெய்யாகவே இதனைக் கண்டுணர்ந்து புரிந்து கொள்வோமாயின் அப்போது எந்த முயற்சியுமின்றி நமது மனம் அளவிடற்கரிய அமைதியில் ஆழ்வதைக் காணலாம்'' என்று ஜே.கிருஷ்ணமூர்த்தி[3] கூறுகிறார்.இறைவன் அறிவு வடிவமாகவும், உணர்வுமயமாகவும் விளங்குகின்றான் என்றே பக்தி இலக்கியங்கள் உணர்த்துகின்றன.

**'மெய்ஞ்ஞானம் ஆகி மிளிர்கின்ற மெய்ச்சுடரே'.(1.38)**[4]

**'அஞ்ஞானம் தன்னை அகல்விளக்கும் நல்லறிவே'.(1.40)**[5]

**'ஆதி போற்றி அறிவே போற்றி.' (4.107)**[6]

**'சீரொளிசேர் ஆனா அறிவாய்.' (8.16)**[7]

திருவாசகத்தில் இவ்வடிகள் இறைவனது அறிவுத்தன்மையைத் தெளிவுபடுத்துகிறது.

**'உடையாய் போற்றி உணர்வே போற்றி'. (4.110)**[8]

**'என் உணர்வது வாய ஒருத்தன்'. (18.4)**[9]

**'உரையுணர்வு இறந்து நின்று உணர்வுதோர் உணர்வே.' (22.3)**[10]

**'ஓவாது உள்ளம் கலந்து உணர்வாய.' (45.1)**[11]

**'உணர்வு தந்து ஒளியாக்கி.' (41.8)**[12]

திருவாசகத்தில் இவ்வடிகள் இறைவன் உணர்வாக அமைகிறான் என்பதை தெளிவுபடுத்துகிறது. மெய்யறிவும், மெய்யுணர்வும் ஆன்மீகத்தின் அடையாளம். நம்முடைய மனமானது தனக்குள் ஏற்படுகின்ற அனுபவத்தின் அடிப்படையிலேயே வலுப்பெறுகிறது. இறைவனை உணர்வுமயமாக விளக்கியதன் நோக்கம், அத்தகைய இறை உணர்வுடையவர்களாக, தீமைகளை கடந்தும், கலைந்தும் தெளிவடையும் பொருட்டான உளவியலை ஆன்மீகம் கற்றுத்தருகிறது. 'மனத்தின் செயல்பாடு காரண காரியத் தொடர்புடன் ஒன்றினை ஒன்று சார்ந்து விளங்கும்' என்று மணிமேகலை விளக்குகின்றது.

**''ஈர்ஆறு பொருளின் ஈந்தநெறி உடைத்தாய்**
**சார்பின் தோன்றி தத்தமில் மீட்டும்**
**இலக்கு அணத் தொடர் தலின்**
**மண்டில வகையாய் அறியக்காட்டி''**
**''எதிர்முறை ஒப்ப மீட்சியும் ஆகி**
**ஈங்கு இதுஇல்லா வழிஇல் லாகி**
**ஈங்குஇது உள்ள வழி உண்டு ஆகலின்**
**தக்க சார்பின் தொற்றம் எனச்**
**செலற்றகப் பட்டும் இலக்கணத்**
**தொடர்பாகப் கருதப்பட்டும்''**

**(மணிமேகலை–30.15)**[13]

''இப்படி எதிர்த்தோன்றும் முறைமையை நீக்க பேதமை முதலியவற்றினின்று மீட்சி உண்டாகும். இவ்வாறு காரணம் இல்லாமையின் காரியமும் இல்லையாம். இவ்வாறே காரணம் உள்ள வழி காரியமும் உண்டாகும். ஆதலினாலே காரணங்களை இல்லையாக்கலும் உளவாக்கலும் ஆகிய தகுதிகளுக்கு ஏற்பவே காரியத் தோற்றம் இலதாகவும் உளதாகவும் இரண்டு வகையாக அமையும்''[14] என்று மணிமேகலை தெளிவாக விளக்கும்.

**''ஐயாறும் ஆறும் அகன்று வெளிவெளியில்**
**மையிருளில் நின்ற மனம் மாள்வது இனிஎக்காலம்''**

**(மெய்ஞானப்புலம்பல் - 223)**[15]

என்று பத்திரகிரியார் கூறுகிறார்.

''நம்மில்ஆன்ம தத்துவங்கள் 24, வித்திய தத்துவங்கள் 7, சிவதத்துவங்கள் 5

ஆக 36 தத்துவங்கள் என்பர் இத்தத்துவ அறிவை அறிவிக்க அறியும் அறிவு பெற்ற ஆன்மா அனைத்தையும் தனித்தனியே கடந்து நிற்கும்'' என்று சித்தர் பாடல்கள்[16] விளக்குகின்றன. ''உள்ளம் பெருங்கோயில் ஊனுடம் பாலயம்'' என்று திருமூலரும்[17] நமது உடம்பே ஆலயம் நமது உள்ளம் கடவுள் இருக்கும் இடம் என்று மனத்துக்கே முக்கியத்துவம் கொடுக்கிறார்.

**"ஞானமான பள்ளியில் நன்மையாய் வணங்கினால்**
**காயமான பள்ளியில் காணலா மிறையையே" (சிவவாக்கியம் - 186)**[18]

என்று மனக்கோயில் தரிசனம் செய்யச் சொல்கிறார் சிவவாக்கியர். ''பண்ணாத தீமைகள் செய்து, பகராத வன்மொழிகள் பகர்ந்து, நண்ணாத தீயினம் நண்ணி, நடவாத நடத்தைகள் நடந்து, உள்ளொன்று வைத்துப் புறமொன்றுப் பேசித் திரிவார், ஆலயம் சென்று அபிஷேகம் செய்தால் பாவம் போகும் என்று எண்ணி வந்தனர். இத்தகையோரைப் பார்த்துப் பாடுவதே இவ்வறிவுரைப் பாடல்கள், 'பறிக்கின்ற மலரோடு நீயேயிருத்தி அப்பணிமலர் எடுக்க மனமும் நண்ணினேன்' எனத் தாயுமானவர் பாடுவது போலவும், 'வாடிய பயிரைக் கண்ட போதெல்லாம் வாடினேன்' என இராமலிங்க அடிகளார் பாடியது போலவும் மனம் செம்மைப்படுவதே உயரிய வழிபாடு ஆகும்''[19] என்பதான சித்தர்களின் இறை கோட்பாடுகளும் மனம் பற்றியதாகவே அமைந்துள்ளது.

## இறையியல் மனம்

ஆயிரமாயிர வாழ்நாட்களின் எண்ணப் பதிவுகள் ஒரு மனிதனின் செயல்பாடுகளை நிர்ணயிக்கின்றன. தாம் எதிர்கொள்ளும் பிரச்சனைகளில் உண்டாகும் தெளிவின் வழி சேர்த்துக்கொள்ளும் பண்பு நலன்களின் அடிப்படையில் வாழ்க்கை பயனுடையதாகவும், உயர்வானதாகவும் நிலைநிறுத்திக் கொள்கின்றோம். ''நம்முடைய மனம் ஒரு போதும் வெற்றிடமாக இருப்பதில்லை. எப்போதும் நிரம்பிய நிலையிலேயே உள்ளது. அச்சுறுத்துகின்ற எண்ணங்கள், நினைவுகள், அவநம்பிக்கை, போன்றவற்றின் ஒட்டு மொத்த ஓசையிலிருந்து நமது செயல் வெளிப்படுகிறது. ஆகவே தான் நமது செயல்துயரத்திற்கு இட்டுச் செல்கின்ற முரண்பாடாக விளங்குகிறது'' என்ற ஜே.கிருஷ்ணமூர்த்தியின்[20] கூற்றுக்கிணங்க ஒவ்வொரு மனிதனுக்கும் நடப்பியல் வாழ்வில் சவால்களை சந்திக்கின்றனர். கூர்ந்த கவனிப்பு, அமைதி, அன்பு மனத்தில் தோன்றியவுடன் ஒரு சலனமற்ற மெய்யுணர்வினை அனுபவிக்க ஆரம்பிக்கின்றது. அவ்வேளையில் மனம் வெற்றிடமாகவே இருக்கும். எப்போதும் அது வாய்மையின் வயமாகவே இருக்கும். இத்தகு நிலைதான் இறையியல் நோக்கிய மனமாகும். இது தான் உலகின் துயரங்களுக்கெல்லாம் காரணமாகின்ற சிக்கல்களைத் தீர்க்க வல்லது. "உணர்ச்சியிலிருந்து அறிவிற்கும், அறிவிலிருந்து உணர்விற்கும், மேம்பட்டு அந்த உணர்வுலிருந்து அன்பிற்கு மேம்பட்டு அன்பிலிருந்து அருளிற்கும், அருளிலிருந்து பேரண்ட ஆற்றலிற்குமான வளர்ச்சியினைத் தருவது சிவயோகம்" அன்னை சகுந்தலா[21] அவர்கள் வரிகளுக்கிணங்க இறை சிந்தனையில் இருக்கும் அடியார் பெருமக்களும் அருளாளர்களும் இறைவனிடம் பக்தி செய்யும்படியாக வலியுறுத்துகின்றனர். இந்த பக்தி முதுமையில் பற்றிக்கொள்வதை விட இளமையில்தான் பற்றிக்கொள்ள வேண்டும். இறையியல் சிந்தனையானது பக்தியையும், வாழ்க்கை அனுபவத்தையும், இயற்கை அறிவையும் நமக்கு உணர்த்தும். இந்த பிரபஞ்ச இயக்கத்தின் உண்மை அறிவு அறிந்துகொள்ளும் பக்குவம் வாய்க்கப்பெறும். பக்தியின் மூலம் மனம் தீய எண்ணகளிலிருந்து விடுபடுவதோடு, மனதை ஒருநிலைப்படுத்தும் தன்மையும் கிடைக்கப்பெறும்.

ஆகையாலே இறைவனை பக்தியோகம், கர்மயோகம், ஞானயோகம் போன்ற யோக மார்க்கத்தில் அடையலாம் என்று சாத்திரநூல்கள்பகரும். இத்தகைய யோகம் மனத்தை வலுப்படுத்துகின்ற இறையியல் நோக்கி ஆற்றுப்படுத்தும்.

"தீதும் நன்றும் பிறர்தர வாரா" என்ற கணியன் பூங்குன்றனாரின் புறநாநூற்று அடியும்

"தாமே தமக்கு சுற்றமும் தாமே தமக்கு விதி வகையும்" என்ற மாணிக்க வாசகரின் திருவாசக அடியும் ஒரு மனிதனுக்கு வாழ்வும் வீழ்ச்சியும் அவனுடைய முயற்சியில் மட்டுமே அமைகிறது என்று உணர்த்துகிறது. ஆக மனமானது அறம் சார்ந்ததாகவும், நல்லொழுக்கம் சார்ந்ததாகவும், நேர்மறை எண்ணங்கள் சார்ந்ததாகவும், அமைவதுதான் இறையியல் சிந்தனைக்கு வழிவகுக்கும். மனிதனை மிருகம், மனிதன், தெய்வம் என்ற மூன்று நிலைகளில் பிரிக்கலாம் விலங்கு நிலையிலிருந்து பகுத்தறிவு நிலைக்கு மனிதன் உயர வேண்டும். பிறர் பாடறிந்து இரங்கும் மனம் கொண்டவனாக விளங்க வேண்டும்.

### மெய்மை, தன்மை, பொருண்மை

இறைவனையும் இறைவன் தன்மைகளையும் வர்ணிக்கும் அடியார்கள் அவனுடைய மெய்மையைப் புகழ்ந்து, தன்மையை வியந்து, ஒரு பொருண்மையில் அடக்கவியலாத, ஏகன் அனேகனாக அனைத்தையும் கடந்தவனாக விவிக்கின்றனர். மாணிக்கவாசகர் திருவாசகத்தில் குறிப்பிடுகின்ற இறைவனின் தன்மை ஐந்து பூதங்களிலும் வேறுபடுத்திக் காட்டுகிறார்.

**பாரிடை ஐந்தாய்ப் பரந்தாய் போற்றி!**
**நீரிடை நான்காய் நிகழ்ந்தாய் போற்றி!**
**தீயிடை மூன்றாய்த் திகழ்ந்தாய் போற்றி!**
**வளியிடை இரண்டாய் மகிழ்ந்தாய் போற்றி!**
**வெளியிடை ஒன்றாய் விளைந்தாய் போற்றி!**

**(திருவாசகம். 4-133)[22]**

"சுவை ஒளி, ஊறு, ஓசை, நாற்றம் என்ற ஐந்தும் ஐம்பூதங்களின் தன்மைகளாக அமைந்துள்ளது. நிலத்தின்கண் இவ்வைந்து தன்மைகளும் அமைந்துள்ளது. இதனை "பாரிடை ஐந்தாய்ப் பரந்தாய்" என்றும், நீரில் சுவை, ஒளி, ஊறு, ஓசை இந்நான்கு தன்மைகளும் உள்ளதால் "நீரிடை நான்காய் நிகழ்ந்தாய்" என்றும், ஒளி ஊறு, ஓசை மூன்றும் தீயில் உள்ளதால் "தீயிடை மூன்றாய் திகழ்ந்தாய்" என்றும் காற்றில் ஓசை ஊறு என்னும் இரண்டும் உள்ளதால் "வளியிடை இரண்டாய் மகிழ்ந்தாய்" என்றும் ஆகாயத்தில் ஓசை வழவாய் உள்ளான் என்பதால் "வெளியிடை ஒன்றாய் விளைந்தாய்" என்றும் பொருள்தோன்றும் அதனதன் தன்மைகளுக்குத் தகுந்தவாறு இறைவன் ஐம்பூதங்களில் கலந்துள்ளான்"[23] என்று மாணிக்கவாசகரின் பாடல்கள் இறைவனின் தன்மையை விளக்குகிறார். அவ்வகையில் இவ்விளக்கத்தில் தன்மை என்று குறிப்பிடுவதை கவனிக்க வேண்டும். உணவு சமைத்தலின் போது சாதம், கூட்டு, பொரியல், சாம்பார், ரசம், மோர், பாயாசம் என்று பலவகையான சுவையான உணவுகளை சமைக்கின்றோம் வெறும் சாதத்தோடு கலந்து உண்ணும் வெவ்வேறான கூட்டு குழம்புகளின் சுவை அடிப்படையிலே விருந்தின் தன்மை சிறப்பாக அமையும். அதுபோன்று தான் ஒவ்வொரு மனிதனின் மனம் எந்தன்மையைச் சார்ந்து இருக்கின்றதோ, அத்தன்மையின் அடிப்படையிலேயே அவனுடைய உயர்வும், மதிப்பும் அமைகிறது. ஆக உண்மையான மெய்யறிவையும், இறைவனின் தன்மையையும், உலக இயக்கத்தின் பொருண்மையையும் உணர்ந்த அருளாளர்கள் பேரண்டத்தின் அளப்பரிய ஆற்றலையும், அறிவியலையும் அறிந்திருந்தனர். விஞ்ஞானத்தையும், மெஞ்ஞானத்தையும் உள்ளது உள்ளபடி கணிக்கக்கூடிய ஆற்றல் அவர்களுடைய மன ஆற்றலிலிருந்தே எழுந்துள்ளது என்பது தெளிவடைகின்றது. தன்னுள் அண்டத்தையும், அண்டத்தில் தன்னையும் உணர்வுக்குள் உணர்வாக

இணைந்திருந்தனர். அந்த அண்டத்தின் ஆற்றலை இறை வடிவமாகக் கண்டனர்.

## முடிவுரை

ஆன்மீக அருளாளர்களும் நெறியாளர்களும், நாம் உணர்ந்து கொள்ள முடியாத பெருஞ்சாதனைகளை செய்துள்ளனர் சாதனை புரிந்த ஆன்மீக அருளாளர்கள் பின்பற்றும் நெறிகளும் ஒரே விதமானவையும் அல்ல காலம் தோறும் மாறுபட்ட மார்க்கங்களை அவர்கள் கையாண்டிருக்கின்றனர். வான் கலந்த மாணிக்கவாசகர், சிவலிங்கமாய் மாறிய பட்டினத்தார், ரோஜா மலர்களாய் மாறிய கபீர்தாசர், ஒளி வடிவாய் ரமணர், இராமலிங்க சுவாமிகள், யோக உடலாக பரமஹம்ஸயோகனந்தர், இராமானுசர் போன்ற உலகளாவிய நிலையில் பலரை நினைவுக் கூறலாம். இன்றைய தலைமுறையினரும் ஆன்மீகத்தின் ஆதி பொருளையுணர்ந்து ஆத்மார்த்தமான, ஆனந்தமயமான வாழ்வை வாழ நாம் முதலில் வெற்றிக் கொள்ள வேண்டியது நம்முடைய மனமே.

## அடிகுறிப்பு

1. திருக்குறள் குறள்-34.
2. ‘சித்தர் பாடல்களில் நடப்பியல்” Dr. இரா. கலாவதி,ப.எண்.132டிசம்பர் 2008, காவ்யா வெளியீடு, சென்னை.
3. ‘ஜே.கிருஷ்ணமூர்த்தி என்ற மாமனிதர்” க.சி.அகமுடைநம்பி, ப.எண்.104 ஜீன் 2004, சபரி பிராஸஸ், சென்னை –14.
4. ‘திருவாசகத்தில் முக்தி’ Dr.தி.நா. பிரணதார்த்தி ஹரன்ப. எண்.38 ஜனவரி –2013, சர்மி பிரிண்ட்ஸ் மதுரை.
5. ‘மணிமேகலை’கொ.மா.கோதண்டம் ப.எண்.407, 408 டிசம்பர் 2007 கங்கை புத்தகநிலையம், சென்னை.
6. மெய்ஞானப்புலம்பல் பா.எண்- 223.
7. ‘சித்தர்கள் கண்ட இறைமை’ சி.எஸ். முருகேசன், ப.எண்.49 2012,எம். கே. கிராபிக்ஸ் சென்னை.
8. திருமந்திரம் பா.எண் 1823.
9. சிவவாக்கியம் பா.எண்-186.
10. ‘சித்தர்கள் கண்ட இறைமை’ சி.எஸ். முருகேசன், ப.எண்.30 2012,எம். கே. கிராபிக்ஸ் சென்னை.
11. ‘ஜே.கிருஷ்ணமூர்த்தி என்ற மாமனிதர்” க.சி.அகமுடைநம்பி, ப.எண்.115 ஜீன் 2004, சபரி பிராஸஸ், சென்னை –14.
12. ‘திருவாசகம் ஓர் யோக விளக்கம்” தவத்திரு அன்னை சகுந்தலா,ப.எண்.66 டிசம்பர்2007,ஜெயம் பிரிண்டர்ஸ் சிவகாசி.
13. மேலது ப.எண்.27.

# நீதிக்கட்சி

**முனைவர் ச. அமுதவல்லி**
தமிழ்த்துறை தலைவர் (பொறுப்பு)
அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி, வேடசந்தூர்

## முன்னுரை

பழமையில் ஊறிப்போயிருந்த தமிழ் சமூகத்தை மீட்டுருவாக்கம் செய்யப்பட வேண்டிய ஒரு காலச்சூழல் ஏற்பட்டது. இச்சூழலின் மறுஉருவாக நீதிக்கட்சி தோற்றம் பெற்றது. திராவிட மறுமலர்ச்சியின் பிரதிபலிப்பாக முளைத்ததே நீதிக்கட்சியாகும்.

## நீதிக்கட்சி தோன்ற காரணம்

சென்னை வேப்பேரி எத்திராஜீலு முதலியார் இல்லத்தில் 1916- ஆம் ஆண்டு நவம்பர் திங்கள் 20-ஆம் நாள் பார்ப்பனரல்லாதாரின் கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டமே நீதிக்கட்சி தோன்ற முக்கிய காரணமாக விளங்கியது. இக்கூட்டத்தில் பலர் கலந்து கொண்டனர். அவர்களில் குறிப்பிடத்தக்கவர்களாக திவான்பகதூர் பி.டி, தியாகராயச் செட்டியார், டாக்டர்.டி.எம்.நாயர், திவான்பகதூர் முதலியார், திவான்பகதூர், பி.எம்.சிவஞான முதலியார், டி.வரதராஜுலு நாயுடு, மதுரை வக்கீல் எஸ்.கே.துளசிராம் முதலானோர் கலந்து பல முக்கிய முடிவுகளை எடுத்தனர். பார்ப்பனரல்லாதார் முதலில் தங்களுக்குத் தாங்களே உதவி புரிந்து கொள்ள முன்வர வேண்டும். பரந்த நிரந்தர அடிப்படையில் அவர்கள் கல்வி, சமுதாயம் அரசியல் மற்றும் பொருளாதாரம் ஆகிய துறைகளில் முன்னேறி வழிவகை செய்தனர். எந்த ஒரு சமூகமும் மற்ற சமூகத்திற்கு கீழ்ப்பட்ட சமூகமாக நினைக்கப்படவும் நடத்தப்படவும் கூடாது. ஒவ்வொரு சமூகமும் சுயமதிப்புடனும் கௌரவத்துடனும் விளங்கி நாட்டின் முன்னேற்றத்திற்கும் நலனுக்கும் ஒன்றுபட்டு செயலாற்ற வேண்டும் என்று கூட்டம் முடிவு செய்தது. இக்கொள்கைகளைக் கண்டதும், “காங்கிரசும், அன்னிபெசண்டின் ஹோம்ரூல் இயக்கமும் நீதிக்கட்சியை கடுமையாக தாக்கின. ஆனால் இத்தாக்குதலுக்கு நீதிக்கட்சி சிறிதும் கலங்காமல் பேச்சுக்குப் பேச்சும் எழுத்துக்கு எழுத்துமாக பதிலடி கொடுத்தது”.

வர்ணாசிரம தருமத்தின் கொடும் பிடியில் அகப்பட்டிருந்த தமிழக மக்களை இவ்வியக்கமானது வெளிக்கொணர்ந்தது. பரம்பரை பரம்பரையாக சமயத்தை வைத்து ஆளும் வர்க்கத்தின் நிழலில் வளர்ந்த பிராமணியம் பிரிட்டீஸ் ஆட்சியின் போது திணற வேண்டிய நிலைக்கு ஆளானது.

சிறுபான்மையினர் தங்கள் உரிமைகளை இழப்பதையும், இழிவாக கருதப்படுவதையும் போக்க வேண்டுமானால், திராவிடர்களுக்கு ஒரு அரசியல் கட்சி தேவை என்ற கருத்தாக்கம் உருவானது. அதன் அடிப்படையில் 5 முக்கிய கோட்பாடுகளை மையமாகக் கொண்டு 1916ல் இக்கட்சி உருவாக்கம் பெற்றது.

இக்கட்சி இதழ்கள் மூலமாகவும் தங்கள் கொள்கைகளை பரப்பியது மற்றும் இனத்தாரின் பொய்பிரச்சாரங்களை முறியடிப்பதற்காக நான்கு மொழிகளை உள்ளடக்கிய திராவிட மாகாணத்தில் இரண்டு மொழிகளுக்கு மட்டும் முக்கியத்துவம் அளிக்கப்பட்டது. இதனை முறியடிக்க பொது மொழியாகிய ஆங்கிலத்தில் ஜஸ்டீஸ் என்ற இதழும் தெலுங்கில் ஆந்திர பிரகாசிகள் என்னும் இதழும் தமிழில் திராவிடமும் தொடங்கப்பட்டன. 1917-ஆம் ஆண்டு முதல் சமூக எழுச்சி உரிமை மாநாடு

எழுந்தது. இதற்குப் பின்னர் நீதிக்கட்சி கிராமங்கள் மற்றும் நகரங்களில் பரவத் தொடங்கியது. 1918ல் மான்போர்டு அறிக்கையின் மூலம் இந்திய அரசியல் அமைப்பு சீர்திருத்த கூட்டறிக்கையின்படி இரட்டை ஆட்சித் தத்துவம் இந்திய அரசியல் அமைப்பில் அறிமுகமானது. தமிழக அரசியலில் காங்கிரஸ் கட்சி சுதந்திர விடுதலை கேட்டுப் போராடியது, நீதிக்கட்சி சமூக விடுதலை கேட்டுப் போராடியது. 1920-ல் நீதிக்கட்சி அரசியல் கட்சியாக மாறியது துலாக்கோலை தனது சின்னமாகக் கொண்டது. தேர்தல் நடத்த 98 தொகுதிகளில் 63 பெரும்பான்மை தொகுதிகளை கைப்பற்றி வெற்றி பெற்றது. 1920-ல் டிசம்பர் 17-ல் சுப்பராயலு என்பவர் முதல்வராக பதவியேற்றார். நீதிக்கட்சி அரசியலில் சமத்துவத்தை நிறுவுவதற்காக வகுப்புவாத உரிமை ஆணையை செயல்படுத்தியது. பஞ்சமர், பறையர் என்று உழைக்கும் மக்களை அழைக்கும் நிலைமாறி 1922-ல் ஆதிதிராவிடர் எனப் பெயர் மாற்ற உத்தரவை அரசு பிறப்பித்தது. பொப்பிலி ராஜா முதல்வராக அமர்த்தப்பட்ட போது இனாம்தாரி சட்டம், கூட்டுறவுச் சட்டம், தேவதாசி ஒழிப்புச் சட்டம் போன்ற சட்டங்கள் இயற்றப்பட்டன. 1916-ல் தொடங்கப்பட்ட நீதிக்கட்சி 1937- ஆம் ஆண்டோடு முடிவுக்கு வந்தது.

நீதிக்கட்சியின் உயர்வுக்காக அரும்பாடுபட்ட தலைவர்கள் பலர். அதில் குறிப்பிடத்தக்கவர் டாக்டர்.சி.நடேசனார். திராவிட என்ற சொல்லை முதன் முதலில் இவரே பயன்படுத்தினார். 1912-ல் சென்னை திராவிட சங்கம் என்ற அமைப்பு இவரால் தொடங்கப்பட்டது திராவிடர் இல்லம் என்னும் மாணவர் விடுதி இவரால் நடத்தப்பட்டது. இருமுறை சட்டமன்ற உறுப்பினராக இருந்தார். டாக்டர்.சி.நடேசனார் பி.டி.தியாகராயர், டி.எம்.நாயர் போன்றோர் திராவிட இயக்கத்தில் குறிப்பிடத்தக்கவர்கள் ஆவர்.

சென்னை நகராட்சியின் முதல் தலைவராக தியாகராய செட்டியார் தேர்வு செய்யப்பட்டார். இவருக்கு அடுத்து 9-ஆம் ஆண்டு ராவ்பகதூர் பட்டமும் பிறகு 18-ஆம் ஆண்டு திவான் பகதூர் பட்டமும் 20-ஆம் ஆண்டு சர்பட்டமும் வழங்கப்பட்டது. நாயர் அவர்கள் சட்டமன்ற உறுப்பினராக இருந்தபொழுது மருத்துவ தொழிலை ஒழுங்குபடுத்த சென்னை மெடிக்கல் ரிஜிஸ்டேசன் சட்டத்தை சட்டமன்றத்தில் நிறைவேற்ற பெரிதும் பாடுபட்டார். நாயர் ஜஸ்டீஸ் என்ற ஆங்கில நாளேட்டில் பொறுப்பாசிரியராக இருந்தார்.

பனகல் அரசர் சென்னை மாநிலத்தின் முதல்வராக மூன்று ஆண்டுகள் செயல்பட்டார். பல்கலைக் கழகச் சட்டம் உருவாக இவர் மூல காரணமாக விளங்கினார். அண்ணாமலை பல்கலைக் கழகம் உருவாக இவர் காரணமாக இருந்தார். கோயில்களின் சொத்தை பாதுகாக்கும் பொருட்டு அறநிலைய பாதுகாப்புச் சட்டத்தை உருவாக்கினார். இவர் தாழ்த்தப்பட்ட மக்களின் பாதுகாவலர் எனப் போற்றப்பட்டார்.

ஏ.இராமசாமி முதலியார் சிறந்த எழுத்தாளராகவும், பேச்சாளராகவும் விளங்கினார். சட்டமன்ற மேலவை உறுப்பினராக 3 ஆண்டுகள் செயலாற்றினார். இவர் திருவாங்கூர் கேரளப் பல்கலைக் கழகங்களில் துணைவேந்தராக பணியாற்றினார். மைசூர் திவானாகவும் செயலாற்றினார்.

குத்தூசி குமாரசாமி அவர்கள் பெரியாரின் துணிச்சலான செயல்பாடுகளால் கவரப்பட்டு நீதிக்கட்சியில் சேர்ந்தார். விடுதலை பத்திரிக்கையில் குத்தூசி என்ற பெயரில் பல கட்டுரைகளை எழுதினார். இக்கட்டுரைகளை அவருக்கு பெரும் புகழினைத் தேடிக் கொடுத்தன.

சமத்துவம், சகோதரத்துவம் போன்றவை நீதிக்கட்சியின் அடிநாதமாக இருந்தது. இவற்றை நடைமுறைப்படுத்த பல போராட்டங்களை நடத்தினர். இந்தி எதிர்ப்பு

அறப்போராட்டம் நீதிக்கட்சி தலைவர்களால் நடத்தப்பட்டது. இந்திமொழி கட்டாயமாக்கப்பட்டதை இவர்கள் தடைசெய்தனர். வகுப்புவாரி இட ஒதுக்கீட்டிற்காகத் தொடர்ந்து போராடி இவர்கள் வெற்றியும் பெற்றனர். கோயில் குளங்களில் தரப்படும் தண்ணீருக்கு வரி செலுத்த வேண்டுமென விதித்தனர்.

பள்ளி விடுதிகளில் தங்கிப் பயிலும் மாணவர்கள் அனைவரும் சாதி வேற்றுமையின்றி ஒன்றாக அமர்ந்து உண்ணும் வழக்கத்தைப் போராடிப் பெற்றனர். திருவையாறில் இயங்கி வந்த சமஸ்கிருத கல்லூரியை போராடி திருவையாறு அரசர் கல்லூரி எனப் பெயர் மாற்றம் செய்தனர். சமூக நீதிக்காகப் பல போராட்டங்களை நிகழ்த்தினர்.

1924-ல் தேவதாசி ஒழிப்புச் சட்டத்தை உருவாக்கினர். மீட்கப்பட்ட தேவதாசிகளை பெண்கள் விடுதிகளில் சேர்க்க அனுமதி மறுக்கப்பட்ட பொழுது தனி இல்லம் தொடங்கி அவர்களுக்கு வாழ்வு கொடுத்தனர். பெண்கள் முன்னேற்றத்திற்காக போராடி பெண்களுக்கான சொத்துரிமைச் சட்டம் இயற்றப் பாடுபட்டனர். கலப்பு மணத்தைப் போற்றினர்.

இந்து அறநிலைச் சட்டம் உருவாக்கப்பட்டு கோயிலின் வரவு செலவுகள் முறைப்படுத்தப்பட்டன. தொழிலாளர்களின் நலனுக்காகவும் இக்கட்சி போராடியது.

## முடிவுரை

இங்ஙனம் 21 ஆண்டுகள் மட்டுமே நடைமுறையில் இருந்தாலும் தமிழக அரசியல் அமைப்பிலும் சமூக நீதித்துறையிலும் குறிப்பிடத்தக்க சிலமாற்றங்கள் உருவாவதற்கு நீதிக்கட்சியும் அதன் தலைவர்களும் அரும்பாடுபட்டனர் என்பதை வரலாறு என்றும் நினைவுகூறக் கடமைப்பட்டுள்ளது.

# சங்க இலக்கியத்தில் தொழில்நுட்ப அறிவியல்

S. ஜெயந்தி & S. ஜெனிபா
தமிழ் இலக்கியம் இரண்டாம் ஆண்டு
தி.தெ.மா.நா.ச.கல்லூரி, தெ.கள்ளிகுளம்

## முன்னுரை

மனிதன் தனது தேவைகளைத் தானே செய்துக் கொள்ள தொடங்கிய போது அவனுடைய அறிவியல் அறிவு செயல்படத் தொடங்கிவிட்டது. உலகின் தொன்மையான இனமான தமிழ்மக்களின் அறிவியல் அறிவுக்கு தமிழ் மொழியில் உள்ள பண்டைய நுல்கள் சான்றாக விளங்குகிறது. உரகில் அறிவியல் என்ற ஒன்று தோன்றாத காலத்தில் தொழில்நுட்பம் மக்களிடையே பரவலாக இருந்துள்ளது. பண்டையத் தமிழர்களின் வேளாண்மை, அதற்கு பயன்படுத்திய இரும்பு கருவிகள், போர்செய்ய பயன்படுத்திய இரும்பு கருவிகள், கட்டடத் தொழில்நுட்பம் பற்றி அறிந்துக் கொள்ள சங்க இலக்கியம் உதவிபுரிகிறது. அதை சாதாரண மக்களும் அறியும் பொருட்டு இவ்வாய்வு மேற்கொள்ளப்படுகிறது.

## அறிவியல் தொழில்நுட்பம்

முதன்முதலில் அறிவியல் தொழில்நுட்பக் கொள்கையானது 1958 ஆம் ஆண்டு அறிமுகப்படுத்தப்பட்டது. ஆனால் ஆதிகாலத்திலே மனிதனிடம் அறிவியல் தொழில் நுட்பம் தொடர்பான சிந்தனைகள் பெருகிவிட்டன. தொல்காப்பியமும், சங்க இலக்கியங்களும் அறிவியல் தொழில்நுட்பம் தொடர்பான கருத்துக்களை பறைசாற்றுகின்றன.

சிந்துவெளி நாகரிகம், திராவிடர் நாகரிகம் போல் தமிழர் நாகரிகமும் பழமையானது என்பதை அங்கு கிடைத்த வீடுகள், கோட்டைகள், அகன்ற தெருக்கள், பாதாளச் சாக்கடைகள், சுடுமண் செங்கல்கள் போன்ற பொருட்களை வைத்து தமிழர்களின் தொழில்நுட்ப அறிழவியல் புலப்படுகிறது. அகநானூறு, புறநானூறு, பதிற்றுப்பத்து பாடல்களில் சுடு செங்கல் பயன்படுத்தியுள்ளதாக கூறப்படுகிறது.

**இட்டிகை நெடுஞ்சுவர் விட்டம் வீழ்ந்தென**
**மணிப்பிறத் துறந்த மரஞ்சோர் மாடத்து**
**எழுதணி கடவுள் போகலின் புல்லென்று**
**ஒழுகுபலி மறந்த மெழுகாப் புள் திணை**
**(அகம்-167)**

**கொடுமணம் பட்ட நெடுமொழி ஒக்கலொடு**
**பந்தர்ப் பெயரிய பேரிசை மூதூர்க்**
**கடனறி மரபில் வைகல் பாண**
**தென்கடல் முத்தமொடு நன்கலம் பெறுகுவை**
**(பதிற்.74)**

## வேளாண்மை

உழவு அல்லது வேளாண்மை என்று அழைக்கப்படும் இத்தொழில் வீட்டு விலங்குகளில் உற்பத்தியிலும் தாவரங்களின் உற்பத்தியைக் கொண்டு நாகரிகங்களுக்கு வழிவகுத்திட்ட சிறப்பான மானிடவியல் வளர்ச்சி வேளாண்மையாகும். வரலாற்றுக்கு முந்திய காலத்தில் தோற்றம் பெற்ற வேளாண்மையை ஒரு நாட்டின் வளர்ச்சிக்கு இன்றியமையாத காரணமாகும்.

ஒரு நாட்டின் இயற்கை வளங்களை சரியாக பயன்படுத்துவதன் மூலமே தனிமனித வருமானத்தையும், நாட்டின் பொருளாதாரத்தையும் உயர்ந்த நிலைக்கு கொண்டு செல்ல முடியும். அதனால் தான் வேளாண்மையை திருவள்ளுவர்,

**சுழன்றும் ஏர்ப்பின்னது உலகம் அதனால்**
**உழன்றும் உழவே தலை**

**(குறள் 1031)**

பண்டையத் தமிழர்கள் நமது நிலத்தை குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல் என பிரித்து அந்தந்த நிலத்திற்கு ஏற்ற வேளாண்மை செய்துள்ளனர். குறிஞ்சி நிலம், முலா்லை நிலம் ஒருபக்கம் செழிம்து வளர்ந்த போது, மருதநிலமும் உடன் வளரவே வேளாண்மைத் தொழில் முதன்மை பெறலாயிற்று. உணவு தேடிய சமூகம் உணவு உற்பத்தியில் இறங்கியது. விளைப்பொருளுக்கு ஏற்ப நிலங்கள் சங்க காலத்தில் பிரித்து பக்குவப்படுத்தப்பட்டுள்ளன. அங்கு விளைந்த பொருள்களின் தன்மையையும் பற்றி சுட்டிக்காட்டியுள்ளது. ஐவன நெல் அருவி நீரிலும், வெண்ணெல் குளத்து நீரிலும் விளைவிக்கப்பட்ட செய்தி புறநானூற்றிலும், ஐங்குறுநூற்றிலும் குறிப்பிடப்பட்டுள்ளது.

**சிறுகண் பன்றி பெருஞ்சின ஒருத்தல்**
**துறுகல் அடுக்கத்து வில்லோர் மாற்றி**
**ஐவனம் கவரும் குன்ற நாடன்**

**(ஐங்குறுநூறு 267)**

**நறுங்காழ் கொன்று கோட்டின் வித்திய**
**குறுங்கதிர்த் தேரை**

**(மதுரைக்காஞ்சி)**

பண்டையத் தமிழரின் வேளாண்மையில் நாற்றுநடுதல் பற்றிய குறிப்பு பெரும்பாணாற்றுப் படையில் உள்ளது. நெல் அரிபவா் **'வெண்ணெல் அரிநர்'** என நற்றிணையில் அழைக்கப்படுகின்றனர்.

**வினைஞர் முடிநார் ரமுத்திய நெடுநீர்ச்**
**செறுவிா் களைஞா் தந்த**

**(பெரும்பாணாற்றுப்படை 212)**

பண்டையத் தமிழரிடம் வேளாண்மைக்கு ஏற்ற பருவம் குறித்த சிந்தனையும் உள்ளது என்பதையும் அறியமுடிகிறது. விளைப்பொருட்கள் உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் வாணிகம் செய்யும் நிலையும் ஏற்பட்டது. இந்த வணிகத்திற்கு சகடம் (வண்டி) படகு, ஓடம் முதலியவை பயன்படுத்தப்பட்டு உள்ளன.

**திரைகடல் ஓடியும் திரவியம் தேடு**

இந்த சொல வடைகள் கடல்வழி நடந்த வாணிகத்தைச் சுட்டிக்காட்டியுள்ளது. படகுத் தொழில்நுட்பம் சங்ககாலததில் சிறப்பாக செயல்பட்டுள்ளது என்பதை அறியமுடிகிறது. பெரும்பாணாற்றுப்படையிலும், சிலப்பதிகாரத்திலும் சங்ககாலத்திலே கடலில் சென்ற கப்பல் கரைக்கு திரும்ப கலங்கரை விளக்கம் அன்று இருந்ததை அறியமுடிகிறது.

**இலங்கு நீர் வரைப்பின் கலங்கரை விளக்கமும்**
**விலங்கு வலை பரதவர் மீன்தீமில் விளக்கமும்**
**மொழி பெயர்த்தே (சிலம்பு)**

## உலோக தொழில் நுட்பம்

### இரும்பு

மனித குல வரலாற்றின் மிகப்பெரிய கண்டுபிடிப்பு இரும்பு என்பர். சுங்ககாலத்தில் இரும்பு தொழில் மிகச் சிறப்பாக இருந்துள்ளது. ஏனெனில், சங்ககாலமானது வீரயுகக் காலமாதலால் போர்க்கருவிகளும் தேவைப்பட்டன. எனவே இரும்பில் பல விதமான கருவிகள் செய்யப்பட்டன. அதில் வேளாண்மைக்கு பயன்படும் கலப்பை, கொழு, ஏத்தம், தடாரி போன்ற கருவிகளும் உண்டாக்கப்பட்டன. இரும்புத் தொழிலாளி 'கருங்கைக் கொல்லன்' என அழைக்கப்பட்டான். கோல்லனின் ஒருவகைத் தொழில் பற்றிய செய்தி புறநானூற்றுப் பாடலில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளன..

**ஈன்று புரந்தருதல் என்தலைக் கடனே**
**சான்றோன் ஆக்குதல் தந்தைக்குக் கடனே**
**வேல்வடித்துக் கொடுத்தல் கொல்லற்குக் கடனே**
**நன்னடை நல்கல் வேந்தற்குக் கடனே**
**ஒளிறுவாள் அருஞ்சமம் முருக்கிக்**
**களிறுஎறிந்த பெயா்தல் காளைக்குக் கடனே**

**(புறநானூறு 312)**

இரும்பினால் தீயிட்டு வாட்டும் போது பறக்கக்கூடிய தீப்பொறிகளை மின்மினிப்பூச்சி

பறப்பது போல் காட்சியளிக்கிறது என ஒரு புலவன் ஓவியமாக்கியுள்ளான். என்பதை அகநானூறு என்ற நூலின் வாயிலாக அறியமுடிகிறது.

**இரும்பு செய்கொல்லன் வெவ்வுலைத் தெளித்த**
**தேய்மடல் சின்னீர் போல்**
**நோய்மலி நெஞ்சிற்கு ஏமமாஞ் சிறிதே**

பண்டையக் காலத்தில் கத்தரிக்கோல் பயன்படுத்திய செய்தி சீவகசிந்தாமணியில் **'மயிரெறி கத்திரிகை'** என்னும் தொடர் மூலம் அறியமுடிகிறது. சங்க காலாத்தில் வலிய மீனைப்பிடிக்க **'எறியுளி'** என்ற கருவியையும் பயன்படுத்தியுள்ளனர் என்பதை அறியமுடிகிறது. சங்ககாலத்தில் நிலத்தைத் தோண்டிப் புல்லரிசி எடுக்கக் கடப்பாரை என்னும் கருவி பயன்படுத்தப்பட்ட செய்தி பெரும்பாணாற்றுப்படையில் இடம்பெற்றுள்ளது.

**கட்டடத் தொழில் நுட்பம்**

பண்டையக் காலத்தில் இருந்து இன்றுவரை பல்வேறு அமைப்புகளில் பல்வேறு தொழில் நுட்பங்களைப் பயன்படுத்திப் பல கட்டடங்கள் கட்டப்படுகின்றன. குடிசை, குரம்பை, வீடு, மனை முதலிய சொற்கள் கட்டடக் கலைக்கு மிகுந்த சிறப்பைத் தருகின்றது. இந்த வகையான தொழில் **தச்சர், கொல்லார், கொத்தர்** எனப பலாருதம் ஈடுபட்டுள்ளனர்.

**சுடுமண் ஓங்கிய நெடுநகர் வரைப்பு**

பெரும்பாணாற்றுப்படையில் செங்கலால் கட்டப்பட்ட வீடு பற்றிய செய்தி குறிப்பிடப்பட்டுள்ளது. சங்க காலத்திலே **வான்தோய் மாடம், எழுநிலைமாடமத், வேயாமாடம்** என வசதி படைத்த வீடுகளும் அன்றைய காலத்தில் இருக்கின்றன என்பதை பல சங்க கால நூல்கள் குறிப்பிடுகின்றன. சங்க காலத்தில் வாழ்ந்தவர்கள் நெடுநெல்வாடையில் அரண்மனையைக் கட்டிய தொழிலாளி **வைகல் கம்மியன்** என நக்கீரரால் சிறப்பிக்கப்படுகின்றான். தச்சர் 'மரக்கொல் தச்சர்' என அழைக்கப்படுகின்றார்.

மாமல்லபுரம், தஞ்சைப் பெரிய கோவில் தமிழரின் தலைசிறந்த கட்டிடத் தொழில் நுட்பத்தைக் காட்டுகிறது. ஏனெனில் தஞ்சை பெரியகோவில் 1000 ஆண்டுகளுக்கு முன் கட்டப்பட்டாலும் இன்றும் அதன் கட்டிடக் கலை நுட்பமானது சிறப்புடன் விளங்குவது போற்றத்தக்க ஒன்றாக உள்ளது. அதுமட்டும் அன்றி சிற்பத் தொழிலிலும் தமிழர் சிறந்து விளங்கியுள்ளனர். ஒரே கல்லில் நந்தி உருவாக்கம் மிகவும் வியக்க வைக்கிறது. ஆதன் தொடர்ச்சியாக இன்றும் சுவாமிமலை முதலிய பகுதிகளில் உள்ள சிற்பிகளின் சாதனை நமக்கு எடுத்துக்காட்டுகிறது.

**நெசவுத் தொழில்நுட்பம்**

உணவு, உறையுள், அடுத்து உடை இன்று போல அன்றும் பல வகைகளில், பல வண்ணங்களில், பல வடிவங்களில் உடைகள் தயாரிக்கப்பட்டுள்ளன.

**பட்டினும் மயிரினும் பருத்தி நூலினும்**
**கட்டுநுண் வினைஞர் காருகர் இருக்கையும்**
**(சிலம்பு)**

எனவே சங்ககாலத்தில் பல தொழில் நுட்பங்களையும் பற்றி அறிந்து உள்ளனர் என்பதை அறியமுடிகிறது. பருத்தி, பட்டு, தோல், மயிர் என பல மூலப்பொருட்களைப் பயன்படுத்தி ஆடைகளை உருவாக்கி உள்ளனர். நெசவுத் தொழிலில் ஈடுபட்டவர்கள் **காருகர், அறுவையர், கைக்கோளர், சேணியர், சோழியர்** என பல பெயர்களால் அழைக்கப்பட்டனர். பருத்தியில் இருந்து நூல் எடுத்தவர்கள் பெண்க்ள என்றும், அதனால் அவர்கள் **பருத்திப் பெண்டிர்** என அழைக்கப்பட்டனர்.

நெசவுத் தொழில் பருத்தி போல பட்டும் பயன்படுத்தப்பட்டு உள்ளது. இது சீன வரவு என பட்டினப்பாலை குறிப்பிடுகின்றது.

**பட்டு நீக்கித் துகில் உடுத்தும்**
**(பட்டினப்பாலை)**

**முடிவுரை**

பண்டையத் தமிழர்களின் தொழில்நுட்பமானது, உலகில் வேறு எந்த இனத்திலும் அறிவியல் என்ற ஒன்று தோன்றாத காலத்தில் தமிழர்களை தொழில் நுட்பத்திற்கு அவர்கள் செய்த வேளாண்மை அதற்குப் பயன்படுத்திய கருவிகள் தமிழர்களின் கட்டிடக்கலை, நெசவுத் தொழிலுக்கு அவர்கள் பயன்படுத்திய தொழில் நுட்பங்களை இவ்வாய்வுக் கட்டுரை மூலம் அறிந்துக் கொள்ள முடிகிறது.

# ஆலயங்களும் அறிவியலும்

**ப. ஆதிபாலா**
இளங்கலைத் தமிழ் முதலாம் ஆண்டு
தி.தெ.மா.நா.ச. கல்லூரி
தெ. கள்ளிக்குளம்

## முன்னுரை

உலகத்திற்குரிய சரித்திரங்களெல்லாவற்றிலும் இயேசுவைப் பற்றிய சரித்திரமே மகா பரிசுத்தமானது. இயேசு என்பதில் அர்த்தம் ‘‘இரட்சகர்’’ கிரேக்க பாஷையில் யோசுவா என்று சொல்லப்படுகிறது. கிறிஸ்து என்பது அபிஷேகம் பண்ணப்பட்டவர். எபிரெய பாஷையில் மேஷியாவை குறிக்கும்.

‘‘ஒளியைப் பற்றிய கிறிஸ்தவ செய்தி இயேசுவை மையமாக கொண்டுள்ளது. அவரே வாழ்வு தரும் இரட்சகராக இருப்பதோடு அந்த வாழ்வுக்கு ஒளிதரும் இயேசுவாகவும் இருக்கிறார்’’.

## இயேசு மாட்டுத்தொழுவத்தில் பிறந்தார்

‘‘இயேசு’’ என்பது தேவனால் கொடுக்கப்பட்ட பெயர். ஏனெனில் ‘‘அவர் தமது ஜனங்களின் பாவங்களை நீக்கி இரட்சிப்பார்’’. மத்தேயு 1-ஆம் அதிகாரம் 21-வது வசனத்தில் சொல்லப்படுகிறது.

மகிழ்ச்சியின் நாயகனாகிய இயேசு கிறிஸ்து 2,000 ஆண்டுகளுக்கு முன்னர் பாலஸ்தீனத்தில் உள்ள பெத்லேகம் என்ற சிற்றூரில் மாட்டுத்தொழுவத்தில் பிறந்தார். யோசேப்புக்கு மனைவியாக நியமிக்கப்பட்ட மரியாளின் வயிற்றில் தூய ஆவியினால் நிரப்பப்பட்டுக் கன்னியின் மகனாய் இயேசு பிறந்தார். எனவே, இயேசு பிதாவின் குமாரனாய் இவ்வுலகில் வந்தார். இயேசு கிறிஸ்து இவ்வுலகில் வந்தது பிதாவின்சித்தமாயிருந்தது. அதை யோவான் 3-ம் அதிகாரம் 16-வது வசனத்தில் கூறப்படுகிறது.

அதே வேளையில் இவ்வுலகம் பாவம் என்ற அநீதியான அமைப்பில் நிறைந்திருந்ததை முழுவதும் அகற்றி, மனுகுலம் பாவத்திலிருந்து முழு விடுதலை பெற வேண்டும் என்பதே இயேசு கிறிஸ்து பிறப்பின் நோக்கமாக இருந்தது.

## ஏழைகளை மீட்க பிறந்தார்

இயேசு கிறிஸ்து உலக இரட்சகர் என்ற நிலையில் அவர் அரண்மனையில் அலங்காரமாக ஆடம்பரமாகப் பிறக்காமல் மாட்டுத்தொழுவத்தில் தாழ்மையின் கோலமாகத் தாழ்மையின் வடிவாக பிறந்தார். இயேசு பிறந்தார் என்ற செய்தி இவ்வுலகில் முதன்முதலாக ஆடுகளை வயல் வெளியில் மேய்த்துக் கொண்டிருந்த மேய்ப்பர்களுக்கு தேவதூதரால் அறிவிக்கப்பட்டது. அப்பொழுது குழந்தையை முன்னணையிலே கிடத்தியிருக்க காண்பீர்கள் என்பதே செய்தியாகியது. அதே வேளையில் வானத்தில் ஒரு நட்சத்திரம் தோன்றியதைக் கண்டவான சாஸ்திகள், மேசியா அதாவது, இரட்சகர் பிறந்துள்ளார் என்பதை அறிந்து ஏரோதுவின் அரச மாளிகைக்குக் குழந்தையை காணச் சென்றனர். ஆனால் குழந்தை அங்கு இல்லை.

இயேசு மாட்டுத் தொழுவத்தில் பிறந்திருந்தார் என்பதை மேய்ப்பர்கள் மட்டுமே முதலாவது காண நேர்ந்தது. ஏழைகளுக்கு காட்சியளிப்பவராய், ஏழையின் கோலமாய், தாழ்மையின் வடிவில் இயேசு கிறிஸ்து பிறந்தார் என்பதை அறிந்து கொள்ள முடிகிறது. இயேசுவின் தாழ்மை இன்று நாம் அனைவரையும் ஆதிக்க – ஆடம்பர வாழ்விலிருந்து மாற்றம் பெற்று, அனைத்து ஏழை, எளிய மக்களோடு ஒன்றித்து வாழ அறைகூவல் விடுகிறது.

இயேசு பிறந்தார் என்ற செய்தி மேய்ப்பர்களுக்கு அறிவிக்கப்பட்ட போது,

‘‘உன்னதத்தில் தேவனுக்கு மகிமையும், பூமியிலே சமாதானம் ‘‘மனிதர்மேல் பிரியம்’’ என்று கூறப்பட்டது. இந்த பிறப்பின் செய்தி நமக்கு கூறுவது என்னவென்றால் ஏழை பணக்காரன், ஆண்டான் அடிமை, ஆண் பெண், கருப்பு வெள்ளை, சத்திய வேறுபாடுகள் என்றும், இனம், மொழி என்ற நிலையில் வன்முறை கலாச்சாரங்கள் நிலவி வரும் சூழலில் அனைத்து மக்களும் ஒற்றுமையுடன் வாழவும் ஒன்றாக, நிறைவாக, அனைத்தையும் பகிர்ந்து வாழ வேண்டும் என்பதே.

இன்றைக்கு சமூக, அரசியல், பொருளாதார, ஏற்றத்தாழ்வுகள் இவற்றை களைத்தெறிந்து அனைவரும் உண்மையான மகிழ்ச்சியோடு சமாதானத்தோடு வாழ தாழ்மையின் கோலத்தில் பிறந்த இயேசு கிறிஸ்துவை உள்ளத்தில் ஏற்று வாழும்போது நிறைவான, முழுமையான, வாழ்வு, அனைவருக்கும் நிலவும் என்பதில் எந்தவித ஐயமுமில்லை.

## இளம் வயதில் இயேசு

இயேசு ‘3-ம்’ வயதில் பால் மறக்கப் பண்ணின நாளில், இளநூல் நாடா கட்டப்பட்ட வஸ்திரத்தை அவருடைய தாய் அவருக்கு உடுத்தியிருப்பார்.

இயேசு ‘5-ம்’ வயதில் வேதப்பிரமாணங்களைப் படிக்கத் தொடங்கியிருப்பார். பள்ளிக்கூடங்களிலும், வீட்டிலும் அப்படியே படிப்பது யூதருக்குள் வழக்கம்.

இயேசு ‘12-ம்’ வயதான போது நியாயப் பிரமாணங்களுக்கு கீழ்படிந்து நடந்திருந்தார்.

இயேசு ‘13-ம்’ வயதில் நாடோறும் ஜெபம் சொல்லும் நேரத்தில் தரிக்க வேண்டிய உடுப்பை அணிந்து கொண்டு, அப்படியே செய்திருந்தார் என்பதற்கு தடையில்லை.

இதைவிட அவர் தச்சு வேலையும் பழகி, அந்தத் தொழிலையும் செய்தார். இந்த பிழைப்பினால் தன்னையும், தாய், சகோதரர்களையும் தாபரித்தார்.

## இயேசு ஞானஸ்நானம் எடுத்தல்

இயேசு ஞானஸ்நானம் பெற்று, ஜலத்திலிருந்து கரையேறினவுடனே, இதோ வானம் அவருக்கு திறக்கப்பட்டது. தேவ ஆவி புறாவை போல் இறங்கி, தம்மேல் வருகிறதை கண்டார் அன்றியும் வானத்திலிருந்து ஒரு சத்தம் உண்டாகி, இவர் என்னுடைய நேசகுமாரன், இவரில் பிரியமாயிக்கிறேன் என்று உரைத்தது. இயேசு 30-ம் வயதில் ஞானஸ்நானம் பெற்று, பகிரங்கமான ஊழியஞ்செய்யத் தொடங்கினார். முதலாவது யூதேயாவிலும், அடுத்ததாக கலிலேயாவிலும், கடலோரத்திலும் பிரசங்கித்து, அற்புதங்களையும் செய்தார்.

## இயேசு இரட்சகர்

இயேசு கி.பி. 30-ம் வருடம் சித்திரை மாதம் 7-ம் தேதி சிலுவையிலறையுண்டு மரித்தார். மூன்று நாட்களுக்கு பின், உயிரோடெழுந்து தமது தெய்வீகத்தை ரூபித்துக் காட்டினார். பிற்பாடு 40 நாட்களாய் தமது சீடருக்கும், மற்றவர்களுக்கும் தம்மைப் பிரக்கியட்சமாய் வெளிப்படுத்தின பின், பரலோகம் சென்றார். அங்கே தமது பிதாவின் வலது பாரிசத்தில் உட்கார்ந்து எல்லா வல்லமையோடும் தமது ஜனங்களுக்காக பரிந்து பேசி கொண்டிருக்கிறார். இயேசு கிறிஸ்து தேவனாயிருந்தும் மனித ரூபமெடுத்ததினால், மனித ஜாதிக்கு இரட்சகராயிருக்க தகுதியுள்ளவராயினார். இதில் தேவ ரகசியம் தெரிகிறது.

‘‘அவரே தேவனால் நமக்கு ஞானமும், நீதியும், பரிசுத்தமும் மீட்புமானார்’’I கொரிந்தியர் 1-ம் அதிகாரம், 31-வது வசனம் இயேசு தேவனாயும், மனிதனாயும் இருக்கிறார். மனித சுபாவமுள்ளரானதால் எங்கள் பெலவீனங்களையும், அனுபவங்களையும், எங்கள் துக்கங்களையும், பாவங்களையும் அறிந்து எங்களுக்காக பரிதவிக்க தக்க நிலையிலிருக்கிறார். எங்களை நேசித்து, எங்களில் அநுதாபமாயிருக்கிற பிதா ஒருவர் எங்களுக்கு பரலோகத்திலிருக்கிற படியினால் எங்களை எல்லா தீங்குகளிலும், சோதனைகளிலும் இருந்து விடுவித்து, பாவத்தையும், பிசாசையும் ஜெயிக்கவும், கடைசியில் அவரிடம் போய் நித்திய

காலமும் அவர் சமூகத்தில் ஜீவிக்கவும் கூடியவர்களாக்கவும் வல்லவராயிருக்கிறார்.

[6](இயேசு) அவர் தேவனுடைய ரூபமாயிருந்தும், தேவனுக்கு சமமாயிருப்பதைக் கொள்ளையாடின் பொருளாக எண்ணாமல், [7]தம்மைதாமே வெறுமையாக்கி, அடிமையின் ரூபமெடுத்து, மனுவிர் சாயலானார். [8]அவர் மனுஷரூபமாய் காணப்பட்டு அதாவது, சிலுவையின் மரணபரியந்தமும் கீழ்படிந்தலராகி, தம்மைதாமே தாழ்த்தினர். [9]ஆதலால் தேவன் எல்லாவற்றிற்கு மேலாக அவரை உயர்த்தி,[10]இயேசுவின் நாமத்தில் வானோர், பூதலத்தோர், பூமியின் கீழானோருடைய முழங்கால் யாவும் முடங்கும்படிக்கும், [11]பிதாவாகிய தேவனுக்கு மகிமையாக இயேசு கிறிஸ்து கர்த்தரென்று நாவுகள் யாவும் அறிக்கை பண்ணும்படிக்கும், எல்லா நாமத்திற்கம் மேலான நாமத்தை அவருக்கு தந்தருளினார். பிலிப்பியர் 2-ம் அதிகாரம் 6 முதல் 11 வரை உள்ளது.

## கிறிஸ்தவ அறிவியல்

கிறிஸ்தவ சயின்ஸ் அதன் போதனையின் உறுதியான அறிக்கையைக் கொண்ட புத்தகத்தின் ஆசிரியர் மேரி பேக்கர் எடி (1821-1910) அவர்களால் 1879-இல் அமெரிக்காவில் நிறுவப்பட்ட மதப்பிரிவு அறிவியலும், ஆரோக்கியமும் வேதத்தின் திறவுகோல் (1875). இது மிகவும் சர்ச்சைக்குரிய நடைமுறைக்கு பரவலாக அறியப்படுகிறது.

## வரலாறு, அமைப்பு மற்றும் வளர்ச்சி

டார்வினிசம், விவிலிய விமர்சனம் மற்றும் பிற மதச்சார்பற்ற தாக்கங்கள் புராட்டஸ்டன்ட் மரபுவழியின் அமானுஷ்ய கட்டமைப்பை பலவீனப்படுத்திய 19-ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் அமெரிக்காவில் கிறிஸ்து அறிவியல் தோன்றியது. எடி ''கரமையான புராட்டஸ்டன்டிசம்'' மற்றும் சந்தேகத்திற்கிடமான காராளமயம்'' என்று பிரிக்கப்பட்ட பிரச்சனையுள்ள கிறிஸ்தவர்கள், ஆன்மீக சிகிச்சை முறை மற்றும் புதுப்பிக்கப்பட்ட நம்பிக்கையின் வாக்குறுதியின் காரணமாக கிறிஸ்தவ அறிவியலுக்கு ஈர்க்கப்பட்டனர்.

கிராமப்புற நியூ ஹாம்ப்ஷயரில் உள்ள ஒரு கண்டிப்பான காங்கிரேஷனலிஸ்ட் வீட்டில் வளர்க்கப்பட்ட மேரி பேக்கர் (எடி என்பது அவரது மூன்றாவது கணவரின் கடைசி பெயர்). தனது தந்தையின் அப்பட்டமான கால்வினிச இறையியலின் நரக நிர்ணத்தை முறியடித்தார். ஆயினும் கூட, அவள் அந்த பாரம்பரியத்திலிருந்து பைபிளை மையமாக கொண்ட, சற்றே வழக்கத்திற்கு மாறான, பக்தியுடன் இருந்தாள். அது பூனி பேரியனிசம் மற்றும் பின்னர், ஆழ்நிலைலாதத்தின் பலவீனமான கிறிஸ்தவத்தை ஏற்றுக் கொள்வதை தடுத்தது. தனிப்பட்ட துரதிஷ்டம் மற்றும் உடல்நலக்குறைவு ஆகியவை மனித துன்பங்களுக்கு கடவுளின் பொறுப்பு பற்றிய கேள்வியில் எடியின் ஆர்வத்திற்கு பங்களித்தன.

எடியின் ஆரோக்கியத்திற்கான சொந்த தேடல், ஹேட்ரோதெரபி (நீர் சிகிட்சை) மற்றும் சிகிட்சை நுட்பங்கள் உட்பட பல்வேறு மாற்று சிகிட்சை முறைகளை பரிசோதிக்க வழிவகுத்தது. மைனேலைச் சேர்ந்த ஒரு கவர்ச்சியான குணப்படுத்துபவர், 1862 முதல் 1865 வரை அவருடனான அவரது தொடர்பு, ஹோமியோபதியில் அவர் மேற்கொண்ட பரிசோதனைக்ள நோயின் மனத்தன்மையை பெற்ற நம்பிக்கையை வலுப்படுத்தியது. இது புதிய ஏற்பாட்டு குணப்படுத்தும் கதைகளின் அர்த்தத்திற்கான அவரது சொந்த தேடலை தூண்டியது.

எடி மீது குலிம்பியின் செல்வாக்கு எவ்வளவு என்பது பெரும் சர்ச்சைக்குரிய ஒரு கேள்வியாகும். இது முதலில் எடி தனது லாதனைகளை வெளியிட்டது. பின்னர் ஒரு முன்னாள் மாணவர் மீது திருட்டு வழக்கு தொடர்ந்தது. எடி கவிம்பியின் உள்ளடக்கத்தை நகலெடுத்ததாகக் கூறி அவர் தன்னை தற்காத்துக் கொண்டார். நீதிமன்றம் எடிக்கு ஆதரவாக தீர்ப்பளித்துக் கொண்டார். நீதிமன்றம் எடிக்கு ஆதரவாக தீர்ப்பளித்தது.

ஆனால் குயிம்பியின் ஆவணங்கள் பொது ஆய்வுக்க கிடைக்கவில்லை. எடி பெருகிய முறையில் சர்ச்சைக்குரியவராக மாறியதால், அவர் ஒரு வழித்தோன்றல் சிந்தனையாளர் என்று அவரது எதிர்ப்பாளர்களால் கண்டனம் செய்யப்பட்டார். மேலும், புதிய சிந்தனையாக (ஒரு மனோத்துவம் குணப்படுத்தும் இயக்கம்) 10-ம் நூற்றாண்டின் இரண்டாம் தசாப்தத்தில் நிறுவப்பட்டது. அது எட்டிடையைவிட குயிம்பியை அதன் வேலையின் உற்றுணையாக பார்த்தது.

கிறிஸ்டியன் சயின்ஸ் இயக்கத்தின் தோற்றம் குயிம்பியின் மரணத்திற்கு பிறகு 1866-இல் கண்டுபடிக்கப்பட்டது. அந்த நேரத்தில் புதிய ஏற்பாட்டில் இயேசுவின் குணப்படுத்துதல் மலரில் ஒன்றை படிக்கும் போது, திடீரென்று ஒரு கடுமையான விபத்தின் விளைவுகளிலிருந்து மீண்டார். இந்த சம்பவத்தின் விவரங்கள் சர்ச்சைகள் சூழ்ந்துள்ளன. ஆனால், இது அவரது வாழ்க்கையில் திருப்புமுனையாக இருந்தது. பல வருடங்கள் தீவிர வேதப் ………ப்பையும் - எழுத்தையும் தூண்டியது. எடி மேலும் குணப்படுத்தும் அனுபவங்களை பெற்றதாக கூறினார். இதன் மூலம் அவர் தனது வளரும் முடிவுகளை சோதித்ததார். 1870-ஆம் ஆண்டில் அவர் தனது கிறிஸ்தவ அறிவியல் பகுப்பை கற்பித்தார். அவரது படைப்பான, தி சயின்ஸ் ஆ.ஃ.ப் மேன் பைலைச் தி சிக் ஆர் ஹீல்ட் அல்லது தர்மீக அறிவியலில் கேள்விகள் மற்றும் மதில்கள் (1870) மற்றும் பாஸ்டனுக்கு அருகிலுள்ள மசாசூசெட்ஸில் உள்ள எந்த மில் நகரத்தில் பின் தொடர்பவர்களை ஈர்த்தது. அங்கு அவர் 1882 வரை இருந்தார். 1875-ஆம் ஆண்டில் அவர் அறிவியல் மற்றும் ஆரோக்கியத்தை வெளியிட்டார். அடுத்த 35 ஆண்டுகளில் அவர் மீண்டும் மீண்டும் திருத்தினார். எடி தனது வாழ்க்கையின் கடைசி இரண்டு தசாப்தங்களை இயக்குவதற்கான ஒரு ஒக்கிசைவான நிறுவன கட்டமைப்பை உருவாக்கினார். இது 1892-ஆம் ஆண்டு கிறிஸ்துவின் சர்ச், சயின்டிஸ்ட், மதர் சர்ச் (அதாவது, கிறிஸ்துவின் முதல் தேவாலயம், விஞ்ஞானி, பாஸ்டனில் உள்ள) மற்றும் உலகெங்கிலும் உள்ள கிளைகளாக அதன் தற்போதைய வடிவத்தில் மறுசீரமைக்கப்பட்டது.

சர்ச் அரசாங்கம் எடியில் கோடிட்டு காட்டப்பட்டது. தாய் திருச்சபையின் கையேடு முதலில் 1895-இல் வெளியிடப்பட்டது மற்றும் அடுத்த 15 ஆண்டுகளில் திருத்தப்பட்டது. இது எடியின் மரணத்தின் பிறகு தேவாலயத்தில் அதிகாரமாக உள்ளது. கையேட்டில் குறிப்பிடப்பட்டுள்ள கூட்டாட்சி கட்டமைப்பின் ஒரு பகுதியான இரந்த சுய-ஆளும் கிளை தேவாலயங்களின் “தனித்துவமான ஜனநாயக” தன்மையை நிறுவும் அதே நேரத்தில், கையேட்டின் விதிகளை செயல்படுத்துவதை அவர் ஐந்து உறுப்பினர்களைக் கொண்ட சுய – நிரந்தர இயக்குநர்கள் குழுவிடம் ஒப்படைத்தார்.

## முடிவுரை

“அவராலேயன்றி வேறொருவராலும் இரட்சிப்பு இல்லை. நாம், இரட்சிக்கப்படும் படிக்கு வானத்தின் கீழெங்கும் மனுஷருக்குள்ளே அவருடைய நாமமேயல்லாமல் வேறொரு நாமம் கட்டளையிடப்படவும் இல்லை. அப்போஸ்தலர் 4-ம் அதிகாரம் 12 வசனம்”.

இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பு பெத்தலஹேமில் அன்னை மரியாளுக்கு மகனாய் அவதரித்த இயேசு கிறிஸ்து தாழ்மையின் சாயலாய் மாட்டுத்தொழுவத்தில் பிறந்தார். மனித குலத்தின் பாவங்களைப் போக்கி நம்மை இரட்சிப்பதற்காக மனுகுலம் எடுத்தார் இறைமகன். தம்மைத்தாமே வெறுமையாக்கி அடிமையின் ரூபம் எடுத்து மனித சாயலானார். பிதாவின் சித்தம் நிறைவேறும்படி அவர் சிலுவையில் பலியாகி மூன்றாம் நாள் உயிர்த்தெழுந்த இயேசு, நமக்காக பரிந்து பேசக்கூடிய தெய்வமாகவும், மன்னிக்கும் தெய்வமாகவும், தீங்கு நாட்களில் நம்மை பாதுகாக்கும் கடவுளாகவும் இன்று சிங்காசனத்தில் வீற்றிருக்கிறார். இயேசுவின்

நாமத்தை போற்றும் விதமாக உலகமெங்கிலும் ஆலயங்களில் பிரார்த்தனைகள் நிகழ்த்தப்படுகின்றன. பல ஆலயங்கள் பல்வேறு கிளைகளாக பிரிக்கப்பட்டு உலகமெங்கிலும் ஜெபங்கள் நடத்தப்படுகின்றன. மனுமகனின் அன்பில் நாம் கிட்டிச் சேரவும், அவருடைய நாமத்தை தரிசிப்பதற்காகவும் நாம் வழிபடுகிறோம் என்பது குறிப்பிடத்தக்கது.

# பெண்மொழி

**மு. பேச்சியம்மாள்**
முனைவர்பட்ட ஆய்வாளர், தமிழ்த்துறை
சேதுபதி அரசு கலைக் கல்லூரி, இராமநாதபுரம்

***ஆய்வுச் சுருக்கம்***

*உலகம் முழுக்க இலக்கியம் என்பது ஆண்களின் கையில் தான் இருந்து வந்துள்ளது. ஆண்கள் தங்கள் அதிகாரத்தைக் கட்டமைக்கும் ஊடகமாக இலக்கியத்தைப் பயன்படுத்திக் கொண்டனர். விதிவிலக்காகச் சில பெண்களின் படைப்புகளையும் இலக்கியப் பரப்பில் காணமுடிகிறது. மறுமலர்ச்சிக் காலம் பல புதுமைகளை அள்ளியிறைத்தது. பெண்களின் வாழ்வில் அது ஒளியேற்றியது. பெண்கள் என்பவர் உயர்திணை என்பதை மறுமலர்ச்சிக் காலம் உறுதி செய்தது. பெண்கள் என்பவர்கள் 'சிந்திக்கும் உயிரிகள்' என்பதை இக்காலப் படைப்புகள் நிறுவி நிற்கின்றன. பெண்கள் தங்கள் கனவுகளை எழுதும் வெளியாக இலக்கியம் அமைந்தது. பெண்மொழியில் பெண் எழுத்தை உருவாக்குதல் பெண்ணியத்தின் மொழிசார் இலக்காக இருந்தது. ஆண்கள் வடிவமைத்த அழகியலையும் மொழி விளையாட்டையும் அதுபுறக்கணித்தது. பெண்களின் அரசியலை வார்த்தைகள் வழியே வெளிப்படுத்த பெண்ணிய இலக்கியங்கள் துணிந்தன. இத்தகு பின்னணியில் பெண்மொழி குறித்த புரிதல்களை உருவாக்குவது காலத்தின் தேவையாக உள்ளது. எனவே பெண்மொழி எனும் ஆய்வு மேற்கொள்ளப்படுகிறது.*

*'பெண்மொழி' எனும் இவ்வாய்வு கீழ்க்காணும் நோக்கங்களைத் தன்னகத்தே கொண்டது.*

- *பெண்மொழியை வரையறுத்தல்*
- *ஆணதிகாரத்துக்குட்பட்ட மொழியை மாற்றியமைத்தல்*
- *பெண்ணின் அரசியலை முன்னெடுத்துச் செல்லுதல் ஆகியவை இவ்வாய்வின் நோக்கங்களாகும்.*

*ஆணின் மொழியிலிருந்து பெண் கவிஞர்கள் கட்டமைக்கும் மொழிவேறுபட்டது என்பது ஆய்வின் கருதுகோளாகும். சமூகவியல் அணுகுமுறை, விளக்கமுறை, பகுப்புமுறை ஆகிய ஆய்வு முறைகள் பின்பற்றப்படுகின்றன. பெண் எழுத்து, பெண்மையவாதம், பெண்மொழி ஆகியவை இக்கட்டுரையில் ஆராயப்படுகின்றன.*

**முன்னுரை**

பொதுவாகக் கவிதை மொழி என்பது இறுக்கமானதும், கட்டமைப்பு உடையதும், உணர்ச்சிப் பாங்கானதும் ஆகும். கவிதை தோன்றிய காலத்திலிருந்து பல்வேறு விதிமுறைகளாலும், சட்டதிட்டங்களாலும் இயக்கப்பட்டு வந்த கவிதையானது மறுமலர்ச்சிக் காலத்தில் தனது தளைகளை உதறியது. சுதந்திரம் தான் மனித வாழ்வின் முதன்மையான வாழ்வியல் நெறி என்பதை உணர்ந்த படைப்பாளிகள் மரபின் இறுக்கங்களை உடைத்தெறிந்தனர். இதனால் புதுக்கவிதைகள் வடிவம் சார்ந்த விடுதலையை முன்னெடுத்துச் சென்றன. ஆனாலும் அவற்றின் உள்ளடக்கம் ஆண் மையநோக்கிலேயே அமைந்தன. இந்நிலையில் 'பெண்மொழி' என்ற ஒன்று கவிதையுலகில் தோன்ற வேண்டிய சூழல் எழுந்தது. யுனெஸ்கோ நிறுவனம் 1975-ஆம் ஆண்டைப் பெண்கள் ஆண்டாக அறிவித்தது. 1986 முதல் 1995- ஆம் ஆண்டு வரையுள்ள பத்தாண்டு காலத்தைப் பெண்களின் பத்தாண்டாக அந்நிறுவனம் அறிவித்தது. எழுபதுகளின் இறுதியிலேயே பெண்களின் சிக்கல்களை

வெளிக்கொணரும் படைப்பின் தேவை உணரப்பட்டது. பெண்களை மையப்படுத்தி எழுதும் எழுத்தாளர்கள் இக்காலத்தில் மிகுந்தனர். தீவிரப் பெண்ணியம் தோன்றிய பின் ‘பெண்ணெழுத்து’ உருவாக வேண்டியதின் அவசியம் உலக அளவில் வலியுறுத்தப்பட்டது. பெண்ணுக்கென்று ஒரு பிரத்யேகமான மொழிதேவை எனப் பெண்ணியவாதிகள் வலியுறுத்தினர். இதனால் கவிதையில் ‘பெண்மொழி’ என்பது உருவானது. பெண்மொழியின் பன்முகத் தன்மையை ஆராய்வதாக இவ்வியல் அமைகின்றது.

## பெண் எழுத்து

இலக்கிய வரலாற்றில் நீண்டகாலமாய் ‘எல்லா எழுத்துக்களும் எழுத்துக்களே’ எனப் புரிந்துகொள்ளப்பட்டுவந்தது. எழுத்து என்பது அனைவருக்கும் பொதுவானது என்ற பார்வை அதில் இருந்தது. ஆனால் இன்று எழுத்தின் இலக்கினை அடிப்படையாகக் கொண்டு இலக்கியங்கள் வகைப்படுத்தப்படுகின்றன. குழந்தை எழுத்து, பெண் எழுத்து, தலித் எழுத்து என எழுத்துக்கள் இலக்கியங்களின் நோக்கையும் போக்கையும் அடிப்படையாகக் கொண்டு பகுக்கப்படுகின்றன.

பொதுவான எழுத்து என்பது மேல்தட்டு மக்களை மையமிட்டதாகவும், மேலோட்டமானதாகவும் அமைகிறது. ஆனால் பெண் எழுத்து என்பது பெண்களின் வாழ்வியலை மேம்படுத்தும் நோக்கில் ஆழமாக எழுதப்படுவதாகும். இதனை தனித்துவமான எழுத்துப் போக்கு என மதிப்பிடலாம்.

பெண் விடுதலை பற்றிய சிந்தனைகள் செல்வாக்குப் பெற்ற காலத்தில் பெண்களை மையப்படுத்தி எழுதுவதேபெண் எழுத்து எனப் புரிந்துகொள்ளப்பட்டது. ஆண்கள் பெண்களின் முன்னேற்றத்திற்காக எழுதும் எழுத்துக்களும் இவ்வகை எழுத்தாகவே கருதப்பட்டன. பெண்கள் தங்களுக்காக எழுதும் எழுத்து தான் பெண் எழுத்து என்ற கருத்தாக்கம் இன்றைய இலக்கிய உலகில் உள்ளது. பெண்கள் எழுதும் அனைத்து எழுத்துக்களையும் ‘பெண் எழுத்து’ என்ற வகைப்பாட்டுக்குள் அடக்க முடியாது. ஆண்களின் பார்வையில் எழுதப்படும் பெண் படைப்பாளர்களின் எழுத்துக்கள் பெண்ணிய எழுத்துக்கள் அல்ல.

பெண்கள் தம்மைப் பெண்ணாக உணர்ந்து கொண்டு, அறிந்து கொண்டு தமக்கான பிரச்சினைகளைத் தம் சூழலில் எடுத்துரைப்பதே ‘பெண் எழுத்து’ என வரையறுக்கலாம்.[1]

பெண் எழுத்து என்பது கீழ்க்காணும் தன்மைகளுடன் திகழுகிறது.

- பெண் படைப்பாளிகளால் எழுதப்படுதல்
- பெண் தன்னைப் பெண்ணாக அறிந்து கொண்டு எழுதுதல்
- தம்மைச் சுற்றியுள்ள பெண்களின் சிக்கல்களைப் பெண் படைப்பாளிகள் எழுதுதல்
- மேலோட்டமான பொழுதுபோக்கு முறையைத் தவிர்த்து தீவிர எழுத்து முறையைப் பின்பற்றுதல்
- ‘யாரிடமும் வெளிப்படுத்தக் கூடாது’ என மரபு தடைவிதித்த அக வேட்கைகளை வெளிப்படையாக எழுதுதல்
- ஆண்களால் கற்பிக்கப்பட்ட பண்பாட்டுக் கூறுகளை உடைத்தெறிதல்
- பெண் தனக்கென படைப்பு மொழியை உருவாக்குதல்
- பாசாங்கு வார்த்தைகளையும் பகட்டு நடையையும் தவிர்த்தல்
- வலிகளை ஆழமாக எழுதுதல்
- வர்ணனை, காதல் மொழிகளைத் தவிர்த்தல்

- அனுபவ உண்மைகளை உரத்தகுரலில் பேசுதல்
- தந்தைவழிச் சமூகம், குடும்ப அமைப்பு, பாலினப் பாகுபாடு, மரபுகள் ஆகியவற்றைக் கட்டுடைத்தல்
- தொன்மக் கதைகளை மறுவாசிப்புக்குட்படுத்துதல்
- சிந்தனையும், சுய இயக்கமும் உடையவளாய்ப் பெண்ணைக் காட்டுதல்

மேற்காட்டிய பண்புகளுடன் 'பெண்ணெழுத்து' அமைகிறது.

**பெண்மையவாதமும் பெண் எழுத்தும்**

ஆண்கள் பெண்களின் படைப்புகளை ஆராய முற்படும்போது ஆண்களின் சிந்தனைப் போக்கிலிருந்தே அவற்றைச் சீர்தூக்கிப் பார்த்தனர். இதற்கு மாற்றாகப் பெண்களே பெண்களின் படைப்புகளை ஆராயும் போக்கு உருவாயிற்று. பெண் இலக்கியத்திற்கான வரலாற்றுத் தளத்தை உருவாக்கும் நோக்கில் 'பெண்மையவாதம்' உருப்பெற்றது. ஆண் சொல்லாடலை மறுவாசிப்புக்குட்படுத்துவது பெண்மை யவாதத்தின் அடிப்படைக் கொள்கையாகும் எலைன் ஷோவால்டர் 'பெண்மையவாதம்' என்ற சொல்லாடலை உருவாக்கினார். க.பஞ்சாங்கம் பெண்மையவாதத்தின் அடிப்படைக் கொள்கைகளை எடுத்துரைக்கிறார்.[2]

1. பெண் எழுத்தாளர்களின் இலக்கியங்களைப் பகுத்தாராயப் பெண்கள் சார்ந்த ஒருவேலைத் திட்டத்தை உருவாக்குவது.
2. ஆண்களின் இலக்கியக் கொள்கைகளையும் மாதிரிகளையும் தனதாக்கிக் கொள்வதைவிட, பெண்களின் அனுபவங்களை ஆராய்வதன் மூலமாகப் பெண்களுக்கே உரிய புதிய மாதிரிகளை வடிவமைப்பது.
3. உண்மையில் பெண்நிலைத் திறனாய்வு எந்த புள்ளியில் தொடங்குகிறது என்றால் நேர்கோடு போன்ற முழுமையான ஆண்களின் இலக்கியக் கொள்கைகளில் இருந்து பெண்கள் விடுதலை செய்துகொள்ளும் போதும், ஆண்களின் நேர்கோட்டு மரபுகளுக்கு இடையில் போய்ப் பொருந்திக் கொள்ளப் பெண்கள் முயலுவதை அறவேநிறுத்திக் கொண்டு புதிதாகத் தெளிவாய்த் தெரிகிற பெண்களுக்கேயான பண்பாட்டை மையப்படுத்தி அதை வெளிக்கொணருவது.
4. பெண் எழுத்துக்களைப் பற்றிப் பெண்கள் மட்டுமே திறனாய்வு செய்ய வேண்டும் என்ற கருத்தை முன்வைப்பது.
5. ஆண்களின் திறனாய்வுக் கொள்கை எனும் 'ஆகமங்களால்' பதிப்பிக்குமாறு செய்யப்பட்டுள்ள பெண் எழுத்துக்களைக் கண்டெடுத்து மீட்டெடுப்பதில் பெரிதும் கவனம் செலுத்துவது.
6. பெண் எழுத்துக்களின் வரலாறு, நடை, கரு, வகை, அமைப்பு, விரைவியக்கம் சார்ந்த பெண்ணின் படைப்பு, உளவியல் ஆகிய அனைத்தையும் உள்ளடக்குவது"

ஆகியவை பெண்மையவாதத்தின் அடிப்படைக் கொள்கைகளாகும்.

பெண்மையத் திறனாய்வு பெண் எழுத்தை ஊக்குவிக்கிறது. பெண்மையத் திறனாய்வு ஓர் அரசியல் செயல் திட்டமாகும். அது வாசகர்களின் மனநிலையை மாற்றியமைப்பதோடு உலகத்தையும் மாற்றியமைக்கிறது. பெண்மையத் திறனாய்வின் கொள்கைகளையும், போக்குகளையும் தொகுத்தாராய்வதுமுக்கியமானது.

- பெண்வாசகர்களின் நோக்கில் பெண்படைப்பாளிகளின் ஆக்கங்களை ஆராய்தல்.
- பெண் எழுத்தாளர் நோக்கில் இலக்கியத்தைப் படைத்தல்
- பெண் புனைகதைகளில் இடம்பெறும் பெண்பாத்திரங்களின் மன ஆற்றலை ஆராய்தல்
- பெண் எழுத்துக்களைத் தனித்துத் திறனாய்வது
- பெண் சார்ந்த சிக்கல்களுக்குத் தீர்வுகளை உருவாக்குதல்
- அகில உலகமானுட விடுதலையைப் பேசுதல்
- பெண்மைய எழுத்துக்களை அன்புடன் ஏற்று அவற்றிலுள்ள சிறப்புகளை வெளிக்கொணர்தல்
- ஆண்மைய எழுத்தின் மீது சீற்றம் கொள்ளுதல்
- பெண்ணுடலைத் தாழ்வாகக் கருதும் ஆண் கருத்தியலை எதிர்த்தல்
- பெண்களுக்கான ஒருமொழியை உருவாக்குதல்
- பெண்ணை இழிவுபடுத்துகின்ற உளவியல் கோட்பாடுகளை மறுபரிசீலனை செய்தல்
- பெண்களின் இலக்கியத்தைப் பண்பாட்டு அடிப்படையில் ஆராய்தல்
- பெண் படைப்பாளிகளின் தனித்துவத்தையும், ஆக்கப்பூர்வமான கருத்துக்களையும் வெளிக்கொணர்தல்
- சமுதாயச் சிக்கல்களை, குறிப்பாகப் பெண்கள் சந்திக்கும் சிக்கல்களைப் படைப்பு வழி வெளிக்கொணர்தல்

ஆகியவை பெண்மையத் திறனாய்வின் அடிப்படைகளாகும்.

**பெண்மொழி**

பெண்மையத் திறனாய்வு எதிர்நோக்கும் பெண்மொழியிலமைந்த பெண் எழுத்து இன்றைய புதுக்கவிதை உலகில் பெருகி வருகிறது. பெண்மொழி என்பது பெண் தன்பால் சார்ந்த அடையாளங்களைச் சொற்களால் கட்டமைப்பது ஆகும். இதில் பெண்படைப்பாளிகள் தமக்கே உரிய தனித்த மனப்படிமங்களை, தம்மை வெளிப்படுத்துவதற்காக உருவாக்கிக் காட்டுகின்றனர். பெண் படைப்பாளிகள் பெண்ணியச் சிந்தனைகளினூடாகப் பெண்களின் உணர்வுகளை அழகியல் தன்மையுடன் கட்டமைப்பதனைப் பெண்மொழி என வரையறுக்கலாம்.

எல்லாப் பெண்கவிஞர்களும் பெண்மொழியைக் கையாளுபவர்களல்ல. ஆணின் புனைவுமொழியில் எழுதுபவர்களும் உள்ளனர். பெண்ணுடல் தன் சுயத்தை வெளிப்படுத்தும் படைப்பு வெளிப்பாட்டு முயற்சியே பெண்மொழியாகும்.

பெண்ணியச் சிந்தனை மனித சமூகத்தின் கலாச்சார தளத்தில் பெண்ணின் உரிமை மற்றும் பங்களிப்பு என்ன என்பதைப் பற்றிக் கவலைப்படும் போது பெண்மொழி என்பது பிரபஞ்ச அமைப்பினுள் பெண் என்னும் சிந்திக்கத் தெரிந்த உயிரின வகையொன்றின் இருப்பு பற்றிய ஆதாரமான கேள்வியைப் பிரதானப் படுத்துவதாகப் பா.வெங்கடேசன் கருதுகிறார். அவர் பெண் மொழியைக் கீழ்க்காணுமாறு அடையாளப்படுத்துகிறார்.

> "பெண்ணியம் பொது அடையாளங்களைக் கொண்டது. எனில் பெண்மொழி ஒடுக்கப்பட்ட உடலுக்குள் சூழல் மாற்றம் கிளர்த்தும் கிளர்ச்சி, வேட்கை, வலி, கனவு ஆகியன உள்ளிட்ட அக நிகழ்வுகள் சார்ந்து உருவாகிறது"[3]

என்கிறார்.

பெண்ணின் மனநிலையைப் பெண்ணே சொற்களின் வழியாக வெளிப்படுத்துவது பெண் மொழியாகும். இப்பெண்மொழி பெண்ணுரிமைக்காகக்

குரல் கொடுக்கிறது. பெண்களுக்கு இழைக்கப்படும் அநீதிகளுக்கு எதிராகக் குரல் கொடுக்கிறது. பெண்ணின் அடி மனநீரோட்டங்களை வெளிக்கொணர்கிறது. பெண்ணின் அன்றாட வாழ்வையும், சுகதுக்கங்கள் குறித்த எண்ணவோட்டங்களையும் உள்ளபடி விளக்கிச் சொல்வதாகப் பெண்மொழி அமைகின்றது.

தே.ஞானசேகரன் பெண் மொழியைப் போர்க்கருவிகளோடு ஒப்பிடுகிறார்.[4] சமூக விடுதலைப் போருக்காய் உருவாக்கப்படும் ஆயுதங்களாய் அவர் அதனை உருவகிக்கின்றார். 'பெண்களுக்கான எல்லா நிலையிலுமான சமூக விடுதலையைப் பெறுவதற்கான களமாகப் பெண்ணியம் அமைந்து இக்களத்தில் வெற்றியை நிர்ணயிக்கின்ற போர் கருவிகளாகப் பெண்மொழி தயார் செய்யப்படுகிறது என்று அவர் கூறுகின்றார்.

பெண்மீது புனையப்பட்டுள்ள மரபு வழியான கருத்தியல்களை உடைப்பதற்கு வலுவான ஆயுதமாக இந்தப் பெண்மொழி பெண்ணியச் சிந்தனையாளர்களால் கையாளப்படுதாகவும் தே.ஞானசேகரன் குறிப்பிடுகின்றார்.

பெண்கள் சமூகத்தில் தமக்கான இடத்தை வகுத்துக் கொள்ள பெண்மொழி ஆவன செய்கிறது. பெண் என்பதற்குப் புதிய வரையறைகளை வழங்குகிறது. பொது அர்த்தம் என்பதனை மாற்றிப் பெண் அர்த்தம் என்பதனை முக்கியப்படுத்துகிறது. ஆண்மைய அமைப்புகளை மறுக்கிறது. தனித்துவமும் மகத்துவமும் நிறைந்த பெண்ணின் அடையாளங்களைப் படைப்புகளில் பதிவுசெய்கிறது. கலை, இலக்கியம், பண்பாடு, அரசியல், விழுமியம், நிறுவனம் ஆகியவற்றில் பெண்ணின் நோக்கிலான சொல்லாடல்களை உருவாக்குகிறது. மரபான சார்புநிலை கொண்ட அறங்களை மறுதலிக்கிறது. தமிழில் பெண்மொழி என்பது இப்போது வளர்ந்து வருகிறது. பெண்மொழி சார்ந்த பனுவல்களைத் தேடிவிளக்குவது பெண்மொழிக்குச் செய்யும் தொண்டாக அமையும். மாலதிமைத்ரி,

> "பெண்மையின் மொழியும் எழுத்தும் மிகமிகக் குறைவாக, ஒரு வகையில் இல்லாததாக உள்ளது. ஆனால் பெண்மனம் சார்ந்த, உணர்வு சார்ந்த, பெண்ணுடல் சார்ந்த, பெண் அனுபவம் சார்ந்த பதிவுகளை, ஆவணங்களை, வெளிப்பாடுகளை, பிரதிகளை உருவாக்க வேண்டியதும் தொகுக்க வேண்டியதும் இருக்கிறது"[5]

என்று அறிவுறுத்துகிறார். பெண்மொழி சார்ந்த படைப்புகள் ஒரே நேரத்தில் படைப்பாகவும் விமர்சனமாகவும் அமைய வேண்டும் என்பது அவரது கோருதலாக உள்ளது. ஆண்டாள் பிரியதர்ஷினி பெண் எழுத்தின் இயல்புகளைத் தொகுத்துரைக்கிறார்.

> "பெண் எழுத்து நிஜமானது, பாவனை இல்லாதது, சுபாவமானது, சுயமானது, மனசால் எழுதப்படுவது, ஜோடனையான அறிவு ஜீவி எழுத்தாக இல்லாமல் இயல்பானது. அழகான முக மூடியாக இன்றி அழகற்ற குரூர நிஜமுகமாக இருப்பது அவள் எழுத்து. அகம் பேசும் இழப்பைப் பதிலீடு செய்வதாக, துக்கத்தைப் பகிர்ந்துகொள்வதாக எழுத்தை அவர்கள் அடையாளம் காணுகிறார்கள்"[6]

என்பதிலிருந்து போலித்தனமற்ற இயல்பான எழுத்து தான் பெண்எழுத்து எனப் புரிந்து கொள்ள முடிகிறது.

## முடிவுகள்

'பெண்மொழி' எனும் ஆய்வில் கண்டறிந்த உண்மைகள் கீழே தரப்படுகின்றன.

- பெண்கள் தம்மைப் பெண்ணாக உணர்ந்து கொண்டு தமக்கான பிரச்சினைகளைத் தம் சூழலில் எடுத்துரைப்பதே பெண் எழுத்து ஆகும்.

- பெண்மையத் திறனாய்வு வாசகர்களின் மனநிலையையும், உலகத்தையும் மாற்றியமைக்கிறது.
- பெண்ணின் மனநிலையைப் பெண்ணே சொற்களின் வழியாக வெளிப்படுத்துவது பெண்மொழியாகும்.

**அடிக்குறிப்பு**

1. இரா.பிரேமா, பெண் எழுத்துக்களின் அரசியல், ப.19
2. க.பஞ்சாங்கம், பெண் மொழிபடைப்பு, ப.15
3. பிரம்மராஜன், ஆர். சிவக்குமார், (தொ.ஆ), ஔவை மண்ணில் பெண் எழுத்தாளர்கள் ப.10
4. தே.ஞானசேகரன், பெண் வழக்காறுகள், ப.3
5. மாலதிமைத்ரி, விடுதலையை எழுதுதல், ப.78
6. தே.ஞானசேகரன், பெண் வழக்காறுகள், ப.2

# புதுமைப்பித்தன் சிறுகதைகளில் நவீனத்துவத்தின் பன்முக வெளிப்பாடுகள்

**முனைவர் சா.கணேசன்**
உதவிப் பேராசிரியர்
செந்தமிழ்க் கல்லூரி, மதுரை

***ஆய்வுச்சுருக்கம்***

*'சிறுகதை மன்னன்' என்று சிறப்பிக்கப்படும் புதுமைப்பித்தன் நவீனத்தவச் சிறுகதைப் படைப்பிலக்கியத்தின் தொடக்கப் புள்ளியாகவும் மையமாகவும் விளங்குகின்றார். அவரது சிறுகதைப் படைப்புக்களில் நவீனத்துவ இலக்கியக் கொள்கையும், அதுசார்ந்த படைப்பு நெறிகளும் பன்முகப் பார்வையில் வெளிப்பட்டு நிற்கின்றன. அவற்றை புதுமைப்பித்தனின் வடிவச் சோதனைகள், பன்முக நோக்கு, புதுமைப்பித்தன் சிறுகதைகளின் அடிப்படைச்சாரம், வேளாள மரபு, சிறுகதைப் போக்குள், நவீனத்துவச் சிற்தனைகளின் பன்முக வெளிப்பாடுகள் எனப் பகுத்தாய்ந்து திறனாய்வுப் பார்வையில் வெளிப்படுத்துவதே இவ்ஆய்வுக் கட்டுரையின் சுருக்கமாகும்.*

***நோக்கம்***

*புதுமைப்பித்தனும் மகாகவி பாரதியாரும் சிறுகதை, கவிதை இலக்கியப் படைப்புக்களில் முதல்வர்களாகவும் முன்னோடிகளாகவும் விளங்குகின்றனர். புதுமைப்பித்தனின் நவீனத்துவச் சிந்தனைகளால் தமிழ்ச்சிறுகதை வடிவமும் உள்ளடக்கமும் பெற்ற நன்மைகள் பல. புதுமைப்பித்தனின் நவீனத்துவப் பார்வையை ஆழமாக எடுத்துக்கூறுவதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.*

## முன்னுரை

“புதுமைப்பித்தன் சிறுகதைகளில் நவீனத்துவத்தின் பன்முக வெளிப்பாடுகள்” என்பது இவ்ஆய்வுக் கட்டுரையின் தலைப்பாகும். நவீனத்துவக் கோட்பாடுகளைச் சுட்டிக்காட்டி, அவை புதுமைப்பித்தன் சிறுகதைகள் வெளிப்பட்டுள்ள பாங்கினை இக்கட்டுரை விளக்குகின்றது.

## நவீனத்துவம் (Modernism) – விளக்கம்

'நவீனத்துவம்' என்பதை கலை, இலக்கியம் குறித்த ஒரு கொள்கை அல்லது வெளிப்பாடு எனக் கொண்டாலும், பரந்த பொருளில் அதுவொரு வாழ்க்கை முறையையும் மனநிலைகயையுமே குறிக்கின்றது. தொழில்புரட்சிக்குப் பின்னர் (Industrial Revolution) முதலாளித்துவப் பொருளாதார வளர்ச்சியால் 19ஆம் நூற்றாண்டின் பின்பகுதியில் மக்களின் வாழ்க்கை முறையிலும் வாழ்க்கையைப் பற்றிய நோக்கக் கணிப்பிலும் பல மாற்றங்கள் ஏற்பட்டன. இம்மாற்றங்கள் பிரான்சை மையமாகவும், இத்தாலி, இங்கிலாந்து ஆகிய ஐரோப்பிய நாடுகளைச் சார்ந்தும் நிகழ்ந்தன.

அதுநாள் வரையிலும் தமிழ்நாட்டில் ஆதிக்கம் பெற்றிருந்த பழைய பொருளாதார உற்பத்தி உறவுகளும் பண்பாட்டு மதிப்புக்களும் தன்னிலை இழந்தபோது, பழம் மரபுகளைப் பற்றிய பார்வை மாறியது. “பழைமைக்கு மாறான புதுமை” என்னும் நிலைப்பாட்டில் மக்களின் வாழ்க்கைப் போக்குகளும் சிந்தனைகளும் மாறின. இந்நிலையில் 'நவீனத்துவம்' என்னும் இலக்கியக் கொள்கை,

“புதிய கலை, புத்திலக்கியம், புதிய வடிவம் கலை இலக்கியம் சுதந்திரமும் சுயமும் கொண்டது சமகாலத்துவமும் அதன் பிரச்சினைகளும் கலை இலக்கியப் பொருள்களாக அமையலாம் அரசியலற்ற உயர்மேட்டிமை மனப்போக்கு தனித்துவம் – தரம் – புனிதம் ஆகியவற்றை முன்னிறுத்துவது சோதனைகளிலும் சாதனைகளிலும் ஈடுபாடு தாராளமான மனிதநேயம் பழைமைக்கு எதிர்ப்பும் மறுப்பும் அதற்கெதிரான புதிய தேடுதல்” (தி.சு.நடராசன், 2006:157) எனத் திறனாய்வாளர்களால் அறிமுகம் செய்யப்பட்டது.

முதலாளித்துவ வெளிப்பாடாகவும் அதன் அங்கமாகவும் தோன்றிய நவீனத்துவம் முதலாளித்துவத்தின் அடுத்தகட்ட வளர்ச்சியில் 1960 – 1970களில் நெருக்கடிகளுக்கு ஆளானது முரண்பாடுகளாலும் இயக்கங்களினாலும் இக்கொள்கை சிதைவடைந்து நவீனத்துவத்திற்கு எதிர்ப்பு, மாற்று என்னும் முறையில் பின்னை நவீனத்துவம் தோன்றியது. தமிழில் நவீனத்துவம் 1925க்குப் பின்னர் தோன்றியது எனக் கொள்ளலாம். புதுமைப்பித்தன் “தெருவிளக்கு” என்னும் சிறுகதைப் படைப்பு வாயிலாகத் தமிழில் நவீனத்துவத்தைத் தோற்றுவித்தார் எனக் கொள்வது பொருத்தமாகத் தோன்றுகின்றது.

## புதுமைப்பித்தன் கதைப் படைப்புக்களில் நவீனத்துவ நோக்கு

தான் வாழ்ந்த காலகட்டத்திற்குப் பின்னரும் அதே முக்கியத்துவத்துடன் மதிப்பிடப்படும் படைப்பாளிகளைச் செவ்விலக்கியவாதிகள் எனலாம். அவர்கள் படைத்த இலக்கியங்களே செவ்விலக்கியங்கள் (Classical Literature) ஆகும். அவ்விலக்கியங்கள் செவ்வியல் மதிப்புடையவை. இந்த அடிப்படையில் புதுமைப்பித்தன் சிறுகதைகளை செவ்வியல் மதிப்புடைய தமிழ்ச்சிறுகதைகள் எனக் கொள்ளலாம். இந்த அடிப்படையில் அழகியல் தன்மை கொண்டவை அல்லது முற்றிலுமாக மாற்றி அமைக்கப்பட்ட இலக்கியங்களை செவ்வியல் இலக்கியம் எனக் கூறலாம்.

“தமிழ்க் கவிதைக்குச் சங்கப் பாடல்கள் செவ்விலக்கியங்கள் நவீனத் தமிழ்க் கவிதைக்குப் பாரதியாரின் வசனகவிதைகள் செவ்விலக்கியங்கள் நவீன உரைநடைக்குப் பாரதியும் புதுமைப்பித்தனும் எழுதிய கட்டுரைகளும் கதைகளுமே செவ்விலக்கியங்கள். சிறுகதை வடிவத்தின் முன்னோடியாகிய வ.வே.சு.ஐயர் செவ்வியல் வாதி அல்லர். சிறுகதையின் அனைத்துச் சாத்தியக்கூறுகளையும் முதலில் பரிசீலித்த, அதன் வெற்றிகளையும் தோல்விகளையும் சந்தித்த புதுமைப்பித்தனே செவ்விலக்கியவாதி” (க.நா.சுப்பிரமணியம் 1995:38-39) என்னும் கூற்று புதுமைப்பித்தன் கதைப்படைப்புக்களின் நவீனத்துவ நோக்கினை வெளிப்படுத்துவதாக அமைகின்றது.

## புதுமைப்பித்தன் சிறுகதைகளில் பன்முக நோக்கு

தமிழ்ச் சிறுகதைகளின் யதார்த்தவாதக் கதைகள், இயல்புவாதக் கதைகள், தத்துவ விசாரணைக் கதைகள், புராணப் பரிசீலனைக் கதைகள், வடிவமற்ற கதைகள், அங்கதக் கதைகள் ஆகிய அனைத்திற்குமான மூலவடிவங்கள் புதுமைப்பித்தன் சிறுகதைகளில் உள்ளன. கற்பனாவாதம் மற்றும் இலட்சிய வாத எழுத்துக்களுக்கும், நவீனத்துவ எழுத்துக்கும், பின்நவீனத்துவப் படைப்புக்களுக்கும் முன்மாதிரியாக அவரது சிறுகதைப் படைப்புக்கள் உள்ளன.

“புதுமைப்பித்தன் தன்காலக் கட்டத்தின் அழகியல், கருத்தியல்களுடன் ஒரு பகுதியாக இணைந்திருக்கும்போதே, எக்காலத்திற்கும் பொருந்தும் மற்றொரு பகுதியையும் கதையாக்குகின்றார். அவரெழுதிய காலத்தில்

‘சாபவிமோசனம்’ ஒரு நல்ல சிறுகதையாக அடையாளம் காணப்பட்டது. நவீனத்துவ வாசிப்பு ‘செல்லம்மாளை’ அடையாளம் கண்டது. நவீனத்துவத்தை மறுக்கும் ஜெயமோகன் அவரது ‘கபாடபுரம்’ என்ற கதையைச் சாதனையாகக் கருதுகின்றார். அழகியலும் கருத்தியலும் மாறும்போது புதிய வாசிப்புகள் சாத்தியமாகும். வரலாற்று மிகைக் கற்பனை கொணட் அவரது ‘கபாடபுரம்’ கதையைத் தமிழ்ச் சமூகத்தின் கூட்டுநனவிலி மனத்தின் வெளிப்பாடாக வாசிக்கலாம். சுந்தரராசாமி ‘செல்லம்மாள்’ கதையை மகத்தான காதல்கதை என்கின்றார். எம்.வேதசகாயகுமார் அக்கதையில் வரும் பிரம்மநாயகம்பிள்ளையின் கையின் நிழல் செல்லம்மாளின் ஈரல்குலையை பிடுங்குவதுபோல் கிடந்தது என்ற ஒற்றை வரியை மையமாக வைத்து தகாத உறவின் ஓர் கரிய சித்திரமாக ஒரு நவீனத்துவ வாசிப்பை அக்கதைக்கு அளிக்கிறார். கயிற்றரவு, சிற்பியின் நரகம், கபாடபுரம் ஆகிய புதுமைப்பித்தன் சிறுகதைகள் எழுப்பும் வினாக்களை அவருக்கு முன்பும் பின்பும் தமிழ்ச்சமூகம் எழுப்பிக்கொண்டுதான் இருக்கிறது. நவீனத் தமிழ் உரைநடை இலக்கியத்தின் செவ்வியல் பரப்பு புதுமைப்பித்தனின் சிறுகதைப் படைப்புக்களே” (ஜெயமோகன்: 2003: 65-66) என்னும் திறனாய்வு மதிப்புரை, புதுமைப்பித்தன் சிறுகதைகளின் பன்முக நோக்குகளையும் நவீனத்துவ வெளிப்பாடுகளையும் சரியாக அடையாளம் காட்டுவதாக அமைந்துள்ளது.

புதுமைப்பித்தன் சிறுகதைகளின் குரல்கள் அவர் தமிழ்ச் சமூகத்தின் மீது கொண்டிருந்த தார்மீகக் கோபத்தின், அதிருப்தியின் வெளிப்பாடுகளே. அவை நவீனத்துவத்தின் பன்முகங்களை வெளிச்சமிட்டுக் காட்டுகின்றன.

**வடிவச் சோதனைகள்**

புதுமைப்பித்தன் தம் சிறுகதைப் படைப்புக்களில் வடிவப் பரிசோதனை முயற்சிக்கு ஆட்பட்டு முட்டிமோதித் தவிக்கின்றார். தமிழ்வாசகர்கள் இதைப் புதுமைப்பித்தனின் பலவீனமாகக் கருதுகின்றனர்.

புதுமைப்பித்தன் சிறுகதைகளில் எப்போதும் முடிவிலே இன்பம், பிரம்மராக்ஷஸ், மனிதயந்திரம், சாபவிமோசனம், பொன்னகரம், கட்டிலை விட்டிறங்காக்கதை, செவ்வாய்தோஷம், செல்லம்மாள் என்பன போன்ற முற்றிலும் மாறான வடிவமைப்புகளைக் கொண்ட கதைகளைக் காணுகின்றோம். இந்த அளவுக்கு மாறுபட்ட புனைகதை வடிவங்களை, அதன் சாத்தியக் கூறுகளைப் பரிசீலனை செய்த தமிழ்ச் சிறுகதைப் படைப்பாளி புதுமைப்பித்தன் மட்டுமே’ (சா.கந்தசாமி, 1999: 36-39) என்பர். இதற்குக் காரணம் புதுமைப்பித்தன் தான் கூறவந்த விசயத்தில் உறுதியான, தீர்க்கமான முடிவினை எடுக்காமையே எனலாம். தமிழ்ச் சிறுகதைப் படைப்பாளிகளில் பலர் ஒரு கருவையே மீண்டும் மீண்டும் பலகோணங்களில் பயன்படுத்தியுள்ளனர்.

புதுமைப்பித்தன் மட்டுமே நவீனத் தமிழ்ச் சிறுகதையின் செவ்வியல் வடிவத்தைப் படைத்தவராக விளங்குகின்றார். அவர் நவீனத் தமிழிலக்கியம் பிறப்புக் கொண்ட தருணத்தில் எழுதியவர். அவருக்கு முன்னர் பாரதியார், அ.மாதவையா, ராஜம்அய்யர், வ.வே.சு.ஐயர் ஆகியோரும் சிறுகதைகளை எழுதினர். இவர்களுள் பாரதியாரைத் தவிர்த்துப் பிறரெல்லாம் நவீனத்துவப் படைப்பின் சவால்களையும் சாத்தியக் கூறுகளையும் எதிர்கொள்ளவில்லை.

புதுமைப்பித்தன் மட்டுமே புனைகதையின் சாத்தியக் கூறுகளுக்கு நவீனத்துவ வெளிப்பாட்டிற்கு முகம் கொடுத்த முதல் தமிழ்ச் சிறுகதைப் படைப்பாளி ஆவார் (சுந்தரராஜன், பெ.போ. (சிட்டி), சிவபாதசுந்தரம், 1989: 127-129). இதனால்தான் க.கைலாசபதி, “செய்யுளில் தன் வெளிப்பாட்டை நிகழ்த்திவந்த தமிழ்மரபு பெரும் மரபு, உரைநடையைச் சந்தித்தபோது ஏற்படும் திகைப்பு, தத்தளிப்பு, அவதானிப்பு, சிதறிப் பரவுதல்

ஆகியனவற்றைத் தான் நாம் புதுமைப்பித்தனில் காண்கிறோம்" (க.கைலாசபதி, 1980: 19-21) எனப் புதுமைப்பித்தனின் மொழியாளுமையைக் குறிப்பிட்டுள்ளார். இந்த அடிப்படையில் புதுமைப்பித்தன் 'திருக்குறள் செய்த திருக்கூத்து', 'இலக்கிய மம்மநாயனார் புராணம்' ஆகியனவற்றைப் பழந்தமிழ் இலக்கிய மரபுகளைக் கிண்டல் செய்யும் நோக்கத்தில் எழுதியுள்ளார்.

'அன்றிரவு', 'சாபவிமோசனம்' ஆகிய புதுமைப்பித்தன் சிறுகதைகளும் பழந்தமிழ் இலக்கிய மரபின் சாடல்களே. "வேதாந்த மரபின் மீது கசப்பை உமிழும் 'மனக்குகை ஓவியங்கள்', வேதாந்த மரபு நவீனத் தமிழிலக்கியத்தில் தோற்றுவித்த 'கயிற்றரவு', நவீன காலத்தைக் கடிந்து மனக்கசப்புடன் எதிர்நோக்கும் 'கடவுளும் கந்தாமி பிள்ளையும்', நவீன காலத்தின் வன்முறையை உக்கிரமாக வெளிப்படுத்தும் 'நாசகாரக்கும்பல்' போன்ற சிறுகதைகளையும் புதுமைப்பித்தன் தன்பாணியில் எழுதியுள்ளார். இதுதான் புதுமைப்பித்தனின் வரலாற்றுப்பணி என்றால் அது மிகையன்று. இந்தப் பணியின் வெற்றி தோல்விகளை வைத்தே புதுமைப்பித்தனை நாம் மதிப்பிட வேண்டும்" (ம.திருமலை, 2001: 72-73) என்னும் கருத்துரை புதுமைப்பித்தன் சிறுகதைகளுக்குப் பொருந்துவதாகவே உள்ளது.

புதுமைக்குப் பித்தரான புதுமைப்பித்தன் பழந்தமிழ் மரபின் காதல், வீரம், என்னம் இரு பொருண்மைகளை முற்றாக ஒதுக்கியுள்ளார். கொலை, பேய், உருவகம், தத்துவம், புராணம், நாட்டார் வழக்காறுகளைத் தம் கதைகளில் சோதித்துப் பார்த்த புதுமைப்பித்தன் ஒரு காதல் கதையைக்கூட எழுதவில்லை. வீரசாகசக்கதையும் அவரிடம் இல்லை. தன்னிகரில்லாத தலைவன் என்ற பேச்சுக்கும் இடமில்லை.

### புதுமைப்பித்தன் சிறுகதைகளின் அடிப்படைச் சாரம்

யதார்த்த நிலையில் சமூக விமர்சனங்களை முன்வைத்தல், புராணங்களின் அடிப்படையில் தத்துவம் சார்ந்த வினாக்களை எழுப்புதல், நிகழ்வுகளை மனக்கசப்புடன் எள்ளிநகையாடுதல், குழந்தைகளை விருப்பத்துடன் சித்திரித்தல் ஆகியன புதுமைப்பத்தன் சிறுகதைகளின் அடிப்படைச் சாரங்களாக உள்ளன. க.நா.சு., புதுமைப்பித்தனை 'மரபு எதிர்ப்பாளர்' என்றபோதும், அவரது கதைகளில் மரபுகளின் தவிர்க்க இயலாத தொடர்ச்சிகளும் உண்டு.

### வேளாள மரபு

ராஜ்கௌதமன் 'புதுமைப்பித்தன் எனும் பிரம்ம ராக்ஷஸ்' என்னும் தம் நூலில், புதுமைப்பித்தனின் கதைச் சிந்தனைகள் பெரிதும் கீழைத்தேயத்து இந்திய மரபைச் சேர்ந்தவை. இவை அவரது கதைகளுக்கு வலுவான கருத்தியல் பலத்தை அளித்துள்ளன (பக்.76) எனக் கூறியுள்ளார். இதற்குப் புதுமைப்பித்தன் சிறுகதைகளே அகச்சான்றுகளாக அமைந்துள்ளன.

புதுமைப்பித்தன் வேளாண்மரபின் தத்துவக்கிளையாக சித்தர் மரபில் சித்தர்களைக் குறித்து 'ஞானக்குகை', 'பிரம்மராக்ஷஸ்' ஆகிய சிறுகதைகளை எழுதியுள்ளார். இக்கதைகளில் வெளிப்படும் புதுமைப்பித்தனின் சிந்தனைகள் சைவசித்தாந்த மரபினுள் அடங்குவதாக உள்ளன. எனினும், "புதுமைப்பித்தனின் கதைகளில் வேளாள வாழ்க்கைக் கூறுகள் மிக இயல்பாகவே வெளிப்படுகின்றன. கடவுள் என்னும்போது அது தென்னாடுடைய சிவனாகவும், தனிமனிதன் என்னும்போது திருநெல்வேலிச் சைவப்பிள்ளையாகவும் அவரது கதைகளில் வருகிறார்கள். வேளாண் தெருக்களின் காட்சி வருணனைகளில் அபாரமான நுட்பங்கள் வெளிப்படுகின்றன. வேளாளர் மொழியின்

நுண்ணிய வெளிப்பாடுகளும் அவரிடம் உள்ளன. இதை வைத்து அவரைச் சைவ வேளாளர்களின் பிரதிநிதி என்றும், அவரது கதைகளின் குரல்கள் வேளாளர் குரல்கள் என்றும் கூறமுடியாது” (தி.முருகரத்தினம், 1976: 49-53) என்னும் மதிப்பீடும் முன்வைக்கப்படுகின்றது.

புதுமைப்பித்தன் தன்னையறியாமல் வெளிப்படும் மரபுமொழியின் கூறுகளை அங்கதமாக மாற்றியுள்ளார். அவர் ஆங்கில மொழியின் சொற்றொடர் அமைப்புக்களையும் படிமங்களையும் தமிழ்ப்படுத்தியுள்ளார். எனவே தான் திறனாய்வாளர், “புதுமைப்பித்தனில் வேளாள இனக்குழுக் கூறுகள் உள்ளன என்பது உண்மை. அவர் வேளாள இனக்குழுப் படைப்பாளி என்பது பொய் புதுமைப்பித்தன் தமிழ் உரைநடையின் தொடக்ககாலத்தில் எழுதியவர். அவருக்குப் பின்புலமாகப் பெரும் செய்யுள் மரபு இருந்தது. அது கவிராய மரபு. அம்மரபின் நீட்சி புதுமைப்பித்தனில் உண்டு” (சு.வேங்கடராமன், 1993:27-29) என்னம் கருத்துரையை முன்வைக்கின்றனர்.

### புதுமைப்பித்தன் சிறுகதைப் போக்குகள்

நவீனத்துவக் கொள்கைகள் மற்றும் கோட்பாடுகளின் அடிப்படைகளில் அணுகும்போது புதுமைப்பித்தன் சிறுகதைகளில் பலதரப்பட்ட சிந்தனைகள் காணப்படுகின்றன. புதுமைப்பித்தன் இலக்கிய விமர்சகனை ‘பிரம்மம் கைக்குச் சிக்காத வேதாந்திகள்’ என்று சரியாகவே கூறினார். புதுமைப்பித்தன் ‘பறைநாய்’ என்னும் சொல்லைப் பயன்படுத்தியுள்ளார். அவரிடம் முரண்களும் உள்ளன. “வைசவ வேளாளர் சமூகத்தை “நாசகாரக்கும்பல்” என்ற சைவவேளார் அவர். அவர் நமது மரபென இந்துமரபைச் சொன்னவர்தான். ‘அந்த சாஸ்திரங்கள் முகத்தில் இதைக்கொண்டுபோய் பூசுங்கோ’ என விதவையைப் பேசவைத்தவரும் புதுமைப்பித்தனே” (கோ.கேசவன், 1984:39-42). இவைகளைக் காணும்போது புதுமைப்பித்தனின் சமுதாயப் பார்வையைச் சரியாக மதிப்பீடு செய்ய இயலவில்லை. எனினும் புதுமைப்பித்தன் சிறுகதைகள் வாசகர்களின் பன்முக வாசிப்பினால் உயிர்பெற்றன.

புதுமைப்பித்தனின் முக்கியமான சிக்கல் அவர்தன் வேளாண்மைப் பின்னணியிலிருந்து விடுபட்டது என்பார் எம்.வேதசகாய குமார். அவர், “தம் முக்கியமான கதைகளிலெல்லாம் நிலம் சார்ந்த வாழ்க்கையை இழந்தவனின் ஏக்கச்சுவை நுட்பமான வரிகளாக வெளிப்படுகின்றன. ‘சுப்பையாபிள்ளையின் காதல்கள்’, ‘செல்லம்மாள்’ ஆகிய கதைகளில் இந்த ஏக்கத்தின் வெளிப்பாடுகளை எழுதியுள்ளார்” (எம்.வேதசகாயகுமார், 1995: 92-93). இழந்துபோன வேளாண்மைச் சமுதாயத்தின் ஏக்கம் புதுமைப்பித்தனிடம் இல்லை. முற்றிலும் வேளாண்மை வாழ்வு சார்ந்த விளைநிலங்களையே மொழியாகக் கொண்டு சு.வேணுகோபால், கண்மணி குணசேகரன் இருவர் மட்டுமே கதைகளைப் படைத்துள்ளனர் (இரா.தண்டாயுதம், 1972:66).

புதுமைப்பித்தனின் சிற்பியின் நகரம், வாழ்க்கை, சாமியாரும் குழந்தையும் சீடையும், சித்தி ஆகிய சிறுகதைகளில் ஏகப்பட்ட சாமியார்கள் வருகின்றனர். ‘சித்தி’யில் கிழட்டுச் சாமியார் கையில் ‘திருவாசகம்’ இருக்கிறது. அதை அவருக்குப் படிக்கத் தெரியாது.

### முடிவுரை

- புதுமைப்பித்தன் சிறுகதைகளில் நவீனத்துவத்தின் பன்முகத் தன்மைகள் வெளிப்பட்டு நிற்கின்றது. தன் கதைப் படைப்புக்களைக் கட்டுப்பாடற்ற பித்தத்தின் வெளிப்பாடு எனக்கூறும் புதுமைப்பித்தன் தன்

கதைகளை எதிர்மறைத் தன்மை கொண்டவை என்கின்றார். அவரது இக்கூற்றுக்கள் அவரது சிறுகதைகளுக்குப் பொருந்தும்.

- "வேதாந்திகளின் கைக்குச் சிக்காத கடவுள்" எனக்கூறும் புதுமைப்பித்தன் சிறுகதைகளில் சிவஆலயங்களின் சித்திரிப்பு இல்லை. அவர் ஆன்மீகம், வழிபாடு, சடங்குகள், பக்தி ஆகியனவற்றின் மீது கசப்பையே பதிவு செய்துள்ளார்.
- குழந்தைகளின் சித்திரிப்பில்தான் அவரது சிறுகதைகள் சிறப்புப் பெறுகின்றன.
- இழந்துவரும் விவசாய வாழ்க்கையின் ஏக்கம் ஒருபுறமும், இயந்திரத் தொழில் மைய வாழ்க்கையின் மீதான கசப்புணர்வு மறுபக்கமும் புதுமைப்பித்தன் கதைகளின் பொதுமனநிலையாக உள்ளது.
- மதம், சித்த வைத்தியம், மனித உறவுகள், நீதிமுறைகள் ஆகியனவற்றை அவர் கசப்புடன்தான் பார்க்கின்றார்.
- நகரத்தையும் நகர வாழ்க்கையையும் அவர் விடமாகக் காணுகின்றார்.
- புதுமைப்பித்தனின் கதைகூறல் முறை தனித்துவமானது.

## பயன்பட்ட நூல்கள்


1. கந்தசாமி, சா., இருபதாம் நூற்றாண்டின் தமிழ்ச் சிறுகதையாசிரியர்களின் தொகுதி, கவிதா பப்ளிகேஷன், சென்னை, 1999.
2. கேசவன், கோ., இலக்கிய விமர்சனம் – ஒரு மார்க்சியப் பார்வை, அன்னம், சிவகங்கை, 1984.
3. கைலாசபதி, க., நவீன இலக்கியத்தின் அடிப்படைகள், மக்கள் வெளியீடு, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை, 1980.
4. சுப்பிரமணியன், க.நா., புதுமைப்பித்தன் இலக்கியத்தடம், புதுமையும் பித்தமும், காவ்யா, பெங்களூர், 1995.
5. சுந்தரராஜன், பெ.கோ. (சிட்டி), சிவபாதசுந்தரம், சோ., தமிழில் சிறுகதை வரலாறும் வளர்ச்சியும், க்ரியா, சென்னை, 1989.
6. தண்டாயுதம், இரா., தமிழ்ச் சிறுகதை முன்னோடிகள், தமிழ்ப் புத்தகாலயம், சென்னை, 1972.
7. திருமலை, ம., தமிழ்ச் சிறுகதை நேற்றும் இன்றும், தொகுதி மூன்று, ஐந்திணைப் பதிப்பகம், சென்னை, 2001.
8. வேதசகாயகுமார், எம்., தமிழ்ச் சிறுகதைப் போக்குகள், காவ்யா, சென்னை, 1995.
9. முருகரத்தினம், தி., புதுமைப்பித்தன் சிறுகதைக்கலை, சர்வோதயா இலக்கியப் பண்ணை, மதுரை, 1976.
10. வேங்கடராமன், சு., தமிழ்ச் சிறுகதைகள் அன்றும் இன்றும், தாகம் பதிப்பகம், சென்னை, 1993.
11. ஜெயமோகன், முதல் சுவடு, தமிழினி பதிப்பகம், சென்னை, 2003.
12. நடராசன், தி.சு., திறனாய்வுக்கலை, என்.சி.பி.ஹெச்., சென்னை, 2006.

# நாட்டுப்புற இலக்கியக்களில் அறிவியல் சிந்தனைகள்

**தெ. முத்து லெட்சுமி**
முதுகலைத்தமிழ் இரண்டாமாண்டு
தெ.தி. இந்துக்கல்லூரி, நாகர்கோவில்

***ஆய்வுச்சுருக்கம்***
*பண்டைய கால மக்களின் கதைகள் பாடல்கள் நம்பிக்கைகள், சடங்குகள் போன்றவற்றை விளக்குவதே நாட்டுப்புற இலக்கியங்கள் எனப்படும். இவ்விலக்கியங்கள் ஏட்டில் எழுதா இலக்கியங்கள் என்றும் பாமர மக்களின் இலக்கியங்கள் என்றும் அழைக்கப்படுகின்றுது. நம் தமிழரின் இலக்கியங்களில் அணு முதல் அண்டம் வரையில் அறிவியல் பரவின் கிடக்கின்றன. அத்தவகையில் நாட்டுப்புற இலக்கியங்களில் அறிவியல் சிந்தனைகள் பற்றிய கருத்துகளை விளங்க முயல்வதாக இக்கட்டுரை அமைகிறது.*

## முன்னுரை

தமிழ்மொழியில் ஏராளமான இலக்கியங்கள் காணப்படுகின்றன. இலக்கண, இலக்கியங்களைக் கொண்டு நம் முன்னோர்களின் வாழ்வியல் நிலைகளை அறிய முடிகிறது. ஏட்டில் எழுதா இலக்கியமான நாட்டுப்புற இலக்கியங்கள் நாட்டுப்புற மக்களின் இயல்பான வாழ்க்கையை குறிப்பதாக அமைகின்றது. இயல்பான வாழ்க்கையை வாழ்ந்தாலும் அதில் ஒவ்வொரு செயலும் அறிவியல் சிந்தனைகளை வெளிக்கொணர்வதாக உள்ளது. அத்தகைய கருத்துக்களை ஆராய்வதே இக்கட்டுரையின் நோக்கமாக அமைகிறது.

## நாட்டுப்புற இலக்கியங்கள்

பழங்கால மக்கள் தன் சிந்தனையை வெளிக்கொணர்ந்த சில காலத்திலே வாய்மொழி இலக்கியங்கள் தோன்றிவிட்டன. இந்த காலத்தில் தோன்றிய இலக்கியமே படிப்படியாக அறிவியல் துறைகளின் வளர்ச்சிக் கொண்டு வளர்த்து நாட்டுப்புற இலக்கியங்களாக உருப்பெற்றது. பாமர மக்கள் தன் உள்ளத்து உணர்ச்சிகளை பாட்டாகவும் கதைகளாகவும் வெளிப்படுத்தி வாழ்த்தான். தனக்கென்று சில நம்பிக்கைகளை உருவாக்கி அதன்படி தன் வாழ்வை வாழ்ந்தார்கள். 'நாட்டுப்புற இலக்கிய வேர்கள் மனித சமுதாயத்தில் மிக ஆழமாகப் பதித்துள்ளன"[1] என்று **சு. சக்திவேல்** அவர்கள் கூறிகின்றார்.

தமிழில் நாட்டுப்புறவியல் நாட்டார் வழக்காற்றியல், நாட்டுப்புற பண்பாடு என்று பல்வேறு பெயர்களில் வழங்கப்படுகின்றது. நாட்டுப்புறவியல் என்பதே நிலைத்து நிற்கிறது. நாட்டுப்புற இயலை இரண்டு நிலைகளில் வகைப்படுத்தலாம்.

- நாட்டுப்புற இலக்கியங்கள்
- நாட்டுப்புறக்கலை, நம்பிக்கைகள்

இவற்றில் நாட்டுப்புற இலக்கியங்கள் என்பவை,

- நாட்டுப்புறப் பாடல்கள்
- நாட்டுப்புறக் கதைகள்
- நாட்டுப்புறக் கதைப்பாடல்கள்
- பழமொழிகள்
- விடுகதைகள்
- புராணங்கள்

என்பனவற்றை குறிப்பிடுகின்றன.

## நாட்டுப்புற இலக்கியத்தில் அறிவியல்

பாமர மக்கள் பற்றிய நாட்டுப்புற இலக்கியங்களில் ஏராளமான அறிவியல் கூறுகள் குவிந்துள்ளன. நாட்டுப்புற மக்கள் தன் இன்ப, துன்பங்களை பாடல் வழி வெளிப்படுத்தினர். இதில் இன்று நாம் சொல்லும் அறிவியல் சிந்தனைகள் பலக்காணப்படுகின்றன. மனிதனின் பிறப்பு முதல் இறப்பு வரை பாடல்களின் கருத்தும் அறிவியலை வெளிப்படுத்தும் விதத்தில் அமைகிறது. நாட்டுப்புற மக்கள் இயற்கையோடு இயைந்த வாழ்க்கையை வாழ்ந்தனர். இயற்கையை தன் இரு கண்களாகப் போற்றினர். மழையும் சூரியனும் அவர்தம் வாழ்வில் முக்கியமாக விளங்கின என்பதை நாட்டுப்புற பாடலில்,

**‘சந்திரரே சூரியரே**
**சாமி பகவாவே**
**இந்திரரே வாசு தேவா**
**இப்பமழை பெய்ய வேனும்**
**மந்தையிலே மாரி யாயி**
**மலைமேலே மாயவரே**
**இந்திரரே சூரியரே**
**இப்ப மழை பெய்யவேணும்’’**

என்று தொன்று தொட்டு இயற்கையையும் சூரியன் சந்திரனை வணங்கி மழை வேண்டி பாடல் மூலம் தன் கருத்தை முன் வைக்கின்றன. இவர்களது இந்த வேண்டுதலுக்கு இணங்க மாரியும் பொழிக்கின்றது. இயற்கையை பாதுகாத்து சுற்றுச்சுழலை பாதிக்கா வண்ணம் இருந்ததால் மழை பொழிந்தது என்னும் அறிவியல் இங்கு இருப்பதை நாம் உணர முடிகிறது.

## நாட்டுப்புற கதைப்பாடல்கள்

கதையைப் பாடலாகப் பாடுவதைக் கதைப்பாடல் எனப்படும் அது ஒரு கதையாகவோ அல்லது பல உட்கதைகள் கொண்ட கதையாகவோ காணப்படுகிறது. கதைபாடல்கள் பெரும்பாலம் பேச்சு வழக்கிலே காணப்படுகிறது. ‘கதையைப் பாடலாகக் கூறுவது அல்லது பாடலில் கதை பொதிந்து வருவது கதைப்பாடல் என்றழைக்கப்படுகின்றது. இது ஒரு கதையைப் பற்றிதாகவும் .இருக்கலாம் அல்லது பல உட்கதைகள் கொண்ட கூட்டுக் கதைகளாகவும் இருக்கலாம் இந்த உட்கதைகள் மூல கதைக்கிப் பக்க பலமான அல்லது அதன் மையத்தை நோக்கிச் செல்வனவாகவும் அமையும் என்கிறார்”[2]

டாக்டர் .சு. சண்முக சுந்தரம் அவர்கள், கதைப்பாடல் வினாவிடை தரும் முறையில் அமைகின்றது. இதனை மகளிர்கள் பொழுதுபோக்கு விளையாட்டாக விளையடுகின்றன. ஒருவர் ஓர் கதையைக் பாடல் மூலம் வினா கூறி மற்றொருவர் அதனை போல் பாடல்மூலம் விடை கூறுவது அம்மானை சிலப்பதிகாரத்தில் காண முடிகிறது.

பின்னர் நிகழ்வதை முன்னர் உயர்த்துவனாக கனவு கருதப்படுகின்றன. இதனை கதைப்பாடல்கள் வழி நாட்டுப்புற மக்கள் கூறினர்.

**‘பன்னிரண்டு வருஷம் பஞ்சம் வந்து சேர்ந்துவாம்**
**தாலி தவிரமற்ற தங்கமெல்லா முண்ட பஞ்சம்**
**மங்கலியந் தான்தவிர மற்றதெல்லாம் உண்ட பஞ்சம்**
**தாங்க முடியாமல் தாய்வீடு வருவதுமாய்**
**வழிகள் தெரியாமல் வனத்தில் புலம்வதாய்**
**காட்டியே சத்திடக் காதிலே கேட்டுது போல்**
**சொப்பணங் கண்டானே துவரமன்னன் நல்லதம்பி’’**

கனவு என்பத உளவியல் ரீதியான அறிவியல் ஆகும். பழந்தமிழர் தமக்கு வரக்கூடிய தீங்கை முன்கூட்டியே கனவுகள் மூலம் அறிவதை காணமுடிகிறது. இன்றைய

அறிவியலாகும் உளவியல் ரீதியான கனவும் தனக்கு வரும் ஆபத்தை உணருபவராக மனிதர்கள் உள்ளனர் என்று கூறுகின்றனர். இன்றைய ஆய்வாளர்கள் பட்டம் பெற்று சொல்லிய அறிவியலே நாட்டுப்புற மக்கள் தன் கதைப்பாடல்கள் வழி கூறிவந்ததை இங்கு அறிய முடிகிறது.

**பழமொழிகள்**

நாட்டுப்புற இலக்கியத்தில் பழமொழி என்பது இன்றியாமையாதது ஆகும் விரிவாக கூற வேண்டியதை மிகச்சுருக்கமாக ஒரே வார்த்தையில் கூறுவது பழமொழியின் இயல்பாகும். பழமொழியை தொல்காப்பியர் முதுச்சொல்" என்று குறிப்பிடுகின்றார்.

> **'நுண்மையும் சுருக்கமும் ஒளியும் உடையையும்**
> **மேன்மையும் என்று இவை விளங்கத் தோன்றிக்**
> **குறித்த பொருளை முடித்தற்கு வரூஉம்**
> **ஏது நுதலிய முதுமொழி என்ப''**[3]

என்ற நூற்பா மூலம் நுட்பத்தன்மை உடைமை, சுருங்கிய வடிவில் இருந்தல், உண்மைத் தன்மை பெற்றிருத்தல், எளிமையாகப் பொருளை விளக்கும் தன்மை கொண்டிருத்தல் என்னும் நான்கு இயல்புகளை விளக்க முறப்பெற்றிருத்தல், இந்நான்குடன் சொல்லக் கருதிய பொருளை முடிப்பதற்குக் காரணமாய் அமைவதனை முதுமொழி என்று கூறுகிறார். இவ்வாறு தொல்காப்பியர் கூறிய இலக்கண வரையறை நாட்டுப்புற மக்கள் என்னவென்று தெரியாமல் பயன்படுத்திய பழமொழிகள் மிக்கவியப்பை தருகிறது.

ஏந்த பட்டறிவுமின்றி அறிவியல் சார்ந்த சிந்தனைகளை ஒருவரியில் கூறியவர்கள் நாட்டுப்புற மக்கள் இவர்களின் பழமொழியில் அறிவியல் கூறுகள் பல உள்ளன. அவற்றில் ஒன்றான வானிலைப்பற்றிய அறிவியல் சிந்தனைகளை பின்வருமாறு பழமொழிகள் குறிப்பிடுகின்றன.

- தட்டான் தாழப்பறத்தால் தப்பாமல் மழை வரும்
- ஐப்பசி மாதம் அடைமழை கார்த்திகை மாதம் கனமழை
- அந்திஈசல் பூத்தால் அடைமழை அதிகரிக்கும்
- வடக்கே தெற்கே மின்னல் தோன்றினால்மழை வரும்.

இவ்வாறு கூறிய பழமொழியில் வானிலைப் பற்றிய அறிவியல் இருப்பதை உணர முடிகிறது. இன்றைய வானிலை அறிவியாளர்கள் பல கருவிகள், செயற்கை கோள்கள் கொண்டு கூறியதை அன்றைய நாட்டுப்புற மக்கள் பூச்சியினங்களும், வானத்தில் தோன்றும் மாற்றங்கள் கொண்டும் இயற்கை வைத்து குறித்தனர். இந்த அறிவியல் தொழில் நுட்பத்தை நாட்டுப்புற இலக்கியங்களின் மூலம் பலவற்றை நம்மால் காண முடிகிறது என்றால் அது மிகையாகாது.

**விடுகதைகள்**

நாட்டுப்புற இலக்கியங்களில் பழமொழிக்கு அடுத்தப்படியாக இருப்பது விடுகதைகள். விடுகதைகள் விடுவிக்கப்பட வேண்டியது. வினா எழுப்பும் வகையாகவும் விடையறுக்கும் தன்மையாகவும் விடுகதைகள் உள்ளன. தமிழே புதிர்ப்பண்பை அடிப்படையாகக் கொண்டு அறிவு ஊட்டவதும் சிந்தனையைத் தூண்டுவது விடுகதையின் குறிக்கோளாகும். கனவு மனிதனது அடிமன உணர்வுகளுக்கு வெளியீடு தருவது போல விடுகதைகளும் தன் வெளியீட்டிற்கு உதவி செய்கின்றன. விடுகதையின் வரலாறு தொல்காப்பியத்தில் தொடங்கி இன்றுவரை தொடர்கிறது. இடைக்கால புலவர்கள் விடுகதைகளைச் செய்யுள் வடிவில் படினர்.

நாட்டுப்புற இலக்கியத்திற்குரிய அனைத்தும் பண்புகளும் விடுகதைக்கும் பொருந்தும் விடுகதைகளில் உவமை, உருவகப்பண்பு அடிப்படையாக அமைந்துள்ளன.

நாட்டுப்புற மக்களின் வாழ்க்கையின் பல்வேறு பகுதிகளையும் பிரதி பலிப்பனவான விடுகதைகள் வாழ்க்கையின் பயன்படு பொருள்களான கருப்பொருள் யாவற்றையும் விளக்கும் வகையினவாக அமைகின்றன.

- உருவம் இல்லாத மனிதன்
- உலகம் எல்லாம் சுற்றுகிறான் - காற்று
- தண்ணீர் இல்லாத தடாகத்தில்
- தாவிப்பாயுது ஒரு கப்பல் - ஒட்டகம்
- அம்பலத்தில் ஆடும் அழகுக்கண்ணன் - மயில்
- அடி மலர்ந்து நுனி மலரான பூப்பூக்கும் - வாழை
- எந்நேரமும் கொட்டும் சத்தங் கேட்காது - கண்ணீமை
- உயரப்பறக்குது ஊர்க்குருவி - வானவூர்தி

என்று இயற்கை விலங்குகள் பறவைகள் உடல் உறுப்புக்கள் போன்றவற்றை மிக கொண்டு மிக எளிமையாக தன் அறிவை பயன்படுத்தி விடுகதைகளை விளையாடுவதன் மூலம் அவர்களது அறிவு மேலும் வளர்ச்சியடைக்கின்றது. புதிது புதிதாக கண்டுபிடிக்கும் அறிவியல் கருத்து உருவாகிறது இன்று நாம் படிப்பதன் பெயரில் விடுகதைகளை படித்துக் கொண்டு இருக்கிறோம். ஆனால் அன்றே நாட்டுப்புற இலக்கியங்களில் விடுகதைகள் என்னும் அறிவியல் புதைத்து இருப்பதை நாம் அறிய முடிகிறது.

## முடிவுரை

பண்டைய மக்களின் பண்பாட்டு எச்சமாகத் திகழ்வது நாட்டுப்புற இலக்கியங்கள் ஆகும். நாட்டுப்புறப்பாடல்கள், கதைகள், பழமொழிகள் என்று பலக்கூறுகளை உள்ளடக்கிய நாட்டுப்புற இலக்கியங்களில் அறிவியல் சிந்தனைகள் இருப்பதை இக்கட்டுரை நமக்கு உணர்த்தியது. தமிழர்களின எந்த இலக்கியங்களிலும் அறிவியல் பொதித்து கிடைக்கின்றன. அறிவியல் இன்று நேற்று தோன்றியதல்ல பழந்தமிழர்கள் வாழ்ந்த இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே தோன்றியது ஆகும். தமிழர்களின் ஏட்டில் எழுதா இலக்கியங்களில் கூட அறிவியல் உள்ளதுஎன்பதற்கு உதாரணமாக இக்கட்டுரை அமைவதனை உணரமுடிகிறது.

## அடிக்குறிப்பு நூல்கள்

1. சு.சக்திவேல், நாட்டுப்புற இயல் ஆய்வு, பக்க எண்: 22, 1983, 58
2. சு.சண்முகசுந்தரம், நாட்டுப்புறயியல், பக்க எண்: 143
3. ச. திருஞானசம்பந்தம், தொல்காப்பியம் பொருளதிகாரம் மூலமும் உரையும் பக்க எண்: 330

# இலக்கியங்கள் சுட்டும் இசை மருத்துவத்தின் அறிவியல் சான்றுகள்

**முனைவர் சின்னையா - சூரியகுமார்**
முதுநிலை விரிவுரையாளார்தரம், இசைத்துறை
யாழ்ப்பாணப்பல்கலைக்கழகம், இலங்கை

***ஆய்வுச்சுருக்கம்***
*செவிவழி புகுந்து மனத்திற்கு இன்பத்தைக் கொடுக்கும் ஓர் சிறந்த கலையே இசையாகும். சிந்தைக்குப் புலனாகி உயிர்களுக்கு இன்பதுன்பங்களை விளைவிக்கக்கூடியது இதுவாகும். செவிப்புலனுக்குரிய ஒலியில் இருந்து சொற்களும், இசையும் பிறந்தன. தொன்று தொட்டுப் பயன்பாட்டிலுள்ள இசையின் பயன்களை எழுத்து வடிவில் வெளிப்படுத்துவதிலும் பார்க்க உள்ளுணர்வினால் உணர்ந்து பயன்பெறுவதே மிகவம் சிறந்ததாகும். இந்த இசையானது ஏனைய பலதுறைகளுடன் தொடர்புபட்டு இருந்தாலும் கூட மருத்துவத்துறையுடன் மிகவும் நெருங்கிய தொடர்பினைக் கொண்டுள்ளது. அந்த வகையில் உடல், மனம் சார்ந்த நோய்களினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு ஆரோக்கியத்தையும், மன அமைதியையும், ஆனந்தத்தையும் கொடுக்க வல்ல சக்தி இசைக்கு உண்டெனலாம். இத்தகைய சிறப்புக்களுடைய இசையானது தொன்று தொட்டு எவ்வாறு சிறந்து விளங்குகின்றது என்பதனையும், மருத்துவத்தில் எவ்வாறு பயன்பட்டது அல்லது பயன்பட்டுக் கொண்டிருக்கின்றது என்பதையும், தற்காலஅறிவியலில்இசைமருத்துவம் எவ்வாறு மேன்மை பெறுகின்றது என்பதனையும் ஆராய்வதே இவ்ஆய்வின் நோக்கமாகும். தற்கால மருத்துவத் துறையில் இசைச்சிகிச்சை வரவேற்புக்குரியதாக இருக்கின்ற அதே சமயம் அபிவிருத்தியடைந்த நாடுகளில் இது சிறப்பாகப் பயன்படடாலும் அபிவிருத்தி அடைந்து வருகின்ற நாடுகளில் ஒரு புதிய செய்தியாகவே பார்க்கப்படுகின்றது. அவ்வாறான நாடுகளில் இவ்வகை ஆய்வுகள் இன்றியமையாதனவாக இருந்தாலும் இவற்றினை மேற்கொள்வதில் ஏராளமான இடர்பாடுகள் உண்டு என்பதையும் மறுப்பதற்கில்லை, இசைதுறை மனித சுகநலவியலுடன் இணைந்ததாக இருந்துதாலும் கூட இன்றைய மருத்துவர்கள் பலருக்கு இதனை மேற்கொள்வதற்குரிய சந்தர்ப்பம் கிடைப்பது அரிதானதே. இவ்வாறான சந்தர்ப்பத்தில் வரலாற்று மற்றும் விவரண ஆய்வுகளை ஆதாரமாகக் கொண்டு இவ்வாய்வானது மேற்கொள்ளப்படுகின்றது.*
***திறவுச்சொற்கள்:*** *இசை, மருத்துவம், அறிவியல் நோய்கள், சித்தர்கள்*

## முன்னுரை

இசையியல் வரலாற்றில் பண்டைக்காலம் தொட்டே இசை மருத்துவம் என்பது சிறந்த ஓர் நிலையினைப் பெற்றுள்ளது. அந்த வகையில் வேதகாலம் தொட்டே வேதமந்திரங்களுக்கு அதிலும் குறிப்பாக ரிக்வேதம், அதர்வனவேதம் போன்ற மந்திரங்களுக்கு பல்வேறு வகையான நோய்களைக் குணமாக்கும் தன்மை இருந்ததாக அறிய முடிகின்றது. அந்த மந்திரங்களின் ஒலி அதிர்வுகளுக்கு நோய் தீர்க்கும் தன்மை இருந்ததால் அவ்வாறு நிகழ்ந்திருக்கலாம் என்று எண்ணத் தோன்றுகிறது. இதே முறையில் இசையின் வரலாற்றினை ஆராய்ந்து பார்க்கும் போது சங்க, சங்க மருவிய காலங்களில் இசை மருத்துவம் சிறப்பாகக் காணப்பட்டாலும் பல்லவர் காலத்தில் எழுந்த தேவாரப் பாடல்கள் மூலம் ஏராளமான நோய்கள் அகன்ற சான்றுகள் நமக்கு கிடைத்துள்ளன. ஆயினும் அவை அறிவியல் பூர்வமாக மெய்ப்பிக்கப்படமை மிக அர்தாகவேயுள்ளது. ஆயினும் தற்கால அறிவியல் இதனை மாற்றியமைத்துளமை குறிப்பிடத்தக்கது.

அந்த வகையில் இசையினையும். இசைமருத்துவத்தினையம் பின்வருமாறு நோக்குவது சிறந்த தாகம்.

**இசை**

இசையின் பெருமை அளவிட முடியாதது ஏழிசையைய் இசைப்பயனாய் இறைவனைக் காணும் சுந்தரர் காட்டும் இசையினை.

> **“அரும்பருகே சுரும்பருவ அறுபதம் பண்பாட**
> **அணிமயில்கள் நடமாடும் அணிபொழில் சூழ்அயலின்…..”**

போன்ற பாடல்கள் மூலம் உணரலாம். வண்டுகளின் இசைகேட்டுப் புதர்களும் வாய்மலர்ந்தன என்பது குறுந்தொகைக்காட்சி இவ்வாறு கலைகளுள் சிறப்புடையதாக இசைக்கலை விளங்குகின்றது. இவ்இசை இயற்கையிலே பிறந்து, இனிமையிலே வடிவெடுத்து உலாவருகின்றது.

இசை என்ற சொல்லுக்குப் பொதுவாக இசையவைப்பது என்பது பொருள். மனிதனையும் மற்ற உயிரினங்களையும், ஏன் இறைவனையுமே இசையவைக்கின்ற ஓர் அரும்சாதனம் இசை. ஆங்கிலத்தில் இசையை ஆரளஉை என்ற அழைப்பர். ஆரளஉை என்ற சொல் ஆழரளய என்ற கிரேக்க சொல்லிலிருந்து வந்துள்ளது. ஆரளநள என்ற கிரேக்க தேவதைகள் விரும்பிய, ஊக்குவித்த ஒரு கலை பின்பு ஆரளஉை என்று அழைக்கப்பட்டது. இசை என்பது கட்டுப்பாடுள்ள இனிமையான ஒலியாகும். கட்டுப்பாடில்லாத இனிமையைத் தராத ஒலியை இரைச்சல் என்று கூறுகின்றோம்.[1]

கல் போன்ற மனங்களையும் கரையவைக்கின்ற வியத்தகு அற்புதம் உடையது என்றும் கற்றலின் கேட்டலே நன்று என்ற அடிப்படையில் எவ்வித முனைப்புமின்றித் திறந்த காதுகள் வழியே மனித மூளையில் விந்தை செய்விப்பது என்றும் இசை பற்றி அறிஞர்கள் கூறுகின்றனர். வானத்தின் இடியோசை, கடலில் அலையோசை, இருயத் துடிப்போசை, மரங்களின் அசைவோசை, மிருகங்களின் காலடியோசை, வண்டுகளின் ரீங்காரம், மூச்சுக் காற்றின் சப்தம், கைத்தட்டல் ஓசை, வண்டு துளைத்த மூங்கில் வழி வீசும் தென்றல் துணையோடு எழுப்பிய ஓசை உணர்வைத் தூண்டியவைகளாக இருந்திருக்க வேண்டும். இவ்விதம் இயற்கையோடு எழுந்த இசை இயற்கையின் அங்கமான உடலோடும் இசைவாகிறது. இசையை ஏழுவகையாக பிரித்தனர். ஆவை குரல், துத்தம், கைக்கிளை, உழை, இளி, விளரி, தாரம் என்பன இத்தகு தமிழ்பெயர்களை வடமொழியல் முறையயே சட்ஜம், ரிசபம், காந்தாரம், மத்யமம், பஞ்சமம், தைவதம், நிசாதம் என்று அழைப்பர். இதனையே ஸரிகமபதநி என்றும் சப்தஸ்வரங்கள் என்றும் கூறுவர்.

இத்தகு சிறப்பு பொருந்திய இசை வாய்ப்பாட்டாக, காற்றுகருவி, தோற்கருவி, நரம்பக்கருவி, கஞ்சக்கருவி போன்ற பல கருவிகளின் வாயிலாகவும் தோன்றி இசைக்கப்படுகிறது. இத்தகைய சிறப்புக்கள் பொருந்திய இசை அகத்திலும், அகம் சார்ந்த செயல்களின் ஊடாகவும், கலந்து ஒருவித இன்ப உணர்வை ஏற்படுத்துகிறது. இசைசெவி விழியாகச் சிந்தனைக்கு புலனாகி உயிரகளுக்கு இன்பதுன்பங்களை விளைவிக்கும். செவிப்புலனுக்குரிய பொருள் நாதமாக அமையும். காற்று, கடல், மலைச்சாரல், மழை முதலியவற்றின் இயற்கை இயக்கத்தினின்று வெளிப்படும் நாதம் ஓசை எனப்படும். பறவை, விலங்குகளின் வாயாலும் நடையாலும் விளையும் நாதம் ஒலி எனப்படும். ஓசை ஒலிகளை ஓரளவைக்குள் உட்படுத்தி ஏற்றம், இறக்கம், நெளிவு சுழிவுகளோடு மக்கள் குரலால் வெளிப்படுத்தும் நாதம் இசை எனப்படும். ஒசையும் ஒலியும் இயற்கை இசை. ஓசை ஒலிகளைச் செயற்கையாக எழுப்புமிடத்து அது கலை எனபடும். ஓசை யாழ் முதலிய

நரம்புக் கருவிகளினாலும், குழல் கொம்பு முதலிய துளைக்க கருவிகளாலும் ஒலியை தோற்கருவிகள், கஞ்சிராக்கருவி முதலிய தாளக்கருவிகளாலும் இசையை மக்கள் கண்டம், மூக்கு ஆகிய உறுப்புக்களாலும் எழுப்புதல் வழக்காகும். இவ்மூவகைகளையும் பொதுவாகத் தமிழில் இசை என்றும் கூறுவர்.[2]

இவ்வாறாக இசையின் பொருமைகளை ஆராய்ந்து கொண்டே செல்லலாம். இசைக்கும் ஏனைய துறைகளுக்குமான தொடர்புகள் மிகவும் நீண்டதாகவே காணப்படுகின்றது. அந்த வகைளில் அறிவியல், மெய்யியல், வரலாற்றியல், தமிழ், மெஞ்ஞானம், பொறியியல் போன்ற எல்லாவற்றிலும் இசையின் தொடர்பு இருந்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

**இசை மருத்துவம்**

கலைகள் அனைத்திலும் இசைக்கலையே மேலானது. நல்லார், பொல்லார், கற்றார், கல்லார், சிறியார், பெரியார் போன்ற அனைவரும் இசைக்கு வசப்படுவர். இசைக்கு மயங்காதவர் இருக்க மாட்டார்கள். ஒவ்வொருவரும் ஏதோ ஒரு சூழ்நிலையில் இசைக்கு மயங்கித் தான் ஆக வேண்டும். இத்தகைய சிறப்புடையது இசை. இதற்குச் சான்றாக, தொட்டிலில் ஆடும் குழந்தை தன் தாயின் தாலாட்டில் மகிழ்ந்து தூங்குவதும், காதலில் தோற்றவன் சோகப் பாடல்களைப் பாடுவது அல்லது கேட்பதுவும் அன்றாட வாழ்வில் நாம் பார்க்கும் யதார்த்தமாக உள்ளது. மனிதன் இவ்வாறாயின் ஐந்தறிவு படைத்த உயிரகளைப் பார்க்கின்ற போது. மகுடியைக் கேட்கும் நச்சரவு, குழலிசையைக் கேட்டு ஆடு, மாடுகளும் மெய்மறந்து இன்புற்று நிற்பதைப் பார்க்கின்றோம். இவை மட்டுமல்லாது உயிருள்ள தாவரங்களின் அருகில் இன்னிசை ஒலிக்கும் போது அவை விரைவில் வளர்கின்றன என்பதையும், கோயில் மணிகேட்டு வளர்ந்த பலாமரத்தினால் செய்யப்பட்ட மிருதங்கத்தின் நாதம் இனிமையாக இருக்கும் என்பதையும் நாம் கண்டும், கேட்டும் அறிந்துள்ளோம்.

கோயில் திருவிழாக்களில் பாம்பை, உடுக்கை போன்ற இசைக் கருவிகளை இசைக்கும் பொழுது அருள் வந்து சாமியாட்டம் ஆடுகின்றவர்களும் உண்டு. உடுக்கை இசை கேட்க பேயாட்டம் ஆடுகின்றவர்களும் உண்டு. இவற்றோடு ட்ரம் செட் மற்றும் தப்பு அடிக்கும் போது நரம்பு புடைக்க விறைப்புத் தன்மையுடன் ஆடும் இளைஞர்களையும் நாம் அன்றாடம் பார்க்கின்றோம். இவ்வாறு கேட்கின்ற அனைவரையும் ஏதாவது ஒரு விதத்தில் மயங்கவைப்பது இசையின் சிறப்புத் தன்மையாகக் கூறலாம். இத்தகைய உணர்வுப் பூர்வமான ஒரு வெளிப்பாட்டை எந்த நுண்கலைகளாலும் தரஇயலாது. என்பது அசைக்க முடியாத உண்மை. இவை அனைத்துமே இசை மருத்துவத்தின் ஆரம்பநிலையேயாகும்.[3]

இசை மருத்துவம் தொடர்பான செய்திகள் பல்வேறு இலக்கியங்களில் ஆங்காங்கே சுட்டப்பட்டுள்ளமையை நாம் அறியலாம். இராவணன் இசையினால் கைலாசபதியின் கருணையைப் பெற்றார். அகத்தியர் இராவணனை இசையால் பிணைத்தார். போரில் சங்கநாதம் செய்து மடிந்தவர்களை எழுப்பினார். கண்ணன் எனும் புராண இதிகாச உரைகள் இசையின் சிறப்பை புலப்படுத்துவனையே ஆகும். அத்துடன்

> **மிகினும் குறையினும் நோய்செய்யும் நூலோர்**
> **வளிமுதலா எண்ணிய மூன்று –**
> **(திரக்குறள் 941)**

என்று வள்ளுவமும் குறிப்பிடுவதை காணமுடிகின்றது.

மேலும் இசைக்கும் சித்தர்க்கும் நீண்ட காலமகாவே உறவு இருந்துள்ளது. செவ்வியலாக இருப்பினும், நாட்டுப் புறவியலாக இருப்பினும் சித்தர்களின் பாடல்கள் தமிழர்களின் உள்ளங்கங்களின் நிறைந்துள்ளன. மிக்க இசையறிவு கொண்டோர் மட்டுமன்றி, படிக்காத பாரமரரும் சித்தர்களின் பாடல்களைப் பாடுகின்றனர். ஒற்றைத் தம்புராவை ஏந்தி பிச்சையெடுக்கும் ஆண்டி முதல் மிகப்புலமை மிக்க இசைவாணர்கள் வரை சித்தர்களின் பாடல்கள் பாடக்கூடிய வகையில் எளிமையாகவும், பொருட்செறிவுடனும் காணப்படுகின்றன. பரிபாடலுக்கு இசை வகுத்தவர்களில் ஒருவர் சித்த மருத்துவர் நல்லனச்சதனார் ஆவர். இவர் மருத்துவத்திலும், இசைத்துறையிலும் புகழ்பெற்றவர்.

நம் உடலானது இரசம், இரத்தம், மாமிசம், கொழுப்பு, என்பு, தோல், மூளை என்ற ஏழுவகை யான வற்றாலானது. பண்களால் இயங்கும் இசையைமிடற்றோசை எனவும் கருவிகளோசை எனவும் பிரிக்கலாம். குரல் இதற்கு நல்லுடல் வேண்டும். இல்லையேல் இனிய இசை பிறக்காது. குரல் வளத்தைப் பாதுகாப்பது இசை வல்லோரின் கடமையாகும். குரல் வளம் கெடாமல் காக்கும் வழிகளை சித்தர்கள் விளக்கியுள்ளார்கள். ஒலியானது தலை, மிடறு, நெஞ்சு, மூக்கு, இதழ், பல், நா, அண்ணம் என்ற இடங்களில் பிறக்கும் ஏதேனும் இவ்வுறுப்புகளில் பாதிப்பு ஏற்படின் இசையை நல்முறையில் பாட இயலாது. குரலைப் பாதுகாப்பதற்கு மேலைத் தேய மருத்துவம் குறிப்பிடாத பலவற்றினை நம் இசை நூலான ''பஞ்சமரபு'' கூறுகின்றது.

**திப்பிலி தேன்மிளகுசுக்கினோடிம்பூறல்**
**தப்பிலாவான்பால்,**
**தலைக்காடைஒப்பிலா……….**

திப்பிலி, தேன், மிளகு, சுக்கு, இம்பூறல், பசும்பால், காடையின் சாறு இவைகளை வெந்நீரில் வெண்ணெயிட்டுக் கலந்து குடிக்கவும், உடலில் சந்தணம், அத்தர், புனுகு, அரகசா, பன்னீர் போன்ற நறுமணப் பொருள்களை பூசுதல் போன்றவற்றால் குரலின் குற்றங்களைக்களையலாம் என்பதனைக் கருவூரார்வாக கற்பம் என்ற நூலில் குறிப்பிடப்பட்டுள்ளது..

**“பாடகம் தண்டையிட்டு பச்சையும் புனுகு பூசி**
**சூடவேபனக் கோட்டை துருசறசாய மேற்றி”[2]**

பச்சையென்ற மருக்கொழுந்தை தலையில் வைத்தும், உடலில் புனுகுபூசியும், விரல்களின் செந்நிறச் சாயமேற்றியும் உள்ள பெண்கலைஞரைப் பற்றிக் கூறுகின்றார்.

**“நகை, புகையெட்காடி, காமட்நறுவ**
**பகையெனச்சொன்னார்க்ளபார்மேல்……..”**

புகைகள் போன்ற போதைப் பொருள்களால் புகழ்பெற்ற பல கலைஞர்கள் இளமையிலேயே அவர்களின் திறமையை இழந்தார்கள். அவ்வாறு இழந்தவர்கள் குரல்வளத்தைப் பெருக்க ''ஆடாதோடை நாலுமிளகும்பாடாத வாயும் பாடும்'' என்ற சித்த மருத்துவப் பழமொழியாலறியலாம். புழமையான காலத்தில் குரலிசை வித்தர்கள் தங்களுடைய குரலை மிகவும் கவனமுடன் பாதுகாத்தார்கள். இவற்றின் அடிப்படையில், பண்டைக் காலம் தொட்டு தற்கால தத்துவ அறிஞர்கள், வரலாற்றசிரியர்கள், அறிவியல் வல்லுனர்கள் போன்றோர் இசையின் மருத்துவ குணங்களை எழுதியும் போற்றியும் உள்ளனர். இசை மருத்துவப் பயன்பாட்டுக்கு உபயோகப்படுமென்பது ''பைபிளாஸ்'' அறியப்படுகின்றது. 18ம் நூற்றாண்டில் தான் ஆதாரபூர்வமான குறிப்புக்கள் இந்த இதழில் வரத் தொடங்கின. 19ம் நூற்றாண்டில் ஆய்வுகள் பதிவு செய்யப்பட்டன. 20ம் நூற்றாண்டு உலகளாவிய போரில் மனிதகுலம் ஈடுபடத்தின் பலனாக போரில்

புண்பட்டு காயம் அடைந்தவர்களை குணமாக்க மாற்று முறைகளைக் கண்டது. அதில் ‘‘இசை மருத்துவமும்’’ ஒன்று. வட அமெரிக்க இசை மருத்துவம் அதன் வேரினை இங்கிலாந்தில் பெற்றது. மிகப் பழமையான ஆங்கிலேயே இசை மருத்துவக் கருத்துக்கள் Richard Browne என்ற மருத்துவரால் இயற்றப்பட்டு 1729 இல் பதிக்கப˙ பெற்றது.

Medicina Musica மனித உடலில் பாடுதல், இசைகேட்டல், ஆடுதல் என்று இசையால் ஏற்படுகின்ற மாற்றங்களை வரையறுத்து, வட அமெரிக்காவில் இசை மருத்துவத்திற்கு பயன்படுத்தப்படுகிறது. Darrow gibbons and Heller (1985) என்போர் Modicina Musica கூறுகின்ற அடிப்படைத் தத்துவங்களை இசை மருத்துவத்திற்காக பயன்படுத்துகிறார்கள் என்று கூறுகின்றனர். அமெரிக்காவில் பழமையான இசை மருத்துவப் பணிகள் University of Philadalphia tpy; Benjamin Rush (1745 – 1813) என்ற மருத்துவர் ஆசானாக இருந்து பின்னர் அவரது மாணவர்கள் Rdwin A.Atlee> Sammel. J.Mathews ஆகியோரால் 1806 ஆம் ஆண்டு சிறப்பு பெற்றது. இசை மருத்துவத்திற்கான முதல் சங்கம் 1950 இல் U.S.A யில் N.A.M.T (National Association for Music Theraphy) என்று அமைக்கப் பெற்றது. அதன் பின்னர் A.A.M.T என்ற அமைப்பு 1971 இல் தொடங்கப் பெற்றது. ஜனவரி 1998 இல் N.A.M.T மற்றும் A.A.M.T என்ற அமைப்புக்கள் இணைந்து American Music Theraohy Assciation என்று குறிப்பிடப்படுகின்றது.[4] இவை போன்ற தகவல்கள் இசைமருத்துவம் தொடர்பான தகவல்களை அறிந்து கொள்வதற்கு ஓரளவு துணை செய்கின்றது.

**அறிவியல் சான்றுகள்**

மருத்துவத்தில் பல்வேறு வகைகள் இன்று நடைமுறையில் உள்ளது, ஆயினும் இசையின் மூலமாக மருத்துவம் செய்வதென்பது அறிவியலுக்குச் சான்றாகுமா என்பதை நோக்குகின்ற போது அது சாத்தியம் என்றே தோன்றுகின்றது. ஓசை, ஒலிகளாகிய நாதக் கூறுகள் அகமும், புறமுமாக உள்ள உடம்புகளை வளப்படுத்தலையும் நோய்ப்படுத்தலையும் மருத்துவ நோக்கில் காணின் இசை மருந்தாக அமைவதைக் காணலாம். வைகறையில் கடற்கரையில் உலாவருதல், காலையில் பூங்காக்களில் உலாவருதல், கடலலை ஓசைகளையும் தென்றலின் சலசலப் போசைகளையும் செவிமடுத்தனுபவிக்கலாம். மற்றும் குழந்தைகளின் மழலைப் பேச்சு, சோலை பூங்கான்றுகளில் சிட்டு, நாகணவாய்ப்புள், கிளி, குயில், முதலிய பறவைகளின் கூக்குரல்களை அனுபவிக்கின்றோம்.

இவை மனதிற்கு மகிழ்ச்சி தருவதை உணர்கின்றேம். பல்வேறு விழாக்களின் வாயிலாக நரம்புக் கருவிகளின் செயற்கை இசைகளும், தோற்கருவிகள், கஞ்சக் கருவிகளின் செயற்கை இசைகளும் மக்களின் வளமான குரலிசையும் அவ்வாறோ களிப்பையும் உவகையையும் தந்து இன்புறுதலை உணர்கின்றோம். சூறவாளி, பேரிடி, பெருமழை, பெருநெருப்பு எழுப்பும் ஓசைகளும் உற்றார் உறவினர் இடுக்கணுற்று வாய்விட்டெழுப்பும் அச்ச ஒலிகளும் பேரிழப்பினால் நேரும் ஒலிகளும் மனதிற்குத் துன்பத்தையும் தந்து உடம்பை நோய்ப்படுத்துவதையும் உணர்கிறோம். கோடிய விலங்குகள் எழுப்பும் ஒலி அச்சத்தையும், நடுகத்தையும் உண்டாக்குவதைக் காண்கின்றோம். சிறுவிலங்குகள் எழுப்பும் ஒலியால் அவற்றின் இன்ப துன்பங்களை உணர்கின்றோம்.

குழந்தைகளின் அழுகையால் தாய் அதன் நிலையை உணர்கின்றாள்.

நோயுற்றவர்கள் முதலுதவி மருந்தாக மேற்கொள்பவை ஓசை, ஒலிகளே சிறுதலை வலி நேரும்போது ''சொச்சொச்சோ'' என முனகுகின்றனர். சிறுவலி, வயிற்றுவலி அப்பப்பா என்கிறனர். இவை போன்று நோய் ஏற்படும்போது நோயுற்றவர் எழுப்பும் ஒலிகள் சாந்தியைத் தருகின்றது. அழுதலால் துன்பம் குறைதலை ஒவ்வொருவரும் அறிவர். ஒப்பரிப்பாடல் இழவுத்துன்பத்திற்கு மருந்தாகிறது.

வாய்விட்டுச் சிரித்தால் நோய்விட்டுப்போகும் என்பது வழக்கு மொழி, எனவே ஓசை ஒலிகள் பிணியைக் குறைக்கவும் தவிர்க்கவும் உதவும் என்பதற்குத் தடையில்லை. வெகுண்டவன் வெடிபடப் பேசினால் வேகங்குறையும். அச்சமுற்றவன் ஆரவாரவமாகப் பாடினால் அச்சம் விலகும். வாழ்த்தொலிகள் மகிழ்வையும், வசை ஒலிகள் துன்பத்தையும் தரும் என்பதை யாவரும் அறிவர். மணவீட்டில் முழங்கும் இசை இன்பத்தை மிகுவிக்கும். இழவு வீட்டில் எழும் ஓசை ஒலிகள் துன்பத்தைக் குறைக்கும். திருவிழாக்களில் மேளதாளம் வேட்டு அதிர்வெடிகள் இடம்பெறக்காரணம் அதுவேயாகும்.[5] இவ்வாறான காரணங்களிலிருந்து பார்க்கின்ற போது இசை மூலமாக மனிதமனத்திற்கும், உடலுக்கும் நோயுற்றபோது அதைத் தீர்க்கும் அருமருந்தாக இசைஅமைவதை உணரக்கூடியதாக இருக்கின்றது.

**இராகங்களின் பயன்கள்**

தவறான தொடர்புகளால் தொழுநோயை பெற்றிருந்த அருணகிரிநாதர் தெய்வபலத்தாலும், தான் கற்றிருந்த இசைப்பயனாலும் தொழுநோயிலிருந்து விடுதலை பெற்றது பலரும் அறிந்ததொன்றாகும். சண்முகப்பிரியா இராகத்தை தாமே பாடியோ அல்லது பிறர்பாடக்கேட்டோ வந்தால் நிச்சயமாக தொழுநோயிலிருந்து விடுபடலாம்.

ஆனந்த பைரவி இராகத்தை இசைத்தால் உயர் இரத்த ஆழுத்தம் குறையும் என்றும் அவ்வாறே தாழ்வு இரத்த அழுத்த நோயை குணப்படுத்த பேகடா, பூர்வி கல்யாணி, சாரங்கா போன்ற இராகங்களை கேட்க வேண்டும் என்று ஆய்வுகள் கூறுகின்றன.

ஒற்றைத் தலைவலி நோய் உள்ளவர்கள் தொடர்ச்சியாக மத்தியமாவதி, பிருந்தாவன சாரங்கா போன்ற இராகங்களை பாடினாலோ அல்லது மேற்கூறிய இராகங்களில் அமைந்த பாடல்களை தினமும் கேட்டாலோ ஒற்றைத் தலைவலி நோய்மிகக் குறுகிய காலத்தில் குணமாகும்.

தீராத வயிற்று வலிக்கு மருந்துகள் எவ்வாறு உதவுகின்றனவோ அதற்கு இணையாக இசையும் உதவும் என்பது நாம் முன்னோர்கள் அறிந்திருந்தனர். தேவாரத்தை பாடிய திருநாவுக்கரசர் சைவத்தை துறந்து சமணத்தை சார்ந்திருந்த சமயத்தில் மிகக்கொடுமையான சூளை நோயால் (வயிற்றுவலியால்) அல்லுற்றார். அப்போது அவரது தமக்கையாரின் அறிவுறுத்தலால் சிவபெருமானை நினைத்து,

''கூற்றாயினவாறு விலக்கலீர் கொடுமை பல செய்தன நானறியேன்….'' என்று சீகாமரம் என்கின்ற பண்ணில் பாசுரம் பாடியது சரித்திரம் ஆகும். அப்பரின் சூளைநோயும் குணமாகியது. இதனால் ''சீகாமரம்'' என்கின்ற பண்ணை பாடினால் வயிற்று வலி நிச்சயமாக மறைந்துபோகும். சீகாமரம் என்கின்ற தமிழ்ப் பண் கர்னாடக இசையில் ''நாகநாமக்ரியா'' என்றழைக்கப்டும்.[6] அவ்வாறே, சைனஸ் வியாதிக்கு வாசஸ்பதி இராகமும், தலைச்சுற்றலுக்கு ஹம்சத்வனி, கீரவாணி இராகமும், ஆஸ்துமா நோய்க்கு குந்தளவராளியும் பயன்தருவதாக ஆய்வுகள் கூறுகின்றன.

### முடிவுரை

தற்கால உலகியல் வாழ்க்கையில் மக்கள் பல்வேறு சவால்களை எதிர்நோக்குகின்றனர். உலக மயமாக்கலின் காரணமாக அளவுக்கதிகமான வேலைப்பழு, துரித உணவுகள், ஓய்வின்மை, நிம்மதியான தூக்கமின்மை போன்ற பல்வேறு காரணங்களினால் புதிய புதிய நோய்கள் உருவாகுவதனால் மனிதன் ஏராளமான நோய், நொடிகளைச் சுமந்து கொண்டு வாழ்ந்து வருகின்றனர். எத்தனை வகையான மருத்துவங்கள் வந்தாலும் கூட இவற்றிலிருந்த மக்கள் விடுபடுவது எட்டாக் கனியாகவே காணப்படுகின்றது. இவ்வாறான சூழ்நிலையில் இசைமருத்துவத்தின் பயன்பாட்டினை மக்கள் மத்தியில் ஏற்படுத்துதல் இன்றியமையாத தேவையாக மாறியுள்ளது. வரவாற்று ரீதியில் பார்க்கின்ற போது இசை மூலம் நோய்களிலிருந்து விடுபட்டவர்கள் ஏராளம் என்பதை நாம் அறிய முடிகின்றது. இந்த அடிப்படையின் ஆய்வின் பரிந்துரைகளாக இசை மருத்துவத்தினை அனைவருக்கும் அறிமுகம் செய்கின்ற அதே சமயம் இசைக்கல்வியினை அனைவரும் கற்கச் செய்வதுடன் இசை மருத்துவத்தினையும் விரிவாக ஆய்வு செய்தல் வேண்டும். இவ்வாறு செய்யகின்ற போது இசைமருத்துவத்தின் பயனை அனைவரும் பெறுவதற்கு வாய்ப்பாக அமையும் என்பதில் ஐயமில்லை.

### அடிக்குறிப்பெண் சான்று

1. செல்லத்துரைபி.டி, (2005) தென்னக இசையியல், வைகறைப் பதிப்பகம், திண்டுக்கல், பக்கம் - 01
2. அங்கயற்கன்னி. இ. மாதவி. இரா, (2006) தமிழிசை தொன்மையும் பெருமையும், பகுதி, தமிழ்ப்பல்கலைக்கழகம் மறுதோன்றி அச்சகம் - தஞ்சாவூர் - பக்கம் - 430 – 441
3. பாலசந்தர்ராஜீ.எஸ், (2002) இசை மூலம் நோய்தீர்க்க வழிகள், சிவரஞ்ஜனி பப்ளிகேசன்ஸ், சூளைமேரு, சென்னை, பக்கம் - 57 – 62.
4. Taiwan Music Theraply> (2006) www.voicesno/?q=country/month Taiwan
5. பாலசந்தர் ராஜீ. எஸ், (2002) இசைமூலம் நோய்தீர்க்க வழிகள், சிவரஞ்ஜனி பப்ளிகேஷன்ஸ்சூளைமேரு, சென்னை, ஆண்டு, பக்கம் - 196 – 208
6. மேலது, பக்கம் - 60.

### துணை நூற்பட்டியல்


1. அங்கயற்கன்னி. இ. மாதவி இரா, (2006) தமிழிசை தொன்மையும் பெருமையும், பகுதி, தமிழ்ப் பல்கலைக்கழகம் மறுதோன்றி அச்சகம் - தஞ்சாவூர்.
2. செல்லத்துரைபி.டி, (2005) தென்னக இசையியல், வைகறைப் பதிப்பகம், தின்டுக்கல்.
3. பாலசந்தர்ராஜீ. எஸ், (2002) இசை மூலம் நோய் தீர்க்க வழிகள், சிவரஞ்ஜனி பப்ளிகேசன்ஸ், சூளைமேரு, சென்னை.
4. Taiwan Music Theraply> (2006) www.voicesno/?q=country/month Taiwan

# சங்க இலக்கியத்தில் ஆன்மீக அறிவியல்

**ஜெ. செந்தில் குமாரி**
உதவிப் பேராசிரியை, (தமிழ்த்துறை)
வளனார் கலை (ம) அறிவியல் கல்லூரி
குருவிகுளம், திருவேங்கடம் (தாலுகா)
தென்காசி (மாவட்டம்)

***ஆய்வுச் சுருக்கம்***
*இடி, மின்னல், காற்று போன்ற இயற்கைச் சக்திகளுக்கு அஞ்சிய மனிதர்கள் அச்சக்திகளிடமிருந்து தங்களைக் காத்துக்கொள்ள அவற்றை வழிபடத் தொடங்கினர் பின்னர் அச்சக்திகளுக்கு வடிவம் கொடுத்து ஆலயங்கள் எழுப்பி, இறைவழிபாட்டு முறைகளுடன் இறை வணக்கம் செய்தனர். மதங்கள் தோன்றி வளர்ச்சியடையத் தொடங்கியதும், ஒவ்வொரு மதத்தினரும் தங்களது சமயக் கருத்துக்களை வெளிப்படுத்தும் நோக்கில் இலக்கியங்களைப் படைக்கலாயினர். அவ்விலக்கியங்கள், சமயக் கருத்துக்களுடன், அறிவியல் பூர்வமான உண்மைகளையும் இணைத்துக் கூறி சமூக ஒழுக்க நெறிகளை விளக்க முற்பட்டன. அவ்வாறு எழுந்த இலக்கியங்களுள் தலையாய சிறப்புடையதாகத் திகழும் சங்க இலக்கியம் காட்டும் ஆன்மீக அறிவியல் சிந்தனைகளைத் தொகுத்து உரைப்பதே இவ்வாய்வின் நோக்கமாகும்.*

## முன்னுரை

முடியுடைய மூவேந்தர்களும் தமிழின் மீது தீராத பற்றுடையவர்களாக இருந்த போதிலும் பாண்டியர்களே சங்கம் வைத்துத் தமிழன்னைக்குத் தொண்டாற்றினர். இவர்கள் உருவாக்கிய முதல் இரண்டு சங்கங்களும் கடற் கோளினால் அழிந்துவிட மூன்றாம் சங்கமே நிலை பெற்றிருந்தது என வரலாறு கூறுகிறது. முதற்சங்கத்தில் சிவன், முருகன் போன்ற கடவுள்களும், புலவர்களுடன் வீற்றிருந்து தமிழை ஆராய்ந்தனர் என்றும் அகத்தியம், தொல்காப்பியம் போன்ற நூல்கள் அச்சங்கத்தில் அரங்கேறின என்றும் தொல்காப்பிய நூற்பா பின்வருமாறு கூறுகிறது.

**“நிலந்தரு திருவின் பாண்டியன்**
**அவையத்து”**

**(தமிழ் இலக்கிய வரலாறு பக்கம் - 33)**

இத்தகைய சிறப்பு வாய்ந்த சங்கங்களில் அரங்கேறிய சங்க இலக்கியம் ஆன்மீகத்துடன் அறிவியலையும் இணைத்து நுட்பமாகவும் ஆழமாகவும் எடுத்தியம்புகின்றது.

## இலக்கியமும், படைப்பாளியும்

“எழுத்தறிவித்தவன் இறைவனாவான்” என்னும் கூற்றிற்கு ஏற்ப, மொழியை மனிதனுக்கு இறைவனே கற்பித்தான் என்றும், சிவனுடைய தமருக என்னும் உடுக்கை ஒலியிலிருந்தே மொழி தோன்றியது என்றும் வடமொழியைப் பாணினி அறிமுகப்படுத்தினார். தென்மொழியை அகத்தியர் அறிமுகப்படுத்தினார் என்றும் புராணங்கள் கூறுகின்றன. மேலும் ஒரு இலக்கியப் படைப்பாளிக்கு கடவுளின் அருள் இருந்தால் மட்டுமே படைப்பாற்றல் கிடைக்கும் என்பதை அ.ச.ஞானசம்பந்தன் பின்வருமாறு எடுத்துரைக்கிறார்.

“தெய்வீக அகத்தூண்டுதலால் தான் இலக்கியம் படைக்கப்படுகிறது” “கம்பனுக்குக் காளியின் அருளால் தான் கவிபாடும் ஆற்றல் உண்டாகியது”

(இலக்கியக்கலை - பக்கம் - 2)

இவ்வாறு மனிதனுக்குள் ஒளிந்திருக்கும் படைப்பாற்றல் திறனை ஆன்மீகத்துடன்

இணைத்துக் கூறியுள்ளது கவனிக்கத்தக்க ஒன்றாகும்.

**தெய்வீகமும் காதலும்**

காதலையும், வீரத்தையும் இரு கண்களாகப் போற்றிய பழந்தமிழர்கள் மனித வாழ்வை அகம், புறம் என இருவகைப்படுத்தினர். நில அடிப்படையில் அகவாழ்விற்கு இலக்கணம் வகுத்தனர். குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை என ஐந்து திணைகளுக்கும் தெய்வம், முதலான கருப் பொருளை உருவாக்கி, அவற்றை அன்பின் ஐந்திணை என்றே அழைத்தனர். இதனை,

**"ஐந்திணை உடையது அன்புடைக்காமம்"**

(அகப்பொருள் விளக்கம் பக்கம் - 12)

என்ற நூற்பா வழி உணரலாம். தமிழ்ச் சமூகக் குடும்ப அமைப்பிற்கு அரணாக அமையவல்ல இத்தகைய இலட்சியக் காதலைத் தெய்வீகக் காதலாகக் காட்டுகிறது தொல்காப்பியம். காதல் என்பது திட்டமிட்டு நடைபெறும் நிகழ்ச்சியல்ல அது தெய்வத்தினால் அமையவல்லது என்பதை

**"ஒன்றே வேறே என்றிரு பால்வயின்**
**ஒன்றி உயர்ந்த பாலது ஆணையின்**
**ஒத்த கிழவனும் கிழத்தியும் காண்ப"**

(தொல்காப்பியம் - களவியல் - 2)

பாடல் வாயிலாகத் தொல்காப்பியம் தெளிவுப்படுத்துகிறது. மேலும் அகப்பொருள் விளக்கமும் இத்தகைய காதல் மனிதனின் முயற்சியினால் அமைவதல்ல. அது தெய்வத்தால் மட்டுமே நிகழும் என்று தெரிவிக்கின்றது. ஊழின் வலிமையால் காதல் தோன்றுகிறது என்று காதலுக்கு இலக்கணம் வகுத்துள்ளது.

**"இயற்கைப் புணர்ச்சி தெய்வத்தின் எய்துழி**
**முயற்சி இன்றி முடிவது ஆகும்"**

**(அகப்பொருள் விளக்கம் பக்கம் -27)**

பாண்டிய மன்னனின் ஐயத்தைப் போக்குவதற்காக இறைவனால் இயற்றப்பட்ட **"கொங்குதேர் வாழ்க்கை"** என்னும் பாடல் இடம் பெற்ற குறுந்தொகை.

**"இம்மை மாறி மறுமை ஆயினும்**
**நீயாகியரென் கணவனை**
**யானாகியர் நின் நெஞ்சு நேர்பவளே"**

**(குறுந்தொகை பாடல் - 49)**

இப்பிறவியில் இணைந்த காதலர்கள் மறு பிறவியல் கூட இணைய வேண்டும் என்று காதலைத் தெய்வத் தன்மைக்கு உயர்த்தியுள்ளது. மானிடக் காதலை தெய்வீகக் காதலாக ஆன்மீகத்துடன் இணைத்து காட்டும் சிறப்பு வாய்ந்த இச்சங்க இலக்கியத்தைப் போல் வேறு எம்மொழியிலும் காண்பது அரிதாகும்.

**அனைத்தும் இறைவனே**

**"எங்கெங்கு காணினும் சக்தியடா"**

என்ற பாரதிதாசனின் சொல்லிற்கு ஏற்ப, பார்க்கும் அனைத்தையுமே பரம்பொருளாகக் காணும் பண்பு நம் தமிழர்களுடையதாக இருந்தது.

**"மாநிலஞ் சேவடியாகத் தூநீர்**
**வளை நரல் பௌவம் உடுக்கையாக**
**விசும்பு மெய்யாகத் திசை கையாக"**

**(நற்றிணை - பக் - 11)**

என்று உலகமே இறைவனின் திருவடி, கடல் இறைவனின் ஆடை, வானமே அவருடைய உடல் என்று இயற்கைப் பொருட்களை இறைவனனாகக் கூறியுள்ளது நற்றிணை.

சூரியனை நாள் மீன் என்றும் சந்திரனைக் கோள் மீன் என்றும் பெயரிட்டு அழைத்துள்ளனர் பழந்தமிழர்கள், கோள்களின் இயக்கம் ஒரே சீராக இருந்தால் தான் உலகில் உயிர்கள் வாழ முடியும் என்ற அறிவியல் உண்மையை அன்றே உணர்ந்திருந்த தமிழர்கள் அவற்றை இறைவனாக எண்ணி வழிபட்டனர். சூரிய நமஸ்காரம் அதனடிப்படையில் எழுந்ததாகும். கிரக நிலைகளை ஆராய்ந்து வான சாஸ்திரம் எழுதும் அளவிற்கு அறிவியல்

அறிவைக் கொண்டிருந்த நம் முன்னோர்கள் ஆன்மீகத்துக்குள் பொதிந்து வைத்து அறிவியல் உண்மையை விளக்கிய செய்தியை சங்க இலக்கியம் தெளிவாகக் காட்டுகிறது.

### சடங்குகளும், மறுமைக் கோட்பாடும்

இனக்குழுக்களாக வாழ்ந்த பண்டைய மனிதர்கள் மழை வேண்டியும், வேட்டைக்காகவும் திருமணத்தின் போதும் சடங்குகள் நிகழ்த்தி, இறையருள் பெற முயன்றதாகக் குறிப்புகள் காணப்படுகின்றன. "இனக்குழுவில் கூட்டு வாழ்க்கை நிலவிய வரையில் பொருளுற்பத்திக்கு மந்திரச் சடங்குகள் ஊக்கமளித்தன சடங்குகளின் போது மது அருந்தினர். ஆவேசம் பெற்றனர் உணவு வகையைப் படைத்தனர். ஆடல் பாடல் இசையாகவும் ஒன்றிணைந்து சடங்கின் ஒரு பகுதியாக அமைந்தன".

(சங்ககாலச் சமுதாயம் பக்கம் - 6)

நீரோடு தொடர்புடைய சங்கு, சிற்பி போன்ற பொருட்களுக்கு நீரை வரவழைக்கும் இயல்பு இருப்பதாக நம்பிச் சங்கினை நதியில் இட்டு மழை வேண்டிச் சடங்கு நிகழ்த்தப்பட்டதாகப் பரிபாடல் எடுத்துரைக்கிறது.

**"கடவுட் பேணிய குறவர் மாக்கள்**
**பெயல்கள் மாறிய உவகையர்"**

**(புறநானூறு பக்கம் - 10)**

என்று மழைச் சடங்கு பற்றி புறநானூற்றிலும் குறிப்பிடப்பட்டுள்ளது.

சடங்குகள் பற்றிப் பேசியுள்ள சங்க இலக்கியம் இம்மை, மறுமை, பற்றியும் பேசத் தவறவில்லை. பத்துப்பாட்டு நூலான திருமுருகாற்றுப் படையில், பரிசில் பெற விரும்பும் பாணனை முருகனிடம் ஆற்றுப்படுத்துவதாகக் கூறப்பட்டுள்ள செய்தியானது இவ்வுலக வாழ்வைப் பெரிதாக எண்ணாமல் மறுமை பற்றிய சிந்தனையை வெளிப்படுத்துவதாக அமைந்துள்ளது. புறநானூறு கூறும் "தீதும் நன்றும் பிறர் தர வாரா" என்னும் பாடல் வரி ஒருவருக்கு நிகழும் இன்பதுன்பங்கள் பிறரால் நிகழ்வதில்லை. அவர் முற்பிறப்பில் செய்த வினைகளுக்கு ஏற்ப இப்பிறவியில் நன்மை, தீமைகளை அனுபவிப்பதாக எடுத்தியம்புகிறது.

### முடிவுரை

ஆன்மீகம் என்பது மனிதனின் உள்ளுணர்வு தொடர்பான ஒன்று. அறிவியல் என்பது மனிதன் கண்கூடாகக் காணும் உண்மையாகும். இவ்விரண்டினையும் இனைத்துக் கூறி அதன்மூலம் மனிதனுக்கு நம்பிக்கை ஊட்டவும், ஒழுக்க நெறிகளை வலியுறுத்தவும் எழுந்தவையே சங்க இலக்கியங்கள்.

"அவனின்றி ஓர் அணுவும் அசையாது" என்பது போல உலகின் தோற்றத்திற்கும், முடிவிற்கும் இறைவன் ஒருவனே காரணம் என்றும் மனிதன் ஒழுக்க நெறியிலிருந்து தவறும் போது இயற்கைச் சீற்றங்களால் உலகினை அழிப்பதும் இறைவனே என்றும் கூறுகின்றன இலக்கியங்கள். பாண்டிய மன்னன் நீதி தவறியதால் தான், மதுரை எரிந்ததாகச் சிலப்பதிகாரம் குறிப்பிடுவது நினைவு கூறத்தக்கதாகும். இவ்வாறாக மனிதனின் உள்ளுணர்வில் நமக்கும் அப்பாற்பட்ட சக்தி நம்மை இயக்குகின்றது என்ற ஒரு நம்பிக்கையை உருவாக்கி அதன்மூலம் ஆன்மீகத்திற்குள் ஒளிந்திருக்கும் அறிவியலைப் புரியவைத்து, அந்த அறிவியலை நல்ல வழியில் பயன்படுத்தி உலகினை வளம் பெறச் செய்யும் நோக்கில் எழுந்தவையே சங்க இலக்கியங்கள் என்பதில் சிறிதளவும் ஐயமில்லை.

### மேற்கோள் நூற்பட்டியல்

1. தமிழ் இலக்கிய வரலாறு பெ.சுயம்பு, (2019), பாரதிபதிப்பகம், இராஜீவ் நகர், திசையன் விளை
2. இலக்கியக்கலை அ.ச.ஞானசம்பந்தன், (2020), சாரதா பதிப்பகம், சென்னை.

3. அகப்பொருள் விளக்கம், (2019), கதிர்பதிப்பகம், தெற்குவீதி, திருவையாறு
4. குறுந்தொகை - புலியூர்க்கேசிகன், (2020), சாரதா பதிப்பகம், சென்னை
5. நற்றிணை- புலியூர்க்கேசிகள், (2019), சாரதா பதிப்பகம், சென்னை
6. சங்ககாலச் சமுதாயம் கா. சுப்பிரமணியன், (2021), நியூ செஞ்சுரிபுக் ஹக்ஸ் (பி) லிட் 4.ஃ.பி சிட்கோ இண்டஸ்ரியல் எஸ்டேட், அம்பத்துார், சென்னை
7. புறநானூறு - புலியூர்க்கேசிகன், (2019), சாரதா பதிப்பகம், சென்னை

# தமிழ்ச்செல்வியின் சிறுகதைகளில் காணலாகும் பெண்ணியச் சிக்கல்கள்

**திருமதி. கி. உலகாண்டேஸ்வரி**
*இளம்முனைவர் பட்ட ஆய்வாளர் (பகுதி நேரம்)*
*தமிழ்த்துறை, அன்னை தெரசா மகளிர் பல்கலைக்கழகம். கொடைக்கானல்*

**முனைவர் திருமதி. வெ. சஷீலா**
*உதவிப்பேராசிரியர்,*
*நீதிபதி பஷீர் அகமதுசயீது மகளிர் கல்லூரி, சென்னை*

**ஆய்வுச்சுருக்கம்**

*தமிழ் இலக்கியங்கள் யாவும் ஒரு புதிய கருத்தோட்டத்தோடு தான் படைக்கப்பட்டுள்ளது என்பதற்குக் காரணம் அதனை படைக்கும் ஆசிரியர்.அல்லது படைப்பாளி ஆகியோர் ஆவர். உலகெங்கிலும் இத்தகையவர்கள் காலந்தோறும் தோன்றி. பலப்பல புதிய படைப்புகளை உலகிற்குத் தந்தார்கள். இதனைப்போல தமிழ் எழுத்துலகில் எண்ணற்றவர்கள் தமிழ் மொழியில் பல இலக்கியங்களைப் படைத்து உலக நன்மைக்கு அளித்துள்ளனர். இவ்வாறு அளித்த படைப்புகள் நமக்கு சிந்திக்கத் தெரியவும். அதன்மூலம் உலகிற்கு பல செய்திகளைத் தெரிவிக்க வேண்டும் என்ற எண்ணமே ஆகும். புதினங்களும். சிறுகதைகளும் எளிய மக்களின் வாழ்வியலை கதைகளாக்கி அவர்தம் இன்னல்களை உலகிற்கு எடுத்துரைப்பதில் பங்காற்றுகிறது. ஆண்களைக் காட்டிலும் பெண்களே பல இன்னல்களுக்கு ஆளாகின்றனர் என்ற அடிப்படையில் பல பெண் எழுத்தாளர்கள் பெண்ணியச் சிந்தனைகளுடன் பல்வேறு படைப்புகளைத் தருகின்றனர். அந்தவகையில். சு.தமிழ்ச்செல்வி என்பாரும் தற்கால எழுத்துலகில் பெண்ணியச்சிந்தனைகளுடன் புதினம். சிறுகதை போன்றவற்றைப் படைத்து வருகின்றனர். இதன் அடிப்படையில் சு.தமிழ்ச்செல்வியின் படைப்புகளில் பெண்ணியச் சிக்கல்கள் பற்றி ஆராய்வதாக இக்கட்டுரை அமைகின்றது.*

***கலைச்சொற்கள்:*** *சு. தமிழ்ச்செல்வி, புதினம், நாவல்கள், பெண்ணியம், பெண்ணியச் சிக்கல்கள், கற்றாழை, கீதாரி. அளம், பொன்னாசரம்.*

**முன்னுரை**

தமிழ் இலக்கிய வரலாற்றில் சங்க இலக்கியங்கள், பதினெண்கீழ்க்கணக்கு நூல்கள். ஐம்பெருங்காப்பியங்கள், ஐஞ்சிறுங்காப்பியங்கள். பக்தி இலக்கியங்கள், சிற்றிலக்கியங்கள், என்ற வரிசையில் மாறுபட்ட இலக்கியங்களாக இருப்பது புதுவகை இலக்கியங்கள் ஆகும். தமிழில், ‘‘பிரதாப முதலியார் சரித்திரம் என்ற தமிழ் முதல் நாவலின் கதை, காப்பியத் தன்மையோடுஒருவர் கதை கூறும்வகையில் அமைந்தது’’ எனும் மு.அருணாச்சலத்தின் கூற்றின்படி, பிரதாப முதலியார் சரித்திரம் என்பது. சமூகத்தின் மீதான முதல் விமர்சனப் பார்வையாக வைக்கப்பட்ட முதல் நாவலாகக் கருதலாம். படைப்பிலக்கியம் சமுதாயத்திற்கு நன்மை பயக்க வேண்டும் என்ற நோக்கில் படைப்பாளர்கள் அவர்தம் படைப்புகளைப் படைக்கும் போது. அதில் பாதிக்கப்பட்ட மக்களுக்கானக் குரலாக இருப்பின் இது ஒரு வகையில் சமுதாயத்தில் புரட்சிபடைக்கும் புதினங்கள் ஆகும். அந்தவகையில் எழுத்தாளர் சு.தமிழ்ச்செல்வியின் படைப்புகளில் பெண்ணியச் சிக்கல்கள் எவ்வாறு ஆராயப்படுகின்றது

என்பதை இக்கட்டுரையின் வாயிலாக அறியமுடிகின்றது.

## தமிழில் புதின இலக்கியங்கள்

புதினங்கள் (நாவல்) இலக்கியம் 1878- இல் தொடங்கி. பின்பு தமிழில் தொடர்ந்து படைக்கப்படும் இலக்கியமாக மாறிவிட்டது. துப்பறியும் கதைகளை மையமாகக் கொண்டு சில. நாவல்கள் 1900 ஆம் கால கட்டத்தில் தோன்றியது. ஆரணி குப்புசாமி முதலியார். வடுவூர் துரைசாமி ஐயங்கார். ஜே.ஆர். ரங்கராஜு. வை.மு. கோதைநாயகி அம்மாள் போன்றோர் இதில் குறிப்பிடத்தகுந்தவர்களாகக் கொள்ளலாம்.

காலங்கள் பல கடந்து கல்கி என்னும் ரா. கிருஷ்ணமூர்த்தி என்பவர் தமிழ்ப்புதின இலக்கிய வளர்ச்சியில் ஒரு குறிப்பிடத்தகுந்த இடத்தைப் பெற்றுள்ளார். காரணம் தமிம் நாட்டின் வரலாற்றினை புதிய வரவான புதினங்களாகப் படைத்ததினால் இவரது புதினங்கள் போற்றும் வகையில் அமைந்தது. பார்த்தீபன் கனவு, சிவகாமியின் சபதம், பொன்னியின் செல்வன், அலையோசை, தியாகபூமி, மகுடபதி, கள்வனின் காதலி போன்றவைகள் கல்கி அவர்களால் படைக்கப்பட்டது. இவ்வாறு புதினம் தோன்றி ஒரு நூற்றாண்டு காலத்திற்குப் பிறகு நாரணத்துரைக் கண்ணன். அகிலன், கோ.வி. மணிசேகரன்,தேவன், சாண்டில்யன், தீபம் நா. பார்த்தசாரதி, சங்கரராம், கு. ராஜவேலு, மு. வரதராசன், அநுத்தம்மா போன்றோர்கள் புதினங்கள் பல படைத்து தமிழில் புதினங்களின் வளர்ச்சியினை வேறு நிலைக்கு எடுத்துச் சென்றனர். புதினம் என்ற இலக்கிய வளர்ச்சியில் தங்களின் பங்களிப்பினை உரிய படைப்புக்களைப் படைத்து அடுத்த நிலைக்கு கொண்டு சென்றனர். இவர்களின் காலகட்டத்திற்குப் பிறகு யதார்த்தவாத நாவல்கள் தமிழில் தோன்றியது. இது மக்களின் வாழ்வியலை உள்ளதை உள்ளது போன்று எடுத்துரைப்பது போன்று அமைந்திருந்தது. சமூக சீர்திருத்தம், சமூக எழுச்சி ஆகியவற்றை உள்ளடக்கியதாக இருந்தது. சமுகத்தின் தீர்க்க முடியாத சிக்கல்களையும். இந்திய அரசியல் நிலையையும். குடும்ப உறவுச் சிக்கல்களும் தமது நாவல் படைப்புகள் மூலம் சித்தரிக்கத் தலைப்பட்டனர் எனலாம்.

## தமிழ் நாவலின் போக்குகள்

தமிழகத்தில் இருந்த சமூக வேறுபாடுகளையோ, சாதிய முரண்பாடுகளையோ எடுத்துரைக்கும் வண்ணமாகவோ, பெண்களுக்கு நிகழும் கொடுமைகளையோ எடுத்துரைப்பனவாக இல்லை என்பது இதனின் குறையாக இன்று வரையில் கூறப்படுகிறது. இது சமுதாய நாவலாக இல்லாமல், கதை கூறும் தன்மையில் அமைந்ததினாலும், தமிழில் இதுபோன்ற புதியனவைகளுக்கு வரவேற்பு கிடைக்குமோ. கிடைக்காதோ என்ற நிலையில் ஆங்கில நாவல்களைப் பின்பற்றி படைக்கப்பட்டதினால். பெண்களின் மீதான அடக்குமுறை களையோ. பெண் அடிமைத் தனத்தையோ, ஒடுக்கப்பட்டோர்களின் வாழ்வியலைச் சித்தரிப்பதாக இல்லாமல், வாசர்கர்கள் என்னும் எண்ண ஓட்டத்தை ஏற்படுத்தா வண்ணமாக ஆரம்பநிலை படைப்புகள் இருந்தது எனக் கூறலாம். இவ்வகை இலக்கியங்கள் பல விமர்சனங்களைக் கடந்துதான் “வெற்றியடைந்துள்ளது என்பது குறிப்பிடத்தகுந்தது எனலாம்.

## பெண்சார்பு இலக்கியங்கள்

படைப்பிலக்கியம் என்பதில் ஆண், பெண் ஆகிய இருவரும் இணைந்த அல்லது பல்வேறு தரப்பட்டக் கதாப்பாத்திரங்களை உள்ளடக்கியதாகும். சமூகம் என்பது வட்டாரம், கிளை, கிராமம், ஊர், நாடு என்ற அளவில் அதனுள் வாழும் மக்களின் வாழ்வியலை எடுத்து அல்லது அதனை சார்ந்து அல்லது இதனுள் கதைகள் நடப்பதாகத்தான் அமைக்க

வேண்டும். பொதுவாகவே படைப்பாளர்கள் என்பவர் தன் உள்ளத்தில் தோன்றும் எண்ணங்களை வெளிப்படுத்தி. ஏதேனும் ஒரு முதன்மைக் கருத்தினை முன்வைத்துப் படைப்பர். இதனுள் சமூதாயத்தில் பின்னிற்குத் தள்ளப்பட்டவர்கள், ஒடுக்கப்பட்டவர்கள், சமுதாயத்தால் புறம் தள்ளப்பட்டவர்கள், கீழ் நிலையில் உள்ளவர்கள் என்ற வரிசைப் பட்டியலில் வாழ்பவர்களது வாழ்வினை பெரிதென மதித்து படைக்கப்படும் இலக்கியங்கள் யாவும் ஒரு புதுமையைப் பெற்றுவிடுகிறது.

### பெண் கவிஞர்கள்

படைப்பிலக்கியத்தில் பெண்கள் பங்கு கொள்ளும் அளவு தற்காலத்தே அதிகரித்துள்ளது. பெண்களால் படைக்கப்படும் இலக்கியங்கள் ஒரு தனித்துவம் பெற்றவையாகக் கருதப்படுகிறது. பெண்விடுதலையை பேசுபவர்கள் ஆண்கள் என்றாலும் கூட, பெண்களே பெண்ணிற்கு குரல் கொடுப்பது என்பது புதுமையானதாகும். அதனால் இதனைப் புரட்சியின் ஊற்று எனலாம். பெண்ணிற்கு பெண்ணே பேசுவதும். இலக்கியம் படைப்பதும் அதனினும் சிறப்புடையதாகிறது என்ற மகாத்மா பூலே அவர்களின் கருத்திற்கு ஏற்ப பெண் விடுதலையைப் பற்றி பேசுவதற்கு தற்காலத்தில் பெண்களே புறப்பட்டனர்.

**“தமிழ்ப் புதுக்கவிதைத் துறையினை, இப்போது பெண் கவிஞர்கள் காலம் எனலாம். பெண்கள் அதிகமாகப் புதுக்கவிதைகளும் புதுக்கவிதைத் தொகுப்புகளும் தந்து கொண்டிருக்கும் காலமிது”** என்னும் மு. அருணாச்சலம் அவர்களின் கருத்திற்கு ஏற்ப, **“புதுமைபாடும் பெண் கவிஞர்களாக இரா. மீனாட்சி, மாலதி மைத்ரி, சுகந்தி சுப்பிரமணியன், ஆண்டாள் பிரியதர்ஶினி, பத்மாவதி தாயுமானவன், சல்மா, கனிமொழி, தமிழச்சி தங்கபாண்டியன், வெண்ணிலா, திலகவதி, பாமா, வைகைச்செல்வி, தேன்மொழிதாஸ், சுகிர்தராணி, வெண்ணிலா, சக்திலோதி, பெருந்தேவி?”** போன்றோர்கள் குறிப்பிடத்தகுந்தவர்கள் எனலாம்.

### சு. தமிழ்ச் செல்வியின் படைப்புகள்

படைப்பாளர்கள் தங்களின் படைப்புகளில் மக்களின் வட்டார நிலங்களுக்கு ஏற்ப தங்களின் கதைகளில் வட்டார வழக்குகளை நடைகளாக்கி. புதுமை படைத்து வந்தனர். என்றாலும். தற்காலத்தில் சிறுகதை உலகில் சு.தமிழ்ச்செல்வி போன்றோர் இத்தகைய புதிய உத்திகளைக் கையாண்டு சிறுகதைகள், நாவல்கள் படைப்பதில் களம் இரங்கி வெற்றியும் பெற்றுள்ளார் எனலாம். பெண்களின் உடலியல் கூறுகள். மண் சார்ந்த, சமூகப் பொருளாதாரம் சார்ந்தப் பின்னணியுடன். எவ்வித கவனிப்பும் இன்றி வாழும் பெண்களை தன் நாவல்,சிறுகதைகளில் மாந்தர்களாக்கி வட்டாரச் சொற்களைக் கையாண்டு வட தமிழகத்தில் வாழும் பெண்களை உலகறியச் செய்தார். சாதாரண எளிய மக்களின் வாழ்க்கையினை கதை கருவாக்கிப் படைப்பதில் சிறந்து விளங்கி வருகிறார். பெண் எழுத்தாளர்களில் நவீனத்துவம் வாய்ந்தவராகவும். புதுமைப் படைப்பவராகவும் இருக்கிறார். உள்ளதை ஒளி மறைவின்றித் தன் படைப்புகளின் வழியே எழுதி வருபவராகவும் சு. தமிழ்ச்செல்வி விளங்குகிறார்.

பெண் என்றால் பேயும் இரங்கும் என்பார்கள். ஆனால் ஆண்கள் அவ்வாறில்லை. என்பதைத் தன்னுடைய படைப்புகளில் வெளிப்படையாகச் சொல்லி வருபவர். பெண்ணியம் பற்றி பேசும் எத்தனையோ வகையாளர்களில் இவர் ஒரு தனித்துவம் வாய்ந்தவர். தீவிரவாதப் பெண்ணியம். மிதவாதப் பெண்ணியம். மார்க்சியப் பெண்ணியம். தலித் பெண்ணியம். நடுத்தரவர்க்கப் பெண்ணியம். மருத்துவப் பெண்ணியம். தொழில்சார் பெண்ணியம். சுதந்திரப் பெண்ணியம் போன்ற வடிவங்களில் இயங்கி வரும் பெண் சார்பு கொள்கையில் இவர் மிதவாதப் பெண்ணியம் சார்ந்தவராகக் கருதலாம். இராமநாதபுரம் மாவட்டம்.

திருநெல்வேலி, கன்னியாகுமாரி. நெய்வேலி. நாகப்பட்டினம் ஆகிய பகுதிகளில் நிலவும் பெண் சார்ந்த வாழ்க்கைச் சூழலை நாவல். சிறுகதைகள் ஆகியவற்றில் எழுதி வருபவர். தற்சார்புக் கொள்கைகள் இல்லாமல் பெண்களின் உண்மைத் தன்மைகளின் வெளிப்பாடாகவும். வாழ்க்கைச் சிக்கலின் புரிதலையும் தன் கதைகளின் வழியே எடுத்துரைப்பர்.

சு. தமிழ்ச்செல்வியின் படைப்புகளாக மாணிக்கம், கற்றாழை, அளம், கண்ணகி, கீதாரி. "பொன்னாச்சரம். ஆறுகாட்டுத்துறை போன்ற நாவல்களும் மற்றும் சாமுண்டி என்ற சிறுகதைத் தொகுப்பும் இவரின் பெண்ணியம் சார்ந்த படைப்பிற்குச் சான்றுகளாக விளங்குகின்றன.

**பெண்ணியச் சிக்கல்கள்**

சிக்கல் என்பது என்ன என்ற வினாவிற்கு விடை காண முற்பட்டால் குடும்பச் சிக்கல்கள். சமூகச் சிக்கல்கள், பொருளாதாரச் சிக்கல்கள், சாதியச் சிக்கல்கள். சொந்தச் சிக்கல்கள் எனப் பல்வேறு விதமாக இருப்பதை அறியமுடிகின்றது. வாழ்க்கையில் ஒவ்வொரு அடையக்கூடிய துன்பங்களின் தொகுப்பாக இந்தச் சொல்லாடலின் பொருள் நமக்குப் புரிகின்றது. சமூகத்தில் காணப்படும் எண்ணற்றப் பிரச்சினைகளின் தொகுப்பாக இதனைக் காணமுடிகின்றது. ஆண் பெண் உறவு சிக்கல்களில் முதன்மையானது வரதட்சணை எனலாம். அதனைப் போலவே உடலுறவு, தாம்பத்தியம். கள்ளத்தொடர்பு, குடும்ப செல்வ நிலை, மாமியர் கொடுமை போன்றவற்றுடன் பாலியல் துன்பங்கள் ஆகியவற்றைக் கூறலாம். இந்த ஐந்து விதமான பிரச்சனைகள் முடிவு பெறுவதும் உண்டு. முடிவுறாததும் உண்டு. அது முடியா விட்டால் உயிர் இழப்புவரை சென்று விடுகிறது.

**வரதட்சணை கொடுமை**

வரதட்சணை என்பது தன்னுடைய மகள் புகுந்த வீட்டில் சுதந்திரமாக வாம்வதற்குதந்தையால் கொடுக்கப்படும் பரிசு என்ற நிலை மாறி. வரதட்சணை கொடுத்தால் தான் பெண்ணிற்கத் திருமணம் நடக்கும் என்ற நிலை சமூகத்தில் வந்துள்ளது. ஒவ்வொரு ஆணும்வரதட்சணை பெற்றுக் கொண்டே இல்லறவாழ்விற்கு உள்ளே நுழைகிறான். இது சமூகத்தில்பெண்களுக்கு எதிராக நிலையில் நின்று பெண்களின் சிக்கல்களுக்கு அடித்தளமிடுகிறது என்பதை எழுத்தாளர் சு. தமிழ்ச்செல்வி தன்னுடைய படைப்புகளில் அழுத்தம் திருத்தமாக அமைத்து காட்டியுள்ளார். இந்த வரதட்சணை, மாமியார் கொடுமைகள் ஆகியவற்றிற்கு வழிவகுப்பது பெண்களே என்று எடுத்துக்காட்டுகிறார். இலக்கியங்களில் இதனை,

> **"அன்னாய் வாழி வேண்டன்னை நம் படைப்பைத்**
> **தேன்மயங்கு பாலினும் இனிய அவன்நாட்டு**
> **ஊவலைக் கூவல் கீழ**
> **மான் உண்டு எஞ்சிய கலிழி நீரே"**

என்ற ஐங்குறுநூற்றுப் பாடலின்வழி. தாயின் காதில் விழவேண்டும் என்பதற்காக தோழியிடம் கூறுவதைப் போல அமைந்தளன்ள இந்த கூற்றில் தலைவி படும் வேதனையை. திருமணத்திற்கு முன்பு தன்னுடைய வீட்டில் செல்வச்செழிப்புடன் வாழ்ந்த ஒரு பெண்ணானவள் கணவன் வீட்டில்படும் துயரத்தை இனிமையாக இருக்கிறது என்று கூறும் தலைவி போல. பெண்கள் தாங்கள் அடையும் துன்பங்களை மறைத்து உரைப்பதாக சங்க இலக்கிய காலம் முதல் இன்றுவரை இருக்கின்றது என்பதை தமிழ்ச்செல்வியின் படைப்புகளின் வழி அறியமுடிகின்றது.

**கீதாரி என்னும் புதினத்தில் பெண்ணியச் சிக்கல்கள்**

கீதாரி என்னும் புதினத்தில் சிவப்பி என்னும் பெண் பாத்திரத்தின் வழியே பெண்ணுலகம் அனுபவித்துக் கொண்டிருக்கும் துன்பங்களை வெளிப்படுத்தியிருப்பதைக் காணமுடிகின்றது. இதனை.

**“செத்துப்போன காக்கையின் இறகுகளை நுனியில் வைத்துக் கட்டியிருக்கும் நீண்டகுச்சியை கையில் வைத்துக்கொண்டு நெல்வோடு சேர்த்து சிவப்பியும்காய வேண்டியதாக விட்டது. மெல்ல மெல்ல பள்ளிக்கூடம் போகும் ஆசையும்படிக்கும் ஆசையும் சிவப்பியை விட்ட போயே போய் விட்டது”**

எனக் கதைப்போக்கில் உரைப்பதில் சிவப்பிக்கு கல்வி மறுக்கப்பட்டதுடன் கடினமான வேலையையும் அவள் செய்கிறாள் என்பது சமூகத்தின் காணப்படும் ஒழுக்கமற்ற பெண் மறுப்புக்கோட்பாடு என்றே கூறலாம்.

**பொன்னாசரம் புதினத்தில் சிக்கல்கள்**

பொன்னாசரம் புதினம் முழுவதும் பெண்களுக்கு எதிராக நடைபெறும் பிரச்சினைகள், சிக்கல்களை அடிப்படையாகக் கொண்டதாகவே உள்ளது. சமூகத்தில் நிலவும் பெண்களுக்கு எதிரான கொடுமைகள் அனைத்து இன மக்களிடையேயும் இருந்து வருகிறது. அது அனைத்து இடங்களில் பல்வேறு வடிவங்களில் நிகழ்ந்து கொண்டிருக்கிறது எனலாம்.

ஆடு மேய்ப்பவர்களின் வாழ்க்கை இவ்வாறு தான் இருக்கும் என உணரச் செய்திருக்கிறார். இதனை,

**“அடி அவுசாரி முண்ட என்ன காரியமுடி செய்துவிட்டு வந்துட்ட அவுக வட்டல இருக்க புடிக்கலபிண்டா அத சொல்ல வேண்டியது தானடி, எதுக்காகடி ஒலக்க யாலுல போட்டெ என கோபத்தில் வைதாள் குறுந்தாயி?”**

எனவரும் பொன்னாசரத்தின் உரையாடல் படைப்பாளரின் கூற்றாகவே நாம் இதனை காணமுடிகின்றது. பெண்ணுக்கு எதிரி பெண் என்பதையே இது காட்டுகிறது. இதனுள் இலைமறை காயாக உரைப்பது பெண்கள் இந்த சமூகத்தில் பெண்களை மதிப்பதில்லை என்பதேயாகும்.

**“எட்டாம்பேரு வேண்டாத புள்ளமாதிரி ஒரு பொட்டப்புள்ள வந்து பொறந்துட்டுது. இனி என்ன செய்ய தூக்கி கொளக்காயில போட்டுற முடியுமா? வளத்துதேன் ஆகணும். குண்டில ரெண்டு தட்டு தட்டி ஒரு பேரு வச்சித்தாங்க, அப்பத்தேன் அடுத்தாவது வடுதேடி வராமபோவுதான்னு பாப்பம்” என்று குறுந்தாயின் பேச்சிற்கு எதிர் பேச்சாக, பூசாரி,“கொலதெய்வம் மாதிரி வந்து பொறந்துருக்கு என்னத்துக்கு இந்தப் புள்ள குண்டியில தட்டச் செர்வுற?”**

என்பதில் தாயே பெண் குழந்தைகளை விரும்புவதில்லை என்பது இதன்மூலம் தெரியவருகின்றது.

**கற்றாழை புதினத்தில் பெண்ணியச் சிக்கல்கள்**

கற்றாழை என்னும் புதினத்தில் எண்ணற்ற கதாப்பாத்திரங்களைப் படைத்துக்காட்டும் சு.தமிழ்ச்செல்வி மணிமேகலை என்னும் பெண் பாத்திரத்தின் வழியே பெண்கள் படும் வேதனையை எடுத்துரைக்கிறார். விவசாயிகள் தங்களின் நிலங்களில் வேளாண்மை செய்யய முடியாமல். கூலி வேலைக்குச் செல்வதும். நகர்ப்புறங்களுக்கு புலம்பெயர்ந்து செல்வதும் இந்தப் புதினத்தில் எடுத்துரைக்கப்பட்டுள்ளது. எந்த துன்பம் வந்தாலும் அதை சமாளித்து வாழ்கின்ற பெண்ணாக மணிமேகலை என்னும் கதாபாத்திரம் படைக்கப்பட்டிருக்கிறது.

குடிக்கார கணவன், திருமணத்திற்கு முன்பே வேறொரு பெண்ணுடன் தொடர்பு, இதைத் தெரிந்தும் தன் தந்தையின் வற்புறுத்தலால்

வேறு வழியில்லாமல் திருமணம் செய்துகொள்வது எனக் கதையின் நகர்வு அமைந்துள்ளது. மணிமேகலை என்னும் மைய கதாபாத்திரமானது.

**“தன் அம்மா வீட்டில் இருக்கும்வரை மாடுபோல வேலை செய்திருக்கிறாள். ஓய்வில்லாமல் உழைத்திருக்கிறாள். ஆனால் இதுவரை கூலிவேலைக்கென்று யார்வீட்டிற்கும் போனது கிடையாது. புருசன் வீட்டிலும் போனது கிடையாது. புருசன் வந்தபிறகு இப்போதுதான் முதன்முறையாக வேலைக்குப். போகிறாள்?**

என்ற கூற்றின்படி உழவினை நம்பி இருக்கும் ஒரு விவசாயி எப்படி ஏம்மை நிலைக்கு வருகின்றனர் என்பதாகத் தொடங்கி நடக்கும் இப்புதினத்தில் மணிமேகலையின் நிலை துன்பம் மிகுந்ததாகவே இருப்பதைக் காணமுடிகின்றது. பிறந்தவீட்டில் அனைத்து வேலைகளையும் பெண்களே செய்ய வேண்டும் என்பது குடும்பத்தில் பெண் மீதான அடுக்கமுறையை வெளிப்படுத்துகிறது. தந்தை. அண்ணன். தம்பி என யாராக இருந்தாலும் தன் தங்கை. தன் அக்கா எனப் பார்க்காமல் ஏதேனும் ஒரு வன்மத்தை பெண்களின் மீது தெளித்துவிடுவதை இந்தப் புதினத்தின்வழி வெளிச்சமிட்டுக் காட்டியிருக்கிறார் எழுத்தாளர் சு.தமிழ்ச்செல்வி.

## ஆறுகாட்டுத்துறை என்னும் புதினத்தில் பெண்ணியச் சிக்கல்கள்

ஆறுகாட்டுத்துறை என்னும் புதினம் சு.தமிழ்ச்செல்வி அவர்கள் மீனவர்களின் வாழ்வியலை அப்படியே இப்புதினத்தில் பதிவு செய்துள்ளார். சவரிமுத்து என்னும் மீனவன் ஆரோக்கியமேரி என்ற பெண்ணைக் காதலித்து திருமணம் செய்துகொண்டு ஊரை விட்டு செல்கிறான். ஆறுகாட்டுத்துறை என்னும் பகுதியில் சிங்காரவேலு நாட்டார் என்பவர் இவர்களுக்கு அடைக்கலம தருகிறார். சவரிமுத்து மீன்பிடி தொழிலில் ஈடுபட்டு வாழ்ந்து வருகின்றனர். இவர்களுக்கு சாமுவேல். அருள்தாசு என்னும் இரு குழந்தைகள் பிறக்கின்றனர். கருவாடு விற்கும் போது ஆரோக்கியமேரி லாரியிலிருந்து தவறி விழுந்து இறந்துவிடுகிறாள். சவரிமுத்து கோடியக்கரையில் படகு சரிசெய்யும்போது ஒரு புதியவகை மீன் தாக்கி இறந்து விடுகிறான். இவ்வாறு மீனவர்களின் வாழ்வியலைச் சித்தரிக்கிறார் ஆசிரியர். மீனவர்களின் வாழ்வானது எப்படிப்பட்ட துன்பத்தை உடையது என்பதை படைப்பாளர் நன்முயற்சியில் எடுத்து விளக்குகிறார். கதையின் நகர்வு முழுக்க முழுக்க ஆண்களைப் பற்றியதாக இருந்தாலும். பெண்கள் எந்தனவில் பல்வேறு வகையில் ஆண்களால் பாதிக்கப்படுகின்றனர். என்பதை ஆறுகாட்டுத் துறையில் எடுத்துக்காட்டுகிறார் சு.தமிழ்ச்செல்வி.

ஆறுகாட்டுத்துறை புதினத்தில் மற்றொரு கதாபாத்திரமாக சமுத்திரவல்லி, அவரது கணவன் சாமுவேல் என இருவரும் வாழ்ந்து வருகின்றனர். சாமுவேலுக்கு இயற்கைப் பற்றியும். தனக்கு குழந்தைப் பிறப்பது பற்றியும் சமுத்திரவல்லி எடுத்துக்கூறுகிறார். ஒருநாள் சாமுவேல் கடலுக்குச் சென்றவன், புயற்காற்றில் அடித்துச் செல்லப்பட்டு வேறு நாட்டிற்குச் சென்று விடுகிறான். தன் கணவன் சாமுவேல் தன்னை விட்டு போய்விட்டான் எனக் கருதி வருத்தமுற்று தன்னுடைய தந்தையின் வீட்டில் வாழ்ந்துவருகிறாள். ஆனால் தன் கணவன் என்றாவது ஒருநாள் திரும்பி வருவான் என்ற நம்பிக்கையுடன் காத்திருக்கிறாள் சமுத்திரவல்லி. ஆனால் அவளது நம்பிக்கை வீண்போகாமல் கணவன் திரும்பி வருவதாக கதையின் ஓட்டம் அமைகின்றது. இதனை,

**“சமுத்திரவல்லி தன் தலையில் இடி இறங்கியதைப் போல உணர்ந்தாள். தொண்டை அடைத்து கொண்டது. அவளால்பேச முடியவில்லை. கண்களை முட்டிக்கொண்டு கண்ணீர் வந்தது. வாயில் வைத்திருந்த உணவு வேம்பாககசந்தது. உள்ளுக்குள் விழுங்க முடியல. வெளியே துப்பவும் முடியல. இதுவரை நெருஞ்சி முள்ளை**

**தின்று விட்டவளைப் போல திக்குக் காடினாள். விழுங்கிய முள் அனைத்தும் வயிரெங்கும் குத்திக் கிழிப்பது போலிருந்தது. திணறினாள் அவள்”**

என்ற உரையாடலிலிருந்து வாசிப்பவர்களுக்கு அதிர்ச்சியை ஏற்படுத்தும் விதமாக படைப்பாளர் தமிழ்செல்வி கதையின் ஓட்டத்தை அமைத்துள்ளார். இம்மாதிரியான வேதனைகளுக்குக் காரணம் பெண் குழந்தை என்றால் அனைவரும் வெறுக்கின்றனர். பெண் படும் வேதனைகளில் இதுவும் ஒன்றாக உள்ளது என்று சுட்டிக் காட்டுகிறார் தமிழ்ச்செல்வி அவர்கள்.

## தொகுப்புரை

தமிழ் இலக்கிய வரலாற்றில் பெண்சார்பு இலக்கியங்கள் என்பதை விளக்குவதற்கு தமிம் இலக்கிய வரலாற்றினை சுருக்கமாகச் சொல்லப்படுகிறது. நவீன இலக்கியங்களான கவிதை. சிறுகதை. நாவல் ஆகியவற்றை மட்டுமே குறிப்பிடமுடியும். இந்த நவீன இலக்கியங்கள் தோன்றிய காலச் சமலை சங்க இலக்கியம் காலம் தொட்டு வரலாற்றுப் பின்னணியில் கூறப்பட்டு. தமிழரின் வரலாறும். அவர்தம் வாழ்வில் கடைபிடித்த கொள்கைகள் என சுருக்கமான தமிழர் வாழ்வியல் கூறப்பட்டுள்ளன. வரலாற்றில் ஆணுக்குப் பெண் சமமில்லாத நிலையே இருக்கிறது என்பதை தமிழ் இலக்கியப் படைப்புகளில் வழியே எடுத்துரைக்கப்பட்டுள்ளது.

கவிதை. நாவல். சிறுகதை போன்ற நவீன இலக்கியங்கள் ஐரோப்பியர் வருகைக்குப் பிறகு தோற்றம் பெற்றது என்பதும். இது எவ்வாறு தமிழில் தோன்றியது என்பதான வரலாறும் கூறப்பட்டுள்ளது. பெண்கள் படைக்கும் பெண்ணியம் சார்ந்த படைப்புகள் எவையெவை என்பதாக எடுத்துரைத்து. அடையாளம் காட்டப்பட்டுள்ளது. குறிப்பாக. சிறுகதைகள். நாவல்கள் ஆகியவை இலக்கியங்களில் எவ்வாறு பெண் சார்புடையதாக மாறுகிறது என்பதின் சூழல் உண்த்தப்பட்டு. இவ்வலிக்கியங்களும். படைப்பாளர்களும் பல்வேறு நிலைகளில் எவ்வாறு பெண்ணியம் சார்ந்த படைப்புகளைப் படைக்கின்றனர்

## அடிக்குறிப்புகள்

1. மு.அருணாசலம் - தமிழ் இலக்கிய வரலாறு, பக்-448
2. மேலது. பக்-450
3. ஐங்குறுநூறு. பா.எ.203
4. கீதாரி, சு. தமிழ்ச்செல்வி, பக். 64
5. பொன்னாச்சரம், சு.தமிழ்ச்செல்வி, பக்.12
6. மேலது. பக்.14
7. கற்றாழை. சு.தமிழ்ச்செல்வி. பக்.165
8. மாணிக்கம். சு.தமிழ்ச்செல்வி. பக்.19

## துணைநின்ற நூல்கள்


1. மு. அருணாசலம். (1985), தமிழ் இலக்கிய வரலாறு, தி பார்க்கர். சென்னை.
2. ச. வேசுப்பிரமணியன். (2006). சங்க இலக்கியம் முழுவதும், மணிவாசகர் பதிப்பகம், சென்னை.
3. சு. தமிழ்ச்செல்வி. (2008). கீதாரி. நிய செஞ்சுரி புக் ஹவுஸ்(/)லிட். சென்னை.
4. சு. தமிழ்ச்செல்வி (2014). பொன்னாசரம். நியூ செஞ்சுரி புக் ஹவுஸ்(பி)லிட். சென்னை
5. சு. தமிழ்ச்செல்வி (2016). மாணிக்கம். நியூ செஞ்சுரி புக் ஹவுஸ்(பி)லிட். சென்னை
6. சு. தமிழ்ச்செல்வி (2014). கற்றாழை, நியூ செஞ்சுரி புக் ஹவுஸ்(பி)லிட். சென்னை

# திருஞானசம்பந்தரின் இறைநெறி முறைகள்

**திருமதி. கோ. கனக செல்வி**
*இளம் முனைவர் பட்ட ஆய்வாளர் (பகுதி நேரம்)*
*தமிழ்த்துறை, அன்னை தெரசா மகளிர் பல்கலைக்கழகம், கொடைக்கானல்*

**முனைவர் திருமதி. வெ. ஷீலா**
*உதவிப்பேராசிரியர்*
*நீதிபதி பஷீர் அகமது சயீது மகளிர் கல்லூரி, சென்னை*

**முன்னுரை**

பக்தி நெறியினால் இறைவனைக் காண முடியும் என்பதை அருளாளர்கள் உணர்த்துகின்றனர் பக்தியுடன் பதிகம் பாடி இறையருளைப் பெறக்கூடிய அரிய வழிகளை இம்மண்ணுலகிற்கு அளித்தவர் திருஞானசம்பந்தர்.

இறைவனை வழிபடுவதற்கு ஏற்ற மொழி தமிழ்மொழி, அம்மொழிக்கு அளவற்ற மந்திர ஆற்றல் உண்டு என்றெல்லாம் நிருபித்து காட்டியவர் சம்பந்தப் பெருமான். பல்வேறு சமயங்கள் தத்தம் பக்தி நெறிகளை மக்களிடையே வலியுறுத்தப் பல்வேறு உத்திகளை மேற்கொண்டு வருகின்றன அவ்வகையில் ஞானசம்பந்தர் உணர்த்தும் பக்தி நெறி விளக்கப்படுகின்றன.

**திருஞானசம்பந்தரின் தேவாரப் பாடல்கள்**

இவ்வுலகப் பெருவெளியில் கிடைத்தற்கு அரிதான மானிடப் பிறவிக்குக் கருதி சேர்த்து மனங்களை ஒருங்கிணைத்து ஒற்றுமை என்றும் உயிர்த்துடிப்போடு மக்களை நன்னெறிப்படுத்தி வாழ வைக்கும் ஆற்றல் கொண்ட பெரும் சக்தி “சமயம்” என்றழைக்கப்படுகின்றது. மனிதனை மதிப்பதும் மற்றவர்களால் மதிக்கப்படுவதும் உயரிய மானுட விழுமியங்களாகக் கருதப்படுகின்றன.

அந்த மதத்தினராக நாங்கள் எல்லா மதங்களும் சத்தியமானவை என ஏற்றுக் கொள்கிறோம். பிற மதத்தினரா தூத்தப்பட்டு எட்டு திசைகளிலிருந்தும் எங்களை நோக்கி ஓடி வந்த அகதிகளுக்கெல்லாம் அடைக்கலம் தந்த நாட்டை சேர்ந்தவன் என்பதில் பெருமையடைகிறேன்.

(சுவாமி விவேகானந்தர், பிரசங்கள், ப.307)

என்ற சுவாமி விவேகானந்தர் உலக சமயங்களில் பேரவைகளில் நிகழ்த்திய உரையை உள்வாங்கிக் கொள்ளும். ஒவ்வொருவரும் நம் இந்து சமயத்தின் பெருமையைத் தெளிவாக உணர்வர். உணர்தலும், உணர்த்துதலும், சீர்பெறும் போது மானுட வாழ்வு முன்னேற்றம் என்னும் இலக்கை நோக்கி அமைதிப் பயணமாகத் திகழும்.

அந்த கரையைச் சென்றடைந்தவனுக்கு கப்பலின் உதவி தேவைப்படாதது போல் சமயங்களுக்குள் நுழைந்து அவை வலியுறுத்தும் யாவற்றையும் அறிந்து, கரை சேர்ந்து விட்ட மகான்களுக்கு சமயங்கள் தேவைப்படுவதில்லை. சமயத்தைக் கடந்த மகான்களாக ஒவ்வொருவரும் உருவாக வேண்டியதன் அவசியத்தை மனித சமுதாயம் நன்கு உணர்த்துகின்றது. ஓர் உருவில் அழிந்தாலும், வேறு உருவில், புதிதாய்த் தோன்றித் தழைத்து வளர்ந்து கொண்டு இருக்கும் சமயத்திற்கு முடிவு என்பது, சமயத்தைக் கடந்து செல்வதே ஆகும். இலக்கை அடைந்துவிட்டவன் மட்டுமே வழியை விட்டுவிடலாம். மற்றவர்களுக்கு அந்த நிலையை அடையும் வரை சமயம் என்ற வழி மனிதனுக்கு அவசியமாகின்றது. எல்லாச்

சமயங்களிலிருந்தும் மிகத் தேவையான அம்சங்களைக் கண்டெடுத்து அவற்றின் சாரத்தை இளைய தலைமுறையினருக்குக் காட்டி உணர்த்துவது இன்றைய காலகட்டத்தின் அவசரத் தேவையாகக் கருதப்படுகின்றது.

Religion என்ற ஆங்கிலச் சொல் 'Re'' legree'' என்ற இரு சொற்களிலிருந்து உருவான ஒரு சொல் "புதியதாய்ச் சேர்ப்பது" என்பதே இதன் பொருள். மனித இதயங்களைப் புதியதாய் இணைத்து அந்த இனிய சேர்க்கையை இறைவனோடு இணைக்கச் செய்யும் பெரும்பணி சமயங்களின் பணியாகும். வெவ்வேறாகக் காட்சி தருகின்ற சமயங்கள் அனைத்தும் அன்பாகிய அடிப்படை பொதுத்தன்மையை உணர்ந்து கொண்டால் நம்மில் ஒற்றுமைதானாகப் பிறக்கும்.

"வாழ்க்கையின் மிகப் பெரிய சிக்கல்கள் ஆழ்ந்து ஆராயப்பட்டு, அவற்றில் சிலவற்றுக்காவது தீர்வுகள் எங்கே கண்டுபிடிக்கப்பட்டுள்ளன என்று கேட்டால் இந்தியாவைத் தான் காட்ட வேண்டும். மேலும் கிரேக்க, ரோமானியச் சிந்தனைகளால் உருவாக்கப்பட்ட நாம் கூட எந்த நாட்டின் இலக்கியங்கள் இவ்வுலகில் மனித வாழ்வினைச் செம்மைப்படுத்துவதோடன்றி, நிலையானதும், அழிவற்றதுமான வாழ்வுக்கு அழைத்துச் செல்கின்றது என்ற கேள்விக்கும் அதே இந்தியாவைத்தான் காட்ட வேண்டியுள்ளது". (எடுத்தாண் மேற்கோள் ப.குப்புசாமி, சமயங்கள் பல தர்மம் அன்றே ப : 7)

மண்ணுல வாழ்வில் நல்லவையாகத் தோன்றியவை அனைத்தும் நிலையற்றவை, உட்பட்டவை, கால வெள்ளத்தில் கரைந்து கரைந்து காணாமல் போகக் கூடிய தன்மையுடையவை இந்த உண்மையை உணர்ந்து மனிதன் திகைத்து நிற்கையில் அவனைச் சீரிய வழியில் சிறப்பாக வழி நடத்தி செல்வது இந்து சமயம் உள் நோக்கிப் பார் உனக்குள்ளே உறைந்திருக்கும் பரம் பொருளை உணர் என்ற மனிதனின் சிதறிய கவனத்தை ஒருங்கிணைந்து உள்நோக்கி இலகுவாகத் திருப்புகின்றது இந்து சமயம் இந்தியாவின் அனைத்துச் சமய வழிமுறைகளும் இந்த நடைமுறை நோக்கத்திற்காக அர்ப்பணிக்கப்பட்டுள்ளன.

### இறைவனை தேடி அர்ப்பணிப்பது

இறைவனோடு ஒன்றுவதன் பொருட்டு ஆன்மீகத்தை நாடித்தேடி அர்ப்பணிக்கும் மனோபாவத்தின் விளைவால் மனிதனுக்கு கிடைக்கும் உள்ஞான அனுபவங்களை ஒருங்கிணைப்பது அனுபவத்தில் எற்படும் பேரானந்த நிலை அல்லது பேரின்பநிலை எனக்கூறுவர். இந்நிலை உண்மையான நிலையான நற்பண்புகளில் வழி நின்று ஒரு முழுப் பண்பாளனாக மனிதன் வாழ வேண்டும் என்ற உன்னத குறிக்கோள் நிறைவேறிக் கனிந்து கைகூடுதலே. பேரானந்தம் இந்நிலையைக் கண்டவர் வின் - விண்டவர் கண்டில் பேரானந்த நிலையானது விண்டுரைக்க இயலாதது என்பதை பிளாட்டோ பின்வருமாறு குறிப்பிடுகின்றார்.

"இப்பொருளை பற்றி நான் ஒன்றும் எழுதியது இல்லை என்றும் எழுதிவிடவும் இயலாது மற்ற கருப்பொருட்களைப் போல இதைக்கண்டு கையாண்டு வெளிபடுத்தி வி இயலாது. இந்த அற்புத அனுபவங்களை வார்த்தைகளாக வடித்து அவனியோருக்கு அள்ளித் தந்தவிட இயலுமாயின் அதை வரிகளாக்கித் தருவதை விட வாழ்வில் நான் செய்யக் கூடிய மகத்தான மானிடத்தில் வேறு என்ன இயலும், என்கிறார் (இரா.இராஜசேகரன், சைவப் பெருவெளியில் காலம் 2003 – 432)

இந்து சமயம் பல யுகங்களைக் கண்ட பளிங்கப் பாறை பல ஆன்மீக உண்மைகளின் ஊற்றுப்பெருக்கம், எந்த ஒரு தனிப்பட்டவராலும், தோன்றாத தோற்றுவிக்கப்படாத தனித்தன்மைக் கொண்டது. வரலாற்றை இந்த சமயம் எக்காலத்திலும் புறக்கணித்ததில்லை. வெறும்

உலகியல் செயல் முறைகளுக்கு மட்டுமே முக்கியத்தவம், தந்து அழிவற்ற முடிவற்றத் தன்மைக்கு இட்டு செல்லும் சீர்கெழுச் சிறப்பு நெறியை மேற்கொள்ளச் செய்தலே இந்து சமயத்தின் குறிக்கோளாகும்.

வாழ்க்கையைக் குறிக்கோள் உடையதாகவும் பயனள்ளதாகவும், ஆக்கிக்கொள்ளவும், தனக்குள் உறைவும் ஆன்மாவை உணரவும் இறுதியில் இறைவனோடு தன்னை இனங்கண்டு கொண்டு இணைத்துக் கொள்ளவும், மனிதனைத் தூண்டி ஊக்குவிப்பதே அனைத்து சமய ஒற்றுமையின் சாராம்சம் எனலாம்.

**“What is in me is dark – illumine**
**What is low, raise and support”**

என்கிறார் ஆங்கிலக் கவிஞன் ஜான்மில்டன் இதற்கான அர்த்தம்.

**“எனக்குள் இருப்பது இருள் - ஒளியேற்ற**
**கீழே இரப்பதை உணர்த்தித் தாங்குக”**

என்பது இதன் பொருளாகும்.

இரவீந்திரநாத் தாகூர், தமது அற்புதப் படைப்பாகிய கீதாஞ்சலியில் கலாச்சாரச் சேர்க்கையின் சுவர்க்கத்தை அழகாகச் சித்தரிக்கின்றார்.

“தெளிந்த நீரோடை போன்ற அறிவுபூர்வமான சிந்தனைகளும், ஆக்கப்பூர்வமான எண்ணங்களும் செத்து மடிந்து விட்ட பழக்கங்களெனும் பாலைவனத்து மணற்பரப்பில் தங்களைத் தொலைத்துக் கொள்ளாதிருக்க வேண்டும். அத்தகையாதற்குச் சுதந்திரமாகிய சுவர்க்கத்தில் எங்கள் நாடு விழித்தெழுட்டும் என்று இறைவனை வேண்டுகின்றனர்.

கணித மேதையும், உலகப்புகழ் பெற்ற சார்புத் தத்துவத்தின் (Albert Einsterin) இப்பிரபஞ்சத்தின் நெறிப்படுத்தப்பட்ட இசையிலும், முற்றுமையிலும் தன்னை அடையாளம் காட்டும் இறைவனை நான் நம்புகிறேன். இயற்கை முழுவதிலும் உள்ள அனைத்திலும் புத்தி கூர்மை பரிணமிக்கின்றது என நான் நம்புகிறேன். ஏல்லா அறிவியல் செயல்பாடுகளும் உலகம் ஒரு நெறிப்படுத்தப்பட்ட, பரந்த, விசாலமான பொருள் என்ற திடமான நம்பிக்கையை அடிப்படையாகக் கொண்டது” என்கிறார்.

இப்பிரபஞ்சத்தின் மாபெரும் இணைப்புச் சக்தி இறைவன், பரிணாம வளர்ச்சியால் மனித நிலையை அடைந்துள்ள மனத்திற்கு இறைவன் “இறைவன்” என்பது அதினிலும் உயர்ந்த கோட்பாடு எதுவம் அன்று வரை தோன்றியதில்லை. புல்வேறு யுகங்களாக, வாழ்க்கையின் பல்வேறு அம்சங்களின் இறைவன் தன்னை வெளிப்படுத்திக் கொண்டு இறுதியில் மனிதனின் ஆன்மீகத் தன்மையால் அவனுள் ஏற்படும் கடவுளுக்கு நிகரான சக்தியில் சென்று சேர்கின்றாள் என்பதை இந்து சமயம் தெளிவாக்குகின்றது.

### தமிழரும் சமயமும்

உயரிய பண்பாடுகள் உலகம் முழுவதற்கும் பொதுவானதாகும். மாந்தர் தம் பழக்கவழக்கங்கள் நம்பிக்கைகள், கலையுணர்வுகளை, நீதிமுறைகள், வழிபாட்டு நெறிகள், ஆகியவற்றில் அவர் தம் பண்பாடு மிளிரும், மக்களை மாக்களினின்றும் வேறுபடுத்திக் காட்டுவதும் அவர் தம் பண்பாட்டுக் கூறுகளேயாகும். துமக்கென வாழாப் பிறர்கென பிறர்க்குரியவராக வாழ்தலும், அமுதமே கிடைப்பினும் பிறர்க்குக் கொடுத்துத் தாம் உண்ணதலும் பண்பாடு மிக்கவர் இயல்பாகிறது

“எளியோரிடத்தும் இனிமையாகப் பேசுவதும், அயலாரை விருந்தோம்புதலும் இரப்போர்க்கு இடுவதும், இயன்றவரை பிறருக்கு உதவுவதும் கொள்கையும் மானமும், கெடின் உயிரை விடுவதும் தமிழரின் தமிழ்ச் சமுதாயத்தின் பண்பாட்டுக் கூறுகளும் குறிப்பிடத்தக்கன. (ஞா.தேவநேயன், பண்டையத்தமிழ் நாகரீகமும் பண்பாடும்)

இத்தகைய சீரிய சமுதாயத்தில் உதித்தெழுந்த இலக்கியங்களும் சிறப்பானதே, தொன்மைச் சிறப்பு வரலாற்று மேன்மை,

பண்பாட்டுப் பெருமை ஆகியவை புலப்படும் வண்ணம் அரிய செய்திகளையும், கருத்தகளையும், தன்னகத்தெ கொண்டு திகழ்வது தமிழ் இலக்கியங்களாகும். மக்கள் மனதில் பக்திச் சுவையைத் தோற்றுவித்து அதை நிலைபெறச் செய்யும் நோக்கில் எல்லாம் வல்ல இறைவன் பெருமைகளைப் பலபடப் பரிந்துரைத்த அருளாளர்கள் பலரை இனம் காட்டுகின்றது. அது, சங்க இலக்கியங்களிலும் சமயம் பற்றிய கருத்துகள் இடம்பெறாமல் இல்லை. எனில் பக்தி, பெருவெள்ளமெனப் பாய்ந்து ஓடிய நாயன்மார்கள் காலத்தைப் பற்றிச் சொல்ல வேண்டியதில்லை. தலங்கள் தோறும் சென்று அங்குறையும் இறைவனைப் பல்வகைப் பாமலர்களால் அருச்சித்து, ஆராதனை செய்து நெஞ்சக் கனகல்லும் நெகிழ்ந்துருக கவிபுனைந்தவர்கள் பக்திக்காலத்துப்புலவர் பெருமக்கள் அவ்வரிசையில் பன்னிரு திருமுறைகளைப் பாடியருளிய சைவ சமய அடியார்கள் குறிப்பிடத்தக்கவர்கள்.

## முடிவுரை

இறைவனிடத்தில் பக்தி செய்யும் மெய் அடியார்களுக்கு நாள்கள், கோள்கள் போன்ற தீமை புரிய வேண்டிய காலத்தும் நல்லதே செய்யும் திறந்தவனாக அமைந்துவிடும் எனும் நம்பிக்கையைத் திருஞானசம்பந்தப் பெருமானே தெளிவாக்கி உள்ளதை அறியலாம்.

சமுதாயம் நன்மை அடைவதற்கான மானுட விழுமியங்களை மக்களுக்கு அறிவுறுத்திக் காட்டியதோடு அவற்றின் வழி தானும் நின்று சமயத் தொண்டாற்றியவா திருஞானசம்பந்தா் என்பதை இவ்வாய்வில் காட்டியுள்ளது.

## துணை நூற்பட்டியல்

1. சுவாமி விவேகானந்தர், - புனித வாழ்வு, பவிஷ் கிராபிக்ஸ், சென்னை, முதற் பதிப்பு – 2005.
2. ப.குப்புசாமி, - சைவ சமயம், கோமதி அச்சகம், சென்னை, இரண்டாம் பதிப்பு – 1985.
3. இராஜசேகரன், இரா., - சைவப் பெருவெளியில் காலம், நா்மதா பதிப்பகம், தியாகராய நகா, சென்னை – 17, முதல்பதிப்பு – 2003.
4. ஞா.தேவநேயன், - பண்டையத்தமிழ் நாகரீகமும் பண்பாடும், கங்கை புத்தக நிலையம், சென்னை, மூன்றாம் பதிப்பு – 1999.
5. ஞானசம்பந்தர்.அ.ச., - தேவாரத் திருப்பதிகங்கள், கங்கை புத்தக நிலையம், சென்னை, மூன்றாம் பதிப்பு – 2001.

Bodhi International Journal is assigned by ISSN National Centre, India National Science Library, New Delhi

Journal Indexed and Impact Factor by International Institute of Organized Research (I2OR)

## Information of Bodhi Journal

### Subjects for Papers

The journal welcomes publications of quality papers on research in humanities, arts, science. agriculture, anthropology, education, geography, advertising, botany, business studies, chemistry, commerce, computer science, communication studies, criminology, cross cultural studies, demography, development studies, geography, library science, methodology, management studies, earth sciences, economics, entrepreneurship, bioscience, fisheries, history, information science & technology, law, life sciences, logistics and performing arts (music, theatre & dance), religious studies, visual arts, women studies, physics, fine art, microbiology, physical education, public administration, philosophy, political sciences, psychology, population studies, social science, sociology, social welfare, linguistics, literature and so on.

### Hosted by

திருநெல்வேலி தெக்ஷண மாற நாடார் சங்கம் கல்லூரி

**தெ.கள்ளிகுளம் திருநெல்வேலி மாவட்டம**

**தமிழ்நாடு, இந்தியா**

www.tdmnscollege.edu.in



Articles should be mailed to
bodhijournal@gmail.com

**BODHI**
**International Journal of Research in Humanities, Arts and Science**
www.bodhijournals.com

Powered & Published by
**Center for Resource, Research and Publication Services (CRRPS) India.**
www.crrps.in